சிவாலயங்கள் - - - - இந்தியாவிலும் அப்பாலும்

முதற்பாகம்

ராவ் பஹதூர்

ப. சம்பந்த முதலியார், பி.ஏ., பி.எல்.,

அவர்களால் இயற்றப்பட்டது.

இந்த நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்ற நூல்கள் :

லீலாவதி-சுலோசனை, சாரங்கதரன், மகபதி, காதலர் சண்கள், நற்சூள் தெய்வம், மனோஹரன், ஊர்வசியின் சாபம், இடைச்சுவர் இருபுறமும், என்ன நேர்ந்திடினும், விஜயரங்கம், கள்வர் தலைவன், தாசிப்பெண், மெய்க்காதல், பொன் விலங்குகள், சிம்ஹளநாதன், விரும்பியவிதமே, சிறுத்தொண்டர், காலவரிஷி, ராஜபுத்திரவீரன், உண்மையான சகோதரன், சதி-சுலோசனை, புஷ்பவல்லி, கீதமஞ்சரி, உததமபத்தினி, அமலாதித்யன், சபாபதி முதற்பாகம், பொங்கல் பண்டிகை அல்லது சபாபதி இரண்டாம் பாகம், ஓர் ஒத்திகை அல்லது சபாபதி மூன்றும்பாகம், சபாபதி நான்காம் பாகம், பேயல்ல பெண்மணியே, புத்த அவதாரம், விச்சுவின் மனைவி, வேதாள உலகம், மனைவியால் மீண்டவன், சந்திரஹரி, சுபத்திரார்ஜுனை, கொடையாளி கர்ணன், சஹதேவன் சூழ்ச்சி, நோகாதின் குறிப்பு, இரண்டு ஆத்மாக்கள், சர்ஜன்ஜெனரல் விதித்தமருந்து, மாளவிகாக்னிமித்ரம், விபரீதமான முடிவு, சுல்தான்பேட்டை சப் அஸிஸ்டென்ட் மாஜிஸ்டிரேட், சகுந்தலை, காளப்பன் களளத்தனம், விக்ரமோர்வசி, முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும், நாடகமேடை நிலையங்கள, ஆறுபாகங்கள, நாடகத் தமிழ, பயாதி, பிராம்மணனும் க்ஷத்திரியனும், வாணீபுரவணிகன், இரண்டு நண்பர்கள், சத்ருஜித், ஹரிச்சந்திரன், மார்க்கண்டேயர், ரத்னவளி, கண்டுபிடித்தல், கோனேரி அரசகுமாரன், சந்தையிற் கூட்டம, லவகுண்டை வைதிகியர், தீட்சிதர் கதைகள், ஹாஸ்யக் கதைகள, குறமகள, நல்லதங்காள, சிறுகதைகள, நடிப்புக்கலையில் தேர்ச்சிபெறுவதெப்படி ?, ஹாஸ்ய வியாசங்கள், தமிழ் பேசும் படக்காஷி, விருதிப்புஷ்பங்கள, பேசும்பட அனுபவங்கள், வள்ளி மணம், கதம்பம, மாண்டவர் மீண்டது, ஆஸ்தானபுரம் நாடகசபை, சங்கீதப் பயிற்சியம், ஒன்பது குட்டி நாடகங்கள, சபாபதி ஜமீன்தார், முதலியன.

முதற் பதிப்பு

சென்னை 'இரத்னவிலாஸ்' அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டது.

காபிரைட்] 1945 [விலை ரூ. 1.

INSCRIBED

TO

THE BELOVED MEMORY

OF

MY PARENTS

P. VIJIARANGA MUDALIAR

AND

P. MANICKAVELU AMMAL

AND

MY FRIEND

C. RANGAVADIVELU

6796a

28-10-45 C. 500 Q.H.M.S. 16A.

முகவுரை

இந்நூலை நான் அச்சிடுவதற்கு மூன்று முக்கியமான காரணங்கள் உள :—

(1) நான் சைவனாகப் பிறந்து சிவ தீட்சை பெற்றுக் கொண்டதற்கு இது நான் பரமசிவத்திற்குச் செய்ய வேண்டிய ஒரு சிறு தொண்டாம்.

(2) பல வருடங்களுக்கு முன், ஒருமுறை நான் திருநெல்வேலியிலிருந்து வண்டிமார்க்கமாய் கன்யாகுமரிக்குப் போய்த் திரும்பினேன். நான் திரும்பி வந்தபிறகு எனது நண்பர்களில் ஒருவர் வழியில் சுசீந்திரம் என்னும் சிவஸ்தலத்தைப் பார்த்தீர்களா என்று கேட்டார். அந்த ஸ்தலம் வழியிலிருப்பது எனக்குத் தெரியாதபடியால், நான் மறுபடியும் சுசீந்திரம் போகவேண்டியதாயிற்று. இப்படிப்பட்ட கஷ்டங்கள் சிவஸ்தல யாத்திரை செய்பவர்களுக்கு இல்லாதபடிச் செய்ய இந்நூல் உபயோகப்படும் என்பதாம்.

(3) சிறு வயதுமுதல் சிவாலயங்களிலுள்ள சிற்பங்களைக் கண்டு நான் மகிழ்வது வழக்கம், அம்மகிழ்ச்சி மற்றவர்களும் அடைவதற்கு இந்நூல் உபயோகப்படும் என நினைக்கிறேன். இன்னின்ன சிவாலயங்களில் இன்னின்ன அழகிய சிற்பங்களிருக்கின்றன, இவை இவை களைப் பார்க்கவேண்டுமென்று அநேகம் பெயருக்கு தெரியாமலிருக்கிறது; ஓர் அளவில் அக்குறையை தீர்க்க இந்நூலில் முயன்றுளேன்.

இதுவரையில் சிவாலயங்களைப் பற்றி சில புஸ்தகங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன, அவைகள் பெரும்பாலும் 273 தேவாரப் பாடல்பெற்ற ஸ்தலங்களைக குறிப்பிட்டிருக்கின்றன, சிலவற்றுள் இன்னும் சில சிவாலங்களும் சேர்க்கப்பட்டிருக்கிறன, இந்நூலில் இந்தியா முழுவதிலும், இன்னும் இந்தியாவுக்கு வெளியேயுமுள்ள பலர் அறியாத சிவாலயங்களையும் சேர்த்து சுமார் 4000 சிவாலயங்களைப் பற்றி எழுதியுள்ளேன். பர்மா, கம்போடியா, ஜாவா, சீனா, காஸ்பியன் கடலருகு, முதலிய இடங்களிலுள்ள சில சிவாலயங்களையும் குறிப்பிட்டிருக்கிறேன்.

இதை வாசிக்கும் சிவ பக்தர்களுக்கு ஒரு வேண்டுகோள். இதில் குறிக்கப்படாத சிவாலயங்கள் இன்னும் இருக்கலாம்; அன்றியும் குறிக்கப்பட்ட சிவாலயங்களைப் பற்றிய பல அரிய விஷயங்கள் விட்டுப்போயிருக்கலாம்,

அன்றியும் சில பிழைகளும் இருக்கலாம், இவைகளை யெல்லாம் சிவ நேயர்கள் எனக்கு தயவுசெய்து எடுத்துக் காட்டுவார்களாயின், அதை அவர்கள் சிவபெருமானுக்குச் செய்யும் பெருந்தொண்டென சிரமேற்கொண்டு இப் புத்தகத்தின் இரண்டாம் பதிப்பில் குறித்தும் திருத்தியும் அச்சிடலாமென்றிருக்கின்றேன்.

குறிப்பு—இந்நூலில் முருகக்கடவுளின் ஆலயங்களைப் பற்றி எழுதாததற்குக் காரணம் அவைகளை யெல்லாம் வேறொரு புத்தகத்தில் அச்சிடத் தீர்மானித்திருப்பதேயாம்.

இந்நூலில் மூக்கியமான பல சிவாலயங்களினுடையவும், அவைகளிலுள்ள சிறந்த சிற்பங்களினுடையவும், புகைப்படங்கள் அச்சிட வேண்டியது அவசியம்.

இதை எம்பெருமான் எனக்கு ஆயுளும் தேக ஆரோக்கியமும் இன்னும் கொஞ்சம் கொடுப்பாராயின், பிறகு செய்யலாமென்று உத்தேசித்திருக்கிறேன். இம் முயற்சிக்கு சிவநேயர்களும் சைவ மடாலயத் தலைவர்களும் உதவிபுரியுமாறு வேண்டுகிறேன்.

இந்நூலை இயற்றுவதற்கு உபயோகமாயிருந்த சில நூல்கள் முதலியவை :—

1 தேவாரப் பாடல்பெற்ற ஸ்தலங்களைக் குறிக்கும் சிவ க்ஷேத்திர விளக்கம், சிவஸ்தல மஞ்சரி முதலிய புஸ்தகங்கள்.

2 காலஞ்சென்ற K. ஆறுமுகம் பிள்ளை அவர்கள் ஆங்கிலத்தில் அச்சிட்ட "இந்தியாவிலுள்ள கோயில்களுக்கு கைட்" (Guide.)

3 மேற்சொன்ன ஆறுமுகம் பிள்ளை அவர்களுடைய வார்சுகள், எனக்குதவிய அவர் அச்சிடச் சேமித்து வைத்திருந்த பல இந்திய கோயில்களின் குறிப்புகள்.

4 பம்பாய், கல்கத்தா முதலிய மாகாணங்களின் ஜில்லா கெஜட்டுகள் (இவை சுமார் 300க்கு மேற்பட்டவை.)

5 யாத்ரீகர்களுகாக இந்திய ரெயில்வே கம்பெனிகள் வெளியிட்ட பல புஸ்தகங்கள்.

6 ஹிந்து பத்திரிகையில் பல சமயங்களில் இந்திய கோயில்களைப்பற்றி எழுதப்பட்ட குறிப்புகள்.

7 சென்னை அறப்பிரசார சங்கத்தாரின் தூண்டுகோலால் வெளியிடப்பட்ட சில சிவாலயங்களைப் பற்றியநூல்கள்.

8 சர் பெர்கூசன் எனும் ஆங்கிலர் அச்சிட்டுள்ள இந்திய சில்ப சரித்திரம் முதலிய நூல்கள்.

ப. சம்பந்தம்.

சிவாலயங்கள்

1 அக்கசாலே—ஸ்ரீவைகுண்டம் தாலூகா திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜதானி—சிவாலயம். ஸ்வாமி பெயர் கல்வெட்டுகளில் அக்கசாலே ஈஸ்வரமுடையார், என்றிருக்கிறது—திராவிடசில்பம்.

2 அக்கிரஹாரபச்சஹல்லி—கிருஷ்ணராஜ்பெட் தாலூகா, மைசூர் ராஜ்யம்—சிவாலயம். ஸ்வாமி ஹரணேஸ்வரர்.

3 அகங்கரை—சென்னை ராஜதானி திருச்சிராப்பள்ளி ஜில்லா, மாத்துறைக்கு ஒரு மைல்; சிவாலயம். ஸ்வாமி மருதாந்தநாதர்; தேவி சுந்திரகாஞ்சனை. மருதாந்தர் பூசித்த ஸ்தலம்.

4 அகத்தியான்பள்ளி—தென் இந்தியா—வேதாரண்யத்திற்கு ஒரு மையில் தெற்கிலுள்ளது. சிவாலயம். அகஸ்தீஸ்வரர் பூசித்தபடியால் அப்பெயர் பெற்றது. அகஸ்தியர் உற்சவவிக்ரகம் இக்கோயிலிலிருக்கிறது. ஸ்வாமி அகஸ்தீஸ்வரர்; தேவி பாகம்பிரியாநாயகி, மங்கைநாயகி-அக்னி தீர்த்தம். திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது. இங்கு பல கல்வெட்டுகள் உள.

5 அகத்தீச்சுரம்—திருவாங்கூர் ராஜ்யத்தில் கன்யாகுமரிக்கு 3 மையில் அருகிலுள்ளது. சிவாலயம். ஸ்வாமி அகஸ்தீஸ்வரர்; தேவி அமிர்தவல்லி; சமுத்திர தீர்த்தம்; அகஸ்தியரும் லோபாமுத்திரையும் பூசித்தது. வைப்புஸ்தலம்.

6 அகரம்சேத்தூர்—தென் இந்தியா; சிவாலயம்.

7 அகஸ்தீஸ்வரகொண்டா—தென் இந்தியா-வடஆற்காடு ஜில்லா; சிவாலயம்.

8 அகாஷி—பம்பாய் ராஜதானி-தாணை ஜில்லா பேசின் பிரிவு. வீரார் (பீரார்) ஸ்டேஷனுக்கு 3 மையில் மேற்கு. பவானிஷங்கர் கோயில், 1691 ஹூ கட்டப்பட்டது. கோயிலுக்கு அருகிலுள்ள தீர்த்தம் விசேஷமானது இங்கு தர்மசாலையுண்டு.

அகோலா பிரிவு—பார்சிதக்லி-மத்யமாகாணம். இங்குள்ள சிவாலயங்கள் (1) அகோலா-மஹாதேவ் கோயில் ஹேமாத் பண்ட்கட்டிடம். (2) தார்கோட்-மஹாதேவர் கோயில். (3) போர்கோவான் மஹாதேவர் கோயில். (4) காரன்ஜா சித்தேஷ்வர்கோயில், கோலேஷ்வர் கோயில். (5) குடாசா கோடேஷ்வர் கோயில்; ஹேமாத்பண்ட் கட்டிடம். (6) சிந்த்கேட்—மோரேஷ்வர் கோயில்; ஹெமாத்பண்ட் கட்டிடம். (7) மூர்தூஜாபூர்—திரியம்பகேஷ்வர் கோயில், புதியது. (8) வையாலா, சிவாலயம்; ஹெமாத்பண்ட் கட்டிடம்.

17 அங்காடிபுரம்—மலபார் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். இங்குள்ள சிவலிங்கம் பார்வதிதேவியால் பிரதிஷ்டை செய்யப்பட்டது என்பது ஐதிகம்.

18 அங்குடி—கோடுர் ஜில்லா, மைசூர் ராஜ்யம், முதுகி ரெக்கு 7 மையில் தெற்கு, இங்கு இரண்டு சிவாலயங்கள் உண்டு-பாதாள ருத்திரர் கோயில், மல்லேஸ்வரர் கோயில்.

19 அங்கோர்தோம்—இது ஆசியாகண்டத்தில் கம்போடியா தேசத்திலுள்ளது. சிவாலயம் தற்காலம் பாழடைந்திருக்கிறது. பூசைகிடையாது. கர்ப்பக் கிரஹத்தைச்சுற்றி கீழ்மட்டத்தில் பல சிறு கோயில்கள் உண்டு; ஒவ்வொரு கோயிலுக்கும் விமானத்திற்கு பதிலாக 5 அடி முதல் 7 அடி வரையிலும் உயரமுள்ள முகங்கள் இருக்கின்றன; இக்கோயிலில் இம்மாதிரியான முகங்கள் 160 ஆதியில் இருந்தன; இவைகள் ஆதியில் பௌத்தமத அவலோகிதேஸ்வரரைக் குறித்தன; இக்கோயில் பிற்காலம் சிவாலயமாக்கப்பட்டதென்பர். இக்கோயிலின் வாயிலில் 100 அடி நிகளம் நாகர்கள் நிர்மிக்கப்பட்டிருக்கின்றனர். இந் நாகர்களில் ராட்சதர்களைப் போன்ற உருவங்களும் தேவர்களைப் போன்ற உருவங்களும் இருக்கின்றன. (திருப்பாற்கடலைக் கடைந்த ஐதிகமாயிருக்கலாகுமா?) இக்கோயிலுக்கு பாயோன் அல்லது பாகோன் என்று பெயர்; கோயில் மணற்கல்லாலாக்கப்பட்டது. இக் கோயில் சுமார் 700 ஆம் ஆண்டில் கட்டப்பட்டதாக எண்ணப்படுகிறது.

உ° அங்கோர்வாட்—கம்போடியா தேசம் ஆசியா கண்டம். இங்குள்ள விஷ்ணு ஆலயத்தில் ஒரு இடத்தில் சிவலிங்க மும் நந்தியும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. இதற் கருகில் ஈஸ்வரபுரம் எனும் ஓர் சிவாலயமிருப்பதாகச் சொல் லப்படுகிறது. இதிலுள்ள ராவணன் கைலாயத்தைத் தூக்க யத்னித்த சில்பம் அழகியதென்பர்.

உ\ அச்சிறுபாக்கம்—சென்னை ராஜதானி மதுராந்தகம் தாலூகா, செங்கல்பட்டு ஜில்லா, சிவாலயம். அச்சரப்பாக் கம் ரெயில் ஸ்டேஷனிலிருந்து தென்மேற்கு அரைமையில் தூரம். ரெயில் ஸ்டேஷன்; ஸ்வாமி பார்க்கபுரீஸ்வரர், தேவி சுந்தரநாயகி; அதிசுந்தர மின்னம்மை, பாலகுசாம்பாள்; தேவதீர்த்தம், சங்குதீர்த்தம், கோயிலுக்குள் சிங்க தீர்த்தம்; கொன்றை விருட்சம். சிவபெருமான் திரிபுரதகனஞ் செய் யத் தேர் ஊர்ந்தபோது அச்சுமுறிந்த ஸ்தலம்; எனவே அப்பெயர்வந்தது. இங்கிருக்கும் அட்சேஸ்வரர் கோயி லின் மண்டபத்தில் வடக்கு சுவரில் முதல் குலோத்துங்க சோழன் உருவம் உளது. இக்கோயில் அவனால் கட்டப்பட் டதாம். ஆகவே கோயில் சுமார் 1074 ஆம் ஆண்டில் கட் டப்பட்டதாக மதிக்கப்படுகிறது. இங்குள்ளகல்வெட்டுகளில் ஸ்வாமி பெயர் "ஆட்சிகொண்ட நாயினார்" "ஆட்சீஸ்வரர்" என்றிருக்கிறது. கோபுரம் ஏழு நிலைகளையுடையது, ஆயி னும் மேலே 5 கலசங்கள் தானிருக்கின்றன. இங்கு முசாபர் பங்களா உண்டு. கோயில் சுமார் 265 அடி நிகளம் 140 அடி அகலம். பாக்கபுரி, பாககபுரம் என்றும் வேறு பெயர்கள் உண்டு. மூலஸ்தானத்தில் 2 அவுடையார்கள் உள; எமை யாட்சீசர், உமையாட்சீசர், என்று பெயர். உமையாட்சிசர் கோபுரத்திற்கு நேராக இருக்கிறார், சுயம்புமூர்த்தி. இவ்வூ ருக்கு அருகிலுள்ள மலையுச்சியில் ஒரு சிவாலய முண்டு. வருடந்தோறும் ஆட்சீஸ்வரர் இங்குவந்து சம்பந்தருக் கும், அகஸ்தியருககும் காட்சி கொடுக்கிறார். இம்மலை யின் தென்கோடிக்கு பெரும்பேர் எனப் பெயராம். இங்கு தான்தோணீஸ்வரர் கோயில் கைலாசநாதர் கோயில், என்று இரண்டு சிவாலயங்களுள. தான்றோணீஸ்வரர் கோயிலில் பழய கல்வெட்டுகள் உண்டு. பிரம்மோற்சவம் சித்திரைமாசம், ஐந்தாநாள் திருக்கல்யாணம், ரிஷபவாக னம். 7 நாள் கொன்றையடியில் திரிசேத்ரதாரிகாட்சி

விஷேசம்; பதினேராம் நாள் பெரும்பேருக் .கெழுந்தருளி அகஸ்தியருக்குக் காட்சி ; வைகாசி மாசம் சம்பந்தர் உற் சவம். பாண்டிய அரசன் சிவாலய கைங்கரியத்திற்காகக் கொண்டுவந்த மணல் வண்டிகளின் அச்சு இங்கு முறிந்த தாக ஒரு ஐதிகம் உண்டு. இந்த இடத்திற்கு வண்டிகுப்பம் என்று பெயர். கண்வர், கௌதமர், பூசித்தஸ்தலம். கோயி லில் சுமார் 30 கல்வெட்டுகள்உள. வீரராஜேந்திரன் முதலிய சோழ அரசர்கள் கல்வெட்டுகள்; சுமார் 11, 12 ஆம் நூற் றாண்டுகளிலிருந்து உள, திராவிட சில்பம். கோயிலில் அந்த ராளத்தில் ஆவுடையாருக்கு முன்னல் 8 அடி ஆழ முள்ள கிணற்றுக்குள் ஒரு சுரங்கமுள்ளது. கல்லால் மூடப் பட்டிருக்கிறது. திருஞானசம்பந்தர் பாடல்பெற்றது.

உட அசல்—பாடான்தாசில், குருதாஸ்பூர் ஜில்லா, பஞ்சாப் மாகாணம். வடமேற்கு ரெயில்வே ஸ்டேஷன் ; பாடான் ஸ்டேஷனிலிருந்து 3 மையில்; சிவாலயம், அழகியது. இங்கு தர்மசாலையுண்டு.

உஉ அசலபுரம்—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சீர்காழிக்கு 10 மையில். சிவாலயம்; ஸ்வாமி சிவயோகத் தியாகராயர்; திருஞான சம்பந்தர் கலியாணம் நடந்த இடம். திராவிடசில்பம்.

உஎ அசோதர்—பட்டேபூர் பிரிவு, ஐக்கிய மாகாணம். இங்கு ஒரு சிவாலயமிருந்து அழிக்கப்பட்டதாகச் சொல்லப்படு கிறது. இவ்வூருக்குப் பழயபெயர் அஸ்வத்தாமபுரமாம்.

உஏ அஞ்சைக்களம்—(திரு) குடமலைநாட்டில் தென்மேற்கு இந்தியாவிலுள்ளது; பழய பெயர் கொடுங்கோளூர். இரு ஞாலக்கடை எனும் ரெயில் ஸ்டேஷனுக்கு 4 மையில். இது திருவஞ்சிக்குளம், திருவாஞ்சிக்குளம், என்றும் சாதாரண மாக அழைக்கப்படுகிறது. தன் தாயாரைக் கொன்ற பழிதீர பரசுராமர் பூசித்த க்ஷேத்திரம். சுந்தரர் வெள்ளை யானையின்மீதும் சேரமான்பெருமாணயனார் குதிரைமீதும் ஏறி, இங்கிருந்து கைலாயம் சென்ற ஸ்தலம். ஸ்வாமி அஞ்சைக்களத்தீஸ்வரர் ; தேவி உமையம்மை; ஸ்வா மிக்கு வஞ்சுளேஸ்வரர் என்றும் திருநாமமுண்டு. சிவ கங்கை தீர்த்தம், ஆலவாய் தீர்த்தம். கோயில்பிராகாரத்

தில் 18 லிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. இக்கோயில் மலையாள தேசத்திலிருந்தும், தெற்கு திராவிட கோயில்களைப் போன்றது. கொச்சியில் ஆண்டபெரு மாள்களில் ஒருவரால் கட்டப்பட்டதாம். கோயிலில் சில மிகவும் பழய வட்டெழுத்துக் கல்வெட்டுகள் உள. இங் குள்ள பிரசித்திப்பெற்ற பகவதி கோயிலின் மத்தியில் ஒரு சிவாலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது.

26 அட்டஹாசா—வட இந்தியா சிவாலயம். ஆரியசில்ப மமைந்தது. ஸ்வாமி—மஹாநாதர், சுயம்புலிங்கம்.

27 அடைப்பளம்—சென்னை ராஜதானி. சிவாலயம் ஸ்வாமி காலகண்டேஸ்வரர்.

28 அண்டமி—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி—பட்டுக்கோட்டை தாலூகா. சிவாலயம். பிரம்மோற்சவம் சித்திரை மாசம்; புரட்டாசி மாசம் ருத்திரபதியார் அன்ன உற்சவம் விசேஷம். திராவிட சில்பம்.

29 அண்ணாமலை—(திரு) தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன் சென்னை ராஜதானி. ஸ்வாமி—அருணாசலேஸ்வரர்—தேவி உண்ணாமுலையம்மை, முக்கிய தீர்த்தங்கள்—சிவகங்கை, பிரமதீர்த்தம், திக்பாலர்கள் தீர்த்தம். பஞ்சலிங்கங்களில் இங்கு தேஜோலிங்கம். இதை தட்சிண கைலாயம் என்று கூறுவர். நினைக்க முத்தியளிக்கும் க்ஷேத்திரம். சிவபெருமான் வல்லாளராஜனுகருப் புத்திரனுகத் தோன் றிய ஸ்தலம்; பார்வதி தேவியார் பரமசிவத்தின் கண்களை மூடிய பாவம்தீர தவஞ்செய்து சிவபெருமானுடைய இடப் பாகம் பெற்ற இடம். பிரம்மா விஷ்ணுக்களின் விவாதம் தீரும்பொருட்டு பரமசிவம் அவர்களுக்கிடையில் ஜோதி லிங்கமாகத் தோன்றிய ஸ்தலம். அருணகிரிநாதர் பிறந்த ஊர். அவருடைய சிலையொன்று கோயிலிலிருக்கிறது. பிரதட்சிணம் செய்த புனுகுபூனை, குதிரை முதலியன நற் பதவி பெற்ற க்ஷேத்திரம். பெரிய கோயில் பெரிய கோபுரம் 11 நிலைகளுள்ளது. 1516 ஆம் ஆண்டில் கிருஷ்ணதேவராயரால் ஆரம்பிக்கப்பட்டு பிறகு சேவப்ப நாயக்கர் காலத்தில் (1549—1582) முடிக்கப்பட்டது. இவர்காலத்தில் இங்குள்ள பெரிய குளம் வெட்டப்பட்டது. ஆயிரக்கால் மண்டபமும் நூற்றுகால் மண்டபமும் குள

மும், கிருஷ்ணதேவராயரால் கட்டப்பட்டனவென்று இங்குள்ள கல்வெட்டொன்று குறிக்கிறது. மற்றொரு கோபுரம் சுமார் 1537 ஆம் ராஜநாராயண சுயம்புராயரால் கட்டப்பட்டது. 1012 ஆம் ஆண்டில் ஆண்ட ராஜேந்திர சோழன் காலத்திய கல்வெட்டொன்று இங்குளது. இங்கு பஞ்சமுகங்களுடைய மஹாதேவர்சிலை பார்க்கத்தக்கது. பிரம்மோற்சவம் கார்த்திகை மாசம். இங்குள்ள வாஹனங்கள் எல்லாம் மிகப்பெரியவை. கார்த்திகை தீபம் மிகவும் விசேஷம். இங்குள்ள மலைக்கு சோணசலம் என்று பெயர். சுமார் 3000 அடி உயரமுள்ளது. இது கிருத யுகத்தில் அக்னிமலையாயும், திரேதா யுகத்தில் சுவர்ண மலையாயும், துவாபர யுகத்தில் தாம்பிரமலையாயும், கலியுகத்தில் கல்மலையாயும் ஆயதென்பர். திருஞான சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. கோயிலில் ஒரு கோபுரம் வல்லாள ராஜன் கோபுரம் என வழங்கப்படுகிறது. ஆடி மாசம் சுந்திரமூர்த்தி ஸ்வாமிகள் மணத்தில் தடுத்தாட் கொண்ட ஐதிகம் இங்குள்ள குருக்கள்மார்களால் மிகவும் சிறப்பாக நடத்தப்படுகிறது. இங்கு சுமார் 40 சத்திரங்களுக்குமேல் உண்டு; மூசாபர் பங்களாவும் உண்டு. கோயில் அழகிய திராவிட சில்பம்.

3 அணிஅண்ணாமலை—திருவண்ணாமலைப் பிரதட்சிண வழியிலுள்ள சிவஸ்தலம், காலாவது மையிலிலுள்ளது. வைப்புஸ்தலம். ஸ்வாமி அருணாசலேஸ்வரர், தேவி உண்ணாமுலையம்பாள்; பல தீர்த்தங்களுண்டு.

4 அதிகை—(திரு) சென்னைராஜதானி தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன்; பண்ணுருட்டிக்கு இரண்டு மயில் கிழக்கிலுள்ளது. ஸ்வாமி—வீரட்டானேஸ்வரர்; தேவி திரிபுர சுந்தரி; ஸ்தல விருட்சம் கொன்றை; தீர்த்தம்-கெடில நதி சூலகங்கை, சக்கர தீர்த்தம். சிவபெருமான் திரிபுரதகனம் செய்த ஸ்தலம்; திருநாவுக்கரசு ஸ்வாமிகள் ஜைனமதத்தை விட்டு சைவசமதத்தைச் சேர்ந்த ஸ்தலம். சுந்தரருக்கு திருவடிசூட்டிய ஸ்தலம்; பல்லவ அரசன் காடவர்கோன் எனும் சமணராஜன் திருநாவுக்கரசு ஸ்வாமிகளால் சைவஞக்கப்பட்டபின், பாடலீபுரத்திலிருந்த சமணப்பாழிகளையெல்லாம் அழித்து, அக்கற்களைக்கொண்டு, குணதரவீச்

சுரம் எனும் இங்குள்ள ஆலயத்தைக்கட்டினன். இவ் வரசனுக்கு மஹேந்திரவர்மன் எனப் பெயர் பிறகுவந்தது. (600—630) கர்ப்பக்கிரஹம் விசித்திரமானது; பழய பல்லவ கட்டிடம்; பார்க்கத்தக்கது. மூவர் பாடல்பெற்ற க்ஷேத்திரம். விஷ்ணு, பிரம்மா, கருடன், பாண்டவர்கள், பூசித்த ஸ்தலம். இதற்கு சிறிது மேற்கே திருவாமூர் என்று ஒரு சிவக்ஷேத்திரமுளது. அப்பர் பிறந்த க்ஷேத் திரம்; ஸ்வாமி பசுபதீஸ்வரர், தேவி திரிபுரசுந்தரி.

32 அதிராளா—செய்யாற்றங்கரையிலுள்ளது; சென்னை ராஜதானி; கடப்பை ஜில்லா. சிவாலயம். இங்குள்ள குளத் தில் பரசுராமர் மூழ்கி மாத்ருஹத்தி நீங்கியதாக ஐதிகம். சிவராத்திரி உற்சவம் விசேஷம். இங்கு சத்திரங்களுண்டு.

33 அந்தியூர்—சென்னை ராஜதானி, கொங்குநாட்டிலுள் ளது. சிவாலயம் கெட்டி முதலியார்களால் கட்டப்பட்டது. இங்குள்ள விநாயகருக்கு கெட்டி விநாயகர் என்று பெயர்.

34 அநந்தநல்லூர்—சென்னை ராஜதானி, திருச்சிராப்பள்ளி ஜில்லா. சிவாலயம். ஸ்வாமி பரமசிவம், தேவி பாலாம்பாள்.

35 அநந்தபுரம்—திருவாங்கூர் ராஜ்யம், பத்மநாப ஸ்வாமி ஆலயத்தில் ஸ்வாமியின் கையின்கீழ் சிவலிங்கம் பிர திஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. இங்குள்ள மற்றொரு சிவாலயம், நீலகண்டர் கோயில், ஸ்வாமி நீலகண்டர், உமா தேவி, அநந்த தீர்த்தம்.

36 அநந்தபூர்—அநந்தபூர் ஜில்லா, சென்னை ராஜதானி; தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன். இங்கு ஒரு சிவாலய முள்ளது.

37 அநவட்டி—தென் இந்தியா மைசூர்ராஜ்யம், அலரி ரெயில் ஸ்டேஷனுக்கு 20 மையில். சிவாலயம்—ஸ்வாமி கைடபேஸ்வரர், தேவி பார்வதி. கோயில் ஜக்கணசாரியா ரால் கட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. சளுக்கிய சில்பம்; பெரிய மண்டபம் மிகவும் அழகியது. சிவலிங்கம் மிகப் பெரியது. சத்திரங்களுண்டு. கோயில் ஊருக்கு அரை மையில் வடக்கு.

38 அநேகதங்காவதம்—(திரு) அநேக தங்காபதம் என்றும் அழைக்கப்படுகிறது. இந்தியாவின் வடக்கேயுள்ளது.

கௌரி தவஞ்செய்தமையால் இதற்கு கௌரிகுண்டம் என்றும் பெயர். ஹரித்துவாரத்திற்கு அருகிலுள்ளது. சூரியனும் சந்திரனும் பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமி அநேகதங்காவதகாதர் அல்லது அருண்மன்றநாயகர், அருண்மன்னுஈஸ்வரர்; தேவி மலைன்மணியம்மை; ஞான தீர்த்தம், இந்திர தீர்த்தம்; திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது.

39 அப்பிகட்லா—குண்டூர் ஜில்லா, சென்னை ராஜதானி—பாபட்லா தாலூகா சிவாலயம். ஸ்வாமி விஸ்வேஸ்வரர்.

40 அப்பெகொண்டா—சென்னை ராஜதானி விசாகபட்டணம் ஜில்லா கடற்கரையோரம். இங்கு பல சத்திரங்கள் உண்டு.

41 அம்பர்—இதற்கு அம்பர் பெருந்திருக்கோயில் என்று பெயர். தென் இந்தியா பூந்தோட்டம் ஸ்டேஷனுக்கு இரண்டு மையில் கிழக்கு; கோச்செங்கண் சோழனல் கட்டப்பட்டது - மாடக் கோயில் - ஸ்வாமி பிரமபுரீஸ்வரர், தேவி பூங்குழல் நாயகி; பிரமதீர்த்தம் அன்னமாம் பொய்கை; புன்னை விருட்சம். சிலந்தியாகவிருந்து சிவபெருமானருளால் மறு பிறப்பில் அரசனாகப் பிறந்த கோச்செங்கட் சோழனுக்கு, பரமசிவம் மணக் கோலம் கடாட்சித்த ஸ்தலம்; பிரமன் பூசித்த ஸ்தலம்; சோமாசி மாற நாயனார் முத்தி பெற்ற ஸ்தலம்.

42 அம்பலப்புழை—தென் இந்தியா மலையாள தேசம். சிவாலயம்; ஸ்வாமி சிதம்பரேசர், உமாதேவி, கோயிலில் பாயசநைவேத்யம் விசேஷம்.

43 அம்பர்—வட இந்தியா, ஜெயபுரிக்கு அருகிலுள்ளது-ராஜபுதனத்தில். சிவாலயம்.

44 அம்பர்நாத்—பம்பாய் ராஜதானி-கலியாண் ஜில்லா, ஜி. ஐ. பி ரெயில் ஸ்டேஷனுக்கு கிழக்கில் ஒரு மையில் தூரத்தில் சிவாலயமுளது. ஸ்வாமி-அம்பர்நாத், தேவி-பார்வதி. இதில் 1060 கி. பி. கல்வெட்டொன்று இருப்பதால் கோயில் பதினேராம் நூற்றாண்டிற்கு முற்பட்டதா யிருக்க வேண்டும். கோயிலுக்கு 3 முக்கிய வாசல்கள் இருக்கின்றன. கர்ப்பக்கிரஹம் மிலேச்சர்கள் காலத்தில் கொள்ளை

யடிக்கப்பட்டது. லிங்கம் பூமியில் கொஞ்சம் புதைந்திருக் கிறது. கர்ப்பக்கிரஹத்திற்கு வெளியில் பல அழகிய சில்ப பங்கள் உள ; அவற்றுள் பார்வதியோடு கூடிய மஹா தேவர் சிலை பார்க்கத்தக்கது. விமானத்திற்குத் தெற்குப் புறம் காளி யிருக்கிறது. சளுக்கிய சில்பம்.

54 **அம்பர் மாகாளம்**—தென் இந்தியா, சென்னை ராஜ தானி-பேரளம் ஸ்டேஷனிலிருந்து $3\frac{1}{2}$ மையில். அம்பா சூரனைக் கொன்ற பழிதீர காளி சிவபெருமானைப் பூசித்த க்ஷேத்திரம். இதற்கு கோயில்திருமாகாளம் என்றும் கோயில்திருமூலம் என்றும் பெயர் உண்டு. மஹாகால ரிஷி பூசித்த ஸ்தலமாதலால் அம்பர்மாகாளம் எனப் பெயர் வந்ததென்பர். ஸ்வாமி-காளகண்டேஸ்வார்-தேவி பயக்ஷயநாயகி ; தேவ தீர்த்தம் அல்லது மாகாள தீர்த்தம். காளி கோயில் வெளிப் பிராகாரத்தி லிருக்கிறது. பிரம் மோற்சவம் வைகாசி மாதம். சோமாசிமாற நாயனார் யாக உற்சவமும் நிர்மாலிய உற்சவமும் விசேஷம். இக் கோயி லிலுள்ள லிங்கோத்பவ மூர்த்தி பதினோராம் நூற்றாண்டியது என்பர். திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. கோயிலில் சோமாசிமாற நாயனார் யாகஞ் செய்த இடத்தில் தியாகேச ரும் அம்மனும் நீசத் திருமேனியுடன் விளங்குகின்றனர்.

55 **அம்பாலி**—குட்லி தாலுகா, பல்லாரி ஜில்லா, சென்னை ராஜதானி. கள்ளேஸ்வரர் கோயில். சளுக்கிய சில்பம்; கோயில் கருப்புக் கல்லால் கட்டப்பட்டது. 1081 ஆம் ஆண்டிய கல்வெட்டுளது; ஆகவே அதற்கு முன்பு கட்டப் பட்டிருக்க வேண்டும்:

56 **அம்பாசமுத்திரம்**—மேற்படி தாலுகா, திருநெல்வேலி ஜில்லா; சென்னை ராஜதானி, தென் இந்தியா ரெயில் ஸ்டே ஷன்; இங்கு 4 சிவாலயங்கள் உள (1) கைலாசநாதர் கோயில்; தாம்ரபர்ணிக் கரையிலுள்ளது. கோபுரம் அடி நிலையுடன் நிறுத்தப்பட்டது; விஜயநகர அரசர்கள் காலத்திய தாயிருக்கலாம் (2) திருமூலநாதர் கோயில்; புதியது (3) அகஸ்தியர் கோயில் புதியது. (4) எரிச்ச உடையார் கோயில்; பழய கோயில், ஒன்பதாவது நூற்றாண்டிய இரண்டு வட்டெழுத்துக் கல்வெட்டுகள் உள ; மாறன் சடையன் காலத்தியவை. 985-1013 ஆண்ட ராஜ ராஜ சோழனுடைய

கல்வெட்டும் உளது. ஸ்வாமி எரிச்சமுடையார், தேவி சிவ காமி, தர்ம்ரபர்ணி தீர்த்தம். அகஸ்தியர் பூசித்த க்ஷேத்தி ரம். இங்கு மூசாபர் பங்களாக்கள் உண்டு.

57 அம்பிகை—வட இந்தியா, சிவாலயம், ஸ்வாமி உமாபதி; சுயம்பு லிங்கம்; ஆரிய சில்பம்.

58 அம்பு கோயில்—சென்னை ராஜதானி, புதுக்கோட்டை சமஸ்தானத்திலுள்ளது. ஆலங்குடி தாலுகா, புதுக்கோட்டைக்கு 29 மையில். கல்வெட்டுகளில் ஊர் பெயர் அழிம்பில் என்றிருக்கிறது. சிவாலயம் பழய சோழக் கட்டிடம். ஸ்வாமி பெயர் கல்வெட்டுகளில் வீர ராஜேஸ்வரி சோழீஸ்வர முடைய நாயனார் என்றிருக்கிறது.

59 அம்மன் குறிச்சி—சென்னை ராஜதானி புதுக்கோட்டை சமஸ்தானம், திருமெய்யம் தாலுகா, சிவாலயம் அழகியது. ஸ்வாமி சுந்தரேஸ்வரர். இங்குள்ள அணிவெட்டு மண்டபத்தின் சில்பங்கள் பார்க்கத்தக்கவை. புதிய கோயில். ஆவணி மூல உற்சவம் விசேஷம்.

60 அம்மன் பேட்டை—தஞ்சாவூரிலிருந்து திருவையாறுக்கும் போகும் வழியிலுள்ள சிவாலயம், சென்னை ராஜதானி. மஹா விஷ்ணு மோஹினி அவதாரத்தில் பஸ்மாசுரனைக் கொன்ற பழி தீரும் பொருட்டு சிவலிங்கத்தைப் பூசித்த ஸ்தலம்; இங்குள்ள ஜகன் மோஹினி யாகிய விஷ்ணுவின் சிலை அழகியது.

அம்ரோடி பிரிவு. மத்திய மாகாணம். இங்கு அடியிற் கண்ட சிவாலயங்கள் உள. (1) அம்நேர் சிவாலயம், ஸ்வாமி மஹாதேவ். இங்கு அருகாமையிலுள்ள ஆற்றின் கீழ் மூழ்கிப்போன ஒரு சிவாலயம் இருப்பதாக வதந்தி. (2) பைரட் இங்கு குன்றின் பேரில் வைர தேஷ்வர் சிவாலயம், பழமையானது. (3) தாமந்திரி சிவாலயம், ஸ்வாமி மகாதேவர் கோயில் ஹேமாத் பண்ட கட்டிடம். (4) கௌண்டின்யூர் புதிய சிவாலயம் சுமார் 130 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டது. (5) கோண்டேஷ்வர் சிவாலயம். ஹேமாத் பண்ட கட்டிடம், கல்லாலாயது. (6) மோக்ரி அல்லது மஞ்சிரா சிவாலயம். குகைக் கோயில் 16 அடி சதுரம் 8 அடி உயரம். (7) சல்பார்டி; இங்கும் ஒரு சிவாலயமுண்டு; குகைக் கோயில்.

61 அம்முண்டி—குடியாத்தம் தாலூகா, வட ஆற்காடு ஜில்லா சென்னை ராஜதானி, ஐம்பூண்டி என்பதின் திரிபு, கல்வெட்டுகளில் ஐம்பூண்டி என்றே இருக்கிறது. திரிதாளீஸ்வரர் கோயில். கல்வெட்டுகளில் முப்பனை யீஸ்வர முடையார் என்று ஸ்வாமி பெயர் இருக்கிறது.

62 அமரகுந்தி—சென்னை ராஜதானி கொங்கு நாட்டிலுள்ளது. சிவாலயம் கட்டி முதலியார்களால் கட்டப்பட்டது.

63 அமராவதி—சேலம் ஜில்லா சென்னை ராஜதானி, அமரேஸ்வரர்; கோயில் சுமார் 1000 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டதென்பர்.

64 அமராவதி—சட்டனபள்ளி தாலூகா, குண்டூர் ஜில்லா சென்னை ராஜதானி, கிருஷ்ணை நதிக்கரையிலுள்ளது. பழய சிவாலயம் தட்சலிங்கம்; ஸ்வாமி மல்லேஸ்வரர்; கல்வெட்டுகளில் மல்லீஸ்வரமுடைய மஹா தேவர் என்றிருக்கிறது.

65 அமரேஷ்வர்—ராஜபுதனம், வட இந்தியா, மால்வா ரெயில், மோர்டக்கா ஸ்டேஷனிலிருந்து 7 மைல். நருமதை நதியின் கரையிலுள்ளது சிவாலயம். ஸ்வாமி-ஓங்கார்ஜி மிகவும் புராதனமான கோயில். கார்த்திகை பௌர்ணமியில் இங்கு ஒரு பெரிய சந்தை நடக்கிறது. தர்மசாலையுண்டு. பண்டாக்கள் வீடுகளுமிருக்கின்றன.

66 அமார்நாத்—வட இந்தியா காஷ்மீர, தேசத்திலுள்ளது. ராவல்பிண்டி ஸ்டேஷனிலிருந்து 39 மயில்; மறிக்குப் போய், அங்கிருந்து 158½ மயில் ஸ்ரீநகருக்குப் போய், அங்கிருந்து 80 மைலில் கால் நடையாய்ப் போகவேணும். சிவாலயம் குகையிலிருக்கிறது. சிவலிங்கம் பனிக்கட்டியாலாயது, ஸ்வாமி அமரேஷ்வர் அல்லது அமரேஸ்வரர், தேவி பார்வதி; பார்வதிக்கு இங்கு சிவபெருமான் உபதேசம் செய்ததாக ஐதிகம். குகையின் மேலிருந்து துளிக்கும் நீர்த்திவலைகள் அமிர்தமாக மதிக்கப்படுகின்றன. இக்குகைகுள் இருக்கும் புறுக்கள் ருத்ர கணங்களாக எண்ணப்படுகின்றன. குகை வாயில் சுமார் 80 அடி; உள் அளவு 100 அடி சதுரம். இச் கோயில மே ஜூன் மாசங்கள் மாத்திரம் திறந்திருக்கும்.

67 அமிர்தசரஸ்—வட இந்தியா ரெயில் ஸ்டேஷன். சிவாலயம்; ஸ்வாமிக்கு பொதுவாக மஹா தேவர் என்று பெயர். ஸ்டேஷனுக் கருகில் தர்மசாலையுண்டு.

68 அமிர்தபுரம்—கோடூர் ஜில்லா, மைசூர் ராஜ்யம்; தரிகெ ரெயிலிருந்து 6 மைல். 1197 வது ஹொய்சல அரசனுகிய வீரபல்லாளன் காலத்தில் கட்டப்பட்டதென்பர். அமிர்தேஸ்வரர் கோயில் இடிந்திருக்கிறது. இங்குள்ள முக மண்டபத்திலும் நவரங்க சபையிலும் அழகிய சில்பங்கள் இருக்கின்றன. பாகவத் புராணம், மஹா பாரதம், இராமாயணக் கதைகள் கல்லில் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. சளுக்கிய சில்பம். கோபுரத்தின் எதிரில் ஹொய்சலர்க ளுடைய பிருது இருக்கிறது. இதன் பக்கலில் உள்ள கஜ சம்ஹாரமூர்த்தி பார்க்கத்தக்கது. சிவராத்ரி காலையில் சூரிய நமஸ்காரம்.

69 அய்ஹோல்—அய்கோள் எனவும் அழைக்கப்படுகிறது; பீஜபூர் ஜில்லா பம்பாய் ராஜதானி; கோடைகுடி சிவாலயம். இங்கு சில அழகிய சிலை உருவங்கள் இருக்கின்றன. கோயில் சிறிது பாழடைந்திருக்கிறது. இங்குள்ள மற்ற சிவாலயங்கள்:— லாட்கான் கோயில்—ஆதியில் விஷ்ணு ஆலயமாயிருந்து பிறகு சிவாலயமாக மாற்றப்பட்டதென்று மிஸ்டர் கசினஸ் எண்ணுகிறார். கோயில் 4-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. லாட்கான் எனும் மஹமதியன் இங்கு வசித்தப்படியால் லாட்கான் கோயிலெனப் பெயர் பெற்றது. விரூபாட்சர்கோயில்; இது ஆதியில் ஜைன ஆலயமாயிருந்து ஒரு சிவாலயமாக மாற்றப்பட்டதாம்.

70 அரிமலம்—அரிமழம் என்றும் அழைக்கப்படுகிறது. திருமெய்யம் தாலூகா, புதுக்கோட்டை சமஸ்தானம், சென்னை ராஜதானி; சிவாலயம். ஸ்வாமி சுந்தரேசர், தேவி-மீனாட்சியம்மன். இங்கு மற்றொரு சிவாலயமு முண்டு.

71 அயனுவரம்—செங்கல்பட்டு ஜில்லா, சென்னை ராஜதானி; சென்னைக்கு அருகிலுள்ளது. சிவாலயம் ஸ்வாமி பிர்மேஸ்வரர் தேவி-பார்வதி; மற்றொரு கோயில், காசிவிஸ்வநாதர் கோயில்-விஸ்வநாதர்-விசாலாட்சி.

72 அயோத்யை—வட இந்தியா அயோத்யை-ரோஹில் கண்ட ரெயில் ஸ்டேஷன்; சிவாலயம், ஸ்வாமி நாகேஸ்வர

நாத் மஹாதேவ்; சரயூ நதியில் உள்ள சிவலிங்கம் குசனுல் ஸ்தாபிக்கப்பட்டதென்பர். இந்த லிங்கத்தில் சந்திரன், தனுஸ், திரிசூலம், கங்கை முதலிய உருவங்கள் இருக்கின் றன. இங்கு பல தர்ம சத்திரங்கள் உண்டு.

அயோத்யை பிரிவு—இதில் பல சிவாலயங்கள் உள (1) அய்ஹார்-சிவாலயம் (2) அயோத்யை பட்டணம் மான்சிங் சிவாலயம்; ஸ்வாமி மஹா தேவர் சுமார் 100 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது. (3) சௌலி-இங்கு சில சிவாலயங்கள் புதிதாய்க் கட்டப்பட்டிருக்கின்றன. (4) பக்சார் சிவாலயம் ஸ்வாமி பாகேஸ்வர்; கார்த்திகை விசேஷம். (5) பில்வாய் சுமார் 150 வருடங்களுக்கு முன் இங்கு பரமசிவத்தின் சிலை கண்டெடுக்கப்பட்டு பூஜை செய்யப்பட்டு வருகிறது. (6) பிர்ஹார் மஹாதேவர்கோயில் சிவராத்திரி விசேஷம். (7) பிஸ்வர்ன் இங்கு 12 சிவாலயங்கள் உள. (8) சிப்பியா சிவாலயம். பரமசிவம், பார்வதி, கணேசர் விக்ரகங்கள் இருக்கின்றன. (9) கௌதம்பூர் சிவாலயம். (10) மஹாதேவர் சிவாலயம் ஸ்வாமி மாலேஷ்வர்நாத் மஹாதேவ். (11) மச் சிலிகான் சிவாலயம், கர்ணநாத் மஹாதேவர். (12) கார்க்பூர் பிருத்விநாத் சிவாலயம் சுமார் 150 வருடங்களுக்கு முன் இங்கு பரமசிவத்தின் சிலை கண்டு பிடிக்கப்பட்டு, தற் காலம் பூஜிக்கப்பட்டு வருகிறது. (13) மோஹன்லால் கன்ஜ் புதிய சிவாலயம். (14) பன்கான்; இங்கு இரண்டு சிவாலயங்கள் உண்டு (14) பஹியார்பால் கணேஸ்வர்நாத் சிவாலயம். (16) பூர்வா, பில்வேஷ்வர் மஹா தேவ் சிவாலயம். (17) ராய்கர்-இங்கு மூன்று சிவாலயங்கள் உள. (18) சர்வான் பிஸ்வேஸ்வர் மஹாதேவ் கோயில். (19) சின்ஹோலி ஷஹர ஜான்பூர்; இங்கு மூன்று சிவாலயங்கள் உள. (20)டார்காவான் 3 சிவாலயங்கள்; மேடைகள் மீது சிவலிங்கங்கள் இருக்கின் றன. (21) ஹைதர்கர்-இரண்டு சிவாலயங்கள். (22) கல்யாண் மல் சிவாலயம், ஸ்வாமி பஞ்சாங்கிர் மஹாதேவ், யுதிஷ்டார் பிரதிஷ்டை யெனப்படுகிறது. (23) கண்டியாவான்-மஹா தேவர் ஆலயம். (24) காட்ரா மேதினி சிங், இங்கு7 சிவாலயங் கள் உள. (25) கேரி பிரிவு. இங்கு கோலா என்னும் கிராமத் தில் மஹாதேவர் கோயில். இங்குள்ள லிங்கத்தை ஔரங்கஜீப் அசைக்கப் பார்த்து கைவிட்டதாக சரித்தி ரம். லிங்கம் சிதைவுண்டிருக்கிறது. (26) சுக்ராமைலனி இங்கு

இரண்டு சிறிய சிவாலயங்கள் உள. (27) டாஹிர்பூர் ஜல்லி நாத் மஹாதேவ் ஆலயம். (28) மசசிலிகாவன் கார்ஹமியு நாத் மஹாதேவர் சிவாலயம். (29) மக்ரயார் பிரிவு. புதிய மஹா தேவர் ஆலயம். (30) பட்டு பம்ரி பாலேசுர்நாத் மஹா தேவ் ஆலயம்.

16. அரகல்கூடு—ஹசான் ஜில்லா, மைசூர் ராஜ்யம். பழய பெயர் அர்க்கபுரி (அர்க்கன்-சூரியன்) சிவாலயம், ஸ்வாமி அர்க்கேஸ்வரர், லிங்கம் கௌதமர் பிரதிஷ்டை, கோயில் சோழ கட்டிடம்.

17. அரசிக்கேரே—ஹசான் ஜில்லா, மைசூர் ராஜ்யம் பெங் களூர்-பூனா ரெயில் பாதை; ஹசான் ஸ்டேஷனுக்கு 25 மயில் தூரம் 11-ஆம் நூற்றாண்டில் 1220-வரை ஹொய்சல அரசர்களால் கட்டப்பட்டது. சிவாலயம்; ஸ்வாமி கட்ட மேஸ்வார்; கர்ப்பக் கிரஹத்தின் கதவு மிகவும் அழகிய வேலைப்பாடுள்ளது. கூரையில் நடராஜர் உருவம் இருக்கி றது. முக மண்டபம் வட்டவடிவமானது. 8 மத்தியிலும் 13 சுற்றிலுமுள்ள தூண்களால் தாங்கப்பட்டது. சளுக் கிய சில்பம். இங்கு பல சத்திரங்களுண்டு.

18. அரசிலி (திரு.) முந்தியார்பட்டி எனவும் வழங்கப்படுகிறது. திண்டிவனம் தாலூகா சென்னை ராஜதானி, புதுச்சேரிக்கு 7 மயில் வட கிழக்கு, வாமதேவர் பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமி அரசிலி நாதர், தேவி பெரிய நாயகி, அரசடி தீர்த் தம்; கல்வெட்டுகளில் ஸ்வாமி பெயர் அரசிலி ஆளுடையார் என்றிருக்கிறது; ஆலாலசுர்தார் என்றும் இருக்கிறது. திரு ஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

19. அரதைப் பெரும்பாழி அரித்துவார மங்கலம் (திரு.) எனவும் வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி, கும்பகோணம் தாலூகா, தஞ்சாவூர் ஜில்லா, சாலியமங்கலம் ஸ்டேஷனுக்கு 7½ மயில் வடகிழக்கிலுள்ளது. வராஹ அவதார விஷ்ணு வின் கொம்பை சிவபெருமான் முறித்த ஸ்தலம். ஸ்வாமி பாதாளேஸ்வரர் அல்லது பாதாள வரதர், தேவி பெரிய நாயகி அல்லது அலங்கார நாயகி, பிரம்ம தீர்த்தம். திரு ஞானசம்பந்தர் பாடியது.

20. அரந்தாங்கி மேற்படி தாலூகா, தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி; ரெயில் ஸ்டேஷன். விஸ்வநாதர்

கோயில்; கல்வெட்டுகளில் சோமீஸ்வர மூடைய நாயினர் என்று ஸ்வாமி பெயர் இருக்கிறது. சத்திர மூண்டு.

10 அரசிற்கரைபுத்தூர் (திரு.) அழகார் புத்தூர் என்றும், திருப் புத்தூர் என்றும் ஸ்ரீ வில்லிபுத்தூர் என்றும் அழைக்கப் படுகிறது. அரிசிலாற்றின் கரையிலுள்ளது. சிவாலயம்; ஸ்வாமி படிக்காசு அளித்த ஈஸ்வரர், தேவி அழகாம்பிகை, தீர்த்தம் அரிசிலாறு, பாணசுர தீர்த்தம். கும்பகோணத்தி லிருந்து $4\frac{1}{2}$ மயில் தூரம். மூவர் பாடல் பெற்றது. உண்மை யாநந்த ரிஷி பூசித்த ஸ்தலம். ஸ்வாமி புகழ்த்துணை நாயனு ருக்கு படிக்காசு அளித்த ஸ்தலம்.

10 அரித்தாப்பட்டி மதுரை ஜில்லா, சென்னை ராஜதானி, மேலூருக்கும் அழகர் கோயிலுக்கும் மத்தியிலுள்ளது. சிவாலயம்; குகைக் கோயில்; பெருமாள் மலையில் வெட்டப் பட்டிருக்கிறது. கர்ப்பக் கிரஹம் 8 அடி சதுரம் 7 அடி உயரம்.

10 அரியக்கோட்—கொச்சி ராஜ்யத்தியலுள்ளது. சிவா லயம்.

10 அரியத்துறை—தென் இந்தியா சிவாலயம். ஸ்வாமி வருணகேடேஸ்வரர், தேவி மரகதவல்லி.

10 அரும்பாவூர்—திருச்சிராபள்ளி ஜில்லா, சென்னை ராஜ தானி சிவாலயம்.

10 அல்லூர்—திருச்சிராப்பள்ளி தாலூகா, சென்னை ராஜ தானி சிவாலயம். ஸ்வாமி பஞ்சததேஸ்வரர், தேவி தர்ம சம்வர்த்தனி. இங்கு பசுபதீஸ்வரர் கோயில் என்று ஒரு சிறு கோயிலுண்டு.

10 அலஹாபாத்—பிரயாகை. வட இந்தியா ரெயில் ஸ்டே ஷன்; கங்கை, யமுனை, சரஸ்வதி சங்கமமாகுமிடம். இங்கு தச அஸ்வமேத கட்டத்தருகில் சிவாலயமிருக்கிறது. சோமேஸ்வரர் கோயில், யமுனையில் படகேறி ஒரு மயில் போக வேண்டும். அன்றியும் இங்கு வட விருட்சேசர் கோயிலில் ராஜேஸ்வர மஹாதேவர், சூல கண்டேஸ்வரர் மூர்த்திக ளுண்டு. இதற்கு கொஞ்ச தூரம் மதனகாமேஸ்வரர் சிவாலய முண்டு. இதற்கு 2 மயில் தூரத்தில் நாகேஸ்வர மகாதேவர் ஆல யம். இது சதனகர் கிராமத்தில் இருக்கிறது. பாதர்புரி சிவால

யம்/கோட்டைக்குள் இருக்கிறது; மிகவும் பழமையானது. இங்குள்ள மஹாதேவர் விக்ரகம் புதுமையானது, அடசய விருட்சக் கோயிலுக்குள் இருக்கிறது.

அலஹாபாத் ஜில்லாவில் அடியிற் கண்ட சிவாலயங்க ளிருக்கின்றன. (1) தியோர்க்; சோமேஸ்வரநாத் ஆலயம் பழ மையானது. (2) சியாவன் தியோடா யமுனையிலுள்ள ஒரு தீவில் சிவாலயம்; இங்கிருந்த பழய சிவாலயம் மிலேச்சர்க ளால் இடிக்கப்பட்டது. பிறகு சிவலிங்கம் புதிதாய்ப் பிர திஷ்டை செய்யப்பட்டது. (3) இஸ்மேயில் கன்ஜ் கிராமத்தில் பாண்ட்ரா என்னும் இடத்தில் ஒரு பழய சிவாலயமுண்டு.

116 அவந்திபூர்—தற்காலம் வந்திபூர் என்று அழைக்கப் படுகிறது. காஸ்மீர ராஜ்யத்தில் ஜீலம் நதியின் வடகரையி லுள்ளது. இஸ்லாமாபாத்துக்கும் ஸ்ரீ நகருக்கும் மத்தியில் சிவாலயம்; அவந்தி வர்மனால் (855-882 கி. பி.) கட்டப்பட் டது. கோயில் மிகவும் கிலமா யிருக்கிறது. ஆலயம் 200 அடி நிகளம் 160 அடி அகலம். ஸ்வாமி அவந்தீஸ்வரர். சிகந்தர்ஷா எனும் மகமதிய அரசனால் கோயில் பாழாக்கப் பட்டது. கிரேக்க சில்பம் கலந்த காஷ்மீரசில்பம்.

117 அவளிவணல்லூர்—கும்பகோணம் தாலூகா, தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சாலியமங்கலம் ஸ்டேஷனி லிருந்து 6½ மயில்; சிவபெருமான் குருக்கள் பெண்ணுக் காக மானிட உருவில் சாட்சி சொன்ன க்ஷேத்திரம், கோயி லில் இத் திருவிளையாடல் சிலையில் செதுக்கப்பட்டிருகின் றது. வராஹ அவதார விஷ்ணுவும், காசிபரும் பூசித்த ஸ்தலம். ஸ்வாமி சாட்சிநாதர், தேவி சவுந்தரநாயகி, தீர்த் தம் சந்திரபுஷ்கரணி; ப்ரமசிவம் ரிஷபவாஹனருடாய் வீற் றிருக்கிறார். பிரம்மோற்சவம் தை மாசம்.

118 அவனி—மைசூர் ராஜ்யம், கோலார் ஜில்லா, முளபாகல் தாலூகா; முளபாகலிலிருந்து 8 மயில் தூரம். இதை சிலர் அவந்திகை என்கின்றனர். தென் கயா க்ஷேத்திரம் என்று மழைக்கப்படுகிறது. சிவாலயம்; ஸ்வாமி ராமலிங்கேஸ்வரர், ஸ்ரீராமர் பிரதிஷ்டை; கோயிலில் மற்ற ராமாயண வீரர்க ளால் பிரதிஷ்டை செய்யப்பட்ட லிங்கங்கள் இருக்கின் றன. லவ குசர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்ட சிலை

ஆவுடையார் ஒன்றில் இரண்டு லிங்கங்கள் இருக்கின்றன. பிரம்மோற்சவம் மாசி மாசம்; சிவாராத்திரி விசேஷம். சிறு குன்றின் மீது தனுக்கோடி தீர்த்தமும் பார்வதி தேவி ஆலயமுமிருக்கிறது.

121 அவிட்டத்தூர்—முகுந்தபுரம் தாலூகா, கொச்சி ராஜ்யம், சிவாலயம், சிறந்த மரவேலைப்பாடுள்ளது:

122 அவிநாசி—திருப்புக்கொளியூர் எனும் தேவாரப் பெயர் பெற்றது. எம். எஸ். ரெயில்வே மங்கலம் ஸ்டேஷனுக்கு 5 மயில் வடமேற்கிலுள்ளது. அவிநாசி-நாசமில்லாதது. கொங்கு அரசர்கள் கட்டிய ஏழு முக்கிய சிவாலயங்களில் இது ஒன்று. கோயில் பூமி மட்டத்திற்குக் கீழ் இருக்கிறது. ஸ்வாமி அவிநாசி ஈஸ்வரர், தேவி கருணாம்பிகை, முதலைத் தீர்த்தம். ஸ்தல விருட்சம் பாதிரி. சுந்தரமூர்த்தி நாயனார் முதலை வாயிலிருந்து பிராமணப் பிள்ளையை மீட்டுக் கொடுத்தருளிய ஸ்தலம்; இந்த இடத்திற்கு புக்கொளிர் ஏரிகரை யென்று பெயர். இக்கதை தலபுராணத்தில் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. பழய சிவாலயம்; பல கல்வெட்டுகள் உண்டு. பெரிய கல்நந்தியை உடையது. பிரளய காலத்தில் பரமசிவம் அக்கினித் தாண்டவமாடிய பொழுது, அவரை விட்டுப் பிரிந்த பார்வதி தேவியார் அப்பாபம் தீர பரம சிவத்தை எங்கு பூசிப்பது என்று வேண்ட, காசி விஸ்வ நாத லிங்கத்திலிருந்து சுயம்புவாக ஒரு பாகம் பிரிக்கப் பட்டு இங்கு ஸ்தாபிக்கப்பட்டதாக ஐதிகம். பிரமோற்சவம் சித்திரை மாசம். சுந்தரர் பாடல் பெற்றது. இங்கு அருகிலுள்ள புதுப்பாளயத்தில் ஒரு சிவாலயமுண்டு.

123 அழிக்கல்—அல்லது வளர் பட்டணம். மலையாள தேசம் கண்ணனூருக்கு 5 மயில். கொச்சி ராஜ்யத்துப் 11-ஆம் அரசனாகிய வல்லபப் பெருமாள் இங்கு ஒரு சிவலிங்கத்தைக் கண்டெடுத்து கோயில் கட்டியதாகச் சரித்திரம் கூறுகிறது. தற்காலம் இக் கோயில் பாழாயிருக்கிறது.

125 அழுந்தூர்—திரு. திரு + அழுந்தூர். தற்காலம் தேரழுந்தூர் என்று மருவியது. சென்னை ராஜதானி. குற்றாலத்திற்கு 3 மயில். வேதங்களும் அஷ்டதிக் பாலர்களும் பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமி வேதபுரீஸ்வரர், தேவி சௌந்தராம்

பிகை. வேத தீர்த்தம், திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

அறுப்புக்கோட்டை—ராம்நாட் ஜில்லா, சென்னை ராஜதானி. சிவாலயம் சுந்தரபாண்டியனால் கட்டப்பட்டது.

அறையணிநல்லூர் (திரு) அறைகண்டநல்லூர் எனவும் வழங்கப்படுகிறது. தென் ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி. திருக்கோயிலூருக்கு அருகாமையிலுள்ளது. சிவாலயம் ஒரு சிறு குன்றின்மேற் கட்டப்பட்டிருக்கிறது. பிரிசண்ட ரிஷி பூசித்த ஸ்தலம். ஸ்வாமி அறையணி நாதேஸ்வரர் ஒப்பிலாமணீஸ்வரர், தேவி அருள்நாயகி. தீர்த்தங்கள் பெண்ணையாறு, பாண்டவ தீர்த்தம், ஆரண்ய தீர்த்தம், கல்வெட்டுகளில் ஸ்வாமி பெயர் ஒப்பு ஒருவருமில்லாத நாயனர் என்றிருக்கிறது. திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. கோபுரம் 9 நிலைகள் உடையது, உன்னதமானது.

அன்பிலாலந்துரை—அன்பில் எனவும், திருமாலயன்துறை, திருப்பொன்பிலாலந்துறை, கீழன்பிலாலந்துறை எனவும் வழங்கப்படுகிறது. திருச்சிராப்பள்ளி தாலூகா, மேற்படி ஜில்லா, சென்னை ராஜதானி, பூதலூர் ஸ்டேஷனுக்கு 12 மயில் வடக்கிலுள்ளது. கொள்ளிடத்திக்கு வடகரை. பிரமன் விஷ்ணு இந்திரன் வாகீசர் முதலியோர் பூசித்த க்ஷேத்திரம். பிரேமபுரீஸ்வரர் கோயில்; ஸ்வாமி சத்தியவாகேஸ்வரர், ஆலத்துறைநாதர், தேவி சவுந்தரநாயகி; தீர்த்தம் காயத்ரி தீர்த்தம். ஞானசம்பந்தர் அப்பர் பாடல் பெற்றது. அப்பர் தென் கரையிலிருந்தபடியே பதிகம் பாடிய தாக ஐதிகம். இதைக்கேட்ட பிள்ளையாருக்கு செவி சாய்த்த பிள்ளையார் என்று பெயர் உளது.

அன்னியூர்(திரு)இது பொன்னூர் எனவும் வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி ஆநந்த தாண்டவபுரம் ஸ்டேஷனுக்கு 4. மயில்; வருணன் பூசித்த ஸ்தலம். ஸ்வாமி ஆபத்சகாயர், தேவி பெரியநாயகி. வருண தீர்த்தம், திருஞானசம்பந்தர், அப்பர் பாடியது.

அன்னூர்—கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, பழய சிவாலயம்.

அனக்காவூர்—வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம் ஸ்வாமி ஹனுமந்தேஸ்வரர், அனுமார் பூசித்த க்ஷேத்திரம்.

அனகாபல்லே—விசாகப்பட்டணம் ஜில்லா, சென்னை ராஜதானி. சிவாலயம்; ஸ்வாமி போகேஸ்வரர்.

அஜெண்டா—வட இந்தியாவிலுள்ளது. பச்சாஸ் ஸ்டேஷனிலிருந்து 30 மைல். இங்குள்ள சமணகுகைக் கோயிலில் ஒரு சிவாலயமுமிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது.

அஹமத் நகர் பிரிவு—பம்பாய் ராஜதானியின் ஓர் பகுதி. இப்பிரிவில் அடியிற்கண்ட ஊர்களில் சிவாலயங்கள் உள. (1) கோகம்தான்—பழய சிவாலயம். சுமார் 12-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. சளுக்கிய சில்ப மமைந்தது: (2) கோல்காவன்—சிவாலயம். ஸ்வாமி வாலகேஷ்வார். (3) கோரேகாவன்—சிவாலயம். ஸ்வாமி கோரேஷ்வர். லிங்கம் நான்கு முகங்களுடையது. (4) கும்பார்—மஹாதேவர் கோயில். (5) லிம்பர் காவான்—சித்தேஷ்வர் கோயில். (6) மிரி—போதேஷ்வர் கோயில். 1625-ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. (7) பார்நேர்—சிவாலயம். ஸ்வாமி திரியம்ப கேஷ்வர், இங்கு நாகநாத மஹாதேவர்—கோயில் என்று மற்றொரு பழய கோயில் உண்டு. (8) பெடகாவன்—இங்கு 3 சிவாலயங்கள் உள; பாலேஷ்வர், மல்லிகார் ஜூன், ராமேஷ்வர். (9) பிம்பல்வண்டி—மஹதேவர் கோயில். (10) ராசின்—சிவாலயம் ஸ்வாமி காலதேவர். (11) ரெஜெகுரி—சிவாலயம், ஸ்வாமி காம்நாத் மஹாதேவர். (12) ஷ்ரிகோண்டா—ஹக்டேஷ்வர் ஆலயம். (13) தக்லி—காண்டேஷ்வர் மஹாதேவ் ஆலயம். (14) டிலாங்சி—ஜடாசங்கர் மஹாதேவ் ஆலயம். (15) பிரவச சங்கம்—சித்தேஷ்வர் ஆலயம் 1823-ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. (16) அகோலா—சிவாலயம், ஸ்வாமி சித்தேஷ்வர்; ஹேமாத் பண்ட கட்டிடம். பழய கோயில் முன்பு மண்ணால் மூடப்பட்டிருந்தது. 1780ல், வெளிப்படுத்தப்பட்டது. இவ்விடம் கங்காதரர் கோயில்—என்று ஒரு புதிய ஆலயமுமுண்டு. (17) அரங்கான்—அரனேஷ்வர் மஹாதேவ் ஆலயம். (18) பில்வண்டி கோல்ஹார் சிவாலயம்.

அஹோபிலம்—கர்னூல் ஜில்லா, சென்னை ராஜதானி நந்தியால் ஸ்டேஷனுக்கு 80 மைல். மேலை அஹோபிலத்திலும் பல லிங்கப்பிரதிஷ்டைகள் இருக்கின்றன.

ஆக்கூர். சென்னை ராஜதானி, மாயவரத்துக்கு $10\frac{1}{2}$ மயில் கிழக்கு; சிவாலயத்திற்கு தான்தோன்றிமாடம் என்று பெயர். சிறப்புலி நாயனருடைய ஸ்தலம். இந்திரன் பூசித்த ஸ்தலம். ஸ்வாமி, சுயம்புநாதேஸ்வரர், தேவி வாணெடுங்கண்ணி யம்மை. குமுதத் தீர்த்தம். திருஞான சம்பந்தர், அப்பர், பாடல் பெற்றது.

ஆக்ரா பிரிவு. வட இந்தியா ஐக்கிய மாகாணம். இப் பிரிவில் இரண்டு சிவாலயங்கள் உள. (1) பார்த்தாலா; ஸ்வாமி மகாதேவர், அயிலகுண்ட தீர்த்தம். விருத்திராசுரனைக் கொன்ற தோஷம் போக்க இந்திரன் இங்கு குளித்ததாக ஐதிகம். (2) படேசர் சிவாலயம். யமுனைக் கரையிலுள்ளது. ஸ்வாமி படேசர்நாத்.

ஆங்கூர். சென்னை ராஜதானி, பல்லாரி ஜில்லா, கண்டேஸ்வரர் கோயில்; தற்காலம் பூஜை யில்லை. சளுக்கிய சில்பம். இங்குள்ள ஆலிங்கன சந்திரசேகர்மூர்த்தி பார்க்கத்தக்கது.

ஆச்சாபுரம். தென் இந்தியா, சென்னை ராஜதானி, சிவாலயம், ஸ்வாமி சபாநாதேஸ்வரர்; தேவி சபாநாயகி; பிரம்ம தீர்த்தம். சிவயோகத் தியாகராஜ ஸ்வாமி கோயில் தேவி திருவெண்ணீற்றுமை; தர்மபுரம் ஆதினத்தின் மேற் பார்வைக்குட்பட்டது.

ஆசாம்—வட இந்தியா. இங்குள்ள சிவாலயங்கள் (1) பேலாம்பா கிராமம். இங்கு 12 சிவாலயங்கள் பாழடைந்து கிடக்கின்றன. (2) கேட்லால் கிராமம் இங்கு சிவலிங்கமும் பாழடைந்த கோயிலுமுள்ளது. (3) ஷேர்பூர் கிராமம், பாழடைந்த சிவாலயம். அநாதிலிங்க ஸ்வாமி, சுயம்புலிங்கம். (4) ஜால்பிஸ் கிராமம்; சிவாலயம், இது சுமார் 350 வருடங்களுக்கு முன் குச்பிஹார் அரசரால் கட்டப்பட்டது. லிங்கம் சுயம்பு என்பர். கோயில் செங்கற் கட்டிடம்.

ஆடானை. சென்னை ராஜதானி, திருப்புனவாயிலுக்கு 12 மயில் தெற்கிலுள்ளது. பிருகுமுனி பூசித்த க்ஷேத்தி

ரம். நீலரத்னத்தால் சிவலிங்கம் செய்து சூரியன் பூசித்த ஸ்தலம். அதனால் ஸ்வாமிக்கு ஆதிரத்னேஸ்வரர் என்று பெயர். தூர்வாசரது சாபத்தால் ஆட்டுத் தலையும், ஆனையின் உடலும் பெற்ற பிருகுமுனிவர், அச்சாபம் நீங்கிய க்ஷேத்ரதிம்; ஆகவே ஆடானை யென்று பெயர் பெற்றது. ஸ்வாமி ஆடானைநாதர் அல்லது அஜகஜேஸ்வரர், தேவி சிநேக வல்லி, சூரிய தீர்த்தம். திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

ஆடூர்—சென்னை ராஜதானி, தென் கன்னட ஜில்லா காசர்கோட்டிலிருந்து 17 மயில். சிவாலயம் பழயது, சிதைந்து போயிருக்கிறது. இங்கு லிங்கம் அர்ஜுனனால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாம்.

ஆண்டார் கோயில்—திரு ஆண்டார் கோயில் என வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி, புதுச்சேரிக்கு அருகிலுள்ளது. பஞ்சநதேஸ்வரர் கோயில், இங்கு முதலாம் ராஜேந்திர சோழன் காலத்திய கல்வெட்டுளது.

ஆண்டிகல்லூர். சென்னை ராஜதானி, திருச்சிராப்பள்ளி தாலுகா, வட தீர்த்த ஸ்வாமி கோயில். சோழ அரசனாகிய பரகேசரிவர்மனால் கி. பி. 10-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. பழய சோழ கட்டிடம்.

ஆண்டிப்பட்டி—சென்னை ராஜதானி, மதுரை ஜில்லா சிவாலயம்.

ஆண்டியூர்—பவானி தாலுகா, கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி பழய சிவாலயம். அழகிய சில்பமமைந்தது. சில கல்வெட்டுகள் உள.

ஆத்தூர்—(ஆற்று + ஊர்) சேலம் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்.

ஆத்தூர்—இது திருவாத்தூர் எனவும் வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி, தேவக் கோட்டைக்கு அருகிலுள்ளது. சிவாலயம்; ஸ்வாமி சோமேஸ்வரர் தேவி பாதம்பிரியா நாயகி.

ஆத்தூர்—திரு ஆத்தூர், சிவாலயம். திருவாங்கூர் ராஜ்யத்திலுள்ளது.

ஆந்நூர். சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா சிவாலயம். திருச்சோணேஸ்வரர். ஸ்வாமி சோமநாதேஸ் வரர், தேவி சோமசுந்தரி; தாம்ரபர்ணி தீர்த்தம்.

ஆதனூர். திருமெய்யம் தாலூகா, புதுக்கோட்டை சமஸ் தானம், சிவாலயம். ஸ்வாமி கைலாசநாதர்.

ஆதனக் கோட்டை, ஆதனூர் கோட்டை. புதுக்கோட்டை சமஸ்தானம், சென்னை ராஜதானி. சிவாலயம் குலோத் துங்க சோழனால் கட்டப்பட்டது.

ஆதனூர். சென்னை ராஜதானி, சிதம்பரத்திற்கு அருகிலுள்ளது. சிவாலயம்; ஸ்வாமி அகஸ்தீஸ்வரர் தேவி ஆநந்தவல்லி. நந்தனர் பிறந்த இடம்.

ஆநந்தத்தாண்டவபுரம். ஆனைத்தாண்டாபுரம் என்றும் பெயர், ஆநதாண்டவபுரம் என்று சாதாரணமாக அழைக்கப்படுகிறது. மாயவரம் தாலூகா, தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம். சுவாமி பாரத்வா ஜேஸ்வர், பஞ்சவடீஸ்வரர்; ஸ்தல விருட்சம் ஆல். இதை பாரத்வாஜ ஆசிரமம் என்பர். பாரிஜாத வனம் என்றும் இதற்குப் பெயர். ஓர் ரிஷிக்கு நட ராஜப் பெருமான் தாண்டவ தரிசனம் கொடுத்ததாக ஐதி கம். மானக்கஞ்சாற நாயினர் அவதரித்த ஸ்தலம். தேவி கலியாணசுந்தரி; பிந்து தீர்த்தம் இதற்கு கஞ்சாறு என்றும் பெயர். சப்த மாதாக்களுள் ஒருத்தியாகிய கவுமாரி பூசித்த க்ஷேத்திரம்.

ஆப்பனூர் (திரு) மதுரையிலுள்ளது. சென்னை ராஜ தானி, வைகையின் வடகரையில் சிவாலயம். ஸ்வாமி, திரு வாப்புடையார், தேவி குரவங்கமழ் குழலம்மை; ரிஷப தீர்த் தம். சோழாந்தகன் எனும் பாண்டிய ராஜன் மந்திரிக்காக, சிவபெருமான் ஓர் ஆப்பினிடத்தில் தோன்றியருளிய ஸ்த லம். திருஞானசம்மந்தர் பாடல் பெற்றது. இக்கோயிலின் பெரும்பாகம் 1760 வரு. புதுப்பித்தவர் மயிலை அருணாசல முதலியார்.

ஆப்பாடி. (திரு.) தென் இந்தியா, சென்னை ராஜதானி திருப்பனந்தாளுக்கு 2 மயில் மேற்கு. கும்பகோணம் ரயில்

ஸ்டேஷனிலிருந்து போகவேண்டியது. சண்டேஸ்வரர் சரித்திரத்தைச் சார்ந்த ஸ்தலம். ஸ்வாமி பாலுகந்தநாதர், தேவி பெரியநாயகியம்மை. தீர்த்தம் மண்ணியாறு, பால் தீர்த்தம், ஆத்தி ஸ்தல விருட்சம். இங்கு ஆலயத்தில் ஸ்வாமிக்கு தீபாராதனை யானவுடனே சண்டேஸ்வரருக்கு தீபாராதனை ஆகிறது. இதற்கு திரு ஆயப்பாடி எனவும் பெயர். இடையன் பால் தினந்தோறும் ஓரிடத்தில் கவிழ் வதைக்கண்டு வாளால் வெட்ட இரத்தம் பெருகக் கண்டு பார்க்க, சிவலிங்கம் தோன்ற, பாலு கந்தநாதரோ என்று வேண்டியதாக ஐதிகம்; ஸ்வாமிக்கு அப் பெயர் உண்டா யிற்று. அப்பர் பாடல் பெற்றது.

ஆபுகுண்டா. விசாகபட்டணம் ஜில்லா, சென்னை ராஜ தானி, விசாகபட்டணத்திற்கு 13 மயில். சிவாலயம். ஸ்வாமி சோமேஸ்வரர்; இங்கு இன்னும் பல சிவாலயங்கள் உள. அவை யனைத்தும் புதியவை.

ஆபுமலை. வட இந்தியா ரெயில் ஸ்டேஷனுகிய ஆபு ரோட்டிலிருந்து 17 மயில். சிவாலயம். ஸ்வாமி மஹாதேவர்; அம்மனுக்கு தேவி யென்றுதான் பெயர். தீர்த்தம் அக்னி குண்டம், நாகதலாவ்.

ஆம்பர். வட இந்தியா ஜெயபுரிக்கு 7 மயில், சிவாலயம். ஆம்ரவநேசர் உமாதேவி ; பழய கோயில்.

ஆம்காட், அஜெய்கர் சமஸ்தானம். ராஜபுதனம்; வட மேற்கு இந்தியா; இங்கு நடு ஆற்றின் மத்தியில் சிவாலய முள்ளது. ஸ்வாமி ஜலகண்டி மஹாதேவர். இந்த சமஸ்தா னத்தில் குடார் என்னும் ஊரில் மற்றொரு சிவாலயமுண்டு. ஸ்வாமி, சதுர்முக மஹாதேவர்; இக் கோயில் எட்டாம் நூற்றுண்டில் கட்டப்பட்டது.

ஆம்பூர். வேலூர் தாலூகா, வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, நாகேஸ்வரர் சிவாலயம்.

ஆமாத்தூர். (திரு.) சென்னை ராஜதானி, விழுப்புரம் ஸ்டேஷனுக்கு 4 மயில் வட மேற்கு. காமதேனுவும் கோடி மகரிஷியும் ஸ்ரீ ராமரும் பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமி அபிராமேஸ்வரர் காமார்த்தேசுரர்; தேவி முத்தாம்பிகை.

அழகிய நாயகியம்மை; தீர்த்தம் பம்பையாறு, பத்மதீர்த்தம், பசு தீர்த்தம்; வன்னி விருட்சம். மூவர் பாடல் பெற்றது.

ஆரக்கேரே. மைசூர் ராஜ்யம். ஷிமோகாவுக்கு 2 மயில். துங்கை மெனும் ஆற்றின் கரையில் சிவாலயமுளது. ஸ்வாமி அர்க்கேஸ்வரர்.

ஆமூர். சென்னை ராஜதானி திருச்சிராப்பள்ளி ஜில்லா, சிவாலயம். ஸ்வாமி ரவீசர், தேவி ஆநந்தவல்லி.

ஆரப்பாக்கம். காஞ்சீபுரம் தாலூகா, செங்கல்பட்டு ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம். கர்ப்பக்கிரஹம் கஜப்பிருஷ்ட ஆகிருதி, ஸ்வாமி திருவாலீஸ்வரர்.

ஆரூர். (திரு.) திருவாரூர். தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன். பிரபல க்ஷேத்திரம். மூவர் பாடல் பெற்றது. பூந்துருத்தி நம்பிகாட நம்பி திருவிசைப்பா பாடல்பெற்றது. பிறக்க முக்தியளிக் கும் பெரும்பதி: மனுநீதிகண்ட சோழ அரசனது ராஜதானி. சப்தவிடங்க க்ஷேத்திரங்களில் முக்கியமானது. பதினேரு திருமுறைகளை செப்பேட்டில் எழுதி தியாகராஜ சந்நிதியில் அபய குலசேகர சோழ மன்னன் அர்ப்பணம் செய்த ஸ்த லம். பெரிய புராணத்தை பன்னிரண்டாம் முறையாக அந பாய சோழ மன்னன் ஸ்வாமி சந்நிதியில் அரங்கேற்று வித்த ஸ்தலம். சுந்தரமூர்த்தி நாயனார் இங்கு தேவாசிரியன் எனும் ஆயிரக்கால் மண்டபத்தில் திருத்தொண்டத் தொகை அருளிசெய்த இடம். இவர் விருத்தாசலத்தில் மணி முத்தாற்றில் இட்ட பொன்னை, பரவை நாய்ச்சியா ருக்கு, இங்குள்ள கமலாலயம் எனும் திருக்குளத்தில் எடுத் துக் கொடுத்த ஸ்தலம். சுந்தரர் பொருட்டு, ஸ்வாமி நள் ளிருளில் பரவையார் பால் தூது சென்ற ஸ்தலம். இவர் அந்தகனகிய பிறகு வலக் கண் பெற்ற மகிமையுடைய க்ஷேத்திரம். இங்கு விரன்மிண்ட நாயனார் சிவனடியார் களுக்கு பக்தி செய்தும், தண்டியடிகள் கமலாலயத்தை ஜீர்ணோத்தாரணம் செய்தும், கழற்சிங்கர் பரமசிவத்துக்குச் சாற்றும் புஷ்பத்தை யெடுத்த தன் மனைவியின் கையைக் கொய்தும், செறுத்துணை நாயனார் பூவை முகர்ந்த கழற்சிங் கரது பத்னியின் மூக்கினைக் கொய்தும், மூக்கியடைந்த இவ்ய ஸ்தலம். இந்திரன் முகுந்த சக்ரவர்த்தி

பூசித்த ஸ்தலம். இங்குள்ள ஆலயத்திற்கு திரு மூலட்டானம் என்று பெயர். இங்குள்ள கோயில் இந்தியாவிலுள்ள சிவாலயங்களில் ஒரு மிகப்பெரிய கோயிலாம். ஸ்வாமி, புற்றிடங்கொண்டார், வன்மிகநாதர்; தேவி அல்லியங் கோதை, அல்லது நீலோற்பலாம்பாள். வன்மிகம் என்றால் புற்று என்று பொருள். ஸ்தல விருட்சம் பாதிரி; தீர்த்தங்கள், சங்கு தீர்த்தம், கமலாலயம். சுயம்புலிங்கம்; உற்சவமூர்த்திக்கு வீதி விடங்கர் என்று பெயர். அவரது நடனத்திற்கு அஜபா நடனம் என்று பெயர். பிரம்மோற்சவம் பங்குனி மாசம். ருத்திரபாத உற்சவம் 10 நாள் விசேஷம்; உற்சவ தியாகராஜமூர்த்திக்கு எப்பொழுதும் மார்பில் கவசமிட்டிருக்கிறது. இதற்குள் பீஜீட்சரம் இருப்பதாக ஐதிகம். தியாகராஜர் விக்ரஹம் பொன்னாலாயதாம். தியாகராஜர் சந்நிதிக்குப் பின்னால் மஹாவிஷ்ணுவின் உருவம் இருக்கிறதென்பர். இங்கு லட்சுமி பரமசிவத்தை பூசித்து அழியாத மாங்கல்யம் பெற்றதாகப் புராணம். இங்கு தியாகராஜர் 364 லீலைகள் இயற்றியதாகப் புராணம். தியாகராஜர் வீற்றிருக்கும் சபைக்கு புஷ்ப சபை என்று பெயர். இங்கு இந்திரன் ஒரு சாபத்தால் பறையனாகப் பிறந்ததாகப் புராணம் கூறுகிறது. தற்காலமும் இவ்வூரில் ஆனை ஏறும் பறையன் என்று ஒரு ஜாதிப் பெயர் உண்டு. பங்குனி உற்சவத்தில் ஆனை யேறும் பறையனுக்கு கோவிலதிகாரிகளால் கையில் கங்கணம் கட்டப்படுகிறது. தியாகராஜர் ரதோற்சவத்தில் புறப்படும்பொழுது இவனுக்கு வெள்ளைப் பூச்சக்கரக் குடை மரியாதை தற்காலமும் நடக்கிறது. இங்குள்ள தேர், தென் இந்தியாவில் மிகப்பெரியது; இதை சுமார் 3000 பெயர்கள் இழுக்கவேண்டியிருக்கிறது. திருவாரூர் தேர் அழகு, என்பது பழமொழி; இதற்கு ஆழித்தேர் என்று பெயர். சங்கு தீர்த்தம் கோயிலுக்குள் இருக்கிறது. கமலாலயம் கோயிலுக்கு பின்புறம் உள்ளது; 18 ஏகரா விஸ்தீரணமுள்ளது; நடுவில் ஒரு பெரிய மண்டபம் உடையது. இதில் 64 ஸ்தானக் கட்டங்கள் உள. தியாகராஜ விக்ரஹம் விஷ்ணுவினால் இந்திரனுக்கு கொடுக்கப்பட்டு, இந்திரனால் முசுகுந்த சக்ரவர்த்திக்குக் கொடுக்கப்பட்டு, அவரால் திருவாரூரில் வைக்கப்பட்டதாம். இங்குள்ள கோயில் ஆதியில் சிறியதாயிருந்து பிறகு

கொஞ்சம் கொஞ்சமாகப் பெரியதாக்கப்பட்டதென்று சிற்ப சாஸ்திரிகள் கூறுகின்றனர். பெரிய கோயில் 3 பிராகாரங்கள் உள்ளது. உள் பிராகாரம் 50 ஏக்ரா விஸ்தீரணமுடையது; சுற்றிலும் கல்ல மதில்சுவர்கள் அமைந்தது; 191 அடி நிகளம், 156 அடி அகலம். இரண்டாம் பிராகாரமும் கோபுரமும் 1440-44-லில் ஆண்ட விஜயநகர் அரசர்களால் கட்டப்பட்டது. இப் பிராகாரத்தின் மேற்கு சுவரில் இரண்டாம் குலோத்துங்கன் கல்வெட்டு ஒன்று இருக்கிறது. இதில் அக்காலத்தில் நடந்துவந்த 56 உற்சவங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாம் பிராகாரம் 470 அடி அகலமும் நிகளமும் உடையது. மூன்றும் பிராகாரம் பிறகு கட்டப்பட்டது; 957 அடி நிகளம் 726 அடி அகலம். முதல் பிராகாரத்தில் ஒரு கோபுரமும் இரண்டாம் பிராகாரத்தில் இரண்டு கோபுரங்களும் உள. கிழக்கு கோபுரம் 118 அடி உயரம். இது தற்காலம் 7 நிலைகளை உடையதாக இருக்கிறது. 11 நிலைகளுடன் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டு பிறகு ஏதோ காரணத்தினல் 7 நிலைகளாகக் குறுக்கப்பட்டதாகக் காண்கிறது. மேற்கு கோபுரம் 101 அடி உயரம், சித்தராசன் மகன் நாகராசன் என்பவரால் சுமார் 1440 வரு கட்டப்பட்டது. மூன்றும் பிராகாரத்தில் 5 கோபுரங்கள்; இதன் வட கிழக்கு மூலையில் ஆயிரக்கால் மண்டபம் இருக்கிறது. இதில் தற்காலம் 807 கால்கள்தான் இருக்கின்றன. இவற்றுள் பாதி ஸ்தம்பங்களுக்குக் கூரை யில்லை. இம் மண்டபம் ஏதோ காரணத்தால் முடிக்கப்படவில்லை. இங்கு அழகிய சித்திரங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. கோயில் சந்நிதிகளில் அசலேஸ்வார் சந்நிதிதான் மிகவும் புராதனமானது. இதில் 985-1013 ஆண்ட ராஜராஜனுடைய கல்வெட்டும், 1011-1044 ஆண்ட ராஜேந்திரனுடைய கல்வெட்டும் உளது. இக்கோயிலுள்ள ஒரு கல்வெட்டினல் 1013-1118 ஆண்டுகளில் ஆண்ட குலோத்துங்கசோழன் காலத்தில் பெரிய புராணம் இயற்றப்பட்டதாக அறிகிறோம். இரண்டாம் பிராகாரத்தின் வடக்கு சுவரில் ஒட்டு தியாகர் சந்நிதியிருக்கிறது. இங்கு விறன்மிண்ட நாயனரால் துரத்தப்பட்ட சுந்தரமூர்த்தியை ஸ்வாமி ஒளித்து வைத்ததாக ஐதிகம். இங்கு விறன்மிண்ட நாயனர் சிலை யிருக்கிறது. கர்ப்பக்

கிரஹமண்டபத்தில் அஷ்டதிக் பாலர்களுடைய உருவங்களும் 27 நட்சத்திரங்களின் தேவதைகளின் உருவங்களும் இருக்கின்றன. இங்குள்ள ஹடகேஸ்வர் கோயிலில் ஒருபிலமிருந்ததாக ஐதிகம்; எல்லோரும் இதன்மூலமாக சுவர்க்கம் புகுந்ததை தடுப்பதற்காக இந்திரன் ஒரு மலையால் இப் பிலத்தை மூடிவிட்டதாக ஐதிகம். கமலாலயத்தின் கரையிலுள்ள பிள்ளையாருக்கு மாற்றுரைத்தப் பிள்ளையார் எனப்பெயர். பெரிய கோயிலில் ராஜநாராயண மண்டபத்தை முதல்பராந்தகன் (907-947) கட்டுவித்தான். ராஜேந்திர தேவனெனும் சோழ அரசனுடைய செப்பு விக்ரஹம், விஜயதசமியன்று புறப்பாடாகிறது; இச்சிலை அந்த அரசனுலேயே செய்விக்கப்பட்டதென்பர்; வன்மீகநாதர் கோயிலும் அம்மன் கோயிலும் அக்கம்பக்கமாக இருக்கின்றன. வன்மீகநாதர் கோயில் கிழக்கு கோபுரத்திற்கு நேராக உள்ளது. தியாகராஜர் கோயில் இதன் பக்கத்திலுள்ளது. இவ்வூரில் மனுநீதிச்சோழன் பசுவின் கன்றினைக் கொன்ற தன் மகனைத் தேர்க்காலில் கிடத்தியூர்ந்து, பிறகு வீதி விடங்கப் பெருமான் திருவருளால், மகன் உயிர் பெற்றெழுந்த ஐதிகம் சிலையில் கோயிலின் கிழக்கு முனையில் வெட்டப்பட்டிருக்கிறது. புரட்டாசி மாசம் பௌர்ணமி இந்திரன் பூஜை விசேஷம். தியாகராயருக்கு தினம் செங்கழுநீர்ப் புஷ்பம் சாத்தப்படுகிறது. இங்கு செங்கழுநீர் ஓடை என்று ஒன்றுளது. தியாகராய ஆத்மலிங்கம், மரகதத்தாலாயது ஒன்று கோயிலில் இருக்கிறது. தீபாராதனை காலத்தில் தெய்வீகம் பொருந்திய சுத்த மேளம் தவிர வேறொன்றும் வாசிக்கப்படுகிறதில்லை. பெரிய கோயிலில் சண்டேஸ்வரர் இருக்கவேண்டிய ஸ்தானத்தில் யமன் விக்ரஹம் இருக்கிறது. திரு ஆரூருக்கு மற்ற பெயர்கள் :— மூலாதார ஸ்தலம், மூலதுவாதசாந்தப்புரம், அந்தர் நடனபுரம், ஆடகக்ஷேத்திரம், கொர்வபங்க க்ஷேத்திரம், தேவயாகபுரம், சக்திக்ஷேத்திரம், கல்யாணபுரம், யோகபுரம், பாடலீபுரம், கவிசல்லா நகரம். இங்குள்ள மற்ற சிவாலயங்கள். (1) பெரிய கோயிலின் அருகாமையில் மாணிக்க நாச்சியார் கோயில் என்று ஒன்றுண்டு. (2) ஆரூர் அற நெறி (திரு.) திருவாரூர் பெரிய கோயிலுக்குள், இரண்டாம் பிராகாரத்திலுள்ளது. அகில ரிஷி பூசித்த ஸ்தலம்; சிவாலயம் மேற்கி

இருள்ளது ; அரிதரிஷி பூசித்த ஸ்தலம் ; சிவாலயம் மேற்கு முகமானது. நமிநந்தியடிகளையனர் கமலாலயத் தண்ணீரால் திருவிளக்கேற்றிய ஸ்தலம். ஸ்வாமி, அகிலேஸ்வார், அல்லது அசலேஸ்வார், தேவி புவனேஸ்வரி ; அற்புத கூவம் தீர்த்தம். இக்கோயில் கண்டராதித்யர் மனைவி செம்பியன்மா தேவியாரால் கருங்கற் கோயிலாகப் புதுப்பிக்கப்பட்டது சுமார் 950 ஆண்டில். அப்பர் பாடல் பெற்றது ; (3) ஆரூர் பரவையுண்மண்டளி (திரு) திருவாரூரில் உள்ளது. பெரிய கோயிலின் ரதநிலைக்குச் சமீபம் உள்ளது. தென் மேற்கில் வருணன் ஒரு காலத்தில் இங்கர் மீதனுப்பிய கடலை உண்டமையால் இப்பெயர் பெற்றது. தூர்வாசர் பூசித்த ஸ்தலம். ஸ்வாமி பரவையுண்மண்டேஸ்வார், தேவி பஞ்சிள்மெல்லடியம்மை ; வருண புஷ்கரிணி. சுந்தரருக்கு கண் கொடுத்த ஸ்தலம். (4) அழகிய சிற்றம்பலமுடையார் கோயில் (5) சத்யவாசகேஸ்வர் கோயில் ; (6) ஆகந்தேஸ்வார் கோயில் (7) நாகராஜர் கோயில். இங்கு பல சத்திரங்கள் உண்டு ; முக்கியமானது வடபாதி மங்கலம் முதலியார் சத்திரம்.

ஆரைப்பிள்ளையார் சத்திரம்—ஆனைப்பிள்ளை சத்திரம் என்றும் சொல்லப்படுகிறது. சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா ; திருபிரம்மேஸ்வரம் என்றும் பெயர். பிரம்மா பூசித்த ஸ்தலம். ஸ்வாமி பிரமேஸ்வார், தேவி விசாலாட்சி.

ஆரைமேற்றளி—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா கும்பகோனத்திற்கு 4 மயில். சிவாலயம், ஸ்வாமி கைலாயநாதர், சபளநாயகி ; காமதேனுவின் புத்ரி சபளை பூசித்த ஸ்தலம்.

ஆவடுதுறை—(திரு.) திருவாடுதுறை என்றும் வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி, இந்திரன், பல ரிஷிகள், பூசித்த ஸ்தலம். நரசிங்கன்பேட்டை ஸ்டேஷனுக்கு 2 மைல் தென் கிழக்கு. திருமூலநாயனர் முத்திபெற்ற ஸ்தலம். திருஞானசம்பந்தர் தந்தையின் வேள்விக்காக பொற்கிழிபெற்ற க்ஷேத்திரம். அன்றியும் அவர் திருமூலநாயனருடைய திருமந்திரத்தை பலி பீடத்தினின்றும் எடுத்து உலகுக்கருளிய இடம். உமையம்மை ஓர் சாபத்தால் பெற்ற பசுத் தலையை இங்கு சிவபெருமானைப் பூசித்து சாபம் நீங்

கிய திவ்ய ஸ்தலம். ஸ்வாமி, மாசிலாமணீஸ்வரர், அன்றியும் கோமுக்தீஸ்வரர் என்றும் பெயர் உண்டு. தேவி ஒப்பிலா முலையம்மை; கோமுக்தி தீர்த்தம். சேந்தனார் திருவிசைப்பா பெற்றது. மூவர் பாடல் பெற்றது. திருக்கை லாச பரம்பரை நமச்சிவாய மூர்த்திகளின் பரம்பரையார் மடாலயங் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்தலம். படரரசு விருட்சம். பிரம்மோற்சவம் தை மாசம்.

ஆவுடையார் கோயில்—தஞ்சாவூர் ஜில்லா, தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன்; அரன்தாங்கியிலிருந்து 8 மயில். இவ்வூர் ஆளுடையார் கோயில் என்றும் வழங்கப்படுகிறது. இவ்வூருக்கு மற்றொரு பெயர் திருபெருந்துறை என்றும் வழங்கப்படுகிறது. ஸ்வாமி, ஆத்மநாதஸ்வாமி; தேவி சிவ யோக நாயகி அல்லது யோகாம்பிகை. ஸ்தல விருட்சம் குருந்தமரம். இக் கோயிலிலுள்ள சிற்பங்கள் மிகவும் அருமையானவை; பார்க்கத்தக்கவை. கொடுங்கை மிகவும் விசித்திரமானது; இம்மாதிரி கொடுங்கை தற்காலம் செய்வது அசாத்தியம் என்று எண்ணப்படுகிறது. மாணிக்க வாசக ஸ்வாமிகளால பல பதிகங்கள் பெற்ற ஸ்தலம். பரமசிவம் குருந்தமரத்தின் கீழ் ஞானசாரியாராய் எழுந்தருளி, ஸ்ரீ வாதவூர் அடிகளை ஆட்கொண்டு அவருக்கு மாணிக்கவாசகர் எனும் தீட்சாநாமம் அளித்த ஸ்தலம். மாணிக்கவாசகருக்கு ஆனி மாம் 10 நாள் பிரபல உற்சவம். இங்கு முற்றிலும் ருத்திராட்சங்களால் அலங்கரிக்கப் பட்டரதம் ஒன்று விசேஷம். இவ்வூருக்கு ஆதி கைலாசம், குருந்தவனம், ஞானபுரம், திருமூர்த்திபுரம், பூலோக கைலாசம் முதலிய பல பெயர்களுண்டு. இக் கோயிலில் சிவபெருமானும், தேவியும் அருவத்திருமேனி கொண்டெழிந்தருளியிருக்கின்றனர். ஸ்வாமிக்கு அச்சவநாதர், குருந்தவனேஸ்சர் முதலிய பெயர்களுண்டு. தாமிர பட்டையங்களில் ஸ்வாமி பெயர் ஆளுடைய பரம ஸ்வாமி என்றிருக்கிறது. இங்கு ஆத்ம கணபதி, சொக்க வினயகர், சம்சர்கக வினயகர் முதலிய பல வினயகர்களுண்டு. தேவிக்கு ஆளுடைய நாயகி ஆளுடையாள் எனும் பெயர்களுண்டு. தீர்த்தங்கள், பிரம்ம தீர்த்தம், நாராயண தீர்த்தம், ருத்திர தீர்த்தம், வாயு தீர்த்தம், அசுர தீர்த்தம், தேவ தீர்த்தம், முனிவர் தீர்த்தம், அக்னி தீர்த்தம், ஆத்மகூபம் என 9 தீர்த்தங்கள்

உள. ஆவுடையார் கோயிலில் ஸ்வாமிக்கு, சமைத்த அன்னம் புகையெழும்ப நிவேதனமாகிறது. புழுங்கலரிசி அன்னம், பாகற்பாய் புளிக்கறி, அரைக்கீரைச் சுண்டல் நிவேதனம் விசேஷம். இங்கு கோயிலில் நந்திதேவரும், சண்டேஸ்வரரும் இடையாது. குருந்தமரத்தில் மூலத்திலுள்ள மாணிக்கவாசகருடைய உருவத்திற்கு திருமூலஸ்தானம் என்று பெயர். இங்கு ஆநந்த சபை, சித்சபை, சத்சபை, தேவசபை, நிருத்தசபை, கனகசபை என்று 6 நடராஜருடைய சபைகளுண்டு. இங்கு பூஜாகாலத்தில் நட்சத்திர மாலை, கலாதீபம், வர்ணதீபம், தத்துவதீபம், புவன தீபம்; பததீபம், முதலிய விசேஷ தீபங்கள் உபயோகிக்கப்படுகின்றன. இங்கு வடகூரில் கைலாசநாதர் சந்நிதியுண்டு. காலாக்னி ருத்திரரால் பூசிக்கப்பட்டவர். விருட்சம், மகிழ். ஸ்ரீ அஸ்வாரூடனமூர்த்தி சந்நிதி கனகசபையின் தென்முகமாயுள்ளது.

இங்கு அருகிலுள்ள சிவாலயங்கள். (1) சிறுமருதூர்; சிவலிங்கம் அகஸ்தியர் பிரதிஷ்டை. கோயில் வெள்ளாற்றின் கரையிலுள்ளது. அகஸ்தியர் தீர்த்தம். (2) திருச்சிற்றம்பலம் சிவாலயம் ஊருக்கு வடக்கேயுள்ளது. ஒட்டங்காட்டிற்கு அருகிலுள்ளது. (3) சின்ன ஆளுடையார் கோயில் ராஜா மடத்திற்கு தெற்கிலுள்ளது. ஸ்வாமி ஆளுடையார்; தேவி சிவயோகாம்பிகை.

ஆலூர்—ஆலூர் பசுபதீச்சரம் எனவும் வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி சுந்தரப் பெருமாள் கோயிலுக்கு 5 மயில். ஒரு சாபம்தீர காமதேனு பூசித்த க்ஷேத்திரம்; இந்திரனும் சப்தரிஷிகளும் பூசித்த ஸ்தலம். ஆலயத்திற்கு பசுபதீச்சரம் என்று பெயர். சிறு கோயில், ஒரு குன்றின் மீதுள்ளது; குன்றிற்கு மணிகூடம் என்று பெயர். குன்றின் அடிவாரத்தில், கல்வெட்டுகள் உள. தசரதர் பூசித்த க்ஷேத்திரம் என்பது ஸ்தலபுராணம். இவ்விடம் 5 குன்றுகளும் ஒரு சிற்றூறும் உண்டு; கோயில் பழய சோழ கட்டிடம். வைப்புஸ்தலம்.

ஆல்வாய்—தென் இந்தியா, மலையாள தேசத்திலுள்ளது; சிவாலயம். சிவராத்திரி விசேஷம். இங்கு மூசாபர் பங்களா உண்டு.

ஆலக் கோயில்—சென்னை ராஜதானி, செங்கல்பட்டு ஜில்லா, ரெயில் ஸ்டேஷன். சிங்கபெருமாள் கோயில் ஸ்டேஷனுக்கு 2 மயில் வட கிழக்கிலுள்ளது. மகாவிஷ்ணு கூர்மாவதாரத்தில் சிவபிரானைப் பூசித்த க்ஷேத்திரம். இதற்கு திருக்கச்சூர் ஆலக்கோயில் என்றும் பெயர். சிவாலயம் சிறுமலை மீதுள்ளது. மலைக்கு ஔஷதகிரி என்று பெயர். அஸ்வினிதேவர்கள் பூசித்து ஔஷதங்கள் பெற்ற ஸ்தலம். திருக்கச்சூருக்கு ½ மயில் தூரம். ஸ்வாமி ஔஷதேஸ்வார்; தேவி அந்தகாரநிவாரணி, ஔஷத தீர்த்தம்.

ஆலங்காடு—(திரு.) இதற்கு பழையூர் வட ஆரண்யம் என்றும் பெயர் உளது. சென்னை ராஜதானி, தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன். காரைக்கால் அம்மையார் சிவபெருமான் திருவடியடைந்த ஸ்தலம். மூஞ்சிகேச முனிவர், கார்க்கோடகன் எனும் அரவ அரசன், தேவேந்தின், ஆதிசேடன், சுனந்தர் பூசித்த க்ஷேத்திரம். வேளாளர்கள் செட்டிப் பழிக்காக தீப்பாய்ந்து புகழ்பெற்ற ஸ்தலம். நடராஜப் பெருமான் காளிக்காக ஊர்த்துவ தாண்டவம் புரிந்த இடம். இங்குள்ள நடராஜ சபைக்கு ரத்ன சபை என்று பெயர். ஸ்வாமி, தேவர் சிங்கப்பெருமாள், உளர்த்துவ தாண்டேஸ்வார், தேவி வண்டார் குழலியம்மை. முக்தி தீர்த்தம், குகதீர்த்தம், ஆலவிருட்சம், பலாவிருட்சம். பங்குனி உததிர உற்சவமும் மார்கழி ஆருத்திரா உற்சவமும் விசேஷம். இந்த க்ஷேத்திரத்தில் நிர்மால்ய தோஷமில்லை. வட ஆரண்யேஸ்வார் கோயிலில் 1178-1215 ஆண்ட மூன்றும் குலோத்துங்கசோழன் கல்வெட்டுளது.

ஆலங்குடி—பாபநாசம் தாலூகா, திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜதானி; ஆபத்சஹாயேஸ்வார் கோயில்.

ஆலங்குடி—இது **இரும்பூளை** எனும் திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற ஸ்தலம். சென்னை ராஜதானி, நீடாமங்கலம் ஸ்டேஷனுக்கு 4 மயில் வடக்கேயுள்ளது. விஸ்வாமித்திரர் பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமி காசி ஆரண்யேஸ்வார், தேவி ஏலவார் குழலியம்மை; அமிர்தப்பொய்கை.

ஆலங்குடிப்பட்டி—குளத்தூர் தாலூகா, புதுக்கோட்டை சமஸ்தானம், சென்னை ராஜதானி. சிவாலயம் பழமையர

னது. தற்காலம் கிலமாயிருக்கிறது; லிங்கம் மாத்திரம் இருக்கிறது.

ஆலம்பாக்கம்—திருச்சிராப்பள்ளி தாலூகா, சென்னை ராஜதானி, கைலாசநாதர் கோயில். பல்லவ அரசன் நந்திவர்மனால் கட்டப்பட்டது. பிற்காலம் சோழ அரசர்களால் புதுப்பிக்கப்பட்டது என்று துப்றெயில்துரை எண்ணுகிறார்.

ஆலம்பாடிக் கிராமம்—கொள்ளேகால தாலூகா, கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி; பழய சிவாலயம். பாழாயிருக்கிறது. இங்கு 12 கருப்புக்கற்களாலாகிய சிவலிங்கங்கள் உள.

ஆலம்புழை—சென்னை ராஜதானி, மலையாளநாடு. சிவாலயம்; ஸ்வாமி வடமூலர், உமாதேவி.

ஆலம்பொழில்—(திரு.) சென்னை ராஜதானி, தஞ்சாவூருக்கு 6 மயில் வட கிழக்கு. திருக்கண்டியூரிலிருந்து 2¾ மயில். காசிபர், நாகர், அஷ்டவசுக்கள் பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமி, ஆத்மநாதர், தேவி ஞானம்பிகை. தீர்த்தங்கள், திருப்பாற்குளம் காவிநதி, ஆலவிருட்சம். சந்நிதி மேற்கு பார்த்தது. மேற்கு கோபுரம் 5 நிலையுள்ளது. அப்பர் பாடல் பெற்றது.

ஆழியூர்—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா சிக்கலுக்கு 2 மயில் சிவாலயம். ஸ்வாமி, கங்காளேஸ்வார், தேவி கற்பகவல்லி; பிடாரி தீர்த்தம். வைப்புஸ்தலம்.

ஆனிலை—கடப்பை ஜில்லா, சென்னை ராஜதானி; சங்கமேஸ்வார் கோயில். மொகமேருவும் பாபக்னியும் சங்கமமாகும் இடம். கோயில் பெரிய கோபுரங்களுடையது. கர்ப்பக் கிரஹம் சிறந்த சில்பமமைந்தது.

ஆள்வார் திருநகரி—அல்லது திருக்குருகூர், திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜதானி, (பிரபல வைஷ்ணவஸ்தலம்) இங்கு ஒரு சிவாலயமுண்டு. திருக்காந்தீஸ்வார் கோயில். ஸ்வாமி திருக்காந்தீஸ்வார், தேவி தர்மசம்வர்த்தனி, தாம்ரபர்ணி நதி. அகஸ்தியர், கரூர்தேவர் பூசித்த ஸ்தலம்.

ஆனூர்—இதற்கு ஆனியூர் என்றும் ஆதியூர் என்றும் பெயர் உண்டு ; பொன் விளைந்தகளத்தூருக்கு அருகிலுள்ளது ; செங்கல்பட்டு ஜில்லா, சென்னைராஜதானி. பாலாற்றின் கிழக்கிலுள்ளது. இதற்கு பூர்வீகப் பெயர் சத்தியாஸ்ரயகுலகால சதுர்வேதி மங்கலம். ஸ்வாமி அஸ்தபுரீசர், திருவம்பலமுடையார், தேவிசௌந்தராம்பிகை. அகஸ்தியர் காமதேனு, சத்யாஸ்ரயர் முதலியோர் பூசித்த ஸ்தலம். பாணதீர்த்தம், கௌரி தீர்த்தம், கந்த தீர்த்தம் முதலிய தீர்த்தங்கள் உடையது. இதற்கு அருகில் சோக்காதேஸ்வரர் கோயில் என்னும் சிவாலயம் ஒன்றுண்டு.

ஆறுகாடு—சென்னைராஜதானி வட ஆற்காடு ஜில்லா சிவாலயம்; ஸ்வாமி ஏகாம்பரநாதர், தேவி காமாட்சியம்மன்.

ஆனகரே—மேற்கு இந்தியாவிலுள்ளது. பொன்ணி தாலுகா மலபார் ஜில்லா ; சிவாலயம்.

ஆனேகொண்டா—மைசூர் ராஜ்யம். சிவாலயம் பாழடைந்திருக்கிறது.

ஆனைக்கா—திருவானைக்காவல் ஜம்புகேஸ்வரம் என்னும் பிரபல சிவஸ்தலம், தென் இந்தியா, சென்னை ராஜதானி திருச்சிராப்பள்ளிஜில்லா; ஸ்ரீரங்கம் ரெயில் ஸ்டேஷனுக்கு ½ மைல். மூவர் பாடல்பெற்ற திவ்ய ஸ்தலம். பஞ்சலிங்கங்களில் ஒன்றாகிய அப்புலிங்கம் இங்குளது, அதாவது ஜலலிங்கம். மூலஸ்தானத்தில் எக்காலமும் ஜலம் வந்து கொண்டிருக்கிறது. சம்ஸ்கிரதத்தில் இந்த க்ஷேத்திரத்திற்கு ஜம்புகேஸ்வரம் என்று பெயர். ஜம்புநாவல் விருட்சத்தின் அடியில் பரமசிவம் எழுந்தருளியிருக்கிறபடியால் அப்பெயர் பெற்றது. வெள்ளையானை பூசித்தபடியால் ஆனைக்கா எனும் பெயர் பெற்றது ; இதுதான் தேவாரப்பெயர். ஓர் சிலந்தியும் ஸ்வாமியை இங்கு பூசித்ததாக ஐதிகம் ; கௌதமர் சம்பு முனிவர் பூசித்ததலம். உறையூர் சோழன் கழுத்திலிருந்து காவிரியில் கழுகிய பதக்கம் திருமஞ்சனக்குடத்தில் அகப்பட்டு, ஸ்வாமி கழுத்தில் விழுந்ததாக ஐதிகம். ஸ்வாமிபெயர் ஜம்புகேஸ்வரர், தேவி அகிலாண்டநாயகி. தீர்த்தம் சந்திரபுஷ்கரணி, காவிரி ; ஸ்தல விருட்சம் வெள்ளைநாவல் மரம். பிரம்மோற்சவம் ஆனிமாசம். தற்கால ஆலயம் கோச்செங்கட் சோழநாயனாரால் கட்டப்பட்

டதாம். இங்குள்ள கடைசி பிராகாரத்தின் மதிலுக்கு நீறிட்டான்மதில் என்றுபெயர். அம்மதிலைக் கட்டியவர் களுக்கு கூலி திருநீறே கொடுக்கப்பட்டதாம். பங்குனி மாசம் பஞ்சப்பிரகார உற்சவம் விசேஷம். கோயில் பெரி யது; 2400 அடி × 7500 அடி. ஐந்து பிராகாரங்களுடையது. ஐந்தாம் பிராகாரத்தில் நான்கு வீதிகள் உண்டு. நான்காம் பிராகாரம் 812 × 497 கஜம். இங்கு ஆயிரக்கால் மண்டபம் உண்டு. இதில் 796 கால்கள் தானிருக்கின்றன. கோயில் குளம் மிகவும் அழகியது. இதைச் சுற்றிலும் பிராகாரமண் டபம் உண்டு. இங்குள்ள கல்வெட்டுகளினால்தற்காலக் கோயில் 1000 வருடங்களுக்குமுன் கட்டப்பட்டிருக்க வேண்டுமென்று டாக்டர் பெர்கூசன் எனும் ஆங்கில சிற்ப சாஸ்திர நிபுணர் கூறுகிறார்; ஒரே காலத்தில் ஆரம்பிக்கப் பட்டு, முடிக்கப்பட்டது என்று எண்ணுகிறார்; சில்ப சாஸ் திரத்தின்படி மிகவும் அழகுவாய்ந்ததெனவும் நினைக்கிறார். தற்காலம் கோயிலின் நிலபாகம் நிலமாயிருக்கிறது. அகி லாண்டேஸ்வரி சந்நிதியில் யானை லிங்கத்தை பூசித்தகதை சில்பத்திலிருக்கிறது. இங்கு அம்மன் ஸ்வாமியை பூசித்ததற் காக இப்பொழுதும் மத்யான பூசையில் குருக்கள் பெண் உடையணிந்து பூசைசெய்கிறார். இக்கோயிலுள்ள ஏகபாத ருத்திரமூர்த்தியின் சிலை பார்க்கத்தக்கது. பெரிய கோயி லில் 1236 ஆம் ஆண்டில் ஆண்ட சோமேஸ்வரன் என் னும் ஹொய்சல அரசனால், வல்லாள ஈஸ்வரர்கோயில் பதுமளீஸ் வரர்கோயில் வீரநரசிம்மேஸ்வரர்கோயில் சோமனீஸ்வரர் கோயில் என்னும் சிறு கோயில்கள் கட்டப்பட்டன. இங் குள்ள பெரிய கோபுரம் அவனால் கட்டப்பட்டிருக்கலாம் என்பர். இங்கு பல கல்வெட்டுகள் உள. அதில் 1251 வரை ஆள ஆரம்பித்த ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் காலத்திய கல்வெட்டு ஒன்றுளது.

ஆனையூர்—சென்னைராஜதானி, மதுரை ஜில்லா, உசி லம் பட்டிக்கு அருகிலுள்ளது. சிவாலயம், இந்திரனது யானை பூசித்து சாபம் நீங்கினபடியால் ஆனையூர் எனப் பெயர் பெற்றதாம். ஸ்வாமி ஐராவதேஸ்வரர்.

ஆனெகுந்தி—சென்னை ராஜதானி பல்லாரி ஜில்லா, பிலேஸ்வரர் கோயில்.

ஆஸ்கா—சென்னைராஜதானி, கஞ்சம் ஜில்லா சிவாலயம்.

இக்கேரி—ஷிமோகா ஜில்லா, மைசூர் ராஜ்யம் சிவாலயம் அகோரேஸ்வரர். பெரிய கோயில், அழகியது; இலாடி அரசர்களால் கட்டப்பட்டது. திராவிட சில்பம்.

இட்டாகி—(இட்டகி) நிஜாம் ராஜ்யம், ராய்ச்சூர் ஜில்லா, கடக்ஸ்டேஷனிலிருந்து 21 மயில் வடகிழக்கு. சிவாலயம். மஹாதேவர் எனும் தண்டநாயகரால் 1112 வரு கட்டப்பட்டது. இடிந்திருக்கிறது. சாளுக்கிய சில்பம். மண்டபத்தின் கரையிலுள்ள நடராஜருடைய உருவம் பார்க்கத் தக்கது. கோயிலில் தற்காலம் பூசையில்லை. சிகரம் அழிந்திருக்கிறது. தூண்கள் அழகியவை. கோயில் 120 × 66 அடி விஸ்தீரணம்; ஸ்வாமி பெயர் மஹாதேவேஸ்வரர் ஹலபீடுக்குப் பிறகு இதுதான் சிறந்த கோயில் இங்கு.

இடக்காடு—சென்னை ராஜதானி உதகமண்டத்திற் கருகிலுள்ளது. மகாலிங்கஸ்வாமி கோயில்.

இட்வாபிரிவு—ஐக்கியமாகாணம் சார்சைன்வார் என்னுமிடத்தில் சிவாலயம். ஸ்வாமி ஹஜாரிமகாதேவ்.

இடும்பாவனம்—தஞ்சாவூர் ஜில்லா, சென்னைராஜதானி. திருத்துறை பூண்டி ஸ்டேஷனுக்கு 10 மயில் தென்மேற்கு; இடும்பன் பூசித்த க்ஷேத்திரம்; ஸ்வாமி சற்குண நாதேஸ்வரர்; தேவி மங்களநாயகி—குசும தீர்த்தம். பழய சிவாலயம்; இங்கு மறிப்பவர்களுக்கு மரணகஷ்டம் இல்லையென்பது ஐதிகம். திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

இடைச்சுரம்—சென்னைராஜதானி, செங்கல்பட்டு ஸ்டேஷனுக்கு 5½-மயில், கிழக்கிலுள்ளது. சனத்குமாரர், கௌதமர் பூசித்த ஸ்தலம். ஸ்வாமி இடைச்சுரநாதர், ஞானபுரீஸ்வரர்; தேவி இமயமடக்கொடி. மதுரதீர்த்தம், இந்திர தீர்த்தம், இங்குள்ள மலைக்கு கந்திமலை யென்று பெயர்; திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

இடைமருதூர்—திருவிடைமருதூர் என்று சாதாரணமாக வழங்கப்படுகிறது ரெயில் ஸ்டேஷனில் திருவடமருதூர் என்றிருக்கிறது. சென்னை ராஜதானி கும்பகோணம் தாலூகா தஞ்சாவூர் ஜில்லா. இதற்கு சம்ஸ்கிருதத்தில் மத்யார்ஜுனம் என்று பெயர். ஸ்ரீ சைலம் எனும் மல்லி

கார்ஜனத்திற்கும், அம்பாசமுத்திரத்திற்கு அருகிலுள்ள ஸ்புடார்ஜனம் எனும் திருப்புடை மருதூருக்கும், மத்தியிலுள்ள ஸ்தலமாதலால், இது மத்யார்ஜனம், இடைமருதூர், என்று பெயர் பெற்றது. வரகுணபாண்டியன் சோழப் பிரம்மஹத்தியை நிவர்த்தித்த ஸ்தலம். ருத்திரர், உமை, வினயகர், முருகர், பிரம்மா, விஷ்ணு முதலியோர் பூசித்த க்ஷேத்திரம். காவிரிக்கரையிலுள்ளது—தைப்பூசஸ்நானம் விசேஷம். ஸ்வாமி மருதப்ப ஈஸ்வரர், மஹாலிங்கேஸ்வரர், தேவி பிரஹத்சுந்தா குசாம்பிகை. தீர்த்தம், காவிரி பூசற்றுரை, சுகுணநிதி தீர்த்தம். ஸ்தல விருட்சம் மருதம். பெரிய கோயில் சப்த பிராகாரங்களுடையது. கோயில் பிராகாரம் சுற்றிவருவதற்கு அஸ்வமேதப் பிரதட்சிணம் என்று பெயர்; அஸ்வமேதயாகப்பலனை அளிப்பதாம், உலகினைச் சுற்றிவரும் பலனையும் அளிப்பதாம். பிரம்மஹத்தியின் உருவம் பூர்வ கோபுரவாயிலின் வலப்புறமுள்ளது. இக் கோயிலில் சித்திரப்பிரகாரம் என்று ஒன்று உளது—பார்க்கத்தக்கது. பட்டினத்தார் சிலை கிழக்கு கோபுரவாயிலிலிருக்கிறது. பத்திரகிரியார் சிலை மேற்கு கோபுரவாயிலிலிருக்கிறது. மேற்கு கோபுரத்திற்கு விஜயாலய சோழன் திருப்பணிசெய்தார். ஒரு பிராகாரத்தில் ஆச்சரியகரமான பிரதிதொனி உளது. பித்தம்பிடித்தவர்கள் பிராகாரத்தை 12முறை வலம் வந்தால் பித்தம் நீங்குமென்பது ஐதிகம். ஆலயத்தின் வடபுறம் ஒரு விஷ்ணுகோயிலிருந்ததாகவும், அது பிறகு அகற்றிவிடப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. கோயிலில் ஸ்வாமி கல்யாண சமயத்தில, தாரை வார்த்துக்கொடுக்க விஷ்ணுவின் விக்ரஹம் ஒன்றிருக்கிறது. அம்மன்கோயில் ஸ்வாமி கோயிலுக்கு வெளியே உள்ளது. ஸ்வாமி கோயிலும் அம்மன் கோயிலும் அக்கம் பக்கமாக இருக்கின்றன; இரண்டும் கிழக்கே பார்த்தவை. இக்கோயிலில் இரண்டு அம்மன்களுண்டு, மூகாம்பிகை. பிரஹத்சுந்தர குசாம்பிகை. இக்கோயிலில் சில சளுக்கிய சில்பஸ்தம்பங்கள் இருக்கினறன. பிரம்மோற்சவம் தை மாசம், ஐந்தாம்நாள் மஹாலிங்கஸ்வாமி ஆத்ம பூசை செய்யும் உற்சவம் விசேஷம். வைகாசி மாசம் நடக்கும் வசந்தோற்சவகாலத்தில் மஹாலிங்கஸ்வாமி கலியாண உற்சவம் பிரபலமானது. இக்கோயிலில் 150-க்கு மேற்பட்ட கல்வெட்டுகள் இருக்கின்றன; அவற்றுள் சில 1000 வருடங்க

ளுக்கு முற்பட்டவை. அவற்றுள் ஒன்றில் இக் கோயிலுக்கு பெயர் திருவிடைமருதூர் ஆள்வார்கோயில் என்றிருக்கிறது. மற்றொன்றில் இங்கு ஆடல்விடங்கதேவர் சிலை இருந்ததாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. இதனால் இங்கு பூர்வம் தியாகராஜருடைய விக்ரஹம் இருந்ததாக ஊகிக்கலாம். பூர்வம் இங்கு ஆரியக்கூத்தும், அபிநயக்கூத்தும் நடந்ததாகத் தெரிகிறது. இவ்வூர் உற்சவமூர்த்திக்கு ஏகநாயக மூர்த்தி என்று சிறப்புப் பெயர் உண்டு. கோயிலுக்கு ½ மயில் தூரத்தில் ஒரு நல்ல சத்திரமுண்டு. பிரசித்திபெற்ற திருவாவடுதுறை பண்டாரசந்நிதி யவர்களின் மடம் ஒன்று இங்கிருக்கிறது. மூவர் பாடல்பெற்ற க்ஷேத்திரம்; திருவிசைப்பாவும் பெற்றது. இங்கு மூசாபர் பங்களா உண்டு. பல சத்திரங்களும் உள.

இடையாறு—(திரு)சென்னைராஜதானி, மாம்பழ ஸ்டேஷனுக்கு 9 மயில் தென்மேற்கு; சுகர் பூசித்த சிவாலயம். ஸ்வாமி—இடையாற்றீஸ்வரர்; தேவி சிற்றிடைநாயகி; தீர்த்தம்-பெண்ணைநதி; சுந்தரர் பாடல்பெற்ற ஸ்தலம்.

இந்திரநீலப்பர்வதம்—இமயமலையிலுள்ளது. காட்மாண்டுவுக்கு 80 மயில் வடமேற்கு. தேவேந்திரன் பூசித்த ஸ்தலம்; அர்ச்சுனன் பூசித்து பாசுபதம் பெற்ற ஸ்தலம். ஸ்வாமி நீல அசலநாதர். தேவி—நீலாம்பிகை. இந்திர தீர்த்தம். திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது.

இந்தூர்:—வடஇந்தியா ரெயில்வேஸ்டேஷன். சிவாலயம்-ஸ்வாமி மஹாதேவர்; தேவி-பார்வதி. இங்கு ஒரு சத்திரமுண்டு.

இயோட்மல் பிரிவு—மத்திய மாகாணம். இங்கு அடியிற் கண்ட சிவாலயங்கள் உள. (1) **டிக்ராஸ்** சிவாலயம் ஸ்வாமி-மல்லிகார்ச்சுனர். (2) **காய்** சிவாலயம், பெரியது, ஹேமாத்பண்ட கட்டிடம். இங்கு வற்றாத வெந்நீர் ஊற்று உண்டு. சிவராத்ரி விசேஷம். (3) **மஹாகாவன்** சிவாலயம் ஸ்வாமி-கமலேஷ்வர் இங்கு கோயிலில் 18 தூண்களையுடைய சபாமண்டபம் ஒன்றுளது. பார்க்கத் தக்கது. (4) **பூசாம்**; சிவாலம் பழயஹேமாத்பண்ட கட்டிடம்; இப்பொழுது புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. ஸ்வாமி-மஹாதேவ். (5) **சதேபால்**; கபிலேஷ்வர் கோயில். (6) **தபோன்-காசி விஸ்வநாதர் கோயில்.**

இரட்டைமலை—சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி கூலத்தீஸ்வரர், தேவி-மீனம்பிகை.

இரணியூர்—செட்டிநாட்டிலுள்ளது சென்னை ராஜதானி. சிவாலயம். ஸ்வாமி ஆட்கொண்டநாதர்-தேவி ஸ்ரீ சிவபுரம்தேவி.

இரிஞ்சல்கூட—கொச்சி ராஜ்யத்திலுள்ளது. தென் இந்தியா; கூடல் மாணிக்கம்கோயில், சிவாலயம். ஒரு பண்டாரசந்நிதியின் மேற்பார்வையிலிருக்கிறது. முக்கிய உற்சவம் சித்திரை மாசம்.

இரும்பைமாகாளம்—சென்னை ராஜதானி, விழுப்புரம் தாலூகா புதுச்சேரிக்கு 5 மயில் வடகிழக்கு. மாகாளர் பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமி மாகாளேஸ்வரர் தேவி-குயில் மொழி அம்மை—மாகாளதீர்த்தம்; திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது.

இருக்குவேளூர்—இதற்கு பேளூர் என்று மற்றொரு பெயர்; சென்னை ராஜதானி, கணம்புல்ல நாயனார் அவதரித்த ஸ்தலம். சிவாலயம் கட்டி முதலியார்கள் கட்டியது. சிவாலயத்தில் கணப்புல்லர் திருவுருவம் செதுக்கப்பட்டிருக்கிறது.

இருளப்பாடு—நஞ்சராவ் தாலூகா, குண்டூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சோமேஸ்வரர் கோயில்.

இலம்பையங்கோட்டூர்—சென்னை ராஜதானி, கடம்பத்தூர் ஸ்டேஷனிலிருந்து 8½ மயில்; தக்கோலத்திற்கு 2 மயில் தென்மேற்கு. சந்திரன், தேவகன்னியர் பூசித்த க்ஷேத்திரம். இவ்வூரில் கிறிஸ்தவர்கள் மேலிட்டபடியால் கூவத்திலிருந்து பிரதிதினம் குருக்கள் ஒருவேளை இங்கு வந்து பூசைசெய்து போகிறார். ஸ்வாமி சந்திரசேகரர், தேவநாயகர்; தேவி-கொடேந்துமுலையம்மை. சந்திர தீர்த்தம். திருஞானசம்பந்தர் பாடல்பெற்றது.

இலுப்பூர்—திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி, திருச்சிராப்பள்ளிக்கு 26 மயில். சிவாலயம். அழகிய மண்டபமுடையது. இங்கு ஒரு சுரங்கம் உளது.

இலுப்பையங்குடி—திருப்பத்தூர் தாலூகா ராமநாதபுரம் ஜில்லா, சென்னை ராஜதானி; ஸ்ரீ சுயம்பிரகாச ஈஸ்வரர் கோயில்-ஸ்வாமி சுயம்பிரகாசர்.

இலையூர்—தென் இந்தியாவிலுள்ள கிராமம். சிவாலயம் ஏலாதி நாயனார் பூசித்த தலம்.

இளங்காடு—சென்னை ராஜதானி திருக்காட்டுப்பள்ளிக்கு 2 மயில் தூரம் சிவாலயம். ஸ்வாமி விஜயேசர்; தேவி பாலசுந்தரி.

இளனேஸ்வரம்—தென் இந்தியா சென்னை ராஜதானி, சிவாலயம், சுவாமி மார்த்தேண்டேஸ்வரர்-தேவி பிரஹந்நாயகி ; சூல தீர்த்தம்.

இளனேசூர்—சென்னை ராஜதானி, திருக்கோயிலூருக்கு 21 மயில். சிவாலயம், கர்ப்பக்கிரஹலிங்கம் உயர்ந்த பீடத்திலிருக்கிறது. நந்தி ஸ்வாமியை நோக்காது எதிர்புறம் பார்க்கிறது.

இளையாத்தங்குடி—சென்னை ராஜதானி ராமநாதபுரம் தாலூகா. காரைக்குடியிலிருந்து 12 மயில். சிவாலயம். ஸ்வாமி-கைலாசநாதர், தேவி-நித்யகல்யாணியம்மன். 1939 ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்டு நகரத்தாரல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

இளையான்குடி—சென்னை ராஜதானி காளையார் கோயிலருகிலுள்ள சிவஸ்தலம். இளையான்குடி மாறநாயனார் முத்திபெற்ற ஸ்தலம்.

இறும்பலி—சென்னை ராஜதானி புதுக்கோட்டை சமஸ்தானம். புதுக்கோட்டைக்கு 8 மயில். சிவாலயம், இடிந்திருக்கிறது.

இறும்பாகாடு—புதுக்கோட்டை சமஸ்தானம். திருமெய்யம் தாலுகா, அகஸ்தீஸ்வரர் கோயில்.

இன்னம்பர்—சென்னை ராஜதானி, கொட்டையூருக்கு 2 மயில் வடமேற்கு கும்பகோணத்திலிறங்கிப் போகவேண்டும். சிவாலயம். விமானம் விசித்திரமானது. சிவபெருமான் கணக்காரய் கணக்குகூறியதலம். அகஸ்தியர் பூசித்து இலக்கணோபதேசம் பெற்ற ஸ்தலம். ஸ்வாமி எழுத்தறிநாதேஸ்வரர் அல்லது எழுத்தறி நாயகர்-தேவி கொந்தார் பூங்குழலம்மை. மற்றொரு அம்மனும்உண்டு. ஐராவத தீர்த்தம். திருஞான சம்மந்தர் அப்பர் பாடல் பெற்றது. 5 நிலை கோபுரமுடையது. ஒன்பது பத்தாம்

6596a

மலையடிகள் நூல் நிலையம்
MARAIMALAI ADIGAL

நூற்றாண்டுகளில் சோழ அரசர்கள் பழுது பார்த்திருக்கின்றனர்.

இனுமெல்லா—சென்னை ராஜதானி. வீறுகொண்டா தாலுகா, குண்டூர் ஜில்லா, சிவாலயம். ஸ்வாமி வீரபத்ரேஸ்வரர்.

இஷ்டிகபுரம்—வட இந்தியா, சிவாலம் சுயம்பு லிங்கம். ஸ்வாமி-வரிஷ்டேஸ்வரர். கோயில் ஆரிய சில்பம்.

ஈங்கோய்மலை—திரு + ஈ + ஓங்கியமலை. திருலிங்காதமலை-வெங்கமலை என்றும் அழைக்கப்படுகிறது. சென்னை ராஜதானி, திருச்சிராப்பள்ளி ஜில்லா குளித்தலை ஸ்டேஷனுக்கு 2 மயில் வடமேற்கு. அகஸ்தியர் ஈசுபராய்ச் சென்று சிவபெருமானை தரிசித்த ஸ்தலம். ஸ்வாமி-மரகதாசலர், தேவி-மரகதாம்பிகை. அமிர்த தீர்த்தம், அகஸ்திய தீர்த்தம்; திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது. மரகதலிங்கம், கர்ப்பூரம் ஏற்றினால் மரகதமாகத் தோன்றுமென்பது ஐதிகம்.

ஈசனூர்—சென்னை ராஜதானி தஞ்சாவூர் ஜில்லா, சிவாலயம்; சிலமாயிருக்கிறது. வைப்புஸ்தலம்.

ஈரோட்டு—சென்னை ராஜதானி, கோயமுத்தூர் ஜில்லா ரெயில்ஸ்டேஷன் இரம் + ஓடு + ஈரோடு என்று ஆயதென்பர். சிவாலயம் 1340 ஆண்டு வல்லாள அரசனது காலத்திய கல்வெட்டொன்று கோயிலிலிருப்பதால் இக்கோயில் அதற்கு முன்கட்டப்பட்டிருக்க வேண்டும். ஸ்வாமி-ஆர்த்ர கபாலீஸ்வரர் (கையில் ஈரமான கபாலமுடையவர்) கல்வெட்டுகளில் ஸ்வாமி பெயர் தொண்டீஸ்வர முடையார் என்றிருக்கிறது. ஸ்டேஷனுக்கருகில் ஒரு பெரிய சத்திரமுண்டு; முசாபர் பங்களாவும் உண்டு.

ஈஸ்வர்டி—சென்னை ராஜதானி திருநெல்வேலி ஜில்லா நாங்குநெறி தாலுகா, சிவாலயம். ஸ்வாமி திருவேட்டீஸ்வரர்.

உக்கல்—சென்னை ராஜதானி, சிவாலயம். பல்லவ கட்டிடம். பல பழய கல்வெட்டுகள்உள. அவைகளில் இவ்வூருக்கு அபராஜித சதுர்வேதி மங்கலம் என்று பெயர் இருக்கிறது. அபராஜிதர் எனும் பல்லவ அரசனால் கட்டப்பட்டிருக்கலாம். தற்காலம் சிலமாயிருக்கிறது.

உங்கல்—தென் மஹாராஷ்டிர ரெயில் ஸ்டேஷன். ஹுப்ளிக்கு 3 மயில் வடக்கு. சந்திர மௌளீஸ்வரர் கோயில்; சளுக்கிய கட்டடம். கோயிலுக்கு 4 வாயில்கள் உள. கசின்ஸ் என்பவர் இது பூர்வம் பிரம்மாவின் கோயிலா யிருந்து பிறகு சிவாலயமாக மாற்றப்பட்டதென எண்ணு கிறார்.

உடுமலைப் பேட்டை—சென்னை ராஜதானி, பழனிக்கு 2 மயில். சிவாலயம். இதற்கு திரிமூர்த்தி கோயில் என்று பெயர். ஆதியில் பௌத்தாலயமாயிருந்து சிவாலயமாக மாற்றப்பட்டதென்பர்.

உச்சங்கிதுர்க்—ஹர்ப்பனபல்லி தாலுகா, பல்லாரி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம் அதிக கிலமா யிருக்கிறது.

உடுப்பி—உடுப்பி தாலுகா, தென் கன்னட ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி-அநந்தேஸ்வரர், தேவி-அநந்தநாயகி. பழய கோயில். உடுப்பி ஸ்ரீ கிருஷ்ணன் கோயிலுக்கு அருகில் உள்ளது. சிவராத்ரி விசேஷம். இவ்வூரில் மஹாலிங்கேஸ்வரர் கோயில் என்று ஒரு கோயிலுமுண்டு.

உடையார்கோயில்—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜ தானி, கரவண்டீஸ்வரர் கோயில். கல்வெட்டுகளில் திருக் கிளாவுடையார் கோயில் என்றிருக்கிறது. ஸ்வாமி பெயர் ஆதிசண்டேஸ்வரர் என்றிருக்கிறது.

உடையார் பாளையம்—திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி பயரணிமஹாலிங் கர். பக்தனுடைய வேண்டுகோளுக்கிறங்கி மிளகைப் பய ராசு மாற்றியதாக ஐதிகம். காண்டீப தீர்த்தம்; அர்ஜு னன் பாணத்தினால் உண்டான தீர்த்த மென்பர். இதில் தவளைகள் வசிப்பதில்லையாம்.

உடையூர்—தென் இந்தியா சிவாலயம். ஸ்வாமி-பாசுப தேஸ்வரர்; தேவி-அகிலாண்ட நாயகி.

உண்டவல்லி—குண்டூர் தாலுகா, மேற்படி ஜில்லா, சென்னை ராஜதானி. இங்கு 2 சிவாலயங்கள் உள. (1) பாஸ்கரேஸ்வர ஸ்வாமி கோயில், பீமேஸ்வர ஸ்வாமி கோயில்.

உத்தம சோழபுரம்—வேலூர் தாலூகா, வட ஆற்காடு ஜில்லா சென்னை ராஜதானி. சிவாலயம். ஸ்வாமி கரபுர முடைய நாயினார்.

உத்தம தானபுரம்—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜ தானி. பாபநாசத்திற்கு அருகிலுள்ளது. சிவாலயம். ஸ்வாமி விஸ்வநாதர்; தேவி-ஆநந்தவல்லி. இங்குள்ள கணபதிக்கு மஹாகணபதி என்று பெயர். தஞ்சாவூர் அரசர் ஒருவரால் அக்கிரகாரம் கட்டி தானம் செய்யப்பட்டபடியால் இவ்வூர் அப்பெயர் பெற்றது. ஆலயம் சிறியது. தற்காலத்திய திரா விட கட்டிடம்.

உத்தம பாண்யம்—மதுரை ஜில்லா, சென்னை ராஜ தானி, காளத்தீஸ்வரர் கோயில்.

உத்தரகோசமங்கை—சென்னை ராஜதானி, ராமநாத புரத்திற்கு 10 மயில். சத்திரக்குடி ஸ்டேஷனுக்கு 6 மயில். சாண்டில்ய ரிஷி, கங்கை, பூசித்த ஸ்தலம். ஸ்வாமி-உத்தர கோசர், மங்களேஸ்வரர்; தேவி-உத்தரகோசமங்கை. 2 பெரிய உற்சவங்கள், மாசி, ஆடி மாசங்களில். கிழக்கு கோபுரம் உன்னதமானது. கர்ப்பக்கிரஹம் தஞ்சாவூர் கோயில் விமானத்தைப்போன்றது; ஆனால் பழைய கல் வெட்டுகள் இல்லை. திருவாசகப் பாடல் பெற்றது.

உத்திரமேரூர்—மதுராந்தகம் தாலூகா சென்னை ராஜ தானியிலுள்ளது. ராஜேந்திர சோழன் காலத்தில் (1064—1080) இதற்கு சதுர்வேதி மங்கலம் என்று பெயர். இங்கு 5 சிவாலயங்கள் உண்டு; பெரும்பாலும் பாழடைந்திருக்கின் றன; ஆதிகாலத்தில் இவைகள் புத்த ஆலயங்கள்போல் கட்டப்பட்டன என்று எண்ணப்படுகிறது. பழய சோழ கட்டடங்கள். கைலாசநாதர் கோயில், பல்லவகட்டடம். குழம்பேஸ்வரர் கோயில், இரட்டைத்தளீஸ்வரர் கோயில்.

உத்திரேச்சுரம்—சேடதாசையர் எனும் சிவபக்தர் சம ணர்களேவிய குடத்திலிருந்த பாம்பை பரமசிவத்தின் அனுக்கிரகத்தால் சிவலிங்கமாக்கிய சிவஸ்தலம்.

உத்தரமாயூரம்—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, மாயவரம் ஸ்டேஷனுக்கு வடக்கிலுள்ளது. சிவால யம். ஸ்வாமி - கைகாட்டும் வள்ளல், தட்சிணமூர்த்தி சொரூபம்.

உடையூர்—உதயபுரி. வட இந்தியா பில்ஸாவுக்கு அருகி லுள்ளது. இங்குள்ள சிவாலயங்கள் (1) மஹாதேவர் கோயில், அமிரத் குகையில் வெட்டப்பட்டிருக்கிறது. (2) காசி விஸ்வ நாதர் கோயில்-ஆரியசில்பம். பாலேகண்டேஸ்வரர் கோயில். மிகவும் அழகிய ஆரிய சில்ப மமைந்தது.

உதயகிரி—சென்னை ராஜதானி, நெல்லூர் ஜில்லா, கிரீசர், உமாதேவி; வைப்புஸ்தலம்.

உதயகிரி—வட இந்தியா குவாலியர் சமஸ்தானம். சிவாலயம் உதயாதித்ய பிரமரனுல் 1080-ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. இங்கு குவாலியர் சமஸ்தானத்திலுள்ள சிவாலயங்கள்.(1)சிஜ்ஜளார-அருநாடேஷ்வர் மகாதேவ் ஆல யம் (2) கோடேஷ்வர் மஹாதேவ் ஆலயம் (3) பரோலி-மஹா தேவர் கோயில்; ஆரிய சில்பம்; தூலேகான போரெஷ்வர் மஹாதேவர் கோயில் (4) நார்வர் சௌடா மஹாதேவர் கோயில் (6) காட்வாயா மஹாதேவர் கோயில் ஆரிய சில் பம் (7) ஏகலிங்கர் கோயில் உதயபுரியிலிருந்து 12 மயில் வடக்கு; சிவாலயம். ஸ்வாமி ஏகலிங்கர் அல்லது ஈஸ்வர் சௌமுகி (நான்கு முகங்களுடைய லிங்கம்) இது மஹா ராணைக்களுடைய குலதெய்வம்; இங்கு லிங்கத்தின் எதிரி லுள்ள நந்தி பித்தளையாலாயது. இங்குள்ள ஏரி மிகவும் அழகியது. கரையோரங்களில் பல சிறு சிவாலயங்கள் உண்டு. பம்பாய் பரோடா—சென்டரல் ரெயில்வே ஸ்டே ஷன்; ஆலயம் ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து 2 மயில். கோயில் ஆரிய சில்பம்.

உப்பூர்—சென்னை ராஜதானி, ராமநாதபுரம் ஜில்லா, சிவாலயம். இங்கு கணபதி பூசை விசேஷம்.

உதயம்பேரூர்—திருவாங்கூர் ராஜ்யம். சிவாலயம்.

உப்பினங்குடி—சென்னை ராஜதானி, மைசூர் ராஜ்யம். சிவாலயம்; சஹஸ்ரலிங்கேஸ்வரர் கோயில்.

உரவகொண்டா—குத்திதாலுகா அநந்தபூர் ஜில்லா, சென்னை ராஜதானி, மல்லிகார்ஜுனஸ்வாமி கோயில்.

உலவக்கோடு—பாலக்காடு பிரிவு சென்னை ராஜதானி, ரெயில்வே ஸ்டேஷன். இங்கு 2 சிவாலயங்கள் உண்டு.

உள்ளால்—மேற்கு இந்தியா; மங்களூருக்கு 2 மயில். தென் கன்னட ஜில்லா, சிவாலயம், ஸ்வாமி-சோமநாதர்,

இங்குள்ள சில்பங்கள் இதாலி தேசத்திய சில்பங்களைப் போன்றவை என்று சொல்லப்படுகிறது.

உளுந்தூர் பேட்—மாஷாபுரம் எனவும் வழக்கப்படுகிறது. தென் இந்தியா ; தென் ஆற்காடு ஜில்லா; சிவாலயம். ஸ்வாமி-மஹேஸ்வரர்; தேவி-லோகநாயகி. தீர்த்தம் ஞான போத புஷ்கரிணி.

உறையூர்—சென்னை ராஜதானி; திருச்சிராப்பள்ளியின் ஓர்பாகமாகிய பண்டமங்கலம் அக்கிரஹாரத்தில் சிவாலயம். ஸ்வாமி-ஸ்ரீ விஸ்வநாதஸ்வாமி. இவ்வூருக்கு உரகபுரம் என்பது பழய பெயர்; மூகீஸ்வரம் என்றும் பெயர். இங்கு பஞ்சவர்ணேஸ்வரர் கோயில் உண்டு. ஸ்வாமி-பஞ்சவர்ணேஸ்வரர்; தேவி-பார்வதி. பிரம்மாவுக்கு 5 வர்ணங்களுடன் தோற்றிய லிங்கம் என்பது ஐதிகம். பாதாள லோகத்திலிருந்து 5 லிங்கங்களை நாகராஜன் எடுத்துக்கொண்டு வந்த போது இங்கு வந்தவுடன் அவைகள் ஒன்றுடன் சேர்ந்து ஒரு லிங்கமானதாக ஐதீகம். இங்கு பல கல்வெட்டுகள் உள.

உஜ்ஜையின்—ஜி. ஐ. பி. ரெயில் ஸ்டேஷன், வட இந்தியா. இதற்கு சிவபுரி என்றும், அவந்திகை யென்றும், உஜ்சேனமாகாளம் என்றும் பெயர்களுண்டு. இங்குள்ள கோயில்கள் ஆரியசில்ப மமைந்தவை. மாகாளேஸ்வரர் கோயில்; 12 ஜோதிலிங்கங்களில் ஒன்று; சுயம்புலிங்கம்; கோடி தீர்த்தம். (2) நாகசண்டேஸ்வரர் கோயில் (3) மங்களேஸ்வரர் கோயில் (4) கோகேஷ்வரர் மஹாதேவர் கோயில். (5) ஆடகேஸ்வரர் கோயில் (6) நாகேஸ்வரர் கோயில்.

ஊஞ்சலூர்—சென்னை ராஜதானி, ஈரோட் தாலூகா, கோயமுத்தூர் ஜில்லா. பழய சிவாலயம். கல் வெட்டுக்கள் உள.

ஊடியூர்—தாராபுரம் தாலூகா, கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி. இங்குள்ள குன்றுகள் மீது இரண்டு சிவாலயங்கள் இருக்கின்றன.

ஊர்க்காடு—சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா, இதற்கு கோஷ்டீஸ்வரம் என்றும் பெயர். சிவாலயம். ஸ்வாமி-கோஷ்டீஸ்வரர்; தேவி - கொடி யிடை நாயகி; தாம்பிரபர்ணி தீர்த்தம். அகஸ்தியர் பூசித்தது. வைப்புஸ்தலம்.

ஊற்றத்தூர்—லால்குடி தாலூகா, திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி. பிட்சாண்டார் கோயிலிலிருந்து 19 மயில். சிவாலயம். ஸ்வாமி - சுத்த ரத்தின ஈஸ்வரர்; தேவி-அகிலாண்டேஸ்வரி. இவ்வூருக்கு பில்வ வனக்ஷேத்திரம் என்றும் பெயர். தீர்த்தங்கள் தேவக தீர்த்தம், பிரம்ம தீர்த்தம், அகில தீர்த்தம், வேல வடி தீர்த்தம், நந்தி ஆறு. சுயம்பு லிங்கம். பிரம்மோற்சவம் வைகாசி மாசம்; மாசி மாசம் சூரியபூஜை.

எச்சிகனஹல்லி—மைசூர் ராஜ்யம். நஞ்சங்கோட்டுக்கு அருகிலுள்ளது. சோமேஸ்வரர் கோயில்; சிலமாயிருக்கிறது.

எட்டையாபுரம்—கோயில்பட்டி தாலூகா, திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜதானி. சிவாலயம். ஸ்வாமி-எட்டேஸ்வரர்; கோயில் சுமார் 300 வருடங்களுக்குமுன்பு கட்டப்பட்டிருக்கிறதென மதிக்கப்படுகிறது.

எடத்தூர்—மைசூர் ராஜ்யம். சிவாலயம். ஸ்வாமி-சோமேஸ்வரர்; தேவி-சோமசுந்தரி. காவிரியின் கரையிலுள்ளது. மாசி மாதத்தில் சூரியபூஜை.

எதிர்கொள்பாடி—(திரு)மேலத் திருமணம் சேரி எனவும் வழங்கப்படுகிறது. வேள்விக்குடிக்கு 2 மயில் வடக்கு. குற்றாலம் ரெயில் ஸ்டேஷனிலிருந்து $4\frac{1}{2}$ மயில். சென்னை ராஜதானி. ஸ்வாமி-ஐராவதேஸ்வரர்; தேவி-மலர்குழனன்மாது. தீர்த்தம், சிவகங்கை; ஐராவதம் பூசித்ததலம். வேள்விக்குடியில் மணம் செய்து கொண்ட ராஜகுமாரனை, சிவபெருமான் அவனது அம்மான் வேடத்தில், எதிர்கொண்டு அழைத்துக்கொண்டு போனபடியால் எதிர்கொள்பாடி எனப் பெயர் பெற்றது. சுந்தரர் பாடல்பெற்ற ஸ்தலம்.

எர்ரபல்லா—கடப்பை ஜில்லா, சென்னை ராஜதானி. சிவாலயம். குகைக்கோயில்; பஞ்சலிங்க கோணையிலுள்ளது. ஐந்து சிவாலயங்கள் உள. இங்கு உள்ளே செல்ல ஒரு சிறு வழியால் நகர்ந்து செல்லவேண்டும். கார்த்திகை சோமவாரம் விசேஷம். இதற்கு அருகாமையில் குண்டல மல்லிகார்ஜுனஸ்வாமி கோயில் உளது. தீர்த்தம் எதிரிலுள்ள மலை வீழருவி; ஸ்நானம் விசேஷம்.

ஏரணகுளம்-கொச்சி சமஸ்தானத்திலுள்ளது. சிவாலயம். மரச்சிற்பங்க ளமைந்தது; சிறந்த வேலைப்பாடுடையது.

எருக்கத்தம்புலியூர்—(திரு)விருத்தாசலத்திற்கு 7 மயில் சென்னை ராஜதானி, இதற்கு பழய பெயர் ராஜேந்திரப் பட்டணம். திருநீலகண்டப் பெரும்பாணநாயனார் சரித்திர சம்பந்தமானது. ஸ்வாமி-நீலகண்டேஸ்வரர், தேவி-நீல மலர்க்கண்ணியம்மை. வெள்ளெருக்கு விருட்சம்; நீலோற் பல தீர்த்தம். கோயிலில் வெள்ளெருக்கஞ் செடியின்கீழ் ஸ்வாமி தோன்றி யிருக்கிறார். திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது.

எல்சூர்—சென்னை ராஜதானி ஸ்வாமி-மார்க்கண்டேஸ் வரர்; தேவி-மரகதாம்பாள். மார்க்கண்டேயர் பூஜித்த ஸ்தலம்.

எல்லூர்—சென்னை ராஜதானி, கிருஷ்ணை ஜில்லா, சிவாலயம்.

எல்லோரா—நிஜாம் ராஜ்யத்திலுள்ளது. அவுரங்கபாத் ரெயில் ஸ்டேஷனிலிருந்து 13 மயில்; தௌலதாபாத்தி லிருந்து 7 மயில்; ரோஜா நகரத்திற்கு 10 மயில். இங்கு போக தௌலதாபாத் ஸ்டேஷனிலிருந்து வண்டிகள் கிடைக் கும். இங்கு பல பௌத்த சமணருடைய கோயில்கள் உண்டு. சிவாலயங்களும் உண்டு. அவைகளில் முக்கியமானவை. கைலாசர் கோயில் என்பதாம். இது மிகவும் ஆச்சர்யகரமா னது. இதைப் பார்க்க பல கண்டங்களிலிருந்து ஜனங் கள் வருகின்றனர். ஒரே மலையை, 106 அடி ஆழத்திற்குக் குடைந்து கோயிலாக வெட்டப்பட்டது. கோயில் 139 அடி அகலம், 247 அடி நிகளம்; நடுவிலுள்ள விமானம் 96 அடி உயரம். இக்கோயில் முதல்கிருஷ்ணன் எனும் ராஷ்டிர கூட அரசனல் கட்டப்பட்டது (757—783) இங்கு கர்ப்பக் கிரஹத்தில் பெரிய லிங்கம் இருக்கிறது. எதிரில் நந்திக்கு பதினறுகால் மண்டபம் ஒன்றுண்டு. மண்டபத்தின் இரு பக்கத்திலும் 49 அடி உயரமுள்ள இரண்டு துவஜஸ்தம்பங்க ளிருக்கின்றன. (தீபஸ்தம்பங்கள்?) இவைகளின் உச்சியில் திரிசூலங்கள் இருக்கின்றன. சுற்றுப் பிராகாரத்தில் சப்த மாத்ருக்கள் மூதலியோரின் சில்பங்களிருக்கின்றன. பிரா காரத்தில் இரண்டு பெரிய கல்லாலாகிய யானைகள் செதுக் கப்பட்டிருக்கின்றன. பிராகாரத்தைச்சுற்றிலும் சிறு மண்டபங்கள் உண்டு. பிராகாரத்தில் மேல்மாடியொன் றுண்டு. நடுவிமானத்தைச் சுற்றிலும் 5 சிறு கோயில்கள்

இருக்கின்றன. கர்ப்பக்கிரஹம் யானைகளால் தாங்கப் பட்டதுபோல் குடையப்பட்டிருக்கிறது. பிராகாரத்தின் வடமேற்கு மூலையில் கங்கை, யமுனை சரஸ்வதி நதிகளின் கோயிலிருக்கிறது. இங்கு ஒருபுறமுள்ள ராவண அனுக் கிரஹ மூர்த்தி மிகவும் அழகியது. இவ்வளவும் ஒரே மலைப் பாறையில் செதுக்கப்பட்டதாம்! கோயில் மேற்கு பார்த் தது. சிவராத்திரியில் மாத்திரம் பூசையுண்டு; மற்ற நாட்க ளில் பூசை கிடையாது. இங்குள்ள கடிசமநடனமாடும் நடராஜ மூர்த்தியும், லலிதா நடனமூர்த்தியும் மிகவும் அழ கியவை. இங்குள்ள தசாவதார குகை, ராமேஸ்வர குகை முத லியவைகள் சிவாலயங்களேயாம்; இவைகளில் பரமசிவத் தின் அழகிய உருவங்களிருக்கின்றன. தூமார்லீனு குகையும் சிவாலயமாம். இதன் வடபுறம் சண்டேஸ்வரர் உருவம் செதுக்கப்பட்டிருக்கிறது. தசாவதாரக் குகையில் முக்கிய உருவம் கைலாசமூர்த்தி. அருகிலுள்ள எல்லோரா கிராமத் தில் ஒரு சத்திரமுண்டு. அன்றியும் இக்கிராமத்தில் 18 ஆம் நூற்றாண்டில் அஹல்யாபாய் கட்டிய சிவாலயம் ஒன்று உளது. அழகிய சில்பமமைந்த கோபுரமுடையது.

எழுமாந்தூர்—கோயமுத்தூர் ஜில்லா, சென்னைராஜ தானி, ஒரு சிறு குன்றின்மீது சிவாலய மிருக்கிறது.

எளந்தூர்—மைசூர் ராஜ்யத்தில் பிலிகிரிரங்கள் மலைகளி லுள்ளது, ஏலாந்தூர் தாலுகாவில். இளைய + இந்தூர் = இளைய சந்திரனூர் எளந்தூர் என்றாயது. சிவாலயம். ஸ்வாமி கௌளீஸ்வரர்-புதியகோயில். சளுக்கியர்ய சில்பம். சுமார் 1450-ஆம் ஆண்டில் பாடிநாட்டு அரசனாகிய சிங்க தேவர் என்பவரால் கட்டப்பட்டது.

எள்வனதூர்—தென் ஆற்காடு ஜில்லா சென்னை ராஜ தானி, திருக்கோயிலூர் தாலூகா; பழைய பெயர் சோழ கேரள சதுர்வேதி மங்கலம் அல்லது இறையனகியூர் சிவா லயம். ஸ்வாமி கிராமர்த்தனதேஸ்வரர். இங்கு 1135-வரு டத்திய கல்வெட்டில் மாணிக்கவாசகருடைய திருச்சாழல் ஓது வதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

எறும்பியூர் திருவெறும்பூர்—தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன்; திருச்சிராப்பள்ளிக்கு $6\frac{1}{2}$-மயில் கிழக்கு. தேவர் கள் எறும்பு உருவில் பரமசிவத்தை பூசித்த க்ஷேத்ரம். ஸ்வாமி-எறும்பீஸ்வரர்; தேவி நறுங்குழல் நாயகி; பரம

தீர்த்தம்; சந்திர புஷ்கரணி, குமரி புஷ்கரணி, பிப்பீலியா தீர்த்தம்; அற்புத தீர்த்தம்; கோயில் சிறு குன்றில் இருக்கிறது. இதற்கு பழைய பெயர் மணிகூட அசலம். இங்குள்ள லிங்கம் வடக்கு பக்கம் சாய்ந்திருக்கிறது. ஆதியில் புற்றாயிருந்ததாக ஐதிகம். லிங்கத்திற்கு எண்ணெய் தவிர வேறு அபிஷேகமில்லை. கரன் பூசித்த ஸ்தலமென்பது புராணம். கோயில் துவார பாலகர்கள் சில்பம் பார்க்கத்தக்கது. கோயிலில் சுரங்கம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. பெரிய மண்டபம் இலமாயிருக்கிறது. திருநாவுக்கரசு ஸ்வாமிகள் பாடல் பெற்றது.

எனமடலா—குண்டூர் தாலூகா, மேற்படி ஜில்லா, சென்னை ராஜதானி; வீரபத்ரேஸ்வரர் கோயில்.

ஏகாம்ரம்—வட இந்தியா சிவாலயம். சுயம்புலிங்கம். ஸ்வாமி க்ருத்திவாச ஈஸ்வரர். கோயில் வட இந்திய ஆரிய சில்பம்.

ஏடகம்—(திரு) மதுரை ஜில்லா, சென்னை ராஜதானி, சோழவந்தான் ஸ்டேஷனுக்கு 2½-மயில் தென்மேற்கிலுள்ளது. மாணிக்கவாசகர் குலச்சிறை நாயனார் சரித்திரங்களில் சம்பந்தப்பட்டது. சமணர்களுடன் வாது புரிந்து வென்ற திருஞான சம்பந்தர் இட்ட திரு ஏடு, வைகையை எதிர்த்துச் சென்று இங்கு தங்கிய ஸ்தலம்; எனவே ஏடகம் எனப் பெயர் பெற்றது. ஸ்வாமி-ஏடகநாதேஸ்வரர்; தேவி சுகந்த குந்தளாம்பாள் ஏலவார்குழலி, தீர்த்தம் வைகைநதி.

ஏத்துமானூர்—திருவாங்கூர் சமஸ்தானம். ஆலவாயருகில் உள்ளது. சிவாலயம் இப்பக்கத்தில் மிகவும் பிரசித்தி பெற்றது. ஸ்வாமி-பரமேஸ்வரர்; தேவி பார்வதி.

ஏமர்பேரூர்—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, சிவாலயம். ஸ்வாமி-நேயப்பேரூர் நாதர்; தேவி பார்வதி. நமிநந்தியடிகள் சம்பந்தமான ஸ்தலம். வைப்புஸ்தலம்.

ஏர்ப்பாடு—வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம் காளஹஸ்திக்கு 9-மயில். ஸ்வாமி ஊற்றேஸ்வரர். இங்கு வற்றாத ஒரு ஊற்றுளது.

ஏவூர்—திருவாங்கூர் ராஜ்யம், சிவாலயம்.

ஏழூர்—சென்னை ராஜதானி, சேலம் ஜில்லா, நாமக் கல்லுக்கு வடபுறம் உள்ள சிவாலயம், தேவார வைப்புஸ்தலம்.

ஐயங்கார்குளம்—காஞ்சீபுரம் தாலூகா, செங்கல்பட்டு ஜில்லா, சென்னை ராஜதானி, கைலாசநாத ஸ்வாமி கோயில்.

ஐயாறு—(திருவையாறு) தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஸ்டேஷனுக்கு 7 மயில் வடக்கிலுள்ள பிரபலக்ஷேத்திரம். ஐ—ஆறு = ஐந்து நதிகள். தஞ்சாவூரிலிருந்து இங்கு போகும்வழியில் வடவாறு, வெண்ணாறு, வெட்டாறு, குடமுருட்டி, காவிரி எனும் ஐந்து ஆறுகள் உள்ளன. இதனல் இந்த க்ஷேத்திரத்திற்கு இப்பெயர் வந்திருக்கலாம். ஸ்தல புராணத்தில், ஐயாறு என்பதற்கு, கங்கைநீர், உமை கொங்கைநீர், கமண்டலநீர் கொண்டல்நீர், நந்திவாய் நுரைநீர், என்று அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது. ஜகதீசஐயர் சூரிய புஷ்கரிணி, கங்கை, அமிர்த தீர்த்தம், பாலாறு, நந்தி தீர்த்தம், இவ் வைந்தும் காவேரியின் கீழ்பாகம் பாய்ந்து அதனுடன் புஷ்யமண்டபத்தின் மேற்கில் சேர்வதாக ஐதிகம், என்கிறார். கோயில் 871-ஆம் ஆண்டில் ஆதித்யன் எனும் அரசனல் கட்டப்பட்டதென்பர். பெரும் புண்ணிய க்ஷேத்திரம். காசிக்கு வீசம் அதிகம் திருவையாறு என்பது பழமொழி. சமுத்திர ராஜன் இங்கு காவிரியை வணங்கிய க்ஷேத்திரம். தர்ம தேவதை பூசித்து நந்தி தேவராகி, ஸ்வாமியைத் தாங்கும் அழியாப் பதம்பெற்ற தலம். திருநாவுக்கரசு நாயனருக்கு ஸ்வாமி உமையொடு கைலாச தர்சனம் கொடுத்த திவ்ய ஸ்தலம். இந்த உற்சவம் இங்கு ஆடிமாசம் அமாவாசையன்று நடைபெறுகிறது. சுந்தரமூர்த்தி நாயனருக்கும், சேரமான் பெருமான் நாயனருக்கும், காவிரி விலகிவிட்ட ஸ்தலம். கோரதவசி என்பவர் பூசித்து பாபம் நீங்கிய க்ஷேத்திரம். சப்த ஸ்தலங்களில் முதன்மையானது. மூவர் பாடல் பெற்றது. ஸ்வாமி-செம்பொற் ஜோதீஸ்வரர், பஞ்சததேஸ்வரர். தேவி தர்ம சம்வர்த்தினி. தீர்த்தம் காவிரி நதி; இதில் ஆடி மாசம் 18-ஆம் பெருக்கு விசேஷம். கோயில் பெரிய கோயில். ஸ்வாமி கோயிலுக்கு வெளியில் அம்மன் கோயில் பிறகு கட்டப்பட்டதாக சிலர் எண்ணுகின்றனர். கர்ப்பக்கிரகத்தில் லிங்கத்தின் பின்பாகம் சோமாஸ்கந்த மூர்த்தி செதுக்கப்பட்டிருக்கிறது. இந்த பாகம் பல்லவ அரசர்கள்

காலத்தியதென்று தூப்றெயில் துரை எண்ணுகிறார். சிவ லிங்கம் பட்டைகள் தீர்ந்த வடிவமுடையது. தற்காலம் சுப்பிரமணியஸ்வாமி யிருக்கும் கோயில் பூர்வத்தில் விஷ்ணு ஆலயமாக இருந்ததாக சிலர் எண்ணுகின்றனர். இங்கு வைஷ்ணவ சின்னங்கள் இருக்கின்றன. இங்கு வட கைலாசம் தென் கைலாசம் என்று இரண்டு கோயில்கள் உண்டு. வட கைலாசம் கோயிலில் பல கல் வெட்டுகள் இருக்கின்றன. தென் கைலாசக் கோவியில் சுமார் 50 கருப்பு நிறமமைந்த அழகிய தூண்கள் உள. இவை சளுக்கிய சில்பத்தைச் சார்ந்தவைகளாம். புராணக கதையின்படி ஹஸ்தினபுரத்து சுரத மகாராஜனால் உத்தர கைலாசமும் தட்சிண கைலாசமும் கட்டப்பட்டனவாம். உத்தர கைலாசக் கோயில் ராஜராஜன் மனைவியாகிய லோக மஹாதேவியால் புதுப்பிக்கப்பட்டது. இதற்கு உமா மஹா தேவீசம் என்றும் பெயர். சில நூற்றாண்டு களுக்குமுன் தஞ்சையையாண்ட மஹாராஷ்டிர அரசர் ஒருவர் இங்கிருந்த விஷ்ணு ஆலயத்தை அகற்றி விஷ்ணு விக்ரஹத்தை காவிரிக்கு அப்புறமுள்ள கலியாணபுரத்தில் வைத்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது. தற்காலம் தேவி கோயிலாயிருப்பது முன்பு விஷ்ணு கோயிலாக இருந்ததாகச் சொல்லப்படுகிறது. அக்காலம் தற்போது பழனியாண்ட வர் சந்நிதியா யிருப்பது அம்மன் கோயிலாயிருந்திருக்க லாம் என்று எண்ணப்படுகிறது. நாயக்கர்கள் மந்திரியாகிய கோவிந்த தீட்சதரும், பச்சையப்ப முதலியாரும் கோயிலின் சில பாகங்களைப் புதுப்பித்திருக்கின்றனர். வெங்கி அரசனு கிய விமலாதித்யன் இக்கோயிலுக்கு தர்ம கைங்கரியம் செய்திருக்கிறான். (1013-14) இக் கோயிலில் அழகிய பிரம் மாவின் சிலை ஒன்றிருக்கிறது. இங்குள்ள க்ஷேத்திர பாலக தேவதைக்கு ஆட்கொண்டார் என்று பெயர். இவர் யம னிடமிருந்து ஒரு பிள்ளையை மீட்டதாக ஐதிகம்; அச்சம யம் திருவையாற்றில் தன் கோயிலுக்கெதிரில் குங்கிலிய தூபம் எரிகிற அளவில், யமன் ஒருவரையும் பாதிக்க லாகாது, என்று கட்டளையிட்டனராம். ஆட்கொண்டார் சிலை யமனைக் காலின்கீழ் மிதித்தபடியிருக்கிறது. காசிகரு ஒரு வர்த்தகன் தகப்பனருடைய அஸ்தியை எடுத்துக் கொண்டு போனபோது, இந்த க்ஷேத்திரத்திற்கு வந்த சமயம், அது புஷபங்களாக மாறினதாகவும், லிங்கமாக

மாறினதாகவும் சொல்லப்படுகிறது. ஆகையால் இங்கு அநேகர் தங்கள் அந்திய காலத்தைக் கழிக்கின்றனர். ஸ்வாமி கோயிலில் வெளிப்பிராகாரத்தில் பிரதி தொனியுண்டு; அது ஆறு ஏழு முறை பிரதிபலிக்கிறது. பிரம்மோற்சவம் சித்திரைமாசம். இதன் கடைசி தினத்தில் சப்தஸ்தான உற்சவம் மிகவும் விசேஷம். திருமழபாடியில் நந்திகேஸ்வரருக்குத் திருமணம் முடித்து பஞ்சநதேஸ்வரர் அவரை ஊர் கோலமாக, ஏழு ஸ்தலங்களுக்கு அழைத்துச் செல்கிறார். அவை, திருப்பழனம், திருச்சோற்றுத்துறை. திருவேதிருடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, தில்லை ஸ்தானம், திருவையாறும்; மற்ற ஆறு ஸ்தலங்கள் திருவையாற்றிற்கு 3 மயில் சுற்றளவில் உள்ளன. பெரிய கோயிலைப் பிரதட்சிணம் வரும்பொழுது முற்றிலும் சுற்றிவருவதில்லை. இதற்குக் காரணம் விசித மாகத் தெரியவில்லை. காவிரிக்கரையில் ஸ்வாமி தீர்த்தம் கொடுக்கும் கட்டம் மிகவும் அழகியது. ஸ்வாமி சுயம்பு லிங்கம். கைலாசநாதருக்கு, ஸ்வாமி இங்கு ஒரு கோயில் கட்டும்படியாக உத்திரவிட, அவர் அதற்குப் பொன் இல்லை யென வருத்தப்பட, நந்திகேஸ்வரர் பாதச்சுவடுள்ள இடங்களின்கீழ் பொருள் கிடைக்குமென உத்தரவானதாக ஐதிகம். நந்திதேவரது குளம்பின் சுவடுகள் கோயிலின் மூன்றும் பிராகாரத்தில் இன்னும் காணலாம். கோயில் மிகவும் பூர்வீகமானது. 985-ம் ஆண்டில் கட்டப் பட்டது என்று சிலர் கூறுவர். கிழக்கு கோபுரம் 7-நிலை களை யுடையது.

ஐயம்பேட்டை—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்.

ஒத்தேபாலம்—மலபார் ஜில்லா, சென்னை ராஜதானி, திரிக்கற்கோட் கோயில். இங்குள்ள ஸ்ரீ கோயில் அல்லது மூலஸ்தானத்தில், பரமசிவத்துடன் விஷ்ணுவும் ஆராதிக்கப்படுகிறது.

ஓரிஸ்ஸா பிரிவு—இங்கு **பாவுட்** என்னுமிடத்தில் **3 சிவாலயங்களும்**, கிச்சிங் என்னுமிடத்தில் ஓர் **சிவாலயமுமுண்டு.** கிச்சிங்கிலுள்ள சிவாலயம் மான்சிங் காலத்தில் மராமத்து செய்யப்பட்டது.

ஒற்றியூர்—திருவொற்றியூர். கிழக்கு இந்தியா ரெயில் ஸ்டேஷன்; சென்னபட்டணத்திற்கு 5 மயில் வடக்கிலுள்ளது. ஒற்றிவைக்கப்பட்ட ஊர் ஒற்றியூர்; அல்லது கடல் ஒற்றிப் போனபடியால் ஒற்றியூர் ஆயதென்பர்; 'கடல் ஒற்றியூர்' என்பதைக் காண்க. இதற்கு ஆதிபுரி என்றும் பெயர். மூவர் பாடல்பெற்ற க்ஷேத்திரம். மாந்தாதா, தொண்டமான், ரோமசர், நந்திதேவர், பூசித்த ஸ்தலம். பட்டினத்துப் பிள்ளையார் அடைக்கலமான தலம். கலிய நாயனார் திருவிளக்கு தொண்டுசெய்த இடம். சுந்தரமூர்த்தி நாயனார் சங்கிலிநாய்ச்சியாரை மணந்த இடம். அவர் மகிழ மரத்தடியில் பிரமாணம் செய்து கொடுத்ததை முன்னிட்டு, ஸ்வாமிக்கு மாசிமாசம் நடக்கும் பிரமோற்சவத்தில் மகிழடி சேர்வை எனும் பிரபல உற்சவம் நடக்கிறது. ஸ்வாமி ஆதிபுரீஸ்வரர், படம்பக்கநாதர், மாணிக்கதியாகர்; தேவி வடிவாம்பிகை யம்மை, திரிபுர சுந்தரி. ஸ்தல விருட்சம் மகிழமரம். பிரம்ம தீர்த்தம், அலைவாய் தீர்த்தம். கோயிலின் கர்ப்பக்கிரஹ விமானம் மிகவும் பழமையானது. 1012-1042-இல் ஆண்ட ராகேந்திர சோழனால் கட்டப்பட்டது; அதற்கு முன்பு செங்கற்கட்டிடமாயிருந்திருக்க வேண்டும்; பழய சோழ கட்டிடம் கஜப்பிருஷ்ட ஆகிருதி; அவ்வரசன் காலத்தில் சதுரானன் உத்திரவின்படி ரவி எனும் சில்பியினால் கட்டப்பட்டதாக ஒரு கல்வெட்டு கூறுகிறது. லிங்கம் புத்துருவாயது. மேலே கவச மிடப்பட்டிருக்கிறது. அற்பிசிமாசம் கவசத்தை மூன்று தினம் களைகின்றனர்; அச்சமயம் பந்தனம் செய்யப்படுகிறது. தெற்குப் பிராகாரத்தில் கௌளீசர் கோயில் இருக்கிறது. இதுதான் பழய காலத்தில் படம்பக்க தேவர் ஆலயம் என அழைக்கப்பட்டதாம். இது கட்டப்பட்டது வீர ராஜேந்திர தேவர் காலம் (1067-1068) இங்கிருக்கும்சிலை யோக தட்சிணமூர்த்தி உருவம் என; கோபிநாத் ராவ் எண்ணுகிறார்; சிலர் லகுலீசர் என்று நினைக்கிறார்கள். இக்கோயில் பசுபதி யென்பவரால் கட்டப்பட்டதாக கல்வெட்டு கூறுகிறது. அம்மன் சந்நிதி பிற்காலத்தில் கட்டப்பட்டது. இதற்குப் பூஜைசெய்பவர் மலையாளப் பிராம்மணர். இங்கு ராஜேந்திர சோழன் மடம், குலோத்துங்க சோழன் மடம், முதலிய பல மடங்கள் பூர்வீகத்தில் இருந்ததாக அறிகிறோம். பண்ணைகொண்ட சோழன் மண்டபம்,

ராஜராஜன் மண்டபம், ராஜேந்திரசோழன் மண்டபம் முத லிய பலமண்டபங்கள் இருந்ததாக அறிகிறோம். கர்ப்பக் கிரஹத்திற்கு தெற்கில் தியாகராஜர் சந்நிதி இருக்கிறது. இது புதிய கட்டிடம். இங்கு வட்டபலிநாய்ச்சியார் எனும் துர்க்கை சந்நிதியுண்டு. இது மிகவும் பூர்வீக சந்நிதியாய் இருக்க வேண்டும். பூமிபின் கீழ் மட்டத்தி லிருக்கிறது. பிறகு கோயில் கர்ப்பக்கிரஹம் கட்டியபொழுது இதைச் சேர்த்துக் கட்டியிருக்கிறார்கள். சித்திரை மாசம் இத் துர்க்கைக்கு 18-நாட்கள் உற்சவம். இங்கு ஆடு, எருமை முதலிய பலி கொடுக்கப்படுகின்றன. இந்த உற்சவ முடி வில் பெரிய கோயிலுக்கு சம்புரோட்சணம் செய்யப்படு கிறது. ஆதிசங்கராசாரியார் வட்டபலி நாய்ச்சியாரின் உக்கிரத்தை யடக்கி, அச் சக்தியைக் கிணற்றில் கிடத்தி அதன்பேரில் ஒரு பெரிய கற்பாறையைக் கவிழ்த்ததாக ஐதிகம்; இப்பாறையை இன்னும் காணலாம். கோயிலுக்கு வெளியில் கிழக்கில் சங்கராசாரியார் மடம் இருக்கிறது. கிழக்கு கோபுரத்திற்கு நேராக இருக்கும் சந்நிதி ஆதி புரீஸ்வரர் சந்நிதியாம், இக்கோயிலுக்கு பழய கோபுரம் இல்லை. சென்ற நூற்றாண்டின் கடைசியில் எல்லப்ப செட் டியார் என்பவரால் தற்கால கோபுரம் கட்டப்பட்டது. இக் கோயிலில் 200-க்கு மேற்பட்ட கல்வெட்டுகள் உள. அவை களினின்றும் அடியிற் கண்ட சங்கதிகளை அறிகிறோம். அவற்றுள் மிகவும் பூர்வீகமானது. 908-947-ல் ஆண்ட முதல் பராந்தகனுடையது. இங்கு வியாகர்ணதான வியாக் கியான மண்டபம் என்று ஒன்றிருந்ததாம். இதனால் ஸ்வாமிக்கு வியாகர்ணதானப் பெருமான் என்று ஒரு பெயர் வழங்கலாயிற்று. குலோத்துங்க சோழன் இங்கு ஆனி உற்சவத்தை தரிசித்ததாகவும், ராஜராஜன் திரு மண்டபத்தில் தங்கியதாகவும் தெரிகிறது. இவ்வூர் ஸ்வா மிக்கு கரணவிடங்கர் என்று பெயர் இருந்ததாம். இங்கு சூரியனுக்கு ஒரு சந்நிதி யிருந்ததாகச் சொல்லப்பட்டிருக் கிறது. இங்குள்ள பிள்ளையாருக்கு 'அனுக்கு பிள்ளையார்' என்று பெயராம். (அனுக்ஞை பிள்ளையாரா யிருக்கலாம்) வாக்குவாதம் நடத்த 'வக்காணிக்கும் மண்டபம்' என்று ஒன்று இருந்ததாகத் தெரிகிறது. பூர்வகாலத்தில் கோவில் வேலைக்காரர்கள் 139-பெயர் இருந்ததாக அறிகிறோம். அவர்களுள் ஒருவனுக்கு எல்லைக் காவல் என்று பெயராம்.

இக் கோயில் சோழ அரசர்கள் காலத்தில் மிகவும் பிரசித்தி பெற்றிருந்ததென்பதற்கு ஐயமில்லை. தேவதானமாக அவர்களால் பல கிராமங்கள் பெற்றிருந்தது. கர்ப்பக்கிரஹத்தின் வடக்கில் ஏகபாதமூர்த்தி (சிவபெருமான் திரிமூர்த்தி ஸ்வரூபமா யிருப்பது) பார்க்கத்தக்கது. இக் கோயிலில் அஷ்டோத்திர லிங்கம், சஹஸ்ர லிங்கம், தாரா லிங்கம் முதலியவை உள. பிரம்மோற்சவத்தில் தியாகர் உற்சவம் தான் விசேஷம்; ஐந்தாம் பவனி, ஆறும் பவனி விசேஷம். இக் கோயிலிலுள்ள கலியாண சுந்தர மூர்த்தி விக்ரஹம் மிகவும் அழகியது. இது சுமார் 1000-வருடங்களுக்கு முந்தியது என்று எண்ணுகிறார்கள். ஆதொண்டை சக்ரவர்த்தி புழல் கோட்டத்தை ஜெயித்தபோது அங்கிருந்த இரண்டு பவழத் தூண்களையும் 2 வெண்கலத் தூண்களையும் இக் கோயிலுக்குக் கொடுத்ததாகச் சொல்லப்படுகிறது. அவைகளை கடல் கொண்டுபோயிற்றென்கின்றனர். தற்காலம் வடமேற்கு மூலையில் சிவபக்தரான ராமசாமி பிள்ளையவர்களால் ஒரு புதிய சிவாலயம் கட்டப்பட்டிருக்கிறது. தியாகருக்கு மாணிக்க தியாகர் என்று பெயர். திலீப மகாராஜாவுக்கு நடன தர்சனம் கொடுத்த தலம். தியாகருக்கு அசையும் தியாகரெனவும் பெயர். ஸ்வாமிக்கு எழுத்தறியும் பெருமான் எனும் திருநாமமுமுண்டு. கோயிலுக்குள் நடராஜருடைய சந்நிதிக்குப் பின்புறம் மஹாவிஷ்ணுவின் சிலை யிருப்பதாகவும் அது அடைக்கப்பட்ட தாயும் சொல்லப்படுகிறது. பெரிய கோயிலுக்குள் உள்ள மற்ற சிறு சிவாலயங்கள்—**அரிஞ்ஜீஸ்வரமுடையார்** கோயில்; **கம்பீஸ்வர முடையார்** கோயில்; **விடேல்விடுகீஸ்வரர்** கோயில். இங்கு சந்நிதி வீதியில் **அகஸ்தீஸ்வரர்** கோயில் என்று மற்றொரு சிறு சிவாலயமுளது. ஸ்வாமி-அகத்தீஸ்வரர்; தேவி அகிலாண்ட ஈஸ்வரி. இக்கோயில் வடக்கு பார்த்தது. பெரிய கோயிலில் இரண்டு சுரங்க அறைகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது; அவைகள் தற்காலம் மூடப்பட்டிருக்கின்றனவாம். தியாகராஜர் பகற் காலத்தில் புறப்பாடாவதில்லை.

ஒண்டிமிட்டா—சென்னை ராஜதானி கடப்பை ஜில்லா, கடப்பைக்கு 15-மயில் சிவாலயம்.

ஓங்கார அமரேஷ்வர்—கோயில். வட இந்தியா பி. பி. சி. ஐ. ரெயில் ஸ்டேஷனாகிய மோரடக்காவில் இறங்கி 10-

மயில் போகவேண்டும். சிவாலயம்; ஜோதி லிங்கங்கள் 12-ல் ஒன்று. நர்மதைக் கரையில் ஒரு சிறு குன்றில் கோயிலிருக்கிறது. ஸ்வாமி-ஓங்காரேஷ்வர், ஓங்கார்ஜி; கோயில் வட இந்தியா ஆகிய சில்பம்.

ஓங்காரபுரம்—தென் இந்திய சிவாலயம். ஸ்வாமி சிவ ஞானேஸ்வரர்; கருட தீர்த்தம்.

ஓடூர்—பூனா ஜில்லா, பம்பாய் ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி-கபர்திகேஷ்வர்; கருட தீர்த்தம்.

ஓடூரு—சொராப் தாலுகா, ஷிமோகா ஜில்லா, மைசூர் ராஜ்யம். ராமேஸ்வரர் கோயில்.

ஓத்தூர்—(திரு) இதற்கு திருவந்திபுரம் என்றும் பெயர். செய்யாறு தாலுகா, செங்கல்பட்டு ஜில்லா, சென்னை ராஜதானி; காஞ்சீபுரத்திற்கு 17-மயில் மேற்கிலுள்ளது. சிவபெருமான் வேதாந்தத்தை முனிவர்கட்கு உபதேசித்த தலம். திருஞான சம்பந்தமூர்த்தி ஆண்பனையை பெண் பனையாக்கிய க்ஷேத்திரம். இவ்விடம் சிலையாலாகிய பனை மரம் ஒன்றுளது. ஸ்வாமி-வேதநாதேஸ்வரர்; தேவி இள முலைநாயகி. வேத தீர்த்தம், திருஞான சம்பந்தர் பாடல் பெற்ற தலம். சூரியன் பூசித்து ஒற்றைச் சக்கரம் பெற்ற இடம். கோயிலில் பல கல்வெட்டுகள் உள. இவ்வூரில் **சிதம்பரேஸ்வரர்** கோயில் என்று மற்றொரு கோயில் உண்டு. இங்கு ஸ்வாமி பாம்பாட்டியாக வந்து சமணர்கள் ஏவிய பாம்பினை ஆட்டுவித்ததாக ஐதிகம். குமாரஸ்வாமி தரையில் கீறி ஜலம் உண்டாக்கவல்ல வேலாயுதம் பெற்ற இடம்; விஷ்ணு பிருகு ரிஷியினல் பெற்ற சாபம் தீர்ந்த ஸ்தலம்; லட்சுமி கல்யாணி மகரிஷி சாபத்தால் பெற்ற பெண்மான் உருவம் நீங்கிய க்ஷேத்திரம்.

ஓமலூர்—சென்னை ராஜதானி, கொங்குநாட்டிலுள்ளது; சிவாலயம் கெட்டி முதலியார்களால் கட்டப்பட்டது.

ஓமனூர்—சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா திருநெல்வேலிக்கு 5-மயில். சிவாலயம். இதற்கு திருமந்திரேஸ்வரம் என்றும் பெயர். ஸ்வாமி-அர்த்தநாரீஸ்வரர்; தேவி அர்த்தநாரீஸ்வரி.

ஓமாம்புலியூர்—தஞ்சாவூர் ஜில்லா, மன்னார்குடிக்கு 4-மயில் தூரம் சென்னை ராஜதானி. மண்ணிப்படிக்

கரைக்கு 2-மயில் வடமேற்கு. வேடன் சிவராத்ரியில் தூயிலாதிருந்து முத்தி பெற்ற க்ஷேத்திரம். ஸ்வாமி-துயர் தீர்த்த நாதர்; தேவி பூங்கொடிநாயகி. சிவ தீர்த்தம், கொள்ளிடநதி தீர்த்தம். திருஞான சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. இதன் கீழ்பக்கம் வடதளி எனும் சிவாலயம். ஒன்றுண்டு.

ஓரகடம்—செங்கல்பட்டு ஜில்லா, சிவாலயம். ஸ்வாமி-வடமலீஸ்வரர்.

ஓவியமங்கலம்—சென்னை ராஜதானி, புதுக்கோட்டை சமஸ்தானம். இதன் பழய பெயர் ஒல்லையூர் மங்கலம். சிவாலயம். ஸ்வாமி-வரகுணேஸ்வரர். பழய கல்வெட்டுகள் உடையது.

கங்காசாகரசங்கமம்—வட இந்தியா வங்காள ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி-அமரேஷ்வர் அல்லது சங்கமேஷ்வர்; சுயம்புலிங்கம். டயமண்ட ஹார்பரிலிருந்து 30-மயில் நடை.

கங்கால்—சஹரான்பூர் ஜில்லா, ஐக்கிய மாகாணம், வட இந்தியா; கங்கையின் மேற்குக்கரையிலுள்ளது. ஹரத்துவாரத்திற்கு 1-மயில் தெற்கு. சிவாலயம். ஸ்வாமி-தட்சேஸ்வர். பரமசிவம் தட்சனுடைய யாகத்தை அழித்த ஸ்தலம். இங்கு மலை யொன்றில் பரம சிவத்தின் திரிசூலம் இருக்கிறது.

கங்கைகொண்ட சோழபுரம்—சென்னை ராஜதானி, திருச்சிராப்பள்ளி ஜில்லா, உடையார் பாளையம் தாலுகா; மேற்படி ஊரிலிருந்து $6\frac{1}{2}$-மயில்; சிவாலயம் 374-அடி அகலம்; 484 அடி நிகளம். லிங்கம் பாணசுரன் பிரதிஷ்டைன்பது ஐதிகம். 30-அடி உயரமுள்ள ஒரு கற்பாறையாலாயது. இடியினல் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ராஜராஜன் குமாரனன ராஜேந்திர சோழனல் இக் கோயில் 1012-வது கட்டப்பட்டது. இவனுக்கு கங்கைகொண்ட சோழன் என்றும் பெயர். இவன் இவ்வூரை ராஜதானியாக்கி கோயிலைக் கட்டுவித்தான். கோயில் தஞ்சாவூர் பிரஹதீஸ்வரர் கோயிலைப்போன்றது. அங்கிருப்பதுபோல் இங்கும் பெரிய நந்தி யுண்டு. விமானத்தின் நிழல் மேலே விழுவதில்லை யென்பது ஐதிகம். பூர்வ காலத்தில் இக்கோயில் கோட்டையாகவும் உபயோகிக்கப்பட்டது.

கிழக்கு கோபுரம் பெரும்பாலும் கருப்புக் கல்லால் கட்டப் பட்டது. கோயில் விமானம் 174-அடி உயரம் இருக் கின்றது. 99-அடி சதுரம் கீழ்மட்டம். ஸ்வாமி- பிரஹ தீஸ்வரர். இங்குள்ள சண்டேஸ்வர அனுக்கிரஹமூர்த்தி அழகியது. இங்குள்ள கிணற்றில் பாணசுரனுடைய வேண்டுகோளுக்கிணங்கி பரமசிவம் கங்கையை வர வழைத்ததாக ஐதிகம். கிணற்றிற்கு சிங்கக்கிணறு என்று பெயர். கோயிலிலுள்ள சரஸ்வதியின் உருவம் அழகிய சில்பம். இக்கோயிலில் 18-கல் வெட்டுகள் உள. வெளி மண்டபம் 160 × 83 அடி. இங்கு நவக்கிரஹங்களும் ஒரு தேரில் வீற்றிருப்பதுபோல் சிலை யுளது; நடுவில் சூரியன்; அருணன் சாரதி. இங்குள்ள மஹிஷாசுரமர்த்தனி சிலை பார்க்கத்தக்கது. இக் கோயில் ஒருகால் கோட்டையாக உபயோகிக்கப்பட்டது. திருவிசைப்பா பாடல் பெற்றது. கோயில் விஸ்தீரணம் 580 × 370 அடி ; வாயில்கள் 60-அடி உயரம்.

கங்கைகொண்டான்—திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜதானி திருநெல்வேலிக்கு 12-மயில். கைலாசபதி கோயில்; பழய சோழ கட்டிடம். ஸ்வாமி-கைலாசநாதர். கல்வெட்டுகளில் கைலாசமுடைய நாயினார் என்றிருக் கிறது; தேவி-ஆநந்தவல்லி. ஊரின் பழைய பெயர் கங்கை கொண்ட சோழ சதுர்வேதி மங்கலம் என்பதாம். 988-ம் ஆண்டிய சோழ கல்வெட்டுள்ளது; ஆகவே அதற்கு மூந் தியதாம்.

கங்கோத்ரி—இமயமலையிலுள்ள சிவஸ்தலம்; சமுத்திர மட்டத்திற்கு 10,000-அடி உயரமானது. கோயில் சுமார் 1000-வருடங்களுக்கு முற்பட்ட தென்பர்.

கச் பிரிவு—பம்பாய் ராஜதானி, இங்கு அடியிற்கண்ட சிவாலயங்கள் உள. (1) அன்ஜார் கல்யமஹாதேவர் கோயில் புதியது; பாரேஷ்வர் கோயில் (2) பாக்டா பூரேஷ்வர் கோயில் (3) பாலன்பூர் ஜில்லா லோடி, லோடேஷ்வர் மஹாதேவர் கோயில் (4) பாலன்பூர் பாதாளேஷ்வர் மஹாதேவ் கோயில் இது சுமார் 1100-ஆம் ஆண்டில் கட்டப்பட்டதாம்.

கச்சூர்—திருக்கச்சூர். சென்னை ராஜதானி, செங்கல் பட்டு ஜில்லா, சிங்கப்பெருமாள் கோயில் ஸ்டேஷனுக்கு 1½-மயில். தியாகராயரிருக்கும் பஞ்ச ஸ்தலங்களில் ஒன்று.

சுந்தரமூர்த்தி நாயனருக்கு சுவாமி பிராம்மண வடிவங் கொண்டு யாசித்து அன்னமளித்த க்ஷேத்திரம். இங்கு இரண்டு சிவாலயங்கள் உள. (1) தாழங்கோயில்; ஸ்வாமி-விருந்திட்ட ஈஸ்வரர்; தேவி-அஞ்சனட்சியம்மை; அமிர்த தியாகர், அமிர்த தீர்த்தம்; பிரம்மோற்சவம் சித்திரை மாசம். சிறுகுன்றிலிருக்கும் கோயிலுக்கு ஆலக்கோயில் என்று பெயர். (ஆலக் கோயிலைப்பார்க்க) சுந்தரர் பாடல் பெற்றது.

கஞ்சனூர்—சென்னை ராஜதானி, திருவிடை மருதூருக்கு சுமார் 6-மயில் வடகிழக்கு. ஹரதத்த சிவாசாரியார் பிறந்த இடம், அவரது உருவம் கோயிலிலிருக்கிறது. இங்குள்ள நடராஜர் சிவகாமியம்மை விக்ரஹங்கள் பார்க்கத் தக்கவை. மார்க்கண்டேயர், இந்திரன், அக்னி, பிரமன் பூசித்த க்ஷேத்திரம்; ஸ்வாமி-அக்நீஸ்வரர், தேவி-கற்பக நாயகி; அக்னி தீர்த்தம்; புரச விருட்சம். பிரம்மோற்சவம் மாசி மாசம். மானக்கஞ்சார நாயனர் தன் பெண்ணின் கூந்தலை அறுத்து சிவ யோகிக்குக் கொடுத்த ஸ்தலம். திருநாவுக்கரசு பாடல் பெற்றது.

கஞ்சீ—சென்னை ராஜதானி, கடலாடிக்கு 3-மயில் பொரூர் தாலூகா, சிவாலயம். ஸ்வாமி கரைகண்டேஸ்வரர்.

கட்டாக் பிரிவு—வங்காள ராஜதானி, இங்கு கீழ்கண்ட சிவாலயங்கள் உள. (1) சாடேஸ்வர் கட்டாக்குக் 12-மயில் வடகிழக்கு. சிவாலயம் 1119—1121-ஆம் ஆண்டுகளில் அங்கபீமதேவரால் கட்டப்பட்டது. (2) ஹரிஹர்பூர் சிவாலயம், ஸ்வாமி-சோமநாதர், பழய கோயில். (3) ஜெயபுரி அகண்டேஸ்வரர் கோயில். இங்கு அக்னேஸ்வரர் கோயில் என்று மற்றொரு சிவாலயம் உண்டு. இதில் லிங்கம் தினத்திற்கு நான்குமுறை வர்ணம் மாறுவதாக ஐதிகம். திரைலோசனேஸ்வர் கோயில் என்று இன்னொரு சிவாலயமுளது. (4) மஹாலிங்கயகர் மலை; இங்கு பரமசிவத்திற்கும் பார்வதிக்கும் மத்தியில் லிங்கயகர் இருக்கிறார். அருகாமையிலுள்ள நீர்வீழ்ச்சியின் அருகில் அஷ்டலிங்கங்கள் உள.

கட்மாண்டு—வட இந்தியா; நேபாளத்திலுள்ளது. சிவாலயம், ஸ்வாமி-பசுபதி; முகலிங்கம். பாலக்ஷா என்பவரால்

200-ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. கோயில் செங்கல்லி னலும் மரத்தினலுமாயது.

கடக்—நிஜாம் ராஜ்யம். சோமேஸ்வரர் கோயில்; சிகரத் தின் பெரும்பாகமும் கிழக்கு மண்டபமும் இடிந்துபோ யிருக்கிறது. மண்டபம் 21-அடி 10-அங்குலம் சதுரம். அந்தராளத்திற்கும் மண்டபத்திற்கும் இடையிலுள்ள பல கணி சாளுக்கிய சில்பமமைந்தது. கர்ப்பக்கிரஹம் 9-அடி 3-அங்குலம் சதுரம். இதற்கு பிரதட்சிண மார்க்கம் கிடை யாது. வாயில்களும் வெளிச் சுவர்களும் அழகிய வேலைப் பாடுள்ளவை. இக்கோயிலில் தற்காலம் பூசையில்லை. இது தற்காலம் ஒரு பள்ளிக்கூடமாக உபயோகிக்கப்பட்டு வருகிறது. இங்கு திரிகூடேஸ்வரர் கோயில் என்று ஒரு சிவாலயமுண்டு; இது இங்குள்ள பேட்டையிலிருக்கிறது. சாளுக்கிய சில்பம்; 3-சந்நிதிகளை யுடையது. இங்குள்ள ஒரு கல்வெட்டினல் இது 10-ஆம் நூற்றாண்டில் மராமத்து செய்யப்பட்டதாக தெரிகிறது. ஆகவே கோயில் அதற்கு முந்தியதாயிருக்க வேண்டும். பழய சிகரம் அழிந்துபோய் புதியதாக செங்கல் சிகரம் அமைக்கப்பட்டிருக்கிறது. (3) ராமேஸ்வரர் கோயில்; சாளுக்கிய சில்பம்.

கடத்தூர்—உடுமலைபேட் தாலுகா, கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம் பழயது; சோழ கட்டடம்.

கடகம்—சென்னை ராஜதானி, கஞ்சம் ஜில்லா சிவாலயம்.

கடப்பேரி—மதுராந்தகம் தாலுகா, செங்கல்பட்டு ஜில்லா சென்னை ராஜதானி; சிவாலயம். ஸ்வாமி-வேதாரண்யேஸ் வரர்; சோழ கட்டடம்; பல கல்வெட்டுகள் உள.

கடப்பை—மேற்படி ஜில்லா, சென்னை ராஜதானி, எம். எஸ். எம். ரெயில் ஸ்டேஷன்; சிவாலயம். ஸ்வாமி மஹா தேவர்; தேவி-பார்வதி; சிவ தீர்த்தம்.

கடம்பர்கோயில்—காஞ்சீபுரம் தாலுகா, செங்கல்பட்டு ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம். ஸ்வாமி-கடம்ப நாதேஸ்வரர், தேவி-ஆவுடைய நாயகி; காசி தீர்த்தம்; கடம்பர், கணவர் பூசித்த க்ஷேத்திரம். இங்குள்ள பல கல் வெட்டுகளில் ஸ்வாமி பெயர் கடம்பத்துறை உடையார் என்றிருக்கிறது.

கடம்பர்மலை—திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி, குளித்தலை ஸ்டேஷனுக்கு 1-மயில். சிவாலயம். இங்கு சிவலிங்கத்திற்கு அபிஷேகமாகும்போது எதிரில் சுப்பிரமணியருக்கும் அபிஷேகமாகிறது விசேஷம்.

கடம்பனூர்—தென் இந்தியா இடங்கழி நாயனார் பூசித்த க்ஷேத்திரம்.

கடம்பத்துறை—இதற்கு கடம்பர் கோயில் என்றும் பெயர் உண்டு. குளித்தலை ஸ்டேஷனுக்கு $1\frac{1}{4}$-மயில் வட மேற்கு. கண்வர் பூசித்த ஸ்தலம். ஸ்வாமி-கடம்பவன நாதேஸ்வரர்; தேவி-மூற்றிலாமுலையம்மை; காவிரி நதி ஞான தீர்த்தம்; கடம்பவிருட்சம்; வடக்கு பார்த்த சந்நிதி. சிவபெருமான் கடம்பவிருட்சத்தில் தோற்றியதாக ஐதிகம். திருநாவுக்கரசு சுவாமிகள் பாடல் பெற்றது.

கடம்பர்—மேலைக்கடம்பூர் எனவும் வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி மாம்புலியூருக்கு 4-மயில் மேற்கிலுள்ளது. இந்திரன் இங்கு அமிர்தம்வேண்டி ஸ்வாமியைப் பூசித்தனன். ஸ்வாமி-அமிர்தகடேஸ்வரர்; தேவி-ஜோதி மின்னம்மை; ஆதிதீர்த்தம்; அமுத தீர்த்தம்; திருஞான சம்பந்தர் அப்பர் பாடல் பெற்றது.

கடலாடி—வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம் ஒரு சிறு குன்றில் இருக்கிறது.

கடலி—கோதாவரி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். கபோதேஸ்வரர் கோயில்.

கடலுண்டி—மலபார் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்.

கடலூர்—கூடலூர் என்றும் வழங்கப்படுகிறது. இதுதான் சரியான பெயர்; கெடிலமும் தென்பெண்ணையும் கூடுமிடம்; தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன். சென்னை ராஜதானி; அர்த்தநாரீஸ்வரர் கோயில்; பிரம்மோற்சவம் பங்குனி மாசம். இங்கு முச்சாபர் பங்களா உண்டு, சத்திரமுமுண்டு. கடலூர்பழயபட்டணத்தில் காசி விஸ்வநாதர் கோயிலென்னும் ஒரு சிவாலயமுண்டு.

கடல்:—வட இந்தியா இதற்கு கடாட்சம் என்றும் பெயர்; ஸ்வாமி சிவகடாட்சம்; பூரணதேவி; நேத்திரசரஸ்.

கடையநல்லூர்—திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜதானி, கடையாலீஸ்வரர் கோயில்.

கடையூர்-திருக்கடையூர்—திருக்கடவூர் என்றும் சாதாரணமாக அழைக்கப்படுகிறது. சென்னை ராஜதானி மாயவரத்துக்கு 13-மயில் தென்கிழக்கு; அஷ்டலீரட்டான க்ஷேத்திரங்களிலொன்று. மார்க்கண்டேயருக்காக சிவ பிரான் லிங்கத்திலிருந்து உத்பவித்து யமனை உதைத்த க்ஷேத்திரம். இது கோயிலில் சிலையில் செதுக்கப்பட்டிருக்கிறது. குங்கிலியக்கலய நாயனார், காரிநாயனார் வசித்த க்ஷேத்திரம் ஸ்வாமி-அமிர்தகடேஸ்வரர், காலகாலதேவர்; தேவி-அபிராமியம்மை. சிவகங்கை தீர்த்தம், அமிர்த தீர்த்தம்; பில்வ விருட்சம். காலசம்ஹாரமூர்த்திக்கு பிரத்யேக சந்நிதியுளது. பிரம்மோற்சவம் சித்திரைமாசம்; காலசம்ஹார உற்சவம்விசேஷம். கார்த்திகைமாசம் கங்காபிஷேகம். கோபுரம் 7-நிலைகள் உடையது. மூவர் பாடல்பெற்றது. ஆயிரவருடங்களுக்கு முற்பட்ட கல்வெட்டுகள் உள. இங்குள்ள சிறு சிவாலயங்கள்-கூத்தாடு தேவர் கோயில், குலோத்துங்க சோளீஸ்வரர் கோயில், விக்ரமசோளீஸ்வரர் கோயில். இங்குள்ள ராய கோபுரத்திற்கு மூனீஸ்வரர் கோபுரம் என்று பெயர். இங்குள்ள 150-கால் மண்டபம் அழகியது. இங்கு யமதர்மனுக்கு புதிதாய் கோயில் கட்டப்பட்டுள்ளது; தர்மபுர ஆதீனம் மேற் பார்வை.

கடவூர்மயானம்—மயானம், திருக்கடவூர் மயானம், என்றும் அழைக்கப்படுகிறது. திருக்கடையூருக்கு 1-மயில் தெற்கிலுள்ளது. பிரம்மா சிவபெருமானைப் பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமி-பிரமபுரீஸ்வரர்; தேவி-மலர்க்குழல் பின்னம் பிகை. காசி தீர்த்தம்; மூவர் பாடல் பெற்றது. பங்குனி மாசம் இங்குள்ள திருக்குளத்தில் காசி கங்கை வருவதாக ஐதிகம். சிவபெருமான் பிரமதேவரை நீறுக்கி மறுபடியும் சிருஷ்டித்த ஸ்தலம்.

கடிக்குளம்—சென்னை ராஜதானி, கற்பகனார் கோயில் எனவும் அழைக்கப்படுகிறது. திருத்தரு பூண்டிக்கு $10\frac{1}{2}$-மயில் தென்கிழக்கு, இடுப்பாவனத்திற்கு 1-மயில் கிழக்கு விஜயகர் பந்தயத்தில் மாம்பழத்தை வென்ற க்ஷேத்திரம். ஸ்வாமி-கற்பகேஸ்வரர், தேவி-சௌந்தர நாயகி. விஜயகர் தீர்த்தம்; திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

கடுவாய்க்கரைபுத்தூர்—(திரு)தற்காலம் ஆண்டார் கோயில் என வழங்கப்படுகிறது. காசிபரிஷி பூசித்த ஸ்தலம் சென்னை ராஜதானி, நீடாமங்களம் ஸ்டேஷனிலிறங்கி 11-மயில் போகவேண்டும். சாத்தமங்கைக்கு 4-மயில் மேற்கு; காஸ்யபர் பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமி-சுவர்ண புரீஸ்வரர்; தேவி-சிவாம்பிகை. அப்பர் பாடல்பெற்றது.

கடைமுடி—கீழூர், கீழையூர் எனவும் பெயர் பெற்றது. ஆனைதாண்டவபுரத்திற்கு 6-மயில் வடகிழக்கிலுள்ளது. பிரம்மா, லட்சுமி பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமி-கடைமுடி நாதேஸ்வரர்; தேவி-அபிராமியம்மை. கடைமுடி தீர்த்தம்; திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது.

கண்டசாலா—பந்தர் தாலுகா கிருஷ்ணா ஜில்லா, சென்னை ராஜதானி. இங்கு இரண்டு சிவாலயங்கள் உள. (1) ஜலகேஸ்வர ஸ்வாமி கோயில், விஸ்வேஸ்வர ஸ்வாமி கோயில்.

கண்டலாரா—கார்கல் தாலுகா, தென்கன்னட ஜில்லா சென்னை ராஜதானி; காந்தேஸ்வரர் கோயில்; சோழ கட்டிடம்; பல கல்வெட்டுகள் உள.

கண்டலூர்—கடப்பை ஜில்லா, சென்னை ராஜதானி. சங்கமேஸ்வர ஸ்வாமி கோயில்; கிலமாயிருக்கிறது.

கண்டியூர்—தஞ்சாவூர் ஜில்லா, தஞ்சாவூருக்கு 6-மயில் வடக்கு, திருவையாறுக்கு 1-மயில்; சென்னை ராஜதானி; அஷ்ட வீரட்டான ஸ்தலங்களில் ஒன்று. பிரமன் சிரம் கொய்த தலம். ஸ்வாமி, வீரட்டானேஸ்வரர்; தேவி மங்கள நாயகி; காவிரி நதி. சப்த ஸ்தானத்து க்ஷேத்திரங்களில் ஐந்தாவது ஸ்தானம். பிரம்மோற்சவம் வைகாசி மாதம்; மூத்துப் பல்லக்கு உற்சவம் விசேஷம். கோயில் மேற்கு பார்த்தது, பழய கோயில்; இங்கு பல கல்வெட்டுகள் உள. கோயிலில் சில சாளுக்கிய சில்பங்களும் இருக்கின்றன. கொய்யப்பட்ட பிரமன் தலை சந்திரசேகரர் ஆலயத்திலிருக்கிறது. திருஞானசம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. இங்கு கிழக்குபார்த்த கோயில் ஒன்று இருக்கிறது. அந்த ஸ்வாமிக்கு பிரம சிர கண்டகர் என்று பெயர்.

கண்டனூர்—சென்னை ராஜதானி, செட்டிநாடு. சிவஸ்தலம்; ஸ்வாமி சுந்தரேஸ்வரர், தேவி மீனாட்சியம்மன்; பிரம்மோற்சவம் ஆனி மாதம்.

கண்டியூர்—இப் பெயர்கொண்ட ஒரு ஊர் திருவாங்கூர் ராஜ்யத்திலுள்ளது, சிவாலயம். மலையாள தேசத்தில் இது ஒரு பிரபலமான சிவஸ்தலம்.

கண்டீஸ்வரம்—சென்னை ராஜதானி நந்திலம் ஸ்டேஷனுக்கு $1\frac{1}{8}$-மயில் மேற்கு; சிறிய கோயில். கோயிலின் மூன்று பக்கங்களில் அகழ் இருக்கிறது, மஹாமண்டபத்தில் கல்வெட்டுகள் உள. உமை பசுவாக பரமசிவத்தைப் பூசித்தபடியால் கோயிலுக்கு பசுபதீஸ்வரம் என்று பெயர். லிங்கத்தில் பசுவின் கொம்பு முட்டின வடுவுளது. சுயம்பு லிங்கம். கோயில் விமானம் தஞ்சாவூர் கோயில் விமானத்தைப்போன்றது. பழய சோழ கட்டடம்.

கண்டுகோல்—தார்வார் ஜில்லா ஜயகண்டிஸ்டேட்டில் உள்ளது. பெங்களூர் பூனரெயில் மார்க்கத்திலுள்ள ஸ்டேஷன். சிவாலயம், சம்புலிங்கம் கோயில். கோயில் சுண்ணாம்பிலலாமல் கட்டப்பட்டது. சிலபாகம் அந்நிய மதஸ்தர்களால் அழிக்கப்பட்டிருக்கிறது. இங்கு ஸ்ரீராமர் இலட்சுமணர் சீதை முதலியவர்கள் சிலைகள் இருக்கின்றன. சிலகாலம் வைஷ்ணவ ஆலயமாயிருந்து பிறகு சிவாலயமாக மாற்றப்பட்டதென கல்வெட்டுகள் துணை எண்ணுகிறார். இங்குள்ள பிராம்மணர்கள் ஆதியில் இது ஜைன ஆலயமாயிருந்ததெனக் கூறுகிறார்கள்.

கண்ணன்குடி—ராம்நாட் ஜில்லா, சென்னை ராஜதானி மிகவும் பழய சிவாலயம். 651-ஆம் ஆண்டில் கரிகாலச் சோழனல் கட்டப்பட்டது. சோழ கட்டிடம்.

கண்ணபுரம்—சென்னை ராஜதானி சிவாலயம்; ஸ்வாமி திருவீர மண்டீஸ்வரமுடையார். செங்கல் கட்டிடம் 900 வருஷங்களுக்கு முற்பட்ட கோயில்.

கண்ணனூர்—தென் இந்தியா; மலையாள தேசம் சிவாலயம்.

கண்ணனூர்—ஸ்ரீரங்கத்திற்கு அருகிலுள்ளது, திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி, ஹொய்சாலேஸ்வரர் கோயில், போஜனீஸ்வரர் கோயில் என்றும் அழைக்கப்படுகிறது. கல்வெட்டுகளில் போஜனீஸ்வரமுடைய நாயனார் என்று ஸ்வாமி பெயர் இருக்கிறது. இவ்வூருக்கு பழய பெயர் விக்ரமபுரம். ஹொய்சல அரசர் வீரசோமேஸ்

வரரால் கட்டப்பட்டது. (1234-1254) பல கல்வெட்டுகள் உள.

கண்ணவரம்—கோதாவரி ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம். இங்குள்ள சிவலிங்கம் கருடனுல் நருமதை யாற்றிலிருந்து கொண்டுவரப்பட்டதாக ஐதிகம்.

கண்ணன்குடி—புதுக்கோட்டை சமஸ்தானம், சென்னை ராஜதானி, இங்கு கிலமாய்ப்போன ஒரு சிவாலய மிருக்கிறது.

கண்ணூர்கோயில்—இதற்கு குருமாணக்குடி என்றும் பெயர், சென்னை ராஜதானி வைதீஸ்வரன் கோயிலுக்கு 2-மயில் மேற்கு. வாமனவதார விஷ்ணு பூசித்த இடம். இந்திரன் சாபம் நீங்கி 1000 கண்கள் பெற்ற ஸ்தலம்; எனவே கண்ணூர் கோயில் எனப் பெயர்பெற்றது. ஸ்வாமி-கண்ணுயிரேஸ்வரர், தேவி முருகுவளர் கோதையம்மை. இந்திரதீர்த்தம்; மணிகர்ணிகை. திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

கண்ணபதி—சென்னை ராஜதானி, மதுரை ஜில்லா, இதற்கு பறியா பருத்துப்பட்டி என்றும் பெயர். சிவாலயம் ஸ்வாமி பறியா மருத்தீசர்; தேவி உமை-சர்வாநந்த தீர்த்தம் வைப்புஸ்தலம்.

கணபதி பாளயம்—கோயமூத்தூர் ஜில்லா, தாராபுரம் தாலுகா சென்னை ராஜதானி, பழய சிவாலயம். பல கல்வெட்டுகள் உள.

கணுபக்தி—வங்கோல் தாலுக்கா குண்டூர் ஜில்லா, சென்னை ராஜதானி, இங்கு ஒரு சிவாலய மூண்டு.

கணேசஸ்தானம் — வட இந்தியா அயோத்திக்கருகி லுள்ள சிவாலயம். ஸ்வாமி ராமநாதர்; தேவி பர்வதராஜ புத்ரி. இங்கு கணேசர் பூசை முக்கியம்.

கத்தேவார் பிரிவு—வடமேற்கு இந்தியா, இப்பிரிவில் அடியிற்கண்ட சிவாலயங்கள் உள. (2) பாட்டனங் சிவாலயம் ஸ்வாமி-பீம்நாத்; பிரமனுல் பிரதிஷ்டை செய்யப்பட்ட லிங்கம் (2) முஸ்துவார்கா சிவாலயம் ஸ்வாமி ருத்ரேஷ்வர். இதற்கு ருத்திரகயா என்று பெயர். (3) கிரான்கச் இங்கு ஒரு சிறு கிணற்றில் ஒரு சிறு சிவாலயமுண்டு. இதற்கு எதிரில் நந்தியுண்டு (4) கோய்லி சிவாலயம். ஸ்வாமி திரி

நேத்ரர்; இக்கோயில் 1265-ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. (5) காம்பிடா சிவாலயம் (6) ஹதாப் சிவாலயம், ஸ்வாமி நீலகண்ட மஹாதேவ். ஆற்றின் முகத்துவாரத்தில் மற்றொரு சிவாலயமுண்டு, ஸ்வாமி நிஷ்களங்கமஹாதேவ் (7) கோப்நாத் சிவாலயம், ஸ்வாமி யேக்நாத் மஹாதேவ் (8) கேலா சோம்நாத், இங்கு சிவாலயத்திலுள்ள சிவலிங்கம் பாடன் சோம்நாத்தி லிருந்துகொண்டு வாப்பட்டதென்பர்; ஸ்வாமி சோம்நாத் (9) பிராசிகுண்ட் சிவாலயம், ஆற்றின் கரையி லுள்ளது. ஸ்வாமி பாதேஷ்வர் மஹாதேவ்; இங்குள்ள லிங்கம் மிகவும் பெரியது. சந்ததி இல்லாத ஸ்திரீகள் இதை ஆலிங்கனம் செய்துகொள்வது வழக்கம். (9) பிண்டாரா சிவாலயம். ஸ்வாமி கபாலமோட்ச மஹாதேவ், மோக்ஷேஸ்வர் மஹாதேவ். அகஸ்திய தீர்த்தம் (10) சிஹோர் சிவாலயம்; ஸ்வாமி கௌதமேஷ்வர் மஹாதேவ். நீலகண்டேஷ்டர் கோயில் என்று மற்றொரு சிவாலயமு முண்டு இவ்விடம் (11) தீமானு சிவாலயம். ஸ்வாமி பிர்த்விதி வேஷ்வரர் (12) த்ராங்கடரா சிவாலயம். ஸ்வாமி கோலேஷ் வரர் (13) தாம்லேக் சிவாலயம்; சோம்நாத் மஹாதேவர். அன்றியும் ½-மயில் தூரமுள்ள ஒரு குகையில் தானேஷ்வர் மஹாதேவர் சிவாலயமிருக்கிறது. (14) சோகட்; இங்கு ஒரு சிறு குன்றின்மீது ஒரு சிவாலய முண்டு. ஸ்வாமி-தாபநாத் மஹாதேவர் (15) பிலேஷ்வர் சிவாலயம் ஸ்வாமி-பிலேஷ்வர் ஸ்ரீ கிருஷ்ணபகவானால் ஸ்தாபிக்கப்பட்ட லிங்கம் என்பர். சிவராத்திரி விசேஷம். (16) பன்வாட் சிவாலயம். ஸ்வாமி சித்திகேஷ்வர் மஹாதேவர் (17) பாலாசரி சிவாலயம், சமுத் திரக் கரையோரம் உள்ளது. ஸ்வாமி மாலேஷ்வர் (18) கோடினர் சிவாலயம் ஸ்வாமி கோடேஷ்வர் மஹாதேவ் (19) ஆந்தாலியா சிவாலயம் ஸ்வாமி அந்தாளேஷ்தர். சுயம்பு லிங்கம் என்பர் (20) ஆநந்தபூர் சிவாலயம்-ஸ்வாமி ஆநந் தேஷ்வர்; கோயில் 1124-ஆம் ஆண்டில் கட்டப்பட்டது.

கதிரி—மங்களூர் தாலூகா, சென்னை ராஜதானி, தென் கென்னட ஜில்லா, சிவாலயம் மங்களூருக்கு 2½-மயில்; ஸ்வாமி லோகேஷ்வரர்.

கதிரி—அநந்தபூர் ஜில்லா சென்னை ராஜதானி; இங் குள்ள விஷ்ணு ஆலயத்தின் பிராகாரத்தில் வீரபத்திர ஸ்வாமி கோயில் இருக்கிறது. அன்றியும் அருகாமையில் மற்றொரு

சிவாலயமே மிருக்கிறது. மகம்மதியர்கள் கலக காலத்தில் இவ்விரண்டு கோயில்களின் விக்ரஹங்கள் வேறொரு இடத்தில் பாதுகாப்புக்காக வைக்கப்பட்டு, பிறகு கோயில்களில் கொண்டுவந்து பிரதிஷ்டை செய்தபொழுது ; அம்மன் விக்ரஹங்கள் மாறுபாடாய் வைக்கப்பட்டன. ஆகவே சிவாலயத்தில் லட்சுமியும், விஷ்ணு ஆலயத்தில் பார்வதியும் பிரதிஷ்டை செய்யப்பட்டன. தற்காலமும் அப்படியே அவைகளுக்கு பூஜை நடந்தேறி வருகிறது.

கந்தர்வ கோட்டை—சென்னை ராஜதானி தஞ்சாவூர் ஜில்லா, சிவாலயம் ; ஸ்வாமி ஆபத்சகாயர். தஞ்சாவூருக்கு 18-மயில. இதற்கு கண்டரக்கோட்டை என்றும் பெயர்.

கந்தமாதனம் — இந்தியாவின் தென்கோடியிலுள்ளது. சிவாலயம், சுயம்பு லிங்கம்-பூர்புவர், தனுஷ்கோடி தீர்த்தம்.

கபிலமலை—நாமக்கல் தாலூகா சென்னை ராஜதானி. சிவாலயம், கபிலர் பூசித்தது. இங்குள்ள மண்டபங்கள் நாயக்க அரசர்கள் காலத்தில் கட்டப்பட்டனவாம்.

கம்படூரு—கல்யாண துர்க்கம் தாலூகா, அநந்தபூர் ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம், சளுக்கிய கட்டிடம் ; கோயில் இடிந்திருக்கிறது. பூர்வத்தில் ஜைன ஆலயமாயிருந்து மாற்றப்பட்டதாக எண்ணப்படுகிறது.

கம்பயநல்லூர்—ஊத்தங்கரை தாலூகா, சேலம் ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம் - ஸ்வாமி - தேசிநாயகர். சோழக் கட்டிடம். கல்வெட்டுகள் உள.

கமலாபுரம் — தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன் சிவாலயம்.

கம்பில்—வட இந்தியா சிவாலயம், ஸ்வாமி பரமேஸ்வரர் பார்வதிதேவி ; கங்கைநதி ; கபிலர் பூசித்தது.

கம்பிளியூர்—தென் இந்தியா சிவாலயம். நமசிவாய நாயனர் பூசித்த ஸ்தலம்.

கயத்தாறு—(கஜநதி) திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்.

கயாக்கரை—சென்னை ராஜதானி தஞ்சாவூர் ஜில்லா சிவாலயம் ; ஸ்வாமி ராமலிங்கேஸ்வரர்.

கயாபிரிவு—வட இந்தியா வங்காள ராஜதானி. இங்கு கீழ்கண்டை சிவாலயங்கள் உள. (1) பக்ரார் மாதங்கேஷ்வர் கோயில் (2) ராமசிவா இக்குன்றில் ஒரு சிவாலயமுண்டு ஸ்வாமி - பாதாளேஷ்வர் மஹாதேவ், தேவி - பார்வதி. கோயில் 1014-ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. (3) கோன்ச் தேகளிக்கு 4-மயில் சிவாலயம், ஸ்வாமி சிவகொச்சேஸ்வரர் (4) கயாபட்டணம், சிவாலயம் சுயம்பு லிங்கம். ஸ்வாமி பிரபிதாமஹர்-கதாதர்; ஊர் ஸ்டேஷனிலிருந்து 3-மயில்; ஸ்டேஷனுக்கு ½-பர்லாங்கில் தர்மசாலையுண்டு.

கரம்பனூர்—சென்னை ராஜதானி இதற்கு உத்தமர் கோயில் என்றும் பெயர். சிவாலயம் இங்கு பிரம்மாவுக்கும் மஹாவிஷ்ணுவுக்கும் சந்நிதிகள் உண்டு.

கர்ணக்கிர்ஹம்—பாகல்பூர் ஜில்லா, வங்காள ராஜதானி, பாகல்பூர் பட்டணத்திற்கு அருகாமையிலுள்ளது. இங்கு ஒரு குன்றில் 4 சிவாலயங்களுண்டு; அவைகளில் ஒன்று நர்மதைக் கரையிலிருந்து கொண்டுவரப்பட்ட சலவைக்கல்லால் ஆயது. பாரத வீரனாகிய கர்ணன் பூசித்த ஸ்தலம் என்பர்; இங்கு 3 பெரிய தர்மசாலைகளுண்டு.

கர்ணிகாரம்—வட இந்தியா; சிவாலயம், ஸ்வாமி கஜாத்யட்சர். சுயம்புலிங்கம்.

கர்முக்தேஷ்வர்—வட இந்தியா; மீரட்ஜில்லா, அயோத்யா ரோஹில்கண்ட் ரெயில்வே; டில்லி பிரிவில் ஸ்டேஷனிருக்கிறது. மீரட் ஸ்டேஷனிலிருந்து 2 மயில். சிவாலயம்; ஸ்வாமி முக்தேஷ்வர் மஹாதேவ்; கங்காதீர்த்தம்; தர்மசாலைபுண்டு.

காவீரம்—வட இந்தியா; சிவாலயம், சுயம்புலிங்கம்; ஸ்வாமி க்ருதலிங்கேஷ்வரர்.

கரவிரம் — திருக்கரையபுரம் என்றும் வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி, குளித்தலை ஸ்டேஷனுக்கு 5 மயில் வடமேற்கு; கௌதமர் பூசித்த ஸ்தலம். ஸ்வாமி கரவீரேஸ்வரர், தேவி, பிரத்யட்ச மின்னம்மை. அனவரத தீர்த்தம்; திருஞானசம்பந்தர் பாடல்பெற்றது.

கர்னூல்—சென்னை ராஜதானி, கர்னூல் ஜில்லா. சிவாலயம்.

கரன்—பிரயாக். வட இந்தியா ஹரித்துவார் ரெயில் ஸ்டேஷனுக்கு அருகிலுள்ளது. சிவாலயம்; ஸ்வாமி, உமேஸ்வர், தேவி பார்வதி. தீர்த்தங்கள், கங்கை; அளக நந்தாநதி.

கரிமங்கலம்—தென் இந்தியா தாராபுரத்திற்கு அருகி லுள்ளது. சிவாலயம், ஸ்வாமி; அருணேஸ்வரர்.

கரிவல் நல்லூர்—கரிவலம் வந்தநல்லூர், கருவை நல்லூர் என்றும் வழங்கப்படுகிறது. தென் இந்தியா சிவாலயம், கோவில்பட்டிக்கு 29 மயில். ஸ்வாமி, பால்மணத்தேஸ் வரர், தேவி, ஒப்பிலா நாயகி. குலசேகர பாண்டியன், திக் பாலர்கள் பூசித்த ஸ்தலம்.

கருக்குடி—திருக்கருக்குடி, மருதாந்த நல்லூர் எனவும் பெய ருண்டு. சென்னை ராஜதானி, கும்பகோணத்திலிறங்கி $7\frac{1}{2}$ மயில் போகவேண்டும். பிரமன், விஸ்வாமித்ரர், மார்க்கண் டர் முதலியோர் பூசித்த ஸ்தலம். இங்கு ஓர் வணிகன் அபுத்தி பூர்வகமாய் மாதுர்கமனம் செய்த தோஷம் நீங் கப்பெற்ற ஸ்தலம். அவனது உருவம் தேவி சந்நிதியி லிருக்கிறது. ஸ்வாமி, சற்குணநாதர்; தேவி, சர்வாலங் கிருத மின்னம்மை. ஏம தீர்த்தம், லிங்கம் சைகதம். திரு ஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

கருகாவூர்—திருக்கருகாவூர், திருக்களாவூர் என்றும் பெய ருண்டு. சென்னை ராஜதானி பாபநாசம் ஸ்டேஷனுக்கு 4 மயில் தெற்கு. அம்பிகை மருத்துவதியாகி உதவிய க்ஷேத்திரம், கருவைக் காத்தபடியால் கருகாவூர் என்று பெயராயிற்றென்பர். சந்திரன் பூசித்த ஸ்தலம். சிவா லயம், ஸ்வாமி முல்லைவனேஸ்வரர்; தேவி, கரும்பனவல்லி யம்மை; பிரமதீர்த்தம். திருஞானசம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

கருகுபில்லி—(கருகு மல்லி) விசாகப்பட்டணம் ஜில்லா சென்னை ராஜதானி, சிவாலயம் குகைக்குள் இருக்கிறது. கார்த்திகை மாசம் மாத்திரம்தான் சிவபூஜையுண்டு.

கருங்குயில்நாதன்பேட்டை—சென்னை ராஜதானி, தஞ்சா வூர் ஜில்லா; சிவாலயம் ஸ்வாமி சக்திபுரீஸ்வரர், கருங்குயில் தீர்த்தம்; தர்மபுர ஆதீனத்தின் மேற்பார்வையிலடங்கியது.

கருங்குடி—திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜதானி இங்கு விஷ்ணு ஆலயத்தில் ஒரு சிவாலயமுண்டு. ஸ்வாமி பக்கல்நின்றார்; இக்கோயிலில் பாண்டியன் மாரன் சடையனது கல்வெட்டிருப்பதால் சுமார் 1000-வருடங்களுக்கு முற்பட்டதெனக் கூறலாம்.

கருணம்பேட்டை—சென்னை ராஜதானி தஞ்சாவூர் ஜில்லா; இதற்கு கருணைபுரி என்றும் பெயர். மாயவரத்திற்கு அருகிலுளது. சத்த மாதாக்களுள் ஒருத்தியாகிய மஹேஸ்வரி பூசித்தது.

கருணேஸ்வரர்கோயில்—மத்திய இந்தியா, நிஜாம் ராஜ்யம்; தௌலதாபாத் ஸ்டேஷனிலிருந்து 10-மயில் தூரம். வட இந்தியா 12 ஜோதி லிங்கங்களுள் ஒன்று இங்கு உளது.

கருந்தட்டான்குடி—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி தஞ்சாவூரில் ஒருபாகம். ஸ்டேஷனிலிருந்து 1-மயில் சிவாலயம் ஸ்வாமி வசிஷ்டேஸ்வரர், தேவி பெரியநாயகி; கோயில் சோழகட்டிடம். வசிஷ்ட தீர்த்தம் இதில் மூழ்கினால் விஷக்கடி தீருமென்பர். தேவார வைப்புஸ்தலம்.

கருப்பரியலூர்—மேலைக்காழி என்றும் தலைஞாயிறு என்றும் பெயருண்டு. சென்னை ராஜதானி, வைதீஸ்வரர் கோயிலிலிறங்கி 5-மயில் போகவேண்டும். சிவாலயம்; இந்திரனுடைய குற்றத்தைப் பொறுத்தபடியால் சுவாமிக்கு குற்றம்பொறுத்த நாதேஸ்வரர் என்று பெயர், தேவி கோல்வளை நாயகி, தீர்த்தம் இந்திர தீர்த்தம், சூரிய தீர்த்தம்; திருஞானசம்பந்தர் சுந்தரர் பாடல்பெற்றது.

கரும்பாடு—தென் இந்தியா சிவாலயம்; ஸ்வாமி நாதத் தேஸ்வரர், தேவி ஞானப்பிரசன்னாம்பாள்; திரிசூல தீர்த்தம்.

கருப்பூர்—இது மிஞ்சக்குப்பூர் என்றும் அழைக்கப் படுகிறது. தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி கும்பகோணத்திற்கு 3-மயில் சிவாலயம்; ஸ்வாமி அமிர்தேஸ்வரர் தேவி அபிராமி அம்மன்; சூரிய தீர்த்தம்.

கருவிலி—சென்னை ராஜதானி, திருவெண்ணீயூருக்கு 2-மயில் தென்மேற்கு ஆடுதுறையிலிருந்து 8½-மயில்; இந்திரனும் தேவர்களும் பூசித்த க்ஷேத்திரம், சற்குணன் எனும்

அரசன் பூசித்து முத்திபெற்ற ஸ்தலம். ஸ்வாமி சற்கு ணேஸ்வரர், தேவி சர்வாங்க நாயகி; ஆலயத்திற்கு கொட் டிட்டை என்று பெயர்.

கருவூர் ஆநிலை—திருஆநிலை என்றும், கருர் எனவும் பெயருண்டு. இதற்கு பாஸ்கர க்ஷேத்திரம் என்றும், மூடி வழங்கு சோழபுரம் என்றும் பெயர் உண்டு. பிரளயத் திற்குப் பிறகு உலகினைச் சிருஷ்டிக்க பிரமதேவர் இவ்வூ ரில் கரு உற்பத்தி செய்தபடியால் கருவூர் என்று பெயர் வந்ததாம். இவ்வூருக்கு ஆதிபுரி என்றும் பெயர் உளது. காமதேனு பூசித்தபடியால் ஆநிலையென்று பெயர்பெற் றது. சிவாலயத்திற்கு ஆநிலை என்று பெயர். புகழ்ச் சோழநாயனருடைய ராஜதானி; சிவகாமியாண்டார் இருந்த இடம். எரிபத்த நாயனர் முத்தியடைந்த ஸ்தலம், திருவி சைப்பா பாடிய கருவூர்த்தேவர் அவதரித்து முத்தியடைந்த ஸ்தலம்; இவருக்கு கோயிலில் சந்நிதியுண்டு. ஸ்வாமி பசு பதீஸ்வரர் அல்லது கல்யாண பசுபதீஸ்வரர், தேவி கிருபா நாயகி, அலங்காரவல்லி, சௌந்தரநாயகி. ஆம்பிராவதி தீர்த்தம், காம தீர்த்தம், தாடகை தீர்த்தம், முருக தீர்த்தம், அரசதீர்த்தம், தேனு தீர்த்தம் என 6-உண்டு. பழய ஆல யம்; 1000-வருடத்திற்கு முற்பட்ட கல்வெட்டுகள் இங்கு உண்டு. இவ்வூரில் 5 லிங்கங்கள் விசேஷம். பசுபதி லிங்கம் ஆநிலைக்கோயிலிலுள்ளது. வஞ்சுளேஸ்வரர் லிங்கம் வஞ்சு ரேஸ்வரர் ஆலயத்திலுள்ளது. கோடீஸ்வர லிங்கம் கோடீஸ் வரர் ஆலயத்திலிருக்கிறது, கைலாசநாதலிங்கம், கரியமாலீசர் லிங்கம் இரண்டும், பசுபதீஸ்வரர் கோயிலிலுள்ளன தற்கா லம். ஆநிலைக்கோயிலில் புகழ்ச்சோழருடைய சிலையும், அவரது யானையின் சிலையும் இருக்கின்றன. பசுபதீஸ்வரர் கோயிலில் இரண்டு அம்மன் சந்நிதிகள் உள. அலங்கார வல்லி, சவுந்தரநாயகி. இக்கோயில் 1906-ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்டு நாட்டுக்கோட்டை செட்டிமார்களால் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இங்குள்ள லிங்கம் 5 அடி உயரம்; பசுவின் கொம்புபட்ட வடு இதில் இருக்கிறது. கோயிலில் பல கல்வெட்டுகள் உள. இங்கு முன் கூறிய படி, வஞ்சுரேஸ்வரர் கோயில் என்று மற்றொரு சிவாலய மூண்டு. இதற்கு அருகிலுள்ள வெண்ணெய் மலையில் விஸ்வநாதர்-விசாலாட்சி ஆலயம் உண்டு, கருவூரில் முசாபர் பங்களா உண்டு. பிரம்மோற்சவம் பங்குனிமாதம்.

கரூர்—திருக்கரூர், திருவாங்கூர் ராஜ்யத்தில் இப் பெயர்கொண்ட ஊரில் ஒரு சிவாலயமுளது.

கருப்பத்தூர்—திருச்சிராப்பள்ளி ஜில்லா சென்னை ராஜ தானி, சிவாலயம்.

கரையூர்—திருமெய்யம் தாலுக்கா புதுக்கோட்டை சமஸ்தானம். புதுச்கோட்டைக்கு 15-மயில், பழய சிவால யம்.

கரையேறவிட்ட நல்லூர்—தென் இந்தியா நடு நாட்டு சிவாலயம். ஸ்வாமி காந்த நாதேஸ்வரர்; கடில தீர்த்தம். மாணிக்கவாசகருககு சிவபெருமான் கரையேற வழி காட் டிய ஸ்தலம்.

கரோட்—பிலாஸ்பூர் ஜில்லா, மத்திய மாகாணம். சிவா லயம் பாழாயிருக்கிறது.

கல்கத்தா—வட இந்தியா ரெயில்வே, ஹௌராஸ் டேஷன், வங்காள ராஜதானி; இங்கு கித்தேர் பஜாருக்குப் போகும் வழியில் பூகைலாஸ் எனும் சிவாலயம் உளது; சிவராத்திரி விசேஷம். இங்கு ஹௌராஸ்டேஷ னருகில் ஒரு தர்மசாலையுண்டு. இன்னும் பல சத்திரங்களும் உள. இங்கு தாரகேஷ்வரர்கோயில் என்னும் மற்றொரு சிவாலயம் ஹாக்லியருகில் உள்ளது.

கல்குளம்—திருவாங்கூர் ராஜ்யம் சிவாலயம்; ஸ்வாமி நீலகண்டர்.

கல்பாத்தி—சென்னை ராஜதானி பாலக்காடு தாலுகா மலபார் ஜில்லா, கல்பாத்தி எனும் நதிக்கரையிலுள்ளது. சிவாலயம் பெரியது. கொல்லம் ஆண்டு 640-இல் காசியி லிருந்து ஒரு பிராம்மணஸ்திரீ லிங்கத்தைக் கொண்டுவந்து இங்கு பிரதிஷ்டை செய்தனள். கோயில் மலையாளத்தி லுள்ள கோயில்களைப்போல் ஓடுகள்வேய்ந்த கூரைகளை யுடையது. கோயில் பெரும்பாலும் மரத்தாலாயது. இங்கு ரதோற்சவம் விசேஷம்.

கல்யாண்—மேற்கு இந்தியா பம்பாய்க்கு அருகிலுள் ளது, ரெயிலஸ்டேஷன் அமபர்நாத் கோயில்; சுமார் 1060 ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. 84 × 61 அடி விஸ்தீரணம் கர்ப்பக்கிரஹம் தரைமட்டத்திற்கு 7-அடி கீழே இருக் கிறது, 13-அடி சதுரம். கோயில் வட இந்திய ஆரிய சில்பம்; பாழாயிருக்கிறது.

கல்லல் — சென்னை ராஜதானி திருப்புத்தூருக்கு 8 மயில் சிவாலயம், ஸ்வாமி சோமசுந்தரேஸ்வரர், தேவி சௌந்தரநாயகி.

கன்யாணகிரி—வட இந்தியா, இமயமலைச் சாரலி லுள்ளது. சிவாலயம் ஸ்வாமி கல்யாணேஸ்வரர், பார்வதி தேவி, பார்வதி கல்யாணமான ஸ்தலம்.

கல்லிடைக்குறிச்சி—அம்பாசமுத்திரம் தாலூகா, திருநெல் வேலி ஜில்லா சென்னை ராஜதானி ரெயில்ஸ்டேஷன் நாகேஸ்வரமூடையார் கோயில்; ஸ்வாமிக்கு மானேந்தி யப்பர் என்றும் பெயருண்டு.

கலக்காடு—திருநெல்வேலி ஜில்லா, நாங்குநெறி தாலூகா சென்னை ராஜதானி, சிவாலயம் ஸ்வாமி சத்யவாகீஸ்வரர். திருவாங்கூர் வீரமார்த்தாண்ட அரசரால் கட்டப்பட்டது. பிரம்மோற்சவம் வைகாசிமாதம்; இதில் நான்காம்நாள் உற்சவம் ஒரு அன்னிய மதஸ்தரால் செய்யப்படுகிறது.

கலக்குடி—திருக்கலக்குடி தென் இந்தியா, சிவாலயம் ஸ்வாமி சகல புவனேஸ்வரர், தேவி உமை, பத்மதீர்த்தம்; நளாயினி பூசித்த ஸ்தலம்.

கலகடா—மதனபல்லி தாலூகா சென்னை ராஜதானி சித்தேஷ்வர் கோயில்.

கலப்பல் — திருத்தருபூண்டி தாலூகா தஞ்சாவூர் ஜில்லா சென்னை ராஜதானி, சிவாலயம் ஸ்வாமி அழகிய நாத ஸ்வாமி, இங்கு கைலாசநாதர் கோயில் என்று ஒரு சிவாலயமு முளது.

கலப்பூர்—திருக்கலப்பூர், உடையார்பாளையம் தாலூகா திருச்சிராப்பள்ளி ஜில்லா சென்னை ராஜதானி, சிவாலயம் ஸ்வாமி கொடிவன ஸ்வாமி; கோயில் சோழக் கட்டடம். கல்வெட்டுகள் உள.

கலயநல்லூர் — திருக்கலயநல்லூர், சாய்க்கோட்டை, எனவும் பெயர் உண்டு, கும்பகோணத்திற்கு ½-மயில் தூரத் திலிருக்கிறது. சென்னை ராஜதானி, பிரளயகாலத்தில் அழியாது காப்பற்றப்பட்ட ஸ்தலம்; ஸ்வாமி அமிர்தகலேஸ் வரர் தேவி அமிர்தவல்லி, நால்வேத தீர்த்தம், சுந்தரர் பாடல்பெற்றது, தேவர்கள் அமிர்தகலசம் பெற்ற களிப் பால் பூசித்த ஸ்தலம்.

கல்வகுண்டா—சென்னை ராஜதானி சித்தூர் ஜில்லா, சித்தூருக்கு 5-மயில் தூரம்; மூக்கண்டீஸ்வரர் கோயில், அரர்கொண்டா பொன்னையாறு சங்கமத்தில் கோயில் உளது. இங்கு ஒரு கற்பாறையில் சிவபெருமான் பாதச்சுவடு பொறிக்கப்பட்டிருக்கிறது. கோயில் ஒரு சோழ அரசனால் கட்டப்பட்டது. சோழ அரசர் காலத்து கல்வெட்டுகள் பல உள. கோபுரம் தெற்குப்பார்த்தது. இதற்கு எதிரில் உற்சவ விக்ரஹம் இருக்கிறது. இவ்வூருக்குப் பழய பெயர் கலவைக்குட்டை.

கலவை — வாலாஜாபாத் தாலுக்கா, செங்கல்பட்டு ஜில்லா, சென்னை ராஜதானி, திருக்காலீஸ்வரர்கோயில் கல்வெட்டுகளில் காரீஸ்வர மஹாதேவர் என்றிருக்கிறது.

கலிங்கபட்டணம்—சென்னை ராஜதானி, விசாகப்பட்டணம் ஜில்லா சிவாலயம்; ஸ்வாமி சங்கமுகேசர், தேவி அம்பிகை, வம்சதான நதி கடலில் சங்கமமாகும் ஸ்தலம்.

கலிக்காமூர்—திரு அன்னப்பன் பேட்டை என வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி, தென் திருமுல்லைவாயிலுக்கு 3 மயில் தெற்கு, புராசரர் பூசித்த க்ஷேத்திரம், ஸ்வாமி சுந்தரேஸ்வரர்; தேவி அழகுவன முலையம்மை; திருஞானசம்பந்தர் பாடல்பெற்றது. அம்புலி தீர்த்தம்.

கலிஞ்ஜர்—ஐக்கிய மாகாணத்திலுள்ளது. ஜி. ஐ. பி. ரெயில், ஜான்சி மாணிக்பூர் பிரிவிலுள்ள பாதெளசா ஸ்டேஷனிலிருந்து 18 மயில். சிவாலயம், ஸ்வாமி நீல கண்டர்; பெரியலிங்கம். இங்கு தர்மசாலையுண்டு.

கலுவாயி—சென்னை ராஜதானி. நெல்லூர் ஜில்லா, சென்னகேஸ்வர ஸ்வாமி கோயில்.

கலையூர்—திருக்கலையூர், மலையாள தேசம் தென் இந்தியா, சிவாலயம் அரியக்கோட்டுக்கு அருகிலுள்ளது.

களந்தை—செங்கல்பட்டு ஜில்லா, பாலாற்றங்கரையிலுள்ளது. சிவாலயம், ஆதித்தேச்சரம். ஆதித்த சோழனால் கட்டப்பட்டது.

களித்திட்டை—திருக்களித்திட்டை என அழைக்கப்படுகிறது. சென்னை ராஜதானி, கும்பகோணம் தாலுக்கா, தஞ்சாவூர் ஜில்லா, வேதபுரீஸ்வரர் கோயில்.

கழுக்காணிமட்டம்—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, மாயவரத்தற்கு ½ மயில். சிவாலயம், ஸ்வாமி கைலாசநாதர், தேவி பார்வதி.

கலயம்புத்தூர்—சென்னை ராஜதானி, மதுரை ஜில்லா, பழனிக்கு 2 மயில், சிவாலயம்.

கழிப்பாலை—சென்னை ராஜதானி, சிதம்பரத்திற்கு 7 மயில் தென்கிழக்கு, சிவபுரிக்கருகிலுள்ளது. பழய சிவாலயம், கரைமேடு என்னும் இடத்தில் இருந்திருக்கலாமென்று எண்ணப்படுகிறது. ஒரு பெரிய வெள்ளத்தின் பிற்கு தற்கால மிருக்குமிடம் கோயில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கலாம். ஸ்வாமி, பால்வண்ண நாதேஸ்வரர், தேவி பொற்பத வேதநாயகி. வான்மீகர் பூசித்த க்ஷேத்திரம். கொள்ளிட தீர்த்தம், மூவர் பாடல்பெற்றது.

கழுக்குன்றம்—திருக்கழுக்குன்றம். சென்னை ராஜதானி செங்கல்பட்டு ஜில்லா. செங்கல்பட்டிலிருந்து 9 மயில் தென்கிழக்கு. இதற்கு பட்சிதீர்த்தம், உலகளந்த சோழபுரம், வேதகிரி, தட்சிண கைலாயம், ருத்திரகோடி என்றும் பெயர் உண்டு. கழுகுகள் பூஜித்தமையால் கழுக்குன்றம் எனப் பெயர்பெற்றது. பட்சிதீர்த்தம் எனப்படுவதும் அக காரணத்தாலேயே. நான்கு வேதங்களும், நான்கு மலை வடிவமாகப் பூசித்தமையால் வேதகிரி எனப் பெயர் பெற்றது. உலகளந்த சோழபுரம் என்பது பழய கல்வெட்டுகளில் உள்ள பெயராகும். அஷ்டவசுக்கள், நந்தி, பசு, வராகம், ருத்திரகோடிகள், சம்பு ஆதி எனும் கழுகுகள், வேதங்கள், விஷ்ணு, பிரம்மா, சுப்ரமணியர், சந்திரன், இந்திரன் முதலியோர் பூஜித்த இடம். மாணிக்கவாசகருக்குத் திருவடி தரிசனம் அளித்த க்ஷேத்திரம். "காட்டி லுய்க் கழுக்குன்றிலே" என்பதைக் காண்க. திருப்புகழில் "கழுகுதொழு வேதகிரி" என்று கூறப்பட்டிருக்கிறது. சுரகுரு எனும் அரசன் மலையின் அடி, நடு, முடிகளில் மூன்று லிங்கங்களைப் பிரதிஷ்டை செய்து பூசிக்க, கோஹத்தி செய்த பாபம் சிரசினின்றும் காக்கை வடிவமாகப் பறந்து சங்கு தீர்த்தத்தின் தென்மேற்கு மூலையில் மலைவடிவமாக விழுந்ததாக ஸ்தலபுராணம். இதற்கு தற்காலம் காக்கை மலை என்றேபெயர். இச்சுரகுரு அடிவாரக் கோயிலாகிய பக்தவத்சல ஸ்வாமி கோயிலைக் கட்டியதாக ஐதிகம்.

ஸ்வாமி, வேதகிரீஸ்வரர், (மலைமீது) பக்தவச்சலேஸ்வரர் (அடிவாரம்), தேவி பெண்ணினல்லாளம்மை, திரிபுரசுந்தரி, மலைச் சொக்கநாயகி, ஸ்தலவிருட்சம் வாழை. தீர்த்தங்கள்: சங்குதீர்த்தம், வசுதீர்த்தம், இந்திர தீர்த்தம், பட்சி தீர்த்தம், நந்தி தீர்த்தம் (கோயிலுக்குள் இருப்பது.) சங்கு தீர்த்தத்தில் வலம்புரிச்சங்கம் பல வருடங்களுக் கொரு முறை பிறப்பதாக ஐதிகம். இங்கு மேற்குறித்தபடி இரண்டு கோயில்கள் உள, அடிவாரக் கோயில் மலைக்கோயில்; ஸ்வாமிக்கு வேதகிரீஸ்வரர் என்று பெயர். இது அதர்வண மலையின் உச்சியிலிருக்கிறது. கோயில் கிழக்கேபார்த்தது ஒரே பிராகாரமுடையது, இங்கு நந்தியில்லை; மூலஸ்தானம் 3 பெரும் கற்பாறைகளாலாயது. உட்புரத்தில் பல தேவதைகளின் உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. மேற்குபுறகம் மும்மூர்த்திகளின் உருவங்கள், வடக்குப்பக்கம் யோக தட்சிணைமூர்த்தி, தெற்குபக்கம் நந்திகேஸ்வரர், சண்டேஸ்வரர். சுயம்புலிங்கம், வாழைப்பூவின் ஆகாரமுடையது. கவசத்தினால் மூடப்பட்டிருக்கிறது; சாதாரணமாக இக்கோயிலில் 12 வருடங்களுக்கொரு முறை இந்திரன் இடி அபிஷேகம் செய்வதாக ஐதிகம். உச்சிவேளையில் தினம் இங்கு இரண்டு கழுகுகள்வந்து, கழுகு, பண்டாரத்தின் கரத்தினின்றும் உணவருந்திப் போகின்றனர். 1681 ஆம் ஆண்டில் இவ்வதிசயத்தைப் பார்த்ததாக, ஒரு டச்சுக்காரர் எழுதியிருக்கிறார். கல்வெட்டுகளில் மூலஸ்தானக் கோயில் என்று சொல்லப்பட்டிருப்பது வேதகிரீஸ்வரர் கோயில்தான் என்று எண்ணப்படுகிறது. கோயிலின் உச்சியிலிருந்து கீழே இறங்கிவரும் போது 50 படிகளின் கீழ் "இரு கல்மண்டபம்" என்று ஒன்று உளது. தற்காலம் இது சிலாலயமாயிருக்கிறது. பூர்வகாலத்தில் இது ஜைனக் கோயிலாயிருந்திருக்கலாம் என்று சிலர் எண்ணுகின்றனர். தற்காலம் சிவலிங்கம் இருக்கிறது; மலைச்சாரலில் செதுக்கப்பட்ட மஹாபலிபுரம் குகைக் கோயில்களைப் போன்றது. இங்குள்ள உருவங்கள் மஹாபலிபுரம் தர்மராஜா ரதத்திலுள்ள உருவங்களைப்போலிருக்கின்றன; ஆகவே இது பல்லவ அரசனை நரசிம்மவர்மன் காலத்தில் வெட்டப்பட்டிருக்கலாம். இங்குள்ள லிங்கத்திற்கு மூலஸ்தான ஸ்வாமி என்று பெயர் இருந்திருக்கலாம் என்று எண்ண இடமுண்டு. லிங்கம்

திரண்ட வடிவமுள்ளது. தமிழ் நாட்டில் இம் மூலஸ் தான ஈஸ்வரர் கோயில்தான் பழய கல்வெட்டுகளின்படி, மிகவும் புராதனமான கற்கோயில். 7 ஏழாம் நூற்றாண் டில் ஸ்கந்தவிஷ்ணு எனும் பல்லவ அரசன் இதற்கு மானி யம் விட்டிருக்கிறான். இம்மலையானது சுமார் 500 அடி உயரமிருக்கும். அடிவாரத்திலுள்ள பக்தவத்சலேஸ்வரர் கோயிலுக்கு நான்குபுறமும் அழகிய கோபுரங்கள் உள. வடக்கு கோபுரம் 9 நிலையுடையது, மிகவும் உயரமானது கோயில் இரண்டு பிராகாரங்களுடையது, 500 × 300 அடி விஸ்தீரணம்; ஸ்வாமி கர்ப்பக்கிரஹம் கஜப்பிரஷ்ட ஆகி ருதி உடையது. அம்மன் சந்நிதி அழகாய்த் தற்காலம் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. பிரம்மோற்சவம் சித்திரை மாசம்; மூன்றுநாள் அதிகாரநந்தி வாகனம் கிரிப் பிரதட்ச ணம் விசேஷம். இங்கு வசந்தோற்சவம் மிகவும் விமரிசை யாக நடக்கிறது. பக்தவத்சலேஸ்வரர் கோயில் அறை ஒன்றில் ஸ்கந்தசிஷ்யர் எனும் அரசன் மூலஸ்தான ஸ்வா மிக்கு மான்யம் விட்டதாகவும், அதை வாதாபிகொண்ட நரசிம்ம பொத்தராயரும், முதல் ராஜகேசரிவர்ம ஆதித்ய ரும் ஊர்ஜிதப்படுத்தியதாகவும் கல்வெட்டுகள் கூறுகின் றன. இங்குள்ள மலையின் படிகளும், வேதகிரீஸ்வரர் கோயில் தென் சுவரிலுள்ள வினயகர் உருவமும், பூவினூர் சூர்யதேவர் என்பவரால் செதுக்கப்பட்டவை. திரிபுரசுந் தரி கோயில் 1259 ஆம் ஆண்டிற்கு முன்னதாகவே இருந் திருக்கவேண்டும்; அவ்வருஷத்தில் ஆண்ட சுந்தரபாண் டியன் கல்வெட்டொன்று இங்கு இருக்கிறது. இங்குள்ள பழய கல்வெட்டுகளில் மிகவும் பழமையானது முதலாம் பராந்தகனுக்கு முன்பு ஆண்ட ராஜகேசரிவர்மனுடைய காலத்தியதாம். சுரகுரு எனும் அரசன் இங்குள்ள கோயிலை மராமத்து செய்ததாகச் சொல்லப்பட்டிருக்கி றது. மலையின்பேரில் ஒருபுரம் திருமலை சொக்கம்மாள் கோயிலிருக்கிறது. இதற்கு அடிவாரத்தில் பிரபலமான பிரதி தொனியுண்டு. அடிவாரக் கோயிலிலுள்ள அகோர மூர்த்தி பார்க்கத்தக்கது. இவ்விடம் கிரிப் பிரதட்சிணம் விசேஷம்; இதனால் சகல பிணியும் நீங்குமென்பது ஐதிகம்; இது இரண்டுமயில் இரண்டுபர்லாங் சுற்றளவா கும். சமயகுரவாசாரியர்கள் கோயில் கிரிப்பிரதட்சிணத் தில் தெற்குபாகத்திலிருக்கிறது. மலையின் வாயு மூலையில்

சஞ்சீவி யிருப்பதாக ஐதிகம்; இங்கு மலைமருந்து கிடைக்கிறது. அடிவாரக்கோயிலில் ஆமை மண்டபம் அழகியது. இங்கு மற்றொரு சிவாலய மூண்டு; ருத்திரன்கோயில் எனப் பெயர்கொண்டது. இது சங்குதீர்த்தத்திற்கு தென்கிழக்கிலிருக்கிறது. மிகவும் பழய கோயில்; ஸ்வாமிக்கு ருத்திர கோடீஸ்வரர் என்று பெயர்; தேவி அபிராம அம்மன்; ருத்திர கோடிதீர்த்தம். கோயில் ஒரே பிராகாரமுடையது; தற்காலம் ஒருகாலபூஜைதான் நடக்கிறது. இக்கோயில் மலையடிவாரக் கோயிலுக்கு முற்பட்டது, இங்குள்ள கோபுரம் 4 நிலைகளுடையது; இங்குள்ள சண்டேஸ்வரருக்கு மண்டபமில்லை. அம்மன் சந்நிதி பிறகு கட்டியதுபோல் காண்கிறது. ஸ்வாமிகோயிலும் அம்மன் கோயிலும் அக்கம்பக்கமாயுள்ளன, இரண்டும் கிழக்குபார்த்தவை. இங்குள்ள விநாயகருக்கு வண்டுவன விநாயகர் என்று பெயர். திருக்கழுக்குன்றம் கிரிப்பிரதட்சிண பாதையில் விஸ்வாமித்ர தீர்த்தம், கோடி விநாயகதீர்த்தம், மெஞ்ஞான தீர்த்தம், அகஸ்திய தீர்த்தம் முதலிய பல தீர்த்தங்கள் உள. சங்கு தீர்த்தம் 560 × 760 அடி. நடுவிலுள்ள மையமண்டபம் அழகியது. சங்குதீர்த்தக் கரையில் மார்க்கண்டேஸ்வரர் கோயில் என்று ஒரு சிவாலய மூண்டு. இது மார்க்கண்டேயர் சிவபெருமானுக்கு சங்காபிஷேகம் செய்த இடத்தைக் குறிப்பதாம். பக்தவத்சலேஸ்வரர் கோயில் குறைந்தபட்சம் 700 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டிருக்கவேண்டும். இவ்வூரிலுள்ள மூன்று கோயில்களில் வேதகிரீஸ்வரர் கோயில் (மலை உச்சிகோயில்) தான் மிகவும் புராதனமானது. பக்தவச்லேஸ்வரர் கோயில் இரண்டாம் பிராகாரத்தில் திரு ஆபரணக்கொட்டடி ஒன்றுளது. இது கி. பி. ஒன்பதாம் ஆண்டில் ஒரு சிறு கோயிலாயிருந்திருக்க வேண்டும். இங்கு கணேசர், தட்சிணமூர்த்தி, விஷ்ணு, பிரம்மா முதலிய தேவதைகளின் சிலைகளிருக்கின்றன. இதில் 671 ஆண்டின் கல்வெட்டொன்று உளது. ராஜகேசரிவர்மன் \ காலத்திய கல்வெட்டொன்றும் உளது. இது ஸ்கந்தவிஷ்ணு எனும் பல்லவ அரசன் காலத்தில் ஒரு கோயிலாக இருந்ததாகத் தெரிகிறது. அவன் காலம் சுமார் 5 ஆம் நூற்றாண்டாம். அவன் காலத்தில் செங்கற் கோயிலாயிருந்து பிறகு கருங்கற்கோயிலாக மாற்றப்பட்டிருக்கலாம். இக் கட்டடம் கஜப்பிருஷ்ட ஆகிருதி உடை

யது என்பது கவனிக்கத்தக்கது. தற்காலத்திய பக்தவத்ச லேஸ்வரர் கோயில் பாண்டிய அரசனுகிய ஜடாவர்மர் சுந்தரபாண்டியனுல் கட்டப்பட்டது. காலம் சுமார் 1251. இங்கு மூன்றும் பிராகாரம் சுமார் 700 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டதாகும். ருத்திரகோடீஸ்வரர் கோயில் கோடிராட்சதர்களைக் கொன்ற கோடி ருத்திரர்கள் பூசித்த ஸ்தலமென்பது புராணம்.

கழுக்காணிமட்டம்—சென்னை ராஜதானி தஞ்சாவூர் ஜில்லா சிவாலயம். இதற்கு சக்திபுரம் என்றும் பெயர்; சப்த மாதர்களுள் வராஹி பூசித்தது.

கள்ளப்பெரம்பூர்—சென்னை ராஜதானி திருச்சிராப் பள்ளி ஜில்லா, ஸ்வாமி கைலாயநாதர். தேவி பெருந்திரு வம்மன்.

கள்ளம்பட்டி—திருமெய்யம் தாலுக்கா புதுக்கோட்டை சமஸ்தானம் சென்னை ராஜதானி, சிவாலயம்.

கள்ளம்பல்லா—சத்யமங்கலம் தாலுக்கா, கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம்.

கள்ளாறு—திருக்கள்ளாறு மன்னார்குடி தாலுக்கா, தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம்; ஸ்வாமி பாரிஜாதவனேஸ்வரர்.

கள்ளிக்கோட்டை—மலபார் ஜில்லா, சோரணூருக்கு 30 மயில்; சென்னை ராஜதானி. சிவாலயம்; இதை தனி சிவன் கோயில் என்று இங்குள்ளவர் அழைக்கின்றனர். ரெயில் ஸ்டேஷன்.

கள்ளில்—திருக்கள்ளில், திருக்கள்ளம், எனவும் வழங்கப்படு கிறது. சென்னை ராஜதானி பொன்னேரி ஸ்டேஷனுக்கு 12-மயில் தென்மேற்கு. பிருகுமுனி பூசித்த க்ஷேத்திரம்; சிவபெருமான் இவருக்கு தட்சிணமூர்த்தி ரூபமாக தரிசி னம் கொடுத்த ஸ்தலம். ஸ்வாமி சிவாநந்தேஸ்வரர். தேவி ஆனந்தவல்லி; கந்தி தீர்த்தம். திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

களக்குடி—சென்னை ராஜதானி, மதுரை ஜில்லா, சிவா லயம்; ஸ்வாமி குவனேசர்; தேவி சண்பகவல்லி; குடைந்த மலையில் லிங்கமுள்ளது. வைப்புஸ்தலம்.

களசர—புலஹொன்னூர் தாலுக்கா, மைசூர் ராஜ்யம். கரூர் ஸ்டேஷனுக்கு 7-மயில். கோயில் தெற்கு பார்த்தது, பெரியது. ஸ்வாமி கானேஸ்வரர். ஆதிகாலத்தில் இது ஜைன ஆலயமாயிருந்து பிறகு சிவாலயமாக மாற்றப்பட்டதென்பர். கோயில் ஸ்ருதபிந்து என்பவரால் கட்டப்பட்டதென்பர். ஸ்வாமி சர்வாங்க சுந்தரேஸ்வரர்; தேவி பார்வதி; அப்பு தீர்த்தம்.

களம்பூர் — திருமெய்யம் தாலுக்கா புதுக்கோட்டை சமஸ்தானம் சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி வைதீஸ்வரர், கதளீஸ்வரர். பாண்டிய அரசன் தெரியாமல் வாளால் லிங்கத்தை பின்னப்படுத்தியதாக ஐதிகம். லிங்கத்தின் தென்பாகம் செப்புக் கட்டமைந்திருக்கிறது. இங்கு அருகாமையில் மற்றொரு சிவாலய மூண்டு.

களர் — (திரு) சென்னை ராஜதானி, மன்னார்குடி தாலுக்கா, திருத்தருபூண்டி ஸ்டேஷனுக்கு 9-மயில் தென் மேற்கு; சுவாமி களர்முளாகாதேஸ்வரர்; தேவி அழகேஸ்வரி இளங்கொம்பன்னாள். துர்வாச தீர்த்தம். பராசரும் கண்வரும் பூசித்த க்ஷேத்திரம். துர்வாசருக்கு பரமசிவம் நடனதர்சனம் கொடுத்த ஸ்தலம்; காளமுனி பூசித்த ஸ்தலம். கோயிலில் துர்வாசருடைய சிலை இருக்கிறது. பிரம்மோற்சவம் சித்திரைமாதம். திருஞானசம்பந்தர் பாடல்பெற்றது.

களித்திட்டை—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, கும்பகோணம் தாலுக்கா ஸ்ரீ வேதபுரீஸ்வரர் கோயில்.

கற்குடி—கற்குடி மாமலை என்றும் பெயர். சென்னை ராஜதானி திருச்சிராப்பள்ளிக்கு 6-மயில் வடமேற்கு; உய்யக்கொண்டான் பெருமலை எனவும் வழங்கப்படுகிறது. சிவாலயம் ஒரு கற்பாறைமீதிருக்கிறது. இதைச் சுற்றிலும் 6-அடி அகலமுள்ள மதில் உளது. மார்க்கண்டர், கரன், பூசித்த ஸ்தலம். கரன் சிலை கோயிலிலுள்ளது. இதற்குக் கைகளில்லை. கோயிலிலுள்ள தட்சிணமூர்த்தி பார்க்கத் தக்கது. ஸ்வாமி முக்தீஸ்வரர், உச்சிநாதேஸ்வரர், உய்யக்கொண்டார்-வில்வமரம். தேவி அஞ்சனாட்சியம்மை; முக்தி தீர்த்தம்; சோழநாட்டரசன் பூசித்து முக்திபெற்ற ஸ்தலம்.

உஜ்ஜீவநாதர் கோயில். மூவர் பாடல் பெற்றது. தர்மபுர மேற்பார்வை.

கற்றளி—திருக்கற்றளி, சென்னை ராஜதானி புதுக் கோட்டை சமஸ்தானம், புதுக்கோட்டைக்கு 4-மயில். சிவாலயம் பல்லவ கட்டிடம்; முழுவதும் கருங்கல்லாலாயது 8-ஆம் ஆண்டிற்கு முந்தியது.

கறையூர் — சென்னை ராஜதானி, ஆற்காடு ஜில்லா, திருவண்ணமலைக்கு 16-மயில் சிவாலயம். ஸ்வாமி கறை கண்டேசர், தேவி பிருகந்நாயகி; இதற்குக் காஞ்சிக் கறை யாடி என்றும் பெயர். வைப்புஸ்தலம்.

கனக்காடு — சென்னை ராஜதானி, திருநெல்வேலிக்கு 22-மயில் சிவாலயம். ஸ்வாமி சகலபுவனேஸ்வரர், உமா தேவி; நளாயினி ஆணிமாண்டாவிய ரிஷி பூசித்தது.

கனக்கலா—வட இந்தியா, சிவாலயம் சுயம்புலிங்கம்; ஸ்வாமி ருத்திரேஸ்வர்.

கன்டபல்லி—சென்னை ராஜதானி கோதாவரி ஜில்லா, சிவாலயம்; ஆதியில் புத்த ஆலயமாயிருந்து மாற்றப்பட்ட தென்பர்.

கன்யாகுமரி — திருவாங்கூர் ராஜ்யம். இந்தியாவின் கடைசிமூனை. குகநாதேஸ்வரர் சிவாலயம். இக்கோயில் ராஜராஜ சோழனால் கட்டப்பட்டது. சுமார் 984-ஆம் ஆண்டில் அவ்வரசன் அதுவரையில் திக்விஜயம் செய்த தற்கு அறிகுறியாக கட்டினன். ராஜேந்திர சோழன் கால முதல் விக்கிரம சோழன் காலம்வரை பல கல்வெட்டுகள் உள. பாண்டியர்கள் காலத்தில் இது சோழாதேஸ்வரம் எனப் பெயர்பெற்றது; இது கோநாதேஸ்வரம் என்று மருவி, பிறகு குஹ்நாதேஸ்வரம் என்றாயது என எண்ணப் படுகிறது. கோயில் தற்காலம் மிகவும் கிலமாயிருக்கிறது. தஞ்சாவூர் பிரஹதீஸ்வரர் கோயிலைப்போன்ற கட்டடம்.

கஜாரண்யம்—தென் இந்தியா, சிவாலயம், ஸ்வாமி கஜாரண்யேஸ்வரர், பார்வதி தேவி, காவிரி தீர்த்தம்.

[தொடரும்]

சிவாலயங்கள் - - -
- இந்தியாவிலும் அப்பாலும்

இரண்டாம்பாகம்

ராவ் பஹதூர்
ப. சம்பந்த முதலியார், பி.ஏ., பி.எல்.,
அவர்களால் இயற்றப்பட்டது.

இந்த நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்ற நூல்கள்:

லீலாவதி-சுலோசனை, சாரங்கதரன், மகபதி, காதலர் கண்கள், நற்குல தெய்வம், மனோஹரன், ஊர்வசியின் சாபம், இடைச்சுவர் இருபுறமும், என்ன நேர்ந்திடினும், விஜயரங்கம், கள்வர் தலைவன், தாசிப்பெண், மெய்க்காதல், பொன் விலங்குகள், சிம்ஹளநாதன், விரும்பியவிதமே, சிறுத்தொண்டர், காலவரிஷி, மஞ்சுபுத்திரவீரன், உண்மையான சகோதரன், சதி-சுலோசனை, புஷ்பவல்லி, கீதமஞ்சரி, உத்தமபத்தினி, அமலாதித்யன், சபாபதி முதற்பாகம், பொங்கல் பண்டிகை அல்லது சபாபதி இரண்டாம் பாகம், ஓர் ஒத்திகை அல்லது சபாபதி மூன்றாம்பாகம், சபாபதி நான்காம் பாகம், பேயல்ல பெண்மணியே, புத்த அவதாரம், விச்சுவின் மனைவி, வேதாள உலகம், மனைவியால் மீண்டவன், சந்திரஹரி, சுபத்திரார்ஜுனை, கொடையாளி கர்ணன், சஹதேவன் சூழ்ச்சி, நோக்கத்தின் குறிப்பு, இரண்டு ஆத்மாக்கள், சர்ஜன் ஜெனரல் விதித்தமருந்து, மாளவிகாக்னிமித்ரம், விபரீதமான முடிவு, சுல்தான் பேட்டை சப் அசிஸ்டெண்ட் மாஜிஸ்டிரேட், சகுந்தலை, காளப்பன் கள்ளத்தனம், விக்ரமோர்வசி, முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும், நாடகமேடை நினைவுகள் ஆறுபாகங்கள், நாடகத் தமிழ், யயாதி, பிராம்மணனும் சூத்திரனும், வாணீபுரவணிகன், இரண்டு நண்பர்கள், சத்ருஜித், ஹரிச்சந்திரன், மார்க்கண்டேயர், மத்ஸ்யவளி, கண்டுபிடித்தல், கோனேரி அரசகுமரன், சந்தையிற் கூட்டம், வைகுண்ட வைத்தியர், தீட்சிதர் கதைகள், ஹாஸ்யக் கதைகள், குறமகள், நல்லதங்காள், சிறுகதைகள், நடிப்புக்கலையில் தேர்ச்சிபெறுவதெப்படி? ஹாஸ்ய வியாசங்கள், தமிழ் பேசும் படக்காக்ஷி, விடுதிப்புஷ்பங்கள், பேசும்பட அனுபவங்கள், வள்ளி மணம், கதம்பம், மாண்டவர் மீண்டது, ஆஸ்தானபுரம் நாடகசபை, சங்கீதப் பயித்தியம், ஒன்பது குட்டி நாடகங்கள், சபாபதி ஜமீன்தார், முதலியன.

முதற் பதிப்பு

சென்னை 'இரத்னவிலாஸ்' அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டது.

ாபிரைட்] 1946 [விலை ரூ. 1.

INSCRIBED

TO

THE BELOVED MEMORY

OF

MY PARENTS

P. VIJIARANGA MUDALIAR

AND

P. MANICKAVELU AMMAL

AND

MY FRIEND

C. RANGAVADIVELU

கன்ருப்பூர் :—(திரு) சென்னை ராஜதானி, திருவாரூரிலிருந்து 11½-மயில்; திரு நெட்டியாற்றங்குடிக்கு 6-மயில் கிழக்கு. ஒரு ஆப்பியிலிருந்து பரமசிவம் தோன்றிய க்ஷேத்திரம். ஒரு வைஷ்ணவருக்கு வாழ்க்கைப்பட்ட சைவமாதுசிரோமணி, புருஷன் வீட்டார் அறியாதபடி கன்றுகட்டுத் தறியை சிவலிங்கமாகப் பூசித்துவர, இதை ஒரு நாள் அறிந்த் அவள் கணவன் அடைவெட்ட கோடாலியை ஓங்கினபோது, ஸ்வாமி அவ்வாப்பினின்றும் வெளிப்பட்டதாக ஐதிகம்; லிங்கத்தில் கோடாலியின் குறி காணப்படும். ஸ்வாமி நடுத்தறியப்பர், தேவி மாதுமையம்மை; ஏரள தீர்த்தம். இடும்பன் பூசித்த க்ஷேத்திரம்.

கன்னடிபுத்தூர் :—உடுமல்பெட் தாலுக்கா கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி; பழய சிவாலயம், சோழ கட்டிடம்.

கனகபுரம் :—சென்னை ராஜதானி கோயமுத்தூர் ஜில்லா; ஈரோட் தாலூகா, இங்கு மூன்று சிவாலயங்கள் உள.

கனரா பிரிவு :—பம்பாய் ராஜதானி; இங்கு அடியிற் கண்ட சிவாலயங்கள் உண்டு :—

(1) **ஹொனவர்** :—ராமலிங்க ஸ்வாமி கோயில் (2) **இட்கி** ராமெஸ்வரர் கோயில் (2) **முத்கிரி** நாகநாதர் கோயில், இங்கு ரதோற்சவம் விசேஷம்; ராத்திரி 8-மணி முதல் காலை வரையில் இதற்கு கோயில் தாசிகள் நடனம் செய்ய வேண்டிய முறையாம். (4) **மூர்தெஷ்வர்** சிவாலயம், ராவணனல் கட்டப்பட்ட தென்பது ஐதிகம். (5) **சிவேஷ்வர் கோட்டை** இங்கு பல சிவாலயங்கள் உள. (6) **உல்வி** சிவாலயம்.

கஞசரி :—சென்னை ராஜதானி, பாலக்காடு தாலூகா, சிவாலயம்.

கஞபர்த்தி :—நெல்லூர் ஜில்லா சென்னை ராஜதானி; இதன் பழய பெயர் கனகபுரி, இங்கு பூர்வத்தில் 100 சிவாலயங்கள் கட்டப்பட்டிருந்ததாகச் சொல்லப் படுகிறது; அவற்றுள் 99 கடல் கொள்ள தற்காலம் ஒன்றுதான் மிகுதியாயிருக்கிறதாம்.

கஞ்சிபுரியா :—வட இந்தியா, சுயம்பு லிங்கம், ஸ்வாமி ஜலலிங்கேஸ்வரர்.

கஜாகிராமம் :—குண்டூர் தாலூகா, சென்னை ராஜதானி; அகஸ்தீஸ்வரர் கோயில்.

கஜுராஹோ :—வட இந்தியாவில் சத்தர்ப்பூர் ராஜ்யத்திலுள்ளது. கோயில் ஆரிய சில்பம்; குவலயபுரிககு 150 - மயில்; ஸ்வாமி கண்டராய் மஹாதேவர் கோயில்; 109 அடி நிகளம் 60 அடி அகலம், 116 அடி உயரம்; இங்கு ஒரு காலத்தில் 872 சிவலிங்கங்கள் இருந்ததாகச் சொல்லப் படுகிறது.

காகிஜுடா :—சென்னை ராஜதானி, பிடாபுரத்திற்கு 10 மயில்; சிவாலயம்.

காங்ரா பிரிவு :—பஞ்சாப் மாகாணம், இமயமலைக் கருகில்; இங்கு கீழ்க்கண்ட சிவாலயங்கள் உள.

(1) பாயிஜ்நாத் :—சிவாலயம் ஸ்வாமி சிவ வயித்நாத். பழய கோயில்; உள் கோயில் 8 அடி சதுரம்; வெளி கோயில் 18 அடி சதுரம்; இந்திய ஆரிய சில்பம்; இங்கு அருகில் சித்தநாதர் கோயில் என்று ஒரு சிவாலய மிருந்தது; 1905-ஆம் ஆண்டில் பூகம்பத்தில் பாழடைந்து விட்டது. இங்கு கேதார் நாத் புதிய ஆலயம் ஒன்றுண்டு. **(2) சுஜான் பூர் தீரா கௌரிகூங்கர் கோயில்** 1793 - ஆம் ஆண்டில் கட்டப் பட்டது. தர்மகேகூவர் கோயில் 1823 - இல் கட்டப்பட்டது. **(3) மாஸ்ரூர்** பழய காலத்தில் சிவாலயமா யிருந்து தற்காலம் ராமர் கோயிலாக மாற்றப்பட்டிருக்கிறது. **(4) காங்ரா பட்டணம்** :—சிவாலயம். இந்தி ரேஷ்வர், ஸ்வாமி, சுமார் 11 ஆம் நூற்றண்டில் கட்டப்பட்டது. **(5) ஹரிபூர்**, அம்பிகேஷ்வர் கோயில் இப்பிரிவில் இதுதான் மிகவும் பழமையான சிவாலயம்.

காசி :—வட இந்தியா; வாரணசி, அவிமுக்தம் என்றும் பெயர். பங்காள் வடமேற்கு இந்தியா றெயில் ஸ்டேஷன், மிகவும் பிரபலமான சிவக்ஷேத்திரம், உலகெங்கும் பிரசித்தி பெற்றது. கங்கையின் தென்கரையிலுள்ளது. சிவாலாயம் ஸ்வாமி விஸ்வேஸ்வர்நாத் அல்லது விஸ்வ நாதர்; தேவி விசாலாட்சி, அன்னபூரணி; உத்தரவாஹினி தட்சிண லிங்கம். பழய கோயில் மகம்மதியர்களால் அழிக்கப்பட்டது. இப்பொழுதிருப்பது புதிய ஆலயம். ஏழாம் நூற்றுண்டில் இந்தியாவுக்கு வந்த யுவனச்வாங் என்னும் சீன தேசத்து பௌத்த சன்யாசிப்

பிரயாணி, அக்காலத்தில் இங்கிருந்த கோயில் விக்கிரகம், மனுஷ்யவடிவிலிருந்ததாக எழுதியிருக்கிறார். அக்காலத்திய கோயில் 100 அடிக்கு மேல் உயரமாயிருந்ததாம்; அதிலிருந்த லிங்கம் நான்கு முகங்களையுடைத்தாயிருந்ததாகவும் கூறப்பட்டிருக்கிறது. 16-ஆம் நூற்றாண்டில் கோயில் 32-சதுரமுள்ள கர்ப்பக் கிரஹமும், அதைச் சுற்றிலும் 16-அடி சதுரமுள்ள நான்கு சிறு மண்டபங்களும் உடைத்தாயிருந்தது; அம்மண்டபங்களுக்கு ஞான மண்டபம், பக்தி மண்டபம், ஐஸ்வர்ய மண்ட்பம், சிருங்கார மண்டபம் என்று பெயர்கள் இருந்தன. அன்றியும் இதைச்சுற்றி நான்கு சிறிய கோயில்கள் இருந்தன, இவைகள் முறையே, கணேசர் தண்டபாணி தாரகேஸ்வர், காலபைரவர் விக்ரஹங்களை உடைத்தாயிருந்தன. இவற்றையெல்லாம் அக்பர் காலத்தில் ராஜாதோடர்மல் புதுப்பித்து வைத்தார். அவ்ரங்கஜிப் காலத்தில் இவை இடிக்கப்பட்டன; சிவாலயமிருந்த இடத்தில்மகம்மதிய மசூதி கட்டப்பட்டது. 1665-முதல் 1780-வரையில் விஸ்வநாதர் ஆலயம் மறைந்திருந்தது. அழிக்கப்பட்ட பழய சிவாலயத்திற்கு கீர்த்திலிங்கேஸ்வரர் கோயில் என்று பெயர். 1194-ஆம் ஆண்டில் குட்புதின் எனும் மகம்மதிய அரசன் காசியைக் கைப்பற்றி அங்கிருந்த 1000-கோயில்களையும் இடித்து விட்டதாகச் சொல்லப்படுகிறது. சுமார் 200-வருடங்களுக்குமுன் தற்காலத்திய விஸ்வநாதர் கோயில், அன்னபூரணி கோயில, காலபைரவர் கோயில், முதலியன மஹராஷ்டிரர்களால் கட்டப்பட்டன. தற்காலத்திய விஸ்வநாதர் கோயில் பழய கோயிலிருந்த இடத்திற்கு தெற்கிலுள்ளது; அதற்கு 500-அடி தூரம் உளது. கோயில் சுமார் 50-அடி சதுரம்; கர்ப்பக்கிரஹம் 8-அடி குறுக்குள்ளது. கோயில் ஸ்தூபி சுமார் 60-அடி உயரம்; மண்டபம் 16-அடி சதுரம்; சிவலிங்கம் 12-ஜோதிலிங்கங்களில் முக்கியமானது, சுயம்புலிங்கம். கோயிலின் நான்கு முக்ப்புகளில் சூரியன், கெள்ரி, அனுமார், கணேசர் உருவங்கள் இருக்கின்றன, கோயிலுக்குட் சென்று, மகம்மதியர் கிறிஸ்தவர்கள் பஞ்சமர்கள் தவிர, மற்றெல்லா ஜாதியாரும் லிங்கத்திற்கு அபிஷேகமும் பூசையையும் செய்து ஆராதனம் செய்யலாம். இவ்வூரின் மேல் திசையில் தேகளி விஞயகர் ஆலயம்; இந்த விஞயகருக்கு துண்டி விஞயகரென்று மற்றொரு பெயர்.

விஸ்வேஸ்வர் கோயிலுக்கு எதிரில் அன்னபூரணி அம்மன் கோயிலிருக்கிறது. முக்கிய தீர்த்தங்கள் :— அசிகங்கம், தசாஸ்வமேத கட்டம், மணிகர்ணிகாகட்டம், பஞ்சகங்கை கட்டம், பார்ணசங்கம், கேதார கட்டம், அகஸ்திய குண்டம். பிசாச மோட்சம், ஞானகூபம், அமிர்த குண்டம் ; நாககுண்டம், முதலியவை ; ஞானகூபத்தில் பரமசிவம் இருப்பதாக ஐதிகம் ; மொத்த கட்டடங்கள் 64 - ஆம் ; அவற்றுள் பிரதானமானவை அசிகங்கா கட்டம், தசாஸ்வமேத கட்டம், மணிகர்ணிகா கட்டம், பஞ்சகங்கா கட்டம், வருண சங்கம கட்டம் ; இவ்வைந்திலும் ஸ்நானம் செய்தால் 64 - கட்டங்களிலும் ஸ்நானம் செய்த பலனுண்டாம். காசி, இறக்க முக்தியளிக்கும் க்ஷேத்திரம். இங்கே அநேகம் தர்மசாலைகளுண்டு ; ஸ்டேஷனிலிருந்து கால்பர்லாங்கில் ஒரு தர்ம சாலையுண்டு ; ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தருகில் ஒரு மாறுபாடியால் கட்டப்பட்ட ஒரு சத்திரமுண்டு. விஸ்வநாதர் கோயிலில் சுவாமிக்கு எதிரில் சிவப்புக் கல்லாயாகிய நந்தி குறுக்காயுளது; கர்ப்பக்கிரஹத்தின் வலது மூலையில் லிங்கம் ஒரு தொட்டியில் இருக்கிறது. காசியிலுள்ள மற்ற சிவாலயங்கள் (1) மணிகர்ணிகா கட்டத்தில் தாரகேஸ்வரர் கோயில், ராணி அஹல்யா பாயால கட்டப்பட்டது (2) சைலேஸ்வரர் கோயில், (3) ஓங்காரேஸ்வரர் கோயில், (4) அமிர்தேஸ்வரர் கோயில், (5) அசிகங்கா கட்டத்தில் சங்கமேஷ்வர் கோயில், (6) தசாஸ்வமேத கட்டத்தில், தசாஸ்வமேதேஸ்வரர் கோயில், சூலடங்கேஸ்வரர் கோயில், க்ஷேமேஸ்வரர்கோயில், தாலம்யேஸ்வரர் கோயில், (7) வருணசங்கம கட்டத்தில் வருணதீர்த்தேஸ்வரர் கோயில், சங்கமேஷ்வர் கோயில், நட்சத்திரேஸ்வரர் கோயில், சுவேததீப தீர்த் தேஸ்வரர் கோயில், வேதேஸ்வரர் கோயில், (8) பஞ்சகங்கா கட்டத்தில் கபர்தீஸ்வரர் கோயில், வசிஷ்டேஸ்வரர் கோயில் (9) மணிகர்ணிகேஸ்வரர் கோயில், (10) லலிதா கட்டத்தில் கங்கேஸ்வரர் கோயில், (11) மீர் கட்டத்தில் சாரசசந்திரேஸ்வரர் கோயில், (12) மாடே கட்டத்தில் சர்வேஸ்வரர் கோயில், (13) கேதார கட்டத்தில் கேதாரிஸ்வரர் கோயில், (14) அநுமந்த கட்டத்தில் அநுமந்தேஸ்வரர் கோயில், லோலார்க்கேஸ்வரர் கோயில், (15) கர்த்தடபத்தருகில் சோமநாதர் கோயில், விமோட்சர் கோயில், நீலகண்டர் கோயில், (16) பிராதகாம தீர்த்தத் தருகில், மோட்சேஸ்வரர் கோயில், கரு

னேஸ்வரர் கோயில், மந்திரேஸ்வரர் கோயில், நீலேஸ்வரர் கோயில், காளகூடேஸ்வரர் கோயில், (17) பீமசண்டித் தீர்த்தத் தருகில் கந்தர்வேஸ்வரர் கோயில், நேமேஸ்வரர் கோயில், ராமேஸ்வரர் கோயில், ரத்தாட்சீஸ்வரர் கோயில், (18) மஹா பீமேஸ்வரர் கோயில், (19) பூதநாதர் கோயில், (20) காமேஸ்வரர் கோயில், (21) பத்ரேஸ்வரர் கோயில், (22) ஜராவதேஸ்வரர் கோயில், (23) மாதவீஸ்வரர் கோயில், (24) சத்ருக்னேஸ்வரர் கோயில், (25) லட்சமனேஸ்வரர் கோயில், (26) (27) கபிலதாரைக் கருகில் தேவ சங்கேஷ்வர் கோயில், ரிஷபத்துவ கேஸ்வரர் கோயில், (28) பிரஹலாதேஸ்வரர் கோயில் (29) திரிலோகளேஸ்வரர் கோயில், (30) வீரேஸ்வரர் கோயில், ஸ்வாமி வீரேஸ்வரர் அரம்பை, சின்னமாது, வசந்தன் மூதலியோர் பூசித்து இஷ்டசித்தி பெற்ற ஸ்தலமென்பர். இன்னும் பல சிறு சிவாலயங்களும் உள.

காசியாரி :—வட இந்தியா பங்காளம் நாகபூர் றெயில்வே ஸ்டேஷன்; கான்டாய்சி லிறங்கி 10 - மயில் போக வேண்டும். மிட்னபூர் ஜில்லா, கொண்டாய் பிரிவு. இங்கு கோட்டையில் ஒரு மடத்தின் மத்தியில், ஒரு கிணற்றின் கீழ் பாகத்தில் லிங்கத்திற்கு பூஜை நடக்கிறது; ஸ்வாமி மஹாதேவர்; ஆலயம் இடிந்திருக்கிறது.

காஞ்சனகுட்டம் :—பல்லாரி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம் ஸ்வாமி கங்காதார்.

காஞ்சிக்கோயில் :—ஈரோட் தாலூகா, கோயமுத்தூர் ஜில்லா சென்னை ராஜதானி; இங்கு 5 சிவாலயங்கள் உள.

காஞ்சீபுரம் :—கச்சி, கச்சி ஏகம்பம், சிவபுரி, கச்சிக்காரோணம் எனும் பெயர்களு முண்டு. கச்சிக்காரோணம் என்று பெயர் வந்ததற்குக் காரணம், பிரளய காலத்தில் பிரம்மாவும் விஷ்ணுவும் பரமசிவத்தின் உருவத்தில் ஐக்கியமாகியது என்பதாம். பழய கல்வெட்டுகளில் கச்சிப்பேடு என்றிருக்கிறது. செங்கல்பட்டு ஜில்லா சென்னை ராஜதானி றெயில் ஸ்டேஷன். பிரபல சிவஸ்தலம். இது மிகவும் புராதனமான பட்டணம். சுமார் 2000 - வருடங்களுக்கு முன்பிருந்தது. பல்லவ அரசர்களுக்கும் சோழ மன்னர்களுக்கும் ராஜதானியாயிருந்த பட்டணம். முத்திதரும் நகரேழில் முக்கிய மானது. நகரேஷு காஞ்சி

எனும் சிறப்புடையது. அசோக அரசனது ஸ்தூபங்கள் முற்காலத்தில் இங்கிருந்ததாகச் சொல்லப்படுகிறது. ஹியுன்சாங் எனும் பௌத்த சன்யாசி இவ்வூரைப் பற்றி எழுதியிருக்கிறார். மணிமேகலை எனும் பழய கிரந்தத்தில் இது குறிப்பிடப்பட்டிருக்கிறது. இங்கு பூர்வ காலத்தில் வேகவதி எனும் சிறுநதி ஓடிக்கொண்டிருந்தது. இதற்கு மற்றொரு பெயர் கம்பை அல்லது கம்பாநதி; இந்நதியின் பெயரினின்றும் ஏகாம்பரம் எனும் ஸ்வாமி பெயர் வந்திருக்கலாம் என்று ஜகதீச ஐயர் எண்ணுகிறார். காஞ்சி என்பது ஆற்றுப் பூவரசுக்குப் பெயர்; அச்செடிகள் அதிகமாயிருந்தமையால் இவ்வூருக்கு ஆதியில் அப் பெயர் வந்திருக்கலாம். ஏக ஆம்ரம் (மாமரம்) என்பது மற்றொரு காரணப் பெயர் என்பர் சிலர். காஞ்சீபுரத்தில் 108 சிவாலயங்கள் இருந்ததாகச் சொல்லப் பட்டிருக்கிறது அவற்றுள் முக்கியமானவை :—

(1) கச்சி ஏகம்பம் :—இதுதான ஏகாம்பரநாதர் கோயில்; இங்குள்ள கோயில்களில் எல்லாம் மிகப் பெரியது. பிர்த்வி லிங்கம் சுயம்பு; மூவர் பாடல்பெற்ற க்ஷேத்திரம். உமாதேவி இரு நாழி நெற்கொண்டு 32 அறம் வளர்த்த ஸ்தலம். தேவி கம்பை நதிக்கரையில் வேத மாவடியில் பரம சிவத்தைப் பூசித்து, மணந்த திவ்ய தேசம். ஐயடிகள் காடவர் கோன்நாயனார் அரசாண்ட இடம். சுந்தரமூர்த்தி நாயனார் இடது கண்பார்வை பெற்ற ஸ்தலம்; அன்றியும் அவர் பொன் வேண்டி திருப்பதிகம் பாடி பொன் பெற்ற இடம். திருக்குறிப்புத் தொண்ட நாயனரும், சாக்கிய நாயனரும் முத்தி பெற்ற திவ்ய ஸ்தலம். (ஆடிசன் பேட்டையில் திருக்குறிப்புத் தொண்ட நாயனார் கோயிலுளது) இக்கோயில் தேசமெல்லாம் புகழ்ந்திடும் கச்சித் திருவேகம்பற் செம்பொற் கோயில் என்று சிறப்பித்துப் பாடப்பெற்ற கோயில். கரிகாலச்சோழன் இக் கோயிலைப் பூர்வத்தில் புதுப்பித்ததாகச் சொல்லப்படுகிறது. இங்கு பழய கர்ப்பக்கிரஹம் முற்றிலும் இடிக்கப்பட்டு நாட்டுக்கோட்டை செட்டிமார்களால் புதிதாய்க் கட்டப்பட்டிருக்கிறது; பழய கோயில் ஏககாலத்தில் கட்டப்பட்டதன்று; கொஞ்சம் கொஞ்சமாகப் பெரிதாக்கப்பட்ட தாம். சிற்ப சாஸ்திரத்தில் வல்லுனரானசார்பெர்கூசன் என்பவர் "இங்குள்ள பல கோபுரங்களில் இரண்டு

கூட நேர் நேராக இல்லை. இரண்டு சுவர்கள் கூட சம இடையில் கட்டப்படவில்லை. ஒரு கட்டிடமும் சரியான சச்சதுரமாயில்லை," என்று எழுதியிருக்கிறார். சந்நிதி கிழக்குப் பார்த்தது; பெரிய கோபுரம் தெற்கு பார்த்தது, 188 - அடி உயரம், பதினேழு நிலைகள் உடையது. ஸ்ரீ கிருஷ்ணதேவராயரால் சுமார் 1509 - 1530 - ஆம் ஆண்டுகளில் கட்டப்பட்டது. இக்கோயில் கர்நாடக யுத்தத்திலும், ஐதர்கால யுத்தங்களிலும், பன்முறை சைனியங்கள் தங்குமிடமாக உபயோகிக்கப் பட்டுள்ளது. ஐதரின் பீரங்கிகளின் குண்டுகளின் வடு தெற்கு கோபுரவாயிலில் இன்னும் காணலாம். இக்கோயிலில் ஐதர் லிங்கம் என்று ஒரு லிங்கம் உண்டு; ஐதர் கலாபனை காலத்தில் மூலஸ்தானத்திற்கு பழுது வராதபடி, இந்த லிங்கத்தை எதிரில் வைத்து சுவர் எழுப்பி, ஐதர் படைகளை ஏமாற்ற உபயோகிக்கப்பட்டதாம், இங்குள்ள நடராஜர் சபைக்கு ஆகாச சபை என்று பெயர். இங்கு ஏகாம்பரநாதர் கோயில் அன்றி, பல சிறு கோயில்கள் உள. அவை :— வெள்ளைக்கம்பம் - விஷ்ணு பூசித்தது இது கோயிலின் இரண்டாம் பிராகாரத்திலுள்ளது; கள்ளக்கம்பம் கோயிலின் வடக்கிலுள்ளது விஷ்ணுவினால் பூசிக்கப்பட்டது; நல்லக்கம்பம் பிரமன் பூசித்தது; வாலீச் சாம் வாலி பூசித்தது. பெரிய கோயில் ஸ்வாமி பெயர். ஏகாம்பரநாதர் ஏகர் ஆம்ரம் - மாவிருட்சம்; தேவி - காமாட்சியம்மன் ஏலவார் குழலி, தீர்த்தங்கள் ஆலயத்துள் சிவகங்கை, கம்பாநதி, கோயிலுக்கு மேற்கில் சர்வ தீர்த்தம் (இங்கு தெப்பல் உற்சவம் வைகாசி மாசம்) ஸ்தல விருட்சம் மாமரம். இது மிகவும் பழமையானமரம்; நான்குபக்கங்களிலும் நான்கு விதமாங்காய் காய்க்கிறது. நான்கு வேதங்களே இம்மா மரமாயின வென்பது ஐதிகம். இக்கோயிலில் அம்மனுக்கு மூலஸ்தானம் கிடையாது, உற்சவ விக்கரம் மாத்திரம் உண்டு. பிரம்மொற்சவம் பங்குனிமாசம் 13 நாட்கள்; நான்காம் நாள் ரிஷபவாஹனம், இதற்குப் போர்விடை என்று பெயர், மற்ற ரிஷபங்களெல்லாம் காட்சி விடையாகும்; ஸ்வாமி யுத்தத்திற்குச் செல்லும்போது உட்காருவது போல் ரிஷபத்தின் முகத்திற்கு எதிராக ஆரோஹணிக்கிறார்; ஐந்தாம் நாள் காலை அதிகாரநந்தி உற்சவம் விசேஷம்; 9 - ஆவது நாள் வெள்ளி மாவடி சேர்வை

உற்சவம், ஸ்வாமியும் அம்மனும் ஒரே ஆசனத்தில் விற் றிருப்பார்கள். 10 - ஆம் நாள் திருக்கலியாண உற்சவம் பிரபலம்; மாலை மாற்றுகிறது பார்க்கத்தக்கது; மூன்றாநாள் பஞ்சமூர்த்திகளும் சின்னகாஞ்சிபுரத்திற்குப் போய் வரத ராஜர் சந்நிதிக் கெதிரில், ஏசல் உற்சவம்; உற்சவ காலங் களில் ஸ்வாமி தெற்குக் கோபுரவாயில் வழியாகத்தான் எழுந்தருளுகிறார். பெரிய கோயிலின் உட் பிராகாரத்தில் ஒரு விஷ்ணு விக்கிரஹம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக் கிறது; இம்மூர்த்திக்கு நிலாத்திங்கள் துண்டத்தான் என்று பெயர். ஏகாம்பரநாதர் கோயிலில் கலியாண மண்டபம் பச்சையப்ப முதலியாரால் 1774 - வருஷம் கட் டப்பட்டது. இத்த சிவக்ஷேத்திரம் கச்சியப்ப சிவாசாரி யார், பட்டினத்தடிகள், சிவஞான யோகிகள், கச்சியப்ப முனிவர் முதலியோர்களால் பாடல்பெற்றது. ஆபிரச்சால் மண்டபத்தில் 540 தூண்கள்தானிருக்கின்றன. இக்கோயிலி லுள்ள காமதகனச் சிலை அழகியது, பார்க்கத்தக்கது. பூர்வகாலத்தில் இக்கோயிலை ஜீர்ணோத்தரணம் செய்த கரிகாலச் சோழன் சிலையு மிங்குள்ளது. இக்கோயிலுக் கெதிரிலுள்ள 16 - கால் மண்டபம் 1080 - வருஷம் கட்டப் பட்டது. கோயிலில் 6 - காலம் பூஜை யுண்டு. அர்த்த ஜாமக் கட்டளை பச்சையப்ப முதலியாருடையது. ஏகாம்பர நாதர் கோயிலிலுள்ள அகஸ்தீஸ்வரர் மண்டபமும், சபா நாதர் மண்டபமும் பழய சோழ கட்டிடங்கள். வாஹன மண்டபம் விஜய நகரத்தரசர்கள் காலத்தியது; சுமார் 400 - வருடங்களுக்கு முன் கட்டப்பட்டதென்பர் சிலர்; மூன்றும் பிராகாரத்து கோபுரமும் அக்காலத்தியதே. இங்கு பல சத்திரங்கள் உள. (1) குஜராதி சத்திரம் சர்வதீர்த்தத்திற் கருகில் உள்ளது, ஸ்டேஷனுக்கு 1 - மயில். (2) ராஜா வாசுதேவரெட்டியார் சத்திரம் 1 - மயில் (3) பச்சையப்ப முதலியார் சத்திரம் $\frac{3}{4}$ - மயில் (4) கம்மாள சத்திரம் $\frac{1}{2}$ - மயில் (5) கொசமட சத்திரம் $\frac{1}{2}$ - மயில் (6) யாதவர்கள் சத்திரம் $\frac{1}{4}$ - மயில் கீழண்டை ராஜவீதி; (7) ஜவுளிக்கடை சத்திரம் $\frac{1}{2}$ - மயில்; (8) ராதாகிருஷ்ண தாஸ்தாகா சத்திரம்; (9) வாசாபாலைய செட்டியார் சத்தி ரம். (10) வன்னியர் சத்திரம், (11) கோவிந்தப்ப நாய்க்கர் சத்திரம் ஆடிசன் பேட்டை, (12) ஐயாபிள்ளை சத்திரம், (13) இராம நாய்க்கர் சத்திரம், இரண்டும் திருக்கச்சிநம்பி

தெரு. மோடார் பஸ்ஸுகளும், ஜட்காவண்டிகளும் ஏராள மாகக் கிடைக்கும்; ஹோட்டல்களுக்கும் குறைவில்லை.

(2) திருக்கச்சி மயானம்:—இக்கோயில், பெரிய கோயிலில் அடங்கியிருக்கிறது; ஸ்வாமிக்கு மயானேஸ்வரர் என்று பெயர்; பண்டா சூரன் பூசித்த ஸ்தலம்; பழய கோயில் மணற் கல்லாலாயது; அதை இடித்து கருங் கல்லால் புதிதாய்க் கட்டப்பட்டிருக்கிறது; கோயில் சிவ கங்கை குளத்தின் ஒருபுறம் இருக்கிறது. பழய கோயில் 11-ஆம் ஆண்டில் கட்டப்பட்டதாம். ஆதி காலத்தில் இக்கோயில் கிழக்கு பார்த்ததாக இருந்திருக்க வேண்டும் என்று எண்ண இடமுண்டு. பண்டா சுரனை பரமசிவம் சம்ஹரித்த ஸ்தலமென்பர்; யாக குண்டமே சிவ கங்கை என்பர். சிலர் கச்சிமயானம் சர்வ தீர்த்தக் கரையிலுள்ள தென்பர் சிலர்.

(3) ரிஷபேஸ்வரர் கோயில்:—இது சிவ கங்கைக்கு மேற்கிலுள்ள ஒரு சிறு கோயில்; மணற் கல்லாலாயது பெரும்பாலும். சுமார் 1300 வருடங்களுக்கு முன் கட்டப் பட்டிருக்கலாம். கோயில் மேற்கு பார்த்தது; இதற்கு பிரத்யேக பூஜை யுண்டு.

(4) கைலாசநாதர் கோயில்:—இது சர்வ தீர்த்தத்திற்கு மேற்கிலுள்ளது; இரண்டு சிவாலயங்களடங்கியது. இதன் பூர்வீகப்பெயர் ராஜசிம்ம பல்லவேஸ்வரம் என்பதாம்; ராஜசிம்மன் என்னும் பல்லவ அரசனல் கட்டப்பட்டது. கட்ட ஆரம்பித்த வருஷம் 567-ஆம், கட்டி முடிந்தது 670-ம் ஆண்டில், இரண்டாவது நரசிம்மன் அல்லது ராஜசிம்மன் காலத்தில். இங்குள்ள கர்ப்பக் கிரஹத்திற்கு எதிரில் நாரதேஸ்வரர் ஆலயம் என்று ஒரு சிவாலயமுண்டு; இதற்கு முற்காலப்பெயர் மஹேந்திரேஸ்வரம்; மஹேந் திரன் எனும் பல்லவ அரசனல் கட்டப்பட்டதாம். பல்லவ வைரியாகிய குலோத்துங்க சோழன் காலத்தில், இக்கை லாசநாதர் கோயில் மூடப்பட்டு, இதன் மான்யங்களெல் லாம், இங்கு அருகாமையிலுள்ள அநேகதங்காபதம் கோயிலுக்குக் கொடுக்கப்பட்டது. இக்கோயில் மிகவும் புராதனமானது; கருங்கற்களால் கட்டப்பட்ட கோயில் களுள் மிகவும் முற்பட்டது. நடுவில் உயர்ந்த விமானம் உடையது; சுற்றிலும் 90-சிறு அறைகள் அல்லது

மண்டபங்கள் அமைந்தது. அவைகளி லெல்லாம் அழகிய சில்பங்கள் அமைந்துள்ளது. முதல்வாயிலின் வடபுறம் உள்ள சிறு கோயில் நித்தியவனீதேஸ்வரர் ஆலயம், எனக் கூறப்பட்டிருக்கிறது. இங்கு சுவர்களில் வர்ணந்தீட்டிய சித்திரங்கள் வரையப்பட்டிருக்கின்றன என்பதை சில வருடங்களுக்கு முன்பு பிரஞ்சு தேசத்து தூப்ரெயில் என் பவர் கண்டுபிடித்திருக்கிறார். அவைகளுள் சிலவற்றை வடக்கிலுள்ள மண்டபங்களில் காணலாம். இக்கோயிலில் அர்த்தநாரீஸ்வரர் சிலை யிருக்கிறது; தேவி பாகம் வீணை தாங்கி யிருக்கிறது, ஸ்வாமி பாகம் ரிஷபத்தின்மீது ஆரோ ஹணித்திருக்கிறது. காஞ்சீபுரத்துள்ள ஒரு கல்வெட்டில் இக்கோயில் சுவாமி திருக்கற்றளி (திரு + கல் + தளி) மஹாதேவர் என்று குறித்திருக்கிறது. இங்குள்ள லிங்கோத்பவமூர்த்தி மிகவும் அழகிய வேலைப்பாடுள்ளது. மதில் சுவர்களில் 24 யாளிகள் அல்லது சிம்மங்கள் இருக்கின்றன; இவை பல்லவர்களுடைய பிருதுகள் ஆகும்; பல்லவ தூண்களி லெல்லாம் இவை பெரும்பாலு மிருக்கின்றன. டாக்டர் மீனாட்சி அம்மாள் இக்கோயில் கி. பி. எட்டாம் நூற்றாண்டிற்கு முன் கட்டப்பட்ட தென் பர். புத்தரும் அவரது சிஷ்யரான நாரதரும் சிவபக்தி யைக் கெடுத்த பாபம் திரும்படியாக இங்கு கைலாசநாதர் லிங்கத்தையும் நாரத லிங்கத்தையும் பூசித்ததாக ஐதிகம். கோயிலில் பிரதட்சிணம் வரும்போது தாயின் கர்ப்பத்தி லிருந்து வருவதுபோல் கஷ்டம் என்பது ஐதிகம், இதில் சில இடங்களில் தவழ்ந்து தான் வரவேண்டி யிருக்கிறது. கைலாசநாதர் லிங்கம் 12 பட்டைகளை யுடையது. விமா னம் மஹாபலிபுரம் ரதங்களைப் போன்றது.

(5) அநேக தங்காபதம்:—இதற்கு கச்சி அநேக தங்காபதம் என்றும் பெயர். இது கைலாசநாதர் கோயிலுக்குத் தெற்கில், புத்தேரித் தெருவிற்கு மேற்கே கழனிமத்தியில் உள்ளது. விஜயகரும் முருகரும் பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமியின் பெயர் அணையதங்க உடைய நாயனார் என்று கல்வெட்டுகளில் உளது. ஸ்வாமி அநேக தங்காவதேஸ்வரர், தேவி காமாட்சி யம்மன்; தாணுதீர்த்தம். சுந்தரமூர்த்தி பாடல் பெற்றது.

நாரதேஸ்வர ஆலயம்:—நாரதர் சிவனடியாரை வஞ் சித்த பாபம் நீரப் பூசித்த ஸ்தலமென்பர்.

காயாரோகணேஸ்வரர் ஆலயம்:—மகாலட்சுமியும் பிரஹஸ்பதியும் பூசித்த கோயில்; காயா ரோகண தீர்த்தம்.

(6) **கச்சி மேற்றளி**:—இதற்கு திரு மேற்றளி என்றும் பெயர்; கச்சாலேஸ்வரர் ஆலயத்திற்கு மேற்கிலுள்ளது பிள்ளைபாளயத்தில்; மேல் + தளி—மேற்கிலுள்ள கற்கோயில், என்று அர்த்தமாகும். மஹாவிஷ்ணு சிவ சாரூபம் பெறவேண்டி தவமியற்றிய ஸ்தலம். திருஞான சம்பந்தர் சரித்திர சம்பந்தம் உடையது; ஸ்வாமி திரு மேற்றளி நாதர், தேவி காமாட்சியம்மை; விஷ்ணு தீர்த்தம். இது பூர்வ காலத்தில் ஒரு சமணக் கோயிலாயிருந்து பிறகு சிவாலயமாக மாற்றப்பட்டது என்று எண்ண இடமுண்டு. திருநாவுக்கரசர் சுந்தரமூர்த்தி பாடல் பெற்றது.

(7) **முக்தீஸ்வரர் கோயில்**:—இது ஒரு பழய பல்லவாலயம், வைகுண்டப் பெருமாள் கோயிலுக்கு அருகிலுள்ளது, ரெயில் ஸ்டேஷனுக்குப் போகும் பாதையில் மாதங்கேஸ்வரர் கோயிலுக்கு வடக்கிலுள்ளது, நந்திவர்மன் காலத்து கல்வெட்டு இங்கு ஒன்றுளது. இதன் பூர்வீகப் பெயர் தர்மமஹாதேவி ஆலயம்; தர்ம மஹா தேவி எனும் பல்லவ அரசியால் கட்டப்பட்டது போலும். சுமார் 1200 - வருடங்களுக்கு முற்பட்ட கட்டடம்; சிலர் இதை கைலாச நாதர் கோயிலுக்கு முற்பட்ட தென்று எண்ணுகின்றனர். கோயில் சிறியது. ஈசான தேவதை பூசித்த ஸ்தலம்.

(8) **கச்சாலேஸ்வரர் ஆலயம்**:—கச்சீஸ்வரர் கோயில் என்றும் வழங்கப்படுகிறது. கச்சபம் = ஆமை; மஹா விஷ்ணு கூர்மாவதாரத்தில் பரமசிவத்தை பூசித்த ஸ்தலம். கோயிலில் இதற்கு ஒரு சிலை யிருக்கிறது. முதல் குலோத்துங்க சோழன் காலத்தில் இக்கோயில் ஜீர்ணோத்தாரணம் செய்யப்பட்டதாக ஒரு கல்வெட்டினால் அறிகிறோம். இங்குள்ள துர்க்கை சந்நிதிக் கெதிரில் உள்ள ஓர் கல்லில் சூர்யாஷ்டகத்தில் ஐந்தாறு பாட்டுகள் செதுக்கப்பட்டிருக்கின்றன. இத்துர்க்கை கோயில் பழய சோழ கட்டிடம். இக்கோயிலில் ஐந்தாறு பல்லவ தூண்கள் உள. கர்ப்பக்கிரஹத்திற்கு எதிரிலுள்ள மண்டபம் விஜய நகரத்தரசர்கள் காலத்தியது. இங்கு குறும்பர்கள் சிலை உருவங்கள் சில இருக்கின்றன. பிரம்மோற்சவம்

சித்திரைமாசம்; முருக்கடிசேர்வை விசேஷம். கோயிலுக் குள் போக வடக்கு வழியாகத்தான் போகவேண்டும். இங்குள்ள குளத்திற்கு இஷ்டசித்தி தீர்த்தம் என்று பெயர். சூரியன் மாந்தாதா பூசித்த க்ஷேத்திரம்; இங்கு அவர்களின் கோயில்கள் உள. கர்ப்பக்கிரஹத்தில் பல கல் வெட்டுகள் உள. கோபிநாத் ராவ் என்பவர் இக் கோயில் கச்சியப்பர் என்பவரால் கட்டப்பட்ட தென்றும் கச்சியப்ப ஈஸ்வரர் என்று ஸ்வாமிக்கு திருநாமம் என்றும் நினைக்கிறார். ஸ்தலவிருட்சம்—புரசை, ஸ்வாமி கச்ச பேஸ்வரர்; தேவி - காமாட்சியம்மன்.

பெரியகாஞ்சியிலுள்ள வைகுண்டப் பெருமாள் கோயில், ஆதியில் சிவாலயமா யிருந்து பிறகு வைஷ்ணவ ஆலயமாக மாற்றப்பட்ட தென்று காலஞ்சென்ற ஸ்டேச சாஸ்திரியார் கூறியுளார். அதன் பழய பெயர் பரமேஸ் வர விண்ணகரம். கோயிலுக்கு எதிரிலுள்ள கோபுரத்தில் சுப்பிரமணியர் உருவைக் காணலாம்; கோயிலின் மற்றொரு புறம் யோகதக்ஷிணமூர்த்தியின் உருவம் உளது.

(9) ஜ்வரஹரேஸ்வரர் ஆலயம்:—ஜ்வரத்தை நிவார ணம் செய்யும் மஹிமையுடைய ஈஸ்வரர் என்றபடியாம். கர்ப்பகிரஹம் கஜப்ருஷ்ட ஆகிருதி உடையது. தேவர் களுக்கு வந்த ஜ்வரத்தை தீர்த்தபடியால் ஸ்வாமிக்கு அப் பெயர் வந்தென்பர்; கோயில் 125 + 250 அடி விஸ்தீரண முடையது. கர்ப்பக்கிரஹத்திலும் மஹா மண்டபத்திலும் கல் வெட்டுகள் உள. இங்குள்ள பலகணிச் சில்பம் பார்க்கத்தக்கது.

(10) கச்சிநேறிக் காரைக் காடு:—இதற்கு சித்திரபுரம் என்றும் பெயர் உண்டு; இது திருக்காலிஸ்வரர் கோயில் என தற்காலம் அழைக்கப்படுகிறது. ஆடிசன்பேட்டையி லிருக்கும் தேருக்கு வட கிழக்கில் $\frac{3}{4}$ மயில் தூரத்தில், கொல்லை வெளியில், வேப்பங்குளத்திற்கு அருகாமையி லிருக்கிறது. ஆதியில் இவ்விடம் காரைவன மாயிருந்த தென்பர். புதனும் இந்திரனும் பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமி சத்யவாத நாதேஸ்வரர், தேவி காமாட்சியம் மன் அல்லது காரைக்குடியம்மை; தீர்த்தங்கள், இந்திர தீர்த்தம், காரை தீர்த்தம், சத்ய தீர்த்தம்; கல்வெட்டுகளில் ஸ்வாமி பேயர் திருக்காரைக் காடுடையார் என்றிருக்கிறது. திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

(11) மாதங்கேஸ்வரர் கோயில் :—காஞ்சீபுரம் கஸ்பாவுக்கு வெளியில் உள்ளது, வைகுண்டப் பெருமாள் கோயிலுக்குத் தென்மேற்கில், ஆஸ்பத்திரிக்குப் போகும் வழியில்; கர்ப்பக் கிரஹம் மஹாபலிபுரம் கோயிலைப் போன்றது. சற்றேறக்குறைய எட்டாம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாம்—நந்திவர்மன் எனும் பல்லவ அரசனால். இக் கோயிலும் முக்தேஸ்வரர் கோயிலும் ஒரேமாதிரியாயிருக்கின்றன. இங்கு மணற் கல்லாலாய சில்பங்கள் இருக்கின்றன. கைலாசநாதர் கோயிலுக்கு மூற்பட்டதென்பர். சிறிய கோயில்; மேற்குபார்த்தது. மாதங்க முனிவர் பூசித்த படியால் மாதங்கேஸ்வரர் எனப்பெயர் பெற்றதாம்; இங்கு தேவி சந்நிதியில்லை.

(12) ஒணகாந்தன்றளி :—சர்வ தீர்த்தத்திற்கு வடக்கிலுள்ளது. ஒணன் காந்தன் எனும் இரண்டு அசுரர்கள் பூசித்த ஸ்தலம். ஸ்வாமி—ஒணகாந்தேஸ்வரர், தேவி, காமாட்சியம்மன்; ஒணகாந்த தீர்த்தம், விஷ்ணுதீர்த்தம்; சுந்தரமூர்த்தி திருப்பதிகம்பாடி பொன் பெற்ற க்ஷேத்திரம்.

(13) ஐராவதேஸ்வரர் கோயில் :—ராஜ வீதிக்குக் கிழக்கில் கச்சேஸ்வரர் கோயிலுக்கு சமிபத்தில் வடக்கில் உள்ளது. ஒரு தந்தத்தை யிழந்த ஐராவதம் பரமசிவத்தைப் பூசித்து அத்தந்தம் பெற்ற ஸ்தலம். பல்லவ கட்டிடம்; எட்டாம் ஆண்டின் கடைசியில் கட்டப்பட்டது. மிகவும் சிறிய கோயில். கோயில் பூர்த்தியாக வில்லை.

(14) திரிபுராந்தகேஸ்வரர் கோயில் :—காமாட்சி யம்மன் கோயில் சந்நிதி வீதிக்கு எதிரிலுள்ள ஒரு சந்தில் இருக்கிறது. திரிபுர அசுரர்கள் பூசித்த ஸ்தலமென்பர். பல்லவ கட்டடம்; 8-ஆம் நூற்றாண்டின் கடைசியில் கட்டப்பட்டதென்பர்.

மேற்குறித்த ஆலயங்களன்றி, வசிஷ்டேஸ்வரர் கோயில், சோணேஸ்வரர் கோயில், புண்யகோடீஸ்வரர் கோயில், பச்சிமாலயம், பனைதாம், பணீச்சரம், சுரகரீச்சரம, வீராட்டம், வேதநாபுரம், உருத்திரம், இந்திராலயம், நான்முகம், பரசிராமம், அரகேபேசம, இராமம், பிரமம், வச்சிரகரம், மறசை, வாராகம், காரோணம், பராசரீச்சரம், மாணிசசரம், மகாசாத்தன்றளி, வீரட்டானேஸ்வரர் கோயில், வன்மிகநாதர் கோயில், பலபத்திர ஈசர்

கோயில், பயிரவேசர் கோயில், கவுளேஸ்வரர் கோயில், மங்களீஸ்வரர் கோயில், ராமநதீஸ்வரர் கோயில், மாத லீஸ்வரர் கோயில், அநந்தபத்மநாபேஸ்வரர் கோயில்; தக்கீஸ்வரர் கோயில்; முப்புராரிஸ்வரர் கோயில், இரண்ய ஈசர் கோயில், நாரசிங்கேஸ்வரர் கோயில், வராகேஸ்வரர் கோயில், அந்தகேஸ்வரர் கோயில்; வாணீசர் கோயில், சலந்தரீஸ்வரர் கோயில்; திருமாற்பேறு சிவாலயம்; ரேணுகேஸ்வரர் கோயில்; வருணீஸர் கோயில்; நவக்கிரக ஈஸ்வரர் கோயில்; பாண்டலேசர் கோயில்; பச்சீஸ்வரர் கோயில், அமரீசர் கோயில், வீரராகவேஸ்வரர் கோயில்; சித்தீசர் கோயில், அரிசாபம் தீர்த்த ஈசர் கோயில்; இஷ்டசித்தீசர் கோயில்; கல் ஹீசர் கோயில், காரணீஸ் வரர் கோயில்; சர்வதீர்த்தீஸ்வரர் கோயில்; மஹாகாளீஸ் வரர்கோயில், சோழேஸ்வரர் கோயில் முதலான கோயில்கள் உள. கடைத்தெருவில்-காரணீஸ்வரர் கோயில், பழயகோயில், 1050 வருஷத்திய கல்வெட்டுளது; சக்கேஸ்வரர் கோயில் பணமணீஸ்வரர் கோயில், இது ராஜேந்திர சோழன் கட்டினது; மஹாகாளீஸ்வரர் கோயில் காமாட்சியம்மன் கோயிலுக்கருகிலுளது; சோணேஸ்வரர் கோயில் கல் வெட்டுகளில் ஸ்வாமிபெயர் கரிகால சோழேஸ்வரமுடைய நாயனர் என்றிருக்கிறது; சோழநாதேஸ்வரர் கோயில் காமாட்சி கோயில் கிழக்கு கோபுரத் தருகிலுள்ளது.

சின்னகாஞ்சீபுரம் :—இங்குள்ள வரதராஜப் பெருமாள் கோயில், ஆதியில் சிவாலயமாயிருந்து, பிறகு குண்டு கோபாலராயர் என்பவரால், விஷ்ணு ஆலயமாக மாற்றப் பட்ட தென்பதற்கு பல ஆதாரங்கள் உண்டு. ஸ்வாமி பெயர் புண்யகோடீஸ்வரர் என்றிருக்கலாம்.

காட்டுப்பள்ளி :—கீழைத்திருக் காட்டுப்பள்ளி சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, மேற்படி தாலூகா. திரு வெண்காட்டிற்கு 1 - மயில மேற்கு. சீர்காழியி லிறங்கிப் போகவேண்டும். தேவர்கள் தங்கள் அரசனை இந்திரன் விருத்திராசுரனைக் கொன்ற பாபம் நீங்கி, தேவலோகத்தை மறுபடியும் ஆளவேண்டுமென்று சிவபெருமானைப் பூசித்த ஸ்தலம்; ஸ்வாமி ஆரண்ய சுந்தரேஸ்வரர், தேவி அகிலாண்ட நாயகி; அமிர்தப் பொய்கை; திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது. இங்கு அக்னிஸ்வரர் கோயில், என்று மற்றொரு சிவாலயம் உண்டு, தேவி சௌந்தர நாயகி.

காட்மாண்டு :—வட இந்திய ரெயில் ஸ்டேஷன். சிவாலயம்; பரமேஸ்வரர், பார்வதி.

காட்டுப் பள்ளி, மேலத்திருக்காட்டுப்பள்ளி :—சென்னை ராஜதானி, பூதலூர் ஸ்டேஷனுக்கு $4\frac{1}{2}$ - மயில் மேற்கு; திருவையாற்றிலிருந்து 10 - மயில்; குடமுருட்டி யாற்றின் தென்கரையிலுள்ளது. உறையூர் அரசன் மூத்த மனை விக்கு சிவபிரான் அருளிச் செய்த க்ஷேத்திரம். பழய கோயில்; கர்ப்பக்கிரஹம் தற்கால பூமிமட்டத்திற்கு கீழ் இருக்கிறது; மஹாமண்டபம் உயர்ந்த மட்டத்திலிருக்கிறது; பிறகு கட்டப்பட்டது. ஸ்வாமி—தியாடியப்பர், தேவி வார்கொண்ட முலையம்மை. சூரியதீர்த்தம். இங்குள்ள கோயிலுக்குள் விஷ்ணு ஆலயம், ஒன்றுளது. கோயில் நாட்டுக்கோட்டை செட்டிமார்களால் சிலபாகம் புதுப்பிக்கப்பட்டது. திருஞானசம்பந்தர், அப்பர், பாடல் பெறறது.

காடுத்துருத்தி :—திருவாங்கூர் ராஜ்யம், கழுத்தினுச்சி என்பது மருவியது என்பர்; ராட்சசனை கரன் கழுத்தில் இறுக்கியிருந்த சிவலிங்கம் வைக்கப்பட்ட இடமென்பர்; சிவாலயம்.

கான்டேஷ் பிரிவு—பம்பாய் ராஜதானி. இங்கு அடியிற் கண்ட சிவாலயங்கள் உள. 1. மஹாபலேஷ்வர், ஸ்வாமி மஹாபலேஷ்வர், பழய சிவாலயம் 2. பாட்டகாவன், மஹாதேவர் கோயில் 3. சாந்தேவ் சிவாலயம் சுமார் 150 வருடங்களுக்குமுன் அஹல்யாபாயால் கட்டப்பட்டது 4. சார்தான் சிவாலயம் 750 வருடங்களுக்குமுன் கட்டப்பட்டதென்பர் 5. டாட்டே சிவாலயம் 12-அடி சதுரம் ஹேமாத்பன்ட் கட்டிடம் 6. கார்கேட் சிவாலயம் பூமியின் கீழ்மட்டத்திலிருக்கிறது; 47×24 அடி. கொஞ்சம் பாழடைந்திருக்கிறது 7. ஹிராபூர் ஹேமாத்பன்ட் கட்டிட சிவாலயம் $50 \times 27 \times 12$ அடி 8. கந்தாரி சிவாலயம் ஸ்வாமி மஹாதேவர்; ஹேமாத்பன்ட் கட்டிடம் $15 \times 12 \times 20$ அடி 9. காட்கவான் சிவாலயம், கருப்புக் கல்லாலாயது 37×32 அடி 10. குர்ஹத்துர்ட் சிவாலயம், ஹேமாத்பன்ட் கட்டிடம் 18×15 அடி 11. மெஹ்பூன் சிறு சிவாலயம் 8 அடி சதுரம் 12. நாகர்தேவ்லாஹண்ட சிவாலயம் 13. பகோலா சிவாலயம் 14.

பாட்டு மஹாதேவர் கோயில் 75 × 76 × 18 அடி 15. பிம்பல் நேர் சிவாலயம் ஹேமாத்பன்ட் கட்டிடம் 16. பிம்பர்கேடா சிவாலயம், ஸ்வாமி பரேஷ்வர் மஹாதேவ் 17. பிரகோசி இங்கு 3 சிவாலயங்கள்-கௌதமேஷ்வர் கோயில், சங்கமேஷ்வர் கோயில், கேதாரேஷ்வர் கோயில் 18. ராவோட் இன்சோலி; 19. ரியாகாவன் சிவாலயம் பாழடைந்திருக்கிறது. 20. ஷென் தூர்னி, ஹேமாத்பன்ட் கட்டிட சிவாலயம் 42 × 30 அடி விஸ்தீரணம் 21. சுல்தான்பூர் மஹாதேவர் கோயில் பாழடைந்திருக்கிறது 22. அம்லாட், இங்கு இரண்டு சிவாலயங்கள் உள. சங்கேஷ்வரர் கோயில், ரோக்டேஷ்வர் கோயில் 23. புல்லாடி சிவாலயம் 15 × 132 அடி 24. உந்திர்கேடா ஸ்ரீ நாகேஷ்வர் கோயில் சுமார் 200 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது. 25. வாட்கோவான் சிவாலயம் ஹேமாத்பன்ட் கட்டிடம் 38 × 27 அடி. 26. வாக்லி மான்பால் சிவாலயம்; இங்கு பூர்வத்தில் சிவலிங்க மிருந்தது.

காண்டேயா :—பலிஹொன்னூர் தாலுகா, மைசூர் ராஜ்யம், கனசாவுக்கு 5 மயில்; மார்க்கண்டேஸ்வரர் கோயில்.

காந்தேஸ்வரம் :—திருநெல்வேலி ஜில்லா சென்னை ராஜதானி; ஆள்வார் திருநகரி யருகிலுள்ளது. சிவாலயம் ஸ்வாமி காந்தேஸ்வரர், தேவி அறமுரைத்த நாயகி.

காம்பிலி :—ஐக்கியமாகாணம், சிவாலயம்; ஸ்வாமி ராமேஷ்வர்காத் மஹாதேவ்; ஆலயம் கிலமாயிருக்கிறது. இங்கு கன்னேசி என்னும் இடத்தில் மற்றொரு சிவாலயம்; மிகவும் பாழாயிருக்கிறது. பார்வதியும் பரமசிவனும் நந்தியின்மீது ஆரோஹணித்திருக்கும் விக்ரஹம் மாத்திரம் கெடாமலிருக்கிறது.

காமபுரம் :—தென் இந்தியா சிவாலயம், ஸ்வாமி சந்திரசேகரர், தேவி அமிர்தாம்பிகை.

காமரசவல்லி :—சென்னை ராஜதானி, திருச்சிராப்பள்ளி ஜில்லா உடையார்பாளையம் தாலுக்கா; சிவாலயம், ஸ்வாமி கார்க்கோடேஸ்வரர், கோயிலில் ரதியின்விக்ரஹம் உளது-அழகியது. பல கல்வெட்டுகள் உண்டு. 900 வருடங்களுக்கு மேற்பட்டவை. இங்கு கைலாசமுடையவர் கோயில் என்று மற்றொரு பழய கோயில் இருந்ததாகத் தெரியவருகின்றது.

கார்முத்தி:—சென்னை ராஜதானி, ராம்நாட் ஜில்லா, பழய சிவாலயம்; சுந்தரபாண்டியனால் கட்டப்பட்டது.

கார்கோலம்:—சென்னை ராஜதானி, கோதாவரிக் க்ரையி லுள்ள சிவஸ்தலம்.

கார்ஜாஹ:—கிழக்கு இந்தியா, பண்டல்கண்டில் உள் ளது, சத்தர்புரி சமஸ்தானம், மத்திய காலத்தில் கட்டிய முக்கியமான அழகிய கோயில்.

கார்கோலம்:—சென்னை ராஜதானி, சிவாலயம ஸ்வாமி ராமேஸ்வர், தேவி சொக்கநாயகி, யமதீர்த்தம் சந்திர புஷ்கரிணி, யமனும் சந்திரனும் பூசித்த ஸ்தலம்

கார்பேட்டா:—வடஇந்தியா பங்காள் நாக்பூர் ரெயில்வே மிட்னபூர் ஜெரியா பிரிவு, ரெயில்ஸ்டேஷன். சிவாலயம் ஸ்வாமி காங்கேஸ்வர் சிவ; இங்கு 7 பெரிய தடாகங்கள் உண்டு, ஒவ்வொன்றின் மத்தியிலும் ஒரு ஆலயமுண்டு; அவற்றுள் மிகவும் உன்னதமான ஆலயம் சிவாலயம்

காரமங்கலம்:—திருமெய்யம் தாலூகா, புதுக்கோட்டை சமஸ்தானம், சென்னை ராஜதானி; அகஸ்தீஸ்வரர் கோயில், இது 13-ம் நூற்றாண்டிற்கு முன் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

காரிமங்கலம்:—தர்மபுரி தாலூகா, சேலம் ஜில்லா, சென்னை ராஜதானி, வீரபத்ர ஸ்வாமி கோயில்; பல கல்வெட்டுகள் உடையது.

காரைக்கால்:—தென் இந்தியா, தஞ்சாவூர் ஜில்லா, பிரெஞ்சு இலாகா, ரெயில் ஸ்டேஷன்; திருத்தர்மபுரம் என்றும் பெயர். சிவாலயம் கைலாசநாதர் கோயில், யார்முழி நாதர் கோயில், தர்மபுர ஆதீன மேற்பார்வை. ஆனிமீ காரைக்காலம்மையார் மாங்கனி உற்சவம் விசேஷம். இங்கு முசாபர் பங்களா உண்டு. சோமநாதர் கோயில்; சோம நாதர்-சோம நாயகி, சந்திரபுஷ்கரிணி; பிருகு, சௌமியர், சௌநகர் பூசித்தது.

காரைக்குடி:—சென்னை ராஜதானி, சிவாலயம்; நாட்டுக் கோட்டை செட்டிமார்களால் கட்டப்பட்டது. இதற்கு நகர் சிவன் கோயில் என்று பெயர். இங்கு முசாபர் பங்களா உண்டு. ஸ்வாமி நாகநாதஸ்வாமி, தேவி பிரஹந்நாயகி, பிரம்மோற்சவம் ஆனிமாதம். காரைக்குடிக்கு அருகிலுள்ள

சிவஸ்தலங்கள் :—சூரக்குடி, பூவாண்டிப்பட்டி, வேலங்குடி, இலுப்பைக்குடி, கண்டலூர், சாயக்கோட்டை முதலியன.

காரைமேடு :—கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, ரெயில் ஸ்டேஷன் சிவாலயம், இங்கு சிவப்புக் கல்லாலாகிய யானைகள் உண்டு, பார்க்கத் தக்கவை. கோயிலும் அழகியது. இங்கு சத்திரங்கள் உண்டு.

காரோணம் :—வட இந்தியா, சுயம்புலிங்கம். ஸ்வாமி லகுலீஸ்வரர்.

காலடி :—தென் இந்தியா மலையாள தேசம். சிவாலயம் ஸ்வாமி சந்திரமௌளீஸ்வரர், உமாதேவி. ஆதி சங்கராசாரியர் பீடம்.

காலகாத்:—மத்திய இந்தியா, சௌடம்பூருக்கு 9-மயில்; துங்கபத்ரையும் வரதா எனும் நதியும் சங்கமமாகுமிடம். காலகேஸ்வரர், கோயில் கருப்புக் கல்லால் கட்டப்பட்டது. 80 × 40 அடி விஸ்தீரணம். கோயிலின் அடிபீடம் விசித்திரமானது. சாளுக்கிய சில்பம். 1050-வருஷம் கட்டப்பட்டது. கர்ப்பக்கிரஹத்தைச் சுற்றி அணைபோட்டதுபோலிருக்கிறது.

காலஞ்சார் :—வட இந்தியா, சுயம்புலிங்கம், ஸ்வாமி நீலகண்டர்.

காவ்ஹரு :—ரேபள்ளே தாலூகா, குண்டூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம், ஸ்வாமி ராமலிங்கேஸ்வரர்.

காவன்மங்கலம் :—தென் இந்தியா; அறிபத்த நாயனார் பூசித்த ஸ்தலம்.

காவாந்தண்டலம் :—காஞ்சிபுரம் தாலூகா, செங்கல்பட்டு ஜில்லா, சென்னை ராஜதானி, சோளேஸ்வரர் கோயில்.

காவிரிப்பாக்கம் :—தென் இந்தியா, சிவாலயம், பழய கோயில், பல்லவ கட்டிடம்.

காவிரிப்பூம்பட்டினம் :—(திரு) இதற்கு பல்லவனீச்சரம் என்பது தேவாரப் பெயர். தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சீர்காழிக்கு 10-மயில் தென்கிழக்கு. சாயவனத்திற்கு அருகிலுள்ளது. ஓர் பல்லவ அரசன் முக்திபெற்ற ஸ்தலம். ஸ்வாமி பல்லவனேஸ்வரர், தேவி-சௌந்தரநாயகி காவிரி தீர்த்தம். இயற்பகை நாயனரும் பட்டினத்துப்

பிள்ளையாரும் பிறந்த இடம். திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

காளஹஸ்தி :—சித்தூர் தாலூகா, வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, பிரபல சிவாலயம்; வாயுலிங்கம், கண்ணப்ப நாயனார் முத்திபெற்ற க்ஷேத்திரம். கோயில் சுவர்ணமுகியின் கீழக்கரையிலுள்ளது. ஸ்வாமி சந்நிதியில் உள்ள என்றும் அவியா தீபம் எந்நேரமும் காற்றினல் அசைந்துகொண்டிருக்கிறது. சீகாளஹஸ்தி என்பது ஊரின் முழுப்பெயர்; சீ-சிலந்தி, காளம்-பாம்பு, ஹஸ்தி-யானை, இவை மூன்றும் பூசித்து முத்திபெற்ற க்ஷேத்திர மாதலால் சீகாளஹஸ்தி என்று பெயராயது. சிவகோசரியார் முத்திபெற்ற ஸ்தலம். நக்கீரர் பூசித்த ஸ்தலம். வாயுபகவான் பூசித்தது. மூவர் பாடல் பெற்றது. இதை தட்சிண கைலாசம் என்பர். மாசி மாதம் பிரம்மோற்சவம்; சிவராத்திரி மிகவும் விசேடம். இவ்வூருக்கு சீபுரம் என்றும் மும்முடிச் சோழபுரம் என்றும் பழய பெயர்களுண்டு. சுயம்புலிங்கம்; வெண்மை நிறமுடையது. எதிரிலுள்ள நந்தியும் வெண்மை நிறமுடையது. ஸ்வாமி மேற்குபார்த்து வீற்றிருக்கிறார். இக்கோயிலின் இரண்டாம் பிராகாரத்தில் 30-அடியின் கீழ் பாதாள வினயகர் கோயிலிருக்கிறது. இங்குள்ள 1000 கால் மண்டபமும் காலி கோபுரமும் ஸ்ரீ கிருஷ்ணதேவராயரால் கட்டப்பட்டவை. ஸ்வாமி-காளத்திநாதேஸ்வரர், தேவி-ஞானப்பூங்கோதையம்மை. தீர்த்தம் பொன்முகலி, திருஞானசம்பந்தர் அப்பர் பாடல் பெற்றது. இக்கோயிலில் ஸ்வாமி பூசைக்கு தும்பைப்பூ மாலை விசேஷம். கோபுரம் மூன்றே நிலைகளுடையது. பெரிய கோயிலின் தெற்கிலுள்ள குன்றில் கண்ணப்ப ஈஸ்வரர் கோயில் இருக்கிறது. கண்ணப்பர் பூசித்த ஸ்தலம். இங்கு மணிகண்டீஸ்வரர் கோயில் என்று ஒரு சிவாலய முண்டு. பழய கல்வெட்டுகளில் திருமணிக் கங்கையுடைய நாயனார் என்று ஸ்வாமி பெயர் இருக்கிறது. இக்கோயில் 12-ஆம் நூற்றாண்டில் ஆண்ட வீரராஜேந்திர சோழனல் கட்டப்பட்டது. இக்கோயிலுக்குள் விஷ்ணு சந்நிதியும் உண்டு. ஸ்வாமி பெயர் திருமணிக் கங்கையுடைய நாயனார் என்றிருக்கிறது கல்வெட்டுகளில்; இது மூன்றும் குலோத்துங்க சோழனல் 12-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.

கார்னேஸ்வரம் :—சென்னை ராஜதானி; கோதாவரிக் கரையிலுள்ள சிவாலயம்.

காருயில் :—(திரு) காருயல் எனவும் திருக்காறை வாசல் எனவும் அழைக்கப்படுகிறது. சென்னை ராஜதானி; திருநெட்டியாற்றங்குடிக்கு 3-மயில் தென்கிழக்கு திருவாரூருக்கு 8-மயில் தெற்கு, இந்திரன் பூசித்த க்ஷேத்திரம். மூசுகுந்த சக்ரவர்த்தி இந்திரனிடம் பெற்றுவந்த தியாகராஜப் பெருமான் இங்கு எழுந்தருளப் பெற்றது. சப்தவிடங்க ஸ்தலங்களில் ஒன்று. ஆதி விடங்கர், குக்குட நடனம், ஸ்வாமி கண்ணுயிர நாதேஸ்வரர், தேவி கைலாயநாயகி, பிரமதீர்த்தம். புரட்டாசி பௌர்ணமியில் இந்திரன் பூஜை. திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. பிரம்மோற்சவம் சித்திரைமாதம்.

கானப்பேர் :—காளையார் கோயில், காளிபுரம், என வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி, சிவகங்கை சமஸ்தானத்தின் நிர்வாகத்திற்குள்ளாயது. தென் இந்தியா ரெயில் நாட்டரசன் கோட்டை ஸ்டேஷனுக்கு 6-மயிலிலுள்ளது சுவாமி காளவடிவில் சுந்தரமூர்த்திக்குத் தோன்றி "நம்முடைய வாசஸ்தலம் கானப்பேர்" என்று சொல்லி திருச்சூழியிலிருந்து, அவரை இங்கு வரச்செய்து அவருக்கு காளையுரு காட்டி தரிசனம்கொடுத்த ஸ்தலம். சாபத்தினல் காட்டானையாகச் சபிக்கப்பட்ட ஐராவதம் பூசித்து முன்னுருபெற்ற க்ஷேத்திரம். ஸ்வாமி-காளையீஸ்வரர், காளையப்பர் சுந்தரேஸ்வரர், சோமேஸ்வரர், தேவி - சுவர்ணவல்லி, மீனாட்சி, சௌந்தரநாயகி; யானைமடு, புட்பவலதீர்த்தம், பொன் பிம்பம் அரசனை தீர்த்தம். திருஞானசம்பந்தர் சுந்தரர் பாடல் பெற்றது. பழய கோயில், பல கல்வெட்டுகள் உள. கௌண்டில்ய ரிஷி பூசித்த ஸ்தலம். கோயில் மருதபாண்டியன் கட்டியதென்பர். மிகவும் பெரிய கோபுரமுடையது. கோபுரத்தைக் கட்டியவர்கள் சின்ன மருது பெரிய மருது எனும் சகோதரர்களாம். தெப்பல் உற்சவம் விசேஷம்.

கானப்பேட்டை :—திருமெய்யம் தாலூகா, புதுக்கோட்டை சமஸ்தானம், சென்னை ராஜதானி, சிவாலயம்.

கானரா பிரிவு :—பம்பாய் ராஜதானி; இங்கு அடியிற் கண்ட சிவாலயங்கள் உண்டு. 1. அக்நாஷி காமேஷ்வர் மஹா

தேவ் கோயில் 2. பாய்ஸர மார்க்கண்டேஷ்வர் கோயில் பழமையானது 3. பானவாசி மதுகேஷ்வர் கோயில், சங்கராசாரியாரால் கட்டப்பட்ட தென்பர்; சாளுக்கிய சில்பம். மதுகைடபர்களைக் கொன்ற மஹாவிஷ்ணுவால் கட்டப்பட்ட தென்பது ஸ்தலபுராணம். இங்கு 12-கல்வெட்டுகள் உள, இரண்டாம் நூற்றாண்டுமுதல் 17-ஆம் நூற்றாண்டு வரையில் 4. பத்கல் சோணேஷ்வர் கோயில்- இங்கு தமிழ் கல்வெட்டுகள் இரண்டு உள. 5. பக்தால் சாந்தேஷ்வர் கோயில், சம்புலிங் கேஸ்வரர் கோயில், மூர்கோபிநாத் கோயில் ராமலிங்வீரபத்ரர் கோயில், 6. பில்கி, இதற்கு ஸ்வேதபுரம் என்று பழய பெயர்; விரூபாட்சர் கோயில், 7. தாரேஷ்வர் கோயில், இங்குள்ள லிங்கம் ராவணன் கோகர்ணத்தில் வைத்த லிங்கத்தின் பாகம் என்பர்; கருப்புக் கல்லாலாயது. இங்கு ஐந்து தீர்த்தங்கள் உள, 8. கங்காவலி காமேஷ்வர், லிங்கம் விஸ்வகர்மாவால் ஸ்தாபிக்கப்பட்டதாம்.

காஞ்சி முள்ளூர் :—சென்னை ராஜதானி, ஓமாம்புலியூருக்கு 3-மயில்; பதஞ்சலி பூசித்த ஸ்தலம், ஸ்வாமி பதஞ்சலி காதேஸ்வரர், தேவி கோல்வளைக்கையம்மை, அல்லது காஞர் குழலி, தீர்த்தம் சிவ புஷ்கரணி; சுந்தரர் பாடல் பெற்றது.

காஞ்சி காத்தான் :—சென்னை ராஜதானி, செட்டிநாடு, சிவாலயம், மீனாட்சி சுந்தரேஸ்வரர், நகரத்தாரால் கட்டப்பட்டது, காரைக்குடிக்கு 6-மயில்.

காஞர் :—(திருக்காஞர்) சென்னை ராஜதானி பூதலூர் ஸ்டேஷனுக்கு 7-மயில் வடக்கு, பரமசிவம் உமாதேவியார் தவஞ்செய்கையில் அக்னி மயமாய்த் தோன்றிய ஸ்தலம். ஊர் பாழடைந்து போயிற்று, கோயில்மாத்திர மிருக்கிறது. சுமார் 100-வருடங்களுக்கு முன் கோயில் கண்டெடுக்கப்பட்டது. மணல் மூடியபடியால் கோயில் பூமிமட்டத்திற்கு கீழ் இருக்கிறது. ஸ்வாமி செம்மேனியப்பர், தேவி சிவயோக நாயகியார்; வேத தீர்த்தம்; திருஞானசம்பந்தர் அப்பர் பாடல் பெற்றது.

காஜிபேட்டை :—நிஜாம் ராஜ்யம், சிவாலயம், பூகம்பத்தினால் சிதைவுற்றது.

காஸ்மீரம் :—வட இந்தியா. காஸ்மீர் ராஜ்யத்தி லுள்ளது. மார்த்தாண்டேஸ்வரர் கோயில், ஸ்வாமி - விஜய ஈஸ்வரர். 84 தூண்கள் உடையது.

கிக்கா :—இதற்கு மற்றொரு பெயர் மருகலு, மேற்கு இந்தியாவில் மேற்கு மலைத்தொடர் அருகிலுள்ளது சிவாலயம், ஸ்வாமி பெயர் சந்திரசேகரர், கோயிலுக்கு ரிஷ்ய சிருங்கேஸ்வரர் கோயில் என்று பெயர் உண்டு. ஸ்வாமிக்கு மற்றொரு நாமம் ரிஷ்யசிருங்கேஸ்வரர், லிங்கத்தின் இடது பாகம் ரிஷ்யசிருங்கரின் மனைவி சாந்தா தேவியின் சிலை யிருக்கிறது. லிங்கத்திற்கு இரண்டு சிருங்கங்கள் (கொம்பு கள்) உளது. ரிஷ்யசிருங்கர் இங்கு லிங்கத்தில் ஐக்கியமான தாக ஐதிகம். கோயிலைச் சுற்றி பல காத தூரம் கருப்பே வராது என்பது ஐதிகம்.

கிருபாசாகரம் :—சென்னை ராஜதானி பனங்காட்டூருக்கு அருகிலுள்ளது. சிவாலயம், ஸ்வாமி கிருபாநாயகர், தேவி கிருபாநாயகி, புலஸ்தியர் பூசித்தது.

கிருஷ்ணை :—சென்னை ராஜதானி, மேற்படி ஜில்லா ரெயில் ஸ்டேஷன், சிவாலயம்.

கிருஷ்ணபுரம் :—சென்னை ராஜதானி கடப்பை ஜில்லா, கடப்பைக்கு 5 மயில் வடக்கு சிவாலயம். ரெயில்வே ஸ்டேஷன் ; உத்தரபிநாகினி தீர்த்தம்.

கிக்கேரி :—கிருஷ்ணராஜ்பெட் தாலூகா, மைசூர் ராஜ் யம், சிவாலயம். ஸ்வாமி பிரம்மேஸ்வரர் ; கோயில் 1171-ஆம் வருஷம் கட்டப்பட்டது, சலுக்கிய சில்பம்.

கிடங்கில் :—திண்டிவனம் தாலூகா, தென் ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, பக்தபராதீஸ்வரர் கோயில் ; கல்வெட்டுகளில், திருவிறையான் கோயில் மஹாதேவர், திருக்கௌளீஸ்வரமுடைய மஹாதேவர், திருக்கவுரீஸ்வர முடைய நாயினர், என்றும் ஸ்வாமி பெயர் இருக்கிறது.

கிடங்கரை :—காஞ்சீபுரம் தாலூகா, சென்னை ராஜதானி இரு புளிய மரங்களினிடையில் ஒரு பெரிய சிவலிங்கம் இருக்கிறது. லிங்கத்தின் எதிரில் சிவனுடைய சிலையும் ரிஷபமும் உண்டு. முற்காலத்திய சிவாலயம் கிலமாய் விட்டதாம்.

கிர்னூர் :—வட இந்தியா, குஜராத்திலிருக்கிறது. **சோம நாதர் கோயில்**; தற்காலம் 130 அடி சதுரம்தானிருக்கிறது. இது வட இந்தியாவிலிருந்த பழய கோயில்களில் மிகவும் பிரதானமா யிருந்தது; மிகவும் செல்வமுடையதா யிருந்தது. மகம்மத் கஜனியால் இடித்துக் கொள்ளையடிக்கப்பட்டது; தற்காலம் கோயில் 1168-ம் வருஷம் குமாரபாலர் என்பவ ரால் புதுப்பிக்கப்பட்டது.

கிரமத்தூர் :—மதுரை ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம்.

கிருதேஸ்வரம் :—வட இந்தியா சுயம்புலிங்கம், ஸ்வாமி-பஸ்மகாய ஈஸ்வரர்.

கிருஷ்ணராஜநகர் :—எடத்துரை என்பது பழய பெயர். மைசூர் ராஜ்யம். மைசூரிலிருந்து 20 மைல் சிவாலயம். ஸ்வாமி அர்க்கேஸ்வரர்; காவிரிக கரையிலுள்ளது. இங்கு பல ஸ்நான கட்டங்கள் உள.

கில்லபாடு :—சென்னை ராஜதானி நெல்லூர் ஜில்லா, சிவாலயம் பாழா இருக்கிறது.

கிஞ்சரி:—பாலக்காடு பிரிவு, சென்னை ராஜதானி, சிவாலயம்.

கீரகிராமா :—இதற்கு பேய்ஜ்நாத் எண்று மற்றொரு பெயர்; வட இந்தியா ஹிமயமலைச் சாரலில் உள்ளது. காங்கி ராவுக்கு 25 மயில் கிழக்கு. சிவாலயம்; மன்யுகா, ஆஹுகா என்னும் இரண்டு சகோதரர்களால் 1204-வருடம் கட்டப் பட்டது. ஸ்வாமி சிவ வைத்தியநாதர், கர்ப்பகிரஹம் 8-அடி சதுரம்; மண்டபம் 20-அடி சதுரம், மதிற்சுவர் 120 × 60-அடி; கோயிலுக்கு எதிரிலுள்ள நந்தியின் பக்கத்தில் ஜமதக்னியின் ஆலய மிருக்கிறது. இக்கோயில் மிகவும் பழமையானது என்று பெர்கூசன் கூறுகிறார். இக்கோயி லில் நந்தி மண்டபமும் கணேசருடைய சிலையு மிருக்கிறது.

கீரனூர் :—(கிளியனூர்) சென்னை ராஜதானி புதுக் கோட்டை சமஸ்தானம். இது ஆதியில் வைஜனர் கோயிலா யிருந்தது. 1786-ல் சனசாரி சந்திரர் என்பவ ரால் புதுப்பிக்கப்பட்டது. சம்ஸ்கிருதத்தில் சுகபுரி என்று பெயர். (சுகம் = கிளி) சிவாலயம். பல கல்வெட்டுக ளுடையது.

கீரானூர் :—சென்னை ராஜதானி, மதுரை ஜில்லா, சிவாலயம், சோழ கட்டிடம் ; ஸ்வாமி வாகீஸ்வரர், பல கலவெட்டுகள் உள.

கீரிமலை :—இலங்கையில் யாழ்ப்பாணத்திலுள்ளது. இங்கு முற்காலத்திலிருந்த பழய சிவாலயம் பறங்கியர்களால் இடிக்கப்பட்டது.

கீலாடி : ஷிமோகா ஜில்லா மைசூர் ராஜ்யம் சிவாலயம் ; இரட்டைக் கோயில், ராமேஸ்வரர் வீரபத்திரர் ஆலயங்கள்.

கீழ்நாசக்குடி :—சென்னை ராஜதானி, பிரெஞ்சு இலாகாவிலுள்ளது. ஆதியப்பர் கோயில், கல்வெட்டுகளில் திரு ஆதீசுரமுடையார் என்று ஸ்வாமி திருநாம மிருக்கிறது.

கீழ்க்கரை :—ராமநாதபுரம் ஜில்லா, சென்னை ராஜதானி பழய சிவாலயம் ; வரகுண பாண்டியனால் கட்டப்பட்டதாம்.

கீழக்குறிசி :—புதுக்கோட்டை சமஸ்தானம், சென்னை ராஜதானி, புதுககோட்டைக்கு 14 மயில் சிவாலயம். ஸ்வாமி மஹிஷேஷ்வரர்.

கீழ்வேளூர் :—(திரு) தற்காலம் கேவலூர் என்று அழைக்கப்படுகிறது ; கீவளூர் என்றும் அழைக்கப்படுகிறது. சென்னை ராஜதானி, நாகப்பட்டினம் தாலூகா, சிக்கலுக்கடுத்த ஸ்டேஷன். அகஸ்தியர் பூசித்த க்ஷேத்திரம்; சுப்பிரமணியர் சூரபத்மனைக் கொன்ற பாபம் தீரப் பூசித்த ஸ்தலம். ஸ்வாமியின் பக்கத்தில் பாலசுப்பிரமணியர் தவக்கோலத்துடன் இருக்கிறார். நடராஜர் இங்கு 8 கைகளுடன் இருக்கிறார் ; வலது கால் நர்த்தனம் செய்வதுபோல் காணப்படுகிறது. இங்கு குபேரனுக்கும் இந்திரனுக்கும் கோயில்களுண்டு. இவ்வூருக்கு தட்சிணபதிரகராணயம் என்றும் பெயர் உண்டு. சிவலிங்கம் இலந்தைமரத்தடியில் இருக்கிறது. கோயில் மதில்கள் வெள்ளைக் கற்களால் ஆனவை ; சூரியன் இந்திரன் இவர்களுடைய அழகிய சிலைகள் இங்கே இருக்கின்றன. கோயில்ஸ்டேஷனுக்கு $\frac{3}{4}$-மயில், ஸ்வாமி அட்சய லிங்கேஸ்வரர், தேவி வனமூலைநாயகியம்மை, அஞ்சுவட்டத்தம்மை ; சங்கிதி கட்டு மலையின்மீதுள்ளது. சிவஞான தீர்த்தம் ; ஸ்தல விருட்சம் இலந்தை. இங்குள்ள நடராஜமூர்த்தி அகஸ்தியருக்கு வலது பாத தர்சனம் அளித்துளர். கோயிலின் கோபுரம் முற்றிலும்

கருங்கல்லால் ஆனது. திருஞானசம்பந்தர் அப்பர் பாடல் பெற்றது. கர்ப்பக்கிரகம் சோழக் கட்டிடம்; பிராகாரங்கள் துல்ஜாஜி மஹாராஜாவால் கட்டப்பட்டவை.

கீழப்பழுவூர்:—உடையார்பாளையம் தாலூகா திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி, அரியலூருக்குத் தெற்கிலுள்ளது. திருவையாருக்கு 11-மயில் வடகிழக்கு; இதற்கு ஆலந்துறை என்று மற்றொரு பெயர்; சிறு பழுவூர் என்றும் பெயர். சிவாலயம், ஸ்வாமி வடமூலேஸ்வரர், தேவி அருந்தவநாயகி; பழு = ஆல்; கொள்ளிட தீர்த்தம், பிரம தீர்த்தம். அஷ்ட வீரட்டானங்களில் ஒன்று; யானையை உரித்துப் போர்த்த ஸ்தலம். பிரம்மோற்சவம் பங்குனி மாசம்; திருஞான சம்பந்தர் பாடல்பெற்றது. இங்கு பரசுராமர் பூசித்து மாத்ருஹத்தி நீங்கினார் என்பது ஐதிகம். இதனருகில் **பெரிய** பழுவூரில் ஒரு சிவாலயமுண்டு; பல்லவ கட்டிடம். இவ்வூருக்கு கெடும் கழுவூர் என்றும் பெயர் உளது; ஸ்வாமி சுந்தரேஸ்வரர், தேவி மீனாட்சி.

கீழூர்:—திருக்கோயிலூர் தாலூகா, தென் ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, வீரட்டானேஸ்வரர் கோயில்; ஸ்வாமி பெயர் திருவீரட்டானமுடையார் என்றும், திருக்குகனீஸ்வரமுடையார் என்றும் கல்வெட்டுகளி லிருக்கிறது. ஊர் பெயர் திருக்கோவனூர் என்றிருக்கிறது. பிரஹந்நாயகி-பெரிய நாய்ச்சியார். பழய கோயில் 1907-ம் வருடம் முற்றிலும் புதுப்பிக்கப்பட்டது.

கீழக்கடம்பூர்:—இதற்கு கடம்பையிளங் கோயில் என்றும் பெயர். சீர்காழிக்கு 10-மயில் சிவாலயம், வைப்பு ஸ்தலம்.

கீழூர்:—தென் இந்தியா மலையாள தேசம். சிவாலயம் ஸ்வாமி பாதுகாத்த ஈசர், பார்வதி தேவி.

குக்கனூர்:—மத்திய இந்தியா, நிஜாம் ராஜ்யம், இட்டார்சியிலிருந்து 4-மயில் வடக்கு; சிவாலயம்; ஸ்வாமி கள்ளேஸ்வரர். பெரிய கோயில் 82 × 75 கஜம் விஸ்தீரணம்; இதன் கிழக்கு கோபுரம் 16-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாக பெர்கூசன் நினைக்கிறார். இதற்குப் பின்புறம் 9 சிறு கோயில்கள் உள, நவலிங்கர்கோயில்; அவைகளில் 9 லிங்கங்கள் இருக்கின்றன. இச் சிறு கோயில்கள் 9-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்கலாம் என்று பெர்கூசன்

எண்ணுகிறார். பெரும்பாலும் சாளுக்கிய சில்பம். கோயில்கள் சிவப்பு மணற் கல்லாலாயவை.

குகையூர் :—சென்னை ராஜதானி, கள்ளக்குறிச்சி தாலூகா, சிவாலயம். வெள்ளாற்றங் கரையிலுள்ளது. ஸ்வரமி சுவர்ணபுரீஸ்வரர்; அம்மன் கோயில் அழகிய சில்ப முடையது. கற்களின் அடிப்பாகம் மூங்கிலைப்போல் செதுக்கப்பட்டிருக்கிறது. இங்கு பல கல்வெட்டுகள் உள.

குங்கல்குண்டா :—நரசராவ்பெட் தாலூகா, குண்டூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி போகேஸ்வரர்.

குட்டிபுரம் :—சென்னை ராஜதானி, மலையாள தேசம் பொன்மாரி சிவாலயம்.

குட்லிகி :—பல்லாரி ஜில்லா, சென்னை ராஜதானி, சித்தேஸ்வர் கோயில்; இது தற்காலம் லிங்காயத்தார் வசத்திலிருக்கிறது.

குடவாயில் :—(திரு) கொரடாச்சேரி ஸ்டேஷனுக்கு 8-மயில் வடக்கு, சென்னை ராஜதானி, கருடன் பூசித்தது; அமுதம் கொண்டுவந்து தானும் தன் தாயும் சாபம் நீங்கப் பெற்ற ஸ்தலம். திருணபிந்து முனிவர் பூசிக்க ஸ்வாமி திருக்குளத்திலிருந்து வெளிப்பட்டு அவரது குஷ்ட வியாதியைத் தீர்த்தருளிய க்ஷேத்ரம். ஆகவே திருக்குடவாயில் எனப் பெயர் பெற்றது. ஸ்வாமி சோணேஸ்வரர், தேவி பெரியநாயகியம்மை; அமிர்த தீர்த்தம்; திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

குடிமங்கலம் :—உடுமல்பெட் தாலூகா, கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, பழய சிவாலயம் பாழாயிருக்கிறது. 1538-ம் வருஷத்திய கல்வெட்டுள்ளது.

குடிமல்லம் :—குடியாத்தம் தாலுக்கா, கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி; ரேணுகுண்டா ஸ்டேஷனுக்கு 6-மயில் வடகிழக்கு; சிவாலயம், ஸ்வாமி பரசுராமேஸ்வரர் இங்குள்ள சிவலிங்கம் மிகவும் பழமையானது. கி.மு. இரண்டாம் நூற்றாண்டியது என்பர்; 5-அடி உயரம், லிங்கத்தின் முன்பக்கம் பரமசிவத்தின் உருவம் செதுக்கப்பட்டிருக்கிறது; இரண்டு கரங்கள்தானிருக்கின்றன; வலது கரத்தில் ஒரு ஆட்டை தலைகீழாகப் பிடித்துக்கொண்டிருப்

பதுபோலிருக்கிறது; இடது கரத்தில் ஒரு கரகம்; பின்னிய கேசத்தை உடையது; எக்ஞோபவிதம் கிடையாது. கோபிநாத் ராயர் அவர்கள் இதன் காலம் கி. மு. முதல் நூற்றாண்டு என்று நினைக்கிறார். கோயில் விக்ரமசோழனால் கட்டப்பட்டதாம். துப்ரெயில் துரை லிங்கம் 2000 வருடங்களுக்கு முற்பட்டது என்று எண்ணுகிறார்.

குடிமியாமலை:—சென்னை ராஜதானி, புதுக்கோட்டைக்கு 12-மயில்; இதற்கு சிகாநல்லூர் என்றும் திருமலைக்குன்றம் என்றும் பெயர். சிவாலயம் மிகவும் பழமையானது; பல்லவ சில்பம்; குகைக்கோயில் மஹேந்திரவர்மனால் ஏழாம் நூற்றாண்டில் குடையப்பட்டது. இங்குள்ள ஏழு நிலைக் கோபுரம் ஒரு பாண்டிய அரசன் கட்டியது. ஸ்வாமி சிகைநாதர், தேவி அகிலாண்டேஸ்வரி. அம்மன் கோயிலுக் கெதிரில் ஆறு மூலை வடிவுள்ள ஒரு கல்லின்மீது பழய காலத்தில் புதுக்கோட்டை அரசர்களுக்கு பட்டாபிஷேகம் ஆவது வழக்கமாம். கோயிலுக்குத் தெற்கே அர்த்த சித்திரமாக கணேச விக்ரஹம் உளது; வலம்புரி விநாயகர். இதற்கும் கோயிலுக்கும் இடையில் பல்லவ கிரந்த எழுத்தில் சங்கீதக் கல்வெட்டு ஒன்றுளது. இது ஏழு அல்லது எட்டாம் நூற்றாண்டில் வெட்டப்பட்டதென்பர். இங்கு பின் புறத்திலும் ஒரு மலைக்கோயில் உண்டு, இதற்கு மேலைக் கோயில் என்று பெயர்; இதில் சிவலிங்கமிருக்கிறது. கர்ப்பக் கிரஹமும், அர்த்த மண்டபமும் மலையில் செதுக்கப்பட்டிருக்கிறது. இக்கோயில் மூர்த்தி முன்பு சிகாநாதர் என்றே வழங்கப்பட்டிருக்கவேண்டும் என்று எண்ணுகின்றனர். இங்குள்ள துவாரபாலர்கள், அர்த்தமண்டபத்தில், ஒருவரை ஒருவர் பார்த்தவண்ண மிருக்கின்றனர். இவர்களுக்கு இரண்டு கைகளே உண்டு. மஹேந்திரவர்மன் கோயில்களில் உள்ள உருவங்களை ஒத்திருக்கின்றன. தூண்கள் திருச்சிராப்பள்ளி மலையடிவாரத்திலுள்ள குகைக் கோயில் தூண்களை ஒத்திருக்கின்றன. இங்குள்ள மலைப் பாரையில் 63 நாயன்மார்களுடைய உருவங்கள் வெட்டப் பட்டிருக்கின்றன. கோயில் 23 அடி 8 அங்குலம் × 12 அடி 2 அங்குலம்; லிங்கம் வட்ட வடிவ முடையது.

குடிமூல ராமேஸ்வரம்:—சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி பெயர், கிருதகிருத்திய ராமேஸ்வரர்.

குடியாத்தம் :—வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்; 300 வருடங்களுக்கு முன்பு கட்டப் பட்டது. ஸ்வாமி பாலசார்தூலேஸ்வரர்.

குடிவாடா :—கிருஷ்ணா ஜில்லா, மேற்படி தாலூகா, சென்னை ராஜதானி, பீமேஸ்வரர் கோயில்.

குண்டூர் :—சென்னை ராஜதானி, ரெயில்வே ஸ்டேஷன்; அகஸ்திய ஈஸ்வரர் கோயில்.

குண்டுபல்லே :—கோதாவரி ஜில்லா, சென்னை ராஜதானி, குகைக்கோயில், வட்டவடிவமுடையது. 18 அடி வட்டக் குறுக்களவு, 14 அடி 9 அங்குல உயரம். இது ஆதியில் புத்த ஆலயமாயிருந்தது, அதன் தாதுகர்ப்பம் (தாகோபா) சிவலிங்கமாக மாற்றப்பட்டதென டாக்டர் பர்ஜஸ் கூறுகிறார்.

குண்ணாக்குடி :—சென்னை ராஜதானி, இராமநாதபுரம் ஜில்லா, திருப்பத்தூருக்கு 7 மயில், மதுரைக்கு 45 மயில் (இது பிரபல சுப்பிரமணிய ஸ்தலம்) இங்குள்ள மலையின் அடிவாரத்தில 3 பெரிய குகைக் கோயில்கள் உள. இவை களில் பெரிய லிங்கங்கள் இருக்கின்றன. இவைகளில் பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், கலித்தாண்டவமூர்த்தி உருவங்களும் இவைகளை செதுக்குவித்த அரசன் அரசியின் உருவங்களும் இருக்கின்றன. இங்கு பல கல் வெட்டுகள் உள. இங்குள்ள லிங்கங்களுக்கெல்லாம் சோம சூத்திரம் கிடையாது. நந்திராஜன் என்பவன் தன் தகப்ப னுக்கு சகஸ்ரலி ஸ்திரீயின் மூலமாகப் பிறந்த பிள்ளைக்குத் தன் ராஜ்யத்தை ஒப்புவித்தபோது, சோமசூத்திரமில்லாத லிங்கப் பிரதிஷ்டை செய்யும்படியாக அவனைக் கேட்டுக் கொண்டதாகவும், அதன்படி அவன் 18 கோயில்களில் ஒரே மாதிரியாக 18 லிங்கங்கள் பிரதிஷ்டை செய்ததாகவும் ஐதிகம்.

குணபூடி :—சென்னை ராஜதானி, சோமேஸ்வரர் கோயில்.

குத்தங்குடி :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா குற்றாலம் ஸ்டேஷனிலிருந்து 5 மயில், தொழுந்தூருக்கு அருகிலுள்ளது. ஸ்வாமி கோடீஸ்வரர், தேவி பெரிய நாயகி; தேவார வைப்புஸ்தலம்.

குப்தேஸ்வரர் கோயில்:—விசாகப்பட்டணம் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். நடுகுன்றின் உச்சியி லுள்ளது. ஸ்வாமி குப்தேஸ்வரர் (மறைந்திருக்கும் ஈஸ்வரர் என்று பொருள்படும்) 1650 வருஷம் இங்குள்ள லிங்கம் ஜெயபூர் அரசனுகிய வீரவிக்ரம தேவரால் கண்டு பிடிக்கப் பட்டது. சிவராத்திரி விசேஷம்.

கும்பகோணம்:—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜ தானி, பிரபல சிவஸ்தலம். தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன். இங்கு பல சிவாலயங்கள் உள. (1) **கும்பேஸ் வரர்** கோயில், ஸ்வாமி கும்பேஸ்வரர், தேவி மங்களாம் பிகை. ஏமபுஷ்கரிணி, காவிரி நதி, மஹாமக தீர்த்தம்; திருஞான சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. மஹாமக தீர்த்தம் 20 ஏக்ரா விஸ்தீர்ணமுடையது. இதைச் சுற்றி 16 மண்டபங்கள் உள. அச்சுத நாயக்கர் மந்திரி கோவிந்த தீக்ஷிதரால் இவை கட்டப்பட்டன. பரமசிவத்தின் கட்டளை யால் 12 வருஷங்களுக்கு ஒருமுறை கங்கை இக்குளத்தில் வருவதாக ஐதிகம். அச்சமயம் ஸ்நானம் மிகவும் புனித மானது; லட்சக் கணக்கான ஜனங்கள் வருகின்றனர். இக்குளத்தின் வடகரையிலுள்ள மண்டபத்தில் துலாபுருஷ தானம் செதுக்கப்பட்டிருக்கிறது. அம்மன் ஸ்வாமி சந்நிதி இரண்டும் கிழக்கு பார்த்தவை. அம்மன் சந்நிதி ஸ்வாமி கோயிலுக்குப் புறம்பாயிருக்கிறது. இங்கு சில மண்டபங் களில் சளுக்கிய சில்ப மமைத்த தூண்கள் உள. இவை கொஞ்சம் பிற்பட்ட காலத்தியதாயிருக்கலாம. கோயில் பெரிய கோபுரம், 128 அடி உயரம், 84 அடி அகலம், கோபுரத்திலிருந்து உள்ளே போகும் மண்டபம் 83 அடி நிகளம், 55 அடி அகலம், வெளிப் பிரகாரமெல்லாம் 1,700 வருஷத்திற்கு மேற்பட்டது. லிங்கமானது ஒரு குடத்தின் உடைந்த துண்டுகளை ஒரு பேழையில் வைக்கப்பட்டிக்கிற தாகச் சொல்லப்படுகிறது. இவ்வூருக்கு குடமூக்கு என்றும் பெயர் உண்டு. பிரளய காலத்தில் சகல ஆன்மாக்களையும் சேமித்து இட்ட குடத்தின் மூக்கு தங்கிய இடமாகலின் இப்பெயர் வந்த தென்பது ஐதிகம். பிரம்மோற்சவம் சித்திரை மாசம். இக்கோயிலிலுள்ள அர்த்தநாரீஸ்வரரும், கங்காளமூர்த்தியும் அழகியவை; ஏமரிஷி தாயின் எலும்பு இவ்விடம் பொற்றூமரையாக மாறியதால் இங்குள்ள தீர்த்தத்திற்கு ஏம புஷ்கரிணி என்று பெயர். கோயில்

கோவிந்த தீட்சதரால் முற்றிலும் புதுப்பிக்கப்பட்டது. இதைக் கூறும் ஒரு கல் வெட்டு தவிர, இங்கு வேறு கல் வெட்டுகளில்லை. (2) மல்லிகார்ஜுனர் கோயில் பிரம்மோற்சவம் சித்திரை மாசம். (3) அகஸ்தீஸ்வரர் கோயில் ஸ்வாமி அகஸ்தீஸ்வரர், தேவி பார்வதி, மஹாமக குளத்திற்குக் கிழக்குக் கரையிலுள்ளது. (4) பாணபுரீஸ்வரர் கோயில், ஸ்வாமி சோமசுந்தரர், தேவி குழலாம்பாள். பரமசிவத்தின் பாணம் இங்கு விழுந்ததாக ஐதிகம். (5) கைலாசநாதர் கோயில், ஸ்வாமி கைலாசநாதர், தேவி பார்வதி பட்டு நூல் காரர் வீதியில் உள்ளது. இத்தெருவில் பிரம்மாவுக்கு கோயில் உண்டு. (6) மாதந்தேஸ்வரர் கோயில் ஸ்வாமி மாதந்தேஸ்வரர்-காளத்தீஸ்வரர், தேவி பார்வதி, மேற்கு டபீர் தெருவிலிருக்கிறது. (7) நாகேஸ்வரர் கோயில் இதற்குக் குடந்தைக் கீழ்க்கோட்டம் என்றும் மடந்தையார் கோயில் என்றும் பெயர்; ஸ்வாமி நாகேஸ்வரர், மடந்தை பாகர்; தேவி பெரியநாயகியம்மை, சூரிய தீர்த்தம், சூரிய பூஜை சித்திரை மாசம் 11, 12, 13 தேதிகளில்; இங்கு சூரியனுக்குப் பிரத்தியேகமாக ஒரு சந்நிதியுண்டு. விச்வ கர்மாவினல் ஒளியிழந்த சூரியன் ஸ்வாமியைப் பூசித்து ஒளி பெற்ற ஸ்தலம். இங்குள்ள சபாபதிமூர்த்திக்கு ஆட வல்லான் எனும் பெயர் உளது, பெரிய விக்கிரகம். அர்த்தநாரீஸ்வரர் சிலை மிகவும் அழகியது. கர்ப்பக்கிரஹத்திற்கு வெளியில் பல்லவ சில்பங்கள் பல இருக்கின்றன. கோயிலின் வடபுரத்திலுள்ள மண்டபத்தில் பெரிய யானை குதிரை முதலிய உருவங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவை தஞ்சாவூர் மராட்டிய அரசர்கள் காலத்தில் கட்டப் பட்டவையாம். இங்குள்ள பிரளய கால ருத்திரர் சந்நிதியை சாதாரண ஜனங்கள் எமன் கோயில் என்று அழைக்கின்றனர். இக்கோயிலில் உச்சிஷ்ட கணபதி விக்ரஹம் உண்டு. இங்கு 1053-ம் வருஷத்திய கல் வெட்டு உண்டு. அப்பர் பாடல் பெற்றது. (8) காசிவிஸ்வநாதர் கோயில், இதற்குக் குடந்தைக் காரோணம் என்று மற்றொரு பெயர். ஸ்ரீ ராமர், பரமசிவத்தைத் தொழுது, ராவண சங்காரத்திற் காக, ருத்ராம்சம் பெற்றதாக ஐதிகம்; கோயில் மஹாமக குளத்திற்கு வடக்கிலுள்ளது. உமாதேவி சந்திரன் மார்தாதா சத்தியகீர்த்தி தேவகன்மா பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமி காசி விஸ்வநாதர், சோமநாதர்; தேவி காசி

விசாலாட்சி தேனுர்மொழி யம்மை, சந்திர புஷ்கரணி மஹாமக தீர்த்தம். காரோணம் என்பதற்கு மஹா சங்கார காலத்தில் சிவபெருமான் ஆன்மாக்களைத் தம் மூல் ஐக்கிய மாக்கிக்கொண்ட ஸ்தலம் என்று பொருள்படும், பரமசிவம் கங்கை முதலிய நவ நதிகளையும் அழைத்து மஹாமக குளத்துல் மூழ்கச் செய்ததாக ஐதிகம். இந்த நதிகளின் சிலைகள் கோயிலில் இருக்கின்றன. திரு ஞானசம்பந்தர் பாடல் பெற்றது. மஹாமக காலத்தில் தான் இக்கோயிலில் 10-நாள் பிரம்மோற்சவம். (9) **சோமேஸ்வரர் கோயில்** இது ஏழைச் சோமநாதர் கோயில் என்று தற்காலம் வழங்கப்படுகிறது. ஸ்வாமி சோமேஸ் வரர். தேவி தேனுர்மொழியம்மை, பார்வதி, சந்திரன், பிரகஸ்பதி பூசித்த க்ஷேத்திரம், பொற்முமரைக்குளம், சாரங்கபாணி கோயிலுக்கடுத்தது. இச் சாரங்கபாணி கோயில் ஆதியில் சிவாலயமாக இருந்ததெனச் சிலர் கூறு கின்றனர். (10) அபிமுகேஸ்வரர் கோயில் (11) கௌத மேஸ்வரர் கோயில். கும்பகோணத்தில் பல சத்திரங்கள் உள. அவற்றுள் முக்கியமானவை ரெயில் ஸ்டேஷன் அருகில் உள்ளன; மஹாமகக் குளக்கரையில் இரண்டு, காவிரி ஸ்நானக் கட்டக்கரையில் ஒன்று. இங்கு முசாபர் பங்களாவும் உண்டு.

குயிலாலுவம் :—இமயமலைக்கருகிலுள்ள சிவஸ்தலம்.

குரக்குக்கா :—(திரு) தென்னிந்தியா தலை நகருக்கு 1-மயில் வடக்கிலுள்ளது. ஹநுமார் பூசித்த க்ஷேத்திரம்; ஸ்வாமி கொந்தளேஸ்வரர், தேவி கொந்தள நாயகி, அணும தீர்த்தம், சுரதா தீர்த்தம்; திருநாவுக்கரசு சுவாமி பாடல் பெற்றது.

குரங்குத்தளி :—(திரு) தேவார வைப்புஸ்தலம், சென்னை ராஜதானி ஈரோட்டிலிருந்து கோயமுத்தூருக்குச் செல் லும் வழியில் கூனிபாளையம் ஸ்டேஷனுக்குத் தெற்கே, சஞ்சராஜன் குளத்தருகிலுள்ளது. குரங்கு + தளி குரங் குத்தளி. சுக்கிரீவன் பிரதிஷ்டை செய்த லிங்கம் என்பது ஐதிகம்; ஸ்வாமி சுக்கிரீபேச்சுரர். பல கல்வெட்டுகளுடைய கோயில், இவ்வூருக்குப் பெரியபாளயம் என்றும் பெயர். கோயில் அழகிய சிற்ப வேலை யமைந்தது. தேவியின் விக்ரஹம் சில வருடங்கு முன் களவாடப்பட்டது. இங்கு

ஓர் நில அறையிலின்றும் சில வருடங்களுக்கு முன் நடராஜமூர்த்தி முதலிய விக்ரஹங்கள் கண்டெடுக்கப் பட்டன.

குரங்கணின் முட்டம் :—(திரு) சென்னை ராஜதானி, செங்கல்பட்டு ஜில்லா, காஞ்சீபுரத்திற்கு 6-மயில் தெற்கி லுள்ளது. வாலி பூஜித்த க்ஷேத்ரம். ஸ்வாமி வாலீஸ்வரர் இறையார்வளையம்மை ; வாலிதீர்த்தம், நளகங்கை. குரங்கு (வாலி) + அணில் + முட்டம் (காக்கை) இவை பூஜித்த ஸ்தலமாதலால் இப்பெயர் பெற்றது. கோயில் மிகவும் பழமையானது. பல்லவ கட்டடம். சுமார் ஏழாம் நூற்றாண் டில் கட்டப்பட்டிருக்கலாம். திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

குரங்காடுதுறை :—(திரு) (வடக்கு) வடகுரங்காடுதுறை என்று பெயர். தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, ஐயம்பேட்டை ஸ்டேஷனுக்கு 4-மயில் வடமேற்கிலுள்ளது. வாலி பூஜித்த க்ஷேத்திரம். ஸ்வாமி குலவணங்கீஸ்வரர், அழகு சடைமுடிநாதர், தேவி குவலயநாயகி, அழகு சடை முடியம்மை. காவிரி தீர்த்தம். இங்கிருந்த செங்கல் கோயிலை கண்டராதித்யர் மனைவியாகிய செம்பொன் மாதேவியார் கற்றளி (கருங்கல்லாலாகிய கோயில்) ஆக மாற்றினர்கள். கண்டராதித்யர் காலம் 10-ஆம் நூற்றாண்டின் மத்தியாகும்; பிரம்மோற்சவம் தை மாதம்.

குரங்காடுதுறை :—(தெற்கு) தென் குரங்காடுதுறை என்று பெயர். இதை ஆதிதுறை என்றும் கூறுவர் ; தென் இந்தியா ரெயில்வே ஸ்டேஷன் சென்னை ராஜதானி, சுக்ரீவன், அனுமார் மிருகண்டு ரிஷி பூஜித்த க்ஷேத்திர மாம். ஸ்வாமி ஆபத்சகாயேஸ்வரர், தேவி பவளக்கொடி யம்மை, காவிரி தீர்த்தம், சகாய தீர்த்தம் ; பிரம்மோற்சவம் தை மாதம், திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசு பாடல் பெற்றது.

குருகாவூர் :—(திரு) திருக்கடாவூர் என்றும் திருக்குருகாவூர் வெள்ளடை என்றும் வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி தஞ்சாவூர் ஜில்லா, சீர்காழிக்கு 4-மயில் கிழக்கு. சுந்தரருக் கும் அவரது சிஷ்யர்களுக்கும் சிவபெருமான் கட்டுச் சோறும் தண்ணீரும் வழங்கிய ஸ்தலம். ஸ்வாமி வெள்ளடை-

நாதர், தேவி காவியங்கண்ணியம்மை. திருஞானசம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்றது. தீர்த்தம் கூபதீர்த்தம்.

குருகோடு:—பல்லாரி ஜில்லா, சென்னை ராஜதானி ஹிந்தூளி சங்கமேஷ்வரர் கோயில்; சளுக்கிய கட்டடம்.

குருசந்திரா:—வட இந்தியா, சிவாலயம் சுயம்புலிங்கம், ஸ்வாமி சங்கர்மஹாதேவ்.

குந்தாஸ்பூர் பிரிவு.—வட இந்தியா, பஞ்சாப் மாகாணம்; இங்கு இரண்டு சிவாலயங்கள் உள. (1) மூகேஷ்வரர் ஆலயம் குகைக்கோயில் (2) காலனவூர் சிவாலயம் சிரான்ந்திக் கரையிலுள்ளது. சிவராத்திரி விசேஷம்.

குருவட்டி:—சென்னை ராஜதானி, பல்லாரி ஜில்லா, ஹர்ப்பனஹல்லி தாலூகா, சவுடதாம்பூருக்கு 3-மயில்; சிவாலயம் துங்கபத்ரை கரையிலுள்ளது. ஸ்வாமி மல்லிகார்ஜுனர்; இக்கோயில் கர்பக்கிரஹத்திற்கெதிரில் லங்கையில் பௌத்த ஆலயங்களி லிருப்பதுபோல் சந்திரக் கற்கள் (Moonstones) இருக்கின்றன. மண்டபம் 19-அடி சதுரம், மேலே இடிந்திருக்கிறது. சிகரத்தின் ஸ்தூபி புதுப்பிக்கப் பட்டிருக்கிறது. சளுக்கிய சில்பம். இங்கு வெண்கலத்தாலாகிய ரிஷபவாகன மூர்த்தி உளது.

குருஜாங்கலம்:—வட இந்தியா, சுயம்பு லிங்கம். ஸ்வாமி சண்டேசர்.

குருஜாலா:—சென்னை ராஜதானி, பல்லாரி ஜில்லா, துங்கபத்ரை கரையிலுள்ளது. 108 சிவாலயங்களில் இது ஒன்றாகும்.

குமாரவயலூர்:—சென்னைராஜதானி, திருச்சிராப்பள்ளி ஜில்லா, சிவாலயம், ஸ்வாமி அக்னீஸ்வரர், தேவி பூர்வஸ்திதி நாயகி.

குந்தாபுரம்:—மேற்கு இந்தியா, உடுப்பிக்கு 23-மயில் சிவாலயம், ஸ்வாமி உமாகாந்தர், தேவி உமாதேவி.

குருவாயூர்:—தென் இந்தியா, மலையாள நாடு, சிவாலயம், ஸ்வாமி வடக்குநாதர், உமாதேவி; சித்திரைப் பூரம் விசேஷ உற்சவம்.

குத்தி:—சென்னை ராஜதானி, பல்லாரி ஜில்லா ரெயில் ஸ்டேஷன் சிவாலயம்.

குயிலாலந்துறை :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, மாயவரத்திற்கு 1-மயில் சிவாலயம்; ஸ்வாமி ஆலந்துறை யப்பர், தேவி குயிலாண்டநாயகி; சூரிய தீர்த்தம் சூரியன் பூசித்தது. வைப்புஸ்தலம்.

குருக்ஷேத்ரம் :—வட இந்தியா, டில்லி யருகிலுள்ளது, தானேஷ்வர் ஸ்டேஷனி லிறங்கவேண்டும். தானேஷ்வர் கோயில், ஸ்வாமி தானேஷ்வர்மஹாராஜ், க்ஷேத்திரமும் தீர்த்தமும் மிகவும் புனிதமானவை. இங்கு பல தர்மசாலைகளுண்டு.

குரோசா :—பம்பாய் ராஜதானி, கல்யாண் நகரத்திற்கு அருகிலுள்ளது. சிவாலயம்; மேலைச் சளுக்கியர்களால் குகையில் வெட்டப்பட்டது.

குலசேகரப்பட்டினம் :—சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா, சிவாலயம், ஸ்வாமி காஞ்சி விஜயகண்டேஸ்வரர், தேவி அறம்வளர்த்த நாயகி, ஸ்தலவிருட்சம் மா. மார்க்கண்டேயர் பூசித்த ஸ்தலம்.

குலம்பாந்தல் :—செய்யூர் தாலூகா, வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். கல்வெட்டுகளில் ஸ்வாமி பெயர் கங்கைகொண்ட சோழேஸ்வரமுடையார் என்றிருக்கிறது.

குலமங்கலம் :—திருமெய்யம் தாலூகா, புதுக்கோட்டை சமஸ்தானம், சிவாலயம் குகைக்கோயில்.

குலவைப்பட்டி :—புதுக்கோட்டை சமஸ்தானம் சென்னை ராஜதானி, புதுகைகோட்டைக்கு 10-மயில சிவாலயம், ஸ்வாமி அடவீஸ்வரர்.

குவலயபுரி சமஸ்தானம் (குவாலியர்) இங்கு அடியிற் கண்ட சிவாலயங்கள் உள :—குப்தேஸ்வர் மஹாதேவ் கோயில், மிகவும் கிலமாயிருக்கிறது. 2. குவலயபுரி பட்டணம் ரெயில் ஸ்டேஷன், சிவாலயம் ஸ்வாமி காடேஸ்வர மஹாதேவ், தேவி பார்வதி. 3. அகார்பேய்ஜ்நாத் மஹாதேவ் கோயில். 4. போன்ராசா பன்வர்நாத் மஹாதேவ் ஆலயம். 5. பிப்ளாவன் சிவாலயம். 6. சோனகச், மஹாதேவர் ஆலயம். 7. சுந்தாசி சிவாலயம். 8. பாரோகேரா சார்புஜ் மஹாதேவர் கோயில் 9. ஜவாட் மஹாதேவர் ஆலயம். 10. தாகூராய் பழய மஹா

தேவர் கோயில் கிலமாயிருக்கிறது. 11. அம்ஜீரா சிவாலயம் குகைக் கோயில், இங்கு தேவிக்கும் சந்நிதியுண்டு. அம்மன் பெயர் அம்பிகை.

குளத்தூர் :—சென்னை ராஜதானி, செங்கல்பட்டு ஜில்லா வில்லிவாக்கத்திற்கு 1-மயில் சிவாலயம், ஸ்வாமி சோம நாதேஸ்வரர், தேவி அமிர்தவல்லி, சோம தீர்த்தம்.

குளத்தூர் :—புதுக்கோட்டை சமஸ்தானம் புதுக்கோட்டைகுகு 13-மயில், சென்னை ராஜதானி சிவாலயம். நாமணு என்பவரால் கட்டப்பட்டதென்பர். கோயில் புதியது.

குளத்தூர் :—சென்னை ராஜதானி, செங்கல்பட்டு ஜில்லா சிங்கப்பெருமாள் கோயிலுகு $1\frac{1}{2}$-மயில் தூரம். சிவாலயம் முற்றிலும் பாழாய்ப்போய், பெரிய சிவலிங்கம் மாத்திரம் இருக்கிறது; இங்குள்ள பெருமாள் கோயிலுக் கெதிரில் உள்ளது. ஸ்வாமி பெயர் துளசி ஈஸ்வரர் என்பர் இங்குள்ள வைஷ்ணவர்கள்.

குளத்தூர் :—சென்னை ராஜதானி, வட ஆற்காடு ஜில்லா சிவாலயம்; ஸ்வாமி திருவகலீஸ்வரமுடைய மகாதேவர். இரண்டாம் பிராகாரக் கோயில 1365 ஆம் ஆண்டில் கட்டப்பட்டதாம்.

குவளை :—திருக்குவளை, தியாகராஜ ஸ்வாமி கோயில்; தர்மபுர ஆதீன மேற்பார்வை.

குளித்தலை :—சென்னை ராஜதானி, கடம்பவனேஸ்வரர் கோயில், பிரம்மோற்சவம் மாசி மாதம்; அகண்ட காவிரி ஸ்நானம் விசேஷம். ரெயில் ஸ்டேஷன்.

குற்றாலம் :—இதற்குத் திருத்துருத்தி என்று தேவாரப் பெயர். தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, ரெயில் ஸ்டேஷன். மாயவரத்திற்கு $5\frac{1}{2}$-மயில். சுந்தரர் சங்கிலி நாய்ச்சியார் பொருட்டு செய்த சத்தியம் தவறியமையால் பெற்ற தேகப்பிணி இந்த ஸ்தலத்தில் நீங்கியது. ஸ்வாமி உக்தவேதீஸ்வரர், தேவி மிருதுமுகிளகுசாம்பிகை. சுந்தர தீர்த்தம், காவிரி தீர்த்தம். குறுவாலை விருட்சம். மூவர் பாடல் பெற்றது. மேற்குப்பார்த்த சந்நிதி. கோபுரம் 5-நிலையுடையது.

குற்றாலம் :—சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா, தென்காசி ரெயில் ஸ்டேஷனுக்கு $3\frac{1}{2}$-மயில்மேற்கு.

அகஸ்தியர் விஷ்ணுமூர்த்தியை சிவலிங்கமாக்கி பூசித்த க்ஷேத்ரம். புஷ்பகந்தா, கவுன்சனர் பூசித்த ஸ்தலம். ஆலயம் மூறகாலத்தில் விஷ்ணு ஆலயமாயிருந்து பிறகு சிவாலயமாக மாற்றப்பட்டது. சிவலிங்கத்தின் பின் பெருமாள் உருவம் இருக்கிறதென்பர். ஸ்வாமி குறுபலா ஈஸ்வரர், தேவி குழல்வாய்மொழியம்மை, சித்ராநதி தீர்த்தம்; குறும்பலா விருட்சம். பஞ்ச சபைகளில் இங்கு சித்திர சபை. ஸ்வாமிக்கு துளசி பூசை யுண்டு. கோயில் சங்கைப் போல் கோணகாரமானது. கோயில் வடக்கு பார்த்தது. இப்பக்கம் ஒரு பெரிய கோபுரம் ஆரம்பிக்கப்பட்டு முடிக்கப்படாது விடப்பட்டிருக்கிறது. இது விஜயநகரத்தரசர் காலத்தியதா யிருக்கலாம். தென்காசியி லிருப்பதுபோல் அம்மன் சந்நிதியில் 10 அழகிய சிலை உருவங்கள் உண்டு. அம்மன் சந்நிதியும் ஸ்வாமி சந்நிதியும் அக்கம்பக்கமா யிருக்கின்றன. திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. இங்கு மூசாபர் பங்களா உண்டு, சத்திரங்களுமுண்டு.

குறுநாடு :—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம் ஸ்வாமி புனுகீஸ்வரர்; தேவி சாந்த நாயகி பிரம்மோற்சவம் வைகாசி மாதம்.

குறுமபாளூர் :—சென்னை ராஜதானி, திருச்சிராப்பள்ளி ஜில்லா, சிவாலயம் ஸ்ரீரங்கத்திற்கு 28-மயில்; வைப்பு ஸ்தலம்.

குழிப்பிறை :—திருமெய்யம் தாலுக்கா, புதுக்கோட்டை சமஸ்தானம், சிவாலயம் புதியது.

குறுக்கை:—(திரு) சென்னை ராஜதானி, பொன்னேருக்கு 4-மயில் வடமேற்கு. அஷ்ட வீரட்டானங்களிலொன்று. மன்மதனை எரித்த க்ஷேத்ரம், மார்க்கண்டேயர் பூசித்த தலம். ஸ்வாமி-வீரட்டேஸ்வரர். தேவி-ஞானம்பிகை, சூல தீர்த்தம். அப்பர் பாடல் பெற்றது, தர்மபுர ஆதீனம் மேற்பார்வை.

குறுங்குடி :—தென் இந்தியா, திருநெல்வேலி ஜில்லா சிவாலயம் ஸ்வாமி - சத்திநாதேஸ்வரர், தேவி - பாங்காய நாயகி. பரசுராமர் பூசித்த க்ஷேத்ரமாம்.

குன்றக்குடி :—சென்னை ராஜதானி, மதுரை ஜில்லா, சிவாலயம்; பிரம்மோற்சவம் பங்குனி மீ. ஸ்வாமி-அகஸ்தீஸ்வரர், தேவி உமாதேவி.

குன்றத்தூர் :—குண்ணத்தூர் என்று வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி, செங்கல்பட்டு ஜில்லா, ஸ்ரீபெரும்பூதூர் தாலுக்கா; சேக்கிழார் பிறந்த ஸ்தலம்; பல்லாவரத்திற்கு 2½-மயில், இங்கு பழய சிவாலயமொன்று கிலமாயிருக்கிறது, கஜப்பிருஷ்ட ஆகிருதி. மற்றொரு சிவாலயமும் கிலமாயிருக்கிறது. ஸ்வாமி பெயர் கருதாலீஸ்வரர், அல்லது திருவாலீஸ்வரர், அம்மன் ஞானம்பிகை.

குஜராதிபேடா:—சென்னை ராஜதானி, விசாகபட்டணம் ஜில்லா, சிவாலயம், ஸ்வாமி லட்சேஸ்வரர்.

குஜராத் பிரிவு :—பம்பாய் ராஜதானி, இங்கு அடியிற் கண்ட சிவாலயங்கள் உள. 1. பாஞ்நாத் பாவநாத் மஹாதேவர் ஆலயம். இங்குள்ள தீர்த்தம் குஷ்டரோகத்தை நிவாரணம செய்வதாக ஐதிகம். 2. இடார்; கோக்நாத் மஹாதேவர் ஆலயம். குகைக்கோயில் இடிந்திருக்கிறது. 3. அஹமடாபாட். இங்கு அசர்வா எனும் சிற்றூரில் நீலகண்ட மஹாதேவர் கோயில். 4. வஸ்தரால் மஹாதேவர் சிவாலயம் ஷாவாடி சிவாலயம். 5. பீம்நாத் பீம்நாத் மஹாதேவர் கோயில், பீமன் பிரதிஷ்டை செய்த லிங்கமாம். 6. இங்கு ரேவாகாந்தா சமஸ்தானத்தில், ஜெயோர் என்னுமிடத்தில் கும்பேஷ்வர் மஹாதேவ் கோயில். 7. சானேட் இங்கு கபிலேஷ்வர், காசி விஸ்வநாதர், ஆதித்யேஷ்வர், கமலேஷ்வர், நர்மதேஷ்வர், மார்க்கண்டேஷ்வர் எனும் 6 சிவாலயங்களுண்டு. 8. குஜராத் சிவாலயம்; ஜெயசிம்மரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட லிங்கம். இக்கோயிலில் சஹஸ்ர லிங்கமுமுண்டு.

கூகளூர் :—சத்யமங்கலம் தாலுக்கா, கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, பழய சிவாலயம், சேர அரசர்களால் கட்டப்பட்டதென்பர்.

கூடலி :—ஷிமோகா ஜில்லா, மைசூர் ராஜ்யம், துங்கபத்ரையும் மற்றொரு நதியும் சங்கமமாகுமிடம். சங்கமேஷ்வர் கோயில் கூடலி = சங்கமம் (கன்னட பாஷையில்) இங்கு ராமேஷ்வர் கோயில், பிரம்மேஸ்வர் கோயில் என்று இரண்டு சிவாலயங்கள் உண்டு.

கூடலூர் யாற்றூர் :—(திரு) சென்னை ராஜதானி, சிதம்பரத்திற்கு 16-மயில் மேற்கு; திருமணிமுத்தா நதியும் வெள்ளாறும் கூடும் இடம். வன்மீக ரிஷி பூசித்த ஸ்தலம். விருத்தாசலத்திலிருந்து 14-மயில் சிவாலயம். ஸ்வாமி

நெறிகாட்டு நாயகர், தேவி புரிகுழலாம்பிகை; சங்கு தீர்த்தம், மணிமுத்தாநதி. சுந்தரருக்கு வழிகாட்டியபடியால் ஸ்வாமிகளு நெறிகாட்டு நாயகர் எனப் பெயர் வந்தது; சுந்தரர் பாடல் பெற்றது.

கூந்தலூர் :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, சிவாலயம், ஸ்வாமி சண்பகாரண்யேஸ்வரர், தேவி ஆனந்தவல்லி, குமர தீர்த்தம் சீதா தீர்த்தம்; கும்பகோணம் ஸ்டேஷனிலிருந்து 9-மயில், பேணு பெருந்துரைக்கு அருகிலுள்ளது; குமரக்கடவுள், சீதாதேவி, ரோமரிஷி பூசித்த ஸ்தலம். இங்கு குமரக்கடவுளுக்கு தனியாக ஆலய முளது. ரோமரிஷி சிலை கோபுரத்தின் உட்பக்கம் உளது. தேவார வைப்புஸ்தலம்.

கூரம் :—காஞ்சீபுரம் தாலுக்கா, செங்கல்பட்டு ஜில்லா சென்னை ராஜதானி, கூரம் சாசனத்தில் இங்கு வித்யாவிநீத பல்லவ பரமேஸ்வரர் கோயில் எனும் சிவாலயம் இருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. வித்யாவிநீதன் எனும் பல்லவ அரசனால் கட்டப்பட்ட கோயிலாம். இது பிற்காலம் விஷ்ணு ஆலயமாக மாற்றப்பட்டது. பழய ஆலயம் சுமார் 1300 வருடங்களுக்கு முற்பட்டது; கஜப்பிருஷ்ட ஆகிருதி யுடையது.

கூலுபிரிவு :—வட இந்தியா, பஞ்சாப் மாகாணம், இங்கு பல சிவாலயங்கள் உண்டு: 1. **பிஞ்லிமகாதேவர்** கோயில் மலையிலுள்ளது; 36 × 24 அடி விஸ்தீரணம். அடிப்படை கருங்கல், மேல் கட்டிடம் தேவதாரு மரத்தாலாயது. தூபஸ்தம்பம் 60 அடி உயரம். 2. ஹாட் தாழ்வரையில் கோயில் ஸ்வாமி பாஷேஷ்வர், தற்காலம் பூஜையில்லை $8\frac{1}{2} \times 7$ அடி உள் அளவு, பருமனை சுவர்களால் சூழப்பட்டதால் வெளி அளவு 13 அடி சதுரம். 3. நக்கர் கௌரி திலகர் கோயில். 4. நாஹால் கௌரிஷங்கர் கோயில். 5. **துண்டி**, திரிலோகநாத் கோயில்; இது பூர்வம் புத்த ஆலயமாயிருந்து பிறகு சிவாலயமாக மாற்றப்பட்டதென்பர். 6. **காலாத்** கபிலமுனி கோயில் சிவாலயம்.

கூவம் :—**திருவிற் கோலம்** என்பது இதன் தேவாரப் பெயர். சென்னை ராஜதானி, கடம்பத்தூர் ஸ்டேஷனுக்கு $5\frac{1}{2}$-மயில் தென்மேற்கு, திரிபுர தகனஞ்செய்ய சிவபெருமான் இங்கிருந்து புறப்பட்ட க்ஷேத்ரம். லிங்கத்தின் வர்ண

மானது மழைவரும் காலத்திலும் யுத்தம் நேரிடும் காலத்திலும் மாறுகிறதென்பது ஐதிகம். காரியும் இந்திரனும் பூசித்த ஸ்தலம், ஸ்வாமி திரிபுராந்தகேஸ்வர், தேவி திரிபுராந்தகி யம்மை, ஆவிற்கோல தீர்த்தம், கூபாக்னி தீர்த்தம்; ஸ்வாமிக்கு 12 திருநாமங்களுண்டு. ஸ்வாமி தீண்டாத் திருமேனி, அருகிலுள்ள மணல் திடரிலிருந்து ஊற்றுஜலம் தினம் ஸ்வாமியின் அபிஷேகத்திற்குக் கொண்டுவரப்படுகிறது. பிரம்மோற்சவம் சித்திரை மாதம்.

கூனிமேடு :—தென் ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம் பாழாயிருக்கிறது. இங்கு அச்சுததேவர் (1533) காலத்து கல்வெட்டுளது.

கூவனூர் :—தென் இந்தியா, சிவாலயம்; அகத்தீஸ்வரர் தேவி கர்ப்பூரவல்லி, சந்திரபுஷ்கரணி, அகஸ்திய தீர்த்தம்.

கெங்கனூர் :—கெங்கநல்லூர் என்றும் வழங்கப்படுகிறது. வேலூர் தாலுக்கா, வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, கெங்கேஸ்வரர் கோயில்.

கெம்பாலபாளையம் :—தென் இந்தியா, சிவாலயம் அகஸ்தீஸ்வரர் ஆலயம். ஸ்வாமி அகஸ்தீஸ்வரர், தேவி மரகதவல்லி, தீர்த்தம் பத்மசரஸ்.

கேட் :—பம்பாய் ராஜதானி, பூனாவுக்கு 25-மயில்; சித்தேஸ்வரர் கோயில்; 1725 வருஷம் திரியம்பக் எனும் வாணியனால் கட்டப்பட்டது.

கேதாரம் :—(திரு) வட இந்தியா, இமயமலையிலுள்ள க்ஷேத்ரம்; பிருங்கிமஹரிஷி பூசித்த ஸ்தலம், தன்னை வணங்காத பிருங்கி மஹரிஷியின்பொருட்டு பார்வதிதேவி பரமசிவத்தைப் பூசித்து வாமபாகப் பெற்ற திவ்ய ஸ்தலம். ஸ்வாமி கேதாரீஸ்வரர் அல்லது கேதார்நாத், தேவி கேதார கௌரி அல்லது தாட்சாயினி, புஷ்கரதீர்த்தம், மந்தாகினி தீர்த்தம், நாரதகுண்டா. இங்கு 6 மாதம் தேவர்களும், 6 மாதம் மனிதர்களும் பூசை செய்வர் என்பது ஐதிகம். கோயில் ஒன்றன்பின் ஒன்றாக 3 அறைகள் அடங்கியது. லிங்கம் கடைசி அறையில் இருக்கிறது. இருட்டில் நெய் விளக்கு ஒன்று எரிந்துகொண்டிருக்கிறது. லிங்கம் வட்டத்தின் குறுக்களவு 6-அடி. பக்தர்கள் லிங்கத்தின்மீது வெண்ணெயைத் தடவி ஆலிங்கனம் செய்துகொள்வது

வழக்கம். இந்த லிங்கம் ஆதி சங்கராசாரியரால் பிரதிஷ்டை செய்யப்பட்டதென்பர். வடக்கிலுள்ள 12 ஜோதி லிங்கங்களில் ஒன்றும். கோயில் சமுத்திர மட்டத்திற்கு 11950 அடி உயரம். யாத்திரை செய்வதற்கு மே ஜூன் மாதங்கள்தான் தக்க காலம். மற்ற காலம் கடும் பனியால் இங்கு போவது சாத்தியமல்ல. கோயிலுக்குள் போவதற்கு 3 பைசா கட்டணம். சாதுக்களுக்கு இக் கட்டணம் இல்லை. தெற்கில் கேதார கௌரி விரதம் அற்பிசி மாதம் அனுஷ்டிப்பது இந்த ஸ்தல மஹாத்மியத்தைப் பற்றிதான். பார்வதி பரமசிவத்தை மணந்த ஸ்தலம் என்றும் கூறுவர். இதற்குப் போகும் வழியில் 1. மமதம் 2. துங்கம் 3. ருத்ரம் 4. கோமேஸ்வரம், என்று நான்கு சிவ க்ஷேத்திரங்கள் உள. திருஞானசம்பந்தர் சுந்தரமூர்த்தி பாடல் பெற்றது.

கேதீச்சரம் :—இது இலங்கைத்தீவில் உள்ளது. மாதோட்டம் என்று தற்காலம் அழைக்கப்படுகின்றது. சிவாலயம் மிகவும் சிலமாயிருக்கிறது. ஸ்வாமி கேதீஸ்வரர் தேவி கௌரியம்மை; கௌரி தீர்த்தம். மாலியவான் பூஜித்த ஸ்தலம், திருஞானசம்பந்தர் சுந்தரர் பாடல் பெற்றது.

கேரளபுரம் :—திருவாங்கூர் ராஜ்யத்திலுள்ளது, சிவாலயம், ரவிவர்மா இரண்டு முறை ஜீர்ணோத்தாரணம் செய்தார்.

கைச்சினம் :—(திரு) சென்னை ராஜதானி, திருநெல்வேலிக்கு 2-மயில் கிழக்கு; இந்திரன் பூஜித்த க்ஷேத்ரம், இந்திரன் மணலினால் லிங்கம்செய்து பூஜித்த பிறகு அதை எடுத்து அப்புறம் வைக்கும்போது அவன் கைக்குறி (கைச்சின்னம்) அதில் பட்டது. ஸ்வாமி-கைச்சின நாதேஸ்வரர் தேவி வெள்வளையம்மை, இந்திர தீர்த்தம், லிங்கத்தின் மீது விரல்கள் பட்ட குறி இன்றைக்கும் காணலாம். திரணபிந்து பூஜித்த ஸ்தலம், திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

கைட்டா :—தும்கூர் ஜில்லா, மைசூர் ராஜ்யம், சிவாலயம், 1150 ஆம் வருஷம் குலேபொச்சி என்பவரால் கட்டப்பட்டதாகக் கல்வெட்டினால் தெரிகிறது.

கைரா பிரிவு :—பம்பாய் ராஜதானி, இங்கு பாட்வன்ஜ் எனும் ஊரில் சிவாலயம், பூமி மட்டத்திற்கு கீழிருக்கிறது.

கைலாயம் :—(திரு) இதற்கு வெள்ளியங்கிரி என்றும் பெயர், இமயமலையிலுள்ளது. ஸ்வாமி கைலாசநாதர் அல்லது பரமசிவம், தேவி பார்வதி அல்லது கிரிஜா ; மஹா சிவதீர்த்தம், இதை நோடித்தான்மலை என்று சுந்தரர் பாடியுள்ளார். சரவணப்பொய்கை தீர்த்தம் ; மூவர் பாடல் பெற்றது. கைலாயகிரிக்குப் போகும் மார்க்கத்தில் காளி கங்கையும் சரோஜா எனும் நதியும் கூடுமிடத்தில் ஒரு சிவாலய மிருக்கிறது.

கொடுங்கோளூர் :—தென் இந்தியா மலையாள தேசம், அஞ்சைக்களத்திற்கு 3 மயில் சிவாலயம் ; ஸ்வாமி சிதம்பரேசர், தேவி சிவகாமி ; இடங்கழி நாயனார் முத்திபெற்ற ஸ்தலம், தேவார வைப்புஸ்தலம்.

கொங்கணம் :—தென் இந்தியா மலையாள தேசம் சிவாலயம் ; ஸ்வாமி கிரீசர், உமாதேவி ; வைப்புஸ்தலம்.

கைலாயபுரம் :—திருநெல்வேலி ஜில்லா, சிந்துபூந்துறை சென்னை ராஜதானி, ஸ்வாமி கைலாசநாதர் தேவி சிவகாமி ; தாம்ரபர்ணி தீர்த்தம் ; அகஸ்தியர் பூஜித்த ஸ்தலம்.

கோட்டயம் :—மலையாளம் சென்னை ராஜதானி, அரிசி பரம்பு சிவாலயம் ; சிறிய கோயில்.

கோட்டையூர் :—சென்னை ராஜதானி, செட்டிநாட்டிலுள்ளது காரைக்குடிக் கருகில் சிவாலயம், ஸ்வாமி சுந்தரேஸ்வரர், தேவி மீனாட்சியம்மன்.

கோட்டையூர் :—சென்னை ராஜதானி கும்பகோணத்திற்கு 2 மயில் வட மேற்கு ; ஸ்வாமி கோடீஸ்வரர், தேவி பந்தாடுநாயகியம்மை, கோடி தீர்த்தம் ; மார்க்கண்டேயர், பத்திரயோகி, ஆத்திரேயர் பூஜித்த ஸ்தலம், ஸ்வாமி ஆமணக்கு கொட்டைச் செடியின்கீழ் இருந்து தோன்றியமையால் கொட்டையூர் எனப் பெயர் பெற்றது. சோழ மகாராஜாவுக்கு கோடிலிங்கமாகத் தரிசனம் கொடுத்தமையால் கோடீஸ்வரர் என்று ஸ்வாமிக்கு திருநாமமுண்டு. பெரிய லிங்கத்தில் அநேகம் சிறு லிங்கங்கள் இருப்பது போல் காணப்படும். திருவலஞ்சுழியில் காவிரியின் ஜலத்தில் இறங்கிய ஏரண்ட முனிவர் இங்கு வெளிவந்து அனுக்கிரஹம் பெற்றார். ஆகவே இதற்கு ஹேரண்டபுரம் எனும் நாமமுண்டு. இக்கோயிலில் ஏரண்ட முனிவர் பிரதிஷ்டை

செய்த லிங்கம் ஒன்றுண்டு. இந்த ரிஷியின் சிலையு மிருக்கின்றது. அப்பர் பாடல் பெற்றது.

கோடக்கல் :—(குடைக்கல் ?) மலபார் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்.

கோடகனி :—சொராப் தாலூகா, ஷிமோகா ஜில்லா, மைசூர் ராஜ்யம், சித்தராமேஸ்வரர் கோயில்.

கோடகனூர் :—மைசூர் ராஜ்யம், தேவாங்கரெ தாலூகா சிவாலயம், ஸ்வாமி கள்ளேஸ்வரர்.

கோடசாத்ரி :—மைசூர் ராஜ்யம், நரசிம்மராஜபுரம் ரயில் ஸ்டேஷனுக்கு 3 மயில் சிவாலயம் ; ஸ்வாமி சங்கமேஸ்வரர்.

கோண்டல் :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா சீர்காழிக்கு 3 மயில் சிவாலயம், ஸ்வாமி தாரகப் பரமேஸ்வரர், தேவி பார்வதி வைப்புஸ்தலம்.

கோழுமம் :—சென்னை ராஜதானி, மதுரை ஜில்லா, பழனிக்கு 9 மயில் சிவாலயம் ; ஸ்வாமி சோமேஸ்வரர் தேவி பிரஹதாம்பாள்.

கோல்லம் :—தென் இந்திய மலையாளதேசம், சிவாலயம் ; ஸ்வாமி பரமேஸ்வரர், பார்வதி தேவி ; ரயில்ஸ்டேஷன்.

கோண்டாபுரம் :—சென்னை ராஜதானி, வட சர்க்கார் தாடிபத்ரிக்கு 17 மயில் சிவாலயம். இதனருகில் குண்டி கோட்டா, பெண்ணேறு எனும் இடங்களில் சிவாலயங்கள் உண்டு.

கோடிமங்கலம் :—மதுரை ஜில்லா, சென்னை ராஜதானி, சிலாலயம்.

கோடுங்குன்றம் :—(திரு) பிரான்மலை என்றும் பெயர் பெற்றது. சென்னை ராஜதானி அம்மைய நாய்க்கனூர் ஸ்டேஷனுக்கு 16 மயில் வடகிழக்கு ; மஹோதரர் எனும் ரிஷி பூசித்த ஸ்தலம் ஸ்வாமி கொடுங்குன்றீஸ்வரர் தேவி குயிலமிர்தநாயகியம்மை, சுந்தர தீர்த்தம், ஸ்வாமி மணவாளக்கோலத்துடன் இருக்கிறார். மலை உச்சியில் ; கார்த்திகை தீபம் விசேஷம். (இங்கு சுப்பிரமணிய சந்நிதி விசேஷம்) திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

கொடும்பாளூர் :—இதற்கு தற்காலம் மூவர் கோயில் என்றுப் பெயர் ; சோழ அரசனாகிய பூதி விக்ரமகேசரியும் அவனது இரண்டு மனைவிகளும் சேர்ந்து கட்டியமையால்

மூவர் கோயில் எனப் பெயர்பெற்ற தென்பர் 950-970-40 பூர்வ காலத்தில் மூன்று கோயில்களிருந்தனவாம்; தற்காலம் ஒன்றுதானிருக்கிறது. பழயகோயில் பத்தாம் நூற்றாண்டின்முன் கட்டப்பட்டதாம்; அழகிய சில்பமமைந்தது; கிலமாயிருக்கிறது. சிலப்பதிகாரத்தில் இவ்வூர் குறிக்கப்பட்டிருக்கிறது. கர்ப்பக்கிரஹம் 8 அடி 9 அங்குலம் சதுரம்; பிராகாரம் 17 அடி 9 அங்குலம் x 15 அடி விஸ்தீர்ணம் பல்லவ கட்டிடம்; இங்கு 3 லம்புரி வினயகர்களுண்டு இவ்வூரில் மற்றொரு சிவாலயமுண்டு.

கோத்தமங்கலம் :—சென்னை ராஜதானி செட்டிநாடு சிவாலயம் ஸ்வாமி தம்மனஈஸ்வரர்.

கோடிமுடி :—ஈரோடு தாலூகா, கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம், ஸ்வாமி மகுடேஸ்வரர் தேவி சௌந்தரநாயகி, கொங்குதேசத்து 7 சிவாலயங்களுள் இது ஒன்றும்; இங்கிருக்கும் வன்னிமரம் மிகவும் புராதனமானதென்பர், இதற்குப் பூவும் காயும் கிடையாதென்பர்.

கொடுவாயூர் :—தென் இந்தியா விஸ்வநாதர் கோயில்.

கொண்டகம்பேடு :—சென்னை ராஜதானி, விசாகப்பட்டணம் ஜில்லா, இங்கு 1½ மயில் தூரத்தில் காட்டின் நடுவில் ஒரு பழய சிவாலயம் உண்டு; பூஜை நடக்கிறது. வழிப்போக்கர்களெல்லாம் ஒரு புஷ்பத்தால் சிவலிங்கத்தை அர்ச்சனை செய்து போவது வழக்கமாம்.

கொண்டல் :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, சிவாலயம், இங்கு விஷ்ணு ஒருபுறம் இருக்கிறார். ஸ்வாமி தாரக பரமேஸ்வரர், விஷ்ணு வழிபட்டதால் கொண்டல் வண்ணன்குடி எனப் பெயர் பெற்றது. அப்பெயர் நாளடைவில் கொண்டல் எனக் குறுக்கப்பட்டது. சீர்காழிக்கு 3½ மயில் தூரம்.

கொண்டிவிடி :—பம்பாய் ராஜதானி, சால்செட்டுக் கருகில் கோகேஸ்வரர் குகைக்கோயில்.

கொண்டீச்சரம் :—(திரு) சென்னை ராஜதானி, நன்னிலத்திற்கு 1½ மயில் மேற்கு, காமதேனு பூசித்த க்ஷேத்ரம். இதற்கு வில்வாரண்ய க்ஷேத்ரம் என்றும் பெயர். ஸ்வாமி பசுபதீஸ்வரர், தேவி சாந்தநாயகி, திருநாவுக்கரசு பாடல் பெற்றது.

கோமரலிங்கம் :—உடுமலைபேட்டை தாலூகா, கோய முத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, பழைய சிவாலயம் சோழ கட்டடம்.

கோரமங்கலம் :—மைசூர் ராஜ்யம் புச்சேஸ்வரர் கோயில் 1173ஆம் கட்டப்பட்டது. சளுக்கிய சில்பம். இதற்கு அருகில் நாகேஸ்வரர் கோயில் என்று ஒரு சிவாலயமுண்டு.

கோரிங்கா :—கோதாவரி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம், கொரிங்கேஸ்வரஸ்வாமி லிங்கம், ஸ்ரீ ராமர் பிரதிஷ்டை என்பர்.

கோல்ஹாபூர் பிரிவு :—பம்பாய் ராஜதானி இங்கு பல சிவாலயங்கள் உள (1) ஆக்ரா, ஸ்வாமி ராம்லிங், சிறிய கோயில், அருகில் ஒரு நீர்வீழ்ச்சி யுண்டு. சிவராத்ரி விசேஷம். (2) ஆல்டா ராமலிங்கஸ்வாமி குகைக்கோயில்; இங்கிருக்கும் கணபதி விக்ரஹத்தினின்றும் தண்ணீர் எப்பொழுதும் கசிந்துகொண்டே யிருக்கிறதென்பர். சிறு கோயில் 12 அடி சதுரம், நீலகங்கை தீர்த்தம் (3) பாடோலி சிவாலயம் ஸ்வாமி பத்ரேஷ்வர் கோயில் 122 அடி சதுரம் (4) கடின்கிளாஜ் காலேஷ்வர் சிவாலயம். 30 × 20 × 20 அடி விஸ்தீர்ணம் (5) ஹெர்லா மஹாதேவர் கோயில் 34 × 21 அடி. (6) ஹூப்ரி சிவாலயம் (7) ஜோதிபாடுன்று, இவ்வூரில் 3 சிவாலயங்கள்; கேதார்லிங் ஆலயம் பழய கோவில் நங்கிசாயா என்பவரால் கட்டப்பட்டது ஆதியில், பிறகு 1730 வருஷம் ராணேஜி ராவ் என்பவரால் புதுப்பிக்கப்பட்டது. கேதாரேஷ்வரர் கோயில் 49 × 22 × 89 அடி விஸ்தீர்ணம் 1808 வருஷம் கட்டப்பட்டது; ராம்லிங் கோயில் 13 × 13 × 40 விஸ்தீர்ணம் 1780இல் கட்டப்பட்டது. (8) காளசி சித்தேஷ்வர் கோயில் 20 × 20 × 30 விஸ்தீர்ணம். (9) காசர்டே தோபேஷ்வர் கோயில் (10) கிதர்பூர் கோபேஷ்வர் ஆலயம் 103 × 65 × 52 விஸ்தீர்ணம்; கோயிலுக் கெதிரில் சுவர்க்க மண்டபம் என்று ஒரு மண்டபம் இருக்கிறது. (11) கோல்ஹாபட்டணம் காசிவிஸ்வேச்வர் ஆலயம், மற்றொரு சிவாலயம் மலையின் உச்சியிலுள்ளது; பிராகாரம் பாழா யிருக்கிறது. (12) மல்காபூர், பிம்ஷங்கர் கோயில் 55 × 29 × 18 விஸ்தீர்ணம் விஸ்வேஸ்வர் கோயில் 58 × 29 × 18 விஸ்தீர்ணம். (13) ருக்டி மஹாதேவர் கோயில் 15 × 15 × 11 விஸ்தீர்ணம் (14) ராய்பாக் சோமேஷ்வர், சித்தேஷ்வர் ஆலயங்கள்.

(15) ஷிரால் காலேஷ்வர் கோயில் 35 × 25 × 28 விஸ்தீர்ணம் (16) ரம்கவி ஷங்கர்லிங் கோயில் சுமார் 110 வருடங்களுக்குமுன் கட்டப்பட்டது; 25½ × 20 × 15 அடி விஸ்தீர்ணம்; இங்கு அருகாமையில் சிறு குன்றில் பர்வ தேஷ்வர் கோயில், மல்லிகார் ஜுனர் கோயில் என்று இரண்டு சிவாலயங்கள் உள. (17) கேத்ராபூர் கொல்ஹாபூர் பட்டணத்திற்கு 30 மயில் கிழகு கோப்பெல்லார், கோயில் பெரியது; கோயில் முடிக்கப்படவில்லை. சிலுக்கிய கட்டடம் 1213ஹூ புதுப்பிக்கப்பட்டது. (18) தேராடால் இங்கு 4 சிவாலயங்கள் உள. லட்சுமேஸ்வர், சோமேஷ்வர், லட்மீஸ்வர் லட்சுமிலிங்கேஸ்வர்; இவைகள் சுமார் 1000 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டவையாம்.

கொல்லாபுரம் :—சென்னை ராஜதானி, அனந்தபூர் ஜில்லா, சோழ அரசனல் கட்டப்பட்ட சிவாலயம்.

கொல்லகொல்லா :—கும்சூர் தாலுக்கா, கஞ்சம் ஜில்லா, சென்னை ராஜதானி; இங்கு 2 சிவாலயங்கள் உள (1) கங்காதரேஸ்வரர் கோயில் (2) ஜகதேஸ்வர ஸ்வாமி கோயில்.

கொல்லபாயம் :—நெல்லூர் ஜில்லா, சென்னை ராஜதானி, இங்கு இரண்டு சிவாலயங்கள் உள. மணலில் மூடப்பட்டிருக்கின்றன.

கொலாபாபிரிவு :—பம்பாய் ராஜதானி, இங்கு நான்கு சிவாலயங்கள் உள. (1) அட்சி சோமேஷ்வர் கோயில் (2) செயுல் தூமேஷ்வர் கோயில், (3) ராமேஷ்வர் கோயில், இங்கு மூன்று குண்டங்கள் உள, அக்னி குண்டம், வாயு குண்டம் பர்ஜன்ய குண்டம் (4) கங்கேஷ்வர் கோயில், இது அழகிய சில்பமுடையது.

கொழும்பு :—இலங்கைத்தீவிலுள்ளது. சிவாலயம் புதியது ஸ்வாமி, பொன்னம்பலவனேஸ்வரர், தேவி சிவகாம சுந்தரி கோயில் கொகந்தேபோம் தெருவில் ஹார்பருக்குப் பக்கத்திலுள்ளது. மூதலில் செங்கல் கட்டடமாயிருந்தது; தற்காலம் சர். பி. ராமநாதம் அவர்களால 1910 ஆண்டில் கருங்கல்லால் கட்டப்பட்டது.

கொள்ளம்பூதூர் :—(திரு) நந்நிலம் தாலூகா, தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, திருக்கரம்பூர் செல்லூர் எனவும், வழங்கப்படுகிறது. நீடாமங்கலம் ஸ்டேஷனுக்கு 6 மயில் வடகிழக்கு; கொரடாச்சேரி ஸ்டேஷனிலிருந்து 3

மயில் வடக்கு. திருஞானசம்பந்தர் அடியார்களுடன் கோலில்லா நாவாய்மீதேறி, தாமாக ஓடம்விட்டு ஆற்றைக் கடந்த க்ஷேத்ரம். இந்த ஐதிகம் ஐப்பசி மாதம் அமா வாசையில் நடத்தப்படுகிறது. சாண்டில்யரிஷி பூசித்த ஸ்தலம். ஸ்வாமி வில்வவனநாதர், தேவி சௌந்தராம்கை, வில்வ விருட்சம், வெட்டாறு எனும் முள்ளிநதியின் கீழக் கரையிலுள்ளது. நான்கு யுகங்களிலும் முறையே பிரம வனம், பஞ்சாக்கரபுரம், காண்டீபவனம், வில்வ வனம் எனும் பெயரைப் பெற்றதாம். விநாயகர், வரகுணபாண்டி யன், பிரமன், அகஸ்தியர், ஆதிசேஷன், இடைக்காடர், விஜயன், சிலந்திச்சோழன் முதலியோர் பூசித்த ஸ்தலம். பழய கோயில் முற்றும் பிரிக்கப்பட்டு 1930-37 ஆம் வருடங் களில் புதியதாய்க் கட்டப்பட்டது. ஸ்வாமி கோயில் கோபுரம் 5 நிலைகளுடையது. இவ்வூருக்குப் போக பஸ் வசதி யுண்டு. திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

கொள்ளிக்காடு :—(திரு) சென்னை ராஜதானி பொன் னிறை ஸ்டேஷனுக்கு 3½-மயில் மேற்கு சுதீட்சணரிஷியும், அக்னிபகவானும், சனீஸ்வரரும் பூசித்த ஸ்தலம். ஸ்வாமி அக்னீஸ்வரர் அல்லது தீவண்ணநாதர், தேவி பஞ்சினும் மெல்லடியம்மை. (இங்குள்ள சனீஸ்வரர் சந்நிதி பிரசித்தி பெற்றது) திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

கொள்ளேகால் :—கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்.

கொள்ளேகால் :—மைசூர் ராஜ்யம், சிவசமுத்திரத்திற்கு 6-மயில்; மஹாதேவர் ஆலயம்.

கொளிஞ்சவாடி :—தாராபுரம் தாலூகா, கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி சொக்கநாதர், தேவி மீனாட்சியம்மன்.

கொறுக்கை :—சென்னை ராஜதானி, மாயவரத்திற்கு 5-மயில் வடமேற்கு, சிவாலயம்; மன்மதனை சிவபெருமான் எரித்த ஸ்தலம் என்று சிலர் கூறுவர்.

கொனிதேனு :—நரசராவ்பேட்டை தாலூகா, குண்டூர் ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம் ஸ்வாமி சங்கரர்.

கோக்ராகட் :—வட இந்தியா சிவாலயம். ஸ்வாமி மஹாதேவர், கோக்ராநதி தீர்த்தம்.

கோகர்ணம்:—வட கன்னட ஜில்லா, பம்பாய் ராஜதானி; பிரபல சிவாலயம். கார்வார் என்னும் ஊருக்கு 30-மயில். இதற்கு பூகைலாசம் என்றும் பெயர். ஸ்வாமி-மஹா பலேஷ்வர், தேவி கோகர்ண நாயகி-பார்வதி. கோடி தீர்த்தம் ராமதீர்த்தம்; இங்கு போவதற்கு மார்ம கோவா வுக்கு ரெயில் மார்க்கமாய்ப் போய், அங்கிருந்து தாத்ரிக்கு ஸ்டீமர் மூலமாய்ப போய், அங்கிருந்து வண்டி மார்க்கமாய்ப் போய்ச் சேரவேண்டும். கோயில் திராவிட சில்பம். சிவலிங்கம் பசுவின் காதுபோல் குழைந்து நீண்டபடியால் கோகர்ணம் எனப் பெயர்பெற்றது. இராவணன் தன் தாயாருக்காக கைலாயத்தில் பார்வதிதேவியார் பூசித்து வந்த ஆத்ம லிங்கத்தைக் கொண்டுவரும்பொழுது விநாயகர் சூழ்ச்சியால் அது இங்கு வைக்கப்பட்டதாம். ராவணன் லிங்கத்தைப் பெயர்க்க முயன்றபொழுது முறுக்கப்பட்டதாம். ராவணனது விரல்கள் லிங்கத்தில் வடுவா யிருக்கிறது. ராவணன் தன் முழு பலத்தையும் கொண்டு பெயர்க்க முயன்றும் முடியாமற்போனபடியால் ஸ்வாமிக்கு மஹாபலேஷ்வர் எனப் பெயர் உண்டாயிற்று. லிங்கம் சில அங்குல உயரம். அதன் பெரும்பாகம் பீடத்தி லிருக்கும் ஜலத்தில் மறைந்திருக்கிறது. 25 வருடங்களுக்கு ஒருமுறை அஷ்டபந்தனம் செய்யப்படுகிறது. இக்கோயி லில் ஆதி கோகர்ண லிங்கம் என்று ஒரு லிங்கம் இருக் கிறது. ஸ்ரீராமர் ஆத்ம லிங்கத்தை பூசித்ததாக ஐதிகம். இங்கு கோடிதீர்த்தத்தின் மத்தியில் சப்த கோடீஸ்வரர் லிங்கம் என்று ஒன்றுண்டு. ஷாஸ்திரேஸ்வர் லிங்கம் 18 அங்குலம் நிகளம், 2½ அடி சுற்றளவு. இங்கு அருகாமை யில் பல சிவாலயங்கள் உள. 1. அகஸ்தீஸ்வரர் கோயில் 2. வசிஷ்டேஸ்வரர் கோயில் 3. சங்கரநாராயணர் கோயில்; இது பாதி மஹாவிஷ்ணு 4. விஸ்வாமித்ரேஷ்வர் கோயில 5. அமிர்தேஸ்வரர் கோயில் 6. காயத்ரி, சாவித்ரி, சரஸ்வதி லிங்கங் கள் 7. விதுத்பாசேதலேஷ்வர் கோயில் 8. கேஷ்வர் கோயில் 9. மோரதேஷ்வர் கோயில் 10. தாரேஷ்வர் கோயில் 11. குமண்டேஷ்வர் கோயில் 12 காலகேஷ்வர் கோயில் மற்றும் கும்பகர்ணலிங்கம், விபீஷண லிங்கம், நாகேஷர் லிங்கம் சனத்குமார லிங்கம் முதலிய லிங்கங்கள் உள. திருஞான சம்பந்தர் திருநாவுக்கரசர் பாடல் பெற்ற ஸ்தலம்.

கோகர்ணம்.—கைவல்யமடச் சிவாலயம். இம்மடத்து ஸ்வாமியாரால் சில வருடங்களுக்குமுன் கட்டப்பட்டது. இங்குள்ள சிவலிங்கத்திற்கு சக்ரவர்த்திலிங்கம் என்று பெயர் இது ஒரு ஆங்கிலேயரால் சீமைக்குக் கொண்டுபோய் திருப்பி அனுப்பிக்கப்பட்டது.

கோட்டாறு.—(திரு) திருநள்ளாறு தென் இந்தியா ஸ்டேஷனிலிருந்து 3-மயில் வடமேற்கு. வெள்ளையானை பூசித்த சிவாலயம்; ஸ்வாமி ஐராவதேஸ்வரர், தேவி வண்டார்பூங்குழலி யம்மை; சூரிய தீர்த்தம். கோச்செங்கண்ணச் சோழனால் கட்டப்பட்ட கோயில்.

கோட்டியூர்:—சென்னை ராஜதானி, மலையாள நாடு சிவாலயம். பிரம்மோற்சவம் சித்திரைமாதம். பரசுராமர் பூசித்த ஸ்தலம்.

கோஷ்டியூர்:—சென்னை ராஜதானி, திருப்புத்தூருக்கு 5 மயில்; இங்கு பிரபலமான விஷ்ணு ஆலயத்திற்குள் சிவாலயம் ஒன்றுளது. ஸ்வாமி சரபலிங்கர் இங்குத் தெப்பக்குளத்தருகில் பைரவனார் எனுமிடத்தில் ஒரு சிவாலயமுண்டு. ஸ்வாமி மெஞ்ஞானர், தேவி பாகம் பிரியாள்.

கோட்டூர்;—(திரு) சென்னை ராஜதானி, மன்னார்குடி ஸ்டேஷனுக்கு 10 மயில் தெற்கு. குச்சரரிஷி பூசித்த க்ஷேத்ரம். ஸ்வாமி கொழுந்தீஸ்வரர், தேவி மதுரவசனம்பிகை, அமிர்த தீர்த்தம்; திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

கோட்டைக்குப்பம்:—சென்னை ராஜதானி, சிவாலயம் ஸ்வாமி புண்யகோடீஸ்வரர். தேவி அன்னபூரணி, புண்ய கோடி தீர்த்தம்.

கோட்டையம்:—திருவாங்கூர் ராஜதானி, ஹரிக்குன்றம் சிவன்கோயில்.

கோட்டையூர்:—திருமெய்யம் தாலூகா புதுக்கோட்டை சமஸ்தானம் சிவாலயம், பழய கோயில், பாண்டிய காடவர்மன் காலத்திய கல்வெட்டு இங்கு ஒன்றுளது. இதற்குக் கோட்டூர் என்றும் பெயர்.

கோட கருங்குளகும்:—திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜதானி, நாங்குநெறி தாலூகா, சிவாலயம், ஸ்வாமி ராஜசிம்மேஸ்வரர்.

கோடகேரி :—உடுப்பி தாலூகா, சென்னை ராஜதானி தென் கன்னட ஜில்லா, பாரக்பூர் அருகிலுள்ளது. பஞ்ச லிங்கேஸ்வரர் கோயில்.

கோடப்பகொண்டா :—குண்டூர் ஜில்லா, சென்னை ராஜதானி, நரசராவ் பேட்டைக்கு 10 மயில், சிவாலயம் சிறு குன்றத்தில் இருக்கிறது; பூமி மட்டத்திற்கு 600 அடி உயரம், புராதன கோயில், மாசி மாசம் பிரம்மோற்சவம், சிவராத்ரி விசேஷம். ஸ்வாமி திரிகோடீஸ்வரர். மலைமீது ஒரு சத்திரம் உண்டு.

கோடி :—திருக்கோடி, குழகர் கோயில், குழவர் கோயில் எனவும் வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி, திருத்தருபூண்டி ஸ்டேஷனிலிருந்து 32 மயில்; சிவாலயம், ஸ்வாமி அமிர்தலிங்கேஸ்வரர் (அமிர்தத்திலிருந்து உத்பவித்தவர்) தேவி மையார் தடங்கண்ணியம்மை, அமிர்த தீர்த்தம்; வேதாரண்யத்திற்கு 6 மயில். சுந்தரர் பாடல் பெற்றது. வாயுதேவர் பூசித்த ஸ்தலம்.

கோடிக்கரை :—(திரு) வேதாரண்யத்திற்கு 8 மயில், சென்னை ராஜதானி, இதற்கு ஆதி சேது என்றும் பெயர். ஸ்ரீராமர் பூசித்த க்ஷேத்திரம். இங்குள்ள சிவாலயத்து சுப்பிரமணியருக்கு 6 கரங்கள் தானுள; இடது கரம் ஒன்றில் அமிர்த கலசம் வைத்துளார். ஸ்வாமி அமிர்த கடேசர் தேவி மையார்தடங்கண்ணி. வருணன் பூசித்த ஸ்தலம்; சுந்தரமூர்த்தி நாயனார் பாடல் பெற்றது.

கோடிகா :—திருக்கோடிக்காவல் என்று வழங்கப்படுகிறது; சென்னை ராஜதானி, திருவிடைமருதூருக்கு 1½ மயில் கிழக்கு, மூன்று கோடி ரிஷிகள் பூசித்த ஸ்தலம். ஸ்வாமி திருக்கோடீஸ்வரர் அல்லது கோடிக்கா ஈஸ்வரர், தேவி வடிவாம்பிகையம்மன், காவிரிநதி அகஸ்திய தீர்த்தம், திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் பாடல்பெற்றது.

கோடி தீர்த்தம் :—நெல்லூர் ஜில்லா சென்னை ராஜதானி கோடேஸ்வர ஸ்வாமி கோயில், முக்கிய உற்சவம் மாசி மாதம்; கல்யாண உற்சவம் விசேஷம். சுயம்புலிங்கம்.

கோடிபல்லி :—கோதாவரி ஜில்லா, சென்னை ராஜதானி சோமேஸ்வரர்; கோயில் சந்திரன் தாரையைச் சேர்ந்த பாபம் தீரக் கட்டிய கோயில் என்பது ஐதிகம். இங்கு கோடீஸ்வரர் கோயில் என்றும் ஒரு சிவாலயமுண்டு.

கோடிமங்கலம் :—மதுரை ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம், பல கல்வெட்டுகளுடையது; இவை மராமத் காலத்தில் தாறுமாறாய் மாற்றி வைக்கப்பட்டிருக்கின்றன.

கோடீஸ்வரம் :—இதற்கு ஒய்க்காடு என்றும் பெயர். தென் இந்தியா சிவாலயம், ஸ்வாமி கோடீஸ்வரர், தேவி கொடியிடைவல்லி, தாம்ரபர்ணி தீர்த்தம், அகஸ்தியர் ஸ்வாமியை மணலாலாகிய லிங்கத்தால் பூசித்த ஸ்தலம்.

கோடேஸ்வர் :—வட இந்தியா அம்போகிக்கு 4 மயில் சிவாலயம், ஸ்வாமி கோடேஸ்வர், தேவி மஹா தேவி, குமரி தீர்த்தம், சிவாலயம் காட்டின் மத்தியிலுள்ளது பில்ஸ் எனும் ஜாதியார் வசிக்குமிடத்தில்.

கோடேஷ்வர் :—தென் கன்னட ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம், ஸ்வாமி கோடேஷ்வரர்.

கோடைக்கானல் :—சென்னை ராஜதானி, மதுரை ஜில்லா சிவாலயம்.

கோணக்கரை :—நீலகிரி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம், ஸ்வாமி மஹாலிங்கேஸ்வரர்.

கோதாவரி :—சென்னை ராஜதானி மேற்படி ஜில்லா; ரெயில் ஸ்டேஷன், சிவாலயம்; ஸ்வாமி கௌதமேஸ்வரர்.

கோபிலாஸ் :—ஒரிஸ்ஸாவிலுள்ளது; சிவாலயம் மலை உச்சியிலுள்ளது; 2098 அடி சமுத்திர மட்டத்திற்கு உயரம். பங்காள் நாக்பூர் ரெயில் ஸ்டேஷன்; கோபிலால் ரோட்டிலிருந்து 30 மயில்; சிவராத்திரி விசேஷம்.

கோயம்பேடு :—செங்கல்பட்டு ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம், ஸ்வாமி கொறுங்காலீஸ்வரர் அல்லது குசலவபுரீஸ்வரர், தேவி தர்மசம்வர்த்தனி, வடக்கு பார்த்த சந்நிதி, மடக்குபோல் லிங்கம்; பிரம்மோற்சவம் சித்திரை மாசம்.

கோயமுத்தூர் :—மேற்படி ஜில்லா, சென்னை ராஜதானி கோட்டை ஈஸ்வரர் கோயில், பேட்டை ஈஸ்வரன் கோயில் என இங்கு இரண்டு சிவாலயங்கள் உள. இங்கு சத்திரங்கள் உள; மூசாபர் பங்களாவும் உண்டு.

கோயில்பட்டி :—திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜதானி, தென் இந்தியா ரயில்வே ஸ்டேஷன், சிவாலயம் ஸ்வாமி புவனலிங்கேஸ்வரர், தேவி சண்பகவல்லி;

அகஸ்தியர், வாதாபி வில்வளர்கோ அழிந்தஸ்தலமென்பர்; சிவாலயம் பாண்டிய அரசனல் கட்டப்பட்டது. இங்கு மூசாபர் பங்களா உண்டு.

கோயில்பட்டி:—மதுரை ஜில்லா, சென்னை ராஜதானி, திருமங்கலத்திற்கு 14 மயில், சிமாலயம் லிங்கம் மூக்கிய தினங்களில் தான் கோயிலில் வைக்கப்படுகிறது. கோயில் அழகிய கட்டிடம்.

கோயிலூர்:—திருக்கோயிலூர் என்றும் உசாத்தானம் என்றும் வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி முத்துப் பேட்டை ஸ்டேஷனுக்கு 2 மயில்; ஸ்ரீராமர், லட்சுமணர், ஜாம்பவான், சுக்ரீவான், அனுமார் பூஜித்த ஸ்தலம், ஸ்வாமி மந்திரபுரேஸ்வர், தேவி பெரியநாயகியம்மை; நிர்மல தீர்த்தம்; திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

கோயில் வெண்ணி:—வெண்ணியூர் என்றும் பெயர் பெற்றது. தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன், சென்னை ராஜதானி. தத்தாத்ரேயர் பூசித்த ஸ்தலம்; சிவாலயம்; லிங்கமானது கொம்புகளைக் கட்டாகக் கட்டியதுபோல் உருவம் உடையது; ஸ்வாமி இட்சுபுரீஸ்வரர், தேவி அழகிய நாயகியம்மை, நந்தியாவார்த்த தீர்த்தம். கல்வெட்டுகளில் ஸ்வாமி பெயர் திருவெண்ணியுடையார் எஸ்றிருக்கிறது, ஊர் பெயர் வெண்ணிநகரம் என்றிருக்கிறது. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசு பாடல்பெற்றது. இங்கு உக்கடை தேவர் சத்திரமுண்டு.

கோர்கரா:—வட இந்தியா இமய மலையிலுள்ள சிவ க்ஷேத்ரம்,

கோரக்பூர்:—ஐக்கிய மாகாணத்திலுள்ளது. இங்கு சோனாக் எனும் கிராமத்தில்சிறு சிவாலயமுள்ளது. ஸ்வாமி மஹா ருத்ரநாதர்.

கோலக்கா:—(திரு) இதற்கு அகரத் திருக்கோலக்கா என்றும் பெயர்; தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். சீர்காழிக்கருகிலுள்ளது. திருஞானசம்பந்தர் பொற்றாளம் பெற்ற ஸ்தலம், தேவி அதற்கு ஓசை கொடுத்ததாக ஐதிகம். ஸ்வாமி சப்தபுரீஸ்வரர், தேவி ஓசைகொடுத்த நாயகி, சூரிய தீர்த்தம் ஆராதீர்த்தம்; திருஞானசம்பந்தர் சுந்தரர் பாடல் பெற்றது. அகஸ்தியர் கண்வர் பூசித்த தலம்.

கோல்காளூர் :—கிருஷ்ணை ஜில்லா, சென்னை ராஜதானி அகஸ்தீஸ்வரர்கோயில்; 1202 வருஷத்திற்கு முன்பு கட்டப் பட்டதாக ஒரு கல்வெட்டால் அறிகிறோம்.

கோலம் :—சென்னை ராஜதானி, திருக்கோலமென வழங்கப்படுகிறது. ஸ்வாமி திருக்கோலீஸ்வரர், தேவி காமாட்சியம்மை ; தீர்த்தம் குசஸ்தல நதி.

கோலார் :—மைசூர் ராஜ்யம், கோலார் பிரிவிலுள்ளது. பெங்களூர் சிக்கபள்ளாபூர் ரெயில் ஸ்டேஷன். சிவாலயம். ஸ்வாமி சோமேஸ்வரர் ; பத்தாம் நூற்றாண்டில் ஒரு சோழ அரசனால் கட்டப்பட்ட கோயில்; இங்கு அருகாமையில் வட மேற்கில் சதஸரிங்க பர்வதத்தருகில் ஒரு சிவாலய மூளது. மலையில் அந்தர கங்கை தீர்த்தம் ; அதன் ஜலம் ரிஷபத் தின் வாயிலிருந்து வருகிறது.

கோலகொண்டா :—சென்னை ராஜதானி கிருஷ்ணை ஜில்லா சிவாலயம்.

கோயிலூர் :—சென்னை ராஜதானி மதுரை ஜில்லா சிவாலயம், ஸ்வாமி ராஜகட்க பரமேஸ்வரர், தேவி சாலிவா டீஸ்வரி. அகஸ்தியர் பூசித்த ஸ்தலம். வைப்புஸ்தலம்.

கோராராக் :—மத்திய இந்தியா, ஜகந்நாத்திற்கு 19-மயில் சிவாலயம், ஸ்வாமி சாம்பசிவம், தேவி சாம்பவி.

கோலாகோகர்ணத்:—வட இந்தியா, மஹாதேவர் கோயில் கங்கை தீர்த்தம்.

கோவலூர் :—(திரு) சென்னை ராஜதானி, தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன். இதற்கு கீழவூர் என்றும் பெயர் உண்டு. ஸ்ரீராமர் மந்திரோபதேசம் பெற்ற ஸ்தலம் அஷ்ட வீரட்டானங்களில் ஒன்று. அந்தகாசுரனைச் சம்மாரம் செய்த க்ஷேத்திரம். மெய்ப்பொருள் நாயனு டைய திருப்பதி. சிவாலயம் மேற்கு பார்த்தது. ஸ்வாமி வீரட்டானேஸ்வரர், தேவி சிவானந்தவல்லி, பெண்ணைநதி தீர்த்தம். கோயில் ஸ்டேஷனுக்கு ½-மயில் தூரம்; இவ்வூர் மேலூர் கீழூர் என்று இரண்டு பிரிவுள்ளது. சிவாலயம் கீழூரிலுள்ளது. திருஞானசம்பந்தர் அப்பர் பாடல் பெற்றது.

கோவர்த்தன கங்காபுரம் :—மத்ய இந்தியா நாசிக் ஸ்டே ஷன் அருகிலுள்ளது. சிவாலயம். ஸ்வாமி மகாதேவர் ;

தர்சனம் செய்தால் சுவர்ணதான பலம் மிடைக்குமென்பது ஐதிகம். இதற்கு ஒரு மயில் தூரத்தில் சோமேஸ்வரர் தேவாலயம் இருக்கிறது; பாபநாச தீர்த்தம்.

கோவிந்தபுரம் :—நாசராவ்பெட் தாலூகா, குண்டூர் ஜில்லா, சென்னை ராஜதானி பீமேஸ்வரர் கோயில்.

கோவிந்தபுரம் :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா திருவிடைமருதூர்க்கு 1-மயில் சிவாலயம் ஸ்வாமி பாணபுரீசுர், அபிராமியம்மன்.

கோடவநல்லூர் :—சென்னை ராஜதானி, திருநெல்வேலிக்கு 5-மயில் சிவாலயம். ஸ்வாமி ரோமேசர் இமயாம்பிகை. ரோமரிஷி பூசித்த ஸ்தலம்.

கோவிந்தஹல்லி :—கிருஷ்ணராஜ்பெட் தாலுக்கா மைசூர் ராஜ்யம், பஞ்சலிங்கேஸ்வரர் கோயில்; 5 பிராகாரங்களில் 5 லிங்கங்கள் இருக்கின்றன. கோயில் 96 × 42 அடி விஸ்தீரணம் 1237-ம் வருடம் கட்டப்பட்டது.

கோவிலடி :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா திவ்ய ஞானேஸ்வரர்கோயில்; கல்வெட்டுகளில் ஸ்வாமி பெயர் திருச்சடைமுடியுடைய மகாதேவர், திருப்புறத்துறையும் பெருமான், என்று இருக்கிறது. இதனருகில் திருச்சமண பூண்டி கிராமத்தில் சிவாலயமொன்றுண்டு. மிகவும் பழய கோயில்; இதில் பராந்தகன் (906—949) காலத்திய கல்வெட்டுகள் உள.

கோவிலூர் :—சென்னை ராஜதானி, செட்டி நாட்டில் காரைக்குடிக் கருகிலுள்ளது சிவாலயம். ஸ்வாமி பரமேஸ்வரர், தேவி பார்வதி. நாட்டுக்கோட்டை செட்டிமார்களால் புதியதாய்க் கட்டப்பட்டது.

கோவிலூர் :—சென்னை ராஜதானி திருக்கருபூண்டி தாலூகா, தஞ்சாவூர் ஜில்லா சிவாலயம்.

கோவூர் :—சென்னை ராஜதானி, வளவநாடு தாலூகா மலபார் ஜில்லா, கண்ணேஸ்வர ஸ்வாமி கோயில்.

கோவில்பட்டி :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, சிவாலயம். ஸ்வாமி சோழேஸ்வரர்; தேவி குந்தளாம்பாள்; சோழராஜன் பூசித்தது.

கோவூர் :—சோழபுரி என்றும் பெயர்; ஸ்ரீபெரும்பூதூர் தாலுக்கா, செங்கல்பட்டு ஜில்லா, சென்னை ராஜதானி,

சென்னையிலிருந்து 12-மயில்; பரங்கிமலைக்கு அருகி லுள்ளது. தினம் இங்கு பஸ் போகிறது. இதற்கு பழய பெயர் அழகிய சோழநலலூர்; சிவாலயம். ஸ்வாமி சுந்தரேஸ் வரர், பழய மெயர் திருமேனி ஈஸ்வரர்; தேவி சௌந்த ராம்பிகை. தியாகராஜ ஸ்வாமிகளால் கீர்த்தனம் பாடப் பெற்ற ஸ்தலம். பிரம்மோற்சவம் வைகாசி மாசம். பழய கோயில் சுமார் 200 வருடங்களுக்கு முன் வயித்தியநாத முதலியாரால் முற்றிலும் புதும்பிக்கப்பட்டது. தற்காலம் கோயில் உட்புறச் சுவர்களிலும் மடப்பள்ளியின் படியி லும் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகளினால் பழய கோயில் சுமார் 1000 வருடங்களுக்கு முற்பட்டதென்று அறிகிறோம். மடப்பள்ளி கல்வெட்டு 965 வருடத்தியது. பழய கல்வெட்டு களில் இக்கோயிலுக்கு ராஜ்ராரேஸ்வரம் எனும் பெயர் இருந்ததாகத் தெரிகிறது. கோ + ஊர் = அரசனது ஊர் என்று அர்த்தம் செய்யவேண்டு மென்பர் சிலர். கர்ப்பக் கிரஹம் கஜப்பிருஷ்ட ஆகிருதி.

கோழம்பம் :—(திரு) இதற்கு திருக்கோளம்பூர் என்றும் பெயர். சென்னை ராஜதானி, தென் இந்தியா ரெயில் நரசிங்கன்பேட்டை ஸ்டேஷனுக்கு 2-மயில் தென் கிழக்கு. குயிலாய்ச் சபிக்கப்பட்ட வித்யாதரன் சாபம் நீங்கிய ஸ்தலம் ஸ்வாமி கோகிலேஸ்வரர், தேவி செளந்தர நாயகி யம்மை. மது தீர்த்தம். திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசு பாடல்பெற்றது. சந்திரன் பூசித்த தலம் என்பது ஐதிகம்.

கோழபுரம் :—தென் இந்தியா சிவாலயம் ஸ்வாமி ஸ்வாமி கொபுராந்தேஸ்வரர் தேவி ஆதி சக்தி, மெஞ்ஞான தீர்த்தம்.

கோழியனூர் :—தென் ஆற்காடு ஜில்லா, விழுப்புரம் தாலுக்கா, சென்னை ராஜதானி, சிவாலயம் ஸ்வாமி வாலீஸ்வரர், கல்வெட்டுகளில், வாலீசுவர் என்றிருக்கிறது.

கோளிலி :—(திரு) திருக்குவளை எனவும் பெயர் உண்டு. கைச்சினத்திற்கு 5-மயில கிழக்கு; திருவாரூருக்கு 12-மயில் தென் கிழக்கு பீமன் பாபம் நீங்கிய ஸ்தலம். பீமனது உருவமும் பகாசுரனது உருவமும் கோயிலில் காணலாம். முசுகுந்தர் தியாகராஜப் பிரதிஷ்டை செய்த சப்த விடங்க ஸ்தலங்களில் ஒன்று. தியாகராஜரது நடனம் வண்டு நடனம், சுந்தரமூர்த்தி நாயனர் இதற்கருகிலுள்ள

குண்டையூரிலிருந்த நெல் மலையை 'நீள நினைந்தடியேன்' என்னும் பதிகம்பாடி பூதகணங்களைக்கொண்டு திருவாரூருக்கு எடுத்துக்கொண்டுபோகச் செய்த ஸ்தலம். ஸ்வாமி கோளிலி நாதேஸ்வரர், தேவி வண்டமர் பூங்குழலியம்மை, பிரம தீர்த்தம்; மூவர் பாடல்பெற்றது.

கோனேரிராஜபுரம் :—இதற்கு திருநல்லம் என்றும் பெயர். தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்; கண்டராதித்யர் மனைவியாகிய செம்பொன்மா தேவியாரால், பழய செங்கற்கோயிலா யிருந்தது, கருங்கல் கட்டடமாக்கப்பட்டது. கண்டராதித்யர் காலம் 948 வருஷம்; ஆகவே இது ஒரு மிகவும் பழய கோயிலாம். புதுப்பித்த கோயிலுக்கு கண்டராதித்தம் எனப் பெயர் ஆயிற்று. கோயிலில் கண்டராதித்தர் செம்பொன்மாதேவியார், அவர்களது குமாரன் மூதலியோருடைய சிலைகள் இருக்கின்றன. ஸ்வாமி உமா மஹேஸ்வரர், தேவி மங்களநாயகி, கங்கை தீர்த்தம், இங்குள்ள நடராஜர் விக்ரஹம் அழகியது.

கோஹத்தி :—வட இந்தியாவில் ஆசாம் தேசத்தில் காம்பே ஜில்லாவிற் முக்கிய பட்டணம்; பிரமபுத்ரா நதியின் இரு கரையிலுமுள்ளது. நதியின் மத்தியில் ஒரு தீவில் சிவாலய மிருக்கிறது. ஸ்வாமி உமாநந்தர். ஸ்டேஷனுக்கு $1\frac{1}{2}$ மயிலில் தர்ம சாலையுண்டு, பண்டாக்கள் வீடுகளுமுண்டு ஆசாம் பெங்காள ரெயில் ஸ்டேஷன்.

கௌரிசங்கர் மலை :—வட இந்தியாவிலுள்ளது. சிவாலயம் இங்கு 36 சிவலிங்கள் உள.

கௌசிகா :—மைசூர் ராஜ்யம், சிவாலயம் சிறியது.

சக்கரபள்ளி :—ராஜகிரி ஜயம்பேட்டை எனவும் வழங்கப்படுகிறது; சென்னை ராஜதானி ஜயம்பேட்டை ஸ்டேஷனுக்கு $\frac{3}{4}$ மயில் மேற்கு, சிவாலயம், ஜையந்தன், சப்தயாத்ருக்கள் பூசித்த ஸ்தலம், திருமால் பூசித்து சக்கரம் பெற்ற ஸ்தலமென்பர் சிலர், ஸ்வாமி ஆலந்துறை நாதர், பசுபதி நாயகேஸ்வரர், தேவி அல்லியங்கோதை, பால்வண நாயகி, காவிரி தீர்த்தம், காக தீர்த்தம்; திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

சகல் தீர்த்த :—மத்திய இந்தியா, பரோக் ஸ்டேஷனிலிருந்து 10 மயில் சிவாலயம், ஸ்வாமி மஹாதேவ் நர்மதை தீர்த்தம்.

சக்லேஷ்கர் :—ஹசான் ஜில்லா, மைசூர் ராஜ்யம், ஹேம நதியின் வடகரையிலுள்ளது. சிவாலயம் ஸ்வாமி சகலேஸ்வரர் ; கன்னடத்தில் துண்டுபட்ட ஈஸ்வரர் என்று பொருள் படும். லிங்கத்தின் உருவம் சிதைவுற்றிருக்கிறது.

சகோ :—கோட்பூர் ஜில்லா, மார்வார், வட இந்தியா சிவாலயம், முகலிங்கம்.

சங்கரராமநல்லூர் :—உடுமல்பெட் தாலூகா, கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, பழய சிவாலயம், 1253 வருடத்திய கல்வெட்டுகளுடையது.

சட்டேகாளம் :—கொள்ளேகால் தாலூகா, கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, பழய சிவாலயம், பிரம்மா பூசித்த ஸ்தலம்.

சத்யமங்லம் :—மேற்படி தாலூகா, சென்னை ராஜதானி கோயமுத்தூர் ஜில்லா, பழய சிவாலயம், இதற்கருகில் கோட்டுவீரம்பாளயத்தில் ஒரு சிவாலயமுண்டு.

சங்கமேஷ்வரம் :—கர்னூல் ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம்.

சங்கமேஷ்வரர் கோயில் :—மைசூர் ராஜ்யம் மலப் பிரபையும், கிருஷ்ணை நதியும் சந்திக்குமிடமுள்ளது. இங்கு பசவர், லிங்கரூபத்தில் ஐக்கியமானதாக ஐதிகம். இக் கோயிலில் ஹைதர் ஆலி நடுலிங்கம் பிரதிஷ்டை செய்ததாகச் சொல்லப்படுகிறது. மைசூர் ராஜ்யத்தில் காவிரியும் பவானியும் சங்கமமாகுமிடத்திலும் ஒரு சிவாலய முண்டு. இங்கு அமிர்தவாஹினி அந்தர்வாஹினியா யிருப்பதாகச் சொல்லப்படுகிறது,

சங்கரநாராயணர் கோயில் :—சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா, இதற்கு புன்னைவன மென்றும், இராசை யென்றும் பெயர் உளது, சிவாலயம், ஸ்வாமி சங்கரநாராயணர், தேவி கோமதியம்மன், ஆளுடையம்மை, புன்னைவிருட்சம் ; இங்குள்ள விஷ்ணு சந்நிதி பிறகு கட்டப் பட்டதென்பர். ஆடி மாசம் பிரபல உற்சவம் ; 10-ம் நாள் அம்மன் தபசு. சங்கரநாராயணர் காட்சி விசேஷம். இங்கு பெரிய சிம்பங்கள் 16-ம் ஆண்டில் வெட்டப்பட்டன வாக புரொபசர் ஹிராஸ் எண்ணுகிறார். பிரகுரிஷி பூசித்த ஸ்தலம். இதங்கு சங்கரநயினர் கோயில் என்றும், சங்கரன்

கோயிலென்றும் பெயர்கள் உண்டு. இந்த ஸ்தலத்தில் சங்கர நாராயணர் கோயில் என்றும், சங்கரலிங்கர் கோயில் என்றும் இரண்டு சந்நிதிகளுண்டு. கோயிலின் தலைவாயி லுக்கு நேராக இருப்பது சங்கரலிங்கர் கோயில்; இதற்கு வடக்கில் கோமதியம்மன் கோயில், இடையில் சங்கர நாராயணர் கோயில். இது 16-ஆம் நூற்றாண்டிற் முற்பகுதி யில் கட்டப்பட்டது, உக்கிரபாண்டியனால்; பிறகு பிரஹதீச்வர பாண்டியனாலும், அவனது குமாரன் விஜயகுஞ்சர பாண்டியனாலும், பல திருப்பணிகள் செய்யப்பட்டது. பெரிய கோபுரம் 11 நிலைகளுடையது, கோயிலுக்குள் உள்ள கோமதி அம்மன் சிலை, உக்கிரபாண்டியன் சிலை, மன்மதன் காவற்காரன் பறையன் சிலைகள், பார்க்கத் தக்கவை சங்கரலிங்கம் சுயம்புலிங்கம். புன்னைவனத்தைக் காத்த பறையன் உருவம்தான் காவற்காரப் பறையன் எனப் படுகிறது.

சங்கரபுரம்:—வட இந்தியா தற்காலம் படான் என்று அழைக்கப்படுகிறது. ஸ்ரீ நகருக்கும் பாராமூலாவுக்கும் இடையிலுள்ளது, காஸ்மீர் ராஜ்யத்தில். இங்கு இரண்டு சிவாலயங்கள் உள. சங்கரவர்மனாலும் அவன் மனைவி சுகந்தையாலும் (883—902) கட்டப்பட்டவைகள். கோயில் கள் மாத்திரம் இருக்கின்றன. பிராகாரங்கள் மகம்மதிய அரசர்களால் அழிக்கப்பட்டன. கோயில்களுக்கு விமானங்கள் தவிர மண்டபங்கள் கிடையா. காஸ்மீர் சில்பம்.

சங்கரநாராயண:—தென் கன்னட ஜில்லா, சென்னை ராஜதானி, பெரிய சிவாலயம், ஸ்வாமி சங்கர நாராயணர்.

சங்கரி துர்க்கம்:—சென்னை ராஜதானி. திருச்செங் கோட்டிற்கு 3 மயில்; ரெயில் ஸ்டேஷன்; சிவாலயம்.

சங்கவரம்:—கடப்பை ஜில்லா, சென்னை ராஜதானி இங்கு ஐந்து மயில் தூரத்தில் நடு குன்றின்மீது சிவாலயம். 1282 வருஷம் இது கட்டப்பட்டதாக ஒரு சுல்வெட்டு குறிக்கிறது.

சங்குகரணம்:—வட இந்தியா சிவாலயம், சுயம்புலிங்கம், ஸ்வாமி மஹாதேவேஸ்வரர்.

சட்டாரா பிரிவு:—பம்பாய் ராஜதானி, இங்கு பல சிவாலயங்கள் உள. (1) கிருஷ்ணேஸ்வரர் கோயில், சுக்ர

வார்பேட்டையிலுள்ளது. (2) பூலேஷ்வர் கோயில் மங்கள வார்பேட்டையிலுள்ளது. (3) பார்லி பழய சிவாலயம், மகம் மதியரால் இடிக்கப்பட்டது. புதிய ஆலயம் ஒன்று பிற்கு கட்டப்பட்டது. (4) படேஷ்வர் சிவாலயம், மலைக் கோயில்; ஸ்வாமி படேஷ்வர், தேவி பார்வதி. (5) சதாஷிவ்கட் மஹா தேவர் ஆலயம். சிவாஜி அரசனல் கட்டபபட்டதாம். (6) பால் கண்டோபா சிவாலயம்; சுமார் 400 வருடங்களுக்குமுன் கட்டப்பட்டது. இங்கு காணேஷர் மஹாதேவ் கோயில் என்று ஒரு சிவாலயமுண்டு. மல்லிகார்ஜுனமலை, சிவாலயம் குகைக்கோயில், ஸ்வாமி சோமநாத மஹாதேவ், மல்லிகார் ஜுனர், பாதாளகங்கை தீர்த்தம், 12-ஆம் நூற்றாண்டில் குடையப்பட்டதென்பர். (8) மாஸ்லட் சித்தநாதர் கோயில் ஸ்வாமி சித்தநாதர் தேவி ஜோகை. (9) மஹாலிங் பில்வேஷ்வர் சிவாலயம் 1742 வருஷம் கட்டப்பட்டது. இங்கு ராதா சங்கரர் கோயில், ராமேஷ்வர் கோயில் என்று இரண்டு கோயில்களுண்டு. இங்குள்ள சங்கமேஷ்வர் சிவாலயம் 1740 ஆம் வருடம் கட்டப்பட்டது, விஸ்வேஸ்வர் மஹாதேவர் ஆலயம் 1735 வருஷம் கட்டப்பட்டது. கிருஷ்ணேஸ்வர் மஹாதேவர் ஆலயம் 1754 வருஷம் கட்டப் பட்டது. (10) கின்ஹாய் சிறிய சிவாலயம். (11) குந்தல் இங்கு பைரவர் குகைக்கோயிலெதிரில் ஒரு சிறிய மஹா தேவர் ஆலயமுண்டு. இங்குள்ள மற்றொரு குகைக் கோயிலில் பரமசிவத்தின் பக்கலில் பார்வதியும் கங்கையும் தேவிகளாக அமைக்கப்பட்டிருக்கின்றனர். (12) குஸ்ரூட் குகை சிவாலயம். (13) மச்சிந்தர்கட் மலைக்கோயில், ஸ்வாமி மச்சிந்தர்நாத். (14) சிகுர்டி மஹாதேவர் ஆலயம். 50 × 32 அடி விஸ்தீர்ணம். (15) சிமங்காண் சிவாலயம். (16) தேவாஷடா சமுத்ரேஷ்வர் கோயில், சமுத்திரராஜன் பூசித்த க்ஷேத்ரம். (17) திவாஷிருக்ட் குகைக் கோயில் ஸ்வாமி துவாரேஷ்வர் மஹாதேவ் (18) தோம் மஹாதேவர் சிவாலயம் இங்குள்ள நந்தி ஆமையின் முதுகிலிருப்பது போல் செய்யப்பட்டிருக்கிறது. இங்கு ஹிவ் பஞ்சாயதன கோயில் என்று ஒரு சிவாலய முண்டு. நான்கு முகங்கள் நான்கு திக்குகளையும், ஐந்தாவது ஆகாயத்தையும் நோக்கி யதாயிருக்கிறது. கோயில் 1780 வருஷம் கட்டப்பட்டதாம். இதற்கு ½ மயில் தூரத்தில் மஹராஷ்டிர அரசன் ஷாஹாஜி வினல் பூசிக்கப்பட்ட லிங்க முண்டு. இது தெளம்பரால்

பிரதிஷ்டை செய்யப்பட்ட தென்பர். (19) கரோட், இங்கு காசி விஸ்வேஸ்வர் ஆலயம், கமலேஷ்வர் ஆலயம் என இரண்டு சிவாலயங்கள் உண்டு. (20) காடங் சிவாலயம், ஷேமாத் பண்ட் கட்டடம் 17 × 15 அடி விஸ்தீர்ணம் (26) கிக்ஸி சிவாலயம், பாழாய்க் கிடக்கிறது. ஷிங்களதேவ் அரசனல் கட்டப்பட்டதாம். (22) சந்தன் மஹாதேவர் சிவாலயம். (23) பஹதூர்வாடி மல்லிகார்ஜுனர் சிவாலயம் 50 × 20 அடி விஸ்தீர்ணம்; இதன் மதில் சுவர்கள் கருப்புக் கல்லால் ஆக்கப்பட்டவை. (24) பாஹி ராமலிங்கஸ்வாமி கோயில் 250 வருடங்களுக்கு முன்பு அந்தோபாயக் பிடே என்பவ ரால் கட்டப்பட்டது. கர்ப்பக்கிரஹம் 10 × 10 × 10 அடி. ஸ்ரீராமர் பூசித்த ஸ்தலமென்பர். (25) பாஹனே பஹா லேஷ்வர் மகாதேவ் கோயில், லிங்கம் ஒரு இடையனல் பிரதிஷ்டை செய்யப்பட்டதென்பர் (26) பான்புரி சிவாலயம் ஸ்வாமி நாயிக்பா (27) பாவ்தன் சிவாலயம் கர்ப்பக்கிரஹம் 12 அடி சதுரம். (28) போஸ் சிவாலயம் குகைக்கோயில். ஸ்வாமி கண்டோபா மஹாதேவ், 12 ஆம் நூற்றாண்டில் ஒரு யாதவ அரசனல் குடையப்பட்ட தென்பர். (29) போபால்கட் மஹாதேவர் சிவாலயம் (30) போபர்டி புதிய சிவாலயம் 20 × 28 அடி விஸ்தீர்ணம் இக்கோயில் ஒரு குளத்தின் மத்தியிலுள்ளது. (31) தகாரி சிவாலயம் குகைக் கோயில் (32) சந்தோஷ்கட் தடோபா மஹாதேவர் ஆலயம் (33) வடகோன் வடேஷ்வர் மஹாதேவ் ஆலயம், பழய கோயில (34) ஷிங்கள்பூர் கடகேஷ்வர் மஹாதேவர் ஆலயம் சிவாஜி மஹாராஜரால் (1627-1680) கட்டப்பட்டது. இங்கு அமிர்தேஷ்வர கோயில் என்று மற்றொரு சிவாலயமுண்டு. (35) ஷிராலா சிவாலயம், ஸ்வாமி கோரட்சர்நாத் (36) வாய் உமா மஹேஷ்வர் பஞ்சாயதன்; இங்கு தக்லேஷ்வர் மஹா தேவ் கோயில், கங்கர் ராமேஷ்வர் மஹாதேவர் கோயில் காசி விஸ்வேஸ்வர் கோயில் என்று மற்றும் 3 சிவாலயங்களுள; கடைசியில் குறிக்கப்பட்டது 1757 வருஷம் கட்டப்பட்டது. இன்னும் இங்கு கிருஷ்ணை ஆற்றங்கரையில் 8 சிறிய சிவால யங்கள் உண்டு (37) யவதேஷ்வர் சிவாலயம், ஸ்வாமி யவதேஷ்வர்.

சண்டர பிரிவு:—மத்ய மாகாணம். இங்கு சில சிவாலயங்களுள. (1) ஆர்மரி கிராமம் சிவாலயம். இது மூன்று சந்நிதிகளுடைய சிவாலயம் (சளுக்கிய கட்டி-

டம்?) (2) பாடாலா கிராமம் சிவாலயம், சிகரம் இடிந்திருக்கிறது. (3) சாமாசி பழய இடிந்த சிவாலயம் (4) சண்டா பட்டணம்; அசலேஸ்வரர் கோயில்; இதற்கு 1 மயில் தூரம், காட்டின் நடுவில் ஒரு சிவலிங்கமும் அதைச் சுற்றிலும் 16 சிவலிங்கங்களும் இருக்கின்றன. (5) மார்க்கண்டா கிராமம், சிவாலயம், லிங்கம் மார்க்கண்டேயர் பிரதிஷ்டை யென்பர், இங்கு மிருகண்டு ரிஷி பூசித்த சிவாலயம் ஒன்றுண்டு. (6) நளேஷ்வர் கிராமம் சிவாலயம், இங்குள்ள நந்தியின் வாயினின்றும் சதாகாலம் ஜலம் வந்துகொண்டிருக்கிறதாம்.

சந்தூர் :—சென்னை ராஜதானி திருச்சிராப்பள்ளி ஜில்லா, சிவாலயம், ஸ்வாமி சுந்தரேசர், தேவி மீனாட்சி.

சதுர்வேதிமங்கலம் :—சென்னை ராஜதானி, மதுரை ஜில்லா, சிவாலயம்; ஸ்வாமி வேதநாதர், உமாதேவி; வேதங்கள் பூசித்த ஸ்தலம்.

சத்தர்பூர் சமஸ்தானம் :—வட இந்தியா ராஜபுதனத்தி லுள்ளது; இங்கு சில சிவாலயங்கள் உள. (1) சத்தர்பூரி பட்டணம், சிவாலயம் ஸ்வாமி சங்கடமோட்சன் மஹாதேவ இது 1726 வருஷம் ஹீனத்ராய்காயஸ்த் என்பவரால் கட்டப்பட்டது. இங்கு மற்றும் பிரதாபேஷ்வர் மஹாதேவ் கோயில், கௌரிஷங்கர் மஹாதேவ் கோயில் என்று இரண்டு ஆலயங்கள் உள. (2) காஜ்ரஹா. இங்கு கண்டார்ய மஹாதேவர் கோயில், விஸ்வநாத் கோயில், முதலிய சில சிவாலயங்கள் உள. (3) மணியகர், சுவர்கேஷ்வர் மஹாதேவ் கோயில்; இங்குள்ள லிங்கத்தின்மீது எப்பொழுதும் தீர்த்தம் துளித்துக்கொண்டிருக்கிறதாம். (4) ராஜ்நகர் கௌரிஷங்கர் கோயில்.

சக்தி முத்தம் :—(திரு) தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, தாராசுரம் ஸ்டேஷனுக்கு 2 மயில் தென்மேற்கு; பட்டீஸ்வரத்திற்கு மிகவும் அருகிலுள்ளது. ஸ்வாமி சிவக் கொழுந்தீஸ்வரர், தேவி பெரியநாயகி யம்மை; வேலாயுத தீர்த்தம், சூலதீர்த்தம். அம்பிகை சிவலிங்கத்தைத் தழுவி முத்தங்கொடுத்தபடியால் சத்தி (சக்தி) முத்தம் எனப் பெயர் பெற்றது. திருநாவுக்கரசர் பாடல் பெற்றது.

சத்தியாவேடு :—சென்னை ராஜதானி, பொன்னேரி தாலூகா, செங்கல்பட்டு ஜில்லா, சிவாலயம் ஸ்வாமி மாதங்

கேஷ்வர், தேவி மரகதவல்லி, மாதங்கதீர்த்தம். இங்கு சுமார் 975வது ஆண்ட கங்கபல்லவ அரசன் அபராஜிதன் காலத்திய கல்வெட்டுளது. கோயிலுக்கு மாதங்கன் பள்ளி என்று பெயர், மாதங்கரிஷி பூசித்த ஸ்தலம்.

சதாசிவக் கோனே :—சென்னை ராஜதானி, சிவாலயம் ஸ்வாமி சதாசிவேஸ்வரர், தேவி காமட்சி. ஆகாயகங்கை தீர்த்தம்.

சதுரகிரி:—தென் இந்தியா சிவாலயம் ஸ்வாமி அறப்பளீசர், ஊருக்கு அறப்பளீசுரம் என்றும் பெயர். தேவார வைப்புஸ்தலம்; கொல்லிமலையைச் சார்ந்தது.

சதுரங்கபட்டினம் :—கல்வெட்டுகளில் இதன் பழயபெயர் சதிரவாசகன் பட்டினம் என்றிருக்கிறது. இங்கு ஒரு பழய சிவாலய மிருந்ததாக எண்ண இடமிருக்கிறது. இதற்கு 3 மயில் தூரத்தில் ஒரு சிவாலயமுண்டு, திருப்பளீஸ்வரர் கோயில், பழய கோயில்; கஜப்பிருஷ்ட ஆகிருதி.

சந்தகட்டா:—மைசூர் ராஜ்யம். சங்கமேஷ்வர் கோயில் இது இரட்டைக்கோயில்.

சந்தாவூர்:—பாபட்லா தாலூகா, குண்டூர் ஜில்லா, சென்னை ராஜதானி, இங்கு இரண்டு சிவாலயங்கள் உள்ள. ராமலிங்கேஸ்வர ஸ்வாமி கோயில், நாகேஸ்வரர் கோயில்.

சந்திரகிரி:—சென்னை ராஜதானி, வட ஆற்காடு ஜில்லா திருப்பதிக்கருகிலுள்ள கிராமம். சிவாலயம் பாழடைந்திருக்கிறது. இதன் கோபுரம் அநந்தராஜன் என்பவரால் கட்டப்பட்டது. ஸ்வாமி காலசம்ஹாரர், தேவி திரிபுரசுந்தரி; மார்க்கண்டேயர் பூசித்தது.

சந்திரகுப்தா:—நிஜாம் ராஜ்யம். 900 படிகளுடைய ஒரு மலையின்மீது சிவாலயம். இந்த ராஜ்யத்தில் பார்லி எனும் இடத்திலும் ஒரு குன்றின்மீது சிவாலயமிருக்கிறது.

சந்திராவதி:—வட இந்தியா, சித்தேஸ்வரர் கோயில்; அழகிய சிவாலயம், ஆரிய சில்பம்; இக்கோயில் ஒன்பதாம் நூற்றாண்டிற்கு முன் கட்டப்பட்டதாம்.

சம்பா:—வட இந்தியா, பங்காள்நாகபூர் ரெயில் ஸ்டேஷன்; ஹாஸ்டேல் நதியின் கரையிலிருக்கிறது. மகாதேவர், மகாதேவி; சகல வியாதி நிவாரண ஸ்தலம்; இதற்கு

2 மயிலில் பிட்டன்பூர் எனும் கிராமத்தில் சிவாலயமிருக்கிறது; ஸ்வாமி ஷிவ் பிட்டியேஷ்வர்.

சம்பான் பிரிவு:—வங்காளம், வட இந்தியா, இங்கு லௌரிய அராஜ் எனுமிடத்தில், அசோக ஸ்தம்பத்திற்கு 1 மயில் தென் மேற்கில் ஒரு சிவாலயமுளது. ஸ்வாமி மஹாதேவ்.

சமயபுரம்:—திருச்சிராப்பள்ளி தாலூகா, ஷி ஜில்லா சென்னை ராஜதானி, ஸ்ரீமுகேஸ்வர ஸ்வாமி கோயில். கோயில் சிலமாயிருக்கிறது.

சப்தகோதாவரி:—மத்திய இந்தியா, பீமேஸ்வரர் கோயில். சுயம்பு லிங்கம். இதற்கருகில் ஹரிச்சத்திரம் எனும் இடத்தில் ஒரு சிவாலயமுண்டு.

சவுடம்பூர்:—தார்வார் ஜில்லா, சிவாலயம் துங்கபத்ரைக் கரையிலுள்ளது. முக்தேஸ்வரர் கோயில். சுவாமிக்கு முக்திநாதர் என்றும் பெயர்.

சாக்கோட்டை:—இதற்குத் திருக்கலயத்தான்குடி என்றும் பெயர். தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, கும்பகோணம் ரெயில் ஸ்டேஷனுக்கு 1-மயில் தெற்கு. ஷாஜி கோட்டை என்பதின் மரு சாக்கோட்டை என்றாயது. இதன் பழய பெயர் ரகுநாதபுரம், சிவாலயம். ஸ்வாமி அமிர்தகடேஸ்வரர்.

சாகர் பிரிவு:—மத்திய மாகாணம், மத்ய இந்தியா. இங்கு இரண்டு சிவாலயங்கள் (1) பாபெல் ஊரில் பூல்நாத் ஸ்வாமி கோயில்; கார்த்திகை விசேஷம். (2) நஹர்மாவ் எனும் ஊரில் சிறிய சிவாலயம், குன்றின் மத்தியில் உளது.

சாட்டியக்குடி:—திருத்தருபூண்டி தாலூகா, சென்னை ராஜதானி, கன்னரப்பூருக்கு அருகிலுளது. திரு ஆரூர் ஜங்ஷனிலிருந்து போகலாம். சிவாலயம் திருவிசைப்பா பெற்றது.

சாத்தங்குடி:—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, திருப்புங்கூருக்கு $1\frac{1}{2}$ மயில்; வைதீஸ்வரர் கோயிலிருந்தும் போகலாம்; ஸ்வாமி விஸ்வநாதர், தேவி விசாலாட்சி, சிவகங்கை தீர்த்தம்; வைப்புஸ்தலம்.

சாத்தமங்கை:—(திரு) கோயிற்றிருசாத்தமங்கை எனவும் செய்யாற்றமங்கை எனவும் பெயர் உண்டு. திருமருக

லுக்கு 1 மயில் வடகிழக்கு; அஷ்டவக்கிரர் பூசித்த ஸ்தலம்; சிவாலயத்திற்கு ஆயவந்தி என்று பெயர்; ஸ்வாமி ஆயவந்தீஸ்வரர், மாதீஸ்வரா, தேவி மலர்க்கண்ணம்மை, தையலாம்பிகை. பிரமதீர்த்தம். சிவலிங்கத்தின்மீது ஒரு சிலந்திப்பூச்சி விழ அதை வாயினல் ஊதி அகற்றிய தன் மனைவியை நிக்ரஹித்த திரு நீலநக்க நாயனரைச் சமாதானப்படுத்தி ஸ்வாமி அம்மனைவியை ஏற்றுக்கொள்ளும் படி செய்த ஸ்தலம். திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

சாந்தலூர் :—சென்னை ராஜதானி, சிவாலயம் விஜய நகரத்து உத்யோகஸ்தர் பந்துவாகிய சின்னம்மாள் என் பவர்களால் 1540 வருஷம் கட்டப்பட்டது.

சாத்தங்குடி :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா வைதீஸ்வரன் கோயிலுக்கு 4-மயில் சிவாலயம்; ஸ்வாமி விஸ்வநாதர், தேவி விசாலாட்சி, வைப்புஸ்தலம்.

சாதேபச்சஹல்லி :—மைசூர் ராஜ்யம், மஹாலிங்கேஸ்வரர் கோயில், ஹொய்சல சில்பம்.

சாத்தியக்குடி :—நாகப்பட்டினம் தாலூகா, தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி வேதபுரீஸ்வரர்.

சாத்தூர் :—ராமநாதபுரம் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி சுந்தரேசர், தேவி மீனாட்சி.

சாதனூர் :—நரசராவ்பெட் தாலூகா, கிருஷ்ணஜில்லா சென்னை ராஜதானி, ராமலிங்கேஸ்வர ஸ்வாமி கோயில்.

சாம்பல்பூர் பிரிவு :—வங்காள ராஜதானி. இங்கு உள்ள சில சிவாலயங்கள் (1) அம்பாபோலு சிவாலயம் சுமார் 150 வருடங்களுக்கு முன் தக்கணிராய் என்பவரால் கட்டப் பட்டது. (2) கைசாமா கிராமம்-பாலகேஸ்வரர் சிவாலயம் (3) ஹாமாமகாதேவர் கோயில். (3) குயிலிகோகர் கிராமம். சிவாலயம் ஸ்வாமி மஹேஸ்வர்நாத். இங்கு ஒரு குகையில் மற்றொரு சிவாலயமுண்டு (5) கும்பாரி-பழய சிவாலயம். (6) நரசிங்கநாத் சிறு சிவாலயம்.

சாமக்குளம் ,—கோயில்பாளையம் என்னும் பெயர் உண்டு கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, பழய சிவாலயம். இதில் பல கல்வெட்டுகள் உள.

சாமராஜநகர் :—மைசூர் ராஜ்யம், மைசூரிலிருந்து 36-மயில் இங்கு இருந்த பழய சிவாலயத்தை 1828 ஆண்டில்

கிருஷ்ணராஜ உடையார் புதுப்பித்தார். இக்கோயிலின் வெளிப்பிராகாரத்தில் பல தேவதைகளின் உருவங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஸ்வாமி பெயர் சாமராஜேஸ்வரர்.

சாமராஜ்பேட்தாலுக்கா :— மைசூர் ராஜ்யம், காவேரி சங்கரர் கோயில்; காவிரியும் ஹேமவதியும் சங்கமமாகும் இடம்.

சாமன்ன :—திருச்சாமன்ன என்று வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி மலையாளத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற சிவாலயம்; ஆயினும் கோயிலுக்கு விவாமானம் முதலியவை கிடையாது. ஒரு காட்டின் நடுவில் அடுக்கப் பட்ட கருங்கற்களின்மீது சிவலிங்கம் இருக்கிறது. வைகாசி மாதம் 28 நாட்கள் இதற்குத் திருவிழா. மற்ற காலங்களில் பூசை கிடையாது. திருவிழாவின்போது நாயர்களும் தீயர்களும், ஆபிரக்கணக்காக வருகிறார்கள். நாயர்கள் சுமார் 5000 நெய்க்குடங்களை அபிஷேகம் செய்கின்றனர். இதன் பிறகு தீயர்கள் ஸ்வாமிக்கு இளநீர் அபிஷேகம் செய்கின்றனர். இங்கு தட்சயாகம் நடந்ததென்பது ஐதிகம்; லிங்கத்தில் வடுபட்டு இரத்தம் பெருகியதாகவும் ஐதிகம்.

சாமுண்டி மலை :—மைசூர் ராஜ்யம், மைசூரிலுள்ளது. இங்கு மலைமீது ஒரு சிவாலயமுண்டு, ஸ்வாமி மஹாபலேஷ்வர்.

சாய்க்காடு :—(திரு) சாயாவனம் என்றும் பெயர் சென்னை ராஜதானி, சீர்காழிக்கு 9 மயில் தெற்கு, உபமன்யு பூசித்த க்ஷேத்ரம், இயற்பகை நாயனார் முக்திபெற்ற ஸ்தலம், காசிக்கு சமானமான க்ஷேத்ரம் என்று ஸ்தல புராணம் கூறுகிறது. சிவாலயம்; ஸ்வாமி சாயவனேஸ்வரர் தேவி குயிலினுநன்மொழி யம்மை; சாயாதீர்த்தம், காவிரி தீர்த்தம்; திருஞான சம்பந்தர் பாடல்பெற்றது. இங்குள்ள பல்லவனீஸ்வரர் கோயில் என்பது பல்லவ கட்டிடமன்று.

சாயல்குடி :—ராம்நாட் ஜில்லா, சென்னை ராஜதானி, பழய சிவாலயம். ஸ்வாமி சொக்கநாதர்; கோயில் அயகிரி மஹரிஷியால் கட்டப்பட்டதென்பது ஐதிகம்.

சார்நாத் :—வடஇந்தியா, காசிக்கு 3 மயில் அருகிலுள்ள க்ஷேத்திரம்; சிவாலயம் ஸ்வாமி சாரங்கநாதர் விஸ்வேசர்;

சிறு கோயில், பௌத்தர்கள் கொண்டாடும் மான் டத்திற்கு அருகிலுள்ளது.

சாரான்பிரிவு :—வங்காள ராஜதானி, இங்கு இரண்டு சிவாலயங்கள் உண்டு (1) சில் ஹௌரி சிவாலயம், ஸ்வாமி சிலாநாதர் (2) கோன்பூர் ஹரிஹர்நாத மகாதேவர் கோயில்.

சாரிபள்ளம் :—திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி, சோமலிங்கேஸ்வரர் கோயில்.

சாளுவன்குப்பம் :—செங்கல்பட்டு ஜில்லா, சென்னை ராஜதானி, மஹாபலிபுரத்திற் கருகிலுள்ளது; அதிரண சண்டேஸ்வரர் ஆலயம், பல்லவக் கட்டிடம். 670-700 இல் ஆண்ட இரண்டாவது நரசிம்மனால் கட்டப்பட்டது. லிங்கம் பட்டை தீர்த்த உருவமுடையது. லிங்கத்தின் பின்புறம் சோமாஸ்கந்தமூர்த்தி செதுக்கப்பட்டிருக்கிறது. ஆவுடையார் லிங்கத்தின் மத்தியில் இருக்கிறது. கோயிலின் சில பாகம் மண் மூடப்பட்டிருக்கிறது; பூஜை யில்லை.

சாண்டால் துர்சாஹஸ்:—வங்காளத்தின் ஓர் பிரிவு. இங்கு தேவக்கிரஹம் எனும் ஊரில் வைத்யநாதஸ்வாமி கோயில்; சந்திரகூப தீர்த்தம், ஜோதிலிங்கங்களில் ஒன்று; ராவணப் பிரதிஷ்டை என்பது ஐதிகம், ஸ்வாமி பெயர் வைத்யநாத்; ராவணேஸ்வரர் என்றும் பெயர். விமானம் 72 அடி உயரம்; பழய கோயில்; லிங்கம் வட்டவடிவுடையது; 5 அங்குலம் வட்டக் குறுக்களவு உடையது, 4 அங்குல உயரம். இங்கு தூத்நாத மஹாதேவர் கோயில் என்று மற்றொரு சிவாலய முண்டு.

சாஹோ :—சம்பா சமஸ்தானம், சந்திரசேகரர் ஆலயம்; பழய கோயில், கூரை மாத்திரம் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது.

சிக்கமான் :—பம்பாய் ராஜதானி சோமேஸ்வரர் கோயில், இங்குள்ள தீபஸ்தம்பத்தில் கார்த்திகையில் 350 விளக்குகள் ஏற்றப்படுகின்றன.

சாலவாக்கம் :—காஞ்சீபுரம் தாலூகா, சென்னை ராஜதானி சிவாலயம், 200 கெஜம் நிகளம், 150 கெஜம் அகலம், ஸ்வாமி சொர்ணபுரீஸ்வரர் தேவி ஆநந்தவல்லி. இங்கருகிலுள்ள மலை உச்சியில் வைரவநாதர் எனும் சிவாலயமுண்டு.

சிக்கந்தராபாத் :—நிஜாம் ராஜ்யம் சிவாலயம்.

சிக்கல் :—ராம்நாட் ஜில்லா, சென்னை ராஜதானி சிறு சிவாலயம்; ஸ்வாமி திருவநந்தேஸ்வரர். இங்கு சத்திரமுண்டு.

சிக்கல் :—தென் இந்தியா ரெயில்வே ஸ்டேஷன் நாகப் பட்டினத்திற்கு அருகிலுள்ளது. வசிஷ்டர் காமதேனுவை அடையும் பொருட்டு பூசித்த ஸ்தலம், ஸ்ரீ கிருஷ்ணன் பூசித்த ஸ்தலம், ஸ்வாமி சந்நிதி கட்டு மலையிலிருக்கிறது. ஸ்வாமி நவனீதேஸ்வரர் தேவி வேல்நெடுங்கண்ணியம்மை, புஷ்கரிணி தீர்த்தம், ஸ்தல விருட்சம் மல்லிகைச் செடி (இங்குள்ள சிங்காரவேலர் பிரபலமூர்த்தி) காமதேனுவின் பால் பெருகி எங்கும் வெண்ணெயாய்ப் படிய, வசிஷ்டர் அதைத் திரட்டி சிவலிங்கமாக்கிப் பூசித்தார்; அதனால் ஸ்வாமிக்கு வெண்ணெய் லிங்கேஸ்வரர் என்று திருநாமம். அந்த லிங்கத்தை வேறிடம் வைக்க எடுக்கப் பிரயத்னப் பட்டபொழுது வராமல் சிக்கிக கொண்டபடியால் சிக்கல் எனப் பெயர் உண்டாயிற்றென்பது ஐதிகம். பிரம்மோற் சவம் சித்திரை மாசம். திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

சிக்கிஹொண்டா :—தேவாங்கெரே தாலூகா, மைசூர் ராஜ்யம், சிவாலயம் பாழா யிருக்கிறது.

சிக்மகளூர் :—மைசூர் ராஜ்யம், ராமஸ்வாமி கோயில் தற்காலம் புதிதாய்க் கட்டப்பட்டது.

சிங்கபுரம் :—விசாகபட்டணம் ஜில்லா, சென்னை ராஜதானி, இங்கு தேவகிரி எனும் குன்றில் குகைக்கோயில் சிவாலயம், சிவராத்ரி விசேஷம்.

சிங்கபூர் :—மலேயா நாட்டிலுள்ளது கடற்கரைக்கு 2 மயிலில் சிவாலயம், இங்கு மற்ற தேவதைகளும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. பிராமண குருக்கள் பூஜை.

சிங்கபூம் பிரிவு :—வங்காள ராஜதானி, பெணுசாகர் சிவாலயம்; ஏழாம் நூற்றாண்டில் கட்டப்பட்டது; சிலமா யிருக்கிறது.

சிங்கற்பூர் :—சட்டாரா ஜில்லா, பம்பாய் ராஜதானி, கோரிகாவான் ஸ்டேஷனிலிருந்து 40 மயில் சிவாலயம் சிற்று குன்றில் மீதுளது; ஸ்வாமி மஹாதேவர். இங்கு பெரிய சத்திரமுளது.

சிட்டல்துர்க் :—இதற்கு சித்ர துர்க்கம் அல்லது சத்திரக் கல் என்றும் பெயர்; மைசூர் ராஜ்யம், மலை உச்சியில்

சித்தேஸ்வரர் கோயில்; இங்குள்ள ஒரு குகையில் பஞ்சலிங் கேஸ்வரர் ஆலயமுண்டு. இது 700 வருடங்களுக்கு முன்பு வெட்டப்பட்டதாம், ஸ்வாமி பெயர் சித்தநாதர் 1355 வருஷம் மல்லிநாதரால் கோயில் கட்டப்பட்டது. இங்கு அங்கிளிமத் என்றும் குன்றிருக்கிறது. இதில் தரை மட்டத்தின்கீழ் குகைகள் இருக்கின்றன; இவைகளில் சிவலிங்கங்கள் இருக்கின்றன.

சித்ரகூடம்:—வட இந்தியா மாணிக்பூருக்கு 25 மயில் சிவாலயம், ஸ்வாமி காந்தநாதர் தேவி காந்திமதி, ரெயில் ஸ்டேஷன்.

சிட்டகாங் பிரிவு:—வங்காள ராஜதானி (கிழக்கு) இங்கு 3 சிவாலயங்கள் உண்டு. (1) மைஸ்கால் சிவாலயம் ஸ்வாமி ஆதிநாதர். (2) சிதாகுண்ட சிவாலயம் ஸ்வாமி ஷம்புநாத் (3) சந்திரநாத்குன்று சிவாலயம், ஸ்வாமி சந்திரநாத்.

சிட்டூர்கர்:—மார்வார் தேசம், உதயபுரி ராஜ்யத்தி லுள்ளது சிவாலயம்.

சிண்டலாரா பிரிவு:—மத்திய மாகாணம் இங்கு மூன்று சிவாலயங்கள் உள (1) சாவல்பாஹி சிவாலயம் (2) நில்கண்டி சிவாலயம்; இங்கு சில இடிந்த சிவாலயங்களுமுண்டு (3) ராகா தேவி கிராமம் சிவாலயம்; குகைக்கோயில்; பக்கத்தி லுள்ள இணற்றில் இறங்கிப் போகவேணும்.

சித்தனவாசல்:—சென்னை ராஜதானி, புதுக்கோட்டை சமஸ்தானம் இங்கு இடிந்துபோன ஒரு சிவாலயமுளது. இங்கு குளத்தருகில் குகைக்குள் ஒரு சிவாலயமுண்டு தண்ணீரை இரைத்தாலொழிய சிவலிங்கம் புலப்படாது. இக்குகைக் கோயிலில் வர்ணம் தீட்டிய சித்திரங்கள் உள; அவை அஜெண்டா குகையிலிருப்பவை போன்றவை. ஆகவின் இக்குகைக்கோயில் மிகவும் புராதனமானது.

சித்தனகர்:—காஞ்சிபுரம் தாலூகா, செங்கல்பட்டு ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம்; ஸ்வாமி உமையா ளீசர் தேவி அகிலாண்டவல்லியம்மன்.

சித்தவட்டம்:—கடப்பை ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம் சித்தேஸ்வரர் அல்லது சித்தவடேஸ்வரர்; கோயில் மணலால் மூடப்பட்டிருக்கிறது. இதில் பழய கல் வெட்டுகள் இருப்பதாக வதந்தி. குபேரன் பூசித்த ஸ்தலம்.

சித்தபுரம் :—பேலூர் தாலூகா, ஷிமோகா ஜில்லா, மைசூர் ராஜ்யம், சித்தேஸ்வரர் கோயில்.

சித்தபூர் :—(சித்தபுரி) அல்லது சித்தர்பூர் ; அகமதாபாத்திலிருந்து 64 மயில் ; சரஸ்வதி நதியின் வடகரையிலுள்ளது, பரோடா சமஸ்தானத்தில் கடி ஜில்லாவில் உளது. சிவாலயம், சித்தேசர் ருத்திரமாலா எனும் பெயர் உடையது பெரிய கோயில் ; தற்காலம் மிகவும் கிலமா யிருக்கிறது. இங்கு ஸ்டேஷனுக்கருகில் ஒரு தர்ம சாலையுண்டு. பம்பாய் பரோடா சென்ட்ரல் ரெயில் ஸ்டேஷன். இதனருகில் நர்மதா சங்கமத்தில் ஓர் சிவாலயமுளது ; ஸ்வாமி சங்கமுகேஸ்வரர், சுயம்புலிங்கம்.

சித்தர் மலை :—மதுரை ஜில்லா, அம்மைய நாயக்கனூர் ஸ்டேஷனுக்கு 13 மயில் தென் மேற்கு சிவாலயம், 14-ஆம் நூற்றாண்டில் பம்பரமுத்து நாயக்கர் என்பவரால் கட்டப் பட்டது. இக்காரணம்பற்றி இன்றைக்கும் சிவபூஜை முடிந்தவுடன் " பம்பரமுத்து நாயக்கர் " என்று மும்முறை அழைத்து அவரது சந்ததியார் யாராவது வந்தால் அவர்களுக்கு விபூதிப் பிரசாதம் முதலிய கொடுக்கும் வழக்கமுண்டு. கோயிலிலுள்ள லிங்கத்திற்கு மஹாலிங்கம் எனப் பெயர் ; எழுகடல் தீர்த்தம்.

சித்தானம் :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, மாயவரத்திற்கு அருகிலுள்ள சிவஸ்தலம்.

சித்தூர் :—ராஜபுதனம், உதயபுரி ராஜ்யம், இங்கு பல சிவாலயங்கள் உள. (1) சமித்தேஷ்வர் ஆலயம் (2) நீலகண்ட மஹாதேவர் ஆலயம் (3) கைலாசபுரி ஆலயம் ஸ்வாமி ஏகலிங்கர் ; பப்பா என்பவரால் கட்டப்பட்டது. மகம்மதியர்களால் பழய கோயில் இடிக்கப்பட்டபின் ராணி ராய்மல் என்பவர்களால் 1488 வருஷம் புதுப்பிக்கப்பட்டது ; சிவலிங்கம் கறுப்புக்கல்லாலாயது 4 முகங்களுடையது (4) ஜஹாஸ்பூர் இங்கு 12 சிவாலயங்கள் உள. (4) கும்பகர் கோட்டைக்குள் ஒரு சிவாலயமுண்டு.

சித்தேஸ்வரம் :—வடஇந்தியா, பாதர்பூர் ஸ்டேஷனுக்கு சமீபம், சுயம்புலிங்கம் ; ஸ்வாமி பெயர் தவளீஸ்வரர்.

சித்தலிங்க மடம் :—திருக்கோயிலூர் தாலூகா, தென் ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, வியாக்ரபாதர்

கோயில்; இங்கு சுந்தரபாண்டியன் (1270-1302) காலத்திய கல் வெட்டுகள் உள.

சிதம்பரம்:—சென்னை ராஜதானி, தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன், இதற்குக் கோயில், தில்லை, பெரும்பற்றப்புலியூர், புண்டரீகபுரம், தகராகாசம், வியாக்ரபுரம், என்றும் பெயர் களுண்டு. தில்லை என்பது ஒரு செடியின் பெயர்; தில்லைக் காடா யிருந்தமையால் ஆதியில் அப்பெயர் வந்திருக்கலாம். சிறு × அம்பலம் = சிற்றம்பலம், சிதம்பரம் என்றுயது என பெர்கூசன் எண்ணுகிறார். சித் × அம்பலம் = சிற்றம்பலம், சித்மபாம் ஆயது என்று சமஸ்கிருத வித்வான்கள் கூறு கின்றனர். கோயில் மிகவும் பிரபலமானது. மூவர் பாடல் பெற்றது. திருவிசைப்பா, திருப்பல்லாண்டு பாடல் பெற்ற ஸ்தலம்; பூலோக கைலாசம் எனப் பெயர் பெற்றது. தர்சிக்க முக்தியளிக்கும் ஸ்தலம் என்பது ஸ்தல மகாத் மியம்; பதஞ்சலி வியாக்ர பாதர்களால் சேவிக்கப்பட்ட க்ஷேத்திரம். பஞ்ச சபைகளில், கனக சபையையுடையது; சபாநாதர் ஆநந்தத் தாண்டவ மாடிய பதி; தில்லை மூவாயிர வர் பூசிக்கும் கோயிலையுடையது. திருநீலகண்ட நாயனர், நந்தனர், கூற்றுவநாயனர், சந்தனசாரியார், கோச்செங்கட் சோழர், கணம்புல்லர், மறைஞான சம்பந்த சிவாசாரியார், உமாபதி சிவாசாரியர், துற்பதன், துற்சகன், துர்த்தெரி சினன் முதலியோர் முக்திபெற்ற ஸ்தலம். உபமன்யு பாற்கடல் பெற்றுண்ட ஸ்தலம்; வியாசர், சுகர், சௌனகர் சூதர் பூசித்த தலம். குலோத்துங்க சோழன் காலத்தில் நம்பியாண்டார் நம்பி இக்கோயிலின் ஓர் அறையில் தேவாரங்களைக் கண்டெடுத்த ஸ்தலம்; மாணிக்கவாசகர் இங்கு சமணர்களை வென்ற இடம்; அர்த்த ஜாமத்தில் எல்லா சிவ க்ஷேத்திரங்களிலுமுள்ள சிவகலைகள் தன்னிடம் வந்து சேரப்பெற்ற சிவமூர்த்தியையுடையது. பஞ்சலிங்கங்களில் ஆகாயலிங்க க்ஷேத்திரம். சிவாலயம் ஆதியில் சிறியதாயிருந்து பிறகு மிகவும் பெரியதாக்கப் பட்டது. ஸ்வாமி திருமூலநாதர்-சபாநாயகர்; தேவி உமை யம்மை, சிவகாமியம்மை, சிவகங்கை தீர்த்தம், புலிச்சுர தீர்த்தம், குய்ய தீர்த்தம், புலிமடு, வியாக்ரபாத தீர்த்தம், காந்த தீர்த்தம், பிரம தீர்த்தம், திருப்பாற்கடல்; இங்குள்ள கூபத்திற்கு பரமாநந்த கூபம் என்று பெயர். கோயில் 600 கெஜம் தெற்கு வடக்கு, 500 கெஜம் கிழக்கு, மேற்கு;

மொத்தம் 39 ஏகரா விஸ்தீர்ணமுடையது. வெளி மதிற் சுவர்கள் 30 அடி உயரம், பெரிய கோபுரம் சுமார் 122 அடி உயரம்; கோயிலில் நான்கு பிராகாரங்கள் இருப்பதாகக் கூறலாம்; முதல் பிராகாரம் விக்ரம சோழனால் கட்டப் பட்ட தென்பர்; இரண்டாம் பிராகாரத்திற்கு விக்ரம சோழன் திருமாளிகை என்று பெயர்; மூன்றும் பிராகாரத் தில் 1000-க்கால் மண்டப மிருக்கிறது. 350 × 260 அடி விஸ்தீரணமுடையது, இது 1595 முதல் 1685 ஆண்டிற்குள் கட்டப்பட்டதாம். முதல் குலோத்துங்கன் தங்கை குந்தவையும், சிற்றரசனுகிய நரலோகவீரனும் கோயிலில் இரண்டு பிராகாரங்கள் கட்டியதாகச் சொல்லப்படுகிறது. இவர்கள் 100 கால் மண்டபத்தையும் கட்டி வைத்தனர். பெரிய புராணத்தை எழுதும்படிச்செய்த அனபாய சோழன் அம்மன் கோயில் பிராகார மதில்கள் கட்டி வைத்தனன். மூன்றுவது குலோத்துங்கன் (1178) சபா பதிக்கு முக மண்டபமும், ஒரு கோபுரமும் அம்மன்கோவில் பிராகாரத்தில் திருப்பணிகளும் செய்தனன். கோவில் மூலஸ்தானம் மிகவும் பழமையானது; இது ஒரு ரதத்தைப் போல் அமைக்கப்பட்டிருக்கிறது. நடராஜமூர்த்தி யிருக்கும் சபைக்கு சித்சபை என்று பெயர்; இது மரத்தாலாயது. சித்சபைக்கு எதிரில் கனகசபை இருக்கிறது; இங்குதான் நடராஜருக்கு தினம் அபிஷேக மாகிறது. கனகசபையும் மரத்தாலாயது. நடராஜ விக்ர ஹத்திற்குப் பின்னுல் சிதம்பர ரஹஸ்யம் இருக்கிறது; இது சாதாரணமாகத் திரையால் மூடப்பட்டிருக்கும்; இங்கு லிங்கம் ஆகாய லிங்கமாம். சித் சபையில் நடராஜப் பெருமாள் பதஞ்சலி வியாக்ரபாதர்களுக்கு நடனமாடிய தாக ஐதிகம். இங்குள்ள ஐந்து படிகளும் வெள்ளியால் மூடப்பட்டிருக்கின்றன. இவை பஞ்சாக்கரங்களைக் குறிக் கின்றன என்பது ஐதிகம். சித் சபையானது மானிட உடம்பில் எப்படி இருதயம் இருக்கிறதோ, அப்படியே இக்கோயிலில் அமைக்கப்பட்டிருக்கிறது. இச்சபைதான் இக்கோயிலுக்கு கர்ப்பக்கிருஹமாம். இம்மண்டபம் அடி பீடத்திற்குமேற் கட்டப்பட்டிருக்கிறது. இதில் நடனம் செய்யும் சில்பங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளைப் போன்ற அழகிய சில்பங்கள் இந்தியா முழுவதுமே கிடையா தெனக் கூறலாம். இம்மண்டபத்தின்

பக்கங்களில் சக்கரங்கள் போலும் குதிரைகள் போலும் சிலைகள் இருக்கின்றன. ஆகவே இது ஒரு பெரியரதத்தைப் போன்றதாம். மூலஸ்தானேஸ்வரர் ஆலயம் கோயிலில் பெரிய கோபுரத்திற்கு நேராக உள்ளது; இதுதான் பழய கோயில் என்று சிலர் எண்ணுகின்றனர். இங்கு பூர்வத்தில் பழய கல் வெட்டுகள் இருந்ததாக அறிகிறோம்; கனகசபை பின்பு கட்டப்பட்டதாம். நடராஜர் கோயில் மரத்தாலிருக் கிறபடியால் பெர்கூசன் துரை இதுதான் கோயிலில் மிகவும் பழமையான பாகம் என்று நினைக்கிறார். இவை பத்தாம் நூற்றாண்டில் கட்டப்பட்டன என்கிறார். இங்குள்ள பார்வதி கோயில் பிறகு 14 நூற்றாண்டில் கட்டப்பட்டதாக நினைக் கிறார். கனகசபை பொற்றகடால் மூடப்பட்டது; முதல் பராந்தகன் (907-947) காலத்திற்கு முன்பு அது தாமிரத் தால் மூடப்பட்டிருந்தது. பராந்தகன் அதற்கு பொன் வேய்ந்து கனகசபை யாக்கினன். நிருத்த சபையில் 8 அடி உயரமுள்ள 56 அழகிய தூண்கள் உள. கோயிலின் இரண்டு உட்பிராகாரங்கள், 927-977 ஆண்டுகளில் ஆண்ட வீர சோழனும், 1004-ஆம் ஆண்டில் ஆண்ட அவனது பேரன் அரிவர்ம தேவனும் கட்டப்பட்டதாக கொங்கு தேச ராஜாக்கள் சரித்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பார்வதி கோயில் கட்டப்பட்ட சமயம்தான் இங்குள்ள பெரிய கோபுரங்கள் கட்டப்பட்டன. கிழக்கு கோபுரம் சோபெருஞ்சிங்க தேவனால் சுமார் 1050 AD-இல் கட்டப் பட்டு, பிறகு (1754-1794)—பச்சையப்ப முதலியார் தங்கையால் புதுப்பிக்கப்பட்டது; இதில் பதஞ்சலி வியாக்ர பாதர்கள் சிலைகளிருக்கின்றன. தெற்கு கோபுரம் பாண்டிய அரசனால் கட்டப்பட்டதாம். இதுதான் மிகப் பெரியது, 7 நிலைகளுடையது; இதற்கு அறிகுறியாக மச்சக்கொடி பொறிக்கப்பட்டிருக்கிறது. வடக்கு கோபுரம் 1516-ஆம் ஆண்டில் விஜயநகரத்து கிருஷ்ணதேவராயரால் கட்டப்பட் டது, 140 அடி உயரம்; இங்குள்ள இரண்டு கோபுரங்களில் இரண்டு பக்கமும் பரத நாட்டியத்திற்குரிய 108 நடனங்கள் சித்திரிக்கபபட்டிருக்கின்றன, ஒவ்வொரு முத்திரையின் பெயரும் கீழே குறிக்கப்பட்டிருக்கிறது. ஆயிரக்கால் மண்டபத்திற்கு ராஜசபை என்று பெயர். இது 192 அடி அகலம், 338 அடி நிகளம், 1000 கால்கள் சரியா யிருக் கின்றன. இங்குள்ள சுப்ரமணியர் கோயிலுக்கு பாண்டிய

நாயகம் கோயில் எனப் பெயர்; இது 17-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாம்; இதன் அடிவாரச் சில்பங்கள் பார்க்கத் தக்கவை. சபா நாயகருடைய முக மண்டபமும், அம்மன் கோயில் கோபுரமும், பிராகாரமும் மூன்றாவது குலோத்துங்க சோழன் (1178-1216) காலத்தில் கட்டப்பட்ட தென்பர். கோயிலில் முற்கூறிய சபைகளன்றி தேவ சபை என்றும் ஒரு சபையுளது. சிவகாமி அம்மன் கோயிலில் புராணக் கதைகள் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. அம்மன் கோயில் கூரை விசித்திர வேலைப்பாடுடையது; முன் மண்டபமும் அழகியது. கோயிலின் மத்தியில் சிவகங்கை யெனும் திருக்குளம் இருக்கிறது; 175 அடி நிகளம், 100 அடி அகலம்; இதைச் சுற்றிலும் மண்டபங்கள் இருக்கின்றன. இதில் மூழ்கித் தன்னைப் பீடித்திருந்த குஷ்ட வியாதி நீங்கினபடியால், ஹிரண்ய கர்ப்பன் என்பவனால் கோயிலின் பழய பாகம் கட்டப்பட்ட தெனச் சொல்லப்படுகிறது. உட்பிராகாரத்தில் தெற்கு மூலையில் கோவிந்தராஜர் எனும் விஷ்ணு சந்நிதியுண்டு. இது 12-ஆம் நூற்றாண்டில் விக்கிரம சோழனால் கட்டப்பட்ட தென்பர். இது ராஜா சர். அண்ணாமலை செட்டியாரால் பெரும் பொருள் செலவழித்து புதுப்பிக்கப் பட்டிருக்கிறது. பிற்காலம் தேவாரத் திருப்பதிகங்கள் கண்டெடுக்கப்பட்ட அறை கோயிலின் வட கிழக்கில் இரண்டாம் பிராகாரத்திலிருக்கிறது. கோயிலின் தென் மேற்கு மூலையில் ஒரு பெரிய கணேசர் இருக்கிறார். இதுதான் இந்தியா முழுவதிலும் கோயிலிலுள்ள கணேச விக்ரஹங்களில் பெரிது என மதிக்கப்படுகிறது. கோயிலின் 8 மூலைகளிலும் அஷ்டதிக் பாலர்கள் அமைக்கப்பட்டிருக்கின்றனர். கோயிலில் 9 அங்குல உயரமுள்ள ஸ்படிக லிங்க மிருக்கிறது. மாணிக்க நடராஜ விக்ரஹத்திற்கு தினம் அபிஷேகம்; இது மிகவும் விசேஷம் இதற்கு கற்பூரார்த்தி நடக்கும்போது பின்புறம் இருந்து பார்ப்பது ஆச்சரியகரமான காட்சியாம். இக்கோயிலிலுள்ள சண்டேஸ்வர அனுக்கிரஹ மூர்த்தியும் திரிபுராந்தக மூர்த்தியும் பார்க்கத்தக்கவை. அன்றியும் இங்குள்ள அழகிய சிலைகளில் குதிரைகள் பூட்டிய சூரியனுடைய ரதம் ஒன்று பார்க்கத்தக்கது. இதற்கு அருணன் சாரதியாயிருக்கிறான். கோயிலில் சண்டேஸ்வரர் இருக்கவேண்டிய ஸ்தானத்தில்

பிரம்மா இருக்கிறார். இக்கோயிலில் அநேகம் கல்வெட்டுகள் உள; மிகவும் பழமையானது முதல் ராஜேந்திர சோழனுடைய 24-ஆண்டு கல்வெட்டாம். இங்கு பல்லவ கல்வெட்டுகளும் இல்லை, சில்பங்களு மில்லையென்பது கவனிக்கத்தக்கது. கல்வெட்டுகளில் திருத்தொண்டத் தொகை குறிப்பிட்டிருக்கிறது. அன்றியும் 63 நாயன்மார் களுடைய உற்சவமும் குறிக்கப்பட்டிருக்கிறது. முன் கூறிய சிவகங்கையன்றி இக்கோயிலில் அடியிற்கண்ட முக்கிய தீர்த்தங்கள் உள, காயதீர்த்தம், வியாக்ரபாத தீர்த்தம், பரமபதி தீர்த்தம், ஆநந்த தீர்த்தம், பிரம்ம தீர்த்தம், நாக தீர்த்தம். இக்கோயில் காரியங்கள் ஆதிமுதல் நில்லை மூவாயிரவர் எனும் தீட்சதர்களால் பார்த்துவரப்படுகிறது. கோயிலில் இரண்டு முக்கிய பிரம்மோற்சவங்கள் உண்டு, ஆனிமாதம் ஒன்று, மார்கழிமாதம் ஒன்று; மார்கழி மாதம் ஆருத்திரா தர்சனம் மிகவும் பிரபலமானது; தர்சனம் என்பது ராஜ சபையிலிருந்து நடராஜமூர்த்தி திரும்பும்பொழுது கொடுக்கும் காட்சியாம். கோயிலில் ராஜேந்திர சோழன் காலத்தியதும், குலோத்துங்கசோழன் காலத்தியதுமான கல்வெட்டுகளும்உள. கோயிலில் ஒற்றைக் கால் மண்டபம் என்று ஒன்றுண்டு. யமனுக்கு பிரத்யேக ஆலயம் உண்டு, தற்காலம் கொஞ்சம் கிலமாயிருக்கிறது. இவ்வூரிலுள்ள மற்ற ஆலயங்கள். (1) நந்தேஸ்வரர் கோயில், பெரிய கோயிலுக்கருகிலிருக்கிறது. இது பதஞ்சலி பூசித்த கோயிலாம்; இங்கு துர்வாசர் சிலையுளது. (2) இளமை யாக்கினார் கோயில், வியாக்ரபாதர் பூசித்த கோயில். மற்ற ஆலயங்கள் :—சிங்காரத்தோப்பருகில் பீமேஸ்வரர் கோயில், மன்னங்குடிச்சேரியில் திருக்காலஞ்சேதி மகாதேவர் ஆலயம், பரகேசரிகல்லூரில் விக்ரம சோளீஸ்வரமுடையார் கோயில்; இக்கோயில் எதிரிலிசோழனல் கட்டப்பட்டதென்பர். இவ்வூரில் ஞானவாபி எனும் குளக்கரையில் சேக்கிழாருக்கு ஒரு சிறிய கோயில் உண்டு. இங்கு பல சத்திரங்கள் உள. (1) செட்டியார் சத்திரம் தெற்கு மாடவீதி, (2) சின்ன பண்ணைச் சத்திரம் தேரடிக் கரை வீதி, இங்கு கலியாண சோழபுரம் தர்ம சத்திரமுமுளது. (3) பல்லவராயபெட் தர்ம சத்திரம் தெற்குத் தெரு. (4) மூத்தைய முதலியார் சத்திரம் வடக்கு மாட வீதி. (5) மார்வாடி சத்திரம் கிழக்கு மாட வீதி. (6) மற்றொரு மார்வாடி சத்திரம், மானே தீட்சதர்

சந்து. (7) சுப்பராய செட்டியார் சத்திரம் ஓம குளத் தருகில். (8) குப்பாயத்துப் பிள்ளை சத்திரம் மேற்கு மாட வீதி. (9) குண்டு பிள்ளை சத்திரம் தேரடிக் கடைத் தெரு. (10) தங்கரதம் சத்திரம் வடக்கு மாடவீதி. (11) கோமுட்டி சத்திரம் மேற்கு மாடவீதி.

சிந்தமல்லி :—சென்னை ராஜதானி திருநெல்வேலிக்கு 7 மயில் கந்தர்ப்பேசர் - லோகநாயகி ; வைப்புஸ்தலம்.

சிந்தாமணி :—சென்னை ராஜதானி கடற்கரையி லுள்ளது ; ஆரணி சங்கமமாகுமிடம் சிவாலயம் ; ஸ்வாமி சிந்தாமணீஸ்வரர் ; இதற்கு கிழக்குகோகர்ணம் என்று பெயர்.

சிந்துவல்லி :—நஞ்சங்கோட் தாலூகா, மைசூர் ராஜ்யம், சங்கமேஷ்வர் கோயில்.

சிப்சாகர் பிரிவு :—வட இந்தியா ஆசாம் ராஜதானி ; இங்கு 3 சிவாலயங்கள் உள. (1) சிவகோட் கோயில் 1727 கட்டப்பட்டது. (2) ஹரகௌரி தேவாலயம், 1704 கட்டப்பட்டது. (3) சிப்சாகர் பட்டணம் சிவாலயம் ; ஸ்வாமி ஈசானேஸ்வரர் ; 1769 கட்டப்பட்டது.

சிப்பகிரி :—ஆலூர் தாலூகா, பல்லாரி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம் ; போஜேஸ்வர ஸ்வாமி ; இங்குள்ள துவஜஸ்தம்பம் 40 அடி உயரம்.

சிர்மூர் ராஜ்யம் :—பஞ்சாப் மாகாணம் வட இந்தியா (1) சௌர்பிக் மலை உச்சியில் சிவலிங்கம் உண்டு. அதற்கு தினம் பூஜை நடக்கிறது. அடிவாரத்தில் ஒரு சிவாலயம். (2) பயிரிவாலா சிவாலயம் ; இக்கோயில் ஸ்ரீ சங்கராசாரியால கட்டப்பட்டதென்பர்.

சிராப்பள்ளி (திரு) :—மேற்படி ஜில்லா சென்னை ராஜ தானி ரெயில் ஸ்டேஷன். முக்கியசிவாலயம் மலைக்கோயில் ; ஸ்வாமி தாயுமானேஸ்வரர், செவ்வந்திநாத ஸ்வாமி, தேவி மட்டுவார்குழலம்மை ; நன்று தீர்த்தம், தீயல்லா தீர்த்தம், காவிரிநதி. மலைவாயிலில் இருக்கும் விக்னேஸ்வரருக்கு மாணிக்க விநாயகர் என்று பெயர். திரிசிரஸ் எனும் அசுரன் பூசித்தபடியால் திருசிராப்பள்ளி என்று பெயர்பெற்றது. இதை தட்சிணகைலாசம் என்பர். பிரசவ வேதனையிலிருந்து ஒரு பெண்மணிக்கு பரமசிவம் அவளது தாயுருவுடன்போய் உதவியமையால் தாயுமானவர் என ஸ்வாமிக்குப் பெய

ருண்டாயிற்று. தாயுமான ஸ்வாமி பல வருடங்கள் தங்கி யிருந்த இடம். அனுமார், ஸ்ரீராமர், திரிசிரன் பூசித்த க்ஷேத்திரம். கோயிலில் மூல லிங்கம் மேற்கு நோக்கியது. பரிவார தேவதைகளெல்லாம் கிழக்கு நோக்கி யிருக் கின்றன. ஒரு சோழ அரசன்மீது கோபங்கொண்டு ஸ்வாமி முகத்தைத் திருப்பிக்கொண்டதாக ஸ்தல புராணம்; செவ்வத்திப் புட்பத்திற்காக ஸ்வாமி மேற்கு முகமாக மாறினர் என்றும் சொல்வர். முக்கிய உற்சவம் சித்திரை மாசம். மலை உச்சியில், உச்சிப் பிள்ளையார் கோயில் பார்க்கத்தக்கது. இந்த விநாயகர் தலையில் ஒரு வடு உண்டு. ஸ்ரீராமர் விபீஷணருக்களித்த விஷ்ணு விக்ரஹத்தை, அவர் பிராம்மண பிரம்மசாரி வடிவங்கொண்ட பிள்ளையா ரிடம் கொடுக்க, விநாயகர் அதை ஸ்ரீரங்கத்தில் வைத்துவிட, கோபங் கொண்ட விபீஷணர் பிள்ளையாரைக் குட்டியதாக ஐதிகம். இங்கு மலையின்மேற் போகும் வழியில் ஒரு குகைக் கோயில் உண்டு. சிவாலயம் 7-ஆம் நூற்றாண்டில் பல்லவ அரசனகிய மஹேந்திரவர்மனல் வெட்டப்பட்டது, தெற்கு முகமானது, மலையின் தென்பாரிசத்திலுள்ளது. கர்ப்பக் கிரஹமும் முன் தாழ்வாரமு மடங்கியது. கோயில் மேற்கு நோக்கியது. கர்ப்பக் கிரஹத்தில் தற்காலம் லிங்கமில்லை; முற்காலத்தில் இருந்ததாகத் தெரிகிறது. மஹேந்திரவர்மனுடைய சிலையும் இங்கு முன்பிருந்ததாகத் தெரிகிறது. மேற்கு சுவரில் கங்காதர மூர்த்தியின் உருவம் செதுக்கப்பட்டிருக்கிறது. இங்கு பல பழய கல்வெட்டுகள் உள. இங்கு அடிவாரத்திலும் ஒரு குகைக்கோயில் உண்டு சிவாலயம் குகைக்கோயில்; பூர்த்தியாகவில்லை. இரண்டு கர்ப்பக் கிரஹங்களுக்கும் இடையில் ஒரு தாழ்வாரமுண்டு. பின்புறத்தில் கணேசர், பரமசிவம், துர்க்கை, சூரியன், பிரம்மா, விஷ்ணு விக்ரஹங்கள் செதுக்கப்பட்டிருக் கின்றன. இக்கோயில் மஹேந்திரவர்மன் குமாரன் நரசிம்மவர்மனல் வெட்டப்பட்டதாம். இங்குள்ள கணேசர் விக்ரஹம்தான் இந்தியாவிலுள்ள மிகவும் பழமையான கணேசர் உருவம் என்று எண்ணப்படுகிறது. இவ்வூரில் பல சத்திரங்கள் உண்டு; முக்கியமானவை (1) ஸ்ரீ பிரசன்ன வெங்கடேசஸ்வாமி சத்திரம், தினம் குடிக்கூலி 6 அணை, ஸ்டேஷனுக்கு ½ பர்லாங்கிலுள்ளது. (2) சின்ன யா பிள்ளை சத்திரம் 2 பர்லாங் தூரம்; முசாபர் பங்களாவும்

உண்டு. திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசு ஸ்வாமிகள் பாடல் பெற்ற ஸ்தலம். இவ்வூரிலுள்ள மற்ற சிவாலயங்கள் (1) நாகநாதஸ்வாமி கோயில் (2) பூலோகநாதர் கோயில் (3) கைலாசநாதர் கோயில்.

சிருங்கேரி :—காடூர் ஜில்லா மைசூர் ராஜ்யம், துங்கை நதியின் கரையிலுள்ளது. இதற்கு ரிஷ்ய சிருங்ககிரி என்றும் பெயர். வித்யாசங்கரர் கோயில் ஒரு சிறு குன்றின் பேரில் உளது. தற்காலக் கோயில கட்டப்பட்ட காலம் 1338வரு. இங்கு மூன்று அறைகளில் உமா மஹேஸ்வரர், சரஸ்வதி பிரம்மா, லட்சுமி நாராயணர் இருக்கிறார்கள். இங்குள்ள நவரங்க மண்டபத்தில 12 தூண்களில் சிங்கங்களின் உருவங்கள் உள, அவைகளின் வாய்களில் கருங்கல் குண்டுகள் உருளுகின்றன. ஒவ்வொரு தூணிலும் ஒரு ராசி செதுக்கப்பட்டிருக்கிறது. சூரிய மாசங்களில் ஒவ்வொரு மாசத்திலும் சூரியரஸ்மி இத்தூண்களில் ராசிக் கேற்றபடி விழுகின்றது. நவகிரஹங்களுள் 8, இத்தூண்களில் செதுக்கப்பட்டிருக்கின்றன ; சூரியன் மத்தியில் காட்டப்பட்டிருக்கிறது. இங்கு மஹா மண்டபத்தில் கணேசர் இருக்கவேண்டிய இடத்தில் எஃகினுவாகிய சகீஸ்வர பகவான் இருக்கிறார். லோக கர்த்தாவாகிய ஹரிஹரன் உருவம் இருக்கிறது. மூலஸ்தான லிங்கத்திற்கு வித்யாசங்கரர் என்று பெயர். கோயிலின் கஜாணவில், ஒரே பாத்தில் ஒரு நந்தி செதுக்கப்பட்டிருக்கிறது. இக் கோயிலிலுள்ள சரஸ்வதி விகரஹம் (சாரதாம்பாள்) முற்றிலும் பொன்னலாயது; பார்க்கத்தக்கது. ஒரே பச்சைக் கல்லில் ஒரு சிறு மண்டபம் செதுக்கப்பட்டிருக்கிறது. பட்டணத்தின் நடுவில் மல்லிகார்ஜுனர் கோயில் இருக்கிறது. இங்கிருக்கும் வேணுகோபாலரும் ஸ்ரீனிவாசரும் கெம்புக்கற்களாலானவை.

சிலம்கூர் :—கடப்பை ஜில்லா, சென்னை ராஜதானி புரோடட்டூர் தாலூகா, கலமல்லா ஸ்டேஷனுக்கு 1½ மயில் சிவாலயம், ஸ்வாமி அகஸ்தீஸ்வரர், தென்கன்னடத்திலுள்ள ஜைனக் கோயிலைப்போல் கட்டப்பட்டிருக்கிறது. பூர்வ காலத்தில் ஜைன ஆலயமாயிருந்து பிறகு சிவாலயமாக மாற்றப்பட்டிருக்கலாம். கர்ப்பக்கிரஹம் வட்டவடிவமானது.

சிவகங்கை :—மைசூர் ராஜ்யம் பெங்களூருக்கு 20 மயில் நிடுவண்டா ஸ்டேஷனுக்கு 5 மயில் ரோட் மார்க்கம்; பெங்களூரிலிருந்து பம்பாய்க்குப் போகும் மார்க்கத்திலிருக்கிறது. கோயில் சுமார் 5000 அடி உயரமுள்ள ககுத்கிரி எனும் மலைமீது உளது. இம்மலை கிழக்கிலிருந்து பார்த்தால் நந்தியைப் போலவும், மேற்கிலிருந்து கணேசரைப் போலவும்; வடக்கிலிருந்து சர்ப்பத்தைப் போலவும், தெற்கிலிருந்து லிங்கத்தைப் போலவும் தோன்றும். சிவாலயம் கெம்ப கௌடரால் கட்டப்பட்டதாம். ஸ்வாமி கங்காதரீஸ்வரர் தேவிசுவர்ணம்பாள், ஹொன்னுதேவி (கன்னடம்); பாதாள கங்கை தீர்த்தம், வெயில் காலத்தில் தண்ணீர் அதிகமாயும் மழை காலத்தில் தண்ணீர் குறைந்தும் போகிறது! இதற்கு தட்சிண காசி என்றும் பெயர். கோயில் கர்ப்பக்கிரஹம் குகையில் குடையப்பட்டிருக்கிறது கோயிலில் சண்டேஸ்வரர் இருக்கவேண்டிய ஸ்தானத்தில் பிரம்மா இருக்கிறார். மூகமண்டபத்தில் சப்த மாத்ருக்கள், அஷ்டதிக்பாலர்கள் நவக்கிரஹங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றனர். இங்குள்ள பரமசிவத்திற்கும் பார்வதி தேவிக்கும் கலியாணக்கோலம் அழகியது; கோயில் உற்சவ விக்ரஹத்திற்கு பார்வதி கங்கை 2 தேவிகளுண்டு. ஹொன்னுதேவி கோவில் மிகவும் பிரபலமானது. இங்குள்ள சாந்தேஸ்வரர் ஆலயத்திலிள்ள கலியாணி தீர்த்தம் எனும் குளம் மிகவும் அழகியது. இதைச் சுற்றிலுமுள்ள சுவரில் ராமாயண பாகவத கதைகளின் சிற்பங்கள் இருக்கின்றன. இது விஷ்ணுவர்த்தனனுடைய மனைவியாகிய சாந்தலை தேவியின் ஞாபகார்த்தமாக 1129வது கட்டப்பட்டிருக்கலாம்; அழகிய சில்பங்களுடையது. மலையின் உச்சியில் ஒரு நந்தியிருக்கிறது. அதற்குமேல் வீரபத்திரர் கோயிலிருக்கிறது. இங்கு பாதாளகங்கை தவிர இன்னும் ஏழு தீர்த்தங்கள் உள. மலையின் உச்சியில் இரண்டு தூண்கள் உள. ஒன்றின் கீழிருந்து மகர சங்கிராந்தி தினம் ஜலம் பெருகுகிறது. இதற்கு கங்கோத்பத்தி என்று பெயர்; இதில் பாதி மைசூர் மஹாராஜாவுக்கு அனுப்பப்படுகிறது, மற்ற பாதி பக்தர்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

சிவகங்கை :—செட்டிநாட்டு சிவாலயம், ஸ்வாமி கைலாசநாதர், தேவி நித்யகல்யாணியம்மை.

சிவசைலம் :—சென்னை ராஜதானி திருநெல்வேலி ஜில்லா, ஆழ்வார்குறிச்சிக்கு 2 மயில் சிவாலயம்; அத்திரீஸ்வரர், கல்யாணியம்மன், அத்திரிமுனிவர் பூசித்த ஸ்தலம், வைப்புஸ்தலம். பங்குனி மாசம் உற்சவம், ரதோற்சவம் விசேஷம்.

சிவகோட் :—வட இந்தியா, பிரயாகையிலிருந்து 6 மயில் சிவாலயம்; ஸ்ரீராமர் இங்கு லிங்கப்பிரதிஷ்டை செய்து பூசித்ததாக ஐதிகம். காயிற்போல் மகம்மதியரும், பஞ்சமரும் தவிர, மற்றவர்கள் நேராக லிங்கபூசை செய்யலாம்.

சிவ சமுத்திரம் :—மைசூர் ராஜ்யம் சிவாலயம் ஸ்வாயி சோமேஸ்வரர்; கோயிலில் மஹாத்துவராம் (பெரியவாயில்) பார்க்கத்தக்கது. (இங்கு அருகிலுள்ள காவேரியின் கங்கன்சுக்கி, பாராசுக்கி எனும் இரண்டு நீர்வீழ்ச்சிகள் உலகப்பிரசித்தமானவை).

சிவ சமுத்திரம் :—கொள்ளேகால் தாலூகா, கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி வீரபத்திரஸ்வாமி தேயிலில்; இங்கு பல கல்வெட்டுகளுள்ளன.

சிவபுரம் :—திருவள்ளூர் தாலூகா, சென்னை ராஜதானி, கடம்பத்தூர் ஸ்டேஷனுக்கு அருகிலுள்ளது சிவாலயம்.

சிவபுரி :—(திரு) தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, கும்பகோணத்திற்கு 3 மயில் தென்கிழக்கு; விஷ்ணு வராஹ அவதாரத்தில் சிவபெருமானைப் பூசித்த ஸ்தலம், பிரமன் பூசித்த ஸ்தலம்; ஸ்வாமி சிவபுரநாதர், பிரமபுரிநாயகேஸ்வரர்; தேவி சிங்காரவல்லி, பெரியநாயகி; சூரியதீர்த்தம், சண்பகவிருட்சம்; திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

சிவன்மலை :—கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம்.

சிவாயமலை :—தென் இந்தியா சென்னை ராஜதானி, சிவாலயம், பிரம்மோற்சவம் சித்திரைமாசம், முத்துப்பல்லக்கு உற்சவம் விசேஷம்.

சிவையம் —குளித்தலை தாலூகா, திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம், சுவாமி ரத்னேஸ்வரர்.

சிற்றூர் :—வட இந்தியா ராஜபுதனம் சிவாலயம் ஸ்வாமி சமீதேஸ்வரர். இங்கு ஆதீஸ்வரபகவான் சிவாலயம் குன்றின் மீது இருக்கிறது. தற்காலக்கோயில் 1530வது கட்டப் பட்டது. வட இந்திய ஆரிய சில்பம்.

சின்னகருப்பூர்:—சென்னை ராஜதானி திருச்சிராப்பள்ளி ஜில்லா, இதற்கு குழுமணி யென்றும் பெயர். சிவாலயம்; ஸ்வாமி நாகநாதர், தேவி லோகநாயகி.

சிற்றேமம் :—(திரு) இதற்கு எழிலூர் நேமம் என்றும், சிற்றூய்மூர், சிற்றம்பூர் என்றும் சிற்றூமபூர் என்றும் பெயர் உளது. பொன்னேரியிலிறங்கி 6 மயில் போகவேண்டும். சிவாலயம்; ஸ்வாமி பொன்வைத்தநாயகர்; தேவி அகிலாண்ட நாயகி அல்லது அகிலாண்டேஸ்வரி; சுவர்ணதீர்த்தம், ஆத்திவிருட்சம்; அகஸ்தியரும் வேதங்களும் பூசித்த க்ஷேத்திரம்; ஸ்வாமி சந்நிதியில் ஒரு தேன் கூடு எப்பொழுதும் இருக்கிறது; இதற்கு தினம் பூஜை நடக்கிறது. கோயிலுக்குப் பின் இருந்த ஆத்தி விருட்சத்தை கோயிலுக்கு முன்பாகவும், பலிபீடத்திற்கு முன் இருந்த நந்தி தேவரை அதற்குப் பின்பாகவும் வரும்படி பரமசிவம் ஆக்ஞர்பித்தருளினர் என்பது ஐதிகம். திருஞானசம்பந்தர் பாடல்பெற்றது. பரமசிவம் விபுதன் எனும் அடியவனுக்கு பொற்காசு அளித்த ஸ்தலம்.

சிறுகுடி :—(திரு) சென்னை ராஜதானி பேரளம் ஸ்டேஷனுக்கு 4 மயில் தென்மேற்கு, சிவாலயம், செவ்வாய், கருடன், கந்தர்வாள் பூசித்த க்ஷேத்திரம், ஸ்வாமி மங்களேஸ்வரர் தேவி மங்களநாயகி, சூரிய தீர்த்தம்; திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது.

சிறுகுப்பா :—சென்னை ராஜதானி, இங்குள்ள கோட்டையில் சம்புலிங்கேஸ்வரர் கோயில்.

சிறுவஞ்சூர்:—சென்னை ராஜதானி செங்கல்பட்டு ஜில்லா, சிவாலயம் சிங்கபெருமாள் கோயிலுக்கு 5 மயில், ஸ்வாமி திருக்காளீஸ்வரர் தேவி திரிபுரசுந்தரி.

சிறுவாஞ்சூர் :—கோயமுத்தூர் ஜில்லா சத்யமங்கலம் தாலூகா, சென்னை ராஜதானி சிவாலயம்.

சின்னகஞ்சம் :—பாபட்லா தாலூகா, குண்டூர் ஜில்லா, சென்னை ராஜதானி சிதம்பரஸ்வாமி கோயில்.

சின்னதாராபுரம் :—திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி பழய சிவாலயம்.

சின்னதாராபுரம் :—கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, கரூர் தாலூகா, மிகவும் பழய சிவாலயம், கல் வெட்டுகள் உள.

சின்னதும்பலம் :—பல்லாரி ஜில்லா, சென்னை ராஜதானி ராமலிங்கேஸ்வரர் கோயில்; சளுக்கிய சில்பம். இங்கு சோமேஸ்வரர் கோயில் என்று மற்றொரு சிவாலயமுண்டு.

சின்னூர் :—மத்யஇந்தியா நாசிக் ஸ்டேஷனுக்கு 18 மயில் சிவாலயம்; ஸ்வாமி கொண்டேஸ்வரா. கோயில் 284 × 314 அடி விஸ்தீர்ணமுள்ளது சுமார் 11-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.

சின்னமாறார் :—மதுரை ஜில்லா சென்னை ராஜதானி, ராஜசிம்மேஸ்வரர் கோயில்.

சீக்காகுளம் :—சென்னை ராஜதானி, விசாகபட்டணம் ஜில்லா ரெயில்ஸ்டேஷன் சிவாலயம் ஸ்வாமி சங்கமுகேசர்.

சீதாபுரம் :—வட இந்தியா ரெயில்ஸ்டேஷன் சித்ரகூடத் கருகிலுள்ளது. சிவாலயம் ராகவப் பிரயாகையின் கரையி லுள்ளது. ஸ்வாமி மத்தகஜேந்திரேஸ்வரர்.

சீதாமர்ஹி :—வங்காளம், முசாபர்பூர் ஜில்லா, ரெயில் ஸ்டேஷன், ஸ்வாமி விஸ்வேசர்; இங்குள்ள 9 கோயில்களில் ஒன்று சிவாலயம். தர்பங்கா ரெயில்ஸ்டேஷனிலிருந்து 42 மயில், கோயில் புதிய கட்டிடம்.

சீதாராமபுரம் :—பாலகுண்டா தாலூகா விசாகபட்டணம் ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம். ஸ்வாமி ராம லிங்கேஸ்வரர்.

சீதாகுண்டம் :—வட இந்தியா சிவாலயம் மலைமீதி லுள்ளது.

(தொடரும்)

Printed at the R. V. Press, M. S. 16-A, C. 500. 27—6—46.

சிவாலயங்கள்

இந்தியாவிலும் அப்பாலும்

மூன்றும் பாகம்

நாடகப்பேராசிரியர்

ப. சம்பந்த முதலியார், பி.ஏ., பி.எல்.,

அவர்களால் இயற்றப்பட்டது.

MAR

இந்த நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்ற நூல்கள்:

லீலாவதி—சுலோசனை, சாரங்கதரன், மகபதி, காதலர் கண்கள், நற்குல தெய்வம், மனோஹரன், ஊர்வசியின் சாபம், இடைச்சுவர் இரு புறமும், என்ன நோன்றிடினும், விஜயரங்கம், கள்வர் தலைவன், தாசிப் பெண், மெய்க்காதல், பொன் விலங்குகள், சிம்ஹளாதன், விரும்பிய விதமே, சிறுத்தொண்டர், காலவரிஷி, ரஜபுத்ரவீரன், உண்மையான சகோதரன், சதி-சுலோசனை, புஷ்பவல்லி, கீதமஞ்சரி, உத்தம பத்தினி, அமலாதித்யன், சபாபதி முதற்பாகம், பொற்கல் பண்டிகை அல்லது சபாபதி இரண்டாம் பாகம், ஓர் ஒத்திகை அல்லது சபாபதி மூன்றும் பாகம், சபாபதி நான்காம் பாகம், பேயல்ல பெண்மணியே, புத்த அவதாரம், விச்சுவின் மனைவி, வேதாள உலகம், மனைவியால் மீண்டவன், சந்திரஹரி, சுபத்திரார்ஜுனை, கொடையாளி கர்ணன், சஹதேவன் சூழ்ச்சி, நோக்கத்தின் குறிப்பு, இரண்டு ஆத்மாக்கள், சர்ஜன் ஜெனரல் விதித்த மருந்து, மாளவிகாக்னிமித்ரம், விபரீதமான முடிவு; சுல்தான்பேட்டை சப் அஸிஸ்டென்ட் மாஜிஸ்டிரேட், சகுந்தலை, காளப்பன் கள்ளத்தனம், விக்ரமோர்வசி, முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும், நாடகமேடை நினைவுகள் — ஆறு பாகங்கள், நாடகத் தமிழ், யயாதி, பிராம்மணனும் சூத்திரனும், வாணிபுர வணிகன். இரண்டு நண்பர்கள், சத்ருஜித், ஹரிச்சந்திரன், மார்க்கண்டேயர், ரத்னவளி, கண்டு பிடித்தீல், கோனேரி அரசகுமாரன், சந்தையிற் கூட்டம், வைகுண்ட வைத்தியர், தீட்சிதர் கதைகள், ஹாஸ்யக் கதைகள், குறமகளிர், நல்லதங்காள், சிறுகதைகள், நடிப்புக்கலையில் தேர்ச்சி பெறுவதெப்படி?, ஹாஸ்ய விபாசங்கள், தமிழ் பேசும் படக் காக்ஷி, விடுதிப் புஷ்பங்கள், பேசும்பட அனுபவங்கள், வள்ளி மணம், கதம்பம், மாண்டவர் மீண்டது, ஆஸ்தானபுரம் நாடகச் சபை, சங்கீதப் பயித்தியம், ஒன்பது குட்டி நாடகங்கள், சபாபதி ஜமீன்தார், சிவாலயங்கள்-இந்தியாவிலும் அப்பாலும், முதல் இரண்டு பாகங்கள், சிவாலய சிற்பங்கள், மனோபாட்சி, தீபாவளிவரிசை, இந்தியனும் ஹிட்லரும், காலக் குறிப்புகள், சுப்ரண்ய ஆலயங்கள், தீயின் சிறுதிவலி முதலியன.

முதற் பதிப்பு

•

"இரத்தின விலாஸ்" அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டது.

காபி ரைட்] 1947 [விலை ரூபா 1

Inscribed

to

The Beloved Memory

of

My Parents

P. VIJAYARANGA MUDALIAR

AND

P. MANICKAVELU AMMAL

AND

My Friend

G. RANGAVADIVELU

சீர்காழி :—இதை ஸ்ரீ காளிபுரம் என்பர் சிலர், மஹா காளி பூஜித்த க்ஷேத்திரமாதலால் அப்பெயர் பெற்றதாம் சீயாழி என வழங்கப்பெற்றது—தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன், சென்னை ராஜதானி, இதற்கு பிரமபுரம், வேணு புரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய, சிரபுரம், புறவம், சண்பை, கொச்சைவயம், கழுமலம், என மற்றும் பெயர்கள் உளது. திருஞான சம்பந்தர் பிறந்த இடம். மூவர் பாடல்பெற்றது. ஸ்வாமி-பிரமபுரீஸ்வரர், (சுயம்பு லிங்கம்) தோணியப்பர், சட்டைநாதர், தேவி திருநிலை நாயகி, சக்கரை தீர்த்தம், பிரம்ம தீர்த்தம், பிரமன் பூஜித்த க்ஷேத்திரம், காளிபூஜித்த ஸ்தலம், பிரமபுரம் அடியிலும், தோணிபுரம் நடுவிலும், சட்டை நாதம் அதன்மேலும் உளது. பிரம்மோற்சவம் சித்திரை மாதம், திருஞான சம்பந்தருக்குத் திருமூலைப்பால் கொடுக்கும் உற்சவம் விசேஷம்; கோயிலில் தோணியப்பர், சட்டநாதர் என்று இரண்டு மூர்த்திகளுண்டு. கர்ப்பக்கிரகத்திற்கு மேலுள்ள நிலையில் சட்டநாதர் சிலையிருக்கிறது, 3 அடி உயரம், வெள்ளிக் கிழமை இரவு 12 மணிக்கு மாத்திரம் பூஜை. கோயில் பெரியது 1078 × 567 அடி விஸ்தீரணம், கோவிலில் பல கல் வெட்டுகள் உள. அர்மன்கோயில் சிலவருடங்களுக்குமுன் முற்றிலும் புதிப்பிக்கப்பட்டது. சிலர் இது ஜடாயுபட்சி யைப்போல் கட்டப்பட்டதென்பர். இங்கு சம்பந்தர் தகப்பனர் சிவபாத ஹிருதயர் பூஜித்த லிங்கம் சோனேஸ்வரம் எனும் கோயிலிலிருக்கிறது. சீர்காழியில் இரட்டைத் தெரு எனும் வீதியில் 11-வது எண்ணுள்ள வீடுதான் திருஞான சம்பந்தர் வீடென்று சொல்லப்படுகிறது. இங்கு தர்ம சத்திர முண்டு. முசாபர் பங்களா உண்டு.

சீயமங்கலம் :—குகைக்கோயில், வந்தவாசி தாலுக்கா, வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானியிலுள்ளது. முதல் மஹேந்திரவர்மன் காலத்தியது. (600—626) பல்லவ சில்பம், ஸ்தம்பேஸ்வரர் கோயில்; கல்வெட்டுகளில் ஸ்வாமிபெயர் திருக்கற்றளி மஹாதேவர் என்றும், தர்மீஸ்வரமுடையார் என்றும், அவனிபாஜன பல்லவேஸ்வரர் என்றும் இருக்கிறது. லிங்கம் திரண்ட உருவம்.

சீயோனிபிரிவு :—மத்திய மாகாணம், இங்கு சிவாலயம், ஹேமாத்பண்ட் கட்டிடம், இங்குள்ள பைரோந்தன் கிராமத்தில் சிறு குகைக்கோயில் உண்டு, அதற்கு மாத்கோக்கா என்று பெயர். சிவாலயம், சீயோன் பட்டணத்தில் மஹாதேவர் கோயில்—புதிய கட்டிடம்.

சீவாலயம் :—இங்கு குச்மேச லிங்கம் எனும் ஜோதி லிங்கம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

சுகபுரம் :—பொன்னனி தாலூகா, மலபார் ஜில்லா, சென்னை இராஜதானி, சிவாலயம்-தட்சிணமூர்த்திகோயில்.

சுசீந்திரம் :—திருவாங்கூர் ராஜ்யத்தில் கன்யாகுமரிக் குப் போகும் வழியிலுள்ளது. சிவாலயம், ஸ்வாமி பெயர் தாணுமாலயன் ; (தாணு-சிவன் ; மால்-விஷ்ணு ; அயன்-பிரம்மா ;) தேவி-அறம் வளர்த்த நாயகி ; பிரக்ஞா தீர்த் தம், கொன்றை விருட்சம், லிங்கம் மும்மூர்த்தி ஸ்வரூப மாயுள்ளது-மும்மூர்த்திகளுக்கும் ஆலயமுடையது. இங்குள்ள விஷ்ணுவிக்ரஹம் மதுரை திருமலை நாயகரால் ஸ்தாபிக்கப் பட்டது. பிரம்மோற்சவம் சித்திரைமாதம். கோயில் 1390-ம் வருடம் மார்த்தாண்ட வர்மரால் புதுப்பிக்கப்பட்டது. பெரிய மண்டபம் ராமவர்மா என்பவரால் 1478-ம் வருடம் கட்டப் பட்டது. இங்கு சுமார் 25 அடி உயரமுள்ள ஆஞ்சநேயர் சிலை இருக்கிறது. இந்திரன் பூசித்து சாபம் நீங்கிய ஸ்தலம்; அவள் சாபம் நீங்கி சுசியான படியால் சுசீந்திரம் எனப் பெயர்பெற்றது. இங்குள்ள சில்பங்கள் 10 அல்லது 11-ம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. கோயிலில் ஆயிரம் வருடங்க ளுக்குமுந்திய கல்வெட்டுகள் இருக்கின்றன. இங்குள்ள ஒரு பெரிய ஸ்தம்பத்தில் சப்தஸ்வரங்கள் பேசும்படியான சிறு ஸ்தம்பங்கள் இருக்கின்றன.

சுட்டூரு :—நஞ்சங்கோட் தாலுகா, மைசூர் ராஜ்யம்-சோமேஸ்வரர் ஆலயம்.

சுப்பிரம்மண்யம் :—தென் கன்னட ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். இந்த ஜில்லாவில் இதுதான் பிரபல சிவஸ்தலம்.

சுயம்புநாதர் கோயில் :—வட இந்தியா, நேபாள ராஜ் யத்திலுள்ளது-சிவாலயம். இங்குள்ள லிங்கத்திற்கு நான்கு முகங்கள் உண்டு.

சுல்தான்பத்திரி :—மலபார் ஜில்லா, சென்னை ராஜதானி, திருநெல்லி விஷ்ணுகோயிலுக்குப் பின்புறம், குண்ணிக தீர்த்தத்தருகில், சிறு சிவாலயமுளது, மலைக்கோயில்.

சுழியல் :—(திரு) சென்னை ராஜதானி, திரிபுவனத் திற்கு 12 மைல் தெற்கிலுளளது. சதாசந்தர் பூசித்த ஸ்தலம். பார்வதிதேவி சிவபெருமானை மணம்புரிய பூசித்த ஸ்தலம். ஸ்வாமி திருமேனி நாதேஸ்வரர், தேவி வனமாலை யம்மை. சுந்தரர் பாடல் பெற்றது.

சூணம்பேடு :—செங்கற்பட்டு ஜில்லா, சென்னை ராஜ தானி, சிவாலயம்-புதிய கட்டிடம்.

சூரத் பிரிவு :—பம்பாய் ராஜதானி. (1) சூரத் பட்டணம், கோபிபுரம் எனும் இடத்தில் சிவாலயம். ஸ்வாமி-மூலேஸ் வர், ராஹியசோனி எனும் இடத்தில் காசி விஸ்வநாதர் கோயில்; இவ்விரணடு கோயில்களும் கரை மட்டத்திற்கு 15 அடி கீழே இருக்கின்றன. (2) புரோச் பிரிவு பாத்பூத் சிவாலயம். ஸ்வாமி பாதேஷ்வர். கோயில் சிறியது 11 அடி சதுரம். (3) கரோட் கிராமம் சிவாலயம், ஸ்வாமி கோடேஸ்வர் அல்லது கோடி விஸ்வேஸ்வர், சிறிய கோயில் 11 அடி சதுரம்.

சூரல் :—தென்மேற்கு இந்தியா, உடுப்பியிலிருந்து 16 மைல்-சிவாலயம்.

சூரியனர்கோயில் :—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜ தானி, திருவிடைமருதூருக்கு 4 மைல் சிவாலயம். பூர்வீகப் பெயர் குலோத்துங்க சோழமார்த்தாண்ட ஆலயம், முதல் குலோத்துங்க சோழனால் கட்டப்பட்டது. குரியன்கோயிலா யிருந்து பிறகு சிவாலயமாக மாற்றப்பட்டதாக எண்ணு கிறார்கள். ஸ்வாமி விஸ்வேஸ்வரர், தேவி விசாலாட்சி-இங்கு லோஹதத்தாலாகிய நவக்கிரஹங்களுடைய விக்ர ஹங்கள் இருக்கின்றன.

சூளகெரே :-ஷிமோகா ஜில்லா, மைசூர் ராஜ்யம் ; கன்னட பாஷையில் சூளகெரே என்றால் தாசிக்குளம் என்று அர்த்தம். ஏரியின் கிழக்குக் கரையில் சிவாலயம். ஸ்வாமி சித்தேஷ்வர்.

செங்கமா :—சென்னை ராஜதானி, திரு அண்ணமலை தாலுகா, வடஆற்காடு ஜில்லா சிவாலயம். ஸ்வாமி ரிஷி. பேஸ்வரர், கல்வெட்டுகளில் திரு இடபத்துரை நாயனார் என்றிருக்கிறது ; தேவி பிரஹந்சுந்தரி.

செங்கல்பட்டு :-(செங்கழுநீர்பட்டு என்பது பழயபெயர்) சென்னை ராஜதானி, மேற்படி ஜில்லா, ஊருக்கு ஒருமைல் கிழக்கில் பூர்வம் சமண சன்யாசிகள் குடியிருந்த ஒரு குகையில், சிவலிங்கப் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது.

செங்கனூர் :—திருவாங்கூர் ராஜ்யம், சிவாலயம். சக்தி ரிஷி பூஜித்த ஸ்தலம். அதஸ்திபார் ஸ்வாமியையும் பார்வதி தேவியையும் பிரதிஷ்டை செய்ததாக ஐதீகம். இங்கு முற் காலத்தில் சாக்கியக்கூத்து நடந்த கூத்தம்பலமும், ஐந்து நிலை கோபுரமும் இருந்ததாம், அவை அக்னிக்கு இறை யாகிவிட்டனவாம். இக்கோயில் பார்வதி விக்ரஹத்திற்கு மாதவிடாயுண்டாவதாக ஐதீகம்.

செங்காட்டங்குடி :—(திரு) சென்னை ராஜதானி, நன் நிலத்திற்கு 6 மைல் தென்கிழக்கு, சிறுத்தொண்டர் தன் பிள்ளையைக் கறியாகப் படைத்த க்ஷேத்திரம், வினயகர் கஜமுகாசுரனைக் கொன்ற க்ஷேத்திரம், அப்பாபம் நீங்கும் பொருட்டு அவர் பரமசிவனை பூசித்த ஸ்தலம். ஆலயத்திற்கு கணபதீச்சரம் என்று பெயர். இறந்த அசுரனது ரத்தப் பெருக்கால் பூமி சிவந்தபடியால் செங்காட்டங்குடி என்று பெயர் பெற்றது. ஸ்வாமி கணபதிகார், தேவி திருக்குழல் நாயகி அம்மை. சித்திரைமாதம் பிரமோற்சவம்—அமுது படையல் உற்சவம் விசேஷம. இங்குள்ள வினயகருக்கு மனித முகம் இருக்கிறது. இங்கு வாதாபி கணபதி என்னும் ஒரு வினயகர் கோயிலிலுண்டு. அது வாதாபியிலிருந்து கொண்டுவரப்பட்டதாக ஐதீகம். இங்கு இரண்டு மூலஸ்தானங்கள் உண்டு. (1) கணபதீஸ்வரர், (2) உத்தரபதீஸ்வரர் அல்லது உருத்திராபதீஸ்வரர் (?) சிறுத்தொண்டர் காலம் சுமார் கி. பி. 640 என்பர். ஆகவே பூர்வீக கோயில், மிகவும் பழமையானதாம். இங்குள்ள கல்வெட்டொன்றினால் இக்கோயிலுக்கு ஆதியில் 3 பிராகாரங்கள் இருந்ததாக தெரிகிறது. கோயிலிலுள்ள கங்காள மூர்த்தி விக்ரஹம் பார்க்கத்தக்கது. திருஞான சம்பந்தர் அப்பர் பாடல்பெற்ற ஸ்தலம்.

செங்கோட்டை :—ரெயில் ஸ்டேஷன்-திருவாங்கூர் ராஜ்யத்திலுள்ளது. சிவாலயம்-ஸ்வாமி குலசேகர நாதர்.

செங்கோடு :—(திரு) சேலம் ஜில்லா, சென்னை ராஜதானி. சிவாலயம் - குன்றின்கீழ் கைலாசநாதர் கோயில், குன்றின்பேரில் அர்த்தநாரீஸ்வரர் கோயில்-கோபுரம் 5 நிலையுடையது. இங்குள்ள நிர்த்தன மண்டபம் 17-ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது, ஊர் பெயர் திருக்கோடி மாடச் செங்குன்றம் என்றும் வழங்கப்படுகிறது. ஊர் சங்கரதுர்க்கம் ரெயில் ஸ்டேஷனுக்கு 8 மைல். வெண்கல அர்த்தநாரீஸ்வரர் விக்ரஹம் பார்க்கத்தக்கது, இதற்கு இரண்டே கைகள். குன்று 1200 படிகளையுடையது. இங்கு 60 படி எனும் இடத்தில் வியாழ்யகாரர்கள் பிரமாணம் செய்வது வழக்கம். குன்றின்மீது தீர்த்தங்கள்-பைரவ தீர்த்தம், பாபநாச தீர்த்தம். கோயில்களில் கி.பி. 622-654-ல் ஆண்ட ராஜகேசரி வர்மன் காலத்திய கல்வெட்டுகளும், கி. பி. 907-952-ல் ஆண்ட பரகேசரி வர்மன் காலத்திய கல்வெட்டுகளும் உள.

செஞ்சி :-சென்னை ராஜதானி, தென் ஆற்காடு ஜில்லா, திண்டிவனத்திலிருந்து 18½ மைல் சிவாலயம். ஸ்வாமி விஸ்வநாதர். புராணத்தின்படி காசியிலிருந்துவந்த சுரசர்மாவினல் கட்டப்பட்டது என்பதாம்.

செட்டிக்குளம் :-சென்னை ராஜதானி, திருச்சிராப்பள்ளி ஜில்லா, பெரும்பாலூர் தாலூகா. சிவாலயம் - ஸ்வாமி ஏகாம்பரேஸ்வரர், தேவி காமாட்சியம்மை. பிரம்மோற்சவம்-தைமாதம்.

செட்டிப்பட்டி :-சென்னை ராஜதானி, புதுக்கோட்டைக்கு 24 மைல் தூரம். சிவாலயம் பாழடைந்திருக்கிறது, இங்கு மற்றொரு சிவாலயமுண்டு, இதில் பூஜையுண்டு, இதுவும் தற்காலம் பாழடைந்திருக்கிறது.

சென்பகராமநல்லூர் :—சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா, நாங்குநெறி தாலூகா. சிவாலயம்-ஸ்வாமி ஜகன்னாதேஸ்வரர்.

சேந்தமங்கலம் :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, நன்னிலம் தாலூகா, மன்னர் சமுத்திரம் என்றும் பெயர்,

பழய பெயர் பெருந்துறையாம்—தாஞ்சாவூருக்கு அருகி லுள்ளது. சிவாலயம்-ஸ்வாமி சுந்தரேஸ்வரர், கல்வெட்டு களில் ஊர் பெயர் சந்திரசேகரர்சதுர்வேதி மங்கலம் என் றிருக்கிறது.

செந்துறை :—(திரு) சென்னை ராஜதானி, திருச்சிராப் பள்ளி ஜில்லா, மேற்படி தாலூகா-குடவாசலுக்கு 4 மைல் வடகிழக்கு-இதற்கு உடையார் கோயில் என்றும் பெயர். சிவாலயம் - தெளம்யர் பூஜித்த ஸ்தலம். கோயில் கி. பி. 10-ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. ஸ்வாமி சந்திரசேகரர், இங்கு ஸ்வாமிக்கு பலாப்பழ நிவேதனம் விசேஷம்.

செப்பறை :-சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா சிவாலயம்-ஸ்வாமி தியாகேஸ்வரர், தேவி-சிவகாமி அம்மை, மோட்ச தீர்த்தம்.

செப்ரோலு :—சென்னை ராஜதானி, குண்டூர் ஜில்லா, பாபட்லா தாலூகா. இங்கு 2 சிவாலயங்கள் உண்டு. நாகேஸ்வரர் கோயில், பிரமேஸ்வரர் கோயில்.

செம்பட்ட விடுதி :— புதுக்கோட்டை சமஸ்தானத்தில் உள்ளது. சிவாலயம் பாழடைந்திருக்கிறது. காராள வேளா ளர்களால் கட்டப்பட்டது. கோயிலில் ஒரு சுரங்கம் இருக் கிறது.

செம்பத்தூர் :—புதுக்கோட்டை சமஸ்தானம், புதுக் கோட்டைக்கு 8 மைல் தூரம்; சிவாலயம் சிலமாயிருக்கிறது. இங்குள்ள கல்வெட்டுகளில் இது சாமன் என்பவரால் கட்டப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

செம்பாய நல்லூர் :—(செம்பராய நல்லூர் ?) தென் இந்தியா, சிவாலயம்-ஸ்வாமி விரூபாட்சீஸ்வரர், தேவி அகி லாண்டம்மன், சரஸ்வதி தீர்த்தம்—பரசுராமர் பூசித்த ஸ்தலம்.

செம்பொனார்கோயில் :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, மாயவரத்திற்கு 7 மைல் கிழக்கு, செம்பொன்பள்ளி என்றும் பெயர், சிவாலயம்-ரதிதேவி, குபேரன், இந்திரன் பூசித்த ஸ்தலம், ஸ்வாமி சொர்ணபுரீஸ்வரர், தேவி சுகந்த வன நாயகியம்மை, வீரபத்ர தீர்த்தம்-சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

செம்மங்குடி :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா திருவாரூருக்கு 5 மைல்-இங்கு 2 கோயில்களுண்டு, அபி புக்தேஸ்வரர் கோயில், சோழபுரீஸ்வரர் கோயில்.

செய்யூர் :-சென்னை ராஜதானி, செங்கல்பட்டு ஜில்லா, மதுராந்தகம் தாலூகா, அச்சிறுபாக்கத்திற்கு 7 மைல் சிவாலயம். ஸ்வாமி வன்மீகநாதர், தேவி பார்வதி, வராஹ தீர்த்தம், கோயில் சோழ கட்டிடம், இங்கு கைலாச நாதர் கோயில் என்று மற்றொரு கோயில் உண்டு.

சென்னபட்டணம் :—(மதராஸ்) சென்னை ராஜதானி. இங்குள்ள கோயில்களெல்லாம் தற்கால திராவிட சில்ப மமைந்தவை. சிவாலயங்கள் (1) சென்னை மல்லிகேஸ்வரர் கோயில், இது பழைய லேட்அவுஸ் இருந்த இடத்திலிருந் தது, கிழக்கு இந்திய கம்பெனியார், லேட்அவுஸ் அவ்விடம் கட்டுவகற்காக, அதை எடுத்துவிட்டு, தற்காலம் புஷ்பக் கடையிருக்கும் சைனு பஜார் வீதியில் கட்டிக்கொடுத்தனர். இது நடந்தது சுமார் 1760-ம் வருடம். இது மணலி முத்து கிருஷ்ண முதலியார் முயற்சியினல் நடந்தது. இதற்குப் பக்கத்தில் சென்னை கேசவ பெருமாள் கோயில் இதே மாதிரியாகக் கட்டப்பட்டது. இவைகளிரண்டிற்கும் நடுவில் பொதுவான குளம் உண்டு. இரண்டு கோயில்களுக்கும் ரதம் ஒன்றே. ஸ்வாமி சென்னை மல்லிகேஸ்வரர்— பிரம்மோற்சவம் பங்குனி மாதம் (2) ஸ்ரீ ஏகாம்பரீஸ்வரர் கோயில், பெத்துநாய்க்கன் பேட்டையிலுள்ளது. ஸ்வாமி ஏகாம்பரநாதர், தேவி காமாட்சி அம்மன்-பிரமோற்சவம் பங்குனிமாதம். 300 வருடங்களுக்குள் கட்டப்பட்டது. (3) மல்லீஸ்வரர் கோயில் லிங்கசெட்டி தெருவில் முத்தி யாலு பேட்டையிலுள்ளது. சுமார் 300 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது. ஸ்வாமி மல்லீஸ்வரர், தேவி சுவர் ணம்பிகை. இக்கோயில் செட்டிமார்களால் கட்டப்பட்டது, பிரம்மோற்சவம் பங்குனி மாதம். (4) கச்சாலீஸ்வரர் கோயில் முத்தியாலுபேட்டையில் அரமனைக்காரன் தெருவி லுள்ளது. புதிய கோயில், ஸ்வாமி கச்சாலீஸ்வரர், தேவி சௌந்தர நாயகி. பிரம்மோற்சவம் சித்திரை மாதம் (5) காசி விஸ்வநாதர் கோயில் கிருஷ்ணங் குளத்தருகில் உள்ளது, ஸ்சாமி விஸ்வநாதர், தேவி விசாலாட்சி, புதிய

கோயில். (6) கோமளேஸ்வரர் கோயில் கோமளேஸ்வரன் பேட்டையிலுள்ளது. விஜயநகர அரசர் ரங்கராயர் காலத்தில் கட்டப்பட்டதென்பர் சுமார் 320 வருடங்களுக்குமுன்- ஸ்வாமி கோமளேஸ்வரர், தேவி கோமளாம்பிகை. (7) கங்காதரேஸ்வரர் கோயில் புரசைவாக்கத்திலுள்ளது, ஸ்வாமி கங்காதரர், தேவி பங்கஜாம்பாள். (8) திருவேட்டீஸ்வரர் கோயில், திருவேட்டீஸ்வரன் பேட்டையிலுள்ளது. ஸ்வாமி திருவேட்டீஸ்வரர், தேவி சண்பகவல்லி: (9) அருணசலேஸ்வரர் கோயில் பெத்துநாய்க்கன் பேட்டையிலுள்ளது. இது அண்ணமலையார் கோயில், அணி அண்ணமலையார் கோயில் எனும் இரண்டு கோயில்கள் அடங்கியது. சுமார் 200 வருடங்களுக்குமுன் கட்டப்பட்டது. அணி அண்ணமலையார் கோயில் முதலில் கட்டப்பட்டதாம். ஸ்வாமி அருணசலேஸ்வரர், தேவி உண்ணமுலை யம்மன் பிரம்மோற்சவம் கார்த்திகைமாதம். (10) அருணசலேஸ்வரர் கோயில், அருணசலம் பேட்டையிலுள்ளது, ஸ்வாமி அருணசலீஸ்வரர், தேவி உண்ணமுலை அம்மன் பிரம்மோற்சவம் கார்த்திகை மாதம். நிஜாம் முனியப்ப முதலியாரால் சுமார் 270 வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட கோயில். (11) அகஸ்தீஸ்வரர் கோயில் நுங்கம்பாக்கத்திலுள்ளது புதிய கோயில் 300 வருடத்திற்குமுன் கட்டப்பட்டது. ஸ்வாமி அகஸ்தீஸ்வரர், தேவி அகிலாண்டேஸ்வரி. (12) ஆதிபுரீஸ்வரர் கோயில், சிந்தாதிரிப்பேட்டையிலுள்ளது. 1734-ம் வருடம் கட்டப்பட்டது—ஸ்வாமி ஆதிபுரீஸ்வரர், தேவி திரிபுர சுந்தரி பிரம்மோற்சவம் சித்திரை மாதம், மேற்சொன்னவைகளன்றி வெள்ளீஸ்வரர் கோயில் வாலீஸ்வரர் கோயில் முதலிய சிறு சிவாலயங்களுமுண்டு.

சென்னித்தலை:-தென் இந்தியா திருவாங்கூர் ராஜ்யத்திலுள்ளது, சிவாலயம். இங்குள்ள லிங்கம் மிகவும் பழமையானதாக எண்ணப்படுகிறது.

செஜர்வா :—சென்னை ராஜதானி, குண்டூர் ஜில்லா, நரசாப்பூர் தாலூகா, சிவாலயம். ஆதியில் புத்தசைத்யமாகவிருந்தது, பிறகு சிவாலயமாக மாற்றப்பட்டது. கர்ப்பக்கிரஹம் 23 அடி நீளம், கிழக்கில் 8¼ அடி அகலம், மேற்கு புக்கம் கஜப்பிருஷ்ட ஆகிருதி உடையது. கர்ப்பக்கிரஹத்

திற்கு முன்பாக 25 × 9 அடிமண்டபம் புதிதாய்க்கட்டப்பட்டிருக்கிறது.

சேந்தமங்கலம் :—சென்னை ராஜதானி, தென்னற்காடு ஜில்லா, திண்டிவனம் தாலூகா சிவாலயம். ஸ்வாமி ஆபத்சகாயேஸ்வரர்-பழையகோயில், பல்லவ அரசர்களுடைய காலத்திய கல்வெட்டுகள் இருக்கின்றன.

சேம்பாக்கம் :—சென்னை ராஜதானி, வட ஆற்காடு ஜில்லா, வேலூர் தாலூகா சிவாலயம்.

சேய்ஞலூர் :—சென்னை ராஜதானி, திருவாப்பாடிக்கு சமீபத்திலிருக்கிறது, கும்பகோணம் ஸ்டேஷனிலிருந்து இறங்கிப் போகவேண்டும், சண்டேஸ்வர் அவதரித்து முத்தி பெற்ற ஸ்தலம், ஸ்வாமி சத்திகிரீஸ்வரர், தேவி சிவதேவியம்மை அல்லது ஜெயதேவியம்மை. தீர்த்தங்கள், மண்ணி நதி, சத்ததீர்த்தம், சுப்பிரமணியர் சூரபத்மனைச் சம்ஹாரஞ்செய்யப் புறப்பட்டபோது சிவபெருமானை பூஜித்த ஸ்தலம், ஆகவே சேய்நல்லூர் என்று பெயர் பெற்றது. (சேய் = குமரக்கடவுள்), சேய் + நல்ல + ஊர் = சேய்ஞலூர் ஆயது. திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது. திருச்செங்கனூர் என்றும் வழங்கப்படுகிறது.

சேரதமங்கலம் :—தென் இந்தியா சிவாலயம், ஸ்வாமி கைலாசநாதர், தேவி சிவகாமி, தாம்ரபர்ணி சங்க தீர்த்தம், அகஸ்தியர் பூஜித்த ஸ்தலம்.

சேரமாதேவி :—தென் இந்தியா, அம்பாசமுத்திரம் தாலூகா, திருநெல்வேலி ஜில்லா, சிவாலயங்கள், (1) அம்பலநாதேஸ்வரர் கோயில், ஸ்வாமி வைத்யநாதர், ஆத்மநாதர், தேவி ஒப்பிலாநாயகி சிவகாமி, தம்ரபர்ணிதீர்த்தம், அகஸ்தியர் பூசித்த ஸ்தலம். இங்கு மிளகுபிள்ளையார் என்று ஒரு கணேசர் உண்டு. (2) பக்தப்பிரியர் கோயில் அழகிய சில்பமுடையது (3) அழகியப்பர் கோயில் (4) சோமநாதஸ்வாமி கோயில்.

சேலம் :-சென்னை ராஜதானி, மேற்படி ஜில்லா, ரெயில் ஸ்டேஷன், சிவாலயம். ஸ்வாமி சுகவனேஸ்வரர், பிரம்மோற்சவம் வைகாசி மாதம். கல்வெட்டுகளில் கிளிவண்ணநாதேஸ்வரர் என்றிருக்கிறது.

சேபூர் :—சென்னை ராஜதானி, கோயமுத்தூர் ஜில்லா, பள்ளடம் தாலூகா, இங்கு இரண்டு சிவாலயங்கள் இருக்கின்றன.

சேலூர் :—புதுக்கோட்டை சமஸ்தானம், தென் இந்தியா, திருமையம் தாலூகா, சிவாலயம், ஸ்வாமி ஸ்ரீ பூமீஸ்வரர்.

சேறை :—(திரு) சென்னை ராஜதானி, இது உடையார் கோயிலென வழங்கப்படுகிறது, தஞ்சாவூர் ஜில்லா, கும்பகோணத்திலிறங்கிப் போகவேண்டும். (நாய்ச்சியார் கோயிலுக்கு 3 மைல் தெற்கு) இங்கு சந்திரங்களுண்டு. திருஞான சம்பந்தர் அப்பர் பாடல்பெற்றது. தெளம்ய மகரிஷி பூசித்த ஸ்தலம், சிவாலயம், ஸ்வாமி செந்நெறியப்பர் (சந்நிதியப்பர் என வழங்கப்படுகிறது) தேவி ஞானவல்லியம்மை, மார்க்கண்டர் தீர்த்தம்.

சைதாப்பேட்டை:—சென்னை ராஜதானி, செங்கல்பட்டு ஜில்லா, தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன், சென்னைக்கு 5 மைல், சிவாலயம்-ஸ்வாமிகாருணீஸ்வரர், தேவி கற்பகாம்பாள், பிரம்மோற்சவம் சித்திரை மாதம்.

சொண்டி :—வட இந்தியா, சிவாலயம், இங்குள்ள லிங்கம் வடக்கிலுள்ள 12 ஜோதி லிங்கங்களில் ஒன்றும்.

சொரால் :—மைசூர் ராஜ்யம், ஷிமோகா ஜில்லா, சொராப் தாலூகா, சிவாலயம், ஸ்வாமி காட்டேஸ்வரர், இங்கு ரர்மோஸ்வரர் கோயில் என்று மற்றொன்று உளது.

சேரபுரம் :—(திரு) இது தியாகவல்லி என்றும் வழங்கப்படுகிறது, சென்னை ராஜதானி, ஆலம்பாக்கத்திற்கு 2 மைல் கிழக்கு. அகஸ்தியர் பூசித்த ஸ்தலம். கோயில் மண்ணினால் மூடப்பட்டிருந்து சுமார் 130 வருடங்களுக்கு முன் கண்டு பிடிக்கப்பட்டது. கடற்கரையிலுள்ளது. ஸ்வாமி சோபுர நாதேஸ்வரர், தேவி சோபுர நாயகி. பிரம்மோற்சவம் பங்குனிமாதம்.

சோம்பூர் :—(சோமபுரி ?) மைசூர் ராஜ்யம், ரங்கன் ஹல்லி ஸ்டேஷனுக்கு 2 மைல்-பத்ரை நதிக்கரையிலுள்

ளது. சிவாலயம் சிறியது. லிங்கம் அர்த்தநாரீஸ்வரர் வடிவானது. கோயில் மேற்கு பார்த்தது. சிவராத்திரிதினம் சூரிய நமஸ்காரம்.

சோம்நாத்பூர் :—மைசூர் ராஜ்யம், சீரங்கபட்டணத்திற்கு 20 மைல்; காவிரிக்கு இடதுகரையிலுள்ளது. சோமன் என்னும் பல்லவ தளகர்த்தனால் சுமார் 1270-ஆம் வருடம் கட்டப்பட்டதென்பர். சோமன் என்பவன் ஹொய்சால அரசன் மந்திரி என்பர். கோயில் முழுவதும் கருமையான கற்களால் கட்டப்பட்டது, சுண்ணாமே கட்டடத்தில் கிடையாதாம். ஹொய்சாலசில்பம், தக்கணசாரி (?) கட்டியதென்பர், இங்கு தற்காலம் முக்கியமூர்த்தி கேசவப் பெருமாள், இது தற்காலம் காணுமற் போயிற்றென்பர்; ஆயினும் கோயிலில் ஒரு சந்நிதியில், சிவலிங்கம், கணபதி, மஹிஷாசுரமர்த்தனி சிலைகளிருக்கின்றன. கோயில் மூன்று விமானங்களுடைய சளுக்கிய கட்டிடம்.

சோமநாதபுரம் :—பம்பாய் ராஜதானி, கத்திவார் பிரிவு, ஜூனகட் ஸ்டேட்டிலுள்ளது, பெரிய சிவாலயம். ஜோதிலிங்கம்-கோயிலுக்குப் பின்புறம் பட்குண்டம் எனும் குளத்தருகில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் மடிந்ததாக இதிகாசம். மகம்மது கஜனியால் 1025-ம் வருடம் இக்கோயில் கொள்ளையடிக்கப்பட்டது. வீராவால் ஸ்டேஷனிலிருந்து போகவேண்டும், அந்த ஸ்டேஷன் வீராவால்-பௌநகர்—கோண்டால—ஜூனகட்—போர்பந்தர் ரெயில்வேயிலிருக்கிறது. இதற்கு பிரபாஸ் படன் என்றும் பெயர். வீராவல் ஸ்டேஷனிலிருந்து 2 மைல் கோயில்—சளுக்கிய சில்பம்-பெரும்பாலும் மணற்கல்லாலாயது.

சோமூர் :—சென்னை ராஜதானி, திருச்சிராப்பள்ளி ஜில்லா, கரூர் தாலூகா, சோமேஸ்வரர் கோயில்.

சோழபுரம் :-சென்னை ராஜதானி, வடஆற்காடு ஜில்லா, வேலூர் தாலூகா, சிவாலயம் சிலமாயிருக்கிறது, கல்வெட்டுகள் உடையது.

சோழமாதேவி :—சென்னை ராஜதானி, கோயமுத்தூர் ஜில்லா, உடுமல்பேட் தாலூகா, சிவாலயம்.

சோழலிங்கபுரம் :—சென்னை ராஜதானி, சிவாலயம்—சோழலிங்கேஸ்வரர், தேவி பார்வதி, கோயில் சோழ அரசனால் கட்டப்பட்டதென்பர்.

சோற்றுத்துறை :—(திரு) சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, தஞ்சாவூருக்கு 7½ மைல்; சப்தஸ்தானங்களில் 3-வது. திருவையாற்றுக்கு 3½ மைல், கண்டியூருக்கு 1½ மைல் கிழக்கு. இந்திரன் பூசித்த ஸ்தலம். சிவபெருமான் பக்தனான அருளாளனுக்கு எடுக்க எடுக்க குறையாத சோறு அளித்த ஸ்தலம். இங்கு கிழக்கு கோபுரம் அஸ்திவாரத்துடன் நிறுத்தப்பட்டிருக்கிறது, சிவாலயத்தில் மஹாவிஷ்ணுவுக்கும் ஆராதனம் உண்டு. பழைய கோயில், கர்ப்பக்கிரஹத்தில் பல கல்வெட்டுகள் உண்டு. அம்மன்கோயிலும், ஸ்வாமிகோயிலும் அக்கம் பக்கம்மாயிருக்கின்றன. ஸ்வாமி தொலையாச் செல்வேஸ்வரர், தேவி ஒப்பிலாம்பிகை-மூவர் பாடல்பெற்றது.

சௌட்டம்பூர் :—மத்ய இந்தியா, துங்கபத்ரா கரையிலுள்ளது, சிவாலயம். சுமார் 11 நூற்றாண்டில் கருப்புக் கல்லால் கட்டப்பட்டது.

சௌரத் :—வங்காள ராஜதானி, தர்பங்கா ஜில்லா, மதுபாணியினின்றும் 8 மைல் சிவாலயம். 1845-ம் வருடம் தர்பங்கா ராஜாவால் கட்டப்பட்டது. கோயிலின் பக்கத்திலுள்ள குளம் அழகியது.

டாக்கா பிரிவு :—கிழக்கு வங்காளம், டாக்கா பட்டணம், சிவாலயம். ஷிவ்பாலி எனும் பெயருடையது.

டிரக் ஜில்லா :—மத்திய மாகாணம், தேவ் பலோடா கிராமம், சிவாலயம் கிலமாயிருக்கிறது.

டியோரியா :—ஐக்கிய மாகாணம், பழைய சிவாலயம், கிலமாயிருக்கிறது.

டெலிகான்தாம்தேரே :—பூனா ஜில்லா, பம்பாய் ராஜதானி, இங்கு மூன்றுமுக்கிய சிவாலயங்கள் உண்டு. (1) சித்தேஷ்வரர் கோயில், கோட்டையைப்போன்ற மதில் சுவர் உடையது. (2) தக்லேஷ்வரர் கோயில். (3) உத்தரேஷ்வர் கோயில் சுமார்-200 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது.

டோரடுன் பிரிவு :—ஐக்கிய மாகாணம், (1) லாக்மண்டல் கிராமம், பழைய சிவாலயம் சிங்கபுரத்து அரசகுமாரியால் கட்டப்பட்டது. இங்கு மற்றொரு இடிந்த சிவாலயமுமுண்டு-ஸ்வாமி கேதாரீஸ்வரர் (2) சஹஸ்ரதாரா சிவாலயம்.

டாகினி :-(தட்சிணம்) இங்குஒரு ஜோதிலிங்கம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

டோல்பூர் :—வட இந்தியா, ரெயில் ஸ்டேஷன், சிவாலயம்-மஹாதேவர், மஹாதேவி.

டளம்ரேயன் :—வட இந்தியா, இது பூர்வத்தில் கௌதமருடைய ஆஸ்ரமம் என்பர். சிவாலயம், ஸ்வாமி கௌதமேசர், உமாதேவி.

டிவால்வா :—மத்ய இந்தியா, பம்பாய் ராஜதானி, சிவாலயம்.

டில்லி :—வட இந்தியா ரெயில்ஸ்டேஷன், சிவாலயம், ஸ்வாமி தர்மேசர், தர்மராஜர் பூசித்தது.

தக்களூர் :—சென்னை ராஜதானி, தர்மபுரத்திற்கு சமீபத்திலுள்ளது, சிவாலயம், ஸ்வாமி திரிலோகநாதர், தேவி தர்ம சம்வர்த்தினி, வைப்பு ஸ்தலம்.

தக்கோலம் :-திருஊறல் எனவும் வழங்கப்படுகிறது. அரக்கோணம் தாலூகா, வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி-நந்திவாயினின்றும் தண்ணீர் ஊற்றிக்கொண்டிருக்கிறபடியால் திருஊறல் எனப்பெயர் பெற்றதென்பர். சிவாலயம். ஸ்வாமி உமாபதீஸ்வரர், ஜலநாதேஸ்வரர், தேவி உமையம்மை, கிரிஜா கன்னிகாம்பாள். உமை பூசித்த ஸ்தலம், ஊறல் தீர்த்தம், பார்வதி தீர்த்தம், இந்திரன், யமன், சூரியன், சந்திரன், பாண்டவர்கள், பூஜித்த க்ஷேத்திரம்-திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது. இங்கு சமீபத்தில் மற்றொரு சிவாலயமுண்டு, ஸ்வாமி கங்காதரீஸ்வரர், தேவி மோகனவல்லி.

தக்திசுலேமான் :—வட இந்தியா, காஷ்மீரத்திலுள்ள ஒரு குன்று. இதன் சிகரத்தில் சிவாலயம், 1650-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 1659-ம் ஆண்டில் கட்டிடம் ஔரங்கசீப்

உத்தரவால் நிறுத்தப்பட்டதென்று பெர்கூசன் கூறுகிறார்.

நசண்டவுது :—ரேபள்ளி தாலூகா, குண்டூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம், ஸ்வாமி லிங்கோத்பவ ஸ்வாமி.

தஞ்சாவூர் :—மேற்படி ஜில்லா, சென்னை ராஜதானி ரெயில் ஸ்டேஷன், சிவாலயம, ராஜராஜேஸ்வரம் என்பது இதன் பழைய பெயராகும். தஞ்சாசுரனைக்கொன்ற ஸ்தல மாதலால் தஞ்சையெனப் பெயர் பெற்றதென்பர். ராஜ ராஜனால் கோயில் கட்டப்பட்டபடியால் ராஜ ராஸ்வரம் எனப் பெயர்பெற்றது. (தேவாரப் பதிகங்களில் வழங்கப் பட்ட தஞ்சை என்பது இதன்று, அது வேறு சிவஸ்தல மாகும்). தேவாரக்காலத்தின் பிறகு இக்கோயில் கட்டப் பட்டபடியால் இதற்கு மூவர் பாடல் கிடையாது. திரு விசைப்பா மாத்திரம உண்டு. அதில் இவ்வூர் தஞ்சை ராஜ ராஜேஸ்வரம் என வழங்கப்பட்டிருக்கிறது. கோயில் 1003-ம் வருடம் ஆரம்பிக்கப்பட்டு 1009-ம் வருடம் கட்டி முடிக்கப்பட்டது. கோயிலுக்கு பிரஹதீஸ்வரர் கோயில் என்றும் பெயர். ஸ்வாமி பிரஹதீஸ்வரர், (பெரிய ஈஸ்வரர்) பெரிய உடையார் எனவும் வழங்கப்பட்டிருக்கிறது. பெயரிற் கிசையலிங்கம் மிகவும் உன்னதமானது. அபிஷேக அலங்காரம் செய்வதற்கு அருகில் ஏணி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தேவி பிரஹன்னயகி, சிவங்கி (சிவகங்கை) தீர்த்தம் (ஜலம் சிவந்த நிற முடையது) ராஜராஜனால் வெட்டப்பட்டதென்பர். கோயி லின் விமானம் மிகவும் பிரசித்தமானது ; மிகவும் உன்னத மானது. 216 அடி உயரம் ; தட்சிணமேரு எனும் பெயர் பெற்றது, உத்தம விமானம் என்றும் பெயர் ; மிகவும் அழகியது. சிற்பியின் சாதுர்யத்தால் இதன் நிழலைக் காண்பதரிதாம். இதன் அடிவாரம் 98 அடி சதுரம். விமானத்தின் உச்சியிலிருக்கும் பிரம்மரந்திரம் ஒரே கல்லாலாயது, 80 டன் பாரமுள்ளதென்பர். இச்சதுரக் கல்லின் நான்கு மூலைகளிலும் நான்கு நந்திகள் இருக் கின்றன, இவை ஒவ்வொன்றும் 6½ அடி நிகளம் 5½ அடி அகலம். பிரம்மரந்திரத்தைச் சுற்றி ஒரு குதிரை வண்டி

போகும்படியான அவ்வளவு இடம் உண்டு. இப்பிரமரந் திரக்கல்லை, நான்கு மைலுக்கு அப்பாலுமுள்ள சாரப்பள் ளம் எனும் கிராமத்திலிருந்து சாரம் போட்டு கொண்டு போயிருக்கவேண்டுமென்று எண்ணப்படுகிறது. இவ்விமா னத்தின் வடப்பக்கத்தியகீழ்பாகத்தில் ஒருடொப்பியணிந்த ஐரோப்பியனுடைய தலை இருக்கிறது. இது மார்க்கோ பொலோவின் தலை உருவம் என்று சிலர் கூறியுளார். அது தவறுகும், மார்க்கோ பொலோவின் காலம் 13-ம் நூற்றுண்டாகும், ஒருகால் இந்த விமானத்தை கட்ட உதவி புரிந்த ஒரு ஐரோப்பியனுடையதா யிருக்கலாம், நிச் சயமாய்ச்சொல்வதற்கில்லை. மிஸ்டர் ஹெமிஸ்கே என்பவர் இது ரோலண்டு கிரிப் எனும் டச்சுக்காரனுடையது என்று எண்ணுகிறார். இக்கோயிலுக்கு மாடக்கோயில் என்றும் பெயர்; 13 நிலைகளுடையது; விமானத்தின் உச்சியில் இருக்கப்பட்ட கலசம் செம்பினால் செய்யப்பட்டு பொன் தகடு வேய்ந்ததாகும்; செப்புக்கலச இடை 3083 பலமாம். பொன்தகடு 2926½ கழஞ்சுப்பொன்னாலாயது. இக்கோயி லுக்கு 3 திருவாயில்கள் உண்டு, முதற்கோபுரவாயில் கேர ளாந்தகன் எனப்பெயர்பெற்றது, இரண்டவது ராஜராஜன் திருவாயில், மூன்றுவது உள்வாயில் அணுக்கன் திருவாயில் என்றும் பெயர்கொண்டதாம். விமானத்தின் தெற்குவாயி லுக்கு விக்ரமன் திருவாயில் என்று பெயர். வடக்குபுரமும் ஒரு வாயிலுண்டு. இவ்விரண்டு வாயில்களிலும் கம்பீரமான துவார பாலகர்கள் இருக்கின்றனர். தெற்கு வாயிலின் கீழ்ப்பக்கம் லட்சுமியும், வடக்குவாயிலின் கீழ்ப்பக்கம் சரஸ் வதியும் இருக்கின்றனர். கர்ப்பக்கிரஹத்தைச் சுற்றிலும் அநேகம் கல்வெட்டுகள் இருக்கின்றன. 1055-ம் வருட மவெட்டிய கல்வெட்டு ஒன்றினால் அக்காலம் ராஜராஜவிஜய நாடகம் என்பது கோயிலில் ஆடப்பட்டதென்று அறிகி ரோம். பிறகு வந்த மஹராஷ்டிர அரசனகிய சரபோஜி என்பவர் இதைமாற்றி சரபோஜி குறவஞ்சி நாடகம் ஆடும படியாக ஏற்படுத்த, இது தற்காலம் இக்கோயிலில் வைகாசி மாதம் நடக்கும் பிரம்மோற்சவத்தில் 9-வது நாள் அஷ் டக்கொடி தினத்தில் நடைபெறுகிறது. கோயிலின் கோபுரங்களில் உள்ள உருவங்களில் பல வைஷ்ணவ உரு வங்களாம். இவை வைஷ்ணவர்களாகிய நாயக்க அரசர் கள் காலத்தில் நிர்மிக்கப்பட்டன என்று எண்ண இட

மூண்டு. கோயில் இரண்டு பிரிவையுடையது, முன்பாகம் 250 அடி சதுரம், பின்பாகம் சுமார் 500 அடி நிகளம், 250 அடி அகலம். தற்காலம் இக்கோயில் விசாரணை பார்த்துவரும் திருவாளர் சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் கோயிலின் மொத்த நிகளம் 793 அடியென்றும் குறுக்களவு 397 அடியென்றும் குறிப்பித்திருக்கிறார். கிழக்கு கோபுரம் 1360-ம் வருடம் காஞ்சி அரசர் ஒருவரால் கட்டப்பட்டதென்பர். இங்குள்ள கோபுரங்களுள் இது பழமையானது. கோயிலின் வடபுரம் சுப்பிரமண்யர் கோயில் இருக்கிறது, மிகவும் சித்திரவேலைப்பாடுள்ளது. பெர்கூசன் என்பவர் தென் இந்தியாவிலுள்ள கோயில்களிலெல்லாம் பிரஹதீஸ்வரர் கோயிலே மிகச் சிறந்ததென்றும், இக் கோயிலுள் சுப்பிரமணியர் ஆலயமே மிகவும் அழகிய தென்றும் கூறியுள்ளார். சுப்பிரமணியர் கோயில் 17-ம் நூற்றாண்டில் கட்டப்பட்டதென்று மதித்துளார். மற்றும் சிலர் 12-ம் நூற்றாண்டின் கடைசியில் கட்டப்பட்டதென்று எண்ணுகிறார்கள். இது மதுரை நாயக்கர் அரசர்கள் காலத்தில் கட்டப்பட்டிருக்கலாம், இதிலுள்ள ஸ்தம்பங்கள் முதலியன மதுரை பெரிய கோயிலில் உள்ளவைபோல் இருக்கின்றன. நாயக்க அரசர்கள் மதுரையைவிட்டு தஞ்சாவூரில் சிலகாலம் ஆண்டனர் என்பது இங்கு கவனிக்கத் தக்கது. கோயிலின் அம்மன் சந்நிதி பிற்காலத்தியதாகும். மல்லப்பா நாயக்கர்காலத்தில் 13-ம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாம். ஸ்வாமி கோயிலுக்கெதிரில் ஒரு பிரம்மாண்டமான நந்தியிருக்கிறது, ஒரே கல்லாலாயது. 12 அடி உயரம் 19½ அடி நிகளம், 8¼ அடி அகலம். நந்திமண்டபம் நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டதாம். கோயிலின் பெரிய மதில் சுவர்களில் தற்காலம் 343 நந்திகள் இருக்கின்றன. முற்காலத்தில் இருந்த பல நந்திகள் அழிந்துபோயிருக்கவேண்டும். பிராகாரத்தில் அஷ்டதிக் பாலர்களுக்கு தனித்தனி ஆலயங்கள் உள. தெற்கு திருவிக்ரமன் திருவாயிலின் கீழ் பக்கத்தில் சில பௌத்த உருவங்கள் இருக்கின்றன. கோயிலில் விஷ்ணுவின் சிலையும், நம்பி ஆரூரர், நங்கை பரவை நாய்ச்சியார்கள், திருநாவுக்கரசு, திருஞான சம்பந்தர், சிறுத்தொண்டர், ராஜராஜன், அவரது மனைவி லோகமாதேவி, முதலியவர்களுடைய வடிவங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. இக்கோயிலானது கடந்த

இரண்டு மூன்று நூற்றாண்டுகளில் நடந்த யுத்தங்களில் கோட்டையாக உபயோகிக்கப்பட்டிருக்கிறது. 1792-ம் வருடம் பிரஞ்சுக்காரர்கள் வெளிப்பிராகாரத்தை ஆயுதங்கள், வெடிமருந்து முதலியன வைப்பதற்குரிய ஆயுத சாலை (Arsanel) ஆக உபயோகித்தனர். கோயில் கோட்டையின் ஒருபக்கமுள்ளது. பெரிய கோயிலின் சுற்று மண்டபங்கள் ராஜ ராஜனது சேனாதிபதியாகிய ராமன் கிருஷ்ணன் மும்முடிச்சேரன் பிரமராயனால் கட்டப்பட்டதாம். பெரிய விமானத்தின் தென்புறமுள்ள தட்சிணாமூர்த்தி கோயில் பிறகு சேர்க்கப்பட்டதாம், 21 படிகள் ஏறி இதைப் பார்க்கவேண்டும். வடக்கிலுள்ள சிறிய சண்டேஸ்வரர் கோயில் விமானம் கட்டியகாலத்திலேயே கட்டப்பட்டது. பெரிய நந்தியும், இரண்டாம் கோபுரமும் அக்காலத்தியதேயாம். விமானத்திற்கு மேற்குபுறம் உள்ள சித்தராகிய கருவூரர் கோயில் புதிய கட்டிடம். சிவகங்கையின் மத்தியில் லோகநாத ஈஸ்வரர் ஆலயம் என்று ஒரு சிவாலயமுளது. அப்பர் ஸ்வாமிகள் பாடியது இதைக்குறித்தாயிருக்கலாம். பெரிய கோயிலின் அர்த்த மண்டபத்தில் சோழ அரசர்கள் காலத்திய வர்ணம் தீட்டிய சில சித்திரங்கள், சிலவருடங்களுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்டன. சூத்திரர்கள் இந்த அர்த்த மண்டபத்திற்குள்ளும் போகலாம். பெரிய கோயிலிலுள்ள வினயகருக்கு அருமொழி வினயகர்என்று பெயர். பெரி கோயிலில் தியாகராஜர் சந்நிதியுண்டு, ஸ்வாமிக்கு விடங்கர் வீதிவிடங்கர் எனப்பெயர். தியாகராஜர் நடனத்திற்கு அஜபா நடனம் எனப் பெயர். பிரம்மோற்சவம் சித்திரை மாதம் 18 நாட்கள், உற்சவ காலத்தில் ராஜராஜன் விக்ரஹம் ஸ்வாமிக்கு முன்பாகக் கொண்டுபோகப்படுகிறது. ஆ'-வல்லான் என்று ஸ்வாமிக்குப்பெயர். வினயகர் கோயில் 1801-ம் வருடம் சரபோஜி மன்னரால் புதுப்பிக்கப்பட்டது. இரண்டாம் பிராகாரத்து சுற்று மாளிகையிலுள்ள லிங்கங்கள் மஹராஷ்டிர மன்னரால் பிரதிஷ்டை செய்யப்பட்டவை. உட்பிராகாரத்தின் தளவரிசை சரபோஜி மன்னரால் 1801-ம் வருடம் போடப்பட்டது. இவ்வூரில் பல சத்திரங்கள் உள. (1) ராஜா சத்திரம ஒரு நாளுக்கு 6 அணு முதல் 2 ரூபாய் வரையில் குடிக்கூலி. (2) நாயகர் சத்திரம் ஸ்டேஷனுக்கு $6\frac{1}{2}$ பர்லாங்கு. (3) தேன்கொண்டான் சத்திரம் 2 பர்லாங். (4) கோமுட்டி

சத்திரம் 1 மைல்—மூசாபர் பங்களாவும் உண்டு, தஞ்சா வூருக்கு 2 மைல் தூரத்தில் வெண்ணறுகரையில் ஒரு சிவாலய முண்டு, ஸ்வாமிக்கு தஞ்ஜேசன் என்று பெயர். (தஞ்சை + ஈசன்) தேவாரத்தில் குறிக்கப்பட்ட தஞ்சை இதுவாகும் என்று சிலர் எண்ணுகின்றனர், தேவி ஆநந்தவல்லி மற்ற சிவாலயங்கள். சதாநந்தேஸ்வரர், புஷ்பமாலிகேஸ்வரர், சங்கரநாராயணர், கோங்கணேசர், விஸ்வநாதர், கச்சபேஸ்வரர், ரத்னகிரீஸ்வரர், கோயில்கள்.

தடிகலபூடி :—எல்லூர் தாலூகா, கிருஷ்ணை ஜில்லா, சென்னை ராஜதானி, கங்கேஸ்வரர் கோயில்.

தண்டலைநீணெறி :—(திரு) தண்டலைச்சேரி எனவும் வழங் கப்படுகிறது. சென்னை ராஜதானி, திருத்துறைப்பூண்டி ஸ்டேஷனுக்கு 3 மைல் வடக்கு. அரிவாட்டாய நாயனார் முக்தியடைந்த ஸ்தலம். திருமாலின் கூர்மாவதாரத்தின் அகங்காரத்தை அடக்கி, அதன் ஓட்டை சிவபெருமான் அணிந்த க்ஷேத்திரம். ஸ்வாமி நீணெறி நாதேஸ்வரர், தேவி ஞானம்பிகை. ஓமக தீர்த்தம். ஸ்வாமிக்கு மாவடு நிவேதனம் விசேஷம். திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது.

தண்டங்குறை :-சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, சிவாலயம், ஸ்வாமி கைலாச பசுபதீஸ்வரர், தேவி லோக நாயகி, வைப்பு ஸ்தலம்.

தண்டந்தோட்டம் :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, பேணுபெருந்துறைக்கு 2 மைல், கும்பகோணத்தி லிருந்து 8 மைல், ஸ்வாமி பரமேஸ்வரர், தேவி பார்வதி, சிவகங்கை தீர்த்தம். பார்வதி பரமேஸ்வரர் மணக்கோல மாக இடப வாகனத்தின்மீது காட்சி அளிக்கின்றனர். ஸ்வாமி இடபத்தின்மீது கையூன்றியவண்ணம் இருக்கிறார். விக்ரஹம் பெரிதாயிருக்கிறது.

தர்பங்கா பிரிவு :—(தனுர்பங்கம்) வங்காள ராஜதானி வட இந்தியா, இங்குள்ள சிவாலயங்கள், (1) காக்ரால் கபி லேஸ்வர் மஹாதேவர் கோயில், கபிலமுனிவரால் பிர திஷ்டை செய்யப்பட்டதென்பர். (2) மாலிநகர், சிவாலயம், மஹாதேவர், புதிய கோயில், சுமார் 100 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது. (3) சௌரத், சிவாலயம் தர்பங்கா

சமஸ்தானத்தால். கட்டப்பட்டது.—ஞானேசர், ஞானேஸ் வரி.

தர்மஸ்தலா :-மேற்கு இந்தியாவிலுள்ளது. மங்களூருக்கு 56 மைல், கார்கலுக்கு 20 மைல். சிவாலயம், நம்பூத்ரி பிராமணர்களால் பூஜை.

தர்மபுரம் :—(திரு) தென் இந்தியா, காரைக்கால் ஸ்டே ஷனுக்கு ½ மைல் மேற்கு, யமதர்மன் சிவபெருமானைப் பூஜித்த ஸ்தலம். பிரம்மாவும், அரம்பையரும் பூஜித்த ஸ்தலம். ஸ்வாமி யாழ்முறி நாதேஸ்வர், தேவி சதா மது ராம்பிகை அல்லது மதுரமின்னம்மை. கதலி தீர்த்தம், விஷ்ணு தீர்த்தம் ; பிரம்ம தீர்த்தம்; திருஞான சம்பந்தர் யாழ்முறிப்பதிகம் (மாதர் மடப்பிடி) பாடிய க்ஷேத்திரம். இங்கு தர்மபுரி ஆதீனமடம் எனும் சிறந்த சைவ மடம் உளது.

தர்மபுரி :—மேற்படி தாலூகா, சேலம் ஜில்லா, சென்னை ராஜதானி, மல்லிகார்ஜுனர் கோயில். இங்கு முசாபர் பங்களா உண்டு. இவ்வூர்க்கு பழைய பெயர் தகடூர்.

தர்மவரம் :—அனந்தபூர் ஜில்லா, சென்னை ராஜதானி, காசி விஸ்வநாதஸ்வாமி கோயில்.

தரங்கம்பாடி :—மாயவரம் தாலூகா, தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, மாசிலாமணீஸ்வரர் கோயில், தேவி ரத்னம்பிகை, கல்வெட்டுகளில் ஸ்வாமி பெயர் மணி வண்ணீஸ்வரமுடையார் என்றிருக்கிறது. இதற்கு அளப் பூர் என்றும் பெயர் உண்டு. வைப்பு ஸ்தலம்.

தரங்காத்ரா :—வட இந்தியா, ரெயில்வே ஸ்டேஷன், மஹாதேவர் சிவாலயம்.

தரணிகோடா :—சென்னை ராஜதானி, அமரேஸ்வரர் கோயில், 1436-ம் வருடம் கிருஷ்ண தேவராயரால் கட்டப் பட்டது.

தராஸ் :-வங்காள ராஜதானி-பாம்ஞ பிரிவு, சிவாலயம், 300 வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட மஹாதேவர் ஆலயம்.

தரைக்குடி :—ராம்நாத் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம், ஸ்வாமி தர்மேஸ்வரர். கோயில் மண்மூடியிருந்ததை சேதுபதியவர்கள் வெளியாக்கினர்.

தபஸ்தானம் :—வட இந்தியா, பிரம்ம கபாலத்திற்கு போகும் வழியிலுள்ளது, சிவாலயம், ஸ்வாமி பரமசிவம் தேவி பாலபார்வதி ; அம்பாள் தபஸ்செய்த இடம்.

தப்பளாம்புலியூர் :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, திருவாரூருக்கு 1 மைல் சிவாலயம். ஸ்வாமி ஏகாம்பரேஸ்வரர், தேவி பார்வதி.

தலகோனு :—சென்னை ராஜதானி, மதனபள்ளியிலிருந்து 70 மைல், காடுகள் மத்தியில் சித்தேஸ்வரர் சிவாலயமுளது, அருகாமையில் பாபவிநாசம் எனும் மலைநீர் வீழ்ச்சியுளது. சிவராத்ரி உற்சவம விசேஷம்.

தலைக்காடு :—மைசூர் ராஜ்யம், நரசிபூருக்கு 8 மைல், மைசூருக்கு 28 மைல். சோழ அரசர்கள் இங்கு ஆண்ட காலத்தில் இதற்கு ராஜராஜபுரம் என்று பெயர் இருந்தது. இங்கு முக்கியமாக ஐந்து கோயில்கள் உள, அவைகளை தர்சிப்பதற்கு, பஞ்சலிங்க தர்சனம் என்று பெயர். இங்கு காவிரியானது நான்கு திக்குகளிலும் பாய்கிறது. ஊர்மண் மேடிட்டிருந்தது. இங்குள்ள ஐந்து முக்கிய கோயில்களில் நான்கு மண்மூடியிருந்தன. மைசூர் சமஸ்தானத்தார் சுமார் 10,000 ஆட்களைவைத்து கோயில்களையெல்லாம் புனர் உத்தாரணம் செய்தனர். 12 வருடங்களுக்கு ஒரு முறை இந்த ஐந்து கோயில்களையும் தரிசனம் செய்யும் புண்ணியகாலம் வருகிறது. இங்குள்ள முக்கிய தீர்த்தங்கள் இரண்டு, முழுகுதுறை, கோகர்ண தீர்த்தம். ஐந்து முகங்களுடைய சிவபெருமான், கோகர்ணக் குளக்கரையில், வைதீஸ்வரராகவும், காவிரியின் உத்தரவாஹினிக்கரையில் அர்க்கேஸ்வரராகவும், காவிரியின் பூர்வ வாஹினிக்கரையில் பாதாளேஸ்வரராகவும், தட்சிண வாஹினிக்கரையில் சக்தேஸ்வராகவும், காவிரியின் பஸ்சிமவாஹினிக் கரையில் மல்லிகார்ஜுனராகவும், வீற்றிருக்கிறார். பாதளேஸ்வரர் கோயிலில் சூரியன் பூசித்ததாகவும், சக்தேஸ்வரர் கோயிலில் வாசுகி பூசித்ததாகவும், மல்லிகார்ஜுனர் கோயிலில் பிரம்மாவும் காமதேனுவும் பூஜித்ததாகவும் ஐதீகம். இவ்வூரின் சம்ஸ்கிருதப்

பெயர் தளவனபுரம். ஸ்தலபுராணத்தில் இதற்கு கஜாரண்ய க்ஷேத்திரம் என்று பெயர் உளது. தலன், மாடன் எனும் இரண்டு வேடர்கள் பூசித்த ஸ்தலமாதலால் தலக்காடு எனப் பெயர்பெற்றதென்பது ஸ்தலபுராணம். இதுமிகவும் புராதன மான பட்டணம். கங்கை அரசர்கள் மூன்றும் நூற்றாண்டில் ஆண்ட இடம். ஆகவே இக்கோயில்களும் மிகவும் புராதன மானவை. வைதீஸ்வரன் கோயில் மிகவும் பழமையானது. கோயில் கிழக்கு பார்த்தது. வெளிப்பிராகாரம் பின்னால் விஜயநகர அரசர்களால் கட்டப்பட்டது, ஸ்வாமி வைதீஸ் வரர், தேவி மனோன்மணியம்மன். கோயில் துவாரபாலகர் கள் 10 அடி உயரம். மல்லிகார்ஜுனர் கோயில் சோம கிரியின் உச்சியிலுள்ளது. குன்று 350 அடி உயரம். தேவி, ஸ்தல புராணத்தின்படி சாமுண்டி, சாதாரணமாக பிரமராம்பிகை என அழைக்கப்படுகின்றது. கோயிலில் ஒரு அழகிய சித்திர மண்டபமுண்டு. அர்க்கேஸ்வரர் கோயில் விஜயபுரத்திலிருக்கிறது, கோயில் பிற்காலத்தியது, சிறியது. இங்கு கௌரிசங்கரர் கோயில் என்னும் ஒரு சிவாலய முண்டு, கல்வெட்டுகளில் இதற்கு மல்லேசர் என்று பெயர். இது மைசூர் சிக்கதேவராய உடையார் என்பவரால் 1706-ம் ஆண்டில் கட்டப்பட்டது. சக்தேஸ்வரர் கோயி லுக்கு மாரணேஸ்வரர் கோயில் என்றும் பெயர் உளது. வைதீஸ்வரர் கோயில் தெற்கில் வீரபத்திரர் கோயில் உண்டு. இங்குள்ள கல்வெட்டுகளில் இங்கு ராஜராஜேஸ்வரம் என்று ஒரு கோயில் இருந்ததாகச் சொல்லப்பட்டிருக் கிறது. கோகர்ண தீர்த்தத்தருகில் கோகர்ணேஸ்வரா கோயில் என்று ஒரு சிறு சிவாலயமுண்டு. வைதீஸ்வரன் கோயிலின் பின்பாகம் சாளுக்கிய கட்டிடமாகத் தோன்றுகிறது. முன் பாகம் பிற்காலம் புதுப்பிக்கப்பட்டதா யிருக்கலாம்.

தலைக்காவேரி :—மைசூர் ராஜ்யம், மைசூருக்கு 85 மைல் சிவாலயம், ஸ்வாமி அகஸ்தீஸ்வரர். இங்குதான் காவிரிநதி ஆரம்பமாகிறது. காவிரி தீர்த்த ஸ்நானம் விசேஷம். தேவார வைப்பு ஸ்தலம்.

தலைச்சங்காடு :—(திரு) சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, திருவலம்புரத்திற்கு 1 மைல் தென் மேற்கு. மாயவரத்திலிருந்து 12 மைல்; சீர்காழியிலிருந்து 10 மைல். ஆக்கூர் ஸ்டேஷனிலிருந்து 2 மைல், மஹாவிஷ்ணு பூசித்து

பாஞ்சஜன்யம் எனும் சங்கம்பெற்ற க்ஷேத்திரம். திக்பாலர் கள், திக்கஜங்கள் பூஜித்த ஸ்தலம். ஸ்வாமி சங்கருணை தேஸ்வரர் (சங்கு + அருள் = நாதேஸ்வரர்) சங்கராணி பேஸ்வரர் என்றும் அழைக்கப்படுகின்றனர். தேவி சௌந்த ரேநாயகியம்மை. காவிரி தீர்த்தம், வில்வவிருட்சம்; திரு ஞான சம்பந்தர் பாடல் பெற்றது.

தலைஞாயிறு :-சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, சிவாலயம், ஸ்வாமி குற்றம்பொறுத்த ஈஸ்வரர்—தர்மபுரம் ஆதீனம் மேற்பார்வைக்குட்பட்டது.

தலைச்சேரி :—தென் இந்தியா, மலையாள தேசம், சிவா லயம், ஸ்வாமி பரமேஸ்வரர், தேவி பார்வதி.

தவளேஸ்வரம் :—சென்னை ராஜதானி, கோதாவரி ஜில்லா, சிவாலயம். இதனருகில் கோவ்வூர் எனுமிடத்திலும் ஒரு சிவாலயமுண்டு.

தலைகோணமலை :-சென்னை ராஜதானி, கடப்பை ஜில்லா, வாயல்பாடு தாலூகா, சிவாலயம். பாபநாச தீர்த்தம்.

தலையாலங்காடு :-(திரு) சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, திருவாரூருக்கு 2 மைல் மேற்கிலுள்ளது. திருக் குடவாயிலுக்கு 5 மைல். கபிலர் பூஜித்த ஸ்தலம். தாரு காவன ரிஷிகள் அனுப்பிய மூயலகன் முதுகின்மீது சிவ பெருமான் நடித்தருளிய க்ஷேத்திரம். ஸ்வாமி ஆடவல்ல ஈஸ்வரர், தேவி திருமடந்தையம்மை. சங்கதீர்த்தம், சுவர்ண தீர்த்தம்; திருநாவுக்கரசு ஸ்வாமிகள் பாடல் பெற்றது.

தலையூர் :—சென்னை ராஜதானி, ருத்திரபசுபதி நாயனார் பூசித்த சிவஸ்தலம்.

தவளகிரி :—சிவாலயம், ஸ்வாமி தவளகிரீஸ்வர், தேவி பர்வத வர்த்தினி. பிரமதீர்த்தம்.

தவளேஸ்வரம் :—வட இந்தியா, டில்லிக்கு அருகிலுள் ளது. சிவாலயம்.

தள்ளி:—வளவநாடு தாலூகா, மலபார் ஜில்லா, தென் இந்தியா, பழைய சிவாலயம் இடிந்துபோய்விட்டது. அழகிய சிவலிங்கம் மாத்திரம் இருக்கிறது.

தள்ளூரு :—கோதாவரி ஜில்லா, சென்னை ராஜதானி, குகைக்கோயில்—முன்பு சிவாலயமாயிருந்து தற்காலம் வைஷ்ணவக்கோயிலாக மாற்றப்பட்டிருக்கிறது.

தளவனூர் :—பஞ்சபாண்டவ மலையென வழங்கப்படுகிறது. திண்டிவனம் தாலூகா, ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, பேரணி ஸ்டேஷனுக்கு 5 மைல். சிவாலயம், குகைக்கோயில்—முதல் மஹேந்திரவர்மன் காலத்தியது. (600—625) பல்லவ சில்பம். கோயில் தெற்கு பார்த்தது. ஆயினும் சிவலிங்கம் கிழக்கு பார்த்ததாயிருக்கிறது. லிங்கம் திரண்ட உருவமுடையது. கோயிலின் பழைய பெயர் சத்ருமல்லேஸ்வரம்.

தனியூர் :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, இதற்கு புமுகீஸ்வரம் என்றும் பெயர். மாயவரத்திற்கு அருகிலுள்ள சிவாலயம்.

தாசேபல்லே :-கிருஷ்ணை ஜில்லா, சென்னை ராஜதானி, நாகேஸ்வரஸ்வாமி கோயில்.

தாட்பத்ரி :—அனந்தபூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம், ஸ்வாமி ராமேஸ்வரர்-விஜயநகர சில்பம். பெர்கூசன் இங்கு இடிந்துபோயிருக்கும் கோபுரத்து அடிபீடத்திலிருக்கும் சில்பங்களை மிகவும் புகழ்ந்திருக்கிறார். இங்குள்ள கல்வெட்டொன்று 1188-ம் வருஷத்தியது, ஆகவே கோயில் அதற்கு முற்பட்டதாம். பெர்கூசன் இது கிருஷ்ணதேவராயருடைய உத்யோகஸ்தராகிய ராமலிங்க நாயுடு என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது, சுமார் 1507-ம் வருஷத்தில், என்று நினைக்கிறார்.

தாடபுரம் :—தென் இந்தியா, பழைய சிவாலயம்.

தாணு பிரிவு :—பம்பாய் ராஜதானி. இங்கு பல சிவாலயங்கள் உள. (1) அகாஷி, சிவாலயம், ஸ்வாமி பவானீஷங்கர் மஹாதேவ். கோயில் 1691-ம் வருஷம் கட்டப்பட்டது. (2) அம்பர்நாத் அல்லது அமர்நாத் கோயில், ஸ்வாமி அமர்நாத்; சாளுக்கிய சில்பம். (3)குல்சுண்டி சித்தேஷ்வர்கோயில். (4) காற்றேரி குகைக்கோயில்-குகை 66 நெம்பருடையதில் ஒரு

சிவாலயமுண்டு. சிவராத்ரியில் மாத்திரம் பூஜை நடக்கிறது. (5) சந்திரபதா சிவாலயம், ஸ்வாமி சாம்பேஷ்வர் அல்லது சோமேஷ்வர் கோயில் 1000 வருடங்களுக்கு மூற்பட்டது. (6) லோனட்-ராமேஷ்வர் சிவாலயம். (7) சால்ஜெட் இங்கு ஆதியிலிருந்த சிவாலயம் போர்த்துகேயரால் மாதாக் கோயிலாக மாற்றப்பட்டது. (7) மாதிரான் பம்பாய்க்கருகில் சிவாலயம் 1880-ம் வருடம் கட்டப்பட்டது. (8) மூர்பாட் சிவாலயம் புதியது. சுமார் 200 வருடங்களுக்கு மூன் கட்டப் பட்டது. (9) நிர்மல் இங்கு 3 சிவாலயங்சள் உள. விமலேஷ்வர் கோயில், பூலேஷ்வர் கோயில், சித்தேஷ்வர் கோயில்.(10) சொபாரா —சக்ரேஷ்வர் காமதேவ் கோயில். (11) டில்சே சிவாலயம் தீயினல் அழிக்கப்பட்டது. இங்குள்ள சிவலிங்கம் பெரிய கவசத்தினல் மூடப்பட்டிருக்கிறது: (12) ஷஹாங்கா சிவாலயம்—சிவராத்ரி விசேஷம். (13) வாடா காண்டேஷ்வர் சிவாலயம், கிலமாயிருக்கிறது. (14) களேஷ்புரி, பீமேஷ்வர் சிவாலயம்.

தாம்பல் :—கடக்கிலிருந்து 13 மைல் தென்கிழக்கு. இங்கு 3 பழைய சிவாலயங்கள் இருக்கின்றன. இவற்றுள் தோட்டபாசப்பா கோயில் கவனிக்கத்தக்கது. இதில் அந்தராளத்தின் மேற்பாகத்திலுள்ள சில்பங்கள் மிகவும் வேலைப் பாடுள்ளவை-இக்கோயில் கட்டப்பட்ட காலம் சுமார் 12-ம் நூற்றாண்டாயிருக்கலாம் என்று பெர்கூசன் எண்ணுகிறார். அடிபீடமும் விமானமும் நட்சத்திரத்தைப்போல் கோணங் கள் உடையவை, தூண்கள் அழகியவை. கர்ப்பக்கிரஹத் தின் முக்கிய வாயிலில் மும்மூர்த்திகளின் சிலைகள் செதுக் கப்பட்டிருக்கின்றன. இக்கோயிலிலுள்ள பிரம்மாவுக்கு 5 முகங்கள் உண்டு. இங்குள்ள நந்தி பெரியது.

தாமல் :—காசீபுரம் தாலூகா, செங்கல்பட்டு ஜில்லா, சென்னை ராஜதானி, பழைய சிவாலயம், சோழ கட்டிடம். கல்வெட்டுகளில் ஸ்வாமி பெயர் திருப்பற்றீசுரமுடையார் என்றிருக்கிறது.

தர்மபுரம் :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, சிவாலயம், இந்திரன் பூஜித்தது. இதற்கு வில்வாரண்யம் என்று பெயர், யமனல் பூசிக்கப்பெற்றது. ஸ்வாமி தர்ம புரீஸ்வரர், தேவி அபயாம்பிகை. மாயவரத்திற்கு 3 மைல்

கிழக்கு. இங்கு மடாலயத்திற்கு வடக்கில் ஸ்ரீ ஞானபுரீஸ்வரர் கோயில் உளது. தர்மபுரத்து ஆதீனம் மேற்பார்வை.

தாமோ பிரிவு :—மத்திய மாகாணம், (1) மண்டக்பூர் சிவாலயம், ஸ்வாமி ஜகேஷ்வர் 1711-ம் வருடம் கோயில் பாலாஜி திவான் என்பவரால் கட்டப்பட்டது. தீர்த்தம் அமிர்தகூபம் (2) மட்கோடா மஹாதேவர் சிவாலயம். சங்கிராந்தி உற்சவம் விசேஷம்.

தார்வார் பிரிவு :—பம்பாய் ராஜதானி, இங்கு பல சிவாலயங்கள் உள. (1) மயிலார் குட்டா (குன்று) மயிலார்லிங் ஆலயம். சோமேஷ்வர் கோயில் இது முதலில் ஜெயினர் ஆலயமாயிருந்தது, பிறகு மசூதியாகி, மஹாராஷ்டிரர்களால் 1753-ம் வருடம் சிவாலயமாக்கப்பட்டது. (2) எட்லபாட் சிவாலயம் செங்கல் கட்டடம். ஸ்வாமி காமேஷ்வர். (3) கடக் இங்கு 3 சிவாலயங்கள் உள, திருகூடேஷ்வர் கோயில், சோமேஷ்வர் கோயில், காமேஷ்வர் கோயில். (4) கால்கநாத் வராவும் துங்கபத்ரையும் சங்கமமாகுமிடத்தில் கார்கேஷ்வர் கோயில். (5) குட்டுடாபூர் சிவாலயம், இங்கு ஸ்வாமி மல்லாரி, மல்லன் எனும் அரசனைக் கொன்றவர் என்று ஐதீகம்; தேவி மல்லாரிதேவி. (6) ஹாங்கல் இங்கு 3 சிவாலயங்கள் உண்டு, ராமலிங் கோயில், தாரகேஷ்வர் கோயில், விருபாட்சர் கோயில், மற்றும் ½ மைல் தூரத்தில் பிலேஷ்வர் சிவாலயமுளது. (7) ஹாரல்ஹல்லி இரண்டு சிவாலயங்கள், சோமேஷ்வர் கோயில். காமேஷ்வர் கோயில். (8) ஹத்திமட்டூர் போகேஷ்வர் சிவாலயம். (6) ஹாவங்கி ராமேஷ்வர் சிவாலயம். (10) ஹெப்பிஷம்புலிங்கேஸ்வரர் சிவாலயம். இது ஜெயின சில்பமமைந்தது. (11) ஹிரேமாகூர் விஸ்வேஸ்வரர் சிவாலயம். (12) ஹிரேகூர் இங்கு 2 கோயில்கள் உள, வராஹ காலேஷ்வர் கோயில், விஷபானஹரேஷ்வர் கோயில். இக்கோயிலில் தரிசனம் செய்பவர்களுக்கு விஷபாதையில்லையென்பது ஐதீகம். (13) ஹொம்பால் போகேஷ்வர் கோயில். (14) ஹோஷல்லி சிவாலயம், ஸ்வாமி மல்லப்பா. (15) பாலம்பீட் இங்கு 2 சிவாலயங்கள்-கள்ளமஹேஷ்வர் கோயில், ராமேஷ்வர் கோயில். (16) பாளேஹல்லி, மயிலார்தேவ் கோயில், மல்லிகார்ஜுனர் கோயில். (17) பாஸூர் ராமலிங்கேஷ்வர் கோயில். (18) பங்காபூர் சித்தேஷ்வர் சிவாலயம். (19) பார்டூர் பாரதேஷ்

வர் சிவாலயம். (20) பெல்வட்கி ராமலிங் கோயில். (21) பெல் வட்டி கோகுலேஷ்வர் கோயில். (22) பென்கன்கொண்டா, கால் மேஷ்வர் கோயிவ் சுமார் 1000 வருடங்களுக்கு முற்பட்டது. (23) பாவி ஹால் சித்தேஷ்வர் கோயில். (24) பிதார்கட்டி சங்கமேஷ்வர் ஆலயம். (25) சப்பி மல்லிகார்ஜுனர் கோயில், பழையது. (26) சௌடாதாம்பூர் முக்தேஷ்வர் சிவாலயம். (27) சிகான்ஜி அமிர்தலிங்கேஷ்வர் கோயில். 500 வருடங்களுக்கு முந்தியது. (28) சிக்கனூர்த்தி கால்மேஷ் வர் சிவாலயம். (29) சிக்கூர் சோமேஷ்வர் கோயில். (30) சின்முல்குண்ட் சிக்கேஷ்வர் கோயில்; மற்றும் ஒரு சிறுகுன்றில் சித்தேஷ்வர் சிவாலயம். (31) தாம்பல் காமேஷ்வர், சோமேஷ் வர் கோயில்கள்; இரண்டும் பாழடைந்திருக்கின்றன. சாளுக் கிய கட்டிடங்கள். (32) தேவிஹோசூர் போகேஷ்வர் சிவா லயம். (33) எட்லாபாட் காமேஷ்வர் கோயில், செங்கல் கட்டிடம். சுயம்புலிங்கம் என்பர். (34) கடக் சோமேஷ்வர் ஆலயம், ராமேஷ்வர் ஆலயம். (35) திரிகூடேஷ்வர் சிவா லயம். இங்கு 3 லிங்கங்கள் சேர்ந்திருக்கின்றன. சாளுக்கிய சில்பம். (36) அம்லூர் சோமநாதர் சிவாலயம். (37) ஆடூர் கள்ளேஸ்வர் மஹாதேவ் கோயில். இவ்வூருக்கு பழைய பெயர் பாண்டிபுரம், கோயில் 1400 வருடங்களுக்கு முந் தியது. இதில் சளுக்கிய அரசன் கீர்த்திவர்மன் காலத்திய கல்வெட்டுகள் உள. பழைய கோயில். (38) அமர்கோல் ஷங்கர்லிங் கோயில். சளுக்கிய கட்டிடம். ஜக்கனசாரியால் கட்டப்பட்டதென்பர். (39) அமின்பாவி இரண்டு சிவாலயங் கள், கார்மேஷ்வர் கோயில், மல்லிகார்ஜுனர் கோயில்—இரண் டும் கருப்புக்கற்களால் கட்டப்பட்டவை. (40) அர்லேஷ்வர், கடம்பேஷ்வர் சிவாலயம். (41) அசுண்டி கல்மேஷ்வர் சிவா தயம். (42) பாவம்பீட் விஷபரிஹாரேஷ்வர் கோயில்-சளுக்கிய கட்டிடம்.

தாரகேஷ்வர் :—கிழக்கு இந்தியா ரெயில் ஸ்டேஷன். வங்காளராஜதானி, கல்கத்தாவிலிருந்து 36 மைல்; ஹுக்ளி ஜில்லா, பெரிய சிவாலயம். சிவராத்ரியும், சைத்ரோத்சவ மும் விசேஷம். இங்கு இரண்டு தர்மசாலைகள் இருக்கின்றன.

தாரமங்கலம் :—இதை தோரமங்கலம் என்று சிலர் அழைக்கின்றனர். ஓமலூர் தாலூகா, சேலம் ஜில்லா, சென்னை ராஜதானி, சேலத்திலிருந்து 16 மைல். இங்கு

2 கோயில்கள் இருக்கின்றன. (1) கைலாசநாதர் கோயில் (2) இளமீஸ்வரர் கோயில், கல்வெட்டுகளில் ஸ்வாமி பெயர் இளமீசுரமுடையார் என்றிருக்கிறது. இது 1286-ம் வருஷத்திற்கு முற்பட்டகோயில். ராமநாதராசர் என்பவரால் முதலில் கட்டப்பட்டது. ஸ்வாமி மேற்கு பார்த்தது. சுமார் 300 வருடங்களுக்கு முன் கெட்டி முதலியார்களால் புதுப்பிக்கப்பட்டது. கைலாசநாதர் கோயில், மும்முடிக்கெட்டி முதலியாரால் ஆரம்பிக்கப்பட்டு, சீயாளக் கெட்டி முதலியாரால் தொடரப்பட்டு, வணங்காமுடி கெட்டி முதலியாரால், வேலை முடிக்கப்பட்டது. இங்கு மும்முடிக்கெட்டி முதலியார்களுடையவும் நுவங்களும், அவர்களது மனைவிகளுருவங்களும் செதுக்கப்பட்டிருக்கிறது. கோயில் சரமல் ஆற்றங்கரையிலுள்ளது, முக்கிய உற்சவங்கள் இரண்டு, தை, வைகாசி மாதங்களில். பிரதான வாசலின் கதவுகளில் 120 இரும்பு பூண்கள் உள, அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாதிரியானது-கோயிலிலுள்ள ஒரு சில்பம் வாலிவதத்தைக் குறிக்கிறது; இதில் விசேஷமென்னவென்றால் வாலி உருவத்தினிடமிருந்து ஸ்ரீராமரை பார்க்கமுடியாது. ஸ்ரீராமருடைய உருவத்தினின்றும் வாலியைப் பார்க்கமுடியும்! கொடுங்கைகள் முதலிய இடங்களில் புலி, அணுமார் முதலிய உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன, பார்க்கத்தக்கவை.

தாராசுரம் :-தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன், தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, கோயில் தஞ்சாவூர் பிரஹதீஸ்வரர் கோயிலைப்போன்றது. விமானம் மிகவும் உன்னதமானது. அங்கிருப்பதுபோல் இங்கும்,முன் கோபுரம் சிறிதும் அகலமுமானது. விமானம் பெரியதும், உயரமுமானது. ஸ்வாமி ஐராவதேஸ்வரர். யமதீர்த்தம், யமன் சாபம் நீங்கிய தீர்த்தம், கோயிலின் முன் மண்டபத்தில் பல்லவ சிங்க ஸ்தம்பங்கள் இருக்கின்றன. உள் பிராகாரத்துக் கோபுரம் முற்றிலும் கருங்கல்லாலாயது. கோயில் மூன்றும் குலோத்துங்கள் (1178-1216) காலத்தில் புதுப்பிக்கப் பட்டதென்பர். கோயிலுக்கு முன் யமனுடைய சிலையிருக்கிறது. தென்மேற்கு மூலை மண்டபத்தில் சப்தமாத்ருக்கள் சிலைகளிருக்கின்றன. இக்கோயில் பூர்வகாலத்தில் ஸ்ரீரங்கத்தைப்போல் 7 பிராகாரங்களுடையதாயிருந்ததாம். இந்திரனுடைய யானையாகிய ஐராவதம் சாபம் நீங்கியபடியால்

ஐராவதேஸ்வரர் என்று ஸ்வாமிக்கு திருநாமம். குளம் 228 அடி சதுரம். இதற்கு காவிரியிலிருந்து ஒரு வாய்க்கால் வழியாக ஜலம் கிடைக்கிறது. யமனுடைய சாபம் நீங்க பரமசிவம் தனது சூலத்தையெறிந்து இக்குளத்தையுண்டாக்கியதாக ஐதீகம். இங்கு ஐராவதம், துர்வாசரால் கருப்பாகும்படி சபிக்கப்பட்டது, அந்நிறம நீங்கி, பழைய வெண்மைநிறம் பெற்றதாக ஸ்தலபுராணம். துவஜஸ்தம்பத்தின் அருகிலுள்ள வினயகர் கோயிலின் மூன்று படிகளை முறையே தட்டினால் மூன்றுவிதமான ஸ்வரங்கள் பேசுகின்றன. இங்குள்ள அலங்கார மண்டபம் மிகவும் அழகிய சித்திர வேலைப்பாடுடையது. தெற்கு பிரகாரத்தில் சரஸ்வதி ஆலயமிருக்கிறது. வடமேற்கிலுள்ள வசந்த மண்டபம் அழகிய சில்பங்கள் அமைந்தது. அம்மன் கோயில், ஸ்வாமி கோயிலுக்கு வடக்கிலுள்ளது. இவ் விரண்டு கோயில்களையும் சுற்றி முற்காலம் பெரிய பிரகாரம் இருந்திருக்கவேண்டும். அம்மன் சந்நிதியிலுள்ள தூண்களை பார்க்கத்தக்கவை. இங்குள்ள கல்வெட்டொன்றில் 1018-1022-ல் ஆண்ட ராஜராஜன் எனும் சோழ அரசன் பம்பாய் ராஜதானியிலிருந்து ஒரு விக்ரஹத்தைக் கொண்டுவந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இக்கோயிலுக்கு பழைய பெயர் ராஜ ராஜேஸ்வரம் என்று ஒரு கல்வெட்டினால் அறிகிறோம். இப்பெயர் சுருக்கமாய் ராராசுரம் என்று செதுக்கப்பட்டிருக்கிறது. பிறகு ராராசுரம், தாராசுரம், என்றாயதென்பர். மெகென்ஜி (Mackenzi) கையேடுகளில் பழையகாலத்தில் இங்கு ரிஷப வாஹன உற்சவம் நடந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. இக்கோயிலின் கர்ப்பக்கிரஹத்திற்கு வெளியில் வடக்குபக்கம் 63 நாயன்மார்களுடைய சரித்திரம் சில்பத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. இக்கோயிலிலுள்ள அர்த்தநாரீஸ்வரருக்கு 8 கைகளுண்டு. பெரிய உற்சவம் ஆவணிமாதம்.

தாருகாபுரம் :—திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். சிவலிங்கம் அப்புலிங்கம் எனப்படுகிறது.

தாருகாவனம் :—இங்கு ஒரு ஜோதிலிங்கம் இருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது.

தால்குணடா :—மைசூர் ராஜ்யம், ஷிமோகா ஜில்லா, ஷிகார்பூர் தாலூகா, பிரணவேஸ்வரர் கோயில், பிரம்மாவி

ஞல் கட்டப்பட்டதென்பது ஐதீகம். இங்கு 5 முக்கிய லிங்கங்கள் உள; இவை பிரம்மா, இந்திரன், சந்திரன், யமன், அக்னியால் பூஜிக்கப்பட்டனவாம். கோயில் 450 வருடங்களுக்குமுன் இருந்ததென டார்டர் சிருஷ்ணு எண்ணுகிறார். சதவாஹனன் எனும் அரசன் இங்கு பூசித்ததாக சொல்லப்படுகிறது. இந்த காலகுண்டா சிவாலயம்தான் திராவிட சிலபமமைந்த ஆலயங்களில் மிகவும் பூர்வீகமானது என்று காலஞ்சென்ற நரசிம்மாசாரியார் எண்ணுகிறார்.

தாலகட்டா :—கிருஷ்ணு ஜில்லா, சென்னை ராஜதானி, காளமேஸ்வரர் கோயில் 1231-ம் வருடம் கட்டப்பட்டது.

தானிப்பரம்பா :—மலையாளம், சென்னை ராஜதானி, கண்ணனூருக்கு 14 மைல் வடக்கு சிவாலயம். இங்குள்ள சிவலிங்கம், பார்வதி தேவியாரால் அயோத்தி அரசனுக்கு ஆதியில் கொடுக்கப்பட்டதென்பர். பரசுராமர் இக்கோயிலைப் புதுப்பித்ததாகச் சொல்லப்படுகிறது. இங்குள்ள கோபுரங்கள் மஹம்மதியர்களால் சிதைவுண்டன; ஸ்வாமி தானிப்பரம்பா தம்பிரான், தேவி அன்னபூரணிதேவி.

தான்தன் :—மிட்னபூர் ஜில்லா, வங்காள ராஜதானி, பெங்கால்—நாக்பூர் ரெயில்வே ஸ்டேஷன் சிவாலயம். ஸ்வாமி - ஸ்யாமளேஸ்வர்—போஜராஜனல் இக்கோயில் கட்டப்பட்டதாம். கோயிலின் வாயிலில் நான்கு கால்களும் வெட்டப்பட்ட பெரிய நந்தியிருக்கிறது. இரண்டு தீர்த்தங்கள், வித்யாதர தீர்த்தம்-சசாங்க தீர்த்தம். இங்கு தர்ம சாலையுண்டு.

திங்களூர் :-வைப்புஸ்தலம். தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, திருப்பழனத்திற்கு ½ மைல், திருவையாறுக்கு 2 மைல். திருப்பழனக்கோயில்போல் கட்டப்பட்டது. செங்கல் கட்டடம், பாழடைந்திருக்கிறது. ஸ்வாமி விஷம்தீர்த்த நாதர், தேவி பூங்கோதை—காவிரி தீர்த்தம், அப்பூதி அடிகள் சரித்திர சம்பந்தமான ஸ்தலம்.

திட்டைக்குடி :—விருத்தாசலம் தாலூகா, தென் ஆர்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம், ஸ்வாமி வைத்யநாதஸ்வாமி, தேவி அம்பிகை. இவ்வூருக்கு

வசிஷ்டகுடி என்று பெயர் இருந்ததாம். இங்குள்ள நடராஜருடைய சபை அழகியது.

திண்டிவனம்:—தென் ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, இதன் சமஸ்கிருத பெயர் திண்திருணீவனம், புளிக்காடு எனப் பொருள்படும். சிவாலயம், ஸ்டேஷனுக்கு 1 பர்லாங்கிலுள்ளது. கல்வெட்டுகளில் ஸ்வாமி பெயர் திருத்திண்டீஸ்வரர் என்றிருக்கிறது; தேவி மரகதவல்லி. இங்குள்ள பல கல்வெட்டுகளில் ஒன்று 994-ம் வருடம் வெட்டப்பட்டதாம்; ஆகவே கோயில் 1000 வருடங்களுமுன் பட்டது. இங்கு சத்திரங்கள் உண்டு; முசாபர் பங்களாவும் உண்டு.

திண்டுக்கல்:—சென்னை ராஜதானி, தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன். காளத்தீஸ்வரர் கோயில்-கிரிசர். இங்கு இரண்டு பெரிய சத்திரங்கள் உண்டு; முசாபர் பங்களாவும் உண்டு.

தித்தாண்டதாளம்:—(?) தித்தாளம் என்றும் பெயருடையது. ராமநாதபுரம் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம் மிகவும் பழையது. பண்டித சோழராஜாவால் கட்டப்பட்ட தென்பர். ஸ்வாமி ஸ்ர்வதீர்த்தமுடையார்.

திம்மலாபுரம்:—பல்லாரி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். இங்குள்ள கல்வெட்டொன்றால் கோயில் ராமப்பையர் என்பவரால் கட்டப்பட்டதாக அறிகிறோம். கிற்காலம் பூஜையில்லை. இங்கு கோட்டைக்குள் மல்லிகார்ஜுனர் கோயில் என்று மற்றொரு சிவாலயமுண்டு.

திமிலா:-விசாகபட்டணம் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி நக்னேஞ்வரர் (நக்னம் = நிர்வாணம்) அகஸ்தியருக்கு ஸ்வாமி வஸ்திரமின்றி தரிசனம் அளித்ததாக ஐதீகம்.

தீராட்சராமம்:—கோதாவரி ஜில்லா, சென்னை ராஜதானி, ராமச்சந்திரபுரத்திற்கு 5 மைல் தென்கிழக்கு, கட்சன் இங்கு யாகம் செய்ததாக ஐதீகம். ஆகவே இதற்கு

தட்ச தபோவனம் என்று பெயர் உண்டு. சிவாலயம்—லிங்கம் 12 அடி உயரம். இது ஆரிய பிரதிஷ்டை என்பர். இங்கு வியாசர் பிரதிஷ்டைசெய்த மற்றொரு லிங்கமுமுளது. ஸ்வாமி பீமேஸ்வரர், தேவி மாணிக்க அம்மாள். சப்த ரிஷிகள் பூசித்த க்ஷேத்திரம். தீர்த்தம்-சப்த கோதாவரி, ருத்திர தீர்த்தம். ஆலயம் சோழக் கட்டிடம்; ஆயினும் சில சாளுக்கிய தூண்கள் உள. இவ்வூருக்கு தென்காசி என்றும் பெயர். கோயிலில் 1055-ம் வருடம் ஆண்ட ராஜ ராஜன் காலத்திய கல்வெட்டொன்றுளது.

திரிசந்தி :—வட இந்தியா சிவாலயம். நைமிசாரண்யத்திற்கருகிலுள்ளது. ஸ்வாமி திரியம்பகர், சுயம்புலிங்கம்.

திரிசூலம் :—சைதாப்பேட்டை தாலூகா, செங்கல்பட்டு ஜில்லா, சென்னை ராஜதானி. சிவாலயம்-ஸ்வாமி தர்ம புரீஸ்வரர். கல்வெட்டுகளில் ஸ்வாமி பெயர் திருச்சுரமுடைய நாயனார் என்றிருக்கிறது.

திரிபுவனம் :—தென் இந்தியா ரெயில்வே ஸ்டேஷன், சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, திருவிடைமருதூருக்கு அருகாமையிலுள்ளது. இங்கு சோழப் பிரம்மஹத்தி நீங்கின சோழன் ஸ்வாமியின் கட்டளையால் திரும்பிப்பார்த்த இடமாகையால் திரிபுவனம் என்று பெயர் வந்ததென்பர். கோயில் 12-ம் நூற்றாண்டில் மூன்றாவது குலோத்துங்க சோழனால் கட்டப்பட்டது. இவரது பட்டப்பெயர் திரிபுவனவீர தேவர், அதனின்றும் திரிபுவனம் என்றும் வந்திருக்கலாம். ஸ்வாமி கம்பஹரேஸ்வரர், (நடுக்கத்தைத் தீர்த்தவர் என்று பொருள்படும்) தேவி அறம் வளர்த்த நாயகி. கர்ப்பக் கிரஹத்திற்குப் போவதற்கு மிகவும் நீண்டதான மண்டபத்தைக் கடந்து செல்லவேண்டும். இங்கு பரமசிவத்தின் சரபாவதாரத்திற்கு மூலவிக்ரஹமும், உற்சவ விக்ரஹமுமுண்டு. தர்மபுர ஆதீனத்திலடங்கியது. பங்குனி மாதம் பெரிய உற்சவம். தீர்த்தவாரி வீர சோழன் ஆற்றில் விசேஷம்.

திருக்கட்டளி :—தென் இந்தியா, திரு + கல் + தளி = கற்கோயில். புதுக்கோட்டைக்கு 2 மைல் கிழக்கு, சிவாலயம்.

திருச்சுழி :—ராம்நாத் ஜில்லா, தென் இந்தியா, சென்னை ராஜதானி, சிவாலயம், ஸ்வாமி ஸ்ரீதனநாதர், தேவி துணை மலையம்மன். கௌதமர், நந்திகேஸ்வரர், பூசித்த ஸ்தலம். கோயிலின் 8 திக்குகளிலும் 8 லிங்கங்கள் உள. பிரபல மான கோயில்—வருஷத்தில் 3 பிரம்ம உற்சவங்கள் உண்டு. சூலதீர்த்தம், பூமிதீர்த்தம், ஞானவாபி, திரிலோசன தீர்த் தம், முதலிய 9 தீர்த்தங்கள் உள. இங்கு அருகில் மற்றொரு சிவாலய முண்டு. ஸ்வாமி பெயர் சிவகாளேஸ்வரர்.

திருக்கோணமலை :—திரிகோண மலையெனவும் வழங்கப் படுகிறது. இலங்கைத் தீவில் கிழக்குக் கரையிலுள்ளது. சிவஸ்தலம். பழையகாலத்தில் இங்கிருந்த ஸ்வாமிக்கு கோணேசர் என்று பெயர். கி. பி. பத்தாம் நூற்றாண் டிற்குப்பின் சோழ அரசர்கள் இங்கு ஒரு பெரிய சிவால யத்தைக் கட்டிவைத்தனர். அதற்கு முன்பு இங்கிருந்த புராதன சுயம்புலிங்கம் அந்தர்த்தானமானதாக சரித்திர வரலாறு. திருஞான சம்பந்தர் இந்த ஸ்தலத்தைப்பற்றி பாடியுளார். ஆகவே சிவாலயம் கி. பி. 650 வருஷத்திற்கு முந்தி யிருந்திருக்கவேண்டும். லிங்கம் ராவணேஸ்வரனால் கைலையிலிருந்து கொண்டுவரப்பட்டது என்பது புராண வர லாறு. பூகைலாஸ் என்னும் கதையைப்போன்ற கதை; திருமால் பிராம்மண வடிவத்துடன் ராவணனை வஞ்சித்து அந்த லிங்கத்தைப் பெற்று இங்கு அதைப் பிரதிஷ்டை செய்ததாக வரலாறு. 17-ம் நூற்றாண்டில் ஐரோப்பியர் களால் இக்கோயில் பாழாக்கப்பட்டது. அக்கோயிலில் 7 நிலைகளுடைய கோபுரம் இருந்ததாகச் சொல்லப்பட்டிருக் கிறது. தற்காலம் ஸ்வாமிமலை எனும் பிரடரிக் கோட்டைக் குள் மலைச்சாரிவில் ஒரு முக்கோணமான மாளிகையில் கோணேசலிங்கம் இருக்கிறது. இதற்கு நேராயுள்ள மலையி லிருந்தே இப்பொழுது சோம சுக்கிரவாரங்களில் இதற்கு பூஜை நடக்கிறது. இந்திரன் பூஜித்த ஸ்தலம். இதற்கு தட் சிண கைலாசம் என்று பெயர் உண்டு. ஸ்வாமி கோணேசர் தேவி மாதுமையாள் அம்மை. கௌரி தீர்த்தம், வாயுவினால் பறித்துத் தள்ளப்பட்ட மேருவின் மூன்று சிகரங்களுள் இது ஒன்றும். (மற்ற இரண்டு திருக்காளத்தி, திருச்சிரா மலை). இதற்கு 10 மைல் தூரத்தில் தம்பிலகாமம் எனும் இடத்தில் சிவாலயமுண்டு.

திருச்சாற்றுறை :—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜ தானி, உடையவனேஸ்வரர் கோயில்.

திருச்சானூர் :—வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜ தானி. இது சிறுத்தாணூர் என்றும் வழங்கப்படுகிறது. சிவாலயம் ஊரின் மேற்குபாகம் உள்ளது. இப்பாகத்திற்கு போகிமங்கலம் என்று பெயர். ஸ்வாமி பெயர் திப்பலா தீஸ்வரமுடைய மஹாதேவர் என்று கல்வெட்டுகளில் இருக் கிறது. தற்காலம் ஸ்வாமி பெயர் பராசரேஸ்வரர் என்று வழங்கப்படுகிறது. இவ்வூருக்கு கல்வெட்டுகளில் பழைய பெயர் திருச்சோகினூர் என்றிருக்கிறது. பழைய கோயில்; சுமார் 1000 வருடங்களுக்கு முற்பட்டது.

திருச்சுனை :—கருங்காலக்குடி என்றும் பெயர் உளது. மதுரை ஜில்லா, மேலூர் தாலூகா, சென்னை ராஜதானி, மேலூருக்கு 8 மைல். சிவாலயம் ஒருசிறு குன்றின்மீதுளது. ஸ்வாமி அகஸ்தீஸ்வரர்.

திருச்சூர் :—கொச்சி தேசத்தின் தலைநகர். சிவாலயம் மலையாள தேசத்திலுள்ள சிவாலயங்களுக்குள் மிகவும் பிரபலமானது. விசாலமான கோபுரங்களுடையது. இங்கு கூத்தம்பலம் எனும் சபாமண்டபம் உளது, பெரும்பாலும் மரத்தாலாயது—வடக்குநாதர் கோயில். ஸ்வாமி வடக்கு நாதர், தேவி பார்வதி, பரசுராமர் பூசித்த ஸ்தலம். பெரிய உற்சவம் சித்திரை மாதம். சிவராத்திரி மிகவும் விசேஷம். கேரள தேசத்தில் இதுதான் மிகவும் புராதனமான கோயில். இங்கு மூசாபர் பங்களா உண்டு.

திருத்தணிகை :—வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜ தானி, ரெயில் ஸ்டேஷன். வீரட்டானேஸ்வரர் ஆலயம். ரெயில் ஸ்டேஷனுக்கு அருகாமையில் கிழக்கிலுள்ளது. கோயில் 9-ம் நூற்றாண்டின் கடைசியில் பல்லவ அரசன் அபராஜித் என்பவர் காலத்தில் இருந்த நம்பி அப்பி என் பவரால் கட்டப்பட்டது. பல்லவ சிற்பமமைந்தது. விமானம் 4½ கஜம் சதுரம்; கர்ப்பக்கிரஹம் சதுரம்; மேல்பாகம் கஜப்பிரஷ்ட ஆகிருதி; கிழக்குபார்த்தது; ஜன்னல்கள் இல்லை; போதிக்கட்டைகள் வளைவு உடையன. லிங்கத்தின்

பின்புறம் சோமா ஸ்கந்தமூர்த்தி செதுக்கப்பட்டிருக்கிறது. கோயில் முழுவதும் கருங்கற் கட்டிடம்.

திருத்துருத்தி :—மாயவரத்தருகிலுள்ளது. தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்.

திருத்தான் தோன்றீசம் :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, மாயவரத்துக் கருகிலுள்ளது. சிவாலயம், ஸ்வாமி சுயம்புநாதர், சப்தமாதருக்களி லொருத்தியாகிய பிராமி பூசித்த ஸ்தலம்.

திருத்துறைபூண்டி :—திருத்தருபூண்டி சரியான பெயர். சென்னை ராஜதானி, (தரு = விருட்சம்) இதற்கு மற்றொரு பெயர் வில்வவனம் (திரு) சிவாலயம். ரெயில் ஸ்டேஷன். தேவி கமலாம்பாள், ஸ்வாமி வில்வவனேசர்.

திருந்து தேவன்குடி :—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, திருவிடைமருதூருக்கு 4 மைல் வடமேற்கு. ஊர் அழிந்துவிட்டது, கோயில்மாத்திரம் இருக்கிறது. சிவாலயம், ஸ்வாமி கர்க்கடேஸ்வரர், தேவி அருமருந்தம்மை; பங்கய தீர்த்தம். கோயிலைச்சுற்றி ஒரு தடாகம் உண்டு. நண்டு பூசித்து முத்தியடைந்த க்ஷேத்திரம் (கர்க்கடகம் = நண்டு) லிங்கத்தின் உச்சியில் நண்டு உருவம் காணப்பெறும். திருஞான சம்பந்தர் பாடல்பெற்றது. குதிரை பூசித்து முத்தி பெற்ற ஸ்தலம்.

திருநக்கரா :—இது திருணைகரா எனவும் அழைக்கப் படுகிறது. திருவாங்கூர் ராஜ்யம், சிவாலயம்.

திருநின்றவூர் :-சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, லட்சுமிபுரீஸ்வரர் கோயில்.

திருப்பத்தூர் :—சேலம் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி காளத்தீஸ்வரர்.

திருப்பத்தூர் :—திருச்சிராப்பள்ளி ஜில்லா, முசிறி தாலூகா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி கைலாசநாதர், புலிபாச்சி தீர்த்தம். பங்குனிமாதம் சூரியபூஜை. இங்கு கருங்கல்லாலாகிய ரதம் உண்டு.

திருப்பத்தூர் :—வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, ரெயில் ஸ்டேஷன், சிவாலயம். ஸ்வாமி பிரம்மேஸ்வரர், தேவி பிரஹந்நாயகி, பிரம்மோற்சவம் பங்குனி மாதம். பிரம்மா பூஜித்த ஸ்தலம், ஆகவே இதற்கு பிரம்மபுரி என்றும் பெயர் உளது.

திருப்பத்தூர் :—லால்குடி தாலூகா, திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி, பிட்சாண்டார் கோயிலிருந்து 12 மைல். கோயில் பல்லவ கட்டிடம். ஸ்வாமி திருத்தளிநாதஸ்வாமி.

திருப்பதி :—வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, கபிலேஸ்வர் கோயில், கபில தீர்த்தம். மலையின் கீழ்பாகம் கோயில். இது ராயன் ராஜேந்திர சோழன் அல்லது பிரம்மராயன் முனயதரயன் என்பவரால் கட்டப்பட்டது. திருப்பதிக்கு 1½ மைல் தூரம். கோயிலில் 1013—1045-ம் வருடத்தில் ஆண்ட ராஜேந்திர சோழன் காலத்திய கல் வெட்டொன்றுளது. கபில தீர்த்தம் தற்காலத்தில் ஆழ்வார் தீர்த்தம் அல்லது சங்கு தீர்த்தம் என வழங்கப்படுகிறது. சிவதீர்த்தமாயிருந்தது, 1531-ம் வருடம் விஜயநகரத்தரசர் ஒருவரால் வைஷ்ணவ தீர்த்தமாக மாற்றப்பட்டது. கல் வெட்டுகளில் ஸ்வாமி பெயர் கபிலேஸ்வரமுடைய நாயனார் என்றிருக்கிறது. திருப்பதி மேலமலைக் கோயிலும் ஆதியில் சிவாலயமாயிருந்ததென்பர். ஸ்டுவர்ட் என்பவர் எழுதிய டில்டிரிக்ட் மான்யுவல் புஸ்தகத்தில் ஆதியில் இக்கோயில் சைவகோயிலாயிருந்ததெனக் கூறியிருக்கிறார். ராமானுஜர் இதை வைஷ்ணவ ஆலயமாக மாற்றியதாக எண்ணக் காரணங்கள் உள. பூர்வீக சிவாலயம் தொண்டைமான் சக்கரவர்த்தியால் கட்டப்பட்டதென்பர். மூல விக்ரஹத்திற்கு ஜடையும், சர்ப்பாபரணமும் நெற்றிக்கண்ணும் உண்டு. தற்கால மிருக்கும் சங்கு சக்கரங்கள் தொடுப்புகள் என்பர்.

திருப்பரப்பு :—திருவாங்கூர் ராஜ்யம், சிவாலயம்.

திருப்பறையாறு :—திருவாங்கூர் ராஜ்யத்தில் வடக்கு பாகத்திலுள்ளது, சிவாலயம்.

திருப்புடைமருதூர் :—சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா. சிவாலயம், ஸ்வாமி புடார்ச்சுன புரேஸ்வரர்,

நாறும்பூநாதர், தேவி மங்கைநாயகி, கோமதி; தாம்ரபர்ணி தீர்த்தம், லிங்கம் சாய்ந்திருக்கிறது. தைமாதம் பிரம்மோற் சவம் ; தைப்பூசம் விசேஷம்.

திருப்புத்தூர் :—சென்னை ராஜதானி, ஜோலார்பேட் டைக்கு 5 மைல்; ரெயில் ஸ்டேஷன்; சிவாலயம், ஸ்வாமி புற்றீசர், தேவி நாகம்பாள்.

திருப்பூர் :-சென்னை ராஜதானி, கோயமுத்தூர் ஜில்லா, அவிநாசிக்கு 9 மைல், சிவாலயம்-ரெயில் ஸ்டேஷன்.

திருப்பூர் :—புதுக்கோட்டை சமஸ்தானம், சிவாலயம். இங்கு மூசாபர் பங்களா உண்டு.

திருப்பேர் :—பொன்னேரி தாலூகா, சென்னை ராஜ தானி, ஸ்ரீ வரமூர்த்தி ஈஸ்வரர் கோயில்.

திருமலை :—திருவாங்கூர் ராஜ்யம், கோசக்கோடை சிவாலயம்.

திருமுக்கூடல் :—செங்கல்பட்டு ஜில்லா, சென்னை ராஜ தானி, சிவாலயம். இங்கு ஸ்வாமி பாணினிக்கு வியாகர்ணம் கற்பித்ததாக ஐதீகம்.

திருவங்கர தேசம் :—கொச்சி ராஜ்யம், சிவாலயம்.

திருவடிகுலம் :-செங்கல்பட்டுக் கருகிலுள்ளது. சென்னை ராஜதானி, சிவாலயம் மிகவும் பழையது. குறும்பர் காலத்தி லிருந்து பூசிக்கப்பட்டதென்பர்.

திருவடிக்கிராமம் :—கூடலூர் தாலூகா, சென்னை ராஜ தானி, தென் ஆற்காடு ஜில்லா, சிவாலயம், ஸ்வாமி வீரட் டானேஸ்வரர்.

திருவரங்குளம் :—புதுக்கோட்டை சமஸ்தானம், சிவா லயம். திரு ஆரூர் கோயில் முறைகளெல்லாம் இங்கு அனு சரிக்கப்படுகின்றன. ஸ்வாமி ஹரி தீண்டேஸ்வரர்(?) ஹரி தீர்த்தம்.

திருவள்ளூர் :—மேல்படி தாலூகா, ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, ரெயில் ஸ்டேஷன், சிவாலயம் பெரிய

குளக்கரையின் ஒரு பக்கம் உளது. ஸ்வாமி தீர்த்தஈஸ்வரர் திரு + எவ்வளூர் = திருவள்ளூர் என்றாயது. பண்டிட் நடேச சாஸ்திரியார் அவர்கள், இங்குள்ள பெரியகுளம் ஆதியில் இச்சிவன் கோயிலைச் சார்ந்ததென்பர்.

திருவாங்கோடு:—ஸ்ரீ + வாழும் + கோடு, பத்மநாபபுரம் பிரிவு. திருவாங்கூர் ராஜ்யம். முற்காலத்தில் இது சில காலம் ராஜதானியாயிருந்தது. இங்கு ஒரு பழைய சிவாலய முளது.

திருவாசி :—திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜ தானி, ஸ்ரீரங்கத்தின் அருகிலுள்ளது. சிவாலயம், ஸ்வாமி சர்மிவனேஸ்வரர்.

திருவிசை நல்லூர்:-கும்பகோணம் தாலூகா, தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி. சிவாலயம், ஸ்வாமி சிவ யோகநாதஸ்வாமி.

திருவிழாய் :—திருவாங்கூர் ராஜ்யம், சிவாலயம்.

திருவேத்தூர் :-திரு + வேத + ஊர்-வடஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி. சிவாலயம், ஸ்வாமி வேதபுரீஸ்வரர். செய்யாறுக்கு வடக்கரையிலுள்ளது, திருஞான சம்பந்தர் சமணர்களை வென்ற இடம். கருங்கல்லாலாகியமரம் ஒன்று இங்குண்டு; 8 அடி உயரம்.

திருவக்கோடு:—மைசூர் ராஜ்யம், சிவசமுத்திரத்திற் கருகிலுள்ள சிவாலயம். ஸ்வாமி பிரம்மேசர், தேவி கம லாம்பாள், அஸ்வத்த விருட்சம், பிரம்மா பூசித்த ஸ்தலம். கபில நதி காவிரியில் சங்கமமாகுமிடம்.

திரூர் :—மலபார் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவா லயம். இதற்குத் திருக்கண்டியூர் கோயில் என்று பெயர். பரசுராமரால் கட்டப்பட்டதென்பது ஐதீகம். இங்கு மூசா பர் பங்களா உண்டு.

தில்லி :—வட இந்தியா ரெயில் ஸ்டேஷன், இந்தியா வின் பிரதான பட்டணம். இங்கு இராணி தோட்டம் எனும் இடத்தில் ஒரு சிவாலயமுண்டு. ஸ்டேஷனுக்கு ½ மைலில் ஒரு தர்மசாலையுளது.

தில்லைவிளாகம் :-தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன் ஸ்டேஷனுக்கு $2\frac{1}{2}$ மைலில் கோயில். இங்கு சுமார் 50 வருடங்களுக்குமுன் அழகிய நடேசர் விக்ரஹம் வயலில் கண்டெடுக்கப்பட்டது; இதற்கு தற்காலம் ஒரு சிவாலயம் கட்டப்பட்டிருக்கிறது.

திலதைப்பதி :—(திரு) இதற்கு மதிமுத்தம் எனும் பெயர் உண்டு. பேரளம் ஸ்டேஷனிலிருந்து 3 மைல், பூந்தோட்டத்திற்கு 1 மைல் மேற்கு, சென்னை ராஜதானி. சந்திரன் பூசித்த ஸ்தலம். மதிமுத்தம் என்பது, ராம லட்சுமணர்கள் தசரதருக்கு திலதர்ப்பணம் செய்தபடியால் திலதைப்பதி என்றுயதென்பர். இங்கு பிதுர்களுக்கு தர்ப்பணம் விசேஷம். ஸ்வாமி முத்தீஸ்வரர், மதிமுக்த நாதேஸ்வரர், தேவி பொற்கொடியம்மை. சந்திர தீர்த்தம்.

திலிவள்ளி :—தார்வார் ஜில்லா, சாந்தேஸ்வரர் கோயில், சிவாலயம் கிராமத்தின் மத்தியிலுள்ளது. சளுக்கிய சில்பம்.

திலாஸ்மா :—ராஜபுதனத்திலுள்ளது. சிவாலயம், மெய்சர்வேஷ்வர், 11-ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.

தியோகர் :—(தேவகிரஹம் ?) வட இந்தியா, சிவாலயம் இங்குள்ள தட்சிணமூர்த்தி அழகியது.

தின்னனூர் :-திருநின்றவூர், சென்னை ராஜதானி, தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன். இங்கு பழைய சிவாலயம் ஒன்றுளது. சோழக் கட்டிடம்; கஜப்பிருஷ்ட ஆகிருதி. சமீபகாலத்தில் புதுப்பிக்கப்பட்டது, சில கல்வெட்டுகள் உள. ஸ்வாமி ஹிருதயாலீஸ்வரர், தேவி மரகதவல்லியம்மன், சித்திரை மாதம் விருஷபவாஹன உற்சவமும், அதிகார நந்தி சேவையும் மாத்திரம் தற்காலம் நடக்கின்றது.

தினை :—பாலக்காடு தாலுகா, மலபார் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்.

தினைநகர் :-(திரு) தீர்த்தநகர் எனவும் வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி, ஆலம்பாக்கம் ஸ்டேஷனுக்கு 5 மைல் தென்மேற்கு, பரங்கிப்பேட்டை ஸ்டேஷனிலிருந்து

7 மைல். மறை முனிவர் பூசித்த ஸ்தலம். சிவாலயம், ஒரு பஞ்சம பக்தன் அருள்பெற்ற ஸ்தலம். ஸ்வாமி திருந்தீஸ்வரர், தேவி ஒப்பிலா நாயகி; திருந்து தீர்த்தம்—சாம்பவ தடாகம், மணிமுத்தா நதி, ஸ்வாமி பள்ளனுகிய பக்தனுக்காக தினவிளைத்து பழுக்கும்படிச் செய்தபடியால் தினை நகர் எனப் பெயர் பெற்றது. சுந்தரர் பாடல் பெற்றது. கோயில் சிறியது. ஸ்வாமிக்கு சிறந்த நிவேதனம் தினையமுது.

தீப்தா :—வட இந்தியா, மஹாதேவர் கோயில், சுயம்பு லிங்கம்.

தீர்த்தஹரி :—தென் ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, கடலூர் தாலூகா, சிவாலயம், சிவன்குரேஸ்வரர் கோயில், தீர்த்தகுளம்.

தீர்த்தஹல்லி :—மைசூர் ராஜ்யம், ஷிமோகா ஜில்லா, ஷிமோகா ரெயில் ஸ்டேஷனுக்கு 30 மைல். சங்கமேஷ்வர் கோயில். இங்கு சந்திரமுண்டு.

துடியலூர் :—கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, பழைய சிவாலயம். ஸ்வாமி விருந்தீஸ்வரர்.

தும்கூர் :—மைசூர் ராஜ்யம் ரெயில் ஸ்டேஷன்; சிவாலயம்.

துருவெகெரே :—திப்பூர் தாலூகா, தும்கூர் ஜில்லா, மைசூர் ராஜ்யம். இங்குள்ள கோயிலுக்கு கெவிகெங்காதரீஸ்வரர் கோயில் என்று பெயர். இங்குள்ள நந்தி பெரியது. சோமநாதரால் கட்டப்பட்டது.

துவாரகை :-வட இந்தியா, இங்கு ஒரு சிவாலயம் உண்டு. இதற்கருகில் இந்துசாகர சங்கமம் எனும் இடத்திலும் ஒரு சிவாலயமுளது. ஸ்வாமி சங்கமேஸ்வரர்.

துறையூர் :-திருச்சிராப்பள்ளி ஜில்லா, முசிறி தாலூகா, சென்னை ராஜதானி. இங்கு இரண்டு கோயில்கள் உள. நந்திகேஸ்வரஸ்வாமி கோயில், காசிவிஸ்வநாதஸ்வாமி கோயில்.

துறையூர் :—சென்னை ராஜதானி, விழுப்புறத்திற்கு அருகிலுள்ளது. சிவாலயம், ஸ்வாமி சட்டநாதீஸ்வரர் அல்லது சோமநாதீஸ்வரர்.

துறையூர் :—(திரு) திருத்தலூர், திருந்தலூர் எனவும் வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி, விரிஞ்சிபாக்கம் ஸ்டேஷனுக்கு 2 மைல் மேற்கு. பண்ணுருட்டி ஸ்டேஷனுக்கு 5 மைல் வடமேற்கு; சுந்தரமூர்த்திக்கு பரமசிவம் திருவடி சூட்டி குருவாயுபதேசம் செய்த க்ஷேத்திரம். நாரதமுனி பூசித்த ஸ்தலம். சிவஞான சித்தியார் இயற்றிய அருணந்தி சிவாசாரியார் அவதரித்து முத்திபெற்ற ஸ்தலம். சிவாலயம்—ஸ்வாமி பசுபதீஸ்வரர், தேவி பூங்கோதை நாயகி; பெண்ணை நதி—சுந்தரர் பாடல் பெற்றது.

தூத்துக்குடி :—சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா, ரெயில் ஸ்டேஷன்—சிவாலயம். ஸ்வாமி சங்கர ராமேஸ்வரர்.

தூர்வாசபுரம் :—திருமெய்யம் தாலூகா, புதுக்கோட்டை சமஸ்தானம், சென்னை ராஜதானி, சிவாலயம். லிங்கம் தூர்வாசரால் பிரதிஷ்டை செய்யப்பட்டதென்பது ஐதீகம். இங்குள்ள பைரவர் சந்நிதி விசேஷம்; இவருக்கு உப்பில்லாமல் வடை சாற்றுகிறது விசேஷம்.

தூர்வாசகல்லூர் :—சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா, திருநெல்வேலிக்கு 15 மைல். ஸ்வாமி காளத்தீசர், தேவி பூங்கோதை. காளதீர்த்தம்-தூர்வாசர் பூசித்தது.

தெக்கலகோட்டா :-பல்லாரி ஜில்லா, சென்னை ராஜதானி, அமரேஸ்வரர் கோயில்; மிகவும் சிலமாயிருக்கிறது; ஒரு கல்வெட்டினால் 1511-ம் வருடம் இது கட்டப்பட்டதென அறிகிறோம். கோயில் மண்ணால் மூடப்பட்டிருக்கிறது பெரும்பாலும்.

தெங்கூர் :—(திரு) தஞ்சாவூர் ஜில்லா, சென்னைராஜதானி, திருநெல்லிக்கா ஸ்டேஷனுக்கு 2 மைல் தென்மேற்கு. நவக்கிரஹங்கள் பூசித்த க்ஷேத்திரம். கோயில் பிராகாரத்தில் 9 லிங்கங்கள் இருக்கின்றன. ஸ்வாமி வெள்ளிமலைநாதேஸ்வரர், தேவி பெரியநாயகியம்மை. சிவகங்கை தீர்த்தம்—திருஞான சம்பந்தர்பாடல் பெற்றது.

தெண்டலூரு :—எல்லூர் தாலூகா, கோதாவரி ஜில்லா, சென்னை ராஜதானி, சோமேஸ்வரர் சிவாலயம். இவ்வூருக்கு ஆதிகாலத்தில் வெண்டலூரு என்று பெயர் இருந்ததாக துப்பறியில் துரை நினைக்கிறார்.

தெத்தி :—தென் இந்தியா, சென்னை ராஜதானி, நாகப் பட்டினத்திற்கு அருகிலுள்ளது. சிவாலயம், ஸ்வாமி அக்னீஸ்வரர்.

தெமுனிகுரப்பா :—பார்வதிபுரம் தாலூகா, விசாகபட்டணம் ஜில்லா, சென்னை ராஜதானி, ஸ்ரீ சோமேஸ்வரர் கோயில்.

தெள்ளாறு :-வந்தவாசி தாலூகா, வடஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி. சிவாலயம், ஸ்வாமி மூலேஸ்வரர்.

தெள்ளூர் :—வேலூர் தாலூகா, வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்.

தெளிச்சேரி :-(திரு) கோயிற்பத்து எனவும் வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி, பொறையார் ஸ்டேஷனுக்கு 1 மைல் வடமேற்கு. சிவாலயம், ஸ்வாமி பார்வதீஸ்வரர், தேவி சத்தியாம்பாள். சத்தி தீர்த்தம். பார்வதி தேவி தவஞ்செய்த ஸ்தலம். அர்ஜுனனுடன் சண்டையிட்டு பரமசிவம் வில்லடி பட்ட ஸ்தலம் என்றும் சொல்லுவர். திருஞான சம்பந்தர் புத்த நந்தியை வென்ற ஸ்தலம். திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது. ஸ்வாமிக்கு பங்குனி மாதம் 5-ம் தேதி முதல் 10 நாள் சூர்யாபிஷேகம்.

தென்கரை :-நிலக்கோட்டை தாலூகா, மதுரை ஜில்லா, சென்னை ராஜதானி, சோழவந்தான் ஸ்டேஷன் அருகிலுள்ளது. சிவாலயம், இதற்கு ஆதிசிதம்பரம் என்றும், வில்வாரண்ய க்ஷேத்திரம் என்றும் பெயர்—ஸ்வாமி ஸ்ரீ மூலநாதர். தேவி அகிலாண்டேஸ்வரி. கோயில் வைகைக்கு அக்கரையிலுள்ளது.

தென்கரைக் கோட்டை :—சேலம் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம் கிலமாயிருக்கிறது.

தென்காசி :—சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா, ரெயில் ஸ்டேஷன். சிவாலயம், ஸ்வாமி விஸ்வநாதர், தேவி அன்னபூரணி; சுந்தரேஸ்வரர், லோகநாயகி. பெரிய கோயில், கோபுரம் 9 நிலையுடையது; சுமார் 100 வருடங்களுக்கு முன் தீப்பற்றி நடுவெல்லாம் அழிந்துபோயிருக்கிறது. இங்குள்ள பெரிய மண்டபத்தில், வீரபத்திரர், அகோர வீரபத்திரர், மன்மதன், ரதி, 2 நடனமாதர், நடராஜர், கிருஷ்ணன், பைரவர், பிரதோஷ நடராஜர், சட்டநாதர், தர்மராஜன், கர்ணன், காளி, ஊர்த்துவ தாண்டவமூர்த்தி, முதலிய சிலைகள் பார்க்கத் தக்கவை. இவை 16-ம் நூற்றாண்டிய சில்பங்களென்று புரொபசர் ஹிராஸ் எண்ணுகிறார். கோயில் காசி பராக்கிரம பாண்டியனால், 1446-ம் வருடம் ஆரம்பிக்கப்பட்டு, அரிகேசரி பராக்கிரம பாண்டியனால் 1463-ம் வருடம் கட்டி முடிக்கப்பட்டது. இங்கு லட்சுமி கணபதி, சிலையுண்டு. பிரம்மோற்சவம் மாசிமாதம்.

தென்கரையூர் :-சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, திரு ஆரூருக்கு அருகிலுள்ளது. சிவாலயம், ஜட்டி முதலியார்களால் கட்டப்பட்டது. வாளிநதியின் தென்கரையிலுள்ளபடியால் தென்கரை எனப் பெயர்பெற்றது.

தென்காட்டூர் :—(தேவூர் எனவும் வழங்கப்படுகிறது ?) தென் இந்தியா, சென்னை ராஜதானி, சிவாலயம், ஸ்வாமி தேவகிவிநாதேஸ்வரர், தேவி மதுரபாஷிணியம்மை. பிரஹஸ்பதி தீர்த்தம், வாழை விருட்சம், பிரஹஸ்பதி பூசித்த க்ஷேத்திரம்.

தென்குடித்திட்டை :—(திரு) இதுவே திட்டை யென்பதாம். தஞ்சாவூர் ஜில்லா; தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன்-சிவாலயம். கௌதமர், ஆதிசேஷன், காமதேனு பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமி பசுபதீஸ்வரர், தேவி உலகநாயகியம்மை. சக்கர தீர்த்தம். திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது.

தென்மலை :—திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்-ஆகாயலிங்கம்.

தென்வாடானை :-சென்னை ராஜதானி, ராமநாத் ஜில்லா, ராமநாதபுரம் ஸ்டேஷனுக்கு 22 மைல். சிவாலயம், ஸ்வாமி ஆதிரத்னேஸ்வரர், தேவி அபயவல்லி.

தென்னிலை :—கோயமுத்தூர் ஜில்லா, கரூர் தாலூகா, சென்னை ராஜதானி, பழைய சிவாலயம்.

தென்னேரி :—காஞ்சீபுரம் தாலூகா, செங்கல்பட்டு ஜில்லா, சென்னை ராஜதானி, வாலாஜாபாத் ரெயில் ஸ்டேஷனுக்கு 5 மைல் வடக்கு. சிவாலயம், ஸ்வாமி ஆபத்சகாயேஸ்வரர்; கோயிலில் கல்வெட்டுகள் உள; அவைகளில் ஸ்வாமி பெயர் திருவநந்தீசுரமுடையார் என்றிருக்கிறது. இங்கு இன்னொரு சிவாலயமுண்டு அதற்கு காந்தளீஸ்வரர் எனப்பெயர். ஆலயம் சிலமாயிருக்கிறது. இதன் கல்வெட்டுகளில் ஸ்வாமி பெயர் உத்தம சோழ ஈஸ்வரமுடையார் என்றிருக்கிறது.

தெனலி :—கிருஷ்ணை ஜில்லா, சென்னை ராஜதானி, ராமலிங்கேஸ்வரஸ்வாமி கோயில.

தேவக்கோட்டை :—ராம்நாத் ஜில்லா, சென்னை ராஜதானி. புதிய தேவாலயம்; நாட்டுக்கோட்டை செட்டிமார்களால் கட்டப்பட்டது.

தேவதாருவனம் :—வட இந்தியா, நைமிசாரணயத்திற்கு அருகிலுள்ளது. சிவாலயம, ஸ்வாமி தண்டீசர், தேவி உமாதேவி.

தேவகிரஹம் :—(தியோகர்) கிழக்கு இந்தியா ரெயில் ஸ்டேஷன். சாந்தாள் பர்கனவில் இருக்கிறது. இங்கு 22 சிவாலயங்கள் இருக்கின்றன. இவற்றுள் மிகவும பழமையானது 'வைத்யநாத்' கோயிலாம். வடக்கு இந்தியாவிலுள்ள 12 முக்கிய லிங்கங்களில் இது ஒன்றாகும். சிவராத்ரி விசேஷம். ஸ்டேஷனுக்கு ½ மைல் தூரத்தில் 2 சத்திரங்களுண்டு.

தேவிகபுரம் :—ஆரணி தாலூகா, வட ஆற்காடு ஜில்லா, தென் இந்தியா, போளூர் ஸ்டேஷனுக்கு 9 மைல். சிவாலயம். களாகிரி என்னும் மலையிலுள்ளது. மலை சமுத்திர மட்டத்திற்கு 400 அடி உயரம். ஸ்வாமி களாகிரீஸ்வரர், தேவி பிரஹதாம்பாள், சுயம்புலிங்கம், பார்வதி பூசித்த

ஸ்தலம். கோயிலில் பல கல்வெட்டுகள் உள. கோயில் காடுவெட்டிய சோழனல் கட்டப்பட்டதாம். மலை அடிவாரத்தில் திருக்காமேஸ்வரர் கோயில் என்று மற்றொரு சிவாலயமூளது, சிறு கோயில். சோழ அரசன்மலை உச்சிக்குச் சென்று பூசித்துத் திரும்புமுன் கல்தச்சர்களால் கட்டப்பட்டதென்பர். கோயில் 20 × 11 அடி விஸ்தீரணம். ஒன்பதே கற்களாலாயது.

தேவி பட்டினம்:-இதற்கு நவபாஷாணம் என்றும் பெயர். ராம்நாத் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம் கடற்கரையிலுள்ளது. ஸ்வாமி திலகேஸ்வரர். கல்வெட்டுகளில் ஸ்வாமி பெயர் போகீஸ்வரமுடைய நாயனர் என்றிருக்கிறது. தேவி மகிஷாசுர மர்த்தனி.

தேனிமலை:—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்.

தையூர்:—சென்னை ராஜதானி, சிவாலயம், ஸ்வாமி குந்தேஸ்வரர், தேவி மரகதவல்லி. சந்திர புஷ்கரணி தீர்த்தம்.

தொட்டிக்கலை:—சென்னை ராஜதானி, ஆவடி ஸ்டேஷனுக்கருகிலுள்ளது; சிவாலயம், ஸ்வாமி சிதம்பரேசர், தேவி சிவகாமியம்பாள். சிவகங்கை தீர்த்தம். இவ்வூருக்கு கலசை யென்றும், கோவிந்த புரம் என்றும் பெயர்களுண்டு. பழய கோயில் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. வினயகருக்கு செங்கழுநீர்வினயகர் என்று பெயர். இங்கு தியேகேசர் சந்நிதியுண்டு; தியாகருக்கு கவசத்தியாகர் என்று பெயர். இங்கு திருவொற்றியூரிலிருப்பதுபோல் நந்தியாடையுண்டு. பிரம்மா பூசித்து அமிர்த கலசம் பெற்ற ஸ்தலம்.

தெளலேஷ்வரம்:—கோதாவரி ஜில்லா, சென்னை ராஜதானி, இங்கு 108 சிவாலயங்கள் பூமியின்கீழ் மறைந்திருப்பதாக ஐதீகம். கோதாவரி ஸ்டேஷனிலிருந்து 4 மைல். பெயர்பெற்ற ஸ்நான கட்டம், கோடிலிங்க ஸ்நான கட்டம் என்று பெயர். கோடிலிங்கங்கள் நதியின் கீழிருப்பதாக ஐதீகம். இங்கு அருகில் நாளம்வாரி தர்ம சத்திரம் ஒன்று உண்டு.

தொண்டமநாடு :-சென்னை ராஜதானி, காளஹஸ்திக்கு அருகிலுள்ள கிராமம். சித்தூர் ஜில்லா, சிவாலயம். கல் வெட்டுள்ளது.

தொட்டகட்டவல்லி :-மைசூர் ராஜ்யம், ஹசான் ஸ்டேஷனுக்கு 2 மைல் வடகிழக்கு. இங்குள்ள லட்சுமி கோயிலில், ஒரு சந்நிதியில் லிங்கப் பிரதிஷ்டையுளது. ஸ்வாமிக்கு பூதநடனர் (பூதநாதர்?) என்று பெயர். கோயிலைக்கட்டிய சில்பி மல்லோஜமணியோஜர்.

தோகூர் :—சென்னை ராஜதானி, திருச்சிராப்பள்ளி ஜில்லா, சிவாலயம்.

நக்தர் :—வட இந்தியா, உதயகிரி ராஜ்யம், சிவாலயம் மிகச்சிறியது. ஸ்வாமி மஹாதேவர்.

நகரி :—சித்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, அரக்கோணத்திலிருந்து 8 மைல் தூரம். ஸ்டேஷனிலிருந்து 5 மைல் தூரத்தில் சிவாலயம், ஸ்வாமி விஸ்வேஸ்வரர்; கோயில் கௌதம ரிஷியால் கட்டப்பட்டதென்பர். கோயிலுக்கு புக்கா கோயில் என்று பெயர். ஆலயத்தில் பரமசிவத்தின் விக்ரஹமும், விஷ்ணுவின் விக்ரஹமும் அக்கம் பக்கமாய் வைக்கப்பட்டிருக்கின்றன. கோயிலின் அருகில் பிரயாணிகளுக்கு வசதிகள் புதிதாய்க் கட்டப்பட்டிருக்கின்றன. இங்கு அருகிலுள்ள பஞ்சகங்கை நீர் வீழ்ச்சி பார்க்கத் தக்கது.

நகரி :—வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி கர்க்கடேஸ்வரர். இங்கு பார்வதி மண்டபத்தில் 13 கோயில்களுடைய ஸ்வாமிகள் வருஷத்திற்கு ஒருமுறை சந்திக்கின்றன.

நங்கைப்புரம் :—நங்கவரம் எனவும் வழங்கப்படுகிறது. திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி. சிவாலயம் சோழக்கட்டிடம். அரிஞ்சிகை எனும் சோழ அரச குமாரத்தியின் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டது. கோயிலில் ஜேஷ்டாதேவியின் விக்ரஹம் உளது. கல்வெட்டுகளில்

ஸ்வாமியின் பெயர் மரவனீஸ்வரர் என்றிருக்கிறது. ஸ்வாமி சுந்தரேஸ்வரர், தேவி கோமளேஸ்வரி.

நஞ்சன்கோடு :—நஞ்சுண்டவர் + கோடு = நஞ்சன்கோடு. மைசூர் ராஜ்யம். மைசூரிலிருந்து 16 மைல் தெற்கு. சிவாலயம், ஸ்வாமி நஞ்சுண்டேஸ்வரர், ஸ்ரீ கண்டேஸ்வரர், தேவி கிரிஜா. கபில தீர்த்தம். கோயில் 385 அடி நிகளம். 160 அடி அகலம். கோயிலில் 147 ஸ்தம்பங்கள் உள. இங்குள்ள சில்பங்கள் அழகியவை. மைசூர் சமஸ்தானத்திலிருந்து இக்கோயிலுக்கு வருடம் 20,000 ரூபாய் கொடுக்கப்படுகிறது. கோயிலின் மதில்சுவரில் பல தெய்வங்களின் உருவங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளின் பெயர்கள் கீழே வரையப்பட்டிருக்கின்றன. கோயில் ஆதியில் சிறியதாயிருந்தது; அதை நந்தி ராஜாவும், பூர்ணையாவும் பெரிதாக்கிப் புதுப்பித்தனர்; இங்குள்ள கல்லாலாகிய தட்சிணமூர்த்தி, அம்மூர்த்தியின் மூன்று பிரிவுகளும் கலந்தது-யோக தட்சிணமூர்த்தி, வீணை தட்சிணமூர்த்தி, வியாகர்ண தட்சிணமூர்த்தி. விசேஷ உற்சவம் பங்குனி மாதம். 7 நிலைகளுடைய கோபுரம் 1845-ம் வரு மும்மடி கிருஷ்ணதேவ உடையாரால் கட்டப்பட்டது. இக்கோயிலில் ஹைதர் ஆலியின் உத்திரவுபடி பிரதிஷ்டை செய்யப்பட்ட லிங்கம் ஒன்று உளதாம். இங்குள்ள சந்திரசேகரமூர்த்திக்கு பிரியாவிடை கிடையாது. இங்கு சத்திரய உண்டு.

நடியாபிரிவு :-வங்காள ராஜதானி, இங்கு மூன்று சிவாலயங்கள் உள. (1) சாந்திபூர் ஜாலேஷ்வர் கோயில் (ஜ்வாலேஷ்வர் ?) (2) சிப்நிபாஸ (சிவ நிவாஸ் ?) இங்கு இரண்டு சிவாலயங்கள் உள. கோயில்கள் 60 அடி உயரம். சிவலிங்கம் 9 அடி, 7½ அடி உயரம்.

நண்டூரா :—மத்ய இந்தியா, ரெயில் ஸ்டேஷன். சிவாலயம், ஸ்வாமி மகாகாளர்.

நம்பிதலைவன் பட்டயம் :-திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜதானி, திருக்குறுங்குடிக் கருகிலுள்ளது, சிவாலயம் சிலமாயிருக்கிறது; நித்யபூஜையில்லை. மும்மூர்த்திகளெல்லாம் திருக்குறுங்குடிக் கோயிலில் தற்காலம் வைக்கப்பட்டிருக்கின்றன.

நந்தபுரம் :—விசாகபட்டணம் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி சர்வேஸ்வரர்.

நந்தலூர் :-புல்லம்பேட்டை தாலூகா, கடப்பை ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி சமயாநந்தர்.

நந்திக்கரை :—திருவாங்கூர் ராஜ்யம், திருவநந்த புறத்திற்கு 30 மைல்—சிவாலயம். இங்கு 9-ம் நூற்றாண்டிய சித்திரங்கள் உள, பார்க்கத் தக்கவை.

நந்திகுடி :—சென்னை ராஜதானி, சிவாலயம்.

நந்திகுண்டா :-நஞ்சங்கோட் தாலூகா, மைசூர் ராஜ்யம், சிவாலயம். ஸ்வாமி மல்லேஸ்வரர்.

நந்திட்டவரே :—மைசூர் ராஜ்யம், சிவாலயம். ஸ்வாமி மாணிக்கேஸ்வரர்.

நந்திமங்கை :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, சிவாலயம். ஸ்வாமி ஜம்பு நாதர், தேவி அகிலாண்டவல்லி. நந்தி பூசித்த ஸ்தலம்.

நந்திதூர்க்கம் :—மைசூர் ராஜ்யம், கோலார் ஜில்லா, பெங்களூரிலிருந்து 31 மைல், மலை 456 அடி உயரம். நந்தி ரெயில் ஸ்டேஷனிலிருந்து 3 மைல். இந்த துர்க்கம் (மலை) ஸ்கந்தகிரி, பிரம்மகிரி, சென்னகேசவகிரி எனும் பாகங்களையுடையது. பெண்ணாறு, பாலாறு முதலிய நதிகள் இங்கு ஆரம்பமாகின்றன. இதன் கடுவில் அமிர்த சரோவரம் எனும் நீர் நிலையுளது. மலையடிவாரத்தில் இரண்டு கோயில்கள் உண்டு. (1) போகநந்தீஸ்வரர், அருணசலீஸ்வரர் போகநந்தீஸ்வரர் கோயில் பாண அரசன் விஜயாதரன் மனைவி ரத்னவளியால் சுமார் 810-ம் வருடம் கட்டப்பட்டதாம். அருணசலீஸ்வரர் கோயில் கேசவர் என்பவரால் கட்டப்பட்டது. இக்கோயிலில் 3 அடி உயரமுள்ள விநாயகர் உண்டு, இவருக்கு சிங்கமுகமும் மெல்லியயானைத் துதிக்கையும் உளது! அன்றியும் இங்கு ஹனுமார் வீணை வாசிப்பது போலவும், மணல் லிங்கத்தைப் பிடுங்குவதுபோலவும், சிலைகள் உள. நாரதர் வீணை வாசிக்கும் சிலையும், ஸ்ரீ கிருஷ்ணன் வெண்ணெய் திருடும் சிலையும் பார்க்கத் தக்கவை. மத்சியாவதார விஷ்ணுவைக் கொல்லும் சிலையும்

சப்தரிஷிகள் சிலைகளும் உண்டு. மலை உச்சியில் போகநந்தீஸ்வரர் கோயில் உளது. உச்சிக்குப் போக 1775 படிகள். இக்கோயில் பல்லவ அரசர்கள் காலத்திற்கு முந்தியது என்று சிலர் எண்ணுகின்றனர். கோயில் சிலகாலம் ஜைன ஆலயமாயிருந்ததென எண்ணுவதற் கிடமுண்டு. பூர்வபெயர் நந்தகிரி. சோழர்கள் இதை நந்தகிரி, நந்தி துர்க்கம் என்று மாற்றினர். இவ்வாரூயின் இங்குள்ள சிவாலயங்கள் 11-ம் நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்க வேண்டும். ஸ்டேஷனுக்கும் சுல்தான் பேட்டைக்கும் அருகில் மற்றொரு சிவாலயமுண்டு.

நந்திகிராமம் :—வட இந்தியா, அயோத்தியிலிருந்து 14 மைல் தூரம், கௌரிசங்கர் மஹாதேவர் சிவாலயம்.

நந்தியால் :—சென்னை ராஜதானி ரெயில் ஸ்டேஷன்; சிவாலயம். ஸ்வாமி மஹாதேவர், மங்கள தீர்த்தம்.

நந்திவனம் :—இதற்கு நந்திகேஸ்வரம் என்றும் பெயர். சென்னை ராஜதானி, செங்கல்பட்டு ஜில்லா, கூடுவாஞ் சேரிக்கு ½ மைல் தூரம் சிவாலயம். ஸ்வாமி நந்தீச்சுரர், தேவி சௌந்தர நாயகி. நந்தி தீர்த்தம். நந்தி பூசித்த ஸ்தலம்.

நந்நிலம் :—(திரு) நந்நிலத்துப் பெருங்கோயில் என்பது தேவாரா நாமம், மதுவளம் என்றும் பெயர். தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன். கோயில் ஸ்டேஷனுக்கு 3 மைல் மேற்கி லுளது. ஸ்வாமி மதுவனேஸ்வரர், பிரகாசநாதர், தேவி மதுவனநாயகி, பிரகாசநாயகி. சூரிய காந்த தீர்த்தம். கோயில்கட்டு மலைமீதுளது. சூரியன் பூசித்த ஸ்தலம். கோச்செங்கட் சோழன் திருப்பணிசெய்த ஸ்தலம். பிரம் மோற்சவம் சித்திரை மாதம். சுந்தரர் பாடல்பெற்றது. இதற்கு 1½ மைல் தூரத்தில் திருக்கோணேச்சரம் எனும் சிவாலயமுளது. சிறிய ஆலயம் 200+100 அடி விஸ்தீரணம். ஒரே பிராகாரமுடையது. இங்குள்ள அர்த்தமண்ட பத்திலுள்ள லிங்கத்தின் வலதுபுரம் ஒரு தேன்கூடு உளது இது விசித்திரமானது. இதிலுள்ள தேனீக்கள் ஒருவரையும் ஹிம்சிப்பதில்லை. இதற்கு தினம் பூசை நடக்கிறது.

நயினர்பட்டி:—சென்னை ராஜதானி, மதுரை ஜில்லா சிவாலயம். ஸ்வாமி இட்சுவனேஸ்வரர், தேவி மங்களாம் பாள்.

நயினர்கோயில்:-ராம்நாத் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்—ஸ்வாமி நாகநாதர்; மஹம்மதிய ஸ்திரீமை பெண்ணை பேசவைத்த ஸ்தலம். நயினர் என்பது லப்பைத் தமிழில் ஸ்வாமி என்று அர்த்தமாகும். இதற்கு மருதூர் என்றும் பெயர் உளது. கோயில் மேற்கு பார்த்தது.

நயினர்கோயில் :—(நாயனர் கோயில்) பாண்டிய நாட்டி லுள்ள ஸ்தலம். பரமகுடிக்கு 4 மைல், சிவாலயம். ஸ்வாமி சோமேஸ்வரர், தேவி பாதம்பிரியாள். வைகைநதி தீர்த்தம்.

நரசமங்கலம் :—சாமராஜநகர் தாலூகா, மைசூர் ராஜ்யம், சிவாலயம்—ஸ்வாமி ராமேஸ்வரர். கோயிலின் மேற்கு மூலையில் சப்தமாத்ருக்கள் சந்நிதியில் 11 அழகிய சிலைகள் உள. கோயில் கருப்புக்கல்லாலாயது, லிங்கமும் தூண்க ளும் மிகப்பெரியவை. கோயில் மிகவும் பாழாயிருக்கிறது.

நரசராவ்பேட் :—கிருஷ்ணா ஜில்லா, சென்னை ராஜ தானி. பீமேஸ்வரர் கோயில் 1131-ம் ஆண்டில் கட்டப் பட்டது.

நரசாபுரம் :—மேற்கு கோதாவரி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்.

நரசிபூர் :—மைசூர் ராஜ்யம், மைசூரிலிருந்து 17 மைல். சங்கமேஷ்வர் ஆலயம். காவிரியும் கபிலையும் சங்கமாகுமிட மிருக்கிறது. சோமேஸ்வரர்கோயில், இங்கு இரண்டு கருங் கற்களாலாகிய மறைவுப் பலகைகள் இருக்கின்றன. 6 அடி 9 அங்குலம் + 4 அடி ; இவைகளில் ராமாயணக் கதைகள் செதுக்கப்பட்டிருக்கின்றன. மிகவும் அழகியவை.

நல்லக்குடி :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, இதற்கு குயிலாலம் என்றும் பெயர். வைப்பு ஸ்தலம். மாய வரம் ஸ்டேஷனுக்கு 4 மைல் தூரம் உளது. சூரியன் பூஜித்த ஸ்தலம். ஸ்வாமி ஆலத்துறையப்பர், தேவி குயி லாண்ட நாயகி அல்லது மதுரவாக் விநோதினி. சூரிய தீர்த்தம்.

நல்லாத்துக்குடி :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, மாயூரக்கோவுக் கருகிலுள்ள சிவாலயம்.

நல்லான்றூர் :—சென்னை ராஜதானி, விழுப்புரத்திற்கு 8 மைல். சிவாலயம்-ஸ்வாமி சுவர்ணபுரீசர், தேவி திரு வழகி. வைப்புஸ்தலம்.

நல்லகொண்டா :—நெல்லூர் ஜில்லா, சென்னை ராஜ தானி, குகைக்கோயில். ஸ்வாமி கண்டி மல்லேஸ்வரர். கார்த்திகை சிவராத்ரி பூஜை; மற்றகாலம் பூஜை இல்லை. இவ்வாலயம் திருவாதுறை ஆதீன மேற்பார்வையுடையது.

நல்லூர் :—(திரு) தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜ தானி, சுந்தரப்பெருமாள் கோயிலுக்கு 2 மைல் தெற்கு. சிவாலயம் மாடக்கோயில், ஸ்வாமி பெரியாண்டேஸ்வரர், தேவி திரிபுரசுந்தரியம்மை. ஸ்தலவிருட்சம்-வில்வம், வசு தேவர், ஸ்ரீ கிருஷ்ணன், பாண்டவர்கள் பூசித்த ஸ்தலம். சிவபெருமான் அப்பருக்குத் திருவடி சூட்டியருளிய க்ஷேத்திரம். அமர்நீதி நாயனார் முக்திபெற்ற ஸ்தலம். பிரம்மோற்சவம் மாசிமாதம். இங்கு பாபநாசம் ஸ்டேஷ னுக்கு அருகில் 3 மைல் தூரத்தில் கலியாண சுந்தரேஸ்வரர் கோயில் உளது. செயற்கையாலாகிய சிறு குன்றின்மீதுளது இதற்கு சுந்தரகிரி என்று பெயர். இங்கு அகஸ்தியருக்கு பரமசிவன் கலியாணக்கோலம் காட்டியதாக ஐதீகம். கோயிலுக்கு எதிரிலுள்ள குளத்தில் குந்திதேவி ஸ்நானம் செய்ததாகச் சொல்லப்படுகிறது. குளக்கரையில் இது சித் திரிக்கப்பட்டிருக்கிறது. மூலஸ்தானத்தில் இரண்டு லிங் கங்கள் உள ஒரே அவடையாரில். மூலஸ்தானலிங்கம் மெருகிட்டதுபோல் பளபளப்பாயுளது. இது தினம் ஐந்து முறை நிறம் மாறுவதாக ஐதீகம். கர்ப்பக் கிரஹத்தின் மேற்குபுறம் சிவ பார்வதி உருவங்களும், வடக்கில் விஷ்ணு வின் உருவமும், தெற்கில் பிரம்மா உருவமும் இருக்கிறது. இவ்வூருக்குப் பழைய பெயர் பஞ்சவன மஹாதேவி சதுர் வேதி மங்கலம். இங்கு நடராஜமூர்த்தி சதுர நடமாடும் திருக்கோலமுடையது. பல கல்வெட்டுகள் உள. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசுகள் பாடல்பெற்ற ஸ்தலம்.

நல்லூர் :—தென் ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜ தானி, விருத்தப்பிரயாகை என்றும் பெயர், இங்கு இரண்டு

ஆறுகள் சங்கமமாகின்றன. சிவாலயத்தருகில் பாண்டவர்கள் பூசித்த ஐந்து லிங்கங்கள் இருக்கின்றன.

நல்லூர்பெருமணம் :—(திரு) சென்னை ராஜதானி, கொள்ளிடம் ஸ்டேஷனுக்கு 3 மைல் கிழக்கு. ஆனைக்காரன் ஸ்டேஷனிலிருந்து இறங்கிச் செல்வது நலம். சிவாலயம்-ஸ்வாமி சிவலோகத்தியாகர், சிவயோகத்தியாகேசர், தேவி நங்கையுமையம்மை. பஞ்சாக்கர தீர்த்தம். திருஞான சம்பந்தர் திருக்கலியாண முடிந்தவுடன் மனைவியுடனும் அடியார்களுடனும் கோயில் சிவலிங்கஜோதியில் ஐக்கியமாகிய ஸ்தலம். திருஞானசம்பந்தர் பாடல்பெற்றது.

நவலிங்கபுரம் :—திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்-ஸ்வாமி நவலிங்கேஸ்வரர், தேவி சிவகாமி. தீர்த்தம் தாம்ரபர்ணிநதி.

நவீபம் :—சென்னை ராஜதானி, ஆற்காட்டிலுள்ள ஓர் மலை, இதன்மீது ஒரு சிவாலயமுளது. ஸ்வாமி பெயர் காரியுண்டக் கடவுள்.

நள்ளாறு :—(திரு) தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன் காரைக்காலுக்கு 3 மைல், பிரஞ்சு இலாகாவில் உள்ளது. சிவாலயம்-ஸ்வாமி தர்மாரண்ய ஈஸ்வரர், தேவி போகமார்த்த பூண்முலையம்மை. நள தீர்த்தம், லிங்கம் தர்ப்பைக் கொழுந்துகள் சேர்ந்ததுபோலிருக்கிறது திருஞான சம்பந்தர் மதுரையில் சமணர்களுடன் வாதாடி அக்னியிலிடவும் வேகாமலிருந்த "போகமார்த்த பூண்முலையாள்' எனும் திருப்பதிகம் பாடிய ஸ்தலம். கல்வெட்டுகளில் ஸ்வாமி பெயர் திருநள்ளாறுடையார் என்றிருக்கிறது. இங்குள்ள சனிபகவான் கோயில் மிகவும் பிரசத்தியுடையது. நளன் பூசித்து கலிதோஷம் நீங்கிய க்ஷேத்திரம். சனிப்பெயர்ச்சி உற்சவம் விசேஷம். இது சப்தவிடங்க க்ஷேத்திரங்களில் ஒன்றும். ஸ்வாமி நகர (நகர் ?) விடங்கர், உன்மத்த நடனம். மூவர் பாடல்பெற்ற ஸ்தலம்.

நறையூர்சித்தீச்சரம் :-(திரு) தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, பேணுபெருந்துறைக்கு 2 மைல் மேற்கு. கும்பகோணத்திற்கு 5½ மைல் தென்கிழக்கு சிவாலயம். ஸ்வாமி

சித்தநாதேஸ்வரர், தேவி அழகாம்பிகை. பிரம தீர்த்தம் திருஞான சம்பந்தர் பாடல்பெற்றது.

நனிபள்ளி :—(திரு) இது தற்காலம் புஞ்சை என வழங் கப்படுகிறது. சென்னை ராஜதானி, செம்பொனர் கோயி லுக்கு 2 மைல் வடகிழக்கு. இவ்வூர் திருஞானசம்பந்தர் தாயார் பிறந்த இடமாம். அஷ்டவசுக்கள் பூசித்த ஸ்தலம். பாலிவனத்திலிருந்து 8 மைல். ஞானசம்பந்தர் பாலிநிலமா யிருந்ததை நெய்தல் நிலமாகும்படி பாடியருளிய க்ஷேத் திரம். ஸ்வாமி நற்றுணையப்பர், தேவி பர்வதராஜபுத்திரி. சுவர்ண தீர்த்தம், மூவர் பாடல்பெற்றது.

நாகங்குளம் :—சென்னை ராஜதானி, சிவாலயம்-ஸ்வாமி நித்யசுந்தரேஸ்வரர், தேவி ஒப்பிலாநாயகி. சுந்தர தீர்த்தம்.

நாகநாதர் கோயில் :—வட இந்தியா, சௌண்டி ஸ்டேஷ னுக்கு மேற்கேயுள்ளது.

நாகநாதபுரம் :—செட்டிநாட்டில் உளது. சென்னை ராஜ தானி, சிவாலயம்-ஸ்வாமி நாகநாதர், தேவி பிரஹந்நாயகி.

நாகப்பூர் :—வட இந்தியா ரெயில் ஸ்டேஷன். சிவா லயம்-ஸ்வாமி நாகநாதர், தேவி நாகாம்பிகை. இதனருகில் தாதாவைத்யநாதம் என்னுமிடத்தில் ஓர் சிவாலயமுண்டு. ஸ்வாமி வைத்யநாதர், தேவி உமாதேவி.

நாகரேஸ்வரம் :-வட இந்தியா, சிவாலயம்-சுயம்புலிங்கம்.

நாகர்பார்க்கராபிரிவு :—சிந்து மாகாணம், இங்கு இரண்டு சிவாலயங்கள் உள. (1) சர்தாரா கிராமம், சிவாலயம் கருஞ்சர் எனும் குன்றின்மேலுள்ளது. ஸ்வாமி-மகாதேவர். (2) அஞ்சிலி சார் கிராமம் சிவாலயம்.

நாகர்கோயில் :—திருவாங்கூர் ராஜ்யம், பாலையங்கோட் டைக்கு 10 மைல் தெற்கிலுள்ள பிரபலமான சிவாலயங் களில் இது ஒன்று. ஸ்வாமி நாகேஸ்வரர், தேவி பார்வதி ; வைப்பு ஸ்தலம். இதன்றி இங்கு சோழபுரம் எனும் இடத்தில் கோட்டார் எனும் சிவாலயமுண்டு, தற்காலம் புதுப்பிக்கப் பட்டிருக்கிறது.

நாகர்கோட் :—காங்கிரா ஜில்லா, வட இந்தியா, பழைய கோயில் மகமத்கஜனியால் அழிக்கப்பட்டது. பிறகு கட்டப் பட்ட கோயில். 1905-ம் வருடம் பூகம்பத்தால் சிதைந்தது.

நாகாளேச்சுரம்:-சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, சீர்காழிக்கு அருகிலுள்ளது. தேவரா வைப்பு ஸ்தலம்; ராகு பூஜித்த ஸ்தலம். ஸ்வாமி நாகாளேஸ்வரர், தேவி மலை மங்கை. தோணியப்பர் ஆலயத்திற்கு வடமேற்கிலுள்ளது. நாகாளேஸ்வரமுடையார் கோயிலென வழங்கப்படுகிறது.

நாகூர் :-சென்னை ராஜதானி, தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன் சிவாலயம். ஸ்வாமி நாகலிங்கஸ்வாமி, தேவி திருநாகவல்லி. வட்டார் தீர்த்தம். வைப்பு ஸ்தலம்.

நாகேந்திரபட்டணம் :—தென் இந்தியா. திரு எடுக்கத் தப்புவினர் என்றும் பெயர். ஸ்வாமி நீலகண்ட நாகேஸ் வரர், தேவி நீலாயதாட்சியம்மன். மணிமுத்தாநதி தீர்த்தம். திருநீலகண்ட பாணனர் முக்திபெற்ற ஸ்தலம். நாகராஜன் பூஜித்த ஸ்தலம், கோயிலில் ஒரு வெள் எறுக்கஞ்செடி உளது.

நாகேஸ்வரம் :—சென்னை ராஜதானி, குண்ணத்தூருக்கு அருகிலுள்ளது, செங்கல்பட்டு ஜில்லா, கோயில் சேக்கிழா ரால் கட்டப்பட்டதென்பர். இங்கு கஜப்பிருஷ்ட ஆகிருதி யுடைய மறிரேரு சிவாலயம் பாழடைந்து இருக்கிறது.

நாகேஸ்வரம் :—தஞ்சாவூர் ஜில்லா, கும்பகோணம் தாலுகா, சென்னை ராஜதானி, தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன். செம்பகாரண்யம் என்பது இதன் பூர்வீகப் பெயர். நாகராஜன் பூசித்த ஸ்தலம். சிவாலயம் இந்திரன் பூசித்த ஸ்தலம். ஸ்வாமி செண்பகாரண்யேஸ்வரர், தேவி குன்றுமுலைநாயகி அல்லது கிரிகுசாம்பிகை. நாகதீர்த்தம், முருகதீர்த்தம், சேக்கிழாருடைய ஆத்மார்த்த ஸ்தலம். சூரியன், சந்திரன், ஐந்தலைநாகம் பூசித்த க்ஷேத்திரம். இரண்டாம் ராஜராஜனாலும், மூன்றும் குலோத்துங்க சோழ னாலும் புதுப்பிக்கப்பட்டதாம், அழகிய கோயில். கோயில் மூற்றங்களெல்லாம் தளவரிசை செய்யப்பட்டிருக்கிறது. ஒரு பெரிய குளமுண்டு, அதைச் சுற்றிலும் அழகிய மண்டபமுண்டு. ஸ்வாமி கோயிலும் அம்மன் கோயிலும்

கிழக்கு பார்த்தவை. அம்மன் கோயில் ஸ்வாமி கோயில் பிராகாரத்திற்கு வெளியிலுள்ளது. அம்மனுக்கு அபிஷேக மில்லை, புனுகு சட்டம்மாத்திரம் சாற்றப்படுகிறது. சங்க நிதி பதுமநிதி சிலைகள் கோயிலிலிருக்கின்றன. ராஜ ராஜன் விக்ரஹத்திற்கு இரண்டு மனைவிகள் இருக்கின்றன. சிவராத்திரியில் இந்திரன் பூஜை முதல்காலம்-கும்பகோணம் நாகேஸ்வரர் சந்நிதியில்; இரண்டாம் காலபூஜை நாகேஸ் வரத்தில்; மூன்றாம்கால பூஜை நாகபட்டனத்தில், என் பது ஐதீகம். இக்கோயிலில் ஒவ்வொரு விக்ரஹத்தின் மேல் சுவரில் அதன் நாமம் எழுதப்பட்டிருக்கிறது. இங்கு வசிப்பவர்களுக்கு சர்ப்ப பயமில்லை என்பது ஐதீகம். கோபுரத்தின் மூலமாக சூரியபூஜை. சத்திரமுண்டு. மூவர் பாடல்பெற்றது. கோயிலில் பழைய பல கல்வெட்டுகள் உள. இக்கோயில் பூர்வகாலத்தில் ஜைன ஆலயமா யிருந்ததாக சிலரால் எண்ணப்படுகிறது. கண்டராதித்யர் இதைச் சிவாலயமாக்கியதாகச் சொல்லப்படுகிறது.

நாகாளேஸ்வரம்:—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, சீர்காழி பெரியகோயிலுக்கு மேற்கிலுள்ளது. சிவாலயம்-ஸ்வாமி நாகேசர், தேவி மலைமங்கை. ராகு பூசித்த ஸ்தலம்.

நாட்டரசன்கோட்டை:—சென்னை ராஜதானி, திருப்பத் தூருக்கு 15 மைல் சிவாலயம். ஸ்வாமி திரிநேத்ரர், தேவி கண்ணுடை நாயகி.

நாங்குநேரி:—சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா, சிவாலயம்.

நாகை:—மத்ய இந்தியா, சிட்டபூர் ரெயில் ஸ்டேஷ னுக்கு அருகிலுள்ளது நிஜாம் ராஜ்யத்தில்—சிவாலயம்.

நாகேஸ்வரம்:—திருநாகேஸ்வரம் என்றும் வழங்கப்படு கிறது. செங்கல்பட்டு ஜில்லா, ஸ்ரீபெரும் பூதூர் தாலூகா, குண்ணத்தூருக்கு சமீபத்திலிருக்கிறது. சிவாலயம்-ஸ்வாமி நாகேஸ்வரர், தேவி திரிபுரசுந்தரியம்மன். ஆலயம் சேக்கி ழாரால் கட்டப்பட்டதென்பது ஐதீகம். கும்பகோணத் தருகிலுள்ள திருநாகேஸ்வர் கோயிலின் பூஜையைப்போல் இங்கும் பூஜை நடக்கிறதென்பர்.

நாங்கூர் :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, சீர்காழிக்கு 6 மைல். இது மதங்கரிஷியின் ஆசிரமம். இங்கு அவர் தவத்தை அழிக்கவந்த விஷ்ணு, மோகினி ரூபத்தில் சங்கு சக்கரத்தோடு விளங்குகிறார். சிவாலயம் சிலமாயிருக் கிறது. சிவலிங்கத்திற்கெதிரில் மேற்கு நோக்கிய நந்தியரு கில் கிழக்கு நோக்கிய ஒரு நந்தியிருக்கிறது. சேந்தனார் அவதரித்த ஸ்தலம். ஸ்வாமி மதங்கேஸ்வரர், தேவி மையாடு கண்ணி.

நாட்டரசன்கோட்டை :—சென்னை ராஜதானி, ராமநாத புரம் ஜில்லா, சிவகங்கைக்கு 5 மைல். பழைய பெயர் பனசை ; பனைமரங்கள் மிகுதியாயிருந்தபடியால் அப்பெயர் வந்ததென்பர். சிவாலயம் கரிகாலன் சோழன் பிரதிஷ்டை யென்பர்; ஆகவே ஸ்வாமி பெயர் கரிகால் சோழீசப்பெரு மாள்.

நாகபட்டினம் :—நாகைக்காரோணம் என்பது தேவாரப் பெயர். தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன், சிவாலயம் பெரியது. ஸ்வாமி காயாரோகணேஸ்வரர், ஆதிபுராணேஸ் வரர், தேவி நீலாயதாட்சியம்மன். மாமரம் ஸ்தலவிருட்சம். தீர்த்தங்கள்-தேவ தீர்த்தம், சர்வ தீர்த்தம், புண்டரீக தீர்த் தம், காக தீர்த்தம் அல்லது அக்னி தீர்த்தம், பிரம தீர்த்தம், முனி தீர்த்தம், வச்சிர தீர்த்தம். சப்தவிடங்க ஸ்தலங்களில் ஒன்று. அதிபத்தநாயனார் முக்தி பெற்ற ஸ்தலம். சிவபெருமான் புண்டரீக மகரிஷியை காயத்தோடு கைலாயத்திற்கு ஆரோகணம்செய்த ஸ்தலம். காகராஜன் பூசித்த ஸ்தலம். இங்கு நீலாயதாட்சியம்மன் அலங்காரம் பார்க்கத்தக்கது. கல்வெட்டுகளில் இந்த க்ஷேத்திரம் காரோ ணம் என்றே கூறப்பட்டிருக்கிறது. இங்கு தியாகராஜர் உண்டு. சுந்தாவிடங்க தியாகர் ; நடனம் அஜபநடனம். கோயிலில் 5 முகங்களோடு கூடிய ஹேரம்ப கணபதியுண்டு. சட்டையப்பர் சன்னிதி கவனிக்கத்தக்கது. கர்ப்பக்கிரஹத்தி லுள்ள அஷ்டதிக் பாலர்கள் சிலைகள் அழகிய சில்பங்கள். பிரம்மோற்சவம் 18 நாள். இங்கு கைலாசநாதர் கோயில் என்று மற்றொன்று. சிவாலயமுண்டு.

நாசிக் :—கிழக்கு ஜி. ஐ பி. ரெயில் ஸ்டேஷன், பம் பாய் ராஜதானி, ஊர் நாசிக் ஸ்டேஷனிலிருந்து 5 மைல். கோதாவரியின் அக்கரையில் பஞ்சவடியிலுள்ளது. இங்கு

பல சிவாலயங்கள் உள. (1) கபாலேஸ்வரர் கோயில். ஸ்வாமி கபாலேஸ்வரர், தேவி பார்வதி. சிவபெருமான் பிரம்மனது ஐந்தாம் தலையைக் கொய்த ஸ்தலமென்பது ஐதீகம். மற்ற கோயில்களிலிருப்பதுபோல் இக்கோயிலில் ஸ்வாமிக்கெதிரில் நந்தி கிடையாது. கோயில் ராமகுளத்துக்கருகிலுள்ளது. சிவராத்திரி விசேஷம். கோயில் 1738-ம் வருடம் புதுப்பிக்கப்பட்டது. (2) மேற்கில் 1 மைல் தூரத்தில் கோடீஸ்வரர் சிவாலயம். (3) உமாமஹேஸ்வரர் கோயில். மஹேஸ்வர மூர்த்தி 2 அடி உயரம். வலதுபுறம் கங்கையின் சிலை, இடது புறம் உமாதேவியின் சிலை; இவை மூன்றும் சாளக்கிராம சிலைகள். மஹாராஷ்டிரர்கள் இவைகளைக் கர்நாடகத்திலிருந்து சூறையாடிக் கொண்டுவந்தனராம். 1758-ம் ஆண்டில் பேஷ்வாவின் உறவினர் ஒருவரால் கட்டப்பட்ட கோயில். (4) நீலகண்டேஸ்வரர் கோயில், கோதாவரியின் வலது கரையில் உள்ளது. கோயிலிலுள்ள லிங்கம் மிகவும் பழமையானது. ஜனக மகாராஜாவால் பிரதிஷ்டை செய்யப்பட்டதென்பர். கோயில் 1747-ம் ஆண்டில் லட்சுமண சங்கரர் என்பவரால் புதுப்பிக்கப்பட்டது. (5) பஞ்சரத்னேஸ்வரர் கோயில், வீடுபோன்றது. சிவலிங்கம் ஸ்ரீராமர் பிரதிஷ்டை என்பர். அவர் பஞ்ச ரத்னங்களைக்கொண்டு பூசித்தபடியால் அப்பெயர்பெற்றது. 1758-ம் ஆண்டில் யக்னேஸ்வர தீட்சிதரால் புதுப்பிக்கப்பட்டது. (7) திலபாண்டேஸ்வரர் கோயில், நாசிக்கிலுள்ள சிவலிங்கங்களிலெல்லாம் இதுதான் பெரியது. கோயில் 1763-ம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்டது. (8) ம்ருகவியாதேஸ்வரர் கோயில், இங்கு காயத்ரி முதலிய நதிரூபங்கொண்ட தேவிகளை பிரமன் தொடர, அவர்களை சிவபெருமான் காத்தருளியதாக ஐதீகம். கோயில் 1770-ம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்டது. (9) நாகோசங்கர் தேவாலயம், இதற்கு ராமேஸ்வரர் கோயில் என்றும் பெயர். இங்குள்ள சில்பங்கள் அழகியவை. இக்கோயிலுக்கு 5 கோபுரங்கள். இங்கு 6 அடி சுற்றளவுள்ள ஒரு பெரிய மணியுண்டு. 1756-ம் ஆண்டில் நாகோசங்கர் என்பவரால் கட்டப்பட்டது. (10) முக்தேஸ்வரர் ஆலயம் (11) சந்திரமௌளீஸ்வரர் ஆலயம்—பஞ்சவடியிலுள்ளது. (12) பாதாளேஸ்வரர் சிவாலயம். (13) கர்ப்பூரேஸ்வரர் கோயில் இது வீரசைவர்களுடைய சிவாலயம். (14) திரியம்பகேஸ்வரர் கோயில் நாசிக்குக்கு 18 மைல் தூரம். யாத்ரீகர்கள் தங்க

இங்குபல தர்ம சாலைகளுண்டு—கபூர்த்தவர் தர்ம சாலை, தேவி மடம், சங்கராசாரியார் மடம் முதலியன கோதாவரி யின் உற்பத்தி ஸ்தானத்திலுள்ளது. வட இந்தியாவிலுள்ள 12 ஜோதிலிங்கங்களில் இங்குள்ளது முக்கியமானதாம். தீர்த்தங்கள் குசலவ தீர்த்தம், வராஹம், கபோதம் முதலி யன. ஒரே இடத்திலுள்ள மூன்று லிங்கங்கள் 3 கண்களைப் போன்றிருக்கின்றன. (திரியப்பகேஸ்வரர் மூன்று கண் களையுடைய ஈஸ்வரர்.) இங்குள்ள மலைக்கு திரியம்பக்கிரி என்று பெயர். இதில் பரமசிவத்தின் 5 முகங்களின் பெயர் களையுடைய 5 சிகரங்களிருக்கின்றன. இங்கு 6 தீர்த்தங் கள் உள. கோயிலுக்கு கோட்டைக்கிருப்பதுபோல் மதில் கள் உண்டு. கர்ப்பக்கிரஹத்தில் லிங்கபீடம் மாத்திரம் உளது, லிங்கம் இல்லை, நடுவில் ஒரு பள்ளம் மாத்திரம் உண்டு; இதில் பிரம்மா, விஷ்ணு, பரமசிவம் இவர்களின் லிங்கங்கள் இருப்பதாக ஐதீகம். கோயில் 1766-ம் ஆண்டில் நானா சாஹெப் என்னும் மஹராஷ்டிரரால் புதுப்பிக்கப் பட்டதாம். ரதோற்சவம் விசேஷம்; அப்போது ரத்னகிரீ டத்தை ஸ்வாமியின் பஞ்சமுகி முகவணிக்கு சார்த்தி புறப் பாடு செய்கிறார்கள். இங்குள்ள மற்ற சிவாலயங்கள்: **கேதா ரேஸ்வரர் கோயில், சித்திரேஸ்வரர் கோயில், திரிசக்தீஸ்வரர் கோயில், கஞ்சனேஸ்வரர் கோயில், ராமேஸ்வரர் கோயில், காசிவிஸ்வேஸ்வரர் கோயில்.**

நாட்டியத்தான்குடி (திரு):—தஞ்சாவூர் ஜில்லா, திரு ஆரூருக்கு 6 மைல், சென்னை ராஜதானி, ரெயில் ஸ்டே ஷன், கோட்புலி நாயனார் சிவபூஜைக்காக வைத்திருந்த நெல்லை, அவரது பந்துக்கள் பஞ்சகாலத்தில் அபஹரிக்க, அவர்களை வாளால் வீசி தன்பக்தியைக்காட்டிய ஸ்தலம். இவரது சிலை கோயிலிலிருக்கிறது. நீலகண்ட ரிஷியும் யானையும் பூசித்த ஸ்தலம். ஸ்வாமி ரத்னகிரீஸ்வரர், கரி நாதேஸ்வரர், தேவி மலைமங்கையம்மை, அல்லது மலர் மங்கையம்மை; சூரிய தீர்த்தம்.

நாதத்வாரம்:—நாதாத் என்று வழங்கப்படுகிறது. இமய மலையிலுள்ள சிவஸ்தலம்.

நாதேண்டலா:—குண்டூர் தாலூகா, மேற்படி ஜில்லா சென்னை ராஜதானி, மூலஸ்தானேஸ்வரர் கோயில்.

நாம்பாக்கம் :—சென்னை ராஜதானி. சிவாலயம்-ஸ்வாமி பந்தேஸ்வரர், (?) தேவி சிவஞானம்பாள்.

நாம்பூர் :—குண்டூர் தாலூகா, மேற்படி ஜில்லா, சென்னை ராஜதானி, மல்லேஸ்வரர் கோயில்.

நாயடிவாக்கம் :—சென்னை ராஜதானி, சிவாலயம்.

நாயர் :—ஞாயர் என்றும் பாணுபுரி என்றும் பெயர் உளது. சென்னை ராஜதானி, சிவாலயம்-ஸ்வாமி புஷ்ப புரீஸ்வரர், தேவி சுவர்ணாம்பிகை. சங்கிலி நாய்ச்சியார் பிறந்த ஸ்தலம்.

நார்த்தாமலை :—சென்னை ராஜதானி, சிவாலயம். புதுக் கோட்டையிலிருந்து 12 மைல்; புதுக்கோட்டை சமஸ்தானம். பல்லவ கட்டடம். கோயில் நிலமாயிருக்கிறது. இங்கு 8 குன்றுகள் உண்டு. அவற்றுள் ஒன்றிற்கு சிவன்மலை என்று பெயர்; இதில் பரமசிவத்திற்கும் விஷ்ணுவுக்கும் கோயில்களுண்டு. நகரத்தார் + மலை = நார்த்தாமலை என்றாயது. இங்குள்ள சிவாலயங்கள்: கடம்பர் கோயில் (2) மேலமலையில் இரண்டு குடைவரைக் கோயில்கள், பல்லவர்கள் காலத்தியவை. இவை முன்பு சமணர்கள் இருப்பிடமாக இருந்திருக்கலாம். இதன் பழைய பெயர் சமணகுடிலம். தற்காலம் விஷ்ணு ஆலயமாயிருக்கிறது. இதற்கு 50 அடி தூரத்தில் மற்றொரு குகைக் கோயில்-சிவாலயம். ஸ்வாமி பழியிலி ஈஸ்வரர். முன்பிருந்த மண்டபம் இடிந்திருக்கிறது. கல்வெட்டில் பல்லவ அரசனை நிருபதுங்க விக்ரமனது ஏழாம் ஆண்டில் விடெல் விடுகு முத்தரையன் மகன் சாத்தப் பழியிலி இக்கோயிலைக் குடைவித்தான் என்றறிகிறோம். அவன் மகள் "தமிழ்தியரையனை பல்லவன் அநந்தனுக்கு புக்க பழியிலி சிறியநங்கை" இக்கோயிலுக்கு மூகமண்டபமும் பலிபீடமும் செய்வித்தாள் என்று கல்வெட்டினால் அறிகிறோம். சுமார் 9-ம் நூற்றாண்டியவையாம். (3) கடம்பர்மலை எனும் மற்றொரு குன்றில் ஒரு சிவாலயமுளது. ஸ்வாமி பெயர் கடம்பு உடைய நாயனார் என்று கல்வெட்டுகளில் இருக்கிறது. (4) விஜயாலயசோளீஸ்வரம் மேற்கண்ட இரண்டு குகைக் கோயில்களுக்கு எதிரிலுள்ளது. கற்கோயில்; மத்தியில் பிரதான கோயில் சுற்றிலும் 7 கோயில்களையுடையது. எல்லாவற்றையும் சூழ கல் மதில் உடையது. கோயில் மேற்கு பார்த்தது. மேற்கேயும்

வடகிழக்கேயும் இரண்டு வாயில்கள் உள்ளன. கர்ப்பக் கிரஹம் ஓங்கார வடிவமானது; 9 அடி அகலம், 8 அடி உயரம். இது 29 அடி சதுர மண்டபத்திலிருக்கிறது. மஹா பலிபுரம் தர்மராஜா ரதத்தைப்போன்ற கோயில். இதி லுள்ள நான்கு புரைகளில் கற்சிலைகளிருக்கின்றன; மேற் கில் பரமசிவமும் பார்வதியும், தெற்கில் வீணை தட்சிணை மூர்த்தி, கர்ப்பக்கிரஹத்துக்கு முன் ஒரு அர்த்த மண்டப மிருக்கிறது, இம்மண்டபத்தில் வாயிலுக்காக்கும் இரண்டு துவாரபாலகர்கள் இருக்கின்றனர். மூலக்கோயிலைச்சுற்றி இருக்கவேண்டிய 7 கோயில்களில் தற்காலம் ஆறுதா னிருக்கின்றன. இவைகளில் சூரியன், சப்தமாதருக்கள். கணபதி, சுப்பிரமணியர், ஜேஷ்டாதேவி, சண்டேஸ்வரர், சந் திரன், சிலைகள் இருந்திருக்கவேண்டும். இக்கோயில் அஸ்தி வாரம் முதல் ஸ்தூபிவரையில் கருங்கல்லாலாயது. கோயில் மிகவும்புராதனமானவைகளில் ஒன்று. கி.பி. 850-ம் ஆண் டில் கட்டப்பட்டிருக்கவேண்டுமென மதிக்கப்படுகிறது. கோ யில் 8 அடி 5 அங்குலம் + 7 அடி 7 அங்குலம் × 6 அடி 8 அங்குலம் விஸ்தீரணம். இதற்கருகில் தளவரிசுனை என்று ஒரு சுனை இருக்கிறது, அதில் ஜ்வரஹரேஸ்வரர் ஆலயம் உளது. (தற்கால இங்கிருக்கும் மாரியம்மன் கோயில் மிக வும் பிரபலமுடையது).

நாராயணன்கோட்டி :—வட இந்தியா, அல்மோரா அருகி லுள்ளது. சிவாலயம் புதிதாகக் கட்டப்பட்டது.

நாராயணவனம் அல்லது நாராயணவரம் :-வடஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, அகஸ்தீஸ்வரர் கோயில் இங்குள்ள மற்றொரு கோயில் பராசரர் கோயில் என்பதாம்.

நாரையூர் (திரு) :-விஷ்ணுவின் அம்சமாகிய நாராயண முனிவர் சாபத்தால் பெற்ற நாரையுருநீங்கிய ஸ்தலம் சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, சிதம்பரத்திற்கு 10 மைல் தென்மேற்கு. சிதம்பரத்தில் ஓர் அறையில் அடைபட்டிருந்த தேவாரத் திருப்பதிகங்களை நம்பியாண் டார் நம்பிக்கு அறிவித்த பொல்லாப் பிள்ளையார் இங் குளர். நாரை பூசித்த ஸ்தலமாதலால் நாரையூர் எனப் பெயர் பெற்றது. ஸ்வாமி சௌந்தரேஸ்வரர், தேவி திரிபுர

சுந்தரியம்மன். காருண்ய தீர்த்தம், புன்னாகவிருட்சம்-திரு ஞான சம்பந்தர், அப்பர் பாடல பெற்றது

நாலூர்மயானம் (திரு):—குப்பகோணத்திலிருந்து 13 மைல். திருமெஞ்ஞானம் என்றும் பெயர். தற்காலம் நாத் தூர் என்றழைக்கப்படுகிறது. சென்னை ராஜதானி, குட வாசலுக்கு 3 மைல் வடக்கிலுள்ளது. ஆபஸ்தம்பர் பூசித்த க்ஷேத்திரம். சிவாலயம்-ஸ்வாமி பலாசவனேஸ்வரர் அல் லது பல்லவனேஸ்வரர், தேவி பெரியாம்பிகை. சந்திர தீர்த்தம். இதற்கு 1 மைல் தூரத்தில் நாலூர் எனும் ஊர் உளது. அங்கும் ஒரு கோயில் உண்டு, சிவாலயம். நாலூர் வேறு, மயானம் வேறு, இவ்விரண்டு க்ஷேத்திரங்களுக்கும் திருஞான சம்பந்தர் ஒரேபதிகம் பாடியுளார்.

நாலூர் (திரு) திருநாம நல்லூர் :—ராஜாதித்தபுரம் என வும் வழங்கப்படுகிறது. தென் ஆற்காடு ஜில்லா, திருக் கோயிலூர் தாலூகா, சென்னை ராஜதானி, பண்ணுருட்டி ஸ்டேஷனுக்கு 11 மைல் மேற்கிலுள்ளது. சுந்தரர் பிறந்த இடம். சுக்கிரன் பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமி திருநாவ லேஸ்வரர், பக்தஜனேஸ்வரர், தேவி சுந்தரநாயகியம்மை, சிவகங்கை, கருடதீர்த்தம், நாகவல்லி விருட்சம். சடைய நாயனர், இசைஞானியார், புகழ்த்துணை நாயனர், நரசிங்க முனையரையர் முக்திபெற்ற ஸ்தலம். கல்வெட்டுகளில் திருத் தொண்டீஸ்வரம் என்றிருக்கிறது. ஸ்வாமி பெயர் ராஜா தித்த மஹாதேவர் என்றிருக்கிறது. ராஜாதித்த சோழனல் (907-946) கட்டப்பட்டது. கோயிலில் சுந்தரர்க்கு இரண்டு நாச்சியார் சிலைகளிருக்கின்றன.

நிமார்பிரிவு :—மத்திய மாகாணம். இங்கு அடியிற் குறித்த சிவாலயங்கள் உள. (1) காண்ட்வா கிராமம் சிவா லயம், குகைக்கோயில் போன்றது. (2) மான்தாதா கிராமம் அமரேஷ்வர் கோயில்; பிரிதேஷ்வர் கோயில்; சித்தநாத் கோயில், பெரியது. மஞ்சள் நிறக்கல்லாற் கட்டப்பட்டது; கௌரிசோம நாத் கோயில், இது ஒரு தீவின் மத்தியிலுள்ளது; லிங்கம் வெண்மை நிறமாயிருந்தது. மகம்மதிய அரசனுடைய அவு ரங்கஜீப் பார்வைபட்டு கருநிறமாகியதென்பர்!

நியமம் :—நன்னிலம் தாலூகா, தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்-ஸ்வாமி ஐராவதேஸ்வரர்.

நிர்த்தனமங்கலம் :—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, நாகப்பட்டிணத்திற்கு 10 மைல்-சிவாலயம்.

நிர்வாங்னி :—பூனா ஜில்லா, பம்பாய் ராஜதானி, மஹாதேவர் கோயில்.

நின்றியூர் (திரு) :—சென்னை ராஜதானி, ஆனைதாண்டவபுரத்திற்கு 2 மைல் வடகிழக்கு. லட்சுமி பூசித்த ஸ்தலம். சிவாலயம்-ஸ்வாமி மஹாலட்சுமீஸ்வரர், தேவி லோகநாயகி. லட்சுமி தீர்த்தம், நீலமலர்ப்பொய்கை. பூசல் நாயனார் அவதார ஸ்தலம்.

நீடாமங்கலம் :—தஞ்சாவூர் ஜில்லா, மன்னார்குடிக்கருகிலுள்ளது. ரெயில் ஸ்டேஷன்-சென்னை ராஜதானி, காசிவிஸ்வநாதர் கோயில். பிரம்மோற்சவம் ஆனி மாதம். சத்திரமுண்டு; இங்கு முசாபர் பங்களாவும் உண்டு.

நீடூர் (திரு) :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, ஆனைதாண்டவபுரத்திற்கு 1 மைல் தென்மேற்கு. காளி, இந்திரன், பூசித்த ஸ்தலம். ஸ்வாமி அருட்சோமநாதேஸ்வரர், தேவி வேயுறுதோளியம்மன். செங்கழுநீர்ஓடை தீர்த்தம். மூனையடுவார் நாயனார் முக்திபெற்ற ஸ்தலம். சுந்தரர் பாடல்பெற்றது.

நீர்பழனி :—சென்னை ராஜதானி, புதுக்கோட்டைக்கு 21 மைல்-சிவாலயம். இங்கிள்ள நந்தியருகில் 4 அடி 3 அங்குலம் × 1 அடி 8 அங்குலம் × 8 அங்குலம், அளவுள்ள கல்லாலாகிய சூலம் இருக்கிறது.

நீராங்கி :—தார்வார் ஜில்லா, பாங்கபூருக்கு 13 மைல், சித்தராமேஸ்வரர் கோயில் ஆதியில் விஷ்ணுகோயிலாயிருந்து பிறகு சிவாலயமாக்கப்பட்டதென மிஸ்டர்கஸின்ஸ் எண்ணுகிறார்.

நீலக்குடி (திரு) :—தென்னங்குடி எனவும் வழங்கப்படுகிறது. திருவிடைமருதூருக்கு 5 மைல் தென் கிழக்கு. சென்னை ராஜதானி. வருணனும் தேவகன்னியரும் பூசித்த ஸ்தலம். ஸ்வாமி நீலகண்டேஸ்வரர், நல்லதாயகேஸ்வரர், தேவி உமையம்மை, அழகாம்பிகை. காவிரி தீர்த்தம், வன்னிமரம்-அப்பர் பாடல்பெற்றது.

நீலகுண்டா :—பல்லாரி ஜில்லா, ஹர்ப்பனஹல்லி தாலூகா, சென்னை ராஜதானி. சிவாலயம்-பீமேஸ்வரர்

கோயில்-சளுக்கிய கட்டிடம். இதில் விஷ்ணுவுக்கும் ஒரு சந்நிதியுண்டு.

நீலேஷ்வர் :—தென் கன்னட ஜில்லா, சென்னை ராஜதானி. சிவாலயம்-ஸ்வாமி நீலேஸ்வரர். இங்கு முசாபர் பங்களா உண்டு.

நுக்கேஹல்லி :—மைசூர் ராஜ்யம். சிவாலயம் சுமார் 1249-ம் ஆண்டில் கட்டப்பட்டது. கோயிலுக்கு சதாசிவக் கோயில் என்று நாமம். கிழக்கு பார்த்த லிங்கம். இங்குள்ள மஹிஷாசுர மர்த்தனி சிலை அழகியது. இங்கு சோமேஸ்வரர் கோயில் என்று மற்றொரு சிவாலயமுண்டு

நெடுங்களம் (திரு) :—திருநெட்டாங்குளமென வழங்கப் படுகிறது. சென்னை ராஜதானி, திருவெறும்பூருக்கு 7 மைல் தென்கிழக்கு, திருச்சிராப்பள்ளி ஜில்லா; ஓர் சோழ அரச னுக்கு பேர் அழகுடன் தரிசனம் அருள்புரிந்த ஸ்தலம். ஸ்வாமி நித்யசுந்தரேஸ்வரர், தேவி ஒப்பிலா நாயகியம்மை; சூரியதீர்த்தம்-திருஞான சம்பந்தர் பாடல்பெற்றது.

நெடுங்காடு :—தென் இந்தியா, சென்னை ராஜதானி தஞ்சாவூர் ஜில்லா. சிவாலயம்-ஸ்வாமி தான்தோன்றீஸ் வரர், தேவி நெடுந்தவவல்லி. அகஸ்தியர் பூசித்த ஸ்தலம். கோயிலில் அஷ்டலிங்கப் பிரதிஷ்டையுளது. வைப்பு ஸ்தலம்.

நெடுசால் :—கிராமம். கிருஷ்ணகிரி தாலூகா, சென்னை ராஜதானி. பழைய சிவாலயம் கிலமாயிருக்கிறது. பூஜை யில்லை. இங்கு நடராஜமூர்த்தி, சோமாஸ்கந்தமூர்த்தி, நால் வர் விக்ரஹங்கள் முதலியவை இருக்கின்றன—1942-ம் ஆண்டில் கண்டெடுக்கப்பட்டன.

நெடுபுரோலு :—பாபட்லா தாலூகா, குண்டூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சோணேஸ்வரர் ஆலயம்.

நெய்த்தானம் (திரு) :—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, தில்லை ஸ்தானம் என வழங்கப்படுகிறது. திருவை யாறுக்கு 1 மைல் மேற்கிலுள்ளது. சரஸ்வதி பூசித்த க்ஷேத் திரம். ஸ்வாமி நெய்யாடியப்பர் (சமஸ்கிருதத்தில் கிருத புரீஸ்வரர்), தேவி வாலாம்பிகை அல்லது பாலாம்பிகை, காவிரி தீர்த்தம், சப்தஸ்தான க்ஷேத்ரங்களில் ஏழாவது.

நெய்த்தானம் :—சிறு கோயில் - ஆனல் மிகவும் பழமை யானது ; இதைப் புதிப்பித்தபோது புத்தி சாதுர்யமாக கர்ப்பக் கிரஹத்தை மாத்திரம் பழையபடியே இருக்க விட்டிருக்கின்றனர். இங்கு சில பழமையான கல்வெட்டு கள் வட்டெழுத்துகளில் இருக்கின்றன. சம்பந்தர், அப்பர் பாடப்பெற்ற க்ஷேத்திரம். கோயிலின் தென் புறத்தில் நிற்கும்தட்சிணமூர்த்தி உருவம் உளது. மைநாகப் பர்வ தத்தில் பரமசிவம் நின்றுகொண்டு உபதேசம் செய்த படியால் தட்சிண மூர்த்தி இங்கு நிற்கும் கோலத்தில் இருப்பதாகக் கூறப்படுகிறது. சுயம்புலிங்கம் பசுக்கள் நெய்கலந்த பாலினல் அபிஷேகம் செய்தபடியால் இது நெய்த லிங்கேஸ்வரர் என்று பெயர் பெற்ற தென்பர். விமானம் தஞ்சாவூர் கோயில் விமானத்தைப் போன்றது.

நெய்யடிப் பாக்கம் :—தென் இந்தியா, காஞ்சீபுரம் தாலுகா, செங்கல்பட்டு ஜில்லா, பிரீதிகங்கீஸ்வரர் கோயில்; கல்வெட்டுகளில் பிருதியங்கர உடையார் என்று ஸ்வாமியின் பெயர் கூறப்பட்டிருக்கிறது' இங்கு மருந்தீஸ் வரர் கோயில் என்று மற்றொரு சிவாலயமுண்டு, ஸ்வாமி பெயர் மருந்தீஸ்வர முடைய நாயனர் என்றிருக்கிறது.

நெய்வாசல் :—புதுக்கோட்டை சமஸ்தானம் திருமையம் தாலுகா, சிவாலயம்.

நெய்வார்:—(திரு) ஈஸ்ட்-இந்தியன் ரெயில் ஸ்டேஷன்-சிவாலயம்.

நெல்லிக்கா :—(திரு) திருப்பத்தூருக்கு தெற்கே 8 மைல். அற்பிசிமாசம் கிருஷ்ண பட்சம் சதுர்த்தி முதல் 7 நாளும், மாசி மாசம் 18 முதல் 7 நாளும் அஸ்தமன சமயத்தில் சூரிய கிரணங்கள் லிங்கத்தின்மீது விழுகின் றன. சங்கிதி மேற்கு பார்த்தது. ஸ்தல விருட்சம் நெல்லி மரம். இதன் காய்கள் ஸ்வாமிக்கு நிவேதனம் செய்யப்படு கின்றன. கோயிலுக்குத் தெற்கே பிரம தீர்த்தமும், வடக்கே சூரிய தீர்த்தமும் இருக்கிறது. பிரமன் பூஜித்த ஸ்தலம். திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது. ஸ்வாமி நெல்லிவனேஸ்வரர், தேவி மங்களேஸ்வரி.

நெல்வாயில் :—சிவபுரி என தற்காலம் வழங்கப்படுகிறது. சிதம்பரத்திற்கு 3 மைல் தெற்கு ; சென்னை ராஜதானி; தஞ்சாவூர் ஜில்லா;சிவாலயம். கண்வரிஷி பூசித்த ஸ்தலம்; ஸ்வாமி உச்சி நாதேஸ்வரர், தேவி கனகாம்பிகை, கிருபா சமுத்திர தீர்த்தம். இங்கு இரண்டு ஆலயங்கள் உள. வடக்கேயிருக்கும் ஆலயம் உச்சி நாதேஸ்வரர் கோவில், தெற்கேயிருக்கும் ஆலயத்தில் திருக்கழிப்பாலையிலிருந்த பால்வண்ண ஸ்வாமி லிங்க மமைக்கப்பட்டிருக்கிறது. திருக்கழிப்பாலையிலியிருந்த ஆலயம் கொள்ளிடத்தியினல் கொண்டுபோய் விடப்பட்டது. திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது.

நெல்வாயில் அறத்துறை :—(திரு) இதுவே திருவாத்துறை யாம்; பெண்ணாகடத்திற்கு 4 மைல், சென்னை ராஜதானி; திருஞான சம்பந்தருக்கு சிவபெருமான் முத்துச் சிவிகை முத்துக்கொடை, முத்துச் சின்னங்கள் அருளிய ஸ்தலம். சப்தரிஷிகளும் இந்திரனும் பூசித்த ஸ்தலம்; ஸ்வாமி அறத் துறைநாதர், தேவி ஆநந்தநாயகி, கெடில நதி வெள்ளாறு தீர்த்தம். இதற்குப் போவதற்கு விருத்தாசலத்தி லிறங்கிப் போகலாம். மூவர் பாடல் பெற்றது.

நெல்வெண்ணெய் :—(திரு) நெய்வெண்ணெய் எனவும் வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி; மாம்பழப்பட்டு ஸ்டேஷனுக்கு 19 மைல் தென்மேற்கு; சனகாதி நான்கு ரிஷிகள் பூசித்த ஸ்தலம். ஸ்வாமி வெண்ணெயப்பர், தேவி நீலமலர்க்கண்ணியம்மை, பெண்ணை நதி ; திருஞான சம்பந்தர் பாடல்பெற்றது.

நெல்வேலி :—(திரு) மேற்படி ஜில்லா, சென்னை ராஜ தானி; இதற்கு வேணுவனம், பிரம விருத்தபுரம், தாருகா வனம் என்றும் பெயர். தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன்; பெரிய சிவாலயம்; ஸ்வாமி நெல்லையப்பர், அநவரத நாதர், சாலிவாடீஸ்வரர். வேணுவனேஸ்வரர்; தேவி காந்திமதி யம்மன். தீர்த்தங்கள் பொற்றுமரை, கம்பாநதி, சிந்துபூத் துறை. ஹேமபுஷ்கரிணி, சர்வ தீர்த்தம், தாமிரபர்ணி நதி. இங்கு நடராஜப் பெருமானுக்கு பஞ்ச சபைகளில் ஒன்று கிய தாம்ர சபை ; நடராஜ விக்கிரகம் பெரியது. வேத

சர்மர் தமது நிவேதனத்திற்காக உலரவைத்த நெல்லை வெள்ளம் கொண்டுபோகாதபடி, ஸ்வாமி வேலிகட்டி காத்தருளிய ஸ்தலம். அகஸ்தியர், பிரம்மா, விஷ்ணு பூசித்த ஸ்தலம். பிரம்மோத்சயம் ஆனிமாசம் 45 நாட்கள்; நெல்லையப்பருடைய 9 நாள் உற்சவத்தில் 7-வது நாள் காலை அம்பிகை கிருஷ்ணவேஷ உற்சவம் பார்க்கத் தக்கது. நெல்வேலி கட்டின திருவிளையாடல் தைமாசம், திருக்கலியாணம் அற்பிசி மாசம். இங்கே கோயிலில் ஸ்வாமி சந்நிதியில் உள்ள சில கற்றூண்களைத் தட்டினால் சங்கீத ஸ்வரங்கள் பேசுகின்றன. பரமசிவத்தின் திருக்கலியாணக் கோலம் அழகியது. நடு மண்டபத்தில் பாண்டிய அரசர்களுடைய சிலைகள் இருக்கின்றன. மண்டபம் 756 அடி நிகளம், 58 அடி அகலம்; ஒரே காலத்தில கட்டப்பட்டது. நிகளத்தில் இரண்டு பிரிவாக்கப்பட்டு ஸ்வாமி கோயில் அம்மன் கோயில் அக்கம்பக்கமாகக் கட்டப்பட்டிருக்கிறது. ஸ்வாமி கோயிலில் 3 கோபுரங்களும் அம்மன் கோயிலில் மூன்று கோபுரங்களும் இருக்கின்றன. இவைகளுக் கிடையில் ஒரு கோபுரமுண்டு. இங்கு 1000-க்கால் மண்டபமுண்டு. 63அடி அகலம் 520அடி நிகளம் (10-100). அம்மன் கோயில் கோபுரம் ஸ்வாமி கோயில் கோபுரத்தை விடஉயர்ந்தது. ஸ்வாமி கோயில் கோபுரம் அகலம் அதிகம் (சிதம்பரம் கோயில் கோபுரத்தைப்போல்). ஸ்வாமி கோயிலில் தென்காசியிலிருப்பதுபோல் பெரிய சில்பங்களிருக்கின்றன. ஸ்வாமி கோயிலுக்கும் அம்மன் கோயிலுக்கும் எதிரில், கூடாரம்போல் கட்டப்பட்டிருக்கிறது. இது புதிய கட்டிடம். கோயிலுக்குள் ஒரு பெரியகுளமும் வசந்த மண்டபமுமுண்டு. ஸ்வாமி கோயில் மண்டபத்தில் இரண்டு பெரிய ஸ்தம்பங்கள் 100 சிறு தூண்களாக வெட்டப்பட்டிருக்கின்றன. கோயிலில் முக்கிய கணபதிக்கு நல்ல பொல்லாப் பிள்ளையார் என்று பெயர். இங்குள்ள தர்ம சபையில் மரத்தாலாகிய நடராஜர் விக்ரஹம் உளது. இதற்கு சந்தன நடராஜர் என்று பெயர்; இதற்கு சந்தனக் காப்பு ஒன்றுநாள். திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது. இங்கு பல சத்திரங்கள் உண்டு; அவற்றுள் முக்கியமானவை லோகல்பண்டு சத்திரம், 2 அணை முதல் 5 அணை வரை குடிக்கூலி; ஸ்டேஷனுக்கு 1 பர்லாங். (2) வீரபத்திர செட்டியார் சத்திரம் 3 பர்லாங். (3) நாட்

டுக்கொட்டை செட்டியார் சத்திரம்-குறுக்குத்துறை (பிர பல சுப்பிரமணியர் க்ஷேத்திரம்)யிலுளளது. இங்கு சிந்துபூந் துறையில் ஒரு சிவாலயமுண்டு. வடக்கில் மூர்த்தீஸ்வரம் எனும் சிவாலயமுமுண்டு.

நேற்குன்றம்:—சென்னை ராஜதானி; சென்னைக்கு 4 மைல்-சிவாலயம் வைப்புஸ்தலம்.

நேரூர்:—கரூர் தாலுகா கோயமுத்தூர் ஜில்லா சென்னை ராஜதானி. இதற்கு அக்னிபுரம் என்றும் பெயர். சிவாலயம்-அக்னி பூசித்தது. சுயம்புலிங்கம்.

நேரூர்:—திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜ தானி; கரூருக்கு 5½ மைல், பழய சிவாலயம். கோயிலுக் குள் சதாசிவப் பிரம்மத்தின் சமாதியிருக்கிறது.

நேமம்:—சென்னை ராஜதானி திருச்சிராப்பள்ளி ஜில்லா; திருக்காட்டுப்பள்ளிக்கு 2 மைல். சிவாலயம்-ஸ்வாமி ஐராவதேஸ்வரர், தேவி அலங்காரி யம்மன். ஐரா வதம் பூசித்த ஸ்தலம். ஊர்வசி சாபம் தீர்த்த ஸ்தலம்.

நைமிசாரண்யம்:—வட இந்தியா, சிவாலயம்-சுயம்பு லிங்கம்; ஸ்வாமி தேவதேவேஸ்வரர்.

நைஷாம் பட்டணம்:—குண்டூர் ஜில்லா, தெனலி தாலுகா, சென்னை ராஜதானி. சிவாலயம்-ஸ்வாமி கோகர் ணேஸ்வரர்.

நௌநகர்:—இதற்கு ஜாம்நகர் என்றும் பெயர். வட இந்தியா ரெயில் ஸ்டேஷன்; சிவாலயம்.

நௌநீகி:—பல்லாரி ஜில்லா சென்னை ராஜதானி. இங்குள்ள குன்றின்மீது சிவாலயம். ஸ்வாமி மல்லீஸ்வரர்.

பஞ்சாக்கை:—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா. சிவாலயம்-ஸ்வாமிபஞ்ச வர்ணேஸ்வரர், உமாதேவி-வைப்பு ஸ்தலம்.

பகலூர்:—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி. நந்நிலத்திற்கு 7 மைல். சிவாலயம்; கோயில் மூன்று பக்கம்

தெப்பக்குளத் தண்ணீரால் சூழப்பட்டிருக்கிறது. அப்பர் சிவசாயுஜ்ய மடைந்த ஸ்தலம், பிரம்மோற்சவம் சித்திரை மாசம்.

பகேஸ்வர் :—இதற்கு காஞ என்றும் பெயர். பிர்பூம் ஜில்லா, வங்காள ராஜதானி. இங்குள்ள நதியோரம் ஒரு சிவாலயமுண்டு.

மங்கூரா பிரிவு :—வங்காள ராஜதானி. இங்கு 3 சிவாலயங்கள் உள. (1) பாஹ—லாரா கிராமம்; சிவாலயம் பெரியது, செங்கல் கட்டடம. ஸ்வாமி சித்தேஸ்வர் மகாதேவ். (2) விஷ்ணுபூர் (விஷ்ணு புரம்) சிவாலயம் ஸ்வாமி மல்லேஸ்வரர், வங்காள சில்பம். (3) எட்டேஸ்வர் சிவாலயம், விஷ்ணுபுர அரசர்களால் கட்டப்பட்ட கோயில்; இங்கு ஒரு ஒரு கூபத்தில் சிவலிங்கம் இருக்கிறது. ஸ்வாமி அநாதிலிங்கேஸ்வரர், சுயம்பு என்பர். இதற்கு சித்திரை மாசம் சாரகி பூசை என்னும் விசேஷ பூசை நடக்கிறது.

பசுபதி :—கிராமம், நேபாள ராஜ்யத்தி லுள்ளது. இந்தியாவிற்கு வடக்கில்-சிவாலயம் வாக்மதி நதியின் வட கரையிலுள்ளது. காட்மாண்டுவுக்கு 3 மைல். இங்கு பல சிவாலயங்கள் இருக்கின்றன. அவற்றுள் முக்கியமானது பசுபதி நாதர் கோயில்-இங்கிருக்கும் சிவலிங்கம் மிகவும் பிரசித்தியானது. இங்குள்ளவர்கள் இதை காசிலிங்கத்திற்குச் சமானமாக எண்ணுகின்றனர். கோயில் மரத்தாலாயது; இரட்டைக் கூரை யுடையது; பர்மா, சீன தேசத்துக் கோயில்களைப் போன்றது. கோயிற் கதவுகள் வெள்ளியினல் வேய்ந்தவை. கோயிலுக்கெதிரில் நந்தியிருக்கிறது. தற்காலக் கோயில் 17-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாக எண்ணப்படுகிறது. கோயிலுக்கெதிரிலும் கூரையிலும் பெரிய திரிசூலம் வைக்கப்பட்டிருக்கிறது.

பஞ்ச நதிக் குளம் :—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி-சிவாலயம்.

பஞ்சதார்லா :—சரங்கித்தி தாலுகா, விசாகப்பட்டணம் ஜில்லா, சென்னை ராஜதானி. பஞ்சதார்லா-5 தாரைகள்-

சிவாலயம்-இங்கு பெரிய லிங்கத்தில் 1020 சிறு லிங்கங்களீ அடங்கியிருக்கின்றன. (12+85) இதற்குக் கோடிலிங்கம் என்று பெயர். ஸ்வாமி தர்மலிங்கேஸ்வரர்.

பஞ்சமா தேவர் :—கரூர் தாலுகா, சென்னை ராஜதானி. சிவாலயம் - பிரம்மாவுக்கு சிவமாகவும் விஷ்ணுவாகவும் காட்சியளித்த ஸ்தலமென்பர் - பஞ்சநாதர் + மாதவர் = பஞ்சமாதவர் என்றுயிற்றும்.

பட்டமடை :—திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜதானி. சிவாலயம் ஸ்ரீ வல்லீஸ்வரம்-ஸ்வாமி வல்லீஸ்வரர்-வில்வநாதர், தேவி-உமையம்மை. இங்குள்ள கல்வெட்டொன்றிலில் பூர்வகாலத்தில் உற்சவ காலத்தில் இங்கு தாசிகள் நாடக மாடினதாக அறிகிறோம். பத்துமடை பத்தமடை யென்றுய தென்பர். திருநெல்வேலிக்கு 10 மைல்; சேரமா தேவிக்கு 2 மைல். கன்னடிய காலை அடுத்தது.

பட்டாளம் :—தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன், சிவாலயத்திற்கு புலிப்புறக் கோயில் என்று பெயர். ஸ்வாமி திருப்புவீஸ்வரர் (புலீஸ்வரர் ?)

பட்டீஸ்வரம் :—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி. கும்பகோணத்திற்கு 4 மைல் தென் மேற்கு-காமதேனுவின் புதல்வியாகிய பட்டி பூசித்த ஸ்தலம், எனவே பட்டீஸ்வரம் என்றுயது. பரமசிவம் திருஞான சம்பந்தர்க்கு முத்துப் பந்தல் அளித்த ஸ்தலம். ஸ்வாமி பட்டீசுரர், தேவி பல்வளை நாயகி, ஞானம்பிகை; ஞான தீர்த்தம் கருட தீர்த்தம்; வன்னி விருட்சம். கோயிலில் ஸ்ரீ ராமர் சிவபெருமானைப் பூசிப்பதுபோல் ஒரு சிற்பம் உண்டு. நாயக அரசர்களின் மந்திரி ஆகிய கோவிந்த தீட்சிதர் சிலை, அம்மன் சன்னிதியிலிருக்கிறது. இங்குள்ள அகோர மூர்த்தி பார்க்கத்தக்கது. திருஞான சம்பந்தர் தூரத்தில் எழுந்தருளியபோதே ஸ்வாமி நந்தியை விலகச் செய்து தர்சனம் கொடுத்த க்ஷேத்திரம். அம்பாள் தபஸ் செய்வது போலும், பிறகு லிங்கத்தை தழுவியதுபோலும் சிலைகளிருக்கின்றன; மிகவும் அழகியவை. திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது. திருஞான சம்பந்தர் உற்சவ

மூர்த்தி அழகியது. ஆனிமாசம் முத்துப் பந்தல் உற்சவம் மிகவும் விசேஷம்.

பட்டுக் கோட்டை :—இதற்கு அண்டமி என்றும் பெயர். சிவாலயம்-ருத்ரபதியார் அன்ன உற்சவம் ஐப்பசி மாசம் விசேஷம்.

படபாமுகம் :—வட இந்தியா, சுயம்புலிங்கம், ஸ்வாமி அனலேஸ்வரர்.

படவேடு :—வேலூர் தாலுகா, வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி. இங்கு இரண்டு சிவாலயங்கள் உள. (1) அம்மையப்பேஸ்வரர் கோயில், (2) சோமநாதேஸ்வரர் கோயில்.

படாஸ் :—வட இந்தியா ஜி. ஐ. பி. ரெயில் ஸ்டேஷன் சிவாலயம்-ஸ்வாமி நாகேஸ்வர். இங்கு தர்மசாலை யுண்டு.

படுவனம்பூர் :—மங்களூர் தாலுகா, தென் கன்னட ஜில்லா, சென்னை ராஜதானி. சிவாலயம்.

படேஸ்வர் :—வட இந்தியா, ஆக்ராவிலிருந்து எடாவா வுக்குப் போகும் வழியிலிருக்கிறது. பாஹ் ஸ்டேஷனி லிருந்து 6 மைல் வடமேற்கு, சிவாலயம்; ஸ்வாமி வடேஸ்வர நாதர், வட விருட்சம் (ஆலமரம்) கோயில் 1646வது கட்டப் பட்டது. ஜம்நா நதியின் வட கரையிலுள்ளது.

பண்டா ஜில்லா:—ஐக்கிய மாகாணம்-கலிஞர் கிராமத்தில் சிவாலயம்; ஸ்வாமி பல்கண்டி மஹாதேவர். லிங்கம் 6 அடி உயரம். கோயில் கோட்டைக்குள் உளது. பாதாள கங்கை தீர்த்தம், கோடி தீர்த்தம். இங்கு மற்றொரு சிவாலய மூண்டு. ஸ்வாமி நீலகண்டேஸ்வரர். குகைக்கோயில்-கருப்பு லிங்கம், 4 அடி 5 அங்குல உயரம். இதற்கு வெள்ளியினல் இரண்டு கண்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

பசுபதீஸ்வரம் :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, சிவாலயம் - சத்தமாத்ருக்களுள் ஒருத்தியாகிய வைஷ்ணவி பூசித்த ஸ்தலம். வள்ளலார் கோயிலுக்கும் தர்ம புரத்திற்கும் இடையிலுள்ளது.

பண்டார வடை :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா. சிவாலயம்-மச்சபுரீஸ்வரர் ஜகதாம்பாள். ரெயில் ஸ்டேஷன்.

பண்டில் கண்ட் பிரிவு:—வட மேற்கு மாகாணம், வட இந்தியா. இங்கு பல சிவாலயங்கள் உள. (1) அஜைகர் கிராமம் சிவாலயம். பஞ்சமுக லிங்கம். (2) மீரட் பிரிவு மாபூர் கிராமம். மாயா தேவியின் கோயிலுக்கருகில் ஒரு சிலமாய்ப்போன சிவாலயமுண்டு. (3) ஆக்ரா பிரிவு - ஈடா ஜில்லா, அத்ரஞ்சிகேரா கிராமம், சிவாலயம் பாழடைந் திருக்கிறது. மண்மேட்டின் மீது 5 சிவ லிங்கங்கள் உள; அதில் ஒன்று 6 அடி உயரம். (4) ஷிகோபாத் கிராமம், சிவா லயம்-பஞ்சமுக மஹா தேவர் கோயில்.

பண்டரீ புரம்:—மத்ய இந்தியாவிலுள்ளது; ரெயில் ஸ்டேஷன். (பிரபல விஷ்ணு ஸ்தலம்) வாடிஹட்கி, ஷோலாபூர், குருட்வாடி மார்க்கமாய்ப் போகவேண்டும். சிவாலயம்-ஸ்வாமி மல்லிகார்ஜுனர், விட்டலர் கோயிலின் மஹாத்வாரத்திலிருக்கிறது. ராமசந்திர சதாசிவன் என்பவரால் கட்டப்பட்டதென்பர். அன்றியும் விட்டல மூர்த்தியின் சிரசில் சிவலிங்கம் உண்டென சிலர் எண்ணு கின்றனர்; அன்றியும் இக் கோயிலில் சித்தி வினாயக மூர்த்தி யுண்டு. கால பைரவரின் தேவாலய முண்டு. மேலும் அரூகாமையில் முரளீதரர் தேவாலயத்தைச் சார்ந்ததாய் வெள்ளைக் கல்லாலாய மஹாதேவ மூர்த்தியுளது. இது இரண்டாம் பேஷ்வா பாவா ஜிராவால் ஸ்தாபிக்கப்பட்டது. இங்குள்ள புண்டலீகன் கோயிலிலும் ஒரு சில லிங்கம் உண்டு. இதற்கு பித்தளை கலசமணிவித்து நகை வஸ்திரங் களால் அலங்காரம் செய்கின்றனர்.

பண்டாரகல்லூர்:—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜ தானி சிவாலயம். இங்குளள வெண்கல பிட்சாடன மூர்த்தி பார்க்கத் தக்கது.

பண்ணியூர்:—மலையாளம் ஜில்லா, சென்னை ராஜ தானி. இங்குள்ள வாரஹ மூர்த்தி கோயிலுக்குள் ஒரு சிவ சந்நிதி யுண்டு.

பணகுடி:—திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜ தானி - சிவாலயம்.

பணமலை:—விழுப்புறத்திற்கு 15 மைல் தென் மேற்கு; தென் ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி. சிவாலயம்

குகைக் கோயில்; பல்லவ சிற்ப மமைந்தது. ராஜ சிம்மன் எனும் இரண்டாவது நரசிம்மனால் (675—710) வெட்டப் பட்டது. லிங்கம் 16 பட்டைகள் அமைந்தது. லிங்கத் திற்குப் பின் சோமாஸ்கந்த மூர்த்தியும், பக்கத்தில் பிரம்ம விஷ்ணுக்களும் சேதுக்கப்பட்டிருக்கிறது. சிவாலயம் மலை உச்சியில் உளது. ஸ்வாமி தாளபுரீஸ்வரர்; அடி வாரத்தில் மஹிஷாசுரமர்த்தனி குகைக் கோயில் கர்ப்பக் கிரஹத்தைச் சுற்றிலும், காஞ்சி கைலாச நாதர் கோயிலி லிருப்பதுபோல் சிறுகட்டிடங்களுண்டு; கிழக்கும் மேற் கும் பார்த்தவை. இவைகளில் சிவலிங்கங்கள் உள. தூண்களில் சிங்கங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன.

பத்தாதாக்கல்:—பம்பாய் ராஜதானி, பிஜபூர் ஜில்லா. இங்கு பல சிவாலயங்கள் உண்டு. (1) விரூபாட்சர் கோயில், பழைய பெயர் லோகேஸ்வரர் கோயில், சாளுக்கிய அரச னாகிய இரண்டாம் விக்ரமாதித்யன் மனைவியாகிய லோகமா தேவியால் (733—747) வருஷங்களில் கட்டப்பட்டது. இதைப்பார்த்துதான் இதைப்போல் எல்லோராவிலிலுள்ள கைலாச கோயில் கட்டப்பட்டதென்பர். கோயில் நடுவில் சதுர விமான மூடையது; அதில் மூன்று நிலைகள் உள. கோயிலின் வெளிப் பிராகாரம் 224 அடி நிகளம்; கிழக்கு மேற்கால், 105 அடி அகலம்; மேற்கில் கொஞ்சம் குறுகியிருக்கிறது. வெளிப் பிரகாரத்தைச் சுற்றிலும் சிறு கோயில்கள் இருக்கின்றன. இவற்றுள், சிலதான் இடியாமல் இருக்கின்றன. கோயில் கிழக்கு பார்த்தது; கர்ப்பக் கிரஹத்திற்கு முன்பாக மஹா மண்டபம் 50 அடி 8 அங்குலம் × 45 அடி 10 அங்குளம்; 16 ஸ்தம்பங்களை யுடையது. இதன் கூரையின் மத்தியில் ஒரு பெரிய நாகராஜனுடைய உருவமும் அவனது இரண்டு மனைவிகளின் உருவங்களும் உள. இம் மண்டபத்திற்குள் வெளிச்சம் வர 12 துவாரங்களையுடைய படல்கள் அமைக் கப்பட்டிருக்கின்றன; மிகவும் அருமையான வேலைப்பா டுடையவை. கர்ப்பக்கிரஹம் 12 அடி சதுரம். நடுவில் லிங்கம்; அந்தராளம் 10 அடி நிகளம். ஒருபுறம் சிவலிங்கத் தின் பக்கத்தில் பிரம்மாவும் விஷ்ணுவும் இருக்கின்றனர். குள்ள லிங்கோத்பவர் சிலை பார்க்கத்தக்கது. இதில் பிரம்மா மனுஷ்ய உருவில் இருக்கிறார் (அன்னப்பட்சியா

யிராமல்) கர்ப்பக்கிரஹத்தின் தென் புறம் தட்சிண மூர்த்தி கிடையாது. கோயிலின் தூண்கள் மிகவும் அழகியவை. அவைகளில் ராமாயணக் கதை முதலியன சிற்பங்களால் காட்டப்பட்டிருக்கின்றன. இங்கு மல்லி கார்ஜுனர் கோயில் ஒன்று உண்டு; (737-746) கட்டப் பட்டது.

(2) சங்கமேஷ்வர் கோயில். பழைய பெயர் விஜயேஸ் வரர் கோயில், விஜயாதித்ய சத்யாஸ்ரயரால் (696-733) கட்டப்பட்டது. விரூபாட்சர் கோயிலுக்கு கொஞ்சம் வட மேற்கிலுள்ளது. இக் கோயிலில் தற்காலம் பூசையில்லை; இடிந்திருக்கிறது.

(3) பாப்நாதர் கோயில். இது ஆதியில் சூரியன் கோயிலாயிருந்து, பிறகு வைஷ்ணவ கோயிலாகி, கடைசி யில் சிவாலயமாக மாற்றப்பட்டதென்று மிஸ்டர் கசின்ஸ் (Cousins) எண்ணுகிறார். சுவரிலுள்ள விக்ரகங்களின் பெயர்கள் கீழே செதுக்கப்பட்டிருக்கின்றன. இது கி.பி. 700-ல் கட்டப்பட்டது.

(4) காசிவிஸ்வ நாதர் கோயில். (5) காலக நாதர் கோயில். வட இந்திய ஆரிய கட்டடம், அடிபீடம் விசித்திரமானது. ஆற்றுநீரால் அழிக்கப்படாதபடி கர்ப்பக்கிரஹத்தைச் சுற்றி உயரமான பீடம் கட்டப்பட்டிருக்கிறது.

(6) கட்சித்தேஸ்வரர் கோயில். வட இந்திய ஆரிய கட்டடம்.

(7) ஜம்புலிங்கம் கோயில். (8) சந்திரசேகரர் கோயில். (9) மல்லிகார்ஜுனர் கோயில்-சாளுகிய கட்டடம். (10) சங்கர நாராயணர் கோயில்.

பத்மநாத புரம் :—திருவாங்கூர் ராஜ்யம். சிவாலயம்.

பத்மநேரி :—நாங்குநெரி தாலுகா, திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜதானி. சிவாலயம்-சுவாமி நெல்லை யப்பர்.

பத்ரவடம் :—வட இந்தியா கங்காத்வாரத்திற்கு அருகி லுள்ளது. சிவாலயம்-ஸ்வாமி பத்ரேசர்; சுயம்புலிங்கம்.

பத்ரி நாராயணம் :—வட இந்தியா, சிவாலயம் ஸ்வாமி பில்வகேத் மஹாதேவ்-இங்கு பல தர்மசாலைகளுண்டு.

பதான் :—(படான் ?) வட இந்தியா, நேபாளராஜ்யத்தி லுள்ளது. சிவாலயம் மரத்தாலாயது-ஸ்வாமி மஹாதேவர். கோயில் பர்மா சீலை கட்டடங்களைப் போன்றது. கூரை இரண்டு அடுக்குகளுடையது, மரத்தாலாயது.

பந்தணை நல்லூர் :—(திரு) சென்னை ராஜதானி, திரு விடை மருதூருக்கு 8 மலை, வடகிழக்கு ; சிவாலயம். ஸ்வாமி பசுபதீஸ்வரர், தேவி காம்பனதோளி யம்மை, ஸ்தல விருட்சம் கொன்றை, புஷ்கரிணி தீர்த்தம்; தேவ கன்னியரும், காமதேனுவும் பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமி யின் மணவாளக்கோலம் பார்க்கத் தக்கது. அம்மன் சந்நிதி வடக்கு பார்த்தது.

பத்துப்பூர் :—ஜி. ஐ. பி. ரெயில்வே ஸ்டேஷன்; கத்ரி-பீனு பிரிவு. சிவாலயம் 1781-வது கட்டப்பட்டது-ஸ்வாமி ஜகேஷ்வர் மஹாதேவ்.

பம்பர்டே :—பம்பாய் ராஜதானி, பூனாவுக் கருகி லுள்ளது. சிவாலயம்-ஸ்வாமி பாஞ்சாலேஷ்வரர்.

பம்பாய் :—பம்பாய் ராஜதானியின் முக்கிய பட்டணம். இங்கு அடியிற் கண்ட சிவாலயங்க உண்டு. (1) பூலேஷ் வர் கோயில், பாய்தோணி எனும் இடத்திலுள்ளது; சரி யான பெயர் போலேஷ்வர். கோயில் கருப்புக்கல்லா லாயது. பூலேஷ்வர் கோயில் 200 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது; 1830-வது புதுப்பிக்கப்பட்டது. சுயம்பு லிங்கம் என்பர்; தேவி பார்வதி. (2) வால்கேஷ்வர் கோயில். வாலுகா = மணல், ஸ்ரீ ராமர் பூசிப்பதற்காக லட்சு மணரால் ஸ்தாபிக்கப்பட்ட லிங்கம் என்பது ஐதிகம். (3) மங்களேஷ்வர் கோயில் - பழைய கோயில் போர்த்துகேயரால் இடிக்கப்பட்டது; புதிய கோயில் 1715-வது கட்டப் பட்டது ராமகாமத் என்பவரால். (4) பாபுல்நாத் கோயில். சிலாஜி எனும் தட்டானல் 1770-வது கட்டப்பட்டது; ஸ்வாமி-மஹாதேவர், கருப்பு லிங்கம் 1840-வது புதுப்பிக் கப்பட்டது. சிராவண மாசத்தில் நெய் பூஜை விசேஷம்.

கோயிலுக்குள் போக 100 படிகள் ஏறிப்போகவேண்டும். கர்பக்கிரஹத்திலுள்ள சிவலிங்கத்தின் பேரில் ரூபாய்களாலாய கலசம் உளது. எதிரிலுள்ள நந்திகேஸ்வரருக்கு வெள்ளிக் கொம்புகள். இங்குள்ள சபா மண்டபத்திற்கு கைலாச மென்று பெயர். இது மலபார் குன்றில் இருக்கிறது, (5) மஹாலட்சுமி கோயிலின் சுற்றுப்புரத்தில் மயூரேஷ்வர், ராமேஷ்வர், தக்லேஷ்வர் எனும் மூன்று சிவ சந்நிதிகளுண்டு- (6) மம்பா தேவி கோயில் பிரகாரத்தில் மஹாதேவர் சிவாலயமுளது.

பர்ணசாலா :—கோதாவரி ஜில்லா, சென்னை ராஜதானி. சிவாலயம் (இங்குதான், ராவணன் சன்யாசியாக சீதையைக் கவர்ந்ததாக ஐதிகம்.)

பாப்பு :—திரி பரப்பு என வழங்கப்படுகிறது. திருவாங்கூர் ராஜ்யம், சிவாலயம்-ஸ்வாமி-மஹாதேவர்.

பயற்றூர் :—(திரு) பயற்றங்குடி என வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி ; விற்குடிக்கு 3 மைல் கிழக்கு. வெட்டாறு ஸ்டேஷனிலிருந்து 6½ மைல். தஞ்சாவூர் ஜில்லா ; சிவாலயம், ஸ்வாமி-திருப்பயற்றீஸ்வரர் தேவி - காவியங்கண்ணியம்மை. பைரவ ரிஷி பூசித்த க்ஷேத்திரம் ; அப்பர் பாடல் பெற்றது.

பர்லிவயிஜ்நாத் :—வட இந்தியா, சிவாலயம். 12 ஜோதி லிங்கங்களில் ஒன்று இங்குளதாம்.

பர்காணக்கள் .—21 பர்காணைக்கள், வங்காள ராஜதானி; இங்கு அடியில் குறித்த சிவாலயங்கள் உள. (1) தட்சிண பாரா செட் கிராமம் ; சிவாலயம், ஸ்வாமி-ஆதிய மஹேஸ்வர் கோயில் சௌத்ரி குடும்பத்தாரால் 180 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது. (2) கமர்கட்டி கிராமம் ; இதில் 12 சிறு சிவாலயங்கள் உண்டு. (3) கார்டா-இங்கும் 12 சிறு சிவாலயங்கள் உள.

பர்ட்வான் பிரிவு: —வங்காள ராஜதானி. இங்கு பல சிவாலயங்கள் உள. (1) பாகன் பாரா கிராமம், கோபேஸ்வர் சிவாலயம். (2) பாராகர்-இங்கு 4 சிவாலயங்கள் உள.

(3) கால்ஞ கிராமம், இங்கு சிவாலயம், மஹாராஜா சந்திர பஹதூரால் கட்டப்பட்டது. இங்கு 109 சிவலிங்கங்கள் இருக்கின்றன - 66 வெளிப் பிரகாரத்தில் - 42 உட்பிரகாரத்தில் - நடுவில் 1 வெள்ளியாலாகிய லிங்கம். (4) மாள டேஷ்வர் கிராமம் சிவாலயம், ஸ்வாமி-மாள்டேஷ்வர்.

பர்ஹாம்பூர் :—சென்னை ராஜதானி, கஞ்சம் ஜில்லா. சிவாலயம்.

பரகலி :—பல்லாரி ஜில்லா, சென்னை ராஜதானி; கள்ளேஸ்வர் கோயில், சாளுக்கிய கட்டிடம். இதற்குப் பழைய பெயர் காளிதேவ ஸ்வாமி கோயில். இதில் 1000 வருடங்களுக்கு முந்திய கல் வெட்டுகள் உள.

பரக்காலக் கோட்டை :—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி. பட்டுக் கோட்டைக்கு 8 மைல். இதற்குப் புது ஆவுடையார் கோயில் என்றும் பெயர், திங்கட் கிழமை அர்த்த ராத்திரியில் சிதம்பரத்திலுள்ள ஈஸ்வரர் இங்கு வருவதாக ஐதீகம்.

பாங்கூர் :—வட இந்தியா, சீரா தாலுகா; சிவாலயம்.

பரங்கிமலை :—தென் இந்தியர ரெயில்வே ஸ்டேஷன். சென்னை ராஜதானி. காசி விஸ்வநாதர் கோயில்.

பரசலூர் :—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி. மாயவரத்திற்கு 5 மைல் கிழக்கு, சிவாலயம். தட்சன் யாகம் செய்த ஸ்தல மென்பர்.

பரங்குன்றம் :—(திரு) மதுரை ஜில்லா, சென்னை ராஜ தானி, ரெயில் ஸ்டேஷன் (சுப்பிரமணியர் தெய்வ யானையை மணந்த க்ஷேத்திரம்) சிவாலயம்; ஸ்வாமி-பரங்கிரி நாதர், தேவி ஆவுடை நாயகி, சரவணப்பொய்கை தீர்த்தம். கோயில் மலையில் குடையப்பட்டிருக்கிறது. திருஞான சம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்ற க்ஷேத்திரம். இங்கு வெள்ளியாலாகிய சிவாலயம் ஒன்றிருந்ததாக சிலப்பதி காரத்தில் கூறப்பட்டிருக்கிறது. பரங்கிரி மலைக்குத் தெற்கில் உமையாண்டாள் கோயில் எனும் சிவாலயமுண்டு.

ஸ்வாமி - சத்யகிரீஸ்வரர், தேவி - கோவர்த்தனாம்பிகை; குகைக்கோயில், கல்வெட்டுகளில் ஸ்வாமி பெயர் சுந்தர பாண்டிய ஈஸ்வர முடையார் என்றிருக்கிறது. மார வர்மன் பாண்டியனால் 1216-ஆம் வெட்டப்பட்டதாயிருக்க லாம். மண்டபம் 19 × 17 × 9 அடி; கர்ப்பக்கிரஹம் 8 அடி சதுரம். இங்குள்ள நடராஜர் சிலை அழிந்திருக் கிறது. மலையின் மீது ஒரு சுனை இருக்கிறது. அதன் பக்கம், சிவலிங்கம் நந்தி வெட்டப்பட்டிருக்கிறது - விஸ்வ நாதர் - விசாலாட்சி. இதற்குப் பூஜை செய்ய குருக்கள் ஜலத்தில் நீந்திக்கொண்டு போகவேண்டும். இங்குள்ள மீன்கள் பல வர்ணமுள்ளவை. பெரிய கோயிலின் முன் மண்டபத்திலுள்ள சுப்பிரமணியர் தெய்வயானை திருமணக் கோலம் பார்க்கத் தக்கது; அழகிய சில்பம். இங்கு பல சத்திரங்கள் உண்டு.

பரமதி:—திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜ தானி, சிவாலயம் பழமையானது; இதில் பல கல் வெட்டு கள் உள.

பரமேஸ்வர மங்கலம்:—சென்னை ராஜதானி சிவாலயம். ஸ்வாமி-கைலாசநாதர், தேவி-சௌந்தர நாயகி. குபேர தீர்த்தம், லக்ஷ்மி பூசித்த க்ஷேத்திரம்.

பராபர் மலை:—பாட்னா-கயா ரெயில்வேயிலுள்ள பேலா ஸ்டேஷனுக்கு 7 மைல் கிழக்கு. மலையின் உச்சியில் சிவாலயம்; ஸ்வாமி-சித்தேஸ்வரர், லிங்கம் இரவில்தான் பூசிக்கப்படுகிறது. அநந்த சதுர்த்தி பூஜை விசேஷம.

பராய்த் துறை:—(திரு) திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி; எழுமனூர் ஸ்டேஷனுக்கு 1½ மைல், வட கிழக்கு. இந்திரன், குபேரன், சப்த ரிஷிகள், பூசித்த ஸ்தலம். இவ்வூருக்கு அகண்டகாவேரியெனவும் பெயர்-சிவா லயம், ஸ்வாமி-பராய்த்துறை நாதேஸ்வர், தேவி-பொன்மயி லாம்பிகை யம்மை; காவிரி நதி, பராய் விருட்சம். மிகவும் பழைய கோயில். திருஞானசம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. இங்கு மற்றொரு கோயில் தாருகாவனேஸ்வர் கோயில்.

பரிதி நியமம் :—திருப் பரித்தியப்பர் கோயில் எனவும் வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி, சாலிய மங்கலம் ஸ்டேஷனுக்கு 9 மைல் தென் மேற்கு. சூரியன் (பரிதி) பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமி-பரிதியப்பேஸ்வரர், தேவி-மங்களநாயகி, சூரிய தீர்த்தம்; திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. (நியமம் = கோயில்.)

பருவனூர் :—பரவனூர் என்றும் கூத்தராயன் பேட்டை என்றும் அழைக்கப்படுகிறது. சிவாலயம்-பெரிய நாதேஸ்வரர், தேவி-மீனாட்சியம்மை, சக்தி பூஜித்தது; சென்னை ராஜதானி.

பரோச் :—வட இந்தியா ரெயில்வே ஸ்டேஷன் சிவாலயம், ஸ்வாமி-முகதேவர். நர்மதை தீர்த்தம், நர்மதைக் கரையில் அநேகம் லிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன.

பரோடா ராஜ்யம் :—பம்பாய் ராஜதானி; இங்கு அடியிற் கண்ட சிவாலயங்கள் உள. (1) பரோடா பட்டணம், காசி லிங்கேஸ்வர் ஆலயம். (2) பெட்லாட் கிராமம், ராமநாதர் கோயில், சோமநாதர் கோயில். (3) கார்வான் கிராமம், காயாரோஹணர் கோயில், விஸ்வேஸ்வர் கோயில், கோடேஷ்வர் கோயில், ராமநாத் மஹாதேவ் கோயில், வாக்நாத் மஹாதேவ் கோயில், பஞ்சநாத் மஹாதேவ் கோயில், பீம்நாத் மஹாதேவ் கோயில், நக்லேஷ்வர் கோயில், இங்குள்ள சிவலிங்கம் மும் மூர்த்திகளும் காணப்படும்படியான சில்பம். (4) கார்நாலி, சோமேஷ்வர், குபேரேஷ்வர், பாவகேஷ்வர் கோயில்கள. (5) சினூர் கிராமம், பத்ரேஷ்வர், அங்காரகேஷ்வர் கோயில்கள். (6) திலகவாடா கிராமம், மணிநாகேஷ்வர், திலகேஷ்வர் கோயில்கள். (7) காம்ரேக் கிராமம்; கோடேஷ்வர் ஆலயம், தபதிக் கரையிலுள்ளது, மோட்சநாத மாஹேஷ்வர் கோயில, இதுவும் தபதிக் கரையிலுள்ளது. (8) வியாரா கிராமம். நாரத் கங்கையும் தபதியும் சங்கமமாகுமிடத்தில் மஹாதேவர் சிவாலயம். (9) வாகிபூர், உத்கண்டேஷ்வர் மஹாதேவ் கோயில் லிங்கத்தினின்றும சதா தீர்த்தம் வந்துகொண்டிருப்பதாக ஐதீகம், சிவராத்திரி விசேஷம். (10) கடி கிராமம், உதயேஷ்வர் மஹாதேவ் ஆலயம் பழையது; பீமநாத் கோயில், பிம்பலேஷ்வர் கோயில். காசி விஸ்வநாத் கோயில்; இம்

மூன்றும் புதியவை. (11) பட்டன் கிராமம், உமாமஹேஷ்வர் ஆலயம்; வன்ராஜ் என்பவரால் 746-ஆம் கட்டப்பட்டது. (12) சித்பூர் கிராமம், இங்குள்ள சிவாலயத்திற்கு ருத்திர மாலா என்று பெயர்: பாழடைந்திருக்கிறது. சித்தேஷ்வர் கோயில், நீலகண்ட மஹாதேவ் கோயில், மற்றும் சரஸ்வதி நதிக்கரையில் பூத்நாத மஹாதேவ் கோயில்; பிரம்மாண்டேஷ்வர் மஹாதேவ் கோயில், அர்படேஷ்வர் மஹாதேவ் கோயில், வால் கேஷ்வர்மஹாதேவ் கோயில், சித்தநாத் மஹாதேவ் கோயில், பிந்து சரோவர தீர்த்தம்; மண்டிகேஷ்வர் கோயில். (13) விஸ்நகர்; பீம்நாத மஹாதேவர் ஆலயம், சோமநாத் மஹாதேவர் ஆலயம், ஜாலேஷ்வர் மஹாதேவ் ஆலயம். (14) வத்நகர், ஹடகேஷ்வர் கோயில், சோம்நாத் கோயில், காலேஷ்வர் கோயில், அஜபாஸ் மஹாதேவர் கோயில், தூளேஷ்வர் மஹாதேவ் கோயில்.

பல்தானா ஜில்லா:—மத்ய மாகாணம். இங்குள்ள சிவாலயங்கள்: (1) அமராபூர் கிராமம்; சிவாலயம் இடிந்திருக்கிறது, ஹேமாத்பண்ட் கட்டமம். (2) சண்டோல் கிராமம், இங்கு இரண்டு சிவாலயங்கள் உள. கர்ப்பக்கிரஹங்கள் 8 கோண முடையவை. (3) சக்லி பட்டணம்; மஹாதேவர் கோயில். (4) தோத்ரா கிராமம் சிவாலயம், ஹேமாத்பண்ட் கட்டடம்; நான்கு வாயில்கள் கோயிலுக்கு இருந்த போதிலும் கிழக்கு வாயில் மாத்திரம்தான் திறக்கப்படுகிறது, மற்ற மூன்று வாயில்களும் எப்பொழுதும் மூடப்பட்டிருக்கின்றன. (5) ஜாபோட் கிராமம் சிவாலயம். (6) கோதாலி கிராமம். சிவாலயம்; ஹேமாத்பண்ட் கட்டடம், கோயில் சாளுக்கிய கோயில்களைப்போல் 3 சந்நிதிகளையுடையது விஸ்வகங்கைக்கரையில் உள்ளது. கோயில் பாழாயிருக்கிறது. இங்கு சிந்தாமணி மஹாதேவர் கோயில் ஒன்றுண்டு. (7) மதா கிராமம், ஹேமாத்பண்ட கட்டடம் சிவாலயம். (8) மால்கி கிராமம் சிவாலயம். (9) ராஜுரா கிராமம் சிவாலயம்; ஸ்வாமி-பரமேஷ்வர், கோயில் மேற்கு பார்த்தது. (10) சாகே கெவான் கிராமம் சிறிய சிவாலயம் (விஷ்ணு ஆலயத்திற்கருகி உள்ளது). (11) சேந்தர்ஜுன் கிராமம் சிவாலயம், ஹேமாத்பண்ட் கட்டிடம். (12) வார்வாண்ட கிராமம், இங்கு சிவாலயத்திற்கு ஏக்நாத் ஆலயம் என்று பெயர். இது சுமார் 800 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது.

சிவாலயங்கள் - - -

- இந்தியாவிலும் அப்பாலும்

நான்காம் பாகம்

நாடகப்பேராசிரியர்

ப. சம்பந்த முதலியார், பி.ஏ., பி.எல்.,

அவர்களால் இயற்றப்பட்டது.

இந்த நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்ற நூல்கள் :

லீலாவதி—சுலோசனை, சாரங்கதரன், மகபதி, காதலர் கண்கள், நற்குல தெய்வம், மனோஹரன், ஊர்வசியின் சாபம், இடைச்சுவர் இரு புறமும், என்ன கோந்திடினும், விஜயரங்கம், கள்வர் தலைவன், தாசிப் பெண், மெய்க்காதல், பொன் விலங்குகள், சிம்ஹளநாதன், விரும்பிய விதமே, சிறுத்தொண்டர், காலவரிஷி, ரஜபுத்ரவீரன், உண்மையான சகோதரன், சதி-சுலோசனை, புஷ்பவல்லி, கேதமஞ்சரி, உத்தம பத்தினி, அமலாதித்யன், சபாபதி முதற்பாகம், பொங்கல் பண்டிகை அல்லது சபாபதி இரண்டாம் பாகம், ஓர் ஒத்திகை அல்லது சபாபதி மூன்றும் பாகம், சபாபதி நான்காம் பாகம், பேயல்ல பெண்மணியே, புத்த அவதாரம், விச்சுவின் மனைவி, வேதாள உலகம், மனோவியால் மீண்டவன், சந்திரஹரி, சுபத்திரார்ஜுனை, கொடையாளி கர்ணன், சஹதேவன் சூழ்ச்சி, நோக்கத்தின் குறிப்பு, இரண்டு ஆத்மாக்கள், சர்ஜன் ஜெனரல் விதித்த மருந்து, மாளவிகாக்னிமித்ரம், விபரீதமான முடிவு; சுல்தான்பேட்டை சப் அஸிஸ்டென்ட் மாஜிஸ்டிரேட், சகுந்தலை, காளப்பன் கள்ளத்தனம், விக்ரமோர்வசி, முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும், நாடகமேடை நினைவுகள் — ஆறு பாகங்கள், நாடகத் தமிழ், யயாதி, பிராம்மணனும் சூத்திரனும், வாணீபுர வணிகன். இரண்டு நண்பர்கள், சத்ருஜித், ஹரிச்சந்திரன், மார்க்கண்டேயர், ரத்னவளி, கண்டு பிடித்தல், கோனேரி அரசகுமாரன், சந்தையிற் கூட்டம், வைகுண்ட வைத்தியர், தீட்சிதர் கதைகள், ஹாஸ்யக் கதைகள், குறமகள், நல்லதங்காள், சிறுகதைகள், நடிப்புக்கலையில் தேர்ச்சி பெறுவதெப்படி ?, ஹாஸ்ய வியாசங்கள், தமிழ் பேசும் படக் காஷ்மி, விடுதிப் புஷ்பங்கள், பேசும்பட அனுபவங்கள், வள்ளி மணம், கதம்பம், மாண்டவர் மீண்டது, ஆஸ்தானபுரம் நாடகச் சபை, சங்கீதப் பயித்தியம், ஒன்பது குட்டி நாடகங்கள், சபாபதி ஜமீன்தார், சிவாலயங்கள்-இந்தியாவிலும் அப்பாலும்-முதல் மூன்று பாகங்கள், சிவாலய சிற்பங்கள், மனோயாட்சி, தீபாவளிவரிசை, இந்தியனும் ஹிட்லரும், காலக் குறிப்புகள், சுப்ரண்ய ஆலயங்கள், தீயின் சிறுதிவலை, கலியோ காதலோ ? முதலின.

முதற் பதிப்பு

"இரத்தின விலாஸ்" அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டது.

காபி ரைட்] 1948 [விலை ரூபா 1.

INSCRIBED

TO

THE BELOVED MEMORY

OF

MY PARENTS

P. VIJIARANGA MUDALIAR

AND

P. MANICKAVELU AMMAL

AND

MY FRIEND

C. RANGAVDIVELU

பரோலி :—வட இந்தியா-ஆதிகாலத்தில் இது சிவாலய மாயிருந்து, பிறகு மாற்றப்பட்டது.

பல்லாரி :—மேற்படி ஜில்லா, சென்னை ராஜதானி; எம். எஸ். எம் ரெயில்வே ஸ்டேஷன். இங்கு இரண்டு சிவாலயங்கள் உண்டு; (1) காகேஸ்வரர் கோயில், (2) கோட்டை மல்லேஸ்வர ஸ்வாமி கோயில்.

பல்லாவரம் :—செங்கல்பட்டு ஜில்லா, சென்னை ராஜ தானி; சிவாலயம். குகைக் கோயில்; ஸ்டேஷனுக்கு அருகில் இழக்கி லுள்ளது: 5 குகைகள் (ஆகவே இதற்கு பஞ்ச பாண்டவர் மலை என்று பெயர்.) இவைகளில் ஆதியில் சிவலிங்கங்கள் இருந்ததாக பிரான்சு தேசஸ்தரான தூப் றெயில் துரை எண்ணுகிறார். தற்காலம் இவைகள் மகம் மதியர் சுவாதீனத்திலிருக்கிறது. மஹேந்திரவர்மன் காலத் தியது- (600-625)

பலகாமி :—அல்லது பெலகாவி, மைசூர் ராஜ்யம், ஷிகார்பூர் ஜில்லா, இங்கு பல சிவாலயங்கள் உள. (1) தட்சிண கேதாரீஸ்வரர் கோயில், இது பழைய சாளுக்கிய கட்டடம். ஒரு மண்டபத்தைச் சுற்றி 3 கோயில்கள் உள. மண்டபத்தின் கூரை இடிந்திருக்கிறது. சிகரத்தில் ஹொய்சால மன்னவர்களுடைய பிருதாகிய யாளி இருக் கிறது. கோயிலுக்கு ஒரு புறம் நந்தி யிருக்கிறது. இங் குள்ள மற்ற கோயில்கள், (1) திரிபுராந்த கேஸ்வரர் கோயில் (2) சோமேஸ்வரர் கோயில், (3) நீலகண்டேஸ்வரர் கோயில்- சிவலிங்கம் பச்சை நிறமானது.

பலால் தேவ் :—பூனா ஜில்லா, பம்பாய் ராஜதானி சிவாலயம்; 1680-வது கட்டப்பட்டது.

பலிகட்டம் :—விசாகப்பட்டணம் ஜில்லா, சென்னை ராஜதானி; சிவாலயம், ஸ்வாமி-பிரம்மேஸ்வரர் - கோயில் மேற்கு பார்த்தது, கோயில் கற் பாறையின்மீதுள்ளது. அடியில் உத்தர வாஹினி ஓடுகிறது. ராசாபூர் ஸ்டேஷ னுக்கு 23 மைல்.

பவானி :—பவானி முக்கூடல் என்றும், நணை என்றும் வழங்கப்படுகிறது; சென்னை ராஜதானி, ஈரோட் ஸ்டேஷனுக்கு 8½ மைல் வட மேற்கு. பவானியும், காவேரியும் சங்கமமாகுமிடத்தருகில் கோயிலுள்ளது. பராசர், குபேரன், விஸ்வாமித்திரர் பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமி-சங்கமேசுவர நாதேஸ்வரர், தேவி-வேதாம்பிகை. காவிரி, பவானி தீர்த்தம், இலந்தை மரம், லிங்கம் அமிர்தத்தாலாய தென்பது ஐதீகம். வடக்குக் கோபுரம் பெரியது; கோயிலுக்குள போக இதன் வழியாகத்தான் போகவேண்டும் கிழக்கு வழியில்லை. (இக் கோயிலுக்குள் மஹாவிஷ்ணுவுக்கும் ஒரு கர்ப்பக்கிரஹ மூண்டு; ஆதிகேசவப் பெருமாள்) இவ்வூரில் பத்ரகாளிகள் நான்கு பேர்கள் அசுரர்களைக் கொன்றதாக ஐதீகம். இதற்கு தட்சிண காசி என்றும் பெயர், உத்தரவாஹினி தட்சிண லிங்கம் உடையபடியால். கோயிலில் கேரோ என்னும் ஓர் ஆங்கில துரையால் ஸ்வாமிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட தந்தக் கட்டில் பள்ளியறையில் இருக்கிறது. தற்காலக் கோயில் சுமார் 500 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டதாக காண்கிறது. திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது. ஈரோட்டிலிருந்து பஸ் வசதி யுண்டு. இங்கு பெரிய முசாபர் பங்களா கோயிலுக் கருகில் உளது. பவானி முக்கூடல் என்றும் பெயர். மூன்றாவது ஆறு அந்தர் வாஹினியா யிருப்பதாக ஐதீகம், இதற்குப் பெயர் அமுத நதி.

இத்தலத்தை தெரிசித்தவர்க்கு ஒரு தீங்கும் ஒண்ணு காதலின் இதற்கு திரு நண்ணு அல்லது 'திரு நணு' என்று பெயராயிற் றென்பர். இதன் மற்றப் பெயர்கள் தட்சிண அளகை, தட்சிண பதரிகாசிரமம், திருவேணி சங்கமம், தட்சிணப் பிரயாகை, திரு முக்கூடல், திருவானி கூடல், தென் கயிலை, பராசர் க்ஷேத்திரம், வக்கிரபுரம் என்பனவாம்.

தேவியின் பெயர்கள் :· வேதநாயகி, வேதவல்லி, பொன்னர் மெளலி, பண்ணர் மொழியாள் என்பனவாம்.

பவானி நதிக்கு வாரதி என்றும் பெயர். வானி என்பது பழைய பெயராம். கல் வெட்டுகளில் வானி என்றே இருக்கிறது.

இங்குள்ள மற்ற சிவாலயங்கள்:-பராசர் கோயில், பராசரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட லிங்கமுடையது; இங்கிருந்து தான் அந்தர் வாஹினியாக அமுத நதி சங்கமத் துறையில் சேர்கிறதாக ஐதீகம். பவானி சிவாலயத்திற்கு தென் மதில் சுவருக்கு 60 அடி தூரம் ஒரு சிறு கோயில் உளது. இங்குள்ள தீர்த்தங்கள் காயத்ரி தீர்த்தம், சாவித்ரி தீர்த்தம், சரஸ்வதி தீர்த்தம், தேவ தீர்த்தம், சக்கர தீர்த்தம், சூரிய தீர்த்தம், உரோமச தீர்த்தம்.

(2) காயத்ரி லிங்கேஸ்வரர் :—காயத்ரி தீர்த்தக் கரையிலுள்ள சிறு சிவாலயம். இது விஸ்வாமித்ரர் பிரதிஷ்டை என்பது ஐதீகம்.

(3) ஊராச்சி மலை கோட்டை :—சிவாலயம், இதற்கு வேதகிரி என்றும் பெயர், ஸ்வாமி-வேதகிரீஸ்வரர், தேவி-வேதநாயகி, பவானிக்கு $2\frac{1}{2}$ மைல். பவானியிலுள்ள மூசா பரீ பங்களா கட்டி முதலியார்களால் கட்டப்பட்டது. பவானி சிவாலயம் அமர குந்தியில் அரசுபுரிந்த திரு மிடு கட்டி முதலியார் அவர்களாலும், அவரது சகோதரி சின்னம்மையாராலும் கட்டப்பட்டது. கோயில் காவிரியின் மேற்குக் கரையிலுள்ளது. ஆலயம் சிறிது; கருங்கற்களால் கட்டப்பட்டது. 5 கோபுர முடையது, கட்டி முதலியாருடைய அரசச் சின்னங்களாகிய விற்கொடி, புலி, மீன் உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. இம்முடி கட்டி முதலியார் நிருத்த மண்டபம், அம்மன் கர்ப்பக்கிரகம், அகந்த மண்டபம், மகா மண்டபம், குமார கோயில் கோபுரம், முதலியார் கட்டியதாகக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இங்குள்ள சஹஸ்ரமுக லிங்கமும் இவரால்தான் பிரதிஷ்டை செய்யப்பட்டது; நிருத்த மண்டபம் கட்டிய சிற்பியின் பெயர் இராமண்ண ஆச்சாரி என்று வெட்டப்பட்டிருக்கிறது. கோயிலில் பள்ளியறை ஸ்வாமி எழுந்தருளுவதற்கு தந்தப் பலலக்கு 1804 வருடம் கெய்ரோ எனும் ஆங்கில துரையால் சமர்ப்பிக்கப்பட்டது. அப் பல்லக்கில அவர் பெயரும் இருக்கிறது.

இங்குள்ள சுப்பிரமணியர் ஆலயத்தின் ஓர் பகுதியில் மூன்று சிரங்கள், மூன்று கரங்கள், மூன்று பாதங்க ளுடைய ஜ்வரஹரேஸ்வரர் சிவ மூர்த்தம் இருக்கிறது.

இங்குள்ள ஆதிகேசவப் பெருமாள் ஆலயம் பவானி நதிக்கு தென்புறம் இருக்கும் காளிங்கராயன் புதூருக்குப் பக்கத்திலிருந்தது, ஆற்றுக்கு அது இரையாகிப்போகவே, ஒரு விஷ்ணு பக்தர் பிறகு அக்கற்களைக்கொண்டு தற்கால மூள்ள ஆலயத்தை கட்டினர்; அவர் பெயர் புலியூர் கவுண்டர்.

இங்குள்ள முக்கிய படித்துறைகள்:-காயத்ரி படித் துறை, திமஞ்சனப் படித்துறை, திருவேணி சங்கமப்படித் துறை.

(4) சகஸ்ர லிங்கேஸ்வரர் ஆலயம்:— அமிர்த லிங்கேஸ் வரர் ஆலயத்திற்கு வட கிழக்கிலுள்ள ஒரு சிறு சிவாலயம்.

பவானி கோயிலில் ஆடிப் பெருக்கு விழா விசேஷம். பிரம்மோற்சவம் 12 நாள், சித்திரை மாசம்.

பழைய சங்கடம்.—குளித்தலை தாலுகா, திருச்சிராப் பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி. ஆளவந்த ஈஸ்வரர் கோயில், தேவி அன்னவல்லி; இதற்கு பழைய ஜெயங் கொண்ட சோழ புரம் என்று பூர்வீக பெயர்.

பழைய சீவரம்:—செங்கல்பட்டு ஜில்லா, காஞ்சீபுரம் தாலுகா, சென்னை ராஜதானி. ஒரு சிறு குன்றின்மீது சிவாலயமுண்டு. தற்காலம் பாழடைந்திருக்கிறது; பூஜை யில்லை. ஸ்ரீ வரதராஜர் பார்வேட்டையில் தங்கும் குன்றின் பக்கத்திலுள்ளது.

பழைய மாம்பலம்:—சென்ன பட்டணத்திற் கருகி லுள்ளது, சென்னை ராஜதானி. காசி விஸ்வநாதர் கோயில்.

பழனம்:—(திரு) தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜ தானி, திருவையாறுக்கு $1\frac{1}{2}$ மைல், காவிரிக் கரையிலுள்ளது. திருக்குரங்காடு துறைக்கு 3 மைல் மேற்கு சிவாலயம்.

திக்குப்பாலர்கள் பூசித்த ஸ்தலம்; ஸ்வாமி-சஹாயேஸ்வரர், தேவி-பெரியநாயகி யம்மை; மங்கள தீர்த்தம், காவிரி நதி. பூர்வீக ஆலயம்; உட்பிரகாரம் மிகவும் பழைமையானது, வெளிப்பிரகாரம் பிறகு கட்டப்பட்டது. ஸ்வாமி அம்மன் சந்நிதிகள் இரண்டும் கிழக்கு பார்த்தவை. பாம்பு தீண்டி யிறந்த அப்பூதி அடிகள் குழந்தையை, அப்பர் உயிர்ப்பித்த ஸ்தலம். கோயிலில் பல கல்வெட்டுகள் உள. தற்காலத்திய அம்மன் சந்நிதி முன்பு விஷ்ணு சந்நிதியா யிருந்திருக்கலாம் என ஊகிக்க இடமுண்டு. தற்காலம்,விஷ்ணு பரமசிவத்தின் பின்புறம் ஒரு கோயிலில் வைக்கப்பட்டிருக்கிறார். விஷ்ணுவின் உற்சவ விக்ரஹம் இங்குள்ளது. விஷ்ணுவின் மூலஸ்தானத்தில் வேணு கோபாலர் இருக்கிறார். இங்கு வரதராஜருடைய விக்ரஹமு மூண்டு. இக் கோயிலிலுள்ள மூர்த்திகளில் பலர் இடம் மாறி யிருக்கிறனர். இதற்குக் காரணம் இங்கு விஷ்ணு வசிப்பதால் என்று குருக்கள்மார் கூறுகின்றனர். வேணு கோபால ஸ்வாமிக்கு உறியடி உற்சவம் நடக்கிறது. திரு ஞானசம்பந்தர் பாடல பெற்றது.

பழையாறை:—பழையாறை வடதளி என்பது தேவாரப் பெயர். தஞ்சாவூர் ஜில்லா, பட்டீஸ்வரத்திற்கு அருகிலுள்ளது - சென்னை - ராஜதானி சிவாலயம். ஸ்வாமி-சோமேஸ்வரர், தேவி சோமகலா நாயகி. சிவ கங்கை தீர்த்தம். இது பழையாறை + வடதளி என்று இரண்டு ஸ்தலங்களாயிருக்கின்றன. வடதளிக்கு திருமேற்றளி என்றும் பெயர். நாயன்மார் இவ்விரண்டு ஸ்தலங்களையும் சேர்த்து ஒரே பதிகத்தில் பாடியிருக்கின்றனர். வடதளி ஆலய ஸ்வாமி பெயர், வடதளிநாதர், சோமேசர், தர்மபுரீஸ்வரர், தேவி விமலநாயகி,கௌரியம்மை,சோமகலா நாயகி; உத்திர புஷ்கரணி, காமதேனுவின் புதல்வி விமலி என்பதால் பூசிக்கப்பட்டது. மேட்டின் பேரில் கோயில்; இங்கு ஸ்வாமி, அம்மன் விக்ரகங்கள் தவிர வேறென்று மில்லை. பழையாறை அமர்நீதி நாயனார் வாழ்ந்த திருப்பதி. திருநாவுக்கரசு நாயனார் சமணர்களால் வடதளியில் மூடப்பட்டிருந்த சிவபெருமானை அரசனைக் கொண்டு வெளிப்படுத்தி பூசித்த ஸ்தலம். அப்பர் பாடல் பெற்றது. பழையாறை

ஆலயம் சுந்தர சோழனால் கட்டப்பட்ட தென்பர். (954—66ஆ) சந்திரன் பூசித்து தேய்தல் நீங்கிய ஸ்தலம்.

பழனி :—சென்னை ராஜதானி; ரெயில்வே ஸ்டேஷன். ஸ்டேஷக்கு 3 மைல் வடக்கு சிவாலயம். ஸ்வாமி பிரஹ தீஸ்வரர் அல்லது பெரிய உடையார்; கோயில் ஷண்முக நதிக்கரையிலுள்ளது. சோழக் கட்டடம். இதற்கு ஆவி னங்குடி என்றும் பெயர். பிரசித்திபெற்ற முருகர் ஸ்தலம். வையாபுரி என்றும் பெயர் உளது.

பள்ளவூர் :—பாலக்காடு தாலுகா மலபார் ஜில்லா, சென்னை ராஜதானி. சிவாலயம்.

பள்ளத்தூர் :—சென்னை ராஜதானி; காரைக்குடிக்கு 4 மைல் - சிவாலயம், ஸ்வாமி-சுந்தரேசர், தேவி-மீனாட்சி. நாட்டுக்கோட்டை செட்டியாரால் கட்டப்பட்ட புதிய ஆலயம். சதுரமுண்டு.

பள்ளிப்படிக்கரை:—சென்னை ராஜதானி தென் இந்தியா சிவாலயம்-ஸ்வாமி நீலகண்டேஸ்வரர் தேவி அமிர்தகர வல்லி. அமிர்த தீர்த்தம். தேவி பரமசிவத்தின் விஷ பானத்தைத் தடுத்த ஸ்தலமென்பது ஸ்தல புராணம்.

பள்ளிமடம் :—ராம்நாத ஜில்லா, சென்னை ராஜதானி; சிவாலயம். ஸ்வாமி-காளநாதர், ஸ்வாமி விருஷபவாகனக் கோலத்துடன் இருக்கிறார்.

பள்ளியின் முக்கூடல்:—(திரு) அரியான் பள்ளி, அரிக்கரை யான் பள்ளி என்றும் வழங்கப்படுகிறது. திரு ஆருரில் இறங்கி 3 மைல் போகவேண்டும். சென்னை ராஜதானி; சிவாலயம். ஸ்வாமி-முக்கோணேஸ்வரர், தேவி-மைமேவும் கண்ணியம்மை; முக்கூடல் தீர்த்தம். வெட்டாறு ஸ்டேஷ னுக்கு இரண்டு மைல். மூர்க்க ரிஷி பூசித்த ஸ்தலம். சிறிய கோயில்; இங்குள்ள சிவலிங்கம் மிகவும் பளபளப் பானது. அப்பர் பாடல் பெற்றது.

பளவநத்தம் :—ஜமீன் கிராமம்; ராம்நாத ஜில்லா, சென்னை ராஜதானி; பழைய சிவாலயம், ஸ்வாமி-கைலாச நாதர்.

பளிவேலர் :—ராஜோல் தாலுகா, கோதாவரி ஜில்லா, சென்னை ராஜதானி; கொப்பேஸ்வரர் கோயில். இங்குள்ள நந்தி ஔரங்கஜீப்பால் பின்னமாக்கப்பட்டதென்பர். கோயிலில் கல்வெட்டுகள் உள.

பரியலூர் :—(திரு) இது பரசலூர் என்று தற்காலம் வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி; விலங்கூருக்கு 2 மைல் தென் கிழக்கு, அஷ்டவீரட்டான க்ஷேத்திரங்களிலொன்று. தட்சன் தலையைப்பறித்த ஸ்தலம். தட்சனுடைய உருவமும் வீரபத்திரருடைய உருவமும் கோயிலில் உளது. மாயவரம் ஸ்டேஷனி லிறங்கி 7 மைல் போக வேண்டும். ஸ்வாமி-வீரட்டேஸ்வரர்; தேவி - இளங்கொடியம்மை; சந்திர புஷ்கரிணி தீர்த்தம்.

பன்னி :—மத்திய மாகாணம், பன்னி சமஸ்தானத்தின் தலை நகர்-சிவாலயம். ஸ்வாமி-கைலாசநாத் மகாதேவ்.

பனங்காட்டூர் :—(திரு) இது, வனம்பார்த்தான் பனங்காட்டூர், திருப்பனங்காடு, பனையபுரம் எனவும் வழங்கப்படுகிறது. ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி; முண்டியம் பாக்கம் ரெயில் ஸ்டேஷனுக்கு 2 மைல் வட கிழக்கு, காஞ்சீபுரத்திலிருந்து $8\frac{1}{4}$ மைல் தெற்கு, சிபிச் சக்ரவர்த்தி பூசித்த க்ஷேத்திரம். சூரிய பூஜை சித்திரை மாசம். வன்பாக்கம் அருகிலிருக்கிறபடியால் வன்பாத்தான் பனங்காட்டூர் எனப் பெயர் பெற்றது. கோயிலில் இரண்டு சந்நிதிகள் உண்டு. தெற்கிலிருப்பது அகஸ்தியர் பூசித்தது. ஸ்வாமி-தாளபுரீஸ்வரர், தேவி-ஸ்தூலகோமள பதாம்பாள். வடக்கிலிருப்பது புலஸ்தியர் பூசித்தது. ஸ்வாமி - கிருபா நாதேஸ்வரர், தேவி-கிருபாநாயகி. 3 தீர்த்தங்கள்-சம்பந்தர் தீர்த்தம், அப்பர் தீர்த்தம், சுந்தரர் தீர்த்தம், சிவபெருமானுக்கு பனம் பழம் நிவேதனம் விசேஷம். கோயில் மிகவும் பழமையானது; ஆலயத்திற் கெதிரில் இருந்த 2 பனைமரங்கள் இப்பொழுது இல்லை. ஸ்வாமி பனங்காட்டீஸ்வரர். தேவி அமிர்தவல்லி யம்மை. பனை விருட்சம்-சுந்தரர் பாடல் பெற்றது. வள்பாக்கத்தில் ஒரு சிவாலயமுண்டு. ஸ்வாமி ராமசாமி ஈஸ்வரர், தேவி பஞ்சின்மெல்லடி யம்மை. சுந்தரர் சரித்திர சம்பந்தமான இடம். சுந்தரர் பாடல் பெற்றது.

பனங்குடி:-திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜதானி ராமலிங்க ஸ்வாமி கோயில்.

பனந்தாள்:-(திரு) கும்பகோணம் தாலூகா, தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, ஆடுதுறைக்கு 7 மைல் வடக்கு. குங்கிலயக் கலயநாயனார் தொண்டு செய்த க்ஷேத்திரம் திருப்பனந்தாள் மடம் எனும் ஒரு பழமையான சிறந்த சைவ மடம் இங்கு இருக்கிறது. இவ்வூர் ஆலயத்திற்கு தாடகேச்சுரம் என்று திருநாமம். தாடகை எனும் பெண்ணுக்காக சாய்ந்திருந்த சிவலிங்கம், யானை முதலியவைகளைக் கொண்டு இழுத்தும் நிமிராதது, குங்கிலயக் கலயநாயனார் கழுத்திற் கட்டியிழுத்தபோது நிமிர்ந்த ஸ்தலம். ஸ்வாமி-சடையப் பேசுரர், அருணஜடேஸ்வரர்; தேவி பெரியநாயகியம்மை. பிரம தீர்த்தம்-நாக கன்னிகை தீர்த்தம். கோபுரம் பெரியது. கோயிலில் குங்கிலியக் கலய நாயனார் சரித்திரம் கல்லில் செதுக்கப்பட்டிருக்கிறது. பனை விருட்சம், திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது. பிரம்மோற்சவம் பங்குனி மாதம். பல்லக்கு உற்சவம் விசேஷம்.

பனப்பாக்கம்:—வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி; சிவாலயம். ஸ்வாமி-மயூரநாதர், கோயில் சோழக் கட்டடம். பல கல்வெட்டுகளுடையது.

பனம்பூர்:—மங்களூர் தாலுகா, தென் கன்னட ஜில்லா, சென்னை ராஜதானி; சிவாலயம். ஸ்வாமி-நந்தீஸ்வர்.

பனை மலை:—தென் இந்தியா, சிவாலயம்; விழுப்புறத்திற்கு 16 மைல். இரண்டாம் நரசிம்ம வர்மன் காலத்தியது (600-710) பல்லவ சில்பம்.

பவனையூர்:—திரு மெய்யம் தாலுகா, புதுக்கோட்டை சமஸ்தானம்; சிவாலயம்.

பனையூர்:—(திரு) சென்னை ராஜதானி; நந்திலத்திற்கு 1 மைல் தென் கிழக்கு. முசுகுந்த சக்ரவர்த்தி, லட்சுமி தேவி, பராசர் பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமி-சௌந்தர்ய நாதர், தேவி-பெரிய நாயகி; அமிர்த தீர்த்தம், பனை

விருட்சம். திருவாரூரில் இறங்கி 7½ மைல் போகவேண்டும். சிவபெருமான் சுந்தர மூர்த்திக்குக் கூத்தாடி காட்சி கொடுத்த ஸ்தலம். திருஞான சம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்றது. விடங்க ஸ்தலங்களிலொன்று.

பஸ்தார் :—சண்டி பிரிவு, மத்ய மாகாணம், சிவாலயம். ஸ்வாமி-நந்தேஸ்வரர், தேவி-மோடா தேவி தீர்த்தங்கள், சங்குனி, தான்குன்.

பாகாலா :—சென்னை ராஜதானி; சித்தூருக்கு 23 மைல். சிவாலயம். ஸ்வாமி-சந்திரசேகரர். ரெயில் ஸ்டேஷன்.

பாகர்கன்ஜ் பிரிவு :—வங்காள ராஜதானி. போனபாலியா கிராமம், சிவாலயம் பழையது, சுயம்பு லிங்கம்; சிவராத்திரி விசேஷம்.

பாகல்பூர் பிரிவு,—வங்காள ராஜதானி. (1) கர்ணகிராமம். (கர்ணன் + நகரம்) சிவாலயம். ஸ்வாமி-பரமசிவம், தேவி-பார்வதி. (2) ஸ்ரீநகர் சிவாலயம், இதில் பல கல்வெட்டுகள் உள.

பாகலி :—ஹர்ப்பனஹல்லி தாலுகா, பல்லாரி ஜில்லா, சென்னை ராஜதானி; சிவாலயம். ஸ்வாமி-கள்ளேஸ்வரர், சாளுக்கிய சில்பம், ஹர்ப்பனஹல்லிக்கு 8 மைல்.

பாகேஷ்வர் :—டுமாவோன் ஜில்லா, ஐக்கிய மாகாணம், காத்கோடம் ரெயில் ஸ்டேஷனுக்கு 6½ மைல் சிவாலயம். ஸ்வாமி-பாகேஸ்வர், (வியாக்ரம் = புலி) இங்கு தர்ம சத்திரங்கள் உள. கோமதியும், சர்ஜுவும் கூடுமிடம், அல்மோராவுக்கு 26 மைல் வடக்கு. கடயூர் அரசர்களால் (2500 BC-700 AD) கட்டப்பட்ட கோயில் என்பர். டுமாவோன் சில்பம், மார்க்கண்டேயர் பூசித்த ஸ்தலம். பரமசிவம் புலி வடிவமாய்த் தோன்றியபடியால் பாகேஷ்வர் எனப் பெயர் உண்டாயிற்று. மார்க்கண்டேய புராணத்தில் இத்தலம் குறிக்கப்பட்டிருக்கிறது. ஸ்வாமிக்கு வாகீஸ்வரர் என்றும் பெயர்.

பாங்கல் :—நைஜாம் ராஜ்யம், மத்ய இந்தியா, நால்கொண்டா ஜில்லா, சிவாலயம். ஸ்வாமி-பாஞ்சேஸ்வரர்.

பாங்கிபூர் :—தார்வார் ஜில்லா, ஆறுவத்துகம்பட ஆலயம். 60 தூண்கள் உடைய கோயில், இது ஆதியில் சிவாலயமா யிருந்து பிறகு பிஜபூர் சுல்தானால் மசூதியாக்கப்பட்டது. தற்காலம் மிகவும் பழாய்க் கிடக்கிறது.

பாச்சிலாச் சிராமம் :—(திரு) இது சிருவாசி எனவும் வழங் கப்படுகிறது. திருவாணைக் காவலுக்கு 3 மைல் வடமேற்கு. சென்னை ராஜதானி, திருச்சிராப்பள்ளி ஜில்லா ; திருச்சி ராப்பள்ளியிலிருந்து 6 மைல், சிவாலயம். ஸ்வாமி-மாற் றறிவரதர், தேவி-பாலசௌந்தரி, விசாலாட்சி; வன்னி மரம்; பிரம தீர்த்தம், அன்னமாம் பொய்கை, மூயலக தீர்த்தம். இங்குள்ள நடராஜ மூர்த்திக்குப் பின்னிய சடையும், பக்கத்தில் அசுரனும் உண்டு. திருஞான சம் பந்த மூர்த்தி கொல்லி மழவன் எனும் அரசனுடைய குமாரத்திக்கு மூயலகன் எனும் வியாதியைத் தீர்த்த ஸ்தலம். திருஞான சம்பந்த மூர்த்தி பதிகம்பாடிய காரணத்தினால் மூயலகனுக்கு மோட்சம் கிடைக்க, நடராஜர் சர்ப்பதத்தின் மீது நடனமாடினதாக ஐதிகம். சபாநாதர் சிரத்தில் கிரீடம் உளது. சுந்தர மூர்த்தி பதிகம்பாடிப்பெற்ற செப் புக் காசுகள் பொன்னாய் மாறின ஸ்தலம்.

பாசரகோடு :—பல்லாரி ஜில்லா, சென்னை ராஜதானி ; சோமேஸ்வரர் கோயில், ஸ்வாமி ஆரண்ய விடங்கர், ஆரண்ய தீர்த்தம்.

பாசராலு :—மைசூர் ராஜ்யம், தற்காலம் நாகேஸ்வர் கோயில் என வழங்கப்படுகிறது. சாளுக்கிய சில்பம்.

பாசூர் :—(திரு) திருவள்ளூர் தாலுகா, சென்னை ராஜ தானி. திருவள்ளூர் ஸ்டேஷனுக்கு 5 மைல் வடமேற்கு சிவாலயம். ஸ்வாமி-பாசூர் நாதேஸ்வரர் அல்லது பாசுப தீஸ்வரர், வாகீஸ்வரர்; தேவி-பசுபதி நாயகி யம்மை, சுயம்புவல்லி; சோழ தீர்த்தம். சிவபெருமாள் மூங்கிலடி யில் தோன்றிய ஸ்தலம். சிவபிரான் சோழனுக்கு ஒரு காரணம்பற்றி பாம்பாட்டியாகத் திருவுருகொண்டு ஆடல் காட்டியருளிய ஸ்தலம். திருஞான சம்பந்தர், அப்பர் பாடல் பெற்ற ஸ்தலம். பிரம்மோற்சவம் வைகாசி மாசம்.

பாஞ்ச மஹால் பிரிவு :—பம்பாய் ராஜதானி, தேவ்கேதார் கிராமம், கேதாரேஸ்வரர் கோயில். இங்கு லீலாவதி கிராமத்தில் ஒரு சிவாலயமும் தாவா எனும் கிராமத்தில் ஒரு சிவாலயமு மூண்டு.

பாசலூர் :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, வீரட்டேஸ்வர ஸ்வாமி கோயில்; தர்மபுர ஆதீனத்திற்குட் பட்டது.

பாட்டு பிரிவு :—வங்காள ராஜதானி, பைகுண்ட்பூர் கிரமம். இங்கு மிகவும் பழமையான ஓர் சிவாலய மூண்டு.

பாடாஸ் :—பூனை ஜில்லா, பம்பாய் ராஜதானி, நாகேஸ்வரர் கோயில்; 200 வருஷங்களுக்கு மூன் கட்டப்பட்டது.

பாடி :—இதற்கு திருவலிதாயம் என்று தேவாரப்பெயர். சென்னை ராஜதானி, வில்லிவாக்கம் ஸ்டேஷனுக்கு $1\frac{1}{2}$ மைல் தென் மேற்கு. பராத்வாஜர், பிரகஸ்பதி, ஹனுமார் பூசித்த ஸ்தலம். ஸ்வாமி-வலிதாய நாதர் அல்லது திருவல்லீஸ்வரர், தேவி-தாயம்மை அல்லது ஜெகதாம்பிகை. பாரத்வாஜ தீர்த்தம், ஹனும தீர்த்தம். விக்ரம சோழன் ஸ்வாமியை பூசித்து மகப்பேறு பெற்ற க்ஷேத்திரம், பலி + தாயம் = வலி தாயம் என்றுயிற்றென்பர்; பலி = பூசை.

பாண்டிக் கொடு முடி :—கொடுமுடி யெனவும் வழங்கப்படுகிறது. தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன், திரிமூர்த்திகளுக்கு இங்கு கோயில் உண்டு. ஸ்வாமி-கொடுமுடி நாதேஸ்வரர், மகுடேஸ்வரர், தேவி-பண்மொழி நாயகியம்மை, திரிபுர சுத்தரி,-வன்னி விருட்சம், காவிரி நதி; சுந்தரர் நமச்சிவாயத் திருப்பதிகம் பாடிய ஸ்தலம். ஸ்டேஷனுக்கு 1 பர்லாங்கில் சத்திரம். மூவர் பாடல் பெற்றது.

பாண்டர் :—மத்ய இந்தியா, சண்டா ஸ்டேஷனுக்கு 18 மைல் சிவாலயம் - பத்ரேசர், பத்ராவதி தேவி.

பாணவர் :—மைசூர் ராஜ்யம் சிவாலயம், ஸ்வாமி-மஹாதேவர்.

பாணவாசி :—மேற்கு இந்தியாவிலுள்ளது. வர்தா நதிக் கரையிலுள்ளது சிவாலயம். ஸ்வாமி-மதுகேஸ்வர், கோயில் கடம்ப அரசன் ஒருவனால் கட்டப்பட்டது. அவர் களது குலதெய்வக் கோயில்; கோயில் பெரியது.

பாணேஸ்வரம் :—மத்ய இந்தியா, ஜகந்நாதத்துக்கு அருகிலுள்ளது. ஈஸ்ட் இந்தியா ரெயில் ஸ்டேஷன்-சிவாலயம். லிங்கம் ஸ்ரீ ராமர் பிரதிஷ்டை யென்பது ஐதிகம்.

பாத்ரவட் :—வட இந்தியா, சிவாலயம்-சுயம்பு லிங்கம்.

பாத்பூத் :—பம்பாய் ராஜதானி; புரோச் உட் பிரிவு. சிவாலயம், நருமதையின் வடகரையி லுள்ளது. ஸ்வாமி-பாதேஷ்வர்; சிறிய கோயில்.

பாதபட்டீசம் :—(பழைய பட்டீசம்) கோதாவரி ஜில்லா, சென்னை ராஜதானி; சிவாலயம். ஒரு தீவில் இருக்கிறது. இங்கு இன்னொரு தீவில் மஹா நந்தீஸ்வர் கோயில் உளது.

பாதர்பூர் :—ஆசாம் பெங்கால் ரெயில் ஸ்டேஷன், சிவாலயம்; மலையின் உச்சியி லுள்ளது, ஸ்வாமி-சித்தேஸ் வரர்.

பாத்ரகாளி :—வட இந்தியா, சிவாலயம். ஸ்வாமி-சதா சிவம்-சுயம்பு லிங்கம்.

பாதாமி :—பிஜபூர் ஜில்லா, பம்பாய் ராஜதானி; இதற்கு வாதாபி என்றும் பெயர். மாலே ஜிட்டி சிவாலயம், 56 அடி நிகளம்; இது மாமல்ல புரத்துச் சிவாலயத்தை விட பழமையானது. திராவிட சில்பம். ஆறும் நூற்றாண் டில் கட்டப்பட்டதாம். இங்குள்ள சங்கரநாராயண மூர்த்தி பார்க்கத் தக்கது. தென் மஹாராஷ்டிர ரெயில் ஸ்டேஷன். ஊர் ஸ்டேஷனுக்கு 3 மைல்; ஸ்டேஷனுக்கும் பட்டணத் திற்கும் நடுவில் ஒரு தர்மசாலை யுண்டு. இங்குள்ள மற்ற சிவாலயங்கள் (1) ஸ்ரீகைட ஸ்வாமி கோயில்-குகைக் கோயில், (2) விரூபாட்சர் கோயில், (3) மல்லிகார்ஜுனர் கோயில் (4) லகுலீசர் கோயில், (5) பூதநாதர் கோயில், (6)

மஹா கூடேஸ்வரர் கோயில் மிகவும் பழமையான சாளுக்கிய சில்பம்.

பாதாளம் :—வட இந்தியா, சிவாலயம். ஸ்வாமி-ஹட கேஸ்வரர், சுயம்புலிங்கம்.

பாதாளீச்சுரம் :—(திரு) பாமணி, பாம்பணி என்றும் வழங்கப்படுகிறது. சாசனங்களில் பாம்புணி என்றிருக்கிறது; சென்னை ராஜதானி, மன்னார் குடி ஸ்டேஷனுக்கு 2 மைல் வடக்கு. பாம்புருவுள்ள தனஞ்ஜெய ரிஷி பூஜித்த க்ஷேத்திரம். ஸ்வாமி-சர்ப்பபுரீஸ்வரர், நாகநாதர், தேவி-அமிர்த நாயகி; நாக தீர்த்தம்; திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

பாதிரிப் புலியூர்.—(திரு) திருப்பாப்புலியூர் என்று சாதாரணமாக வழங்கப்படுகிறது. கூடலூர் தாலுகா, தென் ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி; கூடலூர் ஸ்டேஷனுக்கு 3 மைல், கோயில் திரும்பாப்புலியூர் ஸ்டேஷனுக்கு ½ மைல் வடக்கு. வியாக்ர பாதர் பூஜித்த க்ஷேத்திரம், இதற்கு வடபுலியூர் என்றும் பெயர் உளது. மூடக்காலுள்ள முயல் ரூபத்தைச் சாபத்தினால் பெற்ற மங்களர் எனும் முனிவர் பூஜித்து அவ்வுரு நீங்கி முன் உருப் பெற்ற ஸ்தலம். கற்றாணிற் கட்டி கடலிலிடப் பட்ட திருநாவுக்கரசு ஸ்வாமிகள் "சொற்றுணை வேதியன்" எனும் திருப்பதிகம்பாடி கரையேறின ஸ்தலம். அந்த இடம் கரையேறவிட்ட குப்பம் என்று வழங்கப்படுகிறது. ஸ்வாமி-தோற்றுத் துணையீஸ்வரர், பாடலீஸ்வரர், தேவி-தோகையம்பிகை, பெரியநாயகியம்மன்; பெண்ணை கெடில நதி, பாதிரி விருட்சம் பிரம்மோற்சவம் வைகாசி மாசம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசு ஸ்வாமிகள் பாடல் பெற்றது. இங்கு பாதாளீஸ்வரர் கோயில் என்று இன்னொரு சிவாலயமுளது. சுவாமி பெயர் கல்வெட்டுகளில் திருக்கடை நாழுடையார் என்றிருக்கிறது. சதாசிவ செட்டியார் சத்திரம் கோயிலுக்கருகில் உள்ளது.

பாடலி புரம் :—வட இந்தியா ரெயில்வே ஸ்டேஷன், சிவாலயம். சுவாமி- பாடலீசர்-கங்கா நதி.

பாபல் :—பூனே ஜில்லா, பொம்பாய் ராஜதானி, சிவாலயம். சுவாமி-நாகேஸ்வரர், கன்ஹேராஜ் படக் என்பவரால் கட்டப்பட்டது.

பாபநாசம் :—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி; தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன், பழைய சிவாலயம். சுவாமி-ராமலிங்கேசர், தேவி - பர்வதவர்த்தினி, ராமர் பூசித்த ஸ்தலமென்பர்.

பாப நாசம் :—சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா, அம்பா சமுத்திரம் ரேயில் ஸ்டேஷனுக்கு 5 மைல் தென் மேற்கு; விக்ரமபுரத்திலிருக்கிறது சிவாலயம். பக்கத்தில் கலியாண தீர்த்தம் எனும் அழகிய நீர்வீழ்ச்சியுண்டு. மலைக்குமேல் பாண தீர்த்தம், அகஸ்திய தீர்த்தம் என்று இரண்டு தீர்த்தங்களுண்டு. கோயிலின் படித்துறையில் மீன்களுக்கு தினம் கோயில் பிரசாதம் அளிக்கப்படுகிறது உச்சி காலத்தில். ஸ்ரீராமர் ராவணனைக் கொன்ற பழி நீங்கிய ஸ்தலமென்பது ஐதீகம். சுவாமி-பாபவிநாச சுவாமி, தேவி - உலகாம்பாள். இங்கிருக்கும் அழகிய மண்டபம் திருமலை நாயகரால் கட்டப்பட்டதாம். கோயிலில் 108 சிவலிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. இங்கு மூசாபர் பங்களா உண்டு. கோபுரம் ஏழு நிலைகளை உடையது; 80 அடி உயரம். கோயிலின் முன்பாக ஆறு வடக்காகச் செல்கிறது. உத்தர வாஹினி தட்சிண லிங்கம் விசேஷம் எனக் கூறம்பட்டிருக்கிறது. லிங்கம் சுயம்பு லிங்கம், சுவாமியின் மற்ற திருநாமங்கள், வயிராச லிங்கர், பழமறை நாயகர், மூக்களா லிங்கர், பரஞ்சோதி லிங்கர். கோயில் விக்கிரமசிங்க பாண்டியனால் கட்டப்பட்டது. அம்மன் கோயில் பிறகு கட்டப்பட்டது. கோயில் நிகளம் 460 அடி, அகலம் 185 அடி. இக் கோயிலில் நவக்கிரங்கள் தனித்தனியாக வெவ்வேறு இடங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. ஸ்தல விருக்ஷம் மூக்களா; தீர்த்தங்கள் பொருநை, வேததீர்த்தம். பழைய பாபநாச தீர்த்தம், கல்யாண தீர்த்தம், வைகை தீர்த்தம், வாண தீர்த்தும், (இது 16 கல் தூரமுள்ளது மலையில்) இங்கு அருகாமையில் சிவந்தியபபர் கோயில், எனும் மற்றொரு சிவாலயமுண்டு. பாவநாசத்தில் ஒரு கல்

வெட்டும், சிலந்தியப்பர் கோயிலில் ஒரு கல் வெட்டும் உளது. அகஸ்தியர், இந்திரன், காசிபர், விராட்டு, பூசித்த ஸ்தலம்; ஒரு பிராம்மணன் தன் தாய் தந்தையரைக் கொன்ற பழி நீங்கிய ஸ்தலமென்பர். முக்கிய உற்சவம் பங்குனி மாசம். பாண தீர்த்தத்தில் ஆடி அமாவாசை ஸ்நானம் விசேஷம்.

பாம்புரம்:—(திரு) திருப் பாம்பு புரம் எனவும் பெயர் உண்டு. சென்னை ராஜதானி; பூந்தோட்டம் ஸ்டேஷனுக்கு 3 மைல் மேற்கு. கோயிலில் நாகராஜன் சிலையிருக்கிறது; ஆதிசேஷன் பூசித்த ஸ்தலம். சுவாமி-பாம்பீஸ்வரர், தேவி-வண்டார் பூங்குழலியம்மை, வன்னி விருட்சம்; திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

பாயர்:—காஷ்மீர் ராஜ்யத்திலுள்ளது, மிகவும் சிறிய கோயில்; 8 அடி சதுரம், 21 அடி உயரம். நான்கு பக்கமும் நான்கு வாசற் படிகள் உள. கோயில் ஆறே ஆறு கற்களாலாயது. சுமார் 950-வரு கட்டப்பட்டிருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது. காபூலை ஆண்ட பீமசாஹி எனும் அரசனால் கட்டப்பட்ட பீமகேஸ்வரர் கோயிலாயிருக்கலாம் என்று நினைக்கப்படுகிறது. கோயில் கிரேக்கர்களிடமிருந்து வந்த காந்தார சில்பமுடையது.

பார்னியோ:—இது சிங்கபூருக்கு அப்பாலுள்ள ஓர் தீவு. இங்கு ஓர் குகையில் சிவாலயமுண்டு; சிலமாயிருக்கிறது. கணேசர், நந்தி மூலலிய சில சிற்பங்கள் இன்னும் இருக்கின்றன.

பாயில்:—பாடியாலா ராஜ்யத்திலுள்ளது. பஞ்சாப் மாகாணம்; சிவாலயம். சுவாமி - மஹாதேவர், தேவி-பார்வதி.

பாராகாட்:—வட இந்தியா, மீர்கன்ஜ் ஸ்டேஷனுக்கு 3 மைல்; சிவாலயம். நர்மதை தீர்த்தம்.

பாராவுட்:—பஞ்சாப் மாகாணம், ஜின்ட் சமஸ்தானம். இங்குள்ள சிவாலயங்கள் (1) பாராவுட் கிராமம் சிவாலயம் (2) சாபிடான் கிராமம் சிவாலயம், சுவாமி - நாகேஸ்வர் மஹாதேவ், தேவி - நாகதமனி லிங்கம் ஜைனமேஜய

மஹா ராஜாரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட தென்பது ஐதீகம். நாகக்ஷேத்திர தீர்த்தம். (3) பாடுகலன் கிராமம், மஹாதேவர் கோயில், பாசர் தீர்த்தம். (4) ஹாத் கிராமம் சிவாலயம். (5) பிண்டாரா கிராமம், சோமேஷ்வர் மஹாதேவ் கோயில். (6) ஜிண்ட பட்டணம், சோமேஷ்வர் கோயில், சுவாமி-சோமேஷ்வர், தேவி-மானசா தேவி. இங்கு மஹாதேவ பூதேஷ்வர் கோயில் ஒன்றுண்டு.

பாரீஸ்வரம் :—சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி பாரீஸ்வரர். பாண்டி மண்டலத்தில் திருப்புத்தூர் பக்கத்தி லுள்ளது. பழைய கோயில் பாரி எனும் வள்ளல் கட்டிய கோயிலாக மதிக்கப் படுகிறது. பிறகு கோயில் புதுப் பிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

பாரோ பூதூர் :—போரோபுதர் சரியான பெயர். ஜாவா தீவில் உள்ளது. இங்கு ஒரு சிவாலயமுளது. இதை இங்குள்ளவர்கள் சந்திர லோரோ ஜொங்ரன் என்று அழைக்கின்றனர். கோயிலின் சுவர்களில் ராமாயணக் கதை சித்திரிக்கப்பட்டிருக்கிறது.

பார்லி:—ராஜபுதனம், பேரோல்லி கிராமம்;சிவாலயம். ஸ்வாமி-கடேஷ்வர். கோயில் மிகவும் அழகிய சில்ப முடையது. கூரையின் உட்புறத்து வேலைப்பாடுகள் பார்க்கத் தக்கவை. சர் பெர்கூசன் என்பவர் இதை மிகவும் புகழ்ந்திருக்கிறார்.

பால்மாறு :—உடுபி தாலுகா, தென் கன்னட ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்.

பால்முறி :—மைசூர் ராஜ்யம், ஸ்ரீரங்கப்பட்டணம் தாலுகா, அகஸ்தீஸ்வரர் கோயில்,

பாலக்காடு :—மலபார் ஜில்லா, தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன், சிவாலயம். ஸ்வாமி-விஸ்வநாதர், தற்காலக் கோயில் 1425-ஆம் இட்டி கொம்பி ராஜன் என்பவரால் கட்டப்பட்டது. இங்கு மூசாபர் பங்களா உண்டு.

பாலக்கோல் :—குண்டூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். ராமலிங்கேஸ்வர் கோயில்.

பால சோர் பிரிவு :—வங்காள ராஜதானி, இங்குள்ள சிவாலயங்கள் ; (1) பாலசோர் அல்லது பாலசூர் பட்டணம் ஸ்வாமி-பாணேஸ்வர், லிங்கம் பாணசுரனல் பூசிக்கப் பட்டது என்பது ஐதீகம், சுயம்பு லிங்கம். (2) ரெமுனை கார்க்கேஷ்வர் கோயில். (3) ஷேர்காகர் ஷ—ரேஸ்வரர் கோயில். (4) பங்கேஷ்வர் பக்ரேஷ்வர் கோயில். (6) பர்தன்பூர் மணிநாகேஸ்வரர் கோயில் (இவைகான்கிலும் மேற்கு பார்த்த லிங்கங்கள் உள.) (6) குமாரி கிராமம், சிவாலயம் ஆதியில் புத்த ஆலயமாயிருந்து பிறகு சிவாலயமாக மாற்றப்பட்டதாம். (7) கங்களேசர் கிராமம் லாங்கலேஸ்வரர் கோயில் (லாங்கலம் = கலப்பை) ஸ்வாமி-ஹரபார்வதி. (ஹரன் + பார்வதி) பரமசிவத்திற்கும் பார்வதிக்கும் விக்ரஹங்கள் இருக்கின்றன. (இது சாதாரணமாக வட இந்தியாவில அபூர்வம்.)

பாலம்பீட் :—ஹாங்கலக்கு 6 மைல், கோயில் கோபுரம் திராவிட சில்பம்; மற்றது சாளுக்கிய சில்பம். ஸ்வாமி-கள்ளேஸ்வரர் அல்லது காலமேஸ்வரர்,

பாலாகாட் பிரிவு :—மத்திய மாகாணம்; இங்கு 3 கோயில்கள் உள. (1) வஞ்சி கிராமம், இங்கு 1 மைல் தூரத்தில் காட்டின் மத்தியில் கோடேஷ்வர் சிவாலயம், ஹேமாத் பண்ட் கட்டிடம். சிவராத்திரிதான் பூஜை. (2) சாவர் கோரி கிராமம், மஹாதேவர் கோயில்; குகைக் கோயில் சிவராத்திரி விசேஷம்.

பாலாத் துறை :—திருப்பாலாத் துறை என்று வழங்கப் படுகிறது. திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி மார்க்கண்டர் பூசித்த ஸ்தலம்,

பாலக்கோட் :—சேலம் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி-பரமேஸ்வரர், இந்த லிங்கம் ஆதியில் கிருஷ்ண ராஜபேட்டையிலிருந்தது ; அது பாழாய்ப் போக இங்கு கொண்டு வந்து பிரதிஷ்டை செய்யப்பட்டது. இக் கோயில் பாஸ்கர ராஜா என்பவரால் கட்டப்பட்டது.

பாலகிரி :—கடப்பை ஜில்லா, சென்னை ராஜதானி, பீமேஸ்வர ஸ்வாமி கோயில்.

பாலக்குடி :—திருப்பாலக்குடி எனவும் வழங்கம்படு கிறது. ராம்நாத ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி-மந்தநாதஸ்வாமி; ஸ்ரீராமர் பிரதிஷ்டை யென்பது ஐதிகம்.

பாலகோலு.—சென்னை ராஜதானி, கிருஷ்ணை ஜில்லா· சிவாலயம். தங்கலிங்கம் உள்ளது.

பாலங்கரை :—புதுக் கோட்டை சமஸ்தானம், புதுக் கோட்டைக்கு 13 மைல்-பழைய சிவாலயம்.

பாலி கட்டம் :—விசாகப்பட்டணம் ஜில்லா, சென்னை ராஜதானி; நரசராவ் பட்டணத்திலிருந்து 23 மைல், சிவால யம். பிரம்மேஸ்வரர் கோயில், சங்கிதி மேற்கு பார்த்தது. இங்கு பாய்கிற பண்டேடு எனும் சிறு நதி உத்தர வாஹினி.

பாலிவி :—எல்லூருக்கு 8 மைல், நுஜ்வீடிலிருந்து 10 மைல், சென்னை ராஜதானி, சிவாலயம். சிவராத்திரி உற்சவமும், கலியாண உற்சவமும் விசேஷம்.

பாலுவா:—ஐக்கிய மாகாணம், (1) பார்த்தி கிராமம் சிவாலயம். கௌலேஷ்வர்நாத் மஹா தேவர் கோயில், பழைய சிவாலயம் கிலமாகிப் போக, சுமார் 250 வருடங் களுக்கு முன் தடுராய்பக்த்சிங் என்பவரால் புதுப்பிக்கப் பட்டது. (2) ராணிதலால் கிராமம் சிவாலயம், ராஜா மஹிப் நாராயண சிங் என்பவரின் மனைவியால் கட்டப்பட்டது.

பாலைத் துறை :—(திரு) திருப்பாலத் துறை என்று அழைக்கப்படுகிறது; திருச்சிராப்பள்ளி தாலுகா, சென்னை ராஜதானி, பாபநாசத்திற்கு 1½ மைல் வட கிழக்கு, பிரமன் பூசித்த ஸ்தலம். தாருகாவனத்து ரிஷிகள் அனுப்பிய புலியை உரித்து, சிவபெருமான் அதன் தோலைப் போர்த் துக்கொண்ட ஸ்தலம், ஸ்வாமி - பாலைவன நாதேஸ்வரர் அல்லது தாருகவனேஸ்வரர், தேவி-தவள வெண்ணகை யம்மை, காவிரி நதி, கோயில் மிகவும் பழையது; கிலமா

யிருக்கிறது. கோபுர ஸ்தூபிகள் எடுத்துவிடப்பட்டன. அப்பர் பாடல் பெற்றது,

பாலவனம்:--சென்னை ராஜதானி, பொன்னேரியி லிருந்து 11 மைல்-சிவாலயம். லிங்கம் வெண்கிற மூடை யது. திருப்பாற் கடலைக் கடைந்த போது தெறித்த பால் துளிகளாலாய தென்பது ஸ்தல புராணம். லிங்கம் வடு பட்டது; சூடான அபிஷேகம் செய்யக்கூடாது. கர்ப்பக் கிரஹம் கஜப்பிருஷ்ட ஆகிருதி. பிரம்மொற்சவம் பங்குனி மாசம்.

பாங்நகர்:—வட இந்தியா ரெயில் ஸ்டேஷன், சிவா லயம்.

பாவஞ்சா:—மங்களூர் தாலுகா; தென் கன்னட ஜில்லா, சென்னை ராஜதானி. மஹா வில்வேஸ்வரர் கோயில்.

பாஷாயங் கோட்டை:—சென்னை ராஜதானி, திருநெல் வேலி ஜில்லா, சிவாலயம் திரிபுராந்தகர் - விசாலாட்சி, வைப்புஸ்தலம்.

பாவசாரி:—பம்பாய் ராஜதானி, மஹாதேவர் ஆலயம்.

பாழலி:—சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி-சுந்தரேஸ்வார், தேவி-பார்வதி.

பாறி வைஜநாதர் கோயில்:—பான மாடத்திலிருந்து புறப்பட்டு பாமணி ஸ்டேஷனிலிறங்கி 12 மைல் போக வேண்டும், சிவாலயம்.

பாற்றுறை,—(திரு) சென்னை ராஜதானி, திருவெறும் பூருக்கு 4 மைல் வட கிழக்கு. மார்க்கண்டேயர் பூசித்த பொழுது அபிஷேகத்திற்குப் பால் கிடைக்காமற்போக, சிவபெருமான் பால் பெருகும்படி அனுக்கிரஹித்த க்ஷேத் திரம். ஸ்வாமி-மூலநாதேஸ்வரர், தேவி-மேகலாம்பிகை, அல்லது மோகலாம்பிகை, கொள்ளிட தீர்த்தம். சிவ பெருமான் பொன் இதயமாயப் புற்றிலிருந்து எழுந்தருளிய ஸ்தலம்-திருஞான சம்பந்தர் பாடல பெற்றது.

பாஜித்பூர் :—ஐக்கிய மாகாணம். இங்கு இரண்டு சிவாலயங்கள் உண்டு: (1) ஜாஜ்மௌ இதன் பழைய பெயர் சித்தபுரீஸ்வரம்; பிரத்தேஷுவர், தேவி-சிந்தாதேவி. (2) ஷாஜஹான் பூர் பிரிவு, பிலிபிட் கிராமம், கௌரி சங்கர் கோயில்.

பாஜௌரா :—வட இந்தியா, காங்கிரா ஜில்லா, ரவி நதிக்கரையிலுள்ளது, சிவாலயம்; 35 அடி உயரம். ஆரிய சில்பம். மோடார் வண்டுகள் மூலமாகப் போகலாம்.

பாஹூர்:—புதுச்சேரிக்கு அருகாமையி லுள்ளது, சென்னை ராஜதானி, சிவாலயம் பல்லவ சில்பம். ஸ்வாமி-மூலேஸ்வர், கல்வெட்டுகளில் மூலஸ்தான முடையார் என்றிருக்கிறது. இங்கு பல கல் வெட்டுகள் உண்டு.

பாஸ்லாலா :—திருவாங்கூர் ராஜ்யம், சிவாலயம்.

பாஷான் :—பூனா ஜில்லா, பம்பாய் ராஜதானி, சிவாலயம். கோயில் ஷாஹூ மகா ராஜாவின் தாயாரால் சுமார் 1708-ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. சக்ரதீர்த்தம், சிவராத்திரி விசேஷம்.

பிகனீர் சமஸ்தானம் :—வட இந்தியா, இங்குள்ள சிவாலயங்கள் :-(1) கோட்பூர் பிரிவு காகா கிராமம், சிவாலயம். ஸ்வாமி-நீலகண்ட மஹாதேவர். (2) பிலரா பிரிவு புக்களா கிராமம்; மஹாதேவர் சிவாலயம். இதற்கு அருகில் பார்வதி கோயில் பிரத்யேகமாக உளது. சுமார் 100 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது. (3) நாடோல் கிராமம், சோமேஸ்வரர் கோயில், பழைய சிவாலயம். (4) சத்ரி ஜோகேஷ்வர் சிவாலயம். (5) ஜஸ்வந்த பூர் பிரிவு ரத்னபுரி கிராமம்; சிவாலயம் 12-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. (6) கேர் கிராமகூபம், இங்கு 3 சிவாலயங்கள் உள. மேற்கு பார்த்த கோயில்கள். (7) நாகௌர் பட்டணம் முரளிதரர் கோயிலில் இங்கு ஒரே பிரகாரத்தில் அக்கம் பக்கமாய் லிங்கமும், கிருஷ்ண விக்ரஹமும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. (8) பாலி கிராமம், சிவாலயம் 1143-ஹூ குமாரபாலர் என்பவரால் கட்டப்பட்ட அழகிய கோயில். (9) பிகனீர்பட்டணம்-புதிய சிவாலயம் அழகியது.

பிட்சாண்டார் கோயில் :—இதற்கு சமய புரம் என்றும் பெயர். திருச்சிராப்பள்ளிக்கு 7 மைல், லால்குடி தாலுகா திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். உத்தமர் கோயில், ஸ்வாமி பெயர் கல்வெட்டுகளில் திருக் கரம்பத்துறை மஹா தேவர் என்றிருக்கிறது.

இங்கு மஹா விஷ்ணுவிற்கும், பிரம்மாவிற்கும் சந்நிதி கள் உண்டு; தினம் மும்மூர்த்திகளுக்கும் பூஜை நடக் கிறது. இவ்விடம் பஞ்சப்பிரகார உற்சவம் விசேஷம்.

பிட்டா புரம் :—(பிஷ்டபுரம்) கோதாவரி ஜில்லா, சென்னை ராஜதானி, குக்குடேஸ்வரர் சிவாலயம். பாதகயை தீர்த்தம், இங்கு கயாசுரனைப் பரமசிவம் சம்ஹாரஞ் செய்த இடமாம்.

பிட்டான்பூர் :—பெங்கால்நாகபூர் ரெயில்வேயிலுள்ள சல்பா எனும் ஊருக்கு 2 மைல்-சிவாலயம்.

பிடவூர் :—தற்காலம் திருபபட்டூர் என்னும் பெய ருடையது. திருசிராப்பள்ளி ஜில்லா, முசிறி தாலுகா, இதுதான் சங்க காலத்திய பிடவூர்; சிவாலயம் வைப்பு ஸ்தலங்களில் ஒன்று.

பித்ரஹல்லிக் கோட்டை :—பம்பாய் ராஜதானி துங்க பத்ரைக் கரையிலுள்ளது. சிவாலயம் பாழாயிருக்கிறது. பஞ்சமுக லிங்கம்.

பிரங்கி புரம் :—வினுகொண்டா தாலுகா, குண்டூர் ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம். ஸ்வாமி-வீரபத் ரேஸ்வர்.

பிரம்பியம் :—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, கும்பகோணத்திற்கு 5 மைல் வடமேற்கு-சிவாலயம்.

பிரம்மதேசம் :—சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி-சந்திரமௌளீஸ்வரர். கிருஷ்ண சாஸ்திரியார் இது பல்லவ கட்டடம் என்று கூறியுள்ளார்; தூப்ரெயில் துரை பழைய சோழ கட்டடம் என்று நினைக்கிறார்.

பிராக்ஜோதிஷ புரம் :—வட இந்தியா, கோஹத்திக்கு சமீபம், சிவாலயம். ஸ்வாமி-கபிலேஸ்வரர், தேவி-காமாட்சி. பிரம்மபுத்ர நதியின் மத்தியில் ஒரு சிறு குன்றின்மேலுள்ள சிவாலயம்.

பிரம தேசம் :—அம்பா சமுத்திரம் தாலுகா, திருநெல் வேலி ஜில்லா, சென்னை ராஜதானி, கைலாசநாத ஸ்வாமி கோயில். இதற்குப் பெரிய தெப்பக்குளம் உண்டு. கோயிலிலுள்ள சோமவார மண்டபம் பார்க்கத் தக்கது. கோயில் நாயக்க அரசர்கள் காலத்தியதாயிருக்கலாம். பெரிய கோபுரம் மேற்கு பார்த்தது. 7 நிலைகளையுடையது. கிழக்கு கோபுரம் நாயக்க அரசர்கள் மந்திரியாகிய வீர ராகவ முதலியாரால் கட்டப்பட்டது, சுமார் 400 வருடங் களுக்கு முன். மதுரை கோயிலை ஒத்திருக்கிறது. கோயில் தெற்கே பார்த்தது. கர்ப்பக்கிரஹத்தில் தும்புரு நாரதர்க ளுடைய சிலைகளிருக்கின்றன.

பிரம்ம கபாலம் :—வட இந்தியா பதிரிகாஸ்ரமத்திற்கு சமீபமுளது. சிவாலயம்; ஸ்வாமி-கபாலேஸ்வரர். இது கங்கை உற்பத்தியாகுமிடம்.

பிரம்மபுரம் :—தென் இந்தியா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி - பிரம்மேஸ்வரர், தேவி - நாகவல்லி; பிரம்மா பூசித்த க்ஷேத்திரம்.

பிரபாசம் :—வட இந்தியா சிவாலயம். ஸ்வாமி - சசி பூஷணர். சுயம்புலிங்கம்.

பிரயாகை :—(அலஹாபாத்) வட இந்தியா ரெயில் ஸ்டே ஷன். கங்கையும், யமுனையும் சங்கமமாகுமிடம்; திரி வேணி சங்கமமம் என்று பெயர். சரஸ்வதி நதி அந்தர் வாஹினியா யிருப்பதாக ஐதீகம். சிவாலயம், ஸ்வாமி-சோமேஸ்வரர், தேவி-பார்வதி; சுயம்புலிங்கம்; திரிவேணி தீர்த்தம். கோயில் யமுனையின் கீழ்க்கரையிலுள்ளது.

பிறம்பில் :—பிறம்பூர் என்றும் பெயர். சென்னை ராஜதானி, தென் இந்தியா, மங்கநல்லூர் ஸ்டேஷனி லிருந்து 5 மைல், தேவார வைப்புஸ்தலம். தற்காலம்

குமாரசாமி கோயிலாக பிரசித்தி பெற்றது. ஆயினும், சிவபெருமானும் தேவியாரும் கோயில் கொண்டிருக்கின்றனர்.

பிரான் மலை:—திருப்பத்தூர் தாலுகா, ராமநாதபுரம் ஜில்லா, சென்னை ராஜதானி. கொடுராஜீஸ்வரர் கோயில்; விஸ்வநாதர் கோயில், சொக்கநாதர் கோயில்.

பிருத்தாவனம்:—வட இந்தியா (பிரபல விஷ்ணு க்ஷேத்திரம்) சிவாலயம். கோயில் ஸ்ரீ கிருஷ்ணன் காலத்திற்கு முந்தியதாகச் சொல்லப்படுகிறது, ஸ்வாமி-மஹாதேவர், தேவி-பார்வதி. (மிகவும் பழமையான கோயிலென காலஞ் சென்ற கே. ஆறுமுகப் பிள்ளை கூறுகிறார்.) யமுனை தீர்த்தம்.

பில்சாட்:—வட இந்தியா, சிவாலயம், ஸ்வாமி-மஹாசேனர் கோயில்-415-ம் வருஷத்திற்கு முந்திய தென சிலர் கூறுகின்றனர்.

பிலாஸ்பூர்:—வட இந்தியா, மத்ய மாகாணம்; இங்குள்ள சிவாலயங்கள்:-(1) பிலாஸ்புரி ரங்கநாத் ஷிவ்-சிவாலயம். (2) கரோட் கிராமம், சிவாலயம் ஸ்வாமி-லட்சுமேஸ்வரர்; சுமார் 1300 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது. மத்திய மாகாணத்தில் இதுதான் சிறந்த கோயில். (3) பாலி கிராமம் சிவாலயம், ஜாஜல்ல தேவரால் கட்டப்பட்டது. அழகிய சில்பமுடையது. (4) பீதாம்பூர் கிராமம். மஹாதேவர் சிவாலயம். இங்கு பிரார்த்தனை செலுத்துவோர் ஒரு லட்சம் சிதைவு இல்லாத அரிசிகளைக் செலுத்துகின்றனர். (5) தென்பூர் பிர்தேஷ்வர் மஹாதேவர் சிவாலயம்.

பிள்ளையார் பட்டி:—சென்னை ராஜதானி, மதுரை ஜில்லா, சிவாலயம்; ஸ்வாமி-மருதீசர், தேவி-வாடாமுலையம்மை.

பிற்றமங்கலம்:—மைசூர் ராஜ்யம். முக்தி நாதேஸ்வரர் சிவாலயம், 11-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.

பீம்சங்கர் கோயில் :—பம்பாய் ராஜதானி; ஜி. ஐ. பி. ரெயிலில் நேரளத்திலிருந்து காண்டசத்துக்குப் போய் அங்கிருந்து சில மைல்கள் மலையேறிப் போகவேண்டும். சிவாலயம், வட இந்தியாவிலுள்ள 12 ஜோதி லிங்கங்களில ஒன்று இங்குளது. பழைய கோயில், இங்கு நாநாபட் நாவிஸ் எனும் மஹாராஷ்டிர தலைவரால் கட்டப்பட்ட புதிய கோயில் ஒன்றுண்டு.

பீமவரம் :—கோதாவரி ஜில்லா, காகிநாடாவிலுள்ளது. சென்னை ராஜதானி, இவ்வூருக்கு சாளுக்கிய பீமேஸ்வரம் என்று பெயர். சிவாலயம், ஸ்வாமி-பீமேஸ்வரர், தேவி. திரிபுர சுந்தரி - தாருகாசுரன் கழுத்திலணிந்திருந்த சிவ லிங்கங்கள் ஐந்து; அவற்றுள் இது ஒன்று எனப்படும்.

பீர்கட் :—ஜி. ஐ. பி. ரெயில் பிஞ்கன்ஜ் ஸ்டேஷனுக்கு 3 மைல். மலையின் உச்சியில் சிவாலயம்.

பீஜபூர் பிரிவு :—பம்பாய் ராஜதானி, இங்குள்ள சிவாலயங்கள் :—(1) அகர்கேட் கிராமம், சிவாலயம்; 23 × 23 × 28 அடி விஸ்தீரணம். ஸ்வாமி - சங்கர்லிங் மஹாதேவ், சிவலிங்கம் வெள்ளைக் கல்லாலாயது (2) பால்கோவான் கிராமம், பாலேஷ்வர் சிவாலயம். (3) தேர் கோவான் கிராமம், மல்லிகார்ஜுனர் கோயில்; ஹேமாத்பண்ட் கட்டடம். (4) தாருக கிராமம், சிவாலயம் குகைக்கோயில். (5) டாங்கர் கோலான் கிராமம், மஹாதேவர் கோயில். (6) கோடான் கிராமம் சிவாலயம். (7) கொண்டே கோவான் கிராமம், மார்க்கலநாத் கோயில்; ராமேஷ்வரர் கோயில். (8) காரங் பிம்பிரி கிராமம், பிரம்மேஷ்வர் கோயில். (9) ஹரிச்சந்தர்கட்-அங்கேஷ்வர் மஹாதேவ் கோயில். (10) ஜான்கேட் கிராமம். ஜடாஷங்கர் ஆலயம். பூர்வம் மண்ணால் மூடப்பட்டிருந்தது, பிறகு வெளிப் படுத்தப்பட்டது. (11) கார்கேட் கிராமம். இங்கு 2 சிவாலயங்கள் உள. (12) சிரூர் கிராமம், ராமலிங்கர் கோயில், 50 × 20 அடி விஸ்தீர்ணம்; சித்தேஷ்வர் கோயில் 60 × 32 அடி விஸ்தீரணம்; இது ஆதியில் ஜைன ஆலயமாயிருந்த தென்பர்; (13) தலைக் கோட்டை கிராமம், சிவாலயம். (14) அல்மேல் கிராமம், ராமலிங்கஸ்வாமி ஆலயம்; பாழா

யிருக்கிறது. இங்கு 3 லிங்கங்கள் உண்டு. ஒன்றில் நான்கு முகங்கள் இருக்கின்றன. (15) பாகேலாடி கிராமம், இங்கு 2 சிவாலயங்கள் உண்டு, பசவேஷ்வர் கோயில், ராமேஷ்வர் கோயில், இரண்டும் தெற்கு பார்த்தவை. (16) பாசா கோட் கிராமம், மல்லிகார் ஜுனர் கோயில்; மூர்லிங்குடி. (மூன்று லிங்கங்கள் குடி) இது சுமார் 150 வருடங்களுக்கு முன் கட்டப் பட்டது. (17) பெவுர் கிராமம், ராமேஷ்வர் கோயில், (18) பில்கி கிராமம், மஹாதேவர் ஆலயம், 1708-ஹு கட்டப்பட்டது. (19) சிமால்கி இதன் முழுப் பெயர் சின்மய க்ஷேத்திரம், சிவாலயம். இங்கு 108 சிவ லிங்கங்கள் இருந்ததாக ஐதீகம். இங்கு ஆற்றின் கீழ் ஒரு சிவாலய மிருந்ததாகவும் சொல்லப்படுகிறது. (20) தேவாங் கோவன் கிராமம், 3 சிவாலயங்கள்: காமேஷ்வர் கோயில்; மல்லிகார்ஜுனர் கோயில், சங்கரலிங்கர் கோயில். (21) தூல்கேட் கிராமம், சங்கரலிங்கர் கோயில், 20 × 30 அடி விஸ்தீரணம். (22) முத்திகி கிராமம். 2 கோயில்கள்; காசி விஸ்வேஸ்வரர் கோயில்; முக்தேஸ்வரர் கோயில். (23) நாலத்வாங் கிராமம், சிவாலயம்; 800 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது. (24) நந்தி கேஷ்வர் கிராமம், மஹா கூடேஷ்வர் கோயில் 12 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது; முடி மல்லிகார்ஜுனர் கோயில், கல்வெட்டுகளில் ஸ்வாமி பெயர் மகுடேஷ்வர் என்றிருக் கிறது. இங்குள்ள தீர்த்தத்திற்கு விஷ்ணு புஷ்கரிணி என்று பெயர், விரூபாட்சர் கோயில். (25) நந்திவடிகோ கிராமம், பெரிய ஈஸ்வரர் கோயில். (26) ஈக்ஷாங்கி கிராமம், காளப்பர் கோயில். (27) சலோட்கி கிராமம், சிவயோகேஷ்வர் கோயில் 75 × 75 × 30 அடி விஸ்தீரணம். பழைய கோயில், இங்கு லிங்கம் கற்பாறையின கீழ் இருப் பதாக ஐதீகம்; சோமநாத் கோயில், கஜனி மகம்மதால் குஜராத் சோமநாதர் ஆலயம் அழிக்கப்பட்டபோது, அங் கிருந்த சிவலிங்கம் இக் கோயிலில் ஒளித்து வைக்கப்பட்ட தாகச் சொல்லப்படுகிறது. இக் கோயில் 1000 வருடங் களுக்கு முற்பட்டது. (28) சங்கமேஷ்வர் கோயில், பால் பிரபா, கிருஷ்ணை, நதிகள் சங்கமமாகுமிடம் - சிவாலயம். ஜெயின சில்பங்களிருக்கின்றன. பூர்வத்தில் ஜெயினலய

மாக இருந்திருக்கலாம். (29) சில்பூர் கிராமம், சிறிய சிவாலயம். (30) சிந்த்கி கிராமம், சங்கமேஷ்வர் கோயில். (31) கஜேந்திர கட் கிராமம். இங்கு 3 சிவாலயங்கள் உண்டு : விரூபாட்சர் கோயில், ராமலிங்கர் கோயில், கால் கேஷ்வர் கோயில். (32) கோல்கெலி கிராமம், கோல வீஷ்வர் சிவாலயம். (33) குடூர் கிராமம், ராமேஷ்வர் கோயில். (34) ஹீப்பார்கி கிராமம், கால்மேஷ்வர் கோயில் 30 x 15 அடி விஸ்தீரணம். (35) ஹிரூர் கிராமம், மாகேஷ் வர் கோயில். (36) ஹோர்த்தி கிராமம், சித்தேஷ்வர், மல்லிகார்ஜுனர் கோயில்கள். இவற்றுள் மல்லிகார் ஜுனர் கோயில் திராவிட சில்பமமைந்தது. 6-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாக கசின்ஸ் எண்ணுகிறார். (37) இங்கிலேஷ்வர் கிராமம், சோமேஷ்வர் கோயில்; இங்கு சித்தேஷ்வர் கோயில் எனும் குகைக் கோயிலுமுண்டு. (38) கெரூர் கிராமம், நாகேஷ்வர் கோயில் 1505-ஆம் கட்டப்பட்டது. (39) குண்டார்கி கிராமம், மஹாதேவ் கேஷ்வர் கோயில்; மதிவலேஷ்வர் கோயில், இது ஏரியின் மத்தியிலிருக்கிறது. (40) முத்தபிலால் கிராமம், சிறிய சிவாலயம்.

பிஜோலியா :—ராஜபுதனத்தி லுள்ளது. இங்கு 3 சிவாலயங்கள் உள.

புக்க அக்ரஹாரம் :—சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி-காசிவிஸ்வநாதர், தேவி-விசாலாட்சி.

புகடா :—கோட கொல்லா கிராமம், பர்ஹாம்பூர் தாலுகா, கஞ்சம் ஜில்லா, சென்னை ராஜதானி. சிவாலயம் குன்றுகளின் அருகில் உள்ளது.

புகழூர் :—(திரு) சென்னை ராஜதானி, நங்கிலத்திற்கு 4 மைல் கிழக்கு சிவாலயம். இங்கு புலி உருவத்தில் பரம சிவம் எழுந்தருளியிருக்கிறார். ஸ்வாமி - அக்னீஸ்வரர் அல்லது கோளப்பிரான், தேவி-கருந்தார்குழலி யம்மை. அக்னி தீர்த்தம், புன்னை மரம், திருநாவுக்கரசு நாயனார் முக்தி பெற்ற ஸ்தலம். சுந்தரமூர்த்தி நாயனார் தலையில் வைத்தூறங்கின செங்கற்கள், பொன் கற்களாக்கிய

ஸ்தலம். தேவார காலத்தில் ஸ்வாமி பெயர் கோளபிரான். பிரம்மோற்சவம் வைகாசி மாசம். மூவர் பாடல் பெற்ற க்ஷேத்திரம். புகலூர் வர்த்தமனீச்சரம் (திரு)-திருப்புகலூர் கோயிலின் வடபுறமுள்ளது, புஷ்பமாலை தொண்டுசெய்து முருக நாயனர் வசித்த ஸ்தலம். மேகங்கள் பூசித்த ஸ்தலம். ஸ்வாமி - வர்த்தமானீஸ்வரர், தேவி - கருந்தார் குழலியம்மை, அக்னி தீர்த்தம், திருஞாஸசம்பந்தர் பாடல் பெற்றது.

புட்டிகே :—மங்களூர் தாலுகா, தென் கன்னட ஜில்லா, சென்னை ராஜதானி; சோமநாதர் சிவாலயம்-பல கல்வெட்டு களுடையது.

புடைமருதூர் :—அம்பா சமுத்திரம் தாலுகா, திருநெல் வேலி ஜில்லா, சென்னை ராஜதானி; நாரம்புநாத ஸ்வாமி கோயில், தேவி-கோமதியம்மன். இங்கு மாறன் சடையன் பாண்டியனது கல் வெட்டொன்று உளது. இங்கு மற்றொரு சிவாலயமுண்டு. ஸ்வாமி - சென்னபுரீஸ்வரர், தேவி-மங்கள நாயகி. புதிய கோயில் சுமார் 400 வருடங் களுக்கு முன் கட்டப்பட்டதென்பர்; 5 நிலைக் கோபுரம், ஸ்வாமி சந்நிதியும், அம்மன் சந்நிதியும் அக்கம் பக்கமா யிருக்கின்றன. நாயக்க அரசர்கள் காலத்தியதென்பர். கோயில் ஸ்டேஷனுக்கு 3 மைல் தூரம். தாமிரபர்ணி நதிக்கரையிலுள்ளது.

புத்துக் கோட்டை :—சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி-அகஸ்தீஸ்வரர், தேவி - ஆநந்தவல்லி; அகஸ்திய தீர்த்தம்.

புத்தூர் :—(திரு) சென்னை ராஜதானி. பிரான் மலைக்கு 15 மைல் தென் கிழக்கு. உமாதேவியார், லட்சுமி, பூசித்த க்ஷேத்திரம். சிவகங்கையிலிருந்து 22 மைல். ஸ்வாமி-புத்தூர் ஈஸ்வரர், தேவி-சிவகாமியம்மை. சீதளி தீர்த்தம், கருட தீர்த்தம், கொன்றை விருட்சம். இங்குள்ள பயிரவர் சந்நிதி விசேஷம். திருஞானசம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

புத்தூர் :—ஆறணி தாலுகா, வடஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி. வித்யாநாதேஸ்வரர் கோயில், கல் வெட்டுகளில் ஸ்வாமி பெயர் வித்யாபதீஸ்வர முடைய நாயனர் என்றிருக்கிறது.

புது ஆவடையார் கோயில் :—சென்னை ராஜதானி, தம்பிக் கோட்டை ஸ்டேஷனுக்கு 2½ மைல் வட மேற்கு. சிவாலயம், ஸ்வாமி-மத்யஸ்தம்புரீஸ்வரர், கோயிலில் திங்கட் கிழமைகளில் இரவு 12 மணிக்கு சிவபூஜை நடக்கிறது.

புல்டாம்பா :—மத்ய இந்தியா ரெயில் ஸ்டேஷன். சிவாலயம், கோதாவரிக் கரையிலுள்ளது.

புதுக் கோட்டை:—சென்னை ராஜதானி, புதுக் கோட்டை சமஸ்தானத்தின் தலைநகர்; இங்கு இரண்டு சிவாலயங்கள் உண்டு. (1) கோகர்ணத்தில் ஸ்ரீ கோகர் ணேஸ்வரர் கோயில், தேவி - பிரஹதாம்பாள். கர்ப்பக் கிரஹம் மலையில் குடையப்பட்டிருக்கிறது. லிங்கமும் அப்படியே குடையப்பட்டிருக்கிறது. குலோத்துங்க சோழன் காலத்தியது என்று எண்ணப்படுகிறது. பிரம் மோற்சவம் சித்திரை மாசம், (2) ஊர்மத்தியில் சாந்த நாத ஸ்வாமி கோயில், தேவி-வேத நாயகியம்மன்.

புதுநகரம் :—பாலக்காட்டிற்கு 6 மைல் தூரம். மலபார் ஜில்லா, சென்னை ராஜதானி, பெரிய சிவாலயம்.

புதுச்சேரி :—சென்னை ராஜதானி, பிரெஞ்சு இலாகா முக்கிய பட்டணம். ஸ்ரீ வேதபுரீஸ்வரர் ஆலயம், புதியது. சுமார் 300 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது. இங்கு அம்மணி வாசம் எனும் சத்திர முண்டு.

புதுப்பட்டி :—ஆற்காடு தாலுகா, வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி; பாரத்வாஜேஸ்வரர் கோயில்.

புதுவயல் :—சென்னை ராஜதானி; செட்டி நாட்டிலுள்ள சிவஸ்தலம்; ஸ்வாமி-வீரசேகரர், தேவி - உமையம்பிகை, விநாயகருக்கு கைலாய விநாயகர் என்று பெயர்.

புரபு கோயில் :—குளித்தலை தாலுகா, திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்.

புரிசை :—வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி; சிவாலயம். ஸ்வாமி-புரீஸ்வரர், லிங்கம் சுக்ரீவப் பிரதிஷ்டை யென்பது ஐதீகம்.

புல்லம்பேட் :—கடப்பை ஜில்லா, சென்னை ராஜதானி; பழைய சிவாலயம்.

புலிப்புறக் கோயில் :—சென்னை ராஜதானி; தென் இந்தியா சிவாலயம், ஸ்வாமி-திருப்புவீஸ்வரர், பிரம்மோற்சவம் தைமாசம்,

புலியூர் கிராமம் :—கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, கருர் தாலுகா, பழைய சிவாலயம்.

புவலைக் குடி :—திரு மெய்யம் தாலுகா, புதுக்கோட்டை சமஸ்தானம், புதுக்கோட்டைக்கு 16 மைல், சிவாலயம். மலைக் குகைக்கோயில்.

புவனகிரி :—தென் இந்தியா, சென்னை ராஜதானி; ஸ்வாமி-வேதபுரீஸ்வரர், தேவி-மீனாட்சி யம்மை.

புலிவனம் :—சென்னை ராஜதானி, மதுராந்தகம் தாலுகா உத்தரமேரூருக்கு 5 மைல், காஞ்சீபுரத்திற்கு 15 மைல், சிவாலயம். கர்ப்பக்கிரஹம் கஜப்பிருஷ்ட ஆகிருதி. ஸ்வாமி - வியாக்ரபாதீஸ்வரர், அமிர்தேஸ்வரர், தேவி-யாகாம்பிகை, பாலாம்பிகை, கல்வெட்டுகளில் ஊர் பெயர் புலிவலம் என்றிருக்கிறது. வியாக்ரபாதர், சூரியன், மார்க்கண்டர் பூசித்த க்ஷேத்திரம். இங்குள்ள லிங்கத்திற்கு ஜடையிருக்கிறது.

புலிவலம் :—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, திருவாரூருக்கு 2 மைல். தட்சிண கோகரணம் என்றும் பெயர். சிவாலயம் இங்குள்ள தட்சிணை மூர்த்தி பார்க்கத் தக்கது. ஸ்வாமி-கோகர்ணேஸ்வரர், தேவி-ஆநந்தவல்லி, வைப்புஸ்தலம்.

புவனேஸ்வரம் :—வங்காள நாக்பூர் ரெயில் ஸ்டேஷன். வட இந்தியா - குர்தாஸ் ஸ்டேஷனிலிருந்து 11 மைல். பிரபல சிவஸ்தலம், இங்கு முற்காலத்தில் 7000 சிவாலயங்களிருந்தனவாம். தற்காலம் சுமார் 500 சிவாலயங்களுண்டு. (1) இவற்றுள் லிங்கராஜ் மஹாதேவர் ஆலயம் மிகவும் பெரியது; மிகச் சிறந்தது. கோபுரம் ஏழாம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. ஸ்வாமி பெயர் லிங்கராஜ் மஹாதேவர், புவனேஸ்வரர்; தேவி-பார்வதி; பிந்து சரோவாத் தீர்த்தம், மஹாநதி அருகிலுள்ளது. லிங்கத்தை பஞ்சமர்கள் மகம்மதியர்கள் தவிர மற்ற எல்லா ஹிந்துக்களும் தொட்டு பூஜை செய்யலாம். கோயில் வட ஆரிய சில்பமமைந்தது, மிகவும் அழகியது. ஒரிஸ்ஸாவையாண்ட யயாதிகேசரி எனும் அரசனால் ஆரம்பிக்கப்பட்டு அவனது பேரனாகிய அலபு கேசரி அல்லதுலலாட் இந்திரகேசரியால் முடிக்கப்பட்டது. இங்குள்ள நாட்டிய மந்திரம் 11-ஆம் நூற்றாண்டில் சாலின கேசரியின் ராணியால் கட்டப்பட்டது. விமானம் 180 அடி உயரம், சுயம்புலிங்கம் 8 அடி உயரம்; பிராகாரம் 520 அடி × 465 அடி. பிராகாரத்தில் பகவதி, பார்வதி, ஆலயம். (2) இதற்கு ½ மைல் தூரத்தில் முக்தேஷ்வர் ஆலயம். இது 6-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. அழகிய சில்பமமைந்தது. (3) பரசுராமர் ஆலயம். இது 2-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதென்பர். இதுதான் இங்குள்ள சிவாலயங்களுக் கெல்லாம் பழமையானது. ஆரிய சில்பமமைந்தது. (4) பாஸ்கரேஸ்வரர் ஆலயம், புவனேஸ்வரர் ஆலயத்திற்கு வட கிழக்கிலுள்ளது. 6-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. லிங்கம் மிகவும் பெரியது. (5) அருகாமையிலுள்ள கௌரி குண்டம் எனும் ஏரிக் கரையில் கேதாரேஸ்வரர் ஆலயமிருக்கிறது. மற்றுமுள்ள முக்கிய ஆலயங்கள் "சித்தேஸ்வர ஆலயம்; வருணேஸ்வரர் கோயில; கபிலேஸ்வரர் கோயில், ராமேஸ்வர் கோயில்: பரமேஸ்வரர் கோயில், உத்தரேஸ்வரர் கோயில், சிசிரேஸ்வரர் கோயில், மைத்ரேஸ்வரர் கோயில், மேகேஸ்வரர் கோயில், சுயம்புகேஸ்வரர் ஆலயம், கோடிதீர்த்தேஸ்வரர் ஆலயம், பிரம்மேஸ்வரர் ஆலயம் முதலியன; இங்கு பல சத்திரங்கள் உண்டு.

புழல் :—சென்னை ராஜதானி, செங்கல்பட்டு ஜில்லா, சிவாலயம். ஸ்வாமி-திருமூலஸ்தான முடைய நாயனார்.

புள்ளமங்கை :—(திரு) இதற்கு ஆலந்துறை என்றும் பெயர் உண்டு. சிவபெருமான் ஆலத்தை உட்கொண்ட க்ஷேத்திரம். தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன். ஐயம் பேட்டைக்கு 2 மைல். ஸ்வாமி-ஆலம் தவிர்த்த ஈஸ்வரர், பசுபதி நாதேஸ்வரர், தேவி-அல்லியங்கோதை; கோயிலி லுள்ள காளிக்கு தலைபலி யிடுவதுபோல் ஒரு சில்பமுண்டு. திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. பரகேசரி வர்மன் முதலிய சோழ அரசர்கள் காலத்திய கல்வெட்டுகள் பல உள. இங்கு பசுபதி கோயில் என்றும் ஒரு சிவாலய முண்டு. ஸ்வாமி-பசுபதிநாதேஸ்தரர், தேவி-பால்வண்ண நாயகியார், சிவ தீர்த்தம்; திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

புறம்பயம் :—(திரு) திருப்புறம்பியம் என்று அழைக் கப்படுகிறது. தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, கும்பகோணத்திலிறங்கி 6 மைல் போகவேண்டும். இன்னம் பருக்கு 2 மைல் வடமேற்கு. ஸ்வாமி-சாட்சிநாதேஸ்வரர் (பழைய பெயர் ஆதித்யேஸ்வரர்) தேவி-கரும்பன்ன சொல் அம்மை, பிரம தீர்த்தம், புன்னைவிருட்சம், பிரளயத்திற்குப் புறம்பாயிருந்தமையால் புறம்பயம் எனப் பெயர் பெற்றது. (புறம்பு + அயம் = நீர்) திருஞானசம்பந்தர் அரவத்தால் இறந்த வணிகனை எழுப்பிய ஸ்தலம். இங்கு தட்சிண மூர்த்திக்குப் பிரத்யேகமாகக் கோயிலுண்டு; விசேஷ மானது. இங்கு குளத்தருகிலுள்ள பிள்ளையாருக்குப் பிரளயங்காத்த பிள்ளையார் என்று திருநாமம். வன்னியும் கிணறும், லிங்கமும் வணிகப் பெண்ணுக்கு சாட்சியாகிய ஸ்தலம். மூவர் பாடல் பெற்றது. சுந்தோப சுந்தர் பூசித்த ஸ்தலம்.

புறவார் பனங்காட்டூர் :—(திரு) பனங்காட்டூர் எனவும், பனையபுரம் எனவும் வழங்கப்படுகிறது. சென்னை ராஜ தானி, விழுப்புறம் ஸ்டேஷனுக்கு 5½ மைல். வித்யாதரர், அகஸ்தியர், பூசித்த ஸ்தலம். ஸ்வாமி-பனங்காட்டீஸ்வரர்; தேவி-திருப்புறவமின்னம்மை, அமிர்தவல்லியம்மை, ஸ்தல

விருட்சம் பனை; பத்மதீர்த்தம், அமிர்த தீர்த்தம். சித்திரை மாசம் 7-ந் தேதி சூரிய பூஜை. சிபி சக்கரவர்த்திக்கு தர்சனம் அருளிய க்ஷேத்திரம்; திருஞானசம்பர் பாடல் பெற்றது.

புனற் பூன் :—வட இந்தியா ரெயில் ஸ்டேஷன், சிவாலயம். ஸ்வாமி-பிதா மஹேஸ்வரர்-உமாதேவி.

புன்கூர் :—(திரு) தஞ்சாவூர் ஜில்லா, சீர்காழி தாலுகா, சென்னை ராஜதானி, வைதீஸ்வரன் கோயிலுக்கு 2 மைல் மேற்கு; நந்தனருக்காக ஸ்வாமி நந்தியை விலகச் செய்த ஸ்தலம். ஸ்வாமி-சிவலோக நாதர், தேவி-சொக்க நாயகி அல்லது செல்வ நாயகி; இடப தீர்த்தம், கணபதி தீர்த்தம், சிவகாமி தீர்த்தம். சுந்தரமூர்த்தி நாயனர், கலிக்காம நாயனருக்காக மழை பெய்யவும், பிறகு நிற்கவும் பாடியருளிய ஸ்தலம். மூவர் பாடல் பெற்றது.

புனவாயில் :—(திரு) தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, அறந்தாங்கி ஸ்டேஷனுக்கு 21 மைல், கிழக்கு. வேதங்கள் பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமி-விருத்தபுரீஸ்வரர்-பழம்பதிநாதேஸ்வரர், தேவி-கருணை நாயகி யம்மை, மகிழும் புன்னையும் ஸ்தல விருட்சங்கள், கருணை நதி தீர்த்தம். கோயிலிலுள்ள லிங்கம், ஆவுடையார், நந்தி, மிகவும் பெரியவை. திருஞான சம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்றது.

புஷ்கரம் :—ராஜபுதனம் (ராஜ ஸ்தானம்) உள்ளது. அஜ்மீருக்கு 10 மைல், சிவாலயம், ஸ்வாமி-ஆத்மேஸ்வரர் அல்லது அஜோகந்தர், பழய கோவில் இடிக்கப்பட்டு புதிதாய்க் கட்டப்பட்டிருக்கிறது. (இவ்வூரில் பிரம்மாவுக்கு பிரத்யேக கோயில் உளது).

புஷ்பகிரி :—கடப்பை ஜில்லா, சென்னை ராஜதானி, இதற்கு மத்ய கைலாசம் என்று பெயர். இங்குள்ள சிவாலயங்கள் :-(1) சந்தான மல்லேஸ்வரர் கோயில். (2) வைத்ய நாதர் கோயில. (3) பீமேஸ்வரர் கோயில். (4) காசி விஸ்வநாதர் கோயில். (5) திரிகோடீஸ்வரர் கோயில். (6) இத்திரஸ்வரர் கோயில், (7) கமலசம்பவேஸ்வரர் கோயில், இங்கு

ஒரு ஆலயத்தில் சிவபெருமானும், கேசவப் பெருமாளும் ஒரே கோயிலில் எழுந்தருளியிருக்கின்றனர். இதற்கு புஷ்ப கிரி கோயில் என்று பெயர்.

பூதபாண்டி :—திருவாங்கூர் ராஜ்யம், பூதநாதர் கோயில் பழைய சிவாலயம், பல கல்வெட்டுகள் உள.

பூதேசம் : —வட இந்தியா, கோஹத்தியின் சமீபம், சிவாலயம். ஸ்வாமி - பஸ்மகாயர் - உமாதேவி, சுயம்பு லிங்கம்.

பூதலூர் :—சென்னை ராஜதானி, திருச்சிராப்பள்ளி ஜில்லா, ரெயில் ஸ்டேஷன், சிவாலயம். ஸ்வாமி - ஆபத் சகாயர், தேவி-ஆனந்தவல்லி.

பூந்நுருத்தி :—(திரு) காந்தர்வர் புஷ்பவனம் வைத்து பூசித்த ஸ்தலம். தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, திருக்கண்டியூருக்கு 1½ மைல் மேற்கு, தஞ்சாவூரிலிறங்கிப் போகவேண்டும். திருஞானசம்பந்தரும், அப்பரும் இங்கு சிவ காலம் தங்கியிருந்த ஸ்தலம். அப்பர் இங்கு ஒரு மடம் கட்டுவித்தார். அந்த இடம் இப்பொழுதும் காட்டப் படுகிறது. சப்த ஸ்தானங்களில் 6-வது ஸ்தலம். ஸ்வாமி-புஷ்பவன நாதேஸ்வரர், தேவி-அழகாலமர்ந்த நாயகி. காசிகங்கை தீர்த்தம்- கிழக்கு கோபுரம் 7 நிலை யுடையது. இரண்டாம் பிராகார கோபுரம் கிலமாயிருக்கிறது. கர்ப்பக்கிரஹத்தில் சில பழைய கல்வெட்டுகள் உள. இங்கு நந்தி சந்நிதிக்கு நேராக இல்லை. திருஞானசம்பந்தருக்காக சற்று விலகியதாக ஐதிகம். (சூர்யாபிஷேகத்திற்காக இவ்வாறு இருக்கலாம் என்று சிலர் கூறுகின்றனர்.) கோயிலில் சில பல்லவ சிம்ஹத் தூண்கள் இருக்கின்றன. அப்பர் பாடல் பெற்றது.

பூமாரு :—வட இந்தியா, சிவாலயம். ஆரும் நூற்றாண்டில் கட்டப்பட்ட தென்பர்.

பூர் :—பூனா ஜில்லா, பம்பாய் ராஜதானி, குக்குடேஷ்வர் கோயில்; இங்குள்ள பரமசிவம் தாண்டவமாடும் சிலை

பார்க்கத் தக்கது. கோயில் 40 × 18 அடி விஸ்தீர்ணம், மஹா சிவராத்திரி விசேஷம்.

பூர்வி வைஜ்நாத் :—நிஜாம் ராஜ்யத்திலுள்ளது. ஜோதிர் லிங்கம் ஒன்றுள்ள சிவாலயம்.

பூரி பிரிவு :—வங்காள ராஜதானி, பாரால் கிராமம், சிவாலயம். எந்த வியாதியுடையவர்களும் இங்கு வந்து தரிசனம் செய்தால் நோய் தீரும் என்று எண்ணப்படுகிறது.

பூவணம் :—(திரு) தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன். சென்னை ராஜதானி, பழைய சிவாலயம். ஸ்வாமி-பூவண நாதேஸ்வரர், தேவி-மின்னனையாளம்மை ; வைகை நதி, பலா விருட்சம், பொன்னனையாள் எனும் தாசிக்காக ஸ்வாமி எழுந்தருளி ரசவாதம் செய்துகொடுத்த பொன் னைக்கொண்டு அவள் ஸ்வாமி விக்ரஹம் செய்து கொடுத்த ஸ்தலம். அத்தாசி பொன்னாலாகிய அந்த விக்ரஹத்தைக் கண்டு, "அச்சோ அழகு" என்று வலது கபோலத்தைக் கிள்ளி முத்தமிட்டபடியால் அங்கு வடுவுடைய மூர்த்திக்கு "அச்சோ அழகிய பிரான்" என்று பெயர் வந்தது. தமிழ்நாட்டு மூவேந்தரும் பூஜித்த ஸ்தலம். பிரம்மோற் சவம் ஆனி மாசம். மூவர் பாடல் பெற்றது. பப்புருமஹ ரிஷி பூஜித்த ஸ்தலம்.

பூவனூர் :—(திரு) சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, நீடாமங்கலம் ஸ்டேஷனுக்கு 2½ மைல் தெற்கு. சுகரிஷி பூஜித்த ஸ்தலம். ஸ்வாமி-புஷ்பவனேஸ்வரர், தேவி-சண்பகவல்லி யம்மை, கருங்குழித் தீர்த்தம், பாமணி யாற்றின் மேற்குக் கரையிலுள்ளது. சுகரிஷி புஷ்பவனம் வைத்து ஸ்வாமியை ஆராதித்தபடியால் புஷ்பவனம் என்று பெயர் பெற்றது. அப்பர் பாடல் பெற்றது. திருவிசைப்பா பெற்றது.

பூவாளூர் :—லால்குடி தாலுகா, திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி, மன்மதன் பூஜித்த ஸ்தலம். பூ + வாளி + ஊர். (சமஸ்கிருதத்தில் காமர்பதி என்று பெயர்) சுவாமி-திருமூல நாதர், தேவி-குங்கும சௌந்தரி, வில்வ விருட்சம்; பல்குனி நதி.

பூந்தோட்டம் :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, பேரளத்திற்கு 4 மைல் சிவாலயம். புவனேஸ்வர். பூங்கோதை; அரிசில் நதி.

பூவிருந்தவல்லி :—சென்னை ராஜதானி, ஆவடி ஸ்டேஷனிலிருந்து 6 மைல் சிவாலயம். சுவாமி - வைத்யநாதர், தேவி-தையல் நாயகி யம்மன்; பிரமன், குண்டோதரன், சரஸ்வதி, தர்ம புத்திரர், தேவேந்திரன், சிவமுனிவர் பூசித்த ஸ்தலம் என்பது ஸ்தலபுராணம். சித்திரை மாசம் பிரம்மோற்சவம், ஸ்தல விருட்சம் தாளிப்பனை, குண்டோதரனுடைய தீபாக்கினியைச் சாந்தம் செய்த ஸ்தலம். தேவேந்திரனுக்கு பரமசிவம் மும்மூர்த்தி தர்சனம் கொடுத்த ஸ்தலம். சூரிய பூஜை மாசிமாசம். 1770-வது பழைய கோயில் ஜீர்ணோத்தாரணம் செய்யப்பட்டது. சில வருடங்களுக்கு முன் பிராகாரத்தில் பூமியின் கீழ் ஒரு கள்ளறை கண்டு பிடிக்கப்பட்டது.

பூனா பிரிவு :—பம்பாய் ராஜதானி, இங்குள்ள சிவாலயங்கள் :-(1) பூனா - ரெயில் ஸ்டேஷன் பார்வதிகுன்றம். இங்கு ஒரு சிவாலயமுண்டு. சுமார் 1750-வது மூன்றாவது பேஷ்வா பாலாஜி பாஜிராவ் என்பவரால் கட்டப்பட்டது. சுவாமி-தேவதேஸ்வரர், தேவி-பார்வதி, இக் கோயிலைச் சுற்றிலும் நான்கு சிறு கோயில்கள் உண்டு. அவற்றில் சூரியன், பார்வதி, கணேசர், விஷ்ணு, பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றனர். கோயிலின் ஒரு புறம் நகார்கானா (வாத்யம் வாசிக்குமிடம்) உண்டு. 1760-ம் ஆண்டில் கோயிலிலிருந்த விக்ரஹங்கள் எல்லாம் மகம்மதியர்களுக் கஞ்சி வெளியேற்றப்பட்டன. பிறகு மறுபடியும் கொண்டு வந்து ஸ்தாபிக்கப்பட்டன. இங்குள்ள பார்வதி விக்ரஹமும், கணேசர் விக்ரஹமும் பொன்னாலானவை. (2) அமிர்தேஸ்வரர் கோயில்-இரண்டாம் பேஷ்வாவின் மனைவியால் சுமார் 1725-வது கட்டப்பட்டது. (3) நாகேஸ்வரர் கோயில் - சோமவார் பேட்டையிலுள்ளது. இதுதான் பூனாவில் மிகப் பழமையான கோயில். (4) ஒங்காரேஷ்வர் கோயில் ஆற்றங்கரையில் சோமவார் பேட்டையிலுள்ளது. 1740—60 வருடங்களில் கட்டப்பட்டது. சிவலிங்கம் பூமி மட்டத்திற்கு 3 அடி கீழே இருக்கிறது. மழைக்காலத்தில்

லிங்கம் தண்ணீரில் மூழ்கியிருக்கிறது. (5) ராமேஷ்வர் கோயில் சுக்கிரவாரப் பேட்டையிலுள்ளது. சிவாஜிபண்ட் என்பவரால் கட்டப்பட்டது. சிவராத்திரி விசேஷம். (6) சோமேஸ்வரர் கோயில்-புதியது 1930-ஹூ கட்டப் பட்டது; ஆதிவார் பேட்டையிலுள்ளது. ஒருவிதமான சுயம்புலிங்கம். (7) துளசிபாக் கோயில், இங்கு மூன்று கர்ப்பக்கிரஹங்கள் உண்டு. அவற்றினுள் ஒன்றில் லிங்கப் பிரதிஷ்டையுண்டு. (8) மஹாதேவர் கோயில்-ஹோல்கார் பாலத்திற்கு அருகிலுள்ளது. இங்கு இரண்டு லிங்கங்கள் உண்டு. ஹோல்கார் வம்சத்தாரால் கட்டப் பட்டது. (9) பாஞ்சாலேஸ்வரர் கோயில், பூனா தபால் ஆபீசுக்கு 2 மைல், மலையில் வெட்டப்பட்ட கோயில். இங்குள்ள நந்தி மண்டபம் வட்டவடிவமானது. (10) ஷிவ்ஜி கோயில், குன்றின்கீழ் குடையப்பட்ட கோயில்; சிவலிங்கம் பிரதிஷ்டை திப்பு சுல்தான் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட தென்பர். (11) சம்புதேவர் மலை, பூனா ஜில்லா, சிவாலயம் சுவாமி-சம்புதேவர். (12) புரந்தர் பூனா ஜில்லா, மஹா தேவர் சிவாலயம்.

பூனித்துறை :—திருப்பூறித்துறை யென வழங்கப்படு கிறது. கொச்சி ராஜ்யம், மேற்கு இந்தியா, சிவாலயம். சுவாமி-ஸ்ரீ பூர்ணத்திர யீசர்.

பூஜ் :—மைசூர் ராஜ்யம், பார்வதி குன்றில் சிவாலயம். பரமசிவத்தின் விக்ரஹம் 1¼ அடி உயரம், மடியில் பார்வதி யும். கணேசரும் விளங்குகின்றனர்.

பெங்களூர் :—மைசூர் ராஜ்யம், ரெயில் ஸ்டேஷன். இங்குள்ள சிவாலயங்கள் :-(1) கோட்டைக்கு 1 மைல் மேற்கில் கெவி கங்காதரீஸ்வரர்-கோயில் சிறிய குன்றில் குடையப்பட்டிருக்கிறது, கெம்பகௌடரால்-சுமார் 1638-வருடம். சுவாமி கங்காதரீஸ்வரர்; சிவசின்னங்களாகிய திரிசூலம், டமருகம், 22 அடி உயரமுள்ள இரண்டு கற் பாறைகளில் வெட்டப்பட்டிருக்கின்றன. கர்ப்பக்கிரஹத் தைப் பிரதட்சிணம்வர ஒருவழி குன்றில் வெட்டப்பட்டிருக் கிறது; இருட்டாயிருக்கும்; வெளிச்சங்கொண்டு பார்த் தால் இங்குள்ள மாடங்களில் சில சிலை உருவங்கள்

அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். கர்ப்பக்கிரஹம் 12 அடி சதுரம் 8 அடி உயரம். பிராகாரத்தின் ஒரு புறம் ஒரு சுரங்கம் போகிறது 204 அடி வரையில்; அதற் கப்புறம் ஓர் நீர் நிலை யிருக்கிறது. (2) மல்லேஸ்வரர் கோயில், சுவாமி பெயர் காட்டுமல்லேஸ்வரர். மல்லிகார் ஜுனர் கோயில் கெம்பகவுடரால் கட்டப்பட்டது. (3) ராமேஷ்வரர் கோயில்; கோயில் வடக்கு பார்த்தது. தேவி-பார்வதி; புதிய கட்டிடம். கோயிலில் ஸ்ரீ ராமர் சந்நிதி யுண்டு. அதற்கும் பூஜை நடக்கிறது. இக் கோயில் பஞ்சாயதனக் கோயில் என்று அழைக்கப்படுகிறது. அதாவது 5 சந்நிதிகளையுடையது என்று பொருள்படும்; பரமசிவம், அம்பிகை, விஷ்ணு, கணேசர், அனுமார் அல்லது சூரியன், இவர்களுடைய சந்நிதிகளையுடையதாம். மைசூர் ராஜ்யத்தில் இத்தகைய கோயில்கள் பல உள. (3) அல்சூர் சிவாலயம். இது கண்டோன்மெண்டில் இருக் கிறது. (4) சோமேஸ்வரர் கோயில், (5) காசிவிஸ்வநாதர் கோயில், கண்டோன்மெண்டில காந்தி நகருக்கருகிலுள்ளது. சுவாமி-விஸ்வநாதர், தேவி-அன்னபூரணி, பிரம்மோற்சவம் ஆனி மாசம். விஸ்வேசுவரர் கோயில் பெங்களூர் கிழக்கி லுள்ளது - சிறிய கோயில் புதிய கட்டடம். கெம்பகவுட ரால் கட்டப்பட்டது. இவ்வூரில் 10-க்கு மேற்பட்ட சத்தி ரங்கள் உண்டு.

பெண்ணகர் :—சென்ன ராஜதானி, சிவாலயம். கஜப் பிருஷ்ட ஆகிருதி. இங்கு இரண்டு சிவாலயங்களுண்டு, பிரம்மேஸ்வரர் கோயில் (பிரம்மா பூசித்த ஸ்தலம்) கைலாச நாதர் கோயில்.

பெண்ணகடம் :—(திரு) இதற்குத் திருக்கடந்தை நகர் எனப் பெயர் உண்டு. சிவாலயத்திற்கு தூங்கானை மாடம் என்று பெயர், சென்ன ராஜதானி; ஆரத்துறைக்கு 4 மைல் வடக்கு. விருத்தாசலத்திற்கு 11 மைல் தென் மேற்கு. கலிக்காம நாயனார் அவதரித்த ஸ்தலம். சுவாமி-சுடர்க்கொழுந்தீசர், தேவி-கடந்தை நாயகி, பெண்ணை நதி தீர்த்தம்; சுவாமிக்கு பிரளயகாலேஸ்வரர் என்றும் பெயர். நந்தி சுவாமிக்கு முதுகைக் காட்டிய வண்ணம் இருக்கின் றனர்; பிரளயத்தைத் தடுப்பதற்காக இப்படி இருக்கும்

படி கட்டளையிடப்பட்டனர் என்பது ஐதிகம், தேவகன்னியர், காமதேனு, வெள்ளையானை, இந்திரன் பூசித்த ஸ்தலம். பெண்=தேவ கன்னிகை. (+ஆ=பசு:+கடம்—யானைக் கூட்டம்) கோயில் விமானம் கஜப்பிருஷ்ட ஆகிருதி. கஜ விமானம்-யானையைப் போன்றது. திருநாவுக்கரசு விடைக்குறி, சூலக்குறி வேண்டிப் பெற்ற க்ஷேத்திரம்.

பெத்த கல்லேபர்லே :—மசூலிப்பட்டணம் தாலுகா, கிருஷ்ணா ஜில்லா, சென்னை ராஜதானி ; சிவாலயம் ஸ்வாமி-நாகேஷ்வரர்.

பெத்தகாகனி :—குண்டூர் தாலுகா, மேற்படி ஜில்லா, சென்னை ராஜதானி ; வீரபத்திரர் கோயில்.

பெத்த செருகூரு :—பாபட்லா தாலுகா, குண்டூர் ஜில்லா, சென்னை ராஜதானி, அகஸ்தீஸ்வரர் கோயில்.

பெத்ததும்பலம் :—பல்லாரி ஜில்லா, சென்னை ராஜதானி, வீரபத்திர ஸ்வாமி கோயில்; சாளுக்கிய சில்பம்.

பெத்தபலகலூர் :—குண்டூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி-சர்வேஸ்வரர்.

பெத்தபடலலே :—நெல்லூர் ஜில்லா, சென்னை ராஜதானி, ராமலிங்கேஸ்வரர் கோயில்.

பெத்தமுடியம் .—கடப்பை ஜில்லா, சென்னை ராஜதானி; மூக்கண்டீஸ்வரர் கோயில்.

பெதானி :—கிருஷ்ணா ஜில்லா, சென்னை ராஜதானி, மசூலிப் பட்டணத்திற்கு 4 மைல் வடக்கு. அகஸ்தீஸ்வர ஸ்வாமி கோயில்.

பெரிய குளம் :—மதுரை ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். சோழ கட்டடம், கல்வெட்டுகள் உள. ஸ்வாமி-சிவமரகதேசர், பார்வதி தேவி.

பெரிய கோட்டூர் :—பழனி தாலுகா, மதுரை ஜில்லா, சென்னை ராஜதானி; இங்கு இரண்டு பழைய சிவாலயங்கள் உள. இரண்டிலும் கல்வெட்டுகள் உள.

பெரிய பட்டணம் :—இதற்குப் பழைய பெயர் சிங்க பட்டணம், மைசூர் ராஜ்யம் ஹல்சூருக்கு 13 மைல், சிவாலயம். ஸ்வாமி-மல்லிகார்ஜுனர். கரிகாலச் சோழனல் கட்டப்பட்ட தென்பர்.

பெரியபாளையம் :—சென்னை ராஜதானி, சென்ன பட்டணத்திற்கு வடக்கிலுள்ளது, சிவாலயம். ஸ்வாமி-ஹரிமுக்தேஸ்வரர், தேவி-அன்னபூரணி, வன்மீக தீர்த்தம், வான்மீக முனியும், பிரகு முனியும் பூசித்த ஸ்தலம். இதன் அருகில் கோட்டை குப்பம எனும் கிராமத்தில் ஒரு சிவாலய மூளது; ஸ்வாமி-புண்யகோடீஸ்வரர்.

பெருங்கரணை :—ராமநாதபுரம் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி-மூன்றுலோசன முடையார்.

பெருங்களூர் :—புதுக்கோட்டை சமஸ்தானம் புதுக்கோட்டைக்கு 11 மைல், சிவாலயம், குலோத்துங்க சோழனல் கட்டப்பட்டதென்பர். ஸ்வாமி - வம்சோத்தாரகர், மங்களாம்பாள்.

பெருங் கோட்டுக்கரை :—கொச்சி ராஜ்யம், திருச்சூருக்கு அருகிலுள்ளது. சிவாலயம், ஸ்வாமி - சோமசேகரர்.

பெருஞ்சேரி :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, இதற்குத் தாருகாவனம் என்றும் பெயர். சிவாலயம், ஸ்வாமி-வாகீசர் அல்லது வாக்குக் காட்டு வள்ளல், பிரஹஸ்பதி பூசித்த க்ஷேத்திரம்.

பெருந்தலையூர் :—சத்யமங்கலம் தாலுகா, கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, பழைய சிவாலயம். இதில் சுந்தர பாண்டிய தேவர் காலத்து கல்வெட்டொன்றுளது.

பெருந்துறை :—புதுக்கோட்டை சமஸ்தானம், திரு மெய்யம் தாலுகா, புதுக்கோட்டைக்கு 14 மைல். சிவாலயம்.

பெருந்துறை :—கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி; பழைய சிவாலயம்.

பெருந்துறை :—(திரு) மதுரை ஜில்லா, பராசர், பிருகு முதலியோர் பூசித்த ஸ்தலம். மாணிக்கவாசகருக்கு குரு முகமாக உபதேசித்த ஸ்தலம். ஸ்வாமி-ஆத்மநாதர், தேவி-உமாதேவி, குருந்தமரம், சிவகங்கை, மாணிக்கவாசகர் பாடல் பெரிதும் பெற்ற க்ஷேத்திரம்.

பெரும்புலியூர் :—(திரு) தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, திருவையாறுக்கு 2 மைல் வடமேற்கிலுள்ளது. வியாக்ரபாதர் பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமி-வியாக்ர புரீஸ்வரர், தேவி-சௌந்தர நாயகி, காவிரி நதி தீர்த்தம், திருஞானசம்பர் பாடல் பெற்றது.

பெரும்பேர் :—மதுராந்தகம் தாலுகா, செங்கல்பட்டு ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி - தான் தோணீஸ்வரர். கல்வெட்டுகளில் ஊர் பெயர் பெரும்பேரூர் என்றும், ஸ்வாமி பெயர் ஸ்ரீ கரணீஸ்வர முடையார் என்றும் இருக்கிறது.

பெருமகளூர் :—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, பட்டுக்கோட்டைக்கு 20 மைல், சிவாலயம். இங்குள்ள லிங்கம் மூற்றிலும் ஒரே கல்லாலமைந்தது. தஞ்சை அரசர் ஒருவர் இதை ஆலிங்கனம் செய்து கொண்டபடியால் அவரது ஆபரணங்களின் குறிகள் லிங்கத்தில் அழுந்தியிருப்பதாக ஐதிகம்.

பெருமல்பாட் :—நெல்லூர் ஜில்லா, சென்னை ராஜதானி; நாகேஷ்வர ஸ்வாமி கோயில்.

பெருமுக்கல் :—திண்டிவனம் தாலுகா, சென்னை ராஜதானி, செஞ்சிக் கோட்டைக்கு அருகிலுள்ளது; சிவாலயம். ஸ்வாமி-முக்தேஸ்வரர், தேவி-காமாட்சி யம்மன். கோயில்

சிறு மலையிலுள்ளது. வன்மீக தீர்த்தம், வால்மீகி ஆசிரமம் அருகிலுள்ளது என்பர். கோயில் யுத்த காலத்தில தாக்கப்பட்டு கொஞ்சம் கிலமாயிருக்கிறது.

பெருவாரம் :—திருவாங்கூர் ராஜ்யம்-சிவாலயம்,

பெருவேளூர் :—(திரு) கரட்டூர் ஐயன் பேட்டை என வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி, கரவீரத்திற்கு 2 மைல், வடமேற்கு. திருப்பாசூரிலிருந்து $8\frac{1}{2}$ மைல், கௌதமர், சக்தி பூசித்த ஸ்தலம், ஸ்வாமி-பிரியா ஈஸ்வரர், தேவி-மின்னனையாளம்மை, மூஷிக தீர்த்தம், திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது.

பெல்காம் ஜில்லா :—பம்பாய் ராஜதானி, கோரக்பட்டினத்திற்கு 3 மைல் தூரம், மஹா லிங்கேஸ்வரர் கோயில், வடக்கு பார்த்தது. கோரக் நீர் வீழ்ச்சி; இங்கு இன்னும் 2 சிறு சிவாலயங்கள் அருகில் இருக்கின்றன. பெல்காம் கோட்டையில் ஒரு சிவாலயமுண்டு; இது பாழடைந்திருக்கிறது. மூக்கியவாயிலில் தாண்டவமாடும் ஈஸ்வரன் பக்கலில் பிரம்மாவும், மஹா விஷ்ணுவும் இருக்கின்றனர்; அழகிய சில்பம்.

பெளகாமி :—பெலகாமி என்றும் அழைக்கப்படுகிறது. மைசூர் ராஜ்யம், ஷீமோகா ஜில்லா, ஷிகார்பூர் தாலுகா. இங்கு ஐந்து சிவாலயங்கள் உள. (1) கேதாரீஸ்வரர் கோயில், மூன்று சந்நிதிகளையுடையது. சாளுக்கிய கட்டடம், (பெலகாமி கேதாரீஸ்வரர் கோயில்) மண்டபத்தின் கூரை மகம்மதியர்களால் அழிக்கப்பட்டது. ஹோய்சல பிருது இங்குளது. (சலன் சார்தூலத்தைக் கொல்வது) இக் கோயில் ஜக்கணசாரியால் கட்டப்பட்டதாம். (2) பஞ்சலிங்கேஸ்வரர் கோயில், (3) கைடபேஸ்வரர் கோயில், (4) சோமேஸ்வரர் கோயில், (5) திரிபுராந்தகேஸ்வரர் கோயில். பஞ்சலிங்கேஸ்வரர் கோயில் பஞ்சபாண்டவர்களால் கட்டபட்டதென்பது ஐதிகம்; மிகவும் கிலமாயிருக்கிறது. சாளுக்கிய கட்டடம். தற்காலம் இவை பாழாயிருக்கின்றன. ஆயினும் சில அழகிய சில்பங்களுடைத்தாயிருக்கின்றன.

பென்குடி :—திருப் பென்குடி என்று அழைக்கப்படு கிறது. சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி-சொக் கேஸ்வரர், தேவி-சிவகாமி, ஹரண்ய தீர்த்தம், சிபிச்சக்ர வர்த்தி பூஜித்த ஸ்தலம்.

பெனுகொண்டா :—பெனுகொண்டா தாலுகா, சென்னை ராஜதானி; அனந்தபூர் ஜில்லா, பெங்களூர் குண்டக்கல் ரெயில் ஸ்டேஷன் - சிவாலயம். அவிமுக்தேஸ்வரர் கோயில், விஜயநகர சில்பமமைந்தது.

பெஜ்வாடா :—கிருஷ்ணா ஜில்லா, சென்னை ராஜதானி, ஈஸ்ட் கோஸ்ட் ரெயில் ஸ்டேஷன். ஊரின் பழைய பெயர் கல்வெட்டுகளில் ராஜேந்திர சோழபுரம் என்றிருக் கிறது. கிருஷ்ணா நதியின் கரையிலுள்ளது-சிவாலயம். சுவாமி-மல்லேஸ்வரர், அல்லது ஜெயசேனர். (இக் கோயி லைச் சார்ந்த கனக துர்க்கையின் கோயில் மிகவும் பிரபல மானது) அகஸ்தியர் பூஜித்த ஸ்தலம். இங்குள்ள இந்திர தீபம் எனும் மலையில் அர்ஜுனன் தவம் புரிந்து சுவாமியிட மிருந்து பாசுபதாஸ்திரம் பெற்றதாக ஐதிகம். சுவாமி அர்ஜுனனுடன் யுத்தம் புரிந்தமையால் மல்லேஸ்வரர் எனப் பெயர் வந்தது. கலியுகத்திற்கு முன் ஸ்வாமிக்கு ஜெயசேனர் என்று பெயர் இருந்ததாம். இவ்வூரில் இன்னும் இரண்டு சிவாலயங்கள் உள. (1) மல்லிகார் ஜுனர் கோயில், (2) நாகேஷ்வரர் கோயில்.

பேரூல் ஜில்லா :—மத்திய மாகாணம், (1) போபாலி கிராமம், சிவாலயம். குகைக் கோயில், சுவாமி மஹா தேவர், தேவி-பார்வதி. (2) சல்பார்டி கிராமம், சிவாலயம் குகைக்கோயில்; சுவாமி-மஹா தேவர்.

பேரூர் :—மைசூர் ராஜ்யம், தேவாங்கரே தாலுகா, சிவாலயம். சுவாமி-கள்ளேஸ்வரர்.

பேணு பெருந்துறை :—திருப்பந்துறை என்றும் வழங் கப்படுகிறது. கும்பகோணத்திற்கு 7 மைல். தென் கிழக்கு. தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, பிரமன் பூஜித்த க்ஷேத்திரம். சுப்பிரமணியருக்கு சிவ பிரான் அருள்கொடுத்த ஸ்தலம் என்பது ஸ்தல புராணம்.

சுவாமி-சிவாநந்தேஸ்வரர், தேவி-மலையரசியம்மை. சின் மயாநந்த தீர்த்தம், திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

பேபூர் :—கள்ளிக்கோட்டை தாலுகா, மலபார் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாவயம்.

பேளம் :—மேற்படி தாலுகா, தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, ரெயில் ஸ்டேஷன்; சிவாலயம். சுவாமி-திரு முயற்சி நாதர், தேவி-சௌந்தர நாயகி, வருணன் பூசித்த ஸ்தலம்-வைப்புஸ்தலம். இங்கு திருமயச் சேரலிங்கர் கோயில் என்று ஒரு சிவாலயமுண்டு. சுவாமி-பரமேஸ்வரர், தேவி - மங்கள நாயகி, சரஸ்வதி தீர்த்தம். பிரம்மாவும், சரஸ்வதியும் பூசித்த க்ஷேத்திரம்.

பேரூர் :—கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, கோயமுத்தூர் ஸ்டேஷனிலிருந்து 3 மைல், மேற்கு. இதற்கு பிப்பிலாரண்யம், தட்சிண கைலாசம், மேலைச் சிதம்பரம் என்றும் பெயர்கள் உண்டு. பரமசிவம், சுந்தர மூர்த்தியின் பொருட்டு, தாம் பறையனாகவும், உமா தேவி பறைச்சியாகவும் வேடம் பூண்டருளி, வயலில் நாற்று நட்டு திருவிளையாடல் புரிந்த க்ஷேத்திரம். பிரம்மாவும், விஷ்ணுவும் இங்கு பரமசிவத்தை கோமுனி, பட்டிமுனி எனும் உருவங்களில் பூசித்ததாக ஸ்தலபுராணம் கூறுகிறது. அன்றியும் காலவர், அதிமூர்க்கம்மன், காமதேனு பூசித்த ஸ்தலம். விஷ்ணு முதலியோருக்கு சபாநாதர் ஆநந்தத் தாண்டவமாடிய ஸ்தலம் சுயம்புலிங்கம்;சுவாமி-பட்டீசர், கோவர்தீஸ்வரர், தேவி-பச்சை நாயகி, மரகத வல்லி, பிரம தீர்த்தம், காஞ்சி நதி; கர்ஞ்சி நதி யென்பது நொய்யலாறு என்று வழங்கப்படுகிறது. நந்தி நேராயிராது ஒரு புறமாயிருக்கிறது. இந்த ஸ்தலத்தில் பிறவாப் புளி இறவாப்பனை, விசேஷம். சுந்தரருக்காக சபாநாதர் அரசமரத்தடியில் நிர்த்தனம் செய்ததாக ஐதிகம். பிறவாப்புளி பெரிய கோயிலில் பெரிய கோபுரத்திற் கருகிலுள்ளது. கோயிலில் பெரும்பாகமும், கோயிலுக்கு அருகிலுள்ள குளமும் மதுரை திருமலை நாயகருடைய சகோதரர் அளகாத்திரி நாயகரால் கட்டப்பட்டது. கோயிலின் பழைய பாகம் 11-ஆம் நூற்றாண்டில் ஆண்ட ராஜேந்திர தேவன் எனும் சோழ அரசனால் கட்டப்பட்ட

தாம். சபாநாயகர் மண்டபம் அழகிய சில்பமமைந்தது. இங்கு கோமூனி, பட்டிமுனி சிலை உருவங்கள் உள. அன்றியும் இங்குள்ள கஜசம்ஹார மூர்த்தி, பிட்சாடனர், ஊர்த்தவத்தாண்டவேசர், காளி, வீரபத்திரர், அகோர வீரபத்திரர், கணேசர், சுப்பிரமணியர் சிலைகள் அழகியவை. மேலும் யோகிகள் யோகாப்பியாசம் முடிந்ததும், பழைய ரூபம் பெறுவதற்கு முன் இருக்க வேண்டிய முத்திரை செதுக்கப்பட்டிருக்கிறது. கோபுரம் 5 நிலைகளுடையது, சிறியது; பிற்காலத்தில் கட்டப்பட்டது. பீடம் மாத்திரம் கருங்கல்லாலாயது. சில வருடங்களுக்கு முன் உள் பிராகாரம் புதுப்பிக்கப்பட்டது. இரண்டாம் பிராகாரத்தில் சிங்கவாபி எனும் தீர்த்தம் உண்டு. இங்குள்ள காளி கோயிலிலிருந்து பார்த்தால் சபாநாயகரது மேல் தூக்கிய பாதம் காணப்படும். இதை திவ்ய தரிசனம் என்பர். கோயிலுக்குள் ஒரு விஷ்ணு ஆலயமுண்டு; ஸ்மார்த்த பூஜை; இதற்கு உற்சவமுமுண்டு. இவ்விடம் 13-ஆம் நூற்றாண்டில் ஆண்ட இரண்டாம் விக்கிரம சோழனுடைய கலவெட்டுகள் உள. மூலஸ்தானம் பழைய கட்டடமாம். சோழ சில்பம்-சபாநாயகர் மண்டபம் 1750-வது கட்டப் பட்டதாக பெர்கூசன் துரை எண்ணுகிறார். இதிலுள்ள ஒரு ஸ்தம்பத்தில் ஒரு சிப்பாய் தன் துப்பாக்கிக்கு மருந்து போடுவதுபோல் செதுக்கப்பட்டிருக்கிறது. பிரம்மோற் சவம் பங்குனி மாசம். இதில் பத்தாம் நாள் நடக்கும் நடராஜப் பெருமான் உற்சவம் பிரபலம். நடராஜரை எழுந்தருளச் செய்யும் பொழுது தண்டுகள் முறிவது அதிசயச் செய்கை. நாற்று நடவு உற்சவம் ஆனிமாசம். கோயிலின் அருகாமையில் வசிஷ்டர் யாகஞ் செய்த இடம் காட்டப்படுகிறது. இங்குள்ள மணலானது விபூதியாகப் பாவிக்கப்படுகிறது. கோயிலின் துவஜஸ்தம்பத்தில் ஒரு புறம் சுந்தரமூர்த்தி உருவம் இருக்கிறது. நடராஜ சபைக்குக் கிழக்குப்புறம் கருங்கல்லுக்குப் பதிலாக மரத்தாலாகிய சில்பம் இருக்கிறது. பூர்வகாலத்தில் இது கருங்கல்லாலாயதாம்; அதில் ஒரு தேரை இருந்ததாகவும் அதை ஆவடையார் கோயில் கல் தச்சனாகிய ராமலிங்கம் என்பவரின் புதல்வன் கண்டுபிடித்து எடுத்துவிட்டதாகவும், பிறகு அதை மரத்தால் செய்து வைத்ததாகவும் சொல்லப்

படுகிறது. சுயம்பு லிங்கத்தில் காமதேனுவின் கன்றுக் குட்டி இடித்து முட்டியதால் படிந்த குளம்பின தழுவாரமும் காலின் வடுவும் இருக்கிறது. ஒரே கல்லில் வெட்டப் பட்ட சங்கிலியும், உருளுகிற தாமரை முதலிய விசித்திர சில்பங்களிருக்கின்றன. இங்கு காலேஸ்வரர் கோயில் என்று ஒரு சிறு ஆலயமுண்டு. காலவமுனி பூசித்த ஸ்தலம், புதிய கோயில். வட கைலாசம் எனும் கோயிலு முண்டு. இங்குள்ள கிணற்றில் ஸ்நானம் செய்து பரம சிவத்தை வழிபட்ட முகுந்த சக்ரவர்த்தி மனித முகம் பெற்றதாக ஐதிகம். இதற்கருகில் ஸ்தல புராணத்தில் குறித்த இறவாப்பனை யுளது.

பேரையில் :—(திரு) இது ஒகை, ஓகைப் பேரெயில், வங்கராப் பேரையூர், ஓகைப்பேரையூர் எனவும் வழங்கப் படுகிறது. தென் இந்தியா, நாட்டியத்தான்குடி ஸ்டேஷ னுக்கு 6 மைல், தென் மேற்கு. வருணன், அக்னி பூசித்த க்ஷேத்திரம். சுவாமி-கஜகதீஸ்வரர், காலபுவனேஸ் வரர், தேவி-ஜகந்நாயகி, அல்லது பெண்ணமிர்த நாயகி, மேகலாம்பாள்; அக்னி தீர்த்தம், வருண தீர்த்தம். கோயில் சிறியது. சபாபதி விக்ரஹம் மிகவும் அழகியது. அப்பர் பாடல் பெற்றது.

பேரையூர் :—திருமெய்யம் தாலுக்கா, புதுக்கோட்டை சமஸ்தானம் சிவாலயம். ஆதிசேஷன் பூசித்தது. சுயம்பு லிங்கம்-பழைய கோயில். இதற்கருகிலுள்ள ஒரு மலையில் ஒரு சிவாலயம்-குகைக்கோயில் உண்டு. சுவாமி-தாளவ னேஸ்வரர், தேவி-பிரகதாம்பாள், பனை மரம். இந்திரன் பூசித்த ஸ்தலம்.

பேளூர் :—பேளூர் தாலுகா, ஹசான் ஜில்லா, மைசூர் ராஜ்யம், இங்குள்ள ஆலயம் முற்றிலும் விஷ்ணு ஆலய மாக இருந்த போதிலும், ஆதியில் இங்கு சிவாலய மிருந்த தாக எண்ண இடமுண்டு. தற்காலம் சென்ன கேசவப் பெருமாள் சந்நிதிக்கருகில் பழைய சாளுக்கிய கோயில் ஒன்றுளது. அதில் சிவலிங்கம் ஆதியில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்ததாகச் சொல்லப்படுகிறது. அ தை வைணவர்கள் பிறகு அகற்றிவிட்டதாகச் சொல்லப்படு

கிறது. கோயில் பீடம் நட்சத்திர வடிவமானது. தற்காலம் பெரிய கோயிலுக்குக் கிழக்கில் நஞ்சுண்டேஸ்வரர் கோயில் எனும் ஒரு புதிய மிகச்சிறிய சிவாலயமுளது. மேற்கில் சங்கரேஸ்வரர் கோயில் என்னும் ஒரு சிவாலயமுளது. ஹொய்சால சில்பம்-இங்கு அம்மன் சந்நிதியுண்டு.

பேளூர் :—சேலம் ஜில்லா, சென்னை ராஜதானி, வசிஷ்ட நதிக்கரையிலுள்ளது. சிவாலயம்-ஸ்தல விருட்ச மாகிய இலுப்பை மரத்தில் வித்துக்கள் இல்லை என்று கூறப்படுகிறது.

பைஞ்ஞீலி .—(திரு) திருப்பங்கிலி எனவும் வழங்கப்படு கிறது. திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி. திருச்சிராப்பள்ளிக்கு 11 மைல் வடகிழக்கு. சிவாலயம், சோழ கட்டடம். சுவாமி-நீலகண்டேஸ்வரர், மாற்றறிவா தர், தேவி-விசாலாட்சி, பாலசௌந்தரி; இங்கு இரண்டு அம்மன் கோயில்கள் உண்டு. ஒன்று கிழக்கு பார்த்தது மற்றொன்று தெற்கு பார்த்தது. இக் கோயிலில் யமதர்ம ராஜனுக்கு பூமியின் கீழ்மட்டத்தில் ஓர் ஆலயமுண்டு. நவக்கிரஹங்களுக்குப் பதிலாக 9 விளக்குகள் வைக்கப் பட்டிருக்கின்றன. இரண்டாம் பிராகாரத்தில் வாழை மரங்கள் உள; இவை சபிக்கப்பட்ட தேவ கன்னிகைகள் என்பது ஐதிகம். இம் மரங்கள் தண்ணீர் வார்க்கப்படா மல் வளர்கின்றன என்று சொல்லப்படுகிறது. பசியினால் வருந்திய அப்பருக்கு சுவாமி கட்டமுது கொடுத்து அருளிய தோட்டமும், தடாகமும் இதற்கு $\frac{1}{2}$ மைல் தூரத்தில் இருக் கிறது. சுவாமிக்கு நிவேதனம் செய்த வாழைப்பழத்தைத் தின்னலாகாது, எறிந்துவிட வேண்டும் என்பது ஐதிகம். கோயிலின் சிலபாகம் பாண்டிய அரசர்களால் கட்டப் பட்டது. மூவர் பாடல் பெற்ற க்ஷேத்திரம். சிவபெரு மான் யமனை எழுப்பிய ஸ்தலம்.

பைரங் :—வட இந்தியா, சிவாலயம். சுவாமி-பைரங் நாத், சுயம்புலிங்கம்.

போப்பூடி :—நரசாரங் பெட் தாலுகா, குண்டூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்.

புழல் :—சென்னை ராஜதானி, செங்கல்பட்டு ஜில்லா, சிவாலயம். ஸ்வாமி-திருமூலஸ்தான முடைய நாயனார்.

புள்ளமங்கை :—(திரு) இதற்கு ஆலந்துறை என்றும் பெயர் உண்டு. சிவபெருமான் ஆலத்தை உட்கொண்ட க்ஷேத்திரம். தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன். ஐயம் பேட்டைக்கு 2 மைல். ஸ்வாமி-ஆலம் தவிர்த்த ஈஸ்வரர், பசுபதி நாதேஸ்வரர், தேவி-அல்லியங்கோதை; கோயிலி லுள்ள காளிக்கு தலைபலி யிடுவதுபோல் ஒரு சில்பமுண்டு. திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. பரகேசரி வர்மன் முதலிய சோழ அரசர்கள் காலத்திய கல்வெட்டுகள் பல உள. இங்கு பசுபதி கோயில் என்றும் ஒரு சிவாலய முண்டு. ஸ்வாமி-பசுபதிநாதேஸ்தரர், தேவி-பால்வண்ண நாயகியார், சிவ தீர்த்தம் ; திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

புறம்பயம் :—(திரு) திருப்புறம்பியம் என்று அழைக் கப்படுகிறது. தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, கும்பகோணத்திலிறங்கி 6 மைல் போகவேண்டும். இன்னம் பருக்கு 2 மைல் வடமேற்கு. ஸ்வாமி-சாட்சிநாதேஸ்வரர் (பழைய பெயர் ஆதித்யேஸ்வரர்) தேவி-கரும்பன்ன சொல் அம்மை, பிரம தீர்த்தம், புன்னைவிருட்சம், பிரளயத்திற்குப் புறம்பாயிருந்தமையால் புறம்பயம் எனப் பெயர் பெற்றது. (புறம்பு + அயம் = நீர்) திருஞானசம்பந்தர் அரவத்தால் இறந்த வணிகனை எழுப்பிய ஸ்தலம். இங்கு தட்சிண மூர்த்திக்குப் பிரத்யேகமாகக் கோயிலுண்டு ; விசேஷ மானது. இங்கு குளத்தருகிலுள்ள பிள்ளையாருக்குப் பிரளயங்காத்த பிள்ளையார் என்று திருநாமம். வன்னியும் கிணறும், லிங்கமும் வணிகப் பெண்ணுக்கு சாட்சியாகிய ஸ்தலம். மூவர் பாடல் பெற்றது. சுந்தோப சுந்தர் பூசித்த ஸ்தலம்.

புறவார் பனங்காட்டூர் :—(திரு) பனங்காட்டூர் எனவும், பனையபுரம் எனவும் வழங்கப்படுகிறது. சென்னை ராஜ தானி, விழுப்புறம் ஸ்டேஷனுக்கு 5½ மைல். வித்யாதரர், அகஸ்தியர், பூசித்த ஸ்தலம். ஸ்வாமி-பனங்காட்டீஸ்வரர்; தேவி-திருப்புறவமின்னம்மை, அமிர்தவல்லியம்மை, ஸ்தல

விருட்சம் பனை; பத்மதீர்த்தம், அமிர்த தீர்த்தம். சித்திரை மாசம் 7-ந் தேதி சூரிய பூஜை. சிபி சக்கரவர்த்திக்கு தர்சனம் அருளிய க்ஷேத்திரம்; திருஞானசம்பர் பாடல் பெற்றது.

புனற் பூன் :—வட இந்தியா ரெயில் ஸ்டேஷன், சிவாலயம். ஸ்வாமி-பிதா மஹேஸ்வரர்-உமாதேவி.

புன்கூர் :—(திரு) தஞ்சாவூர் ஜில்லா, சீர்காழி தாலுகா, சென்னை ராஜதானி, வைதீஸ்வரன் கோயிலுக்கு 2 மைல் மேற்கு; நந்தனுருக்காக ஸ்வாமி நந்தியை விலகச் செய்த ஸ்தலம். ஸ்வாமி-சிவலோக நாதர், தேவி-சொக்க நாயகி அல்லது செல்வ நாயகி; இடப தீர்த்தம், கணபதி தீர்த்தம், சிவகாமி தீர்த்தம். சுந்தரமூர்த்தி நாயனார், கலிக்காம நாயனருக்காக மழை பெய்யவும், பிறகு நிற்கவும் பாடியருளிய ஸ்தழம். மூவர் பாடல் பெற்றது.

புனவாயில் :—(திரு) தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, அறந்தாங்கி ஸ்டேஷனுக்கு 21 மைல், கிழக்கு. வேதங்கள் பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமி-விருத்தபுரீஸ்வரர்-பழம்பதிநாதேஸ்வரர், தேவி-கருணை நாயகி யம்மை, மகிழும் புன்னையும் ஸ்தல விருட்சங்கள், கருணை நதி தீர்த்தம். கோயிலிலுள்ள லிங்கம், ஆவுடையார், நந்தி, மிகவும் பெரியவை. திருஞான சம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்றது.

புஷ்கரம் :—ராஜபுதனம் (ராஜ ஸ்தானம்) உள்ளது. அஜ்மீருக்கு 10 மைல், சிவாலயம், ஸ்வாமி-ஆத்மேஸ்வரர் அல்லது அஜோகந்தர், பழய கோவில் இடிக்கப்பட்டு புதிதாய்க் கட்டப்பட்டிருக்கிறது. (இவ்வூரில் பிரம்மாவுக்கு பிரத்யேக கோயில் உளது).

புஷ்பகிரி :—கடப்பை ஜில்லா, சென்னை ராஜதானி, இதற்கு மத்ய கைலாசம் என்று பெயர். இங்குள்ள சிவாலயங்கள் :-(1) சந்தான மல்லேஸ்வரர் கோயில். (2) வைத்ய நாதர் கோயில. (3) பீமேஸ்வரர் கோயில். (4) காசி விஸ்வநாதர் கோயில். (5) திரிகோடீஸ்வரர் கோயில். (6) இந்திரஸ்வரர் கோயில், (7) கமலசம்பவேஸ்வரர் கோயில், இங்கு

ஒரு ஆலயத்தில் சிவபெருமானும், கேசவப் பெருமாளும் ஒரே கோயிலில் எழுந்தருளியிருக்கின்றனர். இதற்கு புஷ்ப கிரி கோயில் என்று பெயர்.

பூதபாண்டி :—திருவாங்கூர் ராஜ்யம், பூதநாதர் கோயில் பழைய சிவாலயம், பல கல்வெட்டுகள் உள.

பூதேசம் : —வட இந்தியா, கோஹத்தியின் சமீபம், சிவாலயம். ஸ்வாமி - பஸ்மகாயர் - உமாதேவி, சுயம்பு லிங்கம்.

பூதலூர் :—சென்னை ராஜதானி, திருச்சிராப்பள்ளி ஜில்லா, ரெயில் ஸ்டேஷன், சிவாலயம். ஸ்வாமி - ஆபத் சகாயர், தேவி-ஆனந்தவல்லி.

பூந்துருத்தி :—(திரு) காந்தர்வர் புஷ்பவனம் வைத்து பூசித்த ஸ்தலம். தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, திருக்கண்டியூருக்கு 1½ மைல் மேற்கு, தஞ்சாவூரிலிறங்கிப் போகவேண்டும். திருஞானசம்பந்தரும், அப்பரும் இங்கு சிவ காலம் தங்கியிருந்த ஸ்தலம். அப்பர் இங்கு ஒரு மடம் கட்டுவித்தார். அந்த இடம் இப்பொழுதும் காட்டப் படுகிறது. சப்த ஸ்தானங்களில் 6-வது ஸ்தலம். ஸ்வாமி-புஷ்பவன நாதேஸ்வரர், தேவி-அழகாலமர்ந்த நாயகி. காசிகங்கை தீர்த்தம்- கிழக்கு கோபுரம் 7 நிலை யுடையது. இரண்டாம் பிராகார கோபுரம் நிலமாயிருக்கிறது. கர்ப் பக்கிரஹத்தில் சில பழைய கல்வெட்டுகள் உள. இங்கு நந்தி சந்நிதிக்கு நேராக இல்லை. திருஞானசம்பந்தருக் காக சற்று விலகியதாக ஐதிகம். (சூர்யாபிஷேகத்திற்காக இவ்வாறு இருக்கலாம் என்று சிலர் கூறுகின்றனர்.) கோயிலில் சில பல்லவ சிம்ஹத் தூண்கள் இருக்கின்றன. அப்பர் பாடல் பெற்றது.

பூமாரு :—வட இந்தியா, சிவாலயம். ஆரும் நூற்றாண் டில் கட்டப்பட்ட தென்பர்.

பூர் :—பூனா ஜில்லா, பம்பாய் ராஜதானி, குக்குடேஷ் வர் கோயில்; இங்குள்ள பரமசிவம் தாண்டவமாடும் சிலை

பார்க்கத் தக்கது. கோயில் 40 × 18 அடி விஸ்தீர்ணம், மஹா சிவராத்திரி விசேஷம்.

பூர்வி வைஜ்நாத் :—நிஜாம் ராஜ்யத்திலுள்ளது. ஜோதிர் லிங்கம் ஒன்றுள்ள சிவாலயம்.

பூரி பிரிவு :—வங்காள ராஜதானி, பாரால் கிராமம், சிவாலயம். எந்த வியாதியுடையவர்களும் இங்கு வந்து தரிசனம் செய்தால் நோய் தீரும் என்று எண்ணப்படுகிறது.

பூவணம் :—(திரு) தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன். சென்னை ராஜதானி, பழைய சிவாலயம். ஸ்வாமி-பூவண நாதேஸ்வரர், தேவி-மின்னனையாளம்மை; வைகை நதி, பலா விருட்சம், பொன்னனையாள் எனும் தாசிக்காக ஸ்வாமி எழுந்தருளி ரசவாதம் செய்துகொடுத்த பொன் னைக்கொண்டு அவள் ஸ்வாமி விக்ரஹம் செய்து கொடுத்த ஸ்தலம். அத்தாசி பொன்னாலாகிய அந்த விக்ரஹத்தைக் கண்டு, "அச்சோ அழகு" என்று வலது கபோலத்தைக் கிள்ளி முத்தமிட்டபடியால் அங்கு வடுவுடைய மூர்த்திக்கு "அச்சோ அழகிய பிரான்" என்று பெயர் வந்தது. தமிழ்நாட்டு மூவேந்தரும் பூசித்த ஸ்தலம். பிரம்மோற் சவம் ஆனி மாசம். மூவர் பாடல் பெற்றது. பப்புருமஹ ரிஷி பூசித்த ஸ்தலம்.

பூவனூர் :—(திரு) சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, நீடாமங்கலம் ஸ்டேஷனுக்கு $2\frac{1}{2}$ மைல் தெற்கு. சுகரிஷி பூசித்த ஸ்தலம். ஸ்வாமி-புஷ்பவனேஸ்வரர், தேவி-சண்பகவல்லி யம்மை, கருங்குழித் தீர்த்தம், பாமணி யாற்றின் மேற்குக் கரையிலுள்ளது. சுகரிஷி புஷ்பவனம் வைத்து ஸ்வாமியை ஆராதித்தபடியால் புஷ்பவனம் என்று பெயர் பெற்றது. அப்பர் பாடல் பெற்றது. திருவிசைப்பா பெற்றது.

பூவாளூர் :—லால்குடி தாலுகா, திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி, மன்மதன் பூசித்த ஸ்தலம். பூ + வாளி + ஊர். (சமஸ்கிருதத்தில் காமர்பதி என்று பெயர்) சுவாமி-திருமூல நாதர், தேவி-குங்கும சௌந்தரி, வில்வ விருட்சம்; பல்குனி நதி.

பூந்தோட்டம் :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, பேரளத்திற்கு 4 மைல் சிவாலயம். புவனேஸ்வர். பூங்கோதை; அரிசில் நதி.

பூவிருந்தவல்லி :—சென்னை ராஜதானி, ஆவடி ஸ்டேஷனிலிருந்து 6 மைல் சிவாலயம். சுவாமி - வைத்யநாதர், தேவி-தையல் நாயகி யம்மன்; பிரமன், குண்டோதரன், சரஸ்வதி, தர்ம புத்திரர், தேவேந்திரன், சிவமுனிவர் பூசித்த ஸ்தலம் என்பது ஸ்தலபுராணம். சித்திரை மாசம் பிரம்மோற்சவம், ஸ்தல விருட்சம் தாளிப்பனை, குண்டோதரனுடைய தீபாக்கினியைச் சாந்தம் செய்த ஸ்தலம். தேவேந்திரனுக்கு பரமசிவம் மும்மூர்த்தி தர்சனம் கொடுத்த ஸ்தலம். சூரிய பூஜை மாசிமாசம். 1770-வது பழைய கோயில் ஜீர்ணோத்தாரணம் செய்யப்பட்டது. சில வருடங்களுக்கு முன் பிராகாரத்தில் பூமியின் கீழ் ஒரு கள்ளறை கண்டு பிடிக்கப்பட்டது.

பூனு பிரிவு :—பம்பாய் ராஜதானி, இங்குள்ள சிவாலயங்கள் :-(1) பூனு - ரெயில் ஸ்டேஷன் பார்வதிகுன்றம். இங்கு ஒரு சிவாலயமுண்டு. சுமார் 1750-வது மூன்றாவது பேஷ்வா பாலாஜி பாஜிராவ் என்பவரால் கட்டப்பட்டது. சுவாமி-தேவதேஸ்வரர், தேவி-பார்வதி, இக் கோயிலைச் சுற்றிலும் நான்கு சிறு கோயில்கள் உண்டு. அவற்றில் சூரியன், பார்வதி, கணேசர், விஷ்ணு, பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றனர். கோயிலின் ஒரு புறம் நகார்கானு (வாத்யம் வாசிக்குமிடம்) உண்டு. 1760-ம் ஆண்டில் கோயிலிலிருந்த விக்ரஹங்கள் எல்லாம் மகம்மதியர்களுக்கஞ்சி வெளியேற்றப்பட்டன. பிறகு மறுபடியும் கொண்டு வந்து ஸ்தாபிக்கப்பட்டன. இங்குள்ள பார்வதி விக்ரஹமும், கணேசர் விக்ரஹமும் பொன்னாலானவை. (2) அமிர்தேஸ்வரர் கோயில்-இரண்டாம் பேஷ்வாவின் மனைவியால் சுமார் 1725-வது கட்டப்பட்டது. (3) நாகேஸ்வரர் கோயில் - சோமவார் பேட்டையிலுள்ளது. இதுதான் பூனாவில் மிகப் பழமையான கோயில். (4) ஒங்காரேஷ்வர் கோயில் ஆற்றங்கரையில் சோமவார் பேட்டையிலுள்ளது. 1740—60 வருடங்களில் கட்டப்பட்டது. சிவலிங்கம் பூமி மட்டத்திற்கு 3 அடி கீழே இருக்கிறது. மழைக்காலத்தில்

லிங்கம் தண்ணீரில் மூழ்கியிருக்கிறது. (5) ராமேஷ்வர் கோயில் சுக்கிரவாரப் பேட்டையிலுள்ளது. சிவாஜிபண்ட் என்பவரால் கட்டப்பட்டது. சிவராத்திரி விசேஷம். (6) சோமேஸ்வரர் கோயில்-புதியது 1930-ஆம் கட்டப் பட்டது; ஆதிவார் பேட்டையிலுள்ளது. ஒருவிதமான சுயம்புலிங்கம். (7) துளசிபாக் கோயில், இங்கு மூன்று கர்ப்பக்கிரஹங்கள் உண்டு. அவற்றினுள் ஒன்றில் லிங்கப் பிரதிஷ்டையுண்டு. (8) மஹாதேவர் கோயில்-ஹோல்கார் பாலத்திற்கு அருகிலுள்ளது. இங்கு இரண்டு லிங்கங்கள் உண்டு. ஹோல்கார் வம்சத்தாரால் கட்டப் பட்டது. (9) பாஞ்சாளேஸ்வரர் கோயில், பூனா தபால் ஆபீசுக்கு 2 மைல், மலையில் வெட்டப்பட்ட கோயில். இங்குள்ள நந்தி மண்டபம் வட்டவடிவமானது. (10) ஷிவ்ஜி கோயில், குன்றின்கீழ் குடையப்பட்ட கோயில்; சிவலிங்கம் பிரதிஷ்டை திப்பு சுல்தான் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட தென்பர். (11) சம்புதேவர் மலை, பூனா ஜில்லா, சிவாலயம் சுவாமி-சம்புதேவர். (12) புரந்தர் பூனா ஜில்லா, மஹா தேவர் சிவாலயம்.

பூனித்துறை :—திருப்பூறித்துறை யென வழங்கப்படு கிறது. கொச்சி ராஜ்யம், மேற்கு இந்தியா, சிவாலயம். சுவாமி-ஸ்ரீ பூர்ணத்திர யீசர்.

பூஜ் :—மைசூர் ராஜ்யம், பார்வதி குன்றில் சிவாலயம். பரமசிவத்தின் விக்ரஹம் 1¼ அடி உயரம், மடியில் பார்வதி யும். கணேசரும் விளங்குகின்றனர்.

பெங்களூர் :—மைசூர் ராஜ்யம், ரெயில் ஸ்டேஷன். இங்குள்ள சிவாலயங்கள் :-(1) கோட்டைக்கு 1 மைல் மேற்கில் கெவி கங்காதரீஸ்வரர்-கோயில் சிறிய குன்றில் குடையப்பட்டிருக்கிறது, கெம்பகௌடரால்-சுமார் 1638-வருடம். சுவாமி கங்காதரீஸ்வரர்; சிவசின்னங்களாகிய திரிசூலம், டமருகம், 22 அடி உயரமுள்ள இரண்டு கற் பாறைகளில் வெட்டப்பட்டிருக்கின்றன. கர்ப்பக்கிரஹத் தைப் பிரதட்சிணம்வர ஒருவழி குன்றில் வெட்டப்பட்டிருக் கிறது; இருட்டாயிருக்கும்; வெளிச்சங்கொண்டு பார்த் தால் இங்குள்ள மாடங்களில் சில சிலை உருவங்கள்

அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். கர்ப்பக்கிரஹம் 12 அடி சதுரம் 8 அடி உயரம். பிராகாரத்தின் ஒரு புறம் ஒரு சுரங்கம் போகிறது 204 அடி வரையில்; அதற் கப்புறம் ஓர் நீர் நிலை யிருக்கிறது. (2) மல்லேஸ்வரர் கோயில், சுவாமி பெயர் காட்டுமல்லேஸ்வரர். மல்லிகார் ஜுனர் கோயில் கெம்பகவுடரால் கட்டப்பட்டது. (3) ராமேஷ்வரர் கோயில்; கோயில் வடக்கு பார்த்தது. தேவி-பார்வதி; புதிய கட்டிடம். கோயிலில் ஸ்ரீ ராமர் சந்நிதி யுண்டு. அதற்கும் பூஜை நடக்கிறது. இக் கோயில் பஞ்சாயதனக் கோயில் என்று அழைக்கப்படுகிறது. அதாவது 5 சந்நிதிகளையுடையது என்று பொருள்படும்; பரமசிவம், அம்பிகை, விஷ்ணு, கணேசர், அனுமார் அல்லது சூரியன், இவர்களுடைய சந்நிதிகளையுடையதாம். மைசூர் ராஜ்யத்தில் இத்தகைய கோயில்கள் பல உள. (3) அல்சூர் சிவாலயம். இது கண்டோன்மென்டில் இருக் கிறது. (4) சோமேஸ்வரர் கோயில், (5) காசிவிஸ்வநாதர் கோயில், கண்டோன்மென்டில காந்தி நகருக்கருகிலுள்ளது. சுவாமி-விஸ்வநாதர், தேவி-அன்னபூரணி, பிரம்மோற்சவம் ஆனி மாசம். விஸ்வேசுவரர் கோயில் பெங்களூர் கிழக்கி லுள்ளது - சிறிய கோயில் புதிய கட்டடம். கெம்பகவுட ரால் கட்டப்பட்டது. இவ்வூரில் 10-க்கு மேற்பட்ட சத்தி ரங்கள் உண்டு.

பெண்ணகர் :—சென்னை ராஜதானி, சிவாலயம். கஜப் பிருஷ்ட ஆகிருதி. இங்கு இரண்டு சிவாலயங்களுண்டு, பிரம்மேஸ்வரர் கோயில் (பிரம்மா பூசித்த ஸ்தலம்) கைலாச நாதர் கோயில்.

பெண்ணுகடம் :—(திரு) இதற்குத் திருக்கடந்தை நகர் எனப் பெயர் உண்டு. சிவாலயத்திற்கு தூங்காணை மாடம் என்று பெயர், சென்னை ராஜதானி; ஆரத்துறைக்கு 4 மைல் வடக்கு. விருத்தாசலத்திற்கு 11 மைல் தென் மேற்கு. கலிக்காம நாயனார் அவதரித்த ஸ்தலம். சுவாமி-சுடர்க்கொழுந்தீசர், தேவி-கடந்தை நாயகி, பெண்ணை நதி தீர்த்தம்; சுவாமிக்கு பிரளயகாலேஸ்வரர் என்றும் பெயர். நந்தி சுவாமிக்கு முதுகைக் காட்டிய வண்ணம் இருக்கின் றனர்; பிரளயத்தைத் தடுப்பதற்காக இப்படி இருக்கும்

படி கட்டளையிடப்பட்டனர் என்பது ஐதிகம், தேவகன்னியர், காமதேனு, வெள்ளையானை, இந்திரன் பூசித்த ஸ்தலம். பெண்=தேவ கன்னிகை. (+ஆ=பசு:+கடம் —யானைக் கூட்டம்) கோயில் விமானம் கஜப்பிருஷ்ட ஆகிருதி. கஜ விமானம்-யானையைப் போன்றது. திருநாவுக்கரசு விடைக்குறி, சூலக்குறி வேண்டிப் பெற்ற க்ஷேத்திரம்.

பெத்த கல்லேபர்லே :—மசூலிப்பட்டணம் தாலுகா, கிருஷ்ணா ஜில்லா, சென்னை ராஜதானி ; சிவாலயம் ஸ்வாமி-நாகேஷ்வரர்.

பெத்தகாகனி :—குண்டூர் தாலுகா, மேற்படி ஜில்லா, சென்னை ராஜதானி ; வீரபத்திரர் கோயில்.

பெத்த செருகூரு :—பாபட்லா தாலுகா, குண்டூர் ஜில்லா, சென்னை ராஜதானி, அகஸ்தீஸ்வரர் கோயில்.

பெத்ததும்பலம் :—பல்லாரி ஜில்லா, சென்னை ராஜதானி, வீரபத்திர ஸ்வாமி கோயில்; சாளுக்கிய சில்பம்.

பெத்தபலகலூர் :—குண்டூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி-சர்வேஸ்வரர்.

பெத்தபடலலே :—நெல்லூர் ஜில்லா, சென்னை ராஜதானி, ராமலிங்கேஸ்வரர் கோயில்.

பெத்தமுடியம் .—கடப்பை ஜில்லா, சென்னை ராஜதானி; முக்கண்டீஸ்வரர் கோயில்.

பெதானு :—கிருஷ்ணா ஜில்லா, சென்னை ராஜதானி, மசூலிப் பட்டணத்திற்கு 4 மைல் வடக்கு. அகஸ்தீஸ்வர ஸ்வாமி கோயில்.

பெரிய சூளம் :—மதுரை ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். சோழ கட்டடம், கல்வெட்டுகள் உள. ஸ்வாமி-சிவமரகதேசர், பார்வதி தேவி.

பெரிய கோட்டூர் :—பழனி தாலுகா, மதுரை ஜில்லா, சென்னை ராஜதானி; இங்கு இரண்டு பழைய சிவாலயங்கள் உள. இரண்டிலும் கல்வெட்டுகள் உள.

பெரிய பட்டணம் :—இதற்குப் பழைய பெயர் சிங்க பட்டணம், மைசூர் ராஜ்யம் ஹல்சூருக்கு 13 மைல், சிவாலயம். ஸ்வாமி-மல்லிகார்ஜுனர். கரிகாலச் சோழனல் கட்டப்பட்ட தென்பர்.

பெரியபாளையம் :—சென்னை ராஜதானி, சென்ன பட்டணத்திற்கு வடக்கிலுள்ளது, சிவாலயம். ஸ்வாமி-ஹரிமுக்தேஸ்வரர், தேவி-அன்னபூரணி, வன்மீக தீர்த்தம், வான்மீக முனியும், பிரகு முனியும் பூசித்த ஸ்தலம். இதன் அருகில் கோட்டை குபபம எனும் கிராமத்தில் ஒரு சிவாலய முளது; ஸ்வாமி-புண்யகோடீஸ்வரர்.

பெருங்கரணை :—ராமநாதபுரம் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி-மூன்றுலோசன மூடையார்.

பெருங்களூர் :—புதுக்கோட்டை சமஸ்தானம் புதுக் கோட்டைக்கு 11 மைல், சிவாலயம், குலோத்துங்க சோழனல் கட்டப்பட்டதென்பர். ஸ்வாமி - வம்சோத் தாரகர், மங்களாம்பாள்.

பெருங் கோட்டுக்கரை :—கொச்சி ராஜ்யம், திருச் சூருக்கு அருகிலுள்ளது. சிவாலயம், ஸ்வாமி - சோம சேகரர்.

பெருஞ்சேரி :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, இதற்குத் தாருகாவனம் என்றும் பெயர். சிவாலயம், ஸ்வாமி-வாகீசர் அல்லது வாக்குக் காட்டு வள்ளல், பிரஹஸ் பதி பூசித்த க்ஷேத்திரம்.

பெருந்தலையூர் :—சத்யமங்கலம் தாலுகா, கோயமுத் தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, பழைய சிவாலயம். இதில் சுந்தர பாண்டிய தேவர் காலத்து கல்வெட்டொன் றுளது.

பெருந்துறை :—புதுக்கோட்டை சமஸ்தானம், திரு மெய்யம் தாலுகா, புதுக்கோட்டைக்கு 14 மைல். சிவாலயம்.

பெருந்துறை :—கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி; பழைய சிவாலயம்.

பெருந்துறை :—(திரு) மதுரை ஜில்லா, பராசர், பிருகு முதலியோர் பூசித்த ஸ்தலம். மாணிக்கவாசகருக்கு குரு முகமாக உபதேசித்த ஸ்தலம். ஸ்வாமி-ஆத்மநாதர், தேவி-உமாதேவி, குருந்தமரம், சிவகங்கை, மாணிக்கவாசகர் பாடல் பெரிதும் பெற்ற க்ஷேத்திரம்.

பெரும்புலியூர் :—(திரு) தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, திருவையாறுக்கு 2 மைல் வடமேற்கிலுள்ளது. வியாக்ரபாதர் பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமி-வியாக்ர புரீஸ்வரர், தேவி-சௌந்தர நாயகி, காவிரி நதி தீர்த்தம், திருஞானசம்பர் பாடல் பெற்றது.

பெரும்பேர் :—மதுராந்தகம் தாலுகா, செங்கல்பட்டு ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி - தான் தோணீஸ்வரர். கல்வெட்டுகளில் ஊர் பெயர் பெரும்பேரூர் என்றும், ஸ்வாமி பெயர் ஸ்ரீ கரணீஸ்வர முடையார் என்றும் இருக்கிறது.

பெருமகளூர் :—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, பட்டுக்கோட்டைக்கு 20 மைல், சிவாலயம். இங்குள்ள லிங்கம் முற்றிலும் ஒரே கல்லாலமைந்தது. தஞ்சை அரசர் ஒருவர் இதை ஆலிங்கனம் செய்து கொண்டபடியால் அவரது ஆபரணங்களின் குறிகள் லிங்கத்தில் அழுந்தியிருப்பதாக ஐதிகம்.

பெருமல்பாட் :—நெல்லூர் ஜில்லா, சென்னை ராஜதானி; நாகேஷ்வர ஸ்வாமி கோயில்.

பெருமுக்கல் :—திண்டிவனம் தாலுகா, சென்னை ராஜதானி, செஞ்சிக் கோட்டைக்கு அருகிலுள்ளது; சிவாலயம். ஸ்வாமி-முக்தேஸ்வரர், தேவி-காமாட்சி யம்மன். கோயில்

சிறு மலையிலுள்ளது. வன்மீக தீர்த்தம், வால்மீகி ஆசிரமம் அருகிலுள்ளது என்பர். கோயில் யுத்த காலத்தில தாக்கப்பட்டு கொஞ்சம் சிலமாயிருக்கிறது.

பெருவாரம் :—திருவாங்கூர் ராஜ்யம்-சிவாலயம்,

பெருவேளூர் :—(திரு) கரட்டூர் ஐயன் பேட்டை என வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி, கரவீரத்திற்கு 2 மைல், வடமேற்கு. திருப்பாசூரிலிருந்து 8½ மைல், கௌதமர், சக்தி பூசித்த ஸ்தலம், ஸ்வாமி-பிரியா ஈஸ்வரர், தேவி-மின்னனையாளம்மை, மூஷிக தீர்த்தம், திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது.

பெல்காம் ஜில்லா :—பம்பாய் ராஜதானி, கோரக்பட்டினத்திற்கு 3 மைல் தூரம், மஹா லிங்கேஸ்வரர் கோயில், வடக்கு பார்த்தது. கோரக் நீர் வீழ்ச்சி; இங்கு இன்னும் 2 சிறு சிவாலயங்கள் அருகில் இருக்கின்றன. பெல்காம் கோட்டையில் ஒரு சிவாலயமுண்டு; இது பாழடைந்திருக்கிறது. மூக்கியவாயிலில் தாண்டவமாடும் ஈஸ்வரன் பக்கலில் பிரம்மாவும், மஹா விஷ்ணுவும் இருக்கின்றனர்; அழகிய சில்பம்.

பெளகாமி :—பெலகாமி என்றும் அழைக்கப்படுகிறது. மைசூர் ராஜ்யம், ஷீமோகா ஜில்லா, ஷிகார்பூர் தாலுகா. இங்கு ஐந்து சிவாலயங்கள் உள. (1) கேதாரீஸ்வரர் கோயில், மூன்று சந்நிதிகளையுடையது. சாளுக்கிய கட்டடம், (பெலகாமி கேதாரீஸ்வரர் கோயில்) மண்டபத்தின் கூரை மகம்மதியர்களால் அழிக்கப்பட்டது. ஹோய்சல பிருது இங்குளது. (சலன் சார்தூலத்தைக் கொல்வது) இக் கோயில் ஜக்கணசாரியால் கட்டப்பட்டதாம். (2) பஞ்ச லிங்கேஸ்வரர் கோயில், (3) கைடபேஸ்வரர் கோயில், (4) சோமேஸ்வரர் கோயில், (5) திரிபுராந்தகேஸ்வரர் கோயில். பஞ்சலிங்கேஸ்வரர் கோயில் பஞ்சபாண்டவர்களால் கட்டபட்டதென்பது ஐதிகம்; மிகவும் சிலமாயிருக்கிறது. சாளுக்கிய கட்டடம். தற்காலம் இவை பாழாயிருக்கின்றன. ஆயினும் சில அழகிய சில்பங்களுடைத்தாயிருக்கின்றன.

பென்குடி :—திருப் பென்குடி என்று அழைக்கப்படுகிறது. சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி-சொக்கேஸ்வரர், தேவி-சிவகாமி, ஹனுமத் தீர்த்தம், சிபிச்சக்ரவர்த்தி பூசித்த ஸ்தலம்.

பெனுகொண்டா :—பெனுகொண்டா தாலுகா, சென்னை ராஜதானி; அனந்தபூர் ஜில்லா, பெங்களூர் குண்டக்கல் ரெயில் ஸ்டேஷன் - சிவாலயம். அவிமுக்தேஸ்வரர் கோயில், விஜயநகர சில்பமமைந்தது.

பெஜ்வாடா :—கிருஷ்ணா ஜில்லா, சென்னை ராஜதானி, ஈஸ்ட் கோஸ்ட் ரெயில் ஸ்டேஷன். ஊரின் பழைய பெயர் கல்வெட்டுகளில் ராஜேந்திர சோழபுரம் என்றிருக்கிறது. கிருஷ்ணா நதியின் கரையிலுள்ளது-சிவாலயம். சுவாமி-மல்லேஸ்வரர், அல்லது ஜெயசேனர். (இக் கோயிலச் சார்ந்த கனக துர்க்கையின் கோயில் மிகவும் பிரபலமானது) அகஸ்தியர் பூசித்த ஸ்தலம். இங்குள்ள இந்திர தீபம் எனும் மலையில் அர்ஜுனன் தவம் புரிந்து சுவாமியிடமிருந்து பாசுபதாஸ்திரம் பெற்றதாக ஐதிகம். சுவாமி அர்ஜுனனுடன் யுத்தம் புரிந்தமையால் மல்லேஸ்வரர் எனப் பெயர் வந்தது. கலியுகத்திற்கு முன் ஸ்வாமிக்கு ஜெயசேனர் என்று பெயர் இருந்ததாம். இவ்வூரில் இன்னும் இரண்டு சிவாலயங்கள் உள. (1) மல்லிகார்ஜுனர் கோயில், (2) நாகேஷ்வரர் கோயில்.

பேரூல் ஜில்லா :—மத்திய மாகாணம், (1) போபாலி கிராமம், சிவாலயம். குகைக் கோயில், சுவாமி மஹாதேவர், தேவி-பார்வதி. (2) சல்பார்டி கிராமம், சிவாலயம் குகைக்கோயில்; சுவாமி-மஹா தேவர்.

பேரூர் :—மைசூர் ராஜ்யம், தேவாங்கரே தாலுகா, சிவாலயம். சுவாமி-கள்ளேஸ்வரர்.

பேணு பெருந்துறை :—திருப்பந்துறை என்றும் வழங்கப்படுகிறது. கும்பகோணத்திற்கு 7 மைல். தென்கிழக்கு. தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, பிரமன் பூசித்த க்ஷேத்திரம். சுப்பிரமணியருக்கு சிவபிரான் அருள்கொடுத்த ஸ்தலம் என்பது ஸ்தல புராணம்.

சுவாமி-சிவாநந்தேஸ்வரர், தேவி-மலையரசியம்மை. சின் மயாநந்த தீர்த்தம், திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

பேபூர் :—கள்ளிக்கோட்டை தாலுகா, மலபார் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்.

பேரளம் :—மேற்படி தாலுகா, தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, ரெயில் ஸ்டேஷன்; சிவாலயம். சுவாமி-திரு முயற்சி நாதர், தேவி-சௌந்தர நாயகி, வருணன் பூசித்த ஸ்தலம்-வைப்புஸ்தலம். இங்கு திருமயச் சேரலிங்கர் கோயில் என்று ஒரு சிவாலயமுண்டு. சுவாமி-பரமேஸ்வரர், தேவி - மங்கள நாயகி, சரஸ்வதி தீர்த்தம். பிரம்மாவும், சரஸ்வதியும் பூசித்த க்ஷேத்திரம்.

பேரூர் :—கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, கோயமுத்தூர் ஸ்டேஷனிலிருந்து 3 மைல், மேற்கு. இதற்கு பிப்பிலாரண்யம், தட்சிண கைலாசம், மேலைச் சிதம்பரம் என்றும் பெயர்கள் உண்டு. பரமசிவம், சுந்தர மூர்த்தியின் பொருட்டு, தாம் பறையனாகவும், உமா தேவி பறைச்சியாகவும் வேடம் பூண்டருளி, வயலில் நாற்று நட்டு திருவிளையாடல் புரிந்த க்ஷேத்திரம். பிரம்மாவும், விஷ்ணுவும் இங்கு பரமசிவத்தை கோமுனி, பட்டிமுனி எனும் உருவங்களில் பூசித்ததாக ஸ்தலபுராணம் கூறுகிறது. அன்றியும் காலவர், அதிமூர்க்கம்மன், காமதேனு பூசித்த ஸ்தலம். விஷ்ணு முதலியோருக்கு சபாநாதர் ஆநந்தத் தாண்டவமாடிய ஸ்தலம் சுயம்புலிங்கம்;சுவாமி-பட்டீசர், கோஷ்டீஸ்வரர், தேவி-பச்சை நாயகி, மரகத வல்லி, பிரம தீர்த்தம், காஞ்சி நதி; கர்ஞ்சி நதி யென்பது நொய்யலாறு என்று வழங்கப்படுகிறது. கந்தி கேரா யிராது ஒரு புறமாயிருக்கிறது. இந்த ஸ்தலத்தில் பிறவாப் புளி இறவாப்பனை, விசேஷம். சுந்தரருக்காக சபாநாதர் அரசமரத்தடியில் நிர்த்தனம் செய்ததாக ஐதிகம். பிற வாப்புளி பெரிய கோயிலில் பெரிய கோபுரத்திற் கருகி லுள்ளது. கோயிலில் பெரும்பாகமும், கோயிலுக்கு அருகிலுள்ள குளமும் மதுரை திருமலை நாயகருடைய சகோதரர் அளகாத்திரி நாயகரால் கட்டப்பட்டது. கோயிலின் பழைய பாகம் 11-ஆம் நூற்றாண்டில் ஆண்ட ராஜேந்திர தேவன் எனும் சோழ அரசனால் கட்டப்பட்ட

தாம். சபாநாயகர் மண்டபம் அழகிய சில்பமமைந்தது. இங்கு கோமுனி, பட்டிமுனி சிலை உருவங்கள் உள. அன்றியும் இங்குள்ள கஜசம்ஹார மூர்த்தி, பிட்சாடனர், ஊர்த்தவத்தாண்டவேசர், காளி, வீரபத்திரர், அகோர வீரபத்திரர், கணேசர், சுப்பிரமணியர் சிலைகள் அழகியவை. மேலும் யோகிகள் யோகாப்பியாசம் முடிந்ததும், பழைய ரூபம் பெறுவதற்கு மூன் இருக்க வேண்டிய முத்திரை செதுக்கப்பட்டிருக்கிறது. கோபுரம் 5 நிலைகளுடையது, சிறியது; பிற்காலத்தில் கட்டப்பட்டது. பீடம் மாத்திரம் கருங்கல்லாலாயது. சில வருடங்களுக்கு முன் உள் பிராகாரம் புதுப்பிக்கப்பட்டது. இரண்டாம் பிராகாரத்தில் சிங்கவாபி எனும் தீர்த்தம் உண்டு. இங்குள்ள காளி கோயிலிலிருந்து பார்த்தால் சபாநாயகரது மேல் தூக்கிய பாதம் காணப்படும். இதை திவ்ய தரிசனம் என்பர். கோயிலுக்குள் ஒரு விஷ்ணு ஆலயமுண்டு; ஸ்மார்த்த பூஜை; இதற்கு உற்சவமுமுண்டு. இவ்விடம் 13-ஆம் நூற்றாண்டில் ஆண்ட இரண்டாம் விக்கிரம சோழனுடைய கலவெட்டுகள் உள. மூலஸ்தானம் பழைய கட்டடமாம். சோழ சில்பம்-சபாநாயகர் மண்டபம் 1750-ஐ கட்டப் பட்டதாக பெர்கூசன் துரை எண்ணுகிறார். இதிலுள்ள ஒரு ஸ்தம்பத்தில் ஒரு சிப்பாய் தன் துப்பாக்கிக்கு மருந்து போடுவதுபோல் செதுக்கப்பட்டிருக்கிறது. பிரம்மோற் சவம் பங்குனி மாசம். இதில் பத்தாம் நாள் நடக்கும் நடராஜப் பெருமான் உற்சவம் பிரபலம். நடராஜரை எழுந்தருளச் செய்யும் பொழுது தண்டுகள் முறிவது அதிசயச் செய்கை. நாற்று நடவு உற்சவம் ஆனிமாசம். கோயிலின் அருகாமையில் வசிஷ்டர் யாகஞ் செய்த இடம் காட்டப்படுகிறது. இங்குள்ள மணலானது விபூதியாகப் பாவிக்கப்படுகிறது. கோயிலின் துவஜஸ்தம்பத்தில் ஒரு புறம் சுந்தரமூர்த்தி உருவம் இருக்கிறது. நடராஜ சபைக்குக் கிழக்குப்புறம் கருங்கல்லுக்குப் பதிலாக மரத்தாலாகிய சில்பம் இருக்கிறது. பூர்வகாலத்தில் இது கருங்கல்லாலாயதாம்; அதில் ஒரு தேரை இருந்ததாகவும் அதை ஆவடையார் கோயில் கல் தச்சனாகிய ராமலிங்கம் என்பவரின் புதல்வன் கண்டுபிடித்து எடுத்துவிட்டதாகவும், பிறகு அதை மரத்தால் செய்து வைத்ததாகவும் சொல்லப்

படுகிறது. சுயம்பு லிங்கத்தில் காமதேனுவின் கன்றுக் குட்டி இடித்து முட்டியதால் படிந்த குளம்பின தழுவாரமும் காலின் வடுவும் இருக்கிறது. ஒரே கல்லில் வெட்டப் பட்ட சங்கிலியும், உருளுகிற தாமரை முதலிய விசித்திர சில்பங்களிருக்கின்றன. இங்கு காலேஸ்வரர் கோயில் என்று ஒரு சிறு ஆலயமுண்டு. காலவமுனி பூசித்த ஸ்தலம், புதிய கோயில். வட கைலாசம் எனும் கோயிலு முண்டு. இங்குள்ள கிணற்றில் ஸ்நானம் செய்து பரம சிவத்தை வழிபட்ட முகுந்த சக்ரவர்த்தி மனித முகம் பெற்றதாக ஐதிகம். இதற்கருகில் ஸ்தல புராணத்தில் குறித்த இறவாப்பனை யுளது.

பேரையில் :—(திரு) இது ஒகை, ஓகைப் பேரெயில், வங்கராப் பேரையூர், ஓகைப்பேரையூர எனவும் வழங்கப் படுகிறது. தென் இந்தியா, நாட்டியத்தான்குடி ஸ்டேஷனுக்கு 6 மைல், தென் மேற்கு. வருணன், அக்னி பூசித்த க்ஷேத்திரம். சுவாமி-கஜகதீஸ்வரர், காலபுவனேஸ்வரர், தேவி-ஜகந்நாயகி, அல்லது பெண்ணமிர்த நாயகி, மேகலாம்பாள்; அக்னி தீர்த்தம், வருண தீர்த்தம். கோயில் சிறியது. சபாபதி விக்ரஹம் மிகவும் அழகியது. அப்பர் பாடல் பெற்றது.

பேரையூர் :—திருமெய்யம் தாலுக்கா, புதுக்கோட்டை சமஸ்தானம் சிவாலயம். ஆதிசேஷன் பூசித்தது. சுயம்பு லிங்கம்-பழைய கோயில். இதற்கருகிலுள்ள ஒரு மலையில் ஒரு சிவாலயம்-குகைக்கோயில் உண்டு. சுவாமி-தாளவனேஸ்வரர், தேவி-பிரகதாம்பாள், பனை மரம். இந்திரன் பூசித்த ஸ்தலம்.

பேஹர் :—பேஹர் தாலுகா, ஹசான் ஜில்லா, மைசூர் ராஜ்யம், இங்குள்ள ஆலயம் முற்றிலும் விஷ்ணு ஆலயமாக இருந்த போதிலும், ஆதியில் இங்கு சிவாலயமிருந்ததாக எண்ண இடமுண்டு. தற்காலம் சென்ன கேசவப் பெருமாள் சந்நிதிக்கருகில் பழைய சாளுக்கிய கோயில் ஒன்றுளது. அதில் சிவலிங்கம் ஆதியில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்ததாகச் சொல்லப்படுகிறது. அதை வைணவர்கள் பிறகு அகற்றிவிட்டதாகச் சொல்லப்படு

கிறது. கோயில் பீடம் நட்சத்திர வடிவமானது. தற்காலம் பெரிய கோயிலுக்குக் கிழக்கில் நஞ்சுண்டேஸ்வரர் கோயில் எனும் ஒரு புதிய மிகச்சிறிய சிவாலயமுளது. மேற்கில் சங்கரேஸ்வரர் கோயில் என்னும் ஒரு சிவாலயமுளது. ஹொய்சால சில்பம்-இங்கு அம்மன் சந்நிதியுண்டு.

பேளூர் :—சேலம் ஜில்லா, சென்னை ராஜதானி, வசிஷ்ட நதிக்கரையிலுள்ளது. சிவாலயம்-ஸ்தல விருட்சமாகிய இலுப்பை மரத்தில் விக்ஹங்கள் இல்லை என்று கூறப்படுகிறது.

பைஞ்ஞீலி .—(திரு) திருப்பங்கிலி எனவும் வழங்கப்படுகிறது. திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி. திருச்சிராப்பள்ளிக்கு 11 மைல் வடகிழக்கு. சிவாலயம், சோழ கட்டடம். சுவாமி-நீலகண்டேஸ்வரர், மாற்றறிவாதர், தேவி-விசாலாட்சி, பாலசௌந்தரி; இங்கு இரண்டு அம்மன் கோயில்கள் உண்டு. ஒன்று கிழக்கு பார்த்தது மற்றொன்று தெற்கு பார்த்தது. இக் கோயிலில் யமதர்ம ராஜனுக்கு பூமியின் கீழ்மட்டத்தில் ஓர் ஆலயமுண்டு. நவக்கிரஹங்களுக்குப் பதிலாக 9 விளக்குகள் வைக்கப் பட்டிருக்கின்றன. இரண்டாம் பிராகாரத்தில் வாழை மரங்கள் உள; இவை சபிக்கப்பட்ட தேவ கன்னிகைகள் என்பது ஐதிகம். இம் மரங்கள் தண்ணீர் வார்க்கப்படாமல் வளர்கின்றன என்று சொல்லப்படுகிறது. பசியினால் வருந்திய அப்பருக்கு சுவாமி கட்டமுது கொடுத்து அருளிய தோட்டமும், தடாகமும் இதற்கு ½ மைல் தூரத்தில் இருக்கிறது. சுவாமிக்கு நிவேதனம் செய்த வாழைப்பழத்தைத் தின்னலாகாது, எறிந்துவிட வேண்டும் என்பது ஐதிகம். கோயிலின் சிலபாகம் பாண்டிய அரசர்களால் கட்டப் பட்டது. மூவர் பாடல் பெற்ற க்ஷேத்திரம். சிவபெருமான் யமனை எழுப்பிய ஸ்தலம்.

பைரங் :—வட இந்தியா, சிவாலயம். சுவாமி-பைரங்நாத், சுயம்புலிங்கம்.

போப்பூடி :—நரசாரங் பெட் தாலுகா, குண்டூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்.

போர்ராகுகை :—விசாகப் பட்டணம் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். சிவராத்திரி விசேஷம்.

பொலன்னருவா :—லங்கைத் தீவின் மத்தியில் உள்ளது. பழைய் பெயர் புலஸ்திபுரம் அல்லது கலிங்கபுரம், சிங்களப் பெயர் தோபாவீவா-சிவாலயம்,சிவாவயம் சுமார் 1190-வது நிஸ்ஸங்க மல்லர் என்பவரால் கட்டப்பட்டதென மதிக்கப் படுகிறது. முற்றிலும் கருங்கல் கட்டடம். விமானத்தின் உச்சியும், மண்டபமும் இடிந்து போயிருக்கிறது. கோயிலில் தற்காலம் பூஜையில்லை. இது தற்காலம் தளத மாளிகாவா என்று தவறுக அழைக்படுகிறது. இங்கு, தற்காலம் விஷ்ணு தேவாலயம் என்று அழைக்கப்படும் கோயிலும், பூர்வத்தில் சிவாலயமாயிருந்த தென்பதற்குச் சந்தேக மில்லை; கர்ப்பக்கிரஹத்தின் பேரிலும், அடியிலும், நந்தி கள இருக்கின்றன. இங்குள்ள கல்வெட்டுகள் ஒன்றில் சுவாமி பெயர், தேவிஈஸ்வரமுடையார் என்றிருக்கிறது. கோயில் திராவிட சில்பம்.

பேருமாமிலா :—சென்னை ராஜதானி கடப்பை ஜில்லா, சிவாலயம். சுவாமி-திரிநேத்திரர்.

போதன் :—பம்பரய் ராஜதானி, சூரத் ஜில்லா, மாண்டலி உட்பிரிவு. சிவாலயம், சுவாமி-கௌதமேஷ்வர் மஹாதேவ். இவ்விடம் தர்மசாலை யுண்டு.

போர்பந்தர் :—வட இந்தியா, ரெயில் ஸ்டேஷன். சிவாலயம். ஸ்வாமியின் பெயர் மஹாதேவ் தாகூர்ஜி.

போரூர் :—திருப்போரூர் என்று சாதாரணமாய் வழங்கப்படுகிறது. தென் ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, (பிரபல சுப்பிரமணிய ஸ்தலம்.) இங்கு சிறு குன்றின்மீது சிவாலயம் உளது. சுவாமி-கைலாச நாதர், தேவி-பாலாம்பிகை, பிரணவாமிர்த்த தீர்த்தம். விஷ்ணுவும், மஹாலட்சுமியும் பூசித்த ஸ்தலம் என்பது ஸ்தல புராணம். இங்கு சுப்பிரமணியர் கோயிலுக்குள் ஒரு சிறு சிவாலயம் உண்டு. சுவாமி-காசி விஸ்வநாதர், தேவி-விசாலாட்சி. சுப்பிரமணியர் கோயிலிருக்குமிடத்தில் 300 வருடங்களுக்கு முன்பு சிவாலயம் இருந்ததாக சிலர் எண்ணுகின்றனர்.

இக்கோயிலுக்குள் வன்மீகேசுரர் ஆலயம் உளது. சுவாமி-வன்மீகேசர், தேவி-புண்யகாரிணி- மேற்கு நோக்கிய சந்நிதி. சூரபத்மனைக் கொன்ற பாபம் தீர சுப்பிரமணியர் வான்மீகேசரைப் பூசித்ததாக ஐதிகம்.

போலவரம் :—கோதாவரி ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம். சிவராத்திரி விசேஷம்.

போஜ்பூர் :—போபால் ராஜ்யம், வட இந்தியா, சிவாலயம்; 66 அடி சதுரம், சிவலிங்கம் 7½ அடி உயரம், 17 அடி 8 அங்குலம் சுற்றளவு. சுமார் 12 அல்லது 13-ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது என்பர்.

பொன் அமராவதி :—திரு மெய்யம் தாலுகா, புதுக் கோட்டை சமஸ்தானம், சிவாலயம். சோழ அரசனாகிய ராஜராஜன் காலத்தில் கட்டப்பட்டது. பழைய சோழ கட்டடம்.

பொன்னேரி:—ஈஸ்ட்கோஸ்ட் ரெயில் ஸ்டேஷன். சென்னபட்டணத்திலிருந்து 23 மைல்; சென்னை ராஜதானி, சிவாலயம். சுவாமி பெயர்-அகத்தீஸ்வரர், தேவி-ஆநந்த ஜீஸ்வரி; கோயிலுக்கு எதிரில் சிறு குளமுண்டு. கோயில் ஸ்டேஷனுக் கருகிலுள்ளது. சித்ராபவுர்ணமியன்று இக் கோயிலின் சிவபெருமான் விருஷபவாஹனத்திலும், அருகிலுள்ள விஷ்ணு ஆலயத்தின் மஹாவிஷ்ணு கருடவாஹனத்திலும் சந்திக்கும் உற்சவம் விசேஷம்; இதற்கு சந்திப்பு உற்சவம் என்று பெயர். இதற்கு 5 மைல் தூரத்தில் திருப்புன்னவாயல் என்று ஒரு சிவ க்ஷேத்திரமுண்டு. பொன்னேரிக்கு 2 பர்லாங் தூரம். சின்ன காலணம் எனும் கிராமத்தில் ஒரு சிவாலயமுண்டு, பக்கலில் பெரிய காவணம் எனும் ஊரில் ஒரு கோயிலுண்டு. சுவாமி பெயர்-எழுமுனீஸ்வரர்.

பொற் பந்தல் :—காஞ்சீபுரம் தாலுகா, செங்கல்பட்டு ஜில்லா, சென்னை ராஜதானி; பழைய சிவாலயம், சுவாமி-அக்னீஸ்வரர், தேவி-இனிமொழியம்மை, தெற்கு நோக்கிய வாசல். பழைய காலத்தில் பொன்னாலாய பந்தர் கண்டு

எடுக்கப்பட்டதாகவும் அதனல் பொன் பந்தல் எனப் பெயர் உண்டாயிற்று என்றும் கூறுவர்.

பொள்ளாச்சி :—அல்லது பொல்லாச்சி, சென்னை ராஜ தானி, கோயமுத்தூர் ஜில்லா, சிவாலயம்.

மகாதானு :—பம்பாய் ராஜதானி ; சால்செட்டுக்கருகில் உள்ளது, குகைக் கோயில்-சுவாமி-மண்டபேஸ்வர்.

மருடேஸ்வரம் :—வட இந்தியா, சிவாலயம், கயம்பு லிங்கம். சுவாமி-ஜயந்தீஸ்வரர்.

மங்கலக் குடி :—(திரு) சென்னை ராஜதானி, ஆடுதுறை ஸ்டேஷனுக்கு 3 மைல் வடக்கு. ஏயர்கோன் கலிக்காம நாயனர் முத்தியடைந்த ஸ்தலம். கோயில் விக்ரம சோழ னல் கட்டப்பட்டது. மஹாகாளி, சூரியன், விஷ்ணு, பிரம்மா, அகஸ்தியர் பூசித்த ஸ்தலம். சுவாமி-பிராணவர தேஸ்வரர், தேவி-மங்கல நாயகி, கொங்கிலவ விருட்சம். மங்கள தீர்த்தம், காவிரி நதி; திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. அரசன் பொருளைத் திருப்பணி செய்து செல விட்டு, அஞ்சி உயிர் துறந்த மனைவி, இங்கு மங்களநாயகி யருளால் உயிர் பெற்று வணங்கிய ஸ்தலம். இங்கு குலோத்துங்க சோளீஸ்வரமுடைய மகாதேவர் கோயிலில் முதல் பராந்தகன் (905-947) காலத்திய கல்வெட்டுகள் உள.

மங்களூர் :—மேற்கு இந்தியா, ரெயில் ஸ்டேஷன், சென்னை ராஜதானி, தென் கன்னட ஜில்லா, சிலாலயம் - சுவாமி-பாண்டிய ஈஸ்வரர் அல்லது மஞ்சு நாதர், சிவராத்ரி விசேஷம். இங்கு மூசாபரி பங்களா உண்டு.

மங்கை புரம் :—சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா, சிவாலயம்.

மதூலி பட்டணம் :—சென்னை ராஜதானி, கஞ்சம் ஜில்லா, ராமலிங்கேஸ்வரர் கோயில்.

மஞ்சேரி :—சென்னை ராஜதானி, சிவாலயம். சுவாமி - அகஸ்தீஸ்வரர் ; தேவி - ஆநந்தவல்லி, அகஸ்தியரும் 5 கந்தர்வர்களும் பூசித்த ஸ்தலம்.

மஞ்சேஷ்வர் :—சென்னை ராஜதானி, தென் கன்னட ஜில்லா, சிவாலயம். சுவாமி-மஞ்சேஷ்வர்.

மடவார் விளாகம் :—சென்னை ராஜதானி, திருநெல் வேலி ஜில்லா, ஸ்ரீ வில்லிபுத்தூருக்கருகிலுள்ளது. வைத்ய நாதீஸ்வரர் கோயில்.

மண்டகப்பட்டி :—சென்னை ராஜதானி, தென் ஆற்காடு ஜில்லா, குகைக் கோயில், பல்லவ சில்பம். மஹேந்திர வர்மனால் (600-625 கி. பி.) குடையப்பட்டது. மூன்று குகைக்கோயில்களில் பிரம்மா, விஷ்ணு, பரமசிவம், இவர் களின் உருவங்களிருக்கின்றன. பிரதானமான கோயில் சிவாலயம் என்று தூப்ரெயில் துரை எண்ணுகிறார். இங்கு தற்காலம் பூஜையில்லை.

மண்டபல்லி :—கோதாவரி ஜில்லா, சென்னை ராஜ தானி, சிவாலயம்-மஹாதேவர்.

மண்டபபேசரா :—பம்பாய் ராஜதானி, தாணை ஜில்லா, இங்கு ஒரு சிவாலயம்-குகைக் கோயில் இருந்தது. இதை போர்த்துகேயர் பாழாக்கினர்.

மணடலா பிரிவு :—மத்திய மாகாணம், இங்கு இரண்டு சிவாலயங்கள் உள : (1) தியோகாவன் கிராமம், நருமதை யும் மற்றொரு நதியும் சங்கமமாகுமிடம். சிவாலயம். சுவாமி-ஜமதக்னேஷ்வர். (2) கக்கரமத் கிராமம் ; பழைய சிவா லயம். சுவாமி-மஹாதேவர், இது ஆதியில் ஜைனின் ஆலயமாயிருந்த தென்பர்.

மண்டி :—வட இந்தியா, காங்கிரா தாழ்வரையிலுள்ளது. மண்டி ராஜ்யத்தில், சிவாலயம். அழகிய சில்ப மமைந்தது. பேஜ்நாத்துக்கு 5 மைல் தூரம்.

மணக் குடி :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, சுந்தரேஸ்வர ஸ்வாமி கோயில்.

மணஞ்சேரி :—(கிழகு) கீழைத் திருமணஞ்சேரி என்பது தேவாரப் பெயர். ஆமை சிவபெருமானைப்

பூசித்து மனித உருவம் பெற்று, தனக்குக் குறித்த பெண்ணை மணந்த க்ஷேத்திரம். மன்மதன் பூசித்த ஸ்தலம். குலச்சிறை நாயனார் பூசித்த ஸ்தலம். சென்னை ராஜதானி, மாயவரம் தாலுகா, சுவாமி-அருள்வள்ள நாதர், தேவி-யாழின் மொழியம்மை, திருமண சமுத்திர தீர்த்தம், இங்கு இருந்த புராதனமான கோயில், கற்கோயிலாக கண்டராதித்யர் மனைவி செம்பொன் மாதேவியாரால் கட்டப்பட்டது, 948 கி. பி-சென்னை ராஜதானி குற்றாலம் ரெயில் ஸ்டேஷனுக்கு 4½ மைல், திருஞானசம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. இதற்கு 9 மைல் தூரத்தில் கர்கடகேஸ்வரர் கோயில், சுவாமி-கர்க்கடகேஸ்வரர், கர்க்கடகம் = நண்டு. பூசித்த ஸ்தலம்.

மணஞ்சேரி :—புதுக்கோட்டை சமஸ்தானம், புதுக்கோட்டைக்கு 9 மைல். சிவாலயம். சுயம்புலிங்கம், நந்தியின் காதிலிருந்து தீர்த்தம் சதா பெருகுகிறதென்பர்.

மணப்பாறை :—அகஸ்தீஸ்வரர் கோயில, சென்னை ராஜதானி, திருச்சிராப்பள்ளி ஜில்லா, ரெயில் ஸ்டேன்; நல்லாண்டவர்சுவாமி கோயிலுக்கு 1 பர்லாங் வடக்கிலுள்ளது. பழைய கோயில்-இதில் சில கல் வெட்டுகள் உள.

மண்ணிப் படிக்கறை :—(திரு) இது இலுப்பையடி, இலுப்பைப்பட்டு என வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி, வைதீஸ்வரன் கோயிலுக்கு 6 மைல், வாழ்கோளிபுத் தூருக்கு 1 மைல் மேற்கிலுள்ளது. பரமசிவம் நஞ்சையருந்தின வைபவ க்ஷேத்திரம். சுவாமி-நீலகண்டேஸ்வரர், தேவி-அமிர்தகர வல்லியம்மை, அமிர்த தீர்த்தம், பார்வதி தேவியார் சிவபிரானது திருக்கழுத்தைப் பிடிக்க, அங்கு கரை காட்டியருளிய ஸ்தலம் - சுந்தரர் பாடல் பெற்றது.

மணற்கால் :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, ஆருருக்கு 3 மைல் சிவாலயம், வைப்புஸ்தலம்.

மணக்கரை :—சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா, சிவாலயம்; மங்களேஸ்வரர், மங்களநாயகி; பாண்டவர்கள் பூசித்ததாக ஐதிகம்.

மணமங்கை :—சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா, சிவாலயம். ஸ்வாமி-மங்களேஸ்வரர், தேவி-மங்களநாயகி, பாண்டவர்கள் பூசித்த ஸ்தலம் என்பர்.

மணலூர் :—சென்னை ராஜதானி, மதுரை ஜில்லா, சிவாலயம். மதுரைக்கு 6 மைல்.

மணிக் கிராமம் :—இதற்கு மணிக்கோயில் என்றும் பெயர். சிவாலயம்; சீர்காழிக்கு 1 மைல், வைப்புஸ்தலம்.

மணிகரபேரி :—உடுபி தாலுகா, தென் கன்னட ஜில்லா, சென்னை ராஜதானி, சோமநாதேஸ்வரர் கோயில்.

மணிமங்கலம் :—சைதாப்பேட்டை தாலுகா, செங்கல் பட்டு ஜில்லா, சென்னை ராஜதானி, தர்மேஸ்வரர் கோயில், தேவி வேதவல்லி. கோயில் 11-ஆம் நூற்றாண்டில் கட்டப் பட்டது. கர்ப்பக்கிரஹம் மஹாபலிபுரம் சகாதேவன் ரதம் போன்றது. இங்கு கைலாச நாதர் கோயில் என்று மற்றொரு சிவாலயமுண்டு.

மணிபூர் :—வட இந்தியா, சிவாலயம், ஸ்வாமி - மஹா தேவர். தேவி-பார்வதி.

மணிவாக்கம் :—சென்னை ராஜதானி, சிவாலயம். சுவாமி-மருதேஸ்வரர், தேவி-மரகதவல்லி, பாதாள கங்கை தீர்த்தம்.

மத்தகிரி .—மைசூர் ராஜ்யம், தும்கூர் ஜில்லா, தும்கூரி லிருந்து 24 மைல், மது + கிரி = மத்தகிரி என்றாயதென்பர். சிவாலயம், சுவாமி-மல்லேஸ்வார், கோயிலின் கொடுங்கை களில் புறாக்கள் தங்கியிருப்பதுபோல் சில்பங்கள் உள. (சிவாலயத்தின் பக்கலில் ஒரு ஜைன ஆலயமுளது.)

மத்ரா :—வட இந்தியா, (பிரபல விஷ்ணு க்ஷேத்திரம்) இங்கு ஒரு சிவாலயம் உண்டு. ஸ்வாமி-பூதேஷ்வர் மஹா தேவ். கோயிலின் வெளிப்பிராகாரம மராட்டிய அரசர்க ளால் கட்டப்பட்டது. இங்குள்ள சிறு மலைக்கு கைலாசம் என்று பெயர். இதன் தாழ்வரையில் கோகர்ணேஸ்வரர்

கோயில் எனும் ஒரு சிவாலயமுண்டு. அன்றியும், இங் கருகிலுள்ள கங்கா கிருஷ்ண கட்டத்தில் ஒரு மஹாதேவர் சிவாலயமுளது.

மத்ரா தாசில் :—ஐக்கிய மாகாணம். இங்கு ஆரிங் எனும் ஊரில் சிவாலயம் உண்டு. சுவாமி-பிமலேஷ்வர் மஹா தேவ், சிறிய கோயில். முத்திதரும் ஏழு க்ஷேத்திரங்களில் ஒன்று. இதற்கு ஆதியில் மதுரபுரி என்று பெயர் இருந் தது. இங்குள்ள மற்ற கோயில்கள் :-ராமேஷ்வர் கோயில். யமுனை நதிக்கரையில வங்காள கட்டத்திலுளளது; ஹாட கேஷ்வர் கோயில் கௌகாட்டில் உள்ளது; ரங்கேஷ்வர் மஹாதேவ் கோயில், ரங்கபூமியிலுள்ளது. இங்கு பல தர்ம சத்திரங்கள் உண்டு.

மதன பள்ளி :—சென்னை ராஜதானி, கடப்பை ஜில்லா, சிவாலயம்.

மதுராந்தகம் :—சென்னை ராஜதானி, ரெயில் ஸ்டேஷன் மதுராந்தகன் எனும் சோழ அரசனல் கட்டப்பட்டிருக்க லாம். இவன் சுமார் 950 கி. பி. யில் ஆண்டவன். சுவாமி-அருளாளேஸ்வரர், வெண்காட்டநீஸ்வரர்(?) இங்கு சத்திர முண்டு.

மதுரை :—இதற்கு ஆலவாய் என்பது தேவாரப் பெயர். சம்ஸ்கிருதத்தில் ஹாலாஸ்யம் என்று பெயர். கடம்ப வனம் என்பது இதன் பூர்வீகப் பெயர்; கூடல், நான் மாடக்கூடல், சமட்டி விச்சாபுரம், துவாத சாந்த ஸ்தலம் என்றும் பெயர்களுண்டு. வைகையாற்றின் கரையி லுள்ளது. பண்டைக் காலத்தில் பாண்டிய ராஜதானியா யிருந்தது. தனஞ் செயன் எனும் ஓர் வணிகன் இங்கிருந்த கடம்பவனத்தில் ஓர் இரவு இந்திரன் லிங்கபூஜை செய் ததைக் கண்டு அரசனுக்கு அறிவிக்க, அரசன் கடம்ப வனத்தைக் கலைந்து, ஓர் பட்டணத்தை யுண்டு பண்ண வெண்ணி பரமசிவத்தை வேண்ட, அவர் அனுப்பிய ஓர் பாம்பு நகரின் எல்லையைச் சுற்றி வட்டமாகக் கர்ட்டிய படியால், இவ்வூர் பூர்வகாலத்தில் வட்டமாக அமைக்கப் பட்டது. இக் காரணம்பற்றியே இதற்கு ஆலவாய் என்று பெயர் வந்தது. ஊரில் வட்டமாயிருக்கும் வீதிக்கு

கற்காலம் வெளிவீதி யென்று பெயர். இதற்குள் அடங்கி யிருப்பது பழைய மதுரையாம். ஸ்தலபுராணத்திற்கு ஹாலாஸ்ய மான்மியம் எனப் பெயர். தமிழ்ப்புராணம் திருவிளையாடற்புராணம். அம்பிகை தடாதகைப் பிராட்டி யாகப் பிறந்து அரசாண்டு திக்விஜயம் செய்து கடைசியில் சுந்தரேஸ்வரரை மணந்த க்ஷேத்திரம். பரமசிவம் 64 திருவிளையாடல்கள் புரிந்த புண்யபூமி. கபிலர், பரணர், நற்கீரர் முதலிய பொய்யடிமை யில்லாப் புலவர்களாகிய சங்கத்தார் இருந்த இடம். மூர்த்தி நாயனார் அரசாண்ட பதி. அரிமர்த்தன பாண்டியனிடம் மாணிக்கவாசகர் மந்திரியாக விருந்த நகரம். இந்திரன் சாபம் நீங்கி சிவ பெருமானே சித்ரா பௌர்ணமி யன்று பூசித்த க்ஷேத்திரம். திருஞான சம்பந்தர் சமணர்களை வென்று அவர்களைக் கழுவிலேற்றிய ஸ்தலம். அவர் திருப்பதிகம் வரைந்த ஏட்டை அனலிலிட வேகாமலிருந்த திவ்ய க்ஷேத்திரம்; மற்றொரு திருப் பதிகத்தை வைகையில் பிரவாகத்திலிட, ஏடு எதிராகச் சென்ற மகிமை யுடையப் பிரதேசம். கூன் பாண்டியன் சைவனாகி நெடுமாற நாயனார் எனும் பெயர் பெற்றவூர்;மங்கையர்க்கரசிகுலச்சிறைநாயனார்வாழ்ந்தபூமி, பாண்டிய ராஜனுக்காக நடராஜப் பெருமான் கால்மாறி யாடிய க்ஷேத்திரம். இங்கு பஞ்ச சபைகளில் வெள்ளி யம்பலம் உள்ளது. ஸ்வாமியின் பெயர் சொக்கநாதர், சுந்தரேஸ்வரர்; இன்னும் மற்றத் திருநாமங்கள் - கற்பூர சுந்தரர், கலியாண சுந்தரர், மீனாட்சி சுந்தரர்; சண்பகச் சுந்தரர், கடம்பவன சுந்தரர், பழியஞ்சிய சுந்தரர், ஆலவா யச் சுந்தரர், சோமசுந்தரர் முதலியன. தேவி மீனாட்சி யம்மன்; தீர்த்தங்கள் : பொற்றாமரை, எழுகடல், வைகை யாறு. ஸ்தல விருட்சம், கடம்ப விருட்சம், (பழைய மரத்தின் அடிப்பாகம் சுவாமி கோயிலின் வடக்குப் பிரா காரத்தில இன்றும் காணலாம்.) கோயில் இந்தியாவிலுள்ள சிவாலயங்களிலெல்லாம் மிகச் சிறந்தது. இதைப் பார்க்க ஐரோப்பா, அமெரிக்கா கண்டங்களிலிருந்தும் பிரயாணிகள் திரள்திரளாக தினம் வருகின்றனர், பழைய ஆலயம் மகம்மதியர்கள் காலத்தில் பெரும்பாலும் அழிக் கப்பட்டது. மதுரையை மகம்மதியர்கள் ஆண்டகாலம் 1310-1358. "இஸ்லாம் சிம்மங்கள் ஆலயத்தின் மதில்

சுவர்களையும் 14 கோபுரங்களையும் மாட வீதிகளையும் இடித்துத் தரைமட்ட மாக்கின" என்று ஒரு மகம்மதிய ஆசிரியர் கூறியுளார். விஜயநகர அரசனுகிய புக்க தேவரது குமாரனுய குமார கம்பன உடையார் என்பவர் மதுரையை மகம்மதியர்களிடமிருந்து மீட்டு, பூட்டப்பட்டிருந்த ஆலயத்தைத் திறந்து, பூஜைக்கு அருகாக்கினர் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

கோயில் மூன்று பிராகாரங்களை உடையது; விஸ்தீரணம் இரண்டு பக்கம் 720-729 அடி உள்ளது; மற்ற இரண்டு பக்கங்கள் 834-852 அடி உள்ளது; மொத்த விஸ்தீரணம் சுமார் 25 ஏகரா. இங்கு 9 கோபுரங்கள் உள்ளன. பெரிய கோயில் விமானம் சுமார் கி. பி. 1520-ஆம் ஆண்டில் சொக்கநாத நாயகரால் கட்டப் பட்டதாம். மீனுட்சி யம்மன் கோயில் பெரும்பாலும் திருமலை நாயகர் காலத்தில் கட்டப்பட்டதாம். ஆயிரக்கால் மண்டபம் நாயக்க அரசர்களிடம் தளகர்த்தனுயிருந்த அரியநாயக முதலியாரால கி. பி. 1560 (சுமார்) கட்டப் பட்டது; இதில் 985 கால்கள் தானிருக்கின்றன; முதலியாரது சிலை உருவம் இம் மண்டபத்தின் முன் பாகம் உள்ள ஓர் தூணில் செதுக்கப்பட்டிருக்கிறது. புது மண்டபம் அல்லது வசந்த மண்டபம் கோயிலுக்கு கிழக்கில் வெளியில் உள்ளது; திருமலை நாயகர் காலத்தியது. இதற்குக் கிழக்கில் ராய கோபுரம் சுமார் 1623-1685-ல் ஆரம்பிக்கப்பட்டு, முடிக்கப்படாமல் விடப்பட்டிருக்கிறது; இதன் அடிப்பாகம் 174 அடி உயரம்; 107 அடி அகலம்; வாயிற்படி 60 அடி உயரம். ஸ்வாமி கோயிலுக்குள் உள்ள ஒரு பெரிய மண்டபம் பெரிய வீரப்ப நாயகரால் கட்டப்பட்டதாம்; இவர் காலம் 1500-1578. தற்காலம் மீனுட்சி நாயக்கர் மண்டபம் என்று சொல்லப்படுகிறது முத்துவீரப்ப நாயக்கரால் கட்டப்பட்டதாம். கலியாண மண்டபம் 1707-ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. நான்கு வெளி கோபுரங்கள் கம்பன உடையார் காலத்தில் கட்டப் பட்டன வென்பர்; இவர்தான் மதுரையை மகம்மதியர்க ளிடமிருந்து மீட்டவர்; இவர் காலம் சுமார 1372 கி. பி. ஆகும். ஸ்வாமி கோயிலும் அம்மன் கோயிலும் அக்கம் பக்கமாயிருக்கின்றன. மீனுட்சி அம்மன் கோயிலின்

முன் புறத்திற்கு அஷ்ட சக்தி மண்டபம் என்று பெயர். ஸ்வாமி கோயிலின் கிழக்கு கோபுர வாயிலாக சாதாரண மாகப் பக்தர்கள் புகுவதில்லை. உற்சவாதிக ளெல்லாம் அம்மன் சந்நிதி வாயிலாகத்தான் நடத்தப்படுகின்றன. இதற்குக் காரணம், விஜயரங்க சொக்கநாதர் காலத்தில் கோயிலின் வேலையாட்களுக்கு இறையிலியாக (வரியில்லா மல்) விடப்பட்ட மான்யங்களுக்கு, வரி தண்ட உத்யோ கஸ்தர்கள் முயல, அதைத் தவிர்ப்பதற்காக ஒரு கோயில் வேலையாள் இக் கிழக்கு கோபுரத்திலேறி கீழே விழுந்து மடிந்ததால், இக் கோபுரத்தின் மூலமாக யாரும் புகுவ தில்லையாம். இக் கோபுரம் 9 நிலை யுடையது. சுந்தர பாண்டியனால் 1218ஆம் கட்டப்பட்டது. வடக்கு கோபுரத் திற்கு பல வருடங்களாக மொட்டை கோபுரம் என்று பெயர் இருந்தது; அநேக வருடங்களாக இக் கோபுரத் திற்கு மேல் கலசங்கள் வைக்கப்படவில்லை; வைத்தால் அவற்றை ஒரு பிசாசு தள்ளி விடுவதாக வதந்தி யிருந்தது. சில வருடங்களுக்கு முன் ஒரு கும்பாபிஷேகத்தின்போது இக் கோபுரம் ஸ்தூபிகளாகிய சிலைகள் வைக்கப்பட்டு சரியாக்கப்பட்டது; இது 9 நிலை யுடையது; 1572-ஆம் கிருஷ்ண வீரப்ப நாயகரால் கட்டப்பட்டது. இக் கோபுரத் தின் கீழ் இதற்குக் காவலாக சுருப்பண்ணசாமி கோயி லிருக்கிறது. இதற்கு வடைமாலை சாத்துகிறது பெரிய கைங்கர்யமாம்.

மேற்கு கோபுரம் 9 நிலையை யுடைசது 1323-ஆம் பராக்கிரம பாண்டியனால் கட்டப்பட்டது. நகாரா மண்டபம் மீனாட்சி கோயிலுக்கெதிரி லுள்ளது. சுமார் 1635-ஆம் அச்சுதராயரால் கட்டப்பட்டதாம்.

இப் பெரிய கோயிலில் பார்க்க வேண்டிவைகள் :— (1) பொற்றாமரைக்குளம்-மீனாட்சி கோயிலின் முன்புள்ளது. இதில் சங்கப்பலகை யிருந்ததாகச் சொல்லப்படுகிறது. இதன் படியில் ஓரிடத்திலிருந்து பார்த்தால் கோயிலிலுள்ள எல்லா கோபுரங்களின் சிகரங்களும் தெரியும். இக் குளத்தைச் சுற்றியுள்ள மண்டபங்களில் 64 திருவிளை யாடல்கள் முதலியன வர்ணத்தால் சித்திரிக்கப்பட்டிருக் கின்றன. (2) கிளி கூண்டு மண்டபம்-இதில் பஞ்சவர்ணக்

கிளிகள் முதலியன வைக்கப்பட்டிருக்கின்றன. இங்குள்ள கருங்கற்றூண்களில் பஞ்ச பாண்டவர்கள் முதலியோருடைய பெரிய சிலை உருவங்களிருக்கின்றன; மிகவும் அழகியவை. (3) முக்குறுணிப் பிள்ளையார்-மிகவும் பெரிய பிள்ளையார்; வண்டியூர் தெப்பக் குளத்திலிருந்து கண்டெடுக்கப்பட்ட தென்பர். பிள்ளையார் சதுர்த்தி தினம் மூன்று குறுணி அரசியினால் ஒரே மோதகம் செய்யப்பட்டு நிவேதனம் செய்யப்படுகிறது. (4) ஸ்வாமி கோயிலுக்கெதிரில் 16 கால் மண்டபம்; இது கிருஷ்ண வீரப்ப நாயகர் காலத்தில் கட்டப்பட்டது. இதில் மும்புரதகன மூர்த்தி, சண்டேஸ்வர அனுக்கிர மூர்த்தி, அர்த்தநாரீஸ்வரர் முதலிய சிலைகள் மிகவும் அழகிய வேலைப்பாடுள்ளவை. அன்றியும் இங்கு எதிரிலுள்ள விரபத்ர மூர்த்தி, காளி (இக் காளிக்கு வாதாடும் பத்ரகாளி என்று பெயர்) முதலிய மிகப் பெரிய சிலை யுருவங்கள் மிகவும் அருமையான வேலைப்பாடுள்ளவை. இவைகள் 16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வெட்டப்பட்டனவாக புரோபசர் ஹிராஸ் எண்ணுகிறார். (5) ஸ்வாமி சந்நிதியின் வாயிலில் காயத்ரி சாவித்திரி மந்திரங்களின் சிலைகளிருக்கின்றன. (இவை மற்றெங்கும் கிடையா). (6) முதலி மண்டபத்திலுள்ள மோகினியின் உருவம் மிகவும் அழகியதென பார்த்தவர்களால் மதிக்கப்படுகிறது. இம் மண்டபம் 1613-ஆம் கடந்தை முதலியாரால் கட்டப்பட்டது. (7) ஆயிரக்கால் மண்டபம்-இதன் தூண்கள் ஒன்றில் யாளி வாயில் குண்டு சுழன்றுகொண்டிருக்கக் காணலாம். இங்குள்ள மன்மதன் ரதி யுருவங்கள் மிகுந்த சுந்தரமமைந்தவை. இது கிருஷ்ண வீரப்ப நாயகர் காலத்தில் சுமார் 1572-ஆம் கட்டப்பட்டது. (8) எல்லாம் வல்ல சித்தர் கோயில்-ஸ்வாமி கோயிலின் உட்பிராகாரத்திலுள்ளது. விக்கிரம பாண்டியன் கட்டியது. (9) காரைக்கால் அப்மையார் சந்நிதி. சுந்தரேஸ்வரர் கோயிலின் பிராகாரத்திலுள்ளது. (10) சங்கப்புலவர்கள் வைத்திருக்கும் மண்டபம்.

கோயிலின் மதில் சுவர்கள் மிகவும் உன்னதமானவை. மதுரை மதில் அழகு, என்பது பழமொழியாம். இங்கு வெளிப் பிராகாரத்தில் ஒரு பெரிய கற்றூணில் பல சிறு தூண்கள் அடங்கியிருக்கின்றன; இவைகளை முறையே

தட்டினால் சப்த ஸ்வரங்கள்போல் ஒலிக்கின்றன. இது ஆதியில் ஒரு புறமிருந்த கரிய மாணிக்கப் பெருமாள் கோயிலைச் சார்ந்த தென்பர் (ஆயுரக்கால் மண்டபத்திலும் இப்படிப்பட்ட இரண்டு தூண்களிருக்கின்றன.) இந்த விஷ்ணு ஆலயம் தற்காலம் ஒரு பிராகாரத்தில் கோயில் நகைகள் முதலியன செய்வதற்காக அமைக்கப்பட்ட மண்டபமாக உபயோகிக்கப்படுகிறது. கோயிலில் தற் காலம் ஒரு விஷ்ணு சந்நிதியுளது. மதுரை திருஞான சம்பந் தர் அப்பர் பாடல் பெற்றது. இக் கோயிலில மூன்று முக்கிய உற்சவங்கள் நடைபெறுகின்றன-(1) சைத்ரோற் சவம், சித்திரை மாசம். இதில் திருக்கலியாண உற்சவம் விசேஷம். (2) தெப்போற்சவம்-தை மாசம். இது வண்டியூர் தெப்பக் குளத்தில் நடக்கிறது. இக் குளம் தென் இந்தியாவில் மிகவும் அழகியது. மைய மண்டபத்தில் சிறு கோபுரம் உண்டு. அதில் நாயக்க அரசர்களுடைய உருவங்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. இக் குளத்திற்கு ஜலம் வைகை யின் வாய்க்கால் வழியாகப் பாய்கிறது. குளம் சரியாக 1200 அடி நிகளமும் அகலமும். இக்குளம் மதுரைக்கு $2\frac{1}{2}$ மைல் தூரம் உளது. (3) ஆவணிமூல உற்சவம்-ஆவணிமாசம். இதில் பிட்டுக்கு மண் சுமந்த உற்சவம் விசேஷம். இவைகளன்றி மாதம் மாதம் ஏதாவது உற்சவம் இருந்துகொண்டே யிருக்கும், அறைக் கட்டு உற்சவம்,வசந்தோற்சவம்,முதலியன; திருவிளையாடற் புராணத்தில் கூறப்பட்ட ஒவ்வொரு விளையாடலுக்கும் ஒவ் வொரு உற்சவமுண்டு.மார்கழி மாதம் படியளக்கும் உற்சவம் விசேஷம். ஆதியில் இக் கோயிலின் பிரம்மோற்சவம் வைகாசி மாதம நடந்ததாகவும் அதை திருமலை நாயகர் மாற்றி சைத்திரோற்சவ மாக்கியதாகச் சொல்லப்படுகிறது.

பெரிய கோயிலிலுள்ள மற்ற சிறு ஆலயங்கள்.

(1) மீனாட்சி யம்மன் சந்நிதிக்கு வடபுரத்தில் பழைய சொக்கநாதர் கோயிலென ஒன்றுளது. இதுதான் பூர் வீக கோயிலோ, அல்லது பெரிய கோயிலுக்கு வெளியே யிருக்கும் கீழே குறிக்கப்பட்ட பழைய சொக்கனதர் கோயில்தான் ஆதி கோயிலோ, என்று சொல்வதற்கில்லை. இது ஆராயத்தக்கது. (2) சின்னிச்சாம-கோயில்-அம்மன்

சந்நிதிமடப்பள்ளிக்கு வடக்கிலுள்ளது; கோயில் மிகவும் சிறியது; மேற்கு பார்த்தது. இங்குள்ள சந்நிதியின் வாயிலுக்கு முக்தளக்கும் வாயில் என்று பெயர்; தற்காலம் முத்து வழி என வழங்குகிறது. இது 1426வது சின்னப்ப நாயகரால் கட்டப்பட்டதாம். (3) நந்தீஸ்வரர் கோயில் ஸ்வாமி சந்நிதியில் திருவாயிலின் பக்கத்தில் வடக்கு முகமாக இருக்கிறது. (4) பெத்தீஸ்வரம், வேலீஸ்வரம்- இவை இரண்டும் ஸ்வாமி கோயில் இரண்டாம் பிராகாரத்தின் மேற்றிசையிலுள்ளது. (5) மூக்கீஸ்வரர் கோயில். பெரிய கோயிலில் சில நாயக்கர் அரசர்கள் காலத்திய கல் வெட்டுகள் உள.

மேற்குறித்தபடி ஸ்வாமி மோயிலுக்கெதிரில் புது மண்டபம் என்று ஒரு அழகிய மண்டபம் உளது. இங்குதான் வசந்தோற்சவம் நடக்கிறது. இது 333 அடி நிகளம் 105 அடி அகலம்; இதன் நடுவில் விஸ்வநாத நாயகர் முதல் திருமலை நாயகர் வரையில் அரசாண்டவர்களுடைய சிலை உருவங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதைச் சுற்றிலும் வெயில் காலத்தில் ஜலம்விட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது; இது திருமலை நாயகரால் கட்டப்பட்டது; பல சிறந்த சிலைகளையுடையது- அதில் பார்க்கத் தக்கவை, ஊர்த்துவ தாண்டவ மூர்த்தி, காளி தேவி, கலியாண சுந்தரர் மணக்கோலம், ஸ்வாமி பெண் பன்றியாக பன்றிக் குட்டிகளுக்கு முலைப்பால் ஊட்டிய திருக்கோலம் முதலியன. இம்மண்டபம் 1626வது ஆரம்பிக்கப்பட்டு 1645வது முடிக்கப்பட்டது.

மதுரையிலுள்ள மற்ற சிவாலயங்கள் :— பழைய சோக்கநாதர் கோயில், சிறு ஆலயம். இங்குள்ள லிங்கத்திற்கு சொக்கலிங்கம் என்று பெயர்; இது பூர்வீக ஆலயமாயிருக்கலாம். நன்மைத் தருவார் கோயிலென மற்றொரு சிவாலயமுண்டு. இந்த இடத்திற்கு திருநடுவூர் என்று பெயர்; மேலமாசி வீதிக்கு மேற்கேயுள்ளது. ஸ்வாமியின் பெயர் இம்மையே நன்மை தருவார் என்பதாம். தேவி- மத்யபுரநாயகி. 1218வது சுந்தர பாண்டியன்

கட்டிய கோயிலாம். தெற்கு மாசிவீதியில் ஏகாம்பரீஸ்வரர் கோயில்

ஜுவந்தீஸ்வரர் கோயில் மீனாட்சி கோயிலுக்கு தெற்கில் உள்ளது இது. பழைய ஆலயமாயிருக்கலாம். தமிழில் செவ்வந்தீஸ்வரர் எனப் பெயர். இக் கர்ப்பக்கிரஹம், செவ்வந்தி பீமநாயகர் என்பவரால் 1564ஆம் கட்டப்பட்டது. இது ஆதியில் பிரத்யேகமான கோயிலா யிருந்திருக்கலாம். ஊரிலுள்ள சத்திரங்களில் முக்கியமானவை:- குண்ணத்தூர் சத்திரம், கோமுட்டிசத்திரம், லாலா சத்திரம், ஸ்டேஷனுக்கு சுமார் ¼ மைல் தூரம்; கருப்புபட்டி சத்திரம், வெங்கடசாமி நாயகர் சத்திரம், மலையாளச் சத்திரம், சுமார் ⅓ மைல் தூரம்; மங்கம்மாள் சத்திரம் ½ பர்லாங் தூரம். இங்கு மூசாரெ் பங்களாவும் உண்டு.

மந்திரச்சுரம் :—தென் இந்தியா, ஓமலூர் சிவாலயம் ஸ்வாமி - ஆர்த்தநாதேஸ்வரர், தேவி - பார்வதி, ருத்திர தீர்த்தம்.

மயச்சோலிங்கக் கோயில் :—சென்னை ராஜதானி, பேரளத்திற்கு ¼ மைல், சிவாலயம். ஸ்வாமி-சகலபரமேஸ்வரர் தேவி-மங்கள நாயகி, சரஸ்வதி தீர்த்தம். பிரம்மாவும் சரஸ்வதியும் பூசித்த ஸ்தலம்.

மயிலாடி :—சென்னை ராஜதானி, சீர்காழி தாலுகா, கொள்ளிடத்திற்கு சமீபமுள்ளது. சிவாலயம் சிறியது.

மயிலார் :—பெல்லாரி ஜில்லா, ஹடகல்லி தாலுகா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி-மல்லஹரி, சிவ பெருமாள் மல்லாசுரனைக் கொன்ற ஸ்தலம். உற்சவத்தின் போது ஜனங்கள் நாய்களைப்போல் வேடம் பூண்டு குலைத்துக்கொண்டு கோயிலுக்குள் செல்கின்றனர்.

மயிலார் :—சென்னை ராஜதானி, நீலகிரியில் கூனூருக்கருகிலுள்ளது. மஹாலிங்க ஸ்வாமி கோயில்.

மயிலை :—திருமயிலை, மயிலாப்பூர் என்று வழங்கப்படுகிறது, சென்னை ராஜதானி, சென்ன பட்டணத்தின்

தெற்கில் உள்ளது. தேவாரப் பதிகங்களில் மயிலாப்பு என்று அழைக்கப்பட்டிருக்கிறது. திருஞானசம்பந்தர் அங்கம் பூம்பாவையாக்கிய க்ஷேத்திரம். கோயிலின் மேற்கு பிராகாரத்தில் இதற்கு ஒரு சிறு கோயில் உண்டு. ஸ்வாமி-கபாலீஸ்வரர், தேவி-கற்பகாம்பாள், புன்னை விருட்சம், கபாலி தீர்த்தம் (சித்திரை குளம்) ராம தீர்த்தம், முதலியன. பார்வதி தேவியார் மயில் உருவில் சிவபெருமானைப் பூசித்த க்ஷேத்திரம். வடக்கு பிராகாரத்தில் இதற்கு ஒரு கோயில் கட்டப்பட்டிருக்கிறது. திருவள்ளுவர் வாழ்ந்த ஸ்தலம். ஸ்வாமி சன்னிதி மேற்கு பார்த்தது. தேவி சன்னிதி கிழக்கு பார்த்தது, தற்காலக் கோயில் சுமார் 300 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டதாம். இதில் ஒரு கல்வெட்டும் இல்லாததது கவனிக்கத் தக்கது. பழைய கோயில் சமுத்திரக் கரையோரம் இருந்தது; போர்த்துகேயரால் இடிக்கப்பட்ட தென்று எண்ணுவதற் கிடமுண்டு. விநாயகர் பெயர்-கூத்தாடு விநாயகர், சுப்பிரமணியர் பெயர் சிங்கார வேலவர். பிரம்மோற்சவம் பங்குனிமாசம். 8-ஆம் நாள் திருஞான சம்பந்தர் அங்கம் பூம்பாவையாக்கிய ஐதிகம் நடந்தேறி வருகிறது, அறுபத்து மூவர் உற்சவம் விசேஷம். 3-ம் நாள் அதிகாரநந்தி சேவை காலை 6 மணிக்கு, 5-ம் நாள் விருஷமோற்சவம் 9-ம் நாள் பிட்சாடனர் திருக்கோலம், இந்த உற்சவங்கள் விசேஷம். கோபுரம் புதிதாய்க் கட்டப்பட்டது சுமார் 40 வருடங்களுக்குமுன்-125 அடி உயரம். திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. மயிலாப்பூரிலுள்ள மற்ற சிவாலயங்கள் :—
(1) வெள்ளீஸ்வரர் கோயில் தெற்கு மாடவீதியி லுள்ளது. சுக்கிரன் பூசித்தது. பிரம்மோற்சவம் சித்திரை மாசம் ஸ்வாமி-வெள்ளீஸ்வரர், தேவி-காமாட்சியம்மன். (2) மல்லிகேஸ்வரர் கோயில், தேவி-மரகதவல்லி. (3) விருபாட்சீஸ்வரர் கோயில், தேவி-விசாலாட்சி. (4) காரணீஸ்வரர் கோயில். (5) பிரம்மபுரீஸ்வரர் கோயில். (6) தீர்த்தகபர்லீஸ்வரா கோயில், அகஸ்தியர்பூசித்த ஸ்தலம். என்பர். (7) ராமலிங்கேஸ்வரர் கோயில் ஸ்ரீ ராமர் பூசித்த ஸ்தலம். (8) மீளேச்சுரர் கோயில் வேதம் பூசித்த ஸ்தலம். (9) வாலீஸ்வரர் கோயில்; வாலி பூசித்தது.

மயின்புரி பிரிவு :—ஐக்கிய மாகாணம், இங்குள்ள சிவாலயங்கள்: (1) பொங்கோவன் கிராமம், சிவாலயம். ஸ்வாமி-மஹாதேவர். (2) ஷிகோபாத் கிராமம், மஹாதேவர் ஆலயம். (3) நாகலா பிரந்தாபன் கிராமம், சிவாலயம்; ஸ்வாமி-பஞ்சமுகி மஹாதேவ்.

மயேந்திரப் பள்ளி :—(திரு) மஹேந்திரப் பாளையம் கோவிலடிப்பாளையம் எனவும் வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி, ஆலகுகாரன் சாவடி ஸ்டேஷனிலிருந்து 7 மைல்; சந்திரன், சூரியன், பிரம்மா, இந்திரன் பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமி - திருமேனியழகர், தேவி - முல்லை நகை வடிவாம்பிகை மந்திரப் புஷ்கரணி தீர்த்தம். இங்கு ஒரு எலி சிவபெருமான் அருளைப்பெற்று சக்கிரவர்த்தியாய் பிறந்தது என்பது ஸ்தலபுராணம். திருஞானசம்பந்தர் பாடல்பெற்றது.

மரக்காணம் :—சென்னை ராஜதானி, அச் சிறுபாக்கம் ஸ்டேஷனுக்கு 12 மைல். இதன் பழைய பெயர் சோபட்டினம் (சோ = அரசன்.) சிவாலயம். ஸ்வாமி - பூமேஸ்வரர், தேவி-கிரியம்பாள். அமுத தீரத்தம்,—ரதி தேவி ஆதிசேஷன் பூசித்த ஸ்தலம்.

மருகல் :—(திரு) சென்னை ராஜதானி, நன்னிலத்திலிறங்கி 7½ மைல் போக வேண்டும். சிவாலயம், ஸ்வாமி-மாணிக்க வண்ணேஸ்வரர், தேவி-வண்டுவார்குழலம்மை. சிவகங்கை தீர்த்தம், வன்னி விருட்சம். திருஞானசம்பந்தர் விஷம் தீண்டி யிறந்த செட்டிப் பிள்ளையைப் பிழைப்பித்த க்ஷேத்திரம். பிரம்மோற்சவம் சித்திரை மாசம். திருஞானசம்பந்தர் அப்பர் பாடல் பெற்றது. மார்க்கண்டர் பூசித்த க்ஷேத்திரம்.

மருதமலை :—சென்னை ராஜதானி, கோயமுத்தூர் ஜில்லா, சிவாலயம். ஸ்வாமி-செல்வபதீஸ்வரர், தேவி-பராசக்தி.

மருதாந்தநல்லூர் :—தென் இந்தியா, சிவாலயம்.

மருதூர் :—திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி-கூடலேஸ்வரர், தேவி - உமாதேவி, தாம்ரபர்ணி தீர்த்தம்; உதகநதி சித்ராநதி கூடுமிடம்; ஆகவே ஸ்வாமிக்கு கூடலழகர் என்று பெயர்.

மல்ஹார்காட் :—பூனா ஜில்லா, பம்பாய் ராஜதானி, மஹாதேவர் கோயிலும், கண்டோபா கோயிலும், பாழாய்க் கிடக்கின்றன.

மலையடிப்பட்டி :—புதுக்கோட்டை சமஸ்தானம்,—சென்னை ராஜதானி; சிவாலயம், குன்றில் குடையப்பட்டிருக்கிறது. கீரனூருக்கு 8 மைல் கிழக்கு. கர்ப்பக்கிரஹம் தாழ்வாரத்தின் பின்புறமாக வாயிலைப் பார்த்தபடி அமைக்கப்படவில்லை; தாழ்வாரத்தின் பாகமே கர்ப்பக்கிரஹமாக மாற்றப்பட்டிருக்கிறது. ஸ்வாமி சந்நிதி கிழக்கு புறமாக இருக்கவேண்டுமென்று இவ்வண்ணம் செதுக்கப்படடது போலும். லிங்கம் வட்ட வடிவமாயது. எதிரில் நந்தி செதுக்கப்பட்டிருக்கிறது. பின்புறச் சுவர் மக்கம் சப்தமாத்ருக்களின் உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன (அர்த்த சிலை உருவங்களாக). இங்குள்ள ஒரு தூணில் சண்டேஸ்வரர் விக்ரஹம் இருக்கிறது; இது பழமையான சண்டேஸ்வர மூர்த்தியாம். நடுத் தூண்களில் கல்வெட்டுகள் இருக்கின்றன. கோயில் பல்லவ நந்திவர்மனது 16-ஆம் ஆண்டில் வெட்டப்பட்டது; ஆகவே, கி. பி. 800-ஐ ஒத்தியதாம். கோயில் 22 அடி × 18 அடி 4 அங்குளம் × 9 அடி. கோயிலை வெட்டுவித்தவன் பெயர் விடேல் விடுகு முத்தரையன் என்பதாம்.

மழபாடி:—(திரு) சென்னை ராஜதானி, திருவையாறுக்கு $2\frac{1}{2}$ மைல், பெரும்புலியூருக்கு 2 மைல் வட மேற்கு. மழவர்பாடி = மழவர்கள் பாசறை. நந்தி தேவருக்குக் கலியாணமான ஸ்தலம். உத்தரவாஹினி; ஸ்வாமி-வஜ்ரஸ்தம்பேஸ்வரர், தேவி-அழகாம்பிகை, கொள்ளிடநதி, சிவகங்கை, லட்சுமி தீர்த்தம் - இவையிரண்டும் தற்காலம் கொள்ளிடத்தில் மூழ்கிப் போயிருப்பதாகச் சொல்லப்படுகிறது. தேவேந்திரன் பூஜித்த ஸ்தலம். பிரம்மோற்சவம் மாசிமாசம். கோபுரம் 7 நிலை யுடையது. மிகவும்

பழமையான ஆலயம், கல்வெட்டுகள் நிறைந்திருக்கிறது. மூவர் பாடல் பெற்ற க்ஷேத்திரம்.

மழலாடி :—உடையார் பாளையம் தாலுகா, திருச்சிராப் பள்ளி ஜில்லா, சென்னை ராஜ்தானி, வைத்யநாதர் கோயில்.

மழிசை :—திருமழிசை என வழங்கப்படுகிறது. (பிர பல விஷ்ணு க்ஷேத்திரம். திரு + மயி + சேய், திருமழிசை யாயதென்பர்.) பூவிருந்தவல்லிக்கு 3 மைல். செங்கல் பட்டு ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். தற்காலம் ஸ்வாமி பெயர் ஓட்டாண்டி என்பர். தேவி-சீதள நாயகி, பழைய கல்வெட்டுகளில் ஸ்வாமி பெயர் அகஸ்தியேஸ்வரர் என்றிருக்கிறது. அருகிலிருக்கும் வைணவக் கோயிலார் தற்காலப் பெயரைக் கொடுத்தனர் என்பர். கோயில் பழைய சோழ கட்டடம். 1055-ம் ஆண்டில் ஆண்ட முதல் குலோத்துங்க சோழன் காலத்திய கல்வெட்டு ஒன்று உளது. பண்டிட் நடேச சாஸ்திரியார் இக் கோயில் 11-ம் நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்க வேண்டுமென்று கூறுகிறார். கர்ப்பக்கிரஹம் கஜப்பிருஷ்ட ஆகிருதி : காஞ்சி ஜ்வரஹரேஸ்வரர் கோயிலைப் போன்றது.

மளவள்ளி :—மைசூர் ராஜ்யம், ஷிகார்பூர் தாலுகா, ஷிமோகா ஜில்லா, சிவாலயம். ஸ்வாமி பெயர் கள்ளேஸ் வரர், பூர்வகாலத்தில் ஸ்வாமி பெயர் மள்ளபள்ளிதேவர் என்றிருந்தது. இங்கு ராமலிங்க ஸ்வாமி கோயில் என்று மற்றொரு சிவாலயமுண்டு. மற்றும் அமிர்தேஸ்வர ஸ்வாமி கோயில்-கிலமாயிருக்கிறது.

மறவ மதுரை :—புதுக்கோட்டை சமஸ்தானம், திரு மெய்யம் தாலுகா, சிவாலயம்.

மறியூர் :—சென்னை ராஜதானி, ராம்நாட் ஜில்லா, ராம நாத புரத்திற்கு 26 மைல். மிகவும் பழைய சிவாலயம். ஸ்வாமி-பூவேந்திநாதர்; கோயில் மணலால் மூடப்பட்டிருந் ததை ராயர் அப்பாஜி காலத்தில் வெளிப்படுத்தினர். அச் சமயம் ஸ்வாமியின்மீது சாற்றியிருந்த புஷ்பங்கள் வாடாம லிருந்தபடியால், ஸ்வாமிக்கு அப்பெயர் வந்ததென்பர்.

மன்னர்குடி :—மேற்படி தாலுகா, தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, ஜெயங்கொண்ட நாதர் கோயில், ஸ்வாமி-ஜெயங்கொண்ட சோளீஸ்வரர்; ராஜராஜனால் கட்டப்பட்டதாம். (1019-1053) இக் கோயிலில் காய்ச்சப் படும் பால் எப்பொழுதும் கெடுவதில்லை என்பது ஐதிகம். இங்கு அண்ணாமலைநாதர் கோயில், கைலாசநாதர் கோயில் என்னும் இரண்டு சிவாலயங்களும் உள. இவைகளிலும் பழைய கல்வெட்டுகள் உள.

மன்னர் கோயில் :—இது தற்காலம் விஷ்ணு ஆலயமா யிருக்கிறது. பூர்வத்தில் சிவாலயமாயிருந்த தென்பதற்கு பல குறிகள் உள. இங்குள்ள 5 நிலை கோபுரத்தில், கணேசர், நடராஜர், விருஷபவாஹனரூடர் முதலிய சில்பங் கள் உள. இங்குள்ள கோயில் துவாரபாலர்கள் கைகள் தறிக்கப்பட்டிருக்கின்றன; சிவ சின்னங்கள் இருந்ததை வெட்டியதாக எண்ண இடமுண்டு. கோயிலிலுள்ள வைஷ்ணவ உருவங்களெல்லாம் சித்திரங்களே. விமானத் தின் தென்புறம் தட்சிணமூர்த்தி யிருக்கிறார். குலசேக ராழ்வார் காலத்தில் இது வைஷ்ண ஆலயமாக மாற்றப் பட்ட தென்பர்.

மனப்படைவீடு :—சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா, சிவாலயம். தென் காசி கோயிலைப் போன்ற கர்ப்பக்கிரஹ முடையது.

மஹாகோடே :—வட இந்தியா, சிவாலயம். சுயம்பு லிங்கம்; ஸ்வாமி பெயர் மஹேசுத்கடா.

மஹாதானபுரம் :—குளித்தலை தாலுகா, திருச்சிராப் பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி; சோளீஸ்வரர்கோயில்-ஸ்வாமி-மதுராந்தக சோளீஸ்வரர்; கல்வெட்டுகளில் ஸ்வாமி பெயர் ஸ்ரீ மதுராந்தக ஈஸ்வரர் என்றிருக்கிறது.

மஹாதேவ மலை :—வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி; சிவாலயம் சிறியது; சிறு குன்றின்மீதுள்ளது. திருக்கழுகுன்றத்து கழுகுகள் தினம் இங்கு வருவதாக ஐதிகம்.

மஹாதேவ பெட்டா :—மைசூர் ராஜ்யம் (கன்னடத்தில் பெட்டா என்றால் மலை) மைசூருக்கு 83 மைல். கோயில் காட்டின் மத்தியிலுள்ளது. ஸ்வாமி பெயர் மஹாதேஸ்வர். லிங்கத்திற்கு மைசூர் மஹாராஜா பொற் கவசம் அர்ப் பணம் செய்திருக்கிறார்.

மஹாநந்தி :—சென்னை ராஜதானி, நந்தியால் ஸ்டேஷ னுக்கு 10 மைல். குண்டக்கல் பெஜ்வாடா ரெயில் பாதையில் காஜுலபள்ளி ஸ்டேஷனுக்கு 3 மைல். நல்ல மலைத்தொடரின் அடியில், காட்டின் மத்தியில் சிவாலயம் உளது. கோயில் குளத்தில் மலையூற்று நீர் பாய்கிறது. ஸ்வாமி-மஹா நந்தீஸ்வரர்-சிவராத்திரி விசேஷம்.

மஹாபலிபுரம் :—இதன் பூர்வீகப் பெயர் மாமல்லபுரம். சென்னை ராஜதானி, செங்கல்பட்டு ஜில்லா, திருக்கழுக் குன்றத்திலிருந்து 2½ மைல். சென்னையிலிருந்து 32 மைல். மஹா மல்லன் எனும் பல்லவ அரசன் ஆண்ட இடமாத லால் இப் பெயர் வந்திருக்கலாம். சிவாலயம் கடற்கரைக் கோயில் (690-710) இரண்டாம் நரசிம்ம வர்மன் அல்லது ராஜசிம்மனால் ஏழாம் நூற்றாண்டில் இக் கோயில் கட்டப் பட்டது. இதற்கு க்ஷத்திரிய பல்லவேஸ்வரம் என்று பெயர். கோயிலில் தற்காலம் பூஜையில்லை. பெரிய லிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது; இதற்கு க்ஷத்திரிய சிம்ம பல்லவேஸ்வரர் என்று பெயர். துவஜஸ்தம்பம் சமுத்தி ரத்திலிருக்கிறது, 11 அடி உயரம். அலைகள் கோயிலுக்குள் இராக்காலங்களில் மோதுகின்றன. இக் கோயில் 8-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதென தூப்ரெயில் துரை எண்ணுகிறார். இக் கோயில் கிழக்கு பார்த்தது. இதைப் பார்த்துதான் தென் இந்தியாவிலுள்ள சிவாலயங்கள் கட்டப்பட்டன என்று சிலர் கூறுகின்றனர். லிங்கம் 17 பட்டைகள் உடையது. கறுப்புக் கல்லாலாயது; சுற் றளவு 6 அடி 9 அங்குலம். லிங்கத்தின் பின்புறம் சோமாஸ்கந்த மூர்த்தி செதுக்கப்பட்டிருக்கிறது. கோயி லுக்குப் பின்புறம் ஒரு சிறு சிவாலயமுண்டு. இதற்கு ராஜசிம்ம பல்லேஸ்வரர் கோயில் என்று பெயர். இதிலும் தற்காலம் பூஜையில்லை. இங்கும் சோமாஸ்கந்த மூர்த்தி செதுக்கப்பட்டிருக்கிறது. காலம் 690-710. இங்குள்ள

மற்ற சிவாலயங்கள்: (1) தர்மராஜன் ரதம். இது ரதமல்ல, சிவாலயமாகவே வெட்டப்பட்டதாம். 28 அடி சதுரம், 35 அடி உயரம். ஒரே கல்லில் வெட்டப்பட்டது. பௌத்த விஹாரங்களைப்போல் நிர்மிக்கப்பட்ட தென பெர்கூசன் கூறுகிறார். இது 4 மாடிகள் உடையது, கி. பி. 670-700 ஆண்டில் ஆண்ட ராஜ சிம்மன் எனும் பல்லவ அரசனல் வெட்டப்பட்டது. நரசிம்மவர்மன், நரசிம்மன், நரசிம்ம விஷ்ணு, காலகாலன், அத்யாந்த காமன், ஸ்ரீபரன், ஸ்ரீநிதி, அதிரணசண்டன் முதலிய பிருதுப் பெயர்களுடையவன். இக் கோயிலின் மூன்றும் மாடியில் கிழக்கில், இக் கோயிலின் பெயர் அத்யாந்த பல்லவேஸ்வரம் என்று கூறப்பட்டிருக்கிறது, அதாவது அத்யாந்த காமன் என்பவனல் கட்டப்பட்டதாம். பரம சிவத்தின் உருவம் சோமாஸ்கந்த மூர்த்தியாக நடுவில் இருக்கிறது; பக்கலில் பிரம்ம விஷ்ணுவின் உருவங்களும் இருக்கின்றன. கோயிலில் பூஜையில்லை. இங்கு ஆதியில் சந்தன மரத்தாலாகிய திராவிகள் இருந்தன. (3) அர்ஜுனன் ரதம்-இதுவும் சிவாலயமாக ஆரம்பிக்கப் பட்டு முற்றுப் படவில்லை. (4) தற்காலம் கணேசர் ரதம் என்று அழைக்கப்படும் கட்டடமும் ஆதியில் சிவாலயமாய்க் கட்டப்பட்டதேயாம். இக் கோயிலின் கல்வெட்டில் இது பல்லவ அரசனகிய அத்யாந்தகாமரணஜெயனல் சிவாலய மாகக் கடடப்பட்டதென அறிகிறோம். 3 மாடிகளை யுடையது; உச்சியில் திரிசூலங்கள் செதுக்கப்பட்டிருக் கின்றன. 670-700 கி. பி. இதிலிருந்த சிவலிங்கம் சீமைக்குக் கொணடுபோகப்பட்டது. பிறகு காலியா யிருந்த கோயிலில் விக்னேஸ்வரரை எழுந்தருளப்பண்ணி யிருக்கின்றனர். இங்குள்ள குகைக் கோயில்களும் ரதங் களும் 625-650-ல் ஆண்ட முதலாம் நரசிம்ம வர்மனல் ஆரம்பிக்கப்பட்டு 675-ல் ஆண்ட பரமேஸ்வர வர்மனல் முடிக்கப்பட்டனவென்று தூப்ரெயில் துரை எண்ணுகிறார். (5) இவ்வூரின் வடக்கில் முகுந்த நயனர் கோயில், சிவா லயம்; ராஜ சிம்மன் மகன் மஹேந்திரனல் கட்டப் பட்டது. லிங்கத்தின் பின்புறம் சோமாஸ்கந்த மூர்த்தி செதுக்கப்பட்டிருக்கிறது. சுமார் 8-ஆம் நூற் றாண்டில் நிர்மாணிக்கப்பட்டது. கிராம சத்திரத்திற்கு ½

மைல் தூரம். (6) மலைக்கு 50 கஜ தூரத்தில் பாழடைந்த ஒரு சிவாலய மிருக்கிறது. 24 × 15 × 12 அடி விஸ்தீரணம் கருப்புக்கல் சிவலிங்கம். (7) கோபிகள் தயிர் கடையும் பாத்திரம் எனும் கல்லின் அருகில் ஒரு சிறு சிவாலய மிருக்கிறது. (8) 3 குகைக்கோயில்கள் மத்தியில் பரமசிவத் தின் உருவம் செதுக்கப்பட்டிருக்கிறது- (9) ஆழாக்கு எண்ணெய்க் கோயில், என்பதுவும் சிவாலயமாம். இதில் சிவலிங்கம் தற்காலமில்லை. இதன் விஸ்தீரணம் 22 × 16 × 16 அடி. (10) இதன் கீழ் ஒரு குகைக் கோயில் உளது. 33 × 13 × 17 அடி விஸ்தீரணம்; இங்கு சோமாஸ்கந்த மூர்த்தி உருவம் உளது. இதன் எதிரில் லிங்கம் வைப் பதற்காக இடம் வெட்டப்பட்டிருக்கிறது. இது தற்காலம் மஹிஷாசுர மண்டபம் என வழங்கப்படுகிறது. (11) யமபுர மண்டபம் என்று அழைக்கப்படும் கட்டடமும் சிவாலயமே யாம். இதில் பிரதான இடத்தில் சோமாஸ்கந்தர் உருவம் உளது. இங்குள்ள வாஹன மண்டபமும் திரிமூர்த்தி மண்டபமும் ஆதியில் நரசிம்ம பல்லவனால் (625-650) சிவா லயங்களாக வெட்டப்பட்டவைகள். இவைகளில் சிவலிங் கங்கள் இருந்தன. வாஹன மண்டபம் தற்காலம் விஷ்ணு ஆலயமாக மாற்றப்பட்டிருக்கிறது. இங்கு பவழக்கார சத்திரம் என்று ஒரு சத்திரமுண்டு.

மஹாபலேஷ்வர் :—கோயில் வால்டேர் ஸ்டேஷனுக்கு 20 மைல். விசாகபட்டணம் ஜில்லா, சென்னை ராஜதானி; ஸ்வாமி-மஹாபலேஷ்வர்; லிங்கம் குன்றில் குகைக்குள் இருக்கிறது. லிங்கத்தினின்றும் ஓர் அருவி பிறப்பதாக ஐதிகம்.

மஹாலிங்க ஸ்தலம் :—வட இந்தியா சிவாலயம். சுயம்பு லிங்கம். ஸ்வாமி பெயர் ஈஸ்வரர்.

மஹாஸ்மல் :—வட இந்தியா, ரெயில் ஸ்டேஷன். ஸ்வாமி-மஹாதேவர், தேவி பார்வதி, கோயில் சாத்புரி குன்றின் மீதுள்ளது. கோயிலுக்கருகில் உஷ்ணநீர் ஊற்றுகள் இருக்கின்றன.

மஹேந்திர கிரி :—கிழகு மலைத் தொடரிலுள்ளது. வால்டேரிலிருந்து கல்கத்தாவுக்குப் போகும் வழியி

லுள்ளது. 5000 அடி உயரமுள்ள மலை; மூன்று சிகரங்க ளுடையது. இங்குள்ள சிவாலயம் குந்திதேவியால் கட்டப்பட்டது என்பது ஐதிகம். ஆரிய சில்பம். சதுரக் கர்ப்பக்கிரஹம் 11 × 11 அடி. விமானம் 30 அடி உயரம். கோயில் மேற்கு பார்த்தது. தெற்கு கோகர்ணேஸ்வரர் கோயில் என்று பெயர். மற்றொரு கோயில் பீமன் கோயில் என வழங்கப்படுகிறது. பீமனால் கட்டப்பட்ட தென்பது ஐதிகம்; 15 அடி சதுரம், 25 அடி உயரம் ஒரே கற்பாறையால் ஆயது; வாயிற்படி மிகவும் சிறியது. உள்ளே 5 அடி சதுரத்தில் லிங்கம் இருக்கிறது. சிவராத் திரியில் மட்டும் பூஜை. ஸ்வாமி பெயர் தற்காலம் கோகர் ணேஸ்வரர். இன்னொரு கோயில் யுதிஷ்டிரரால் கட்டப்பட்ட தென்பது ஐதிகம்; கோயில் 17½ அடி சதுரம். இதன் பேரில் 15 நிலைகள் கோபுரம்போல் அமைக்கப்பட்டிருக் கின்றன. உயரம் 30 அடி. இம் மூன்று கோயில்களின் சிகரங்களும் தாமரையைப்போல் அமைக்கப்பட்டிருக் கின்றன; கோவிலுக்கெதிரில் ஒரு மண்டபம் உண்டு. 20 × 30 அடி; முடிக்கப்படவில்லை. ஸ்வாமி பெயர் மஹா வ்ரதர் (மஹாவரதர்?)

மஹேஸ்வர கல்லூர் :—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி-விக்ரமசோழீஸ்வர முடையார்.

மஹீபாலன்பட்டி :—பூர்வ காலத்தில் இதன் பெயர் பூங்குன்றம் என்பதாம். சென்னை ராஜதானி பாண்டி மண்டலத்திலுள்ளது. ராமநாதபுரம் திருப்பத்தூர்த் தாலுகா, சிவாலயம். ஸ்வாமி பெயர் கல்வெட்டுகளில் குல சேகர ஈஸ்வரமுடைய நாயனார் என்றிருக்கிறது.

மாக்கோட்டை :—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜ தானி, மன்னார் குடிக்கு 7 மைல். சிவாலயம் - கீர்த்தி சேகரன் என்பவனால் கட்டப்பட்டது. கோயில் கொஞ்சம் சிலமாயிருக்கிறது.

மாகலா :—பல்லாரி ஜில்லா, சென்னை ராஜதானி தற்காலம் வேணுகோபாலஸ்வாமி கோயிலாயிருப்பது

பழைய காலத்தில் 3 ஆலயங்கள் ஒன்றாய்ச் சேர்ந்த சாளுக்கிய கட்டடம்; அதில் ஒன்று பூர்வத்தில் சிவாலய மாயிருந்தது.

மாகள :—பல்லாரி ஜில்லா, சென்னை ராஜதானி, பீமேஷ்வர் கோயில்.

மாகாளம் :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, சிவாலயம். ஸ்வாமி - மாகாளேஸ்வரர், மங்களநாயகி, காளி தீர்த்தம், காளி பூசித்தது; வைப்புஸ்தலம்.

மாகறல் :—(திரு) செங்கல்பட்டு ஜில்லா, சென்னை ராஜதானி, காஞ்சீபுரத்திற்கு 10 மைல் தெற்கு. தேவேந்திரன் பூசித்த ஸ்தலம். ஸ்வாமி-அடைக்கலநாதேஸ்வரர், மங்கல மகரந்த ஈஸ்வரர், தேவி-புவனநாயகி, நவ்வி தீர்த்தம், அடைக்கல தீர்த்தம்; கர்ப்பக்கிரஹம் கஜப்பிருஷ்ட ஆகிருதி. இந்திரனுக்காக நண்டுவளையிலிருந்து சிவ பெருமான் உற்பத்தியான ஸ்தலம். உடும்பு தழுவிக் கொண்டிருப்பதுபோல் ஸ்வாமியின்மீது காணப்படுகிறது. திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது. இங்கு திருமாலீஸ்வரர் கோயில் என்னும் மற்றொரு சிவாலய முளது. கல்வெட்டுகளில் ஸ்வாமி பெயர் அகஸ்தீஸ்வரமுடையார் என்றிருக்கிறது.

மாங்காடு :—சென்னை ராஜதானி புதுக்கோட்டையிலிருந்து 22 மைல் சூதங்கேஸ்வரர் கோயில் பழைய கோயில் மாணிக்கவாசக ஸ்வாமிகளால் கட்டப்பட்டதென்பர். புதுக்கோட்டை சமஸ்தானத்தாரால் புதுப்பிக்கப்பட்டது. சூதவனம் மாங்காடு.

மாங்கிர் பிரிவு :—வங்காளம், வட இந்தியா, இங்குள்ள சிவாலயங்கள் (1) மாங்கீர் பட்டணம், புதிய சிவாலயம் சுமார் 110 வருடங்களுக்குமுன் கட்டப்பட்டது. (2) சிமேரியா கிராமம் :— காளேஸ்வர் நாத் சிவாலயம் இதற்குப் பூஜைசெய்பவர்கள் குயவர் ஜாதியார், குயவர் சக்கரத்தின்கீழ் சிவலிங்கம் அகப்பட்டதாம். (3) சிங்கிரிக்

சிறுமலை இது ரிஸ்யஸ்ரிங்கர் வசித்த மலை என்பர். சிவாலயம் 15 அடி சதுரம்; ஸ்வாமி-மகாதேவர்; தற்காலக்கோயில் சுமார் 58 வருடங்களுக்குமுன் கட்டப்பட்டது. இங்கு பழைய கோயில் ஒன்று இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

மாடத்துக்கோயில்:— புதுக்கோட்டை சமஸ்தானம், நாங்குபட்டி யருகிலிருக்கிறது. பழைய சிவாலயம்-இங்கு சப்தரிஷிகளின் சிலைகள் உள. இங்குள்ள கல்வெட்டுகளால் இக்கோயில் சேர கடம்பராயர் என்பவரால் கட்டப்பட்டதாக அறிகிறோம்.

மாடவிளாகம்:— சென்னை ராஜதானி, செங்கல்பட்டு ஜில்லா; மஹாபலிபுரத்திலிருந்து 5 மைல், திருக்காலீஸ்வரர் கோயில்.

மாடி:—மைசூர் ராஜ்யம்; சிவாலயம்; ஸ்வாமி-ராமேஸ்வரர்; கெம்பகௌடருடைய குலதெய்வம், இங்குள்ள உற்சவ மூர்த்திக்கு இரண்டு தேவிகள், பார்வதி கங்கை. இதற்கு 3½ மைல் தூரத்தில் சோமேஸ்வரர் கோயில்-1712வது மும்மடி கெம்பவீரகௌடரால் கட்டப்பட்ட சிவாலயம்· கோயில் வடக்கு பார்த்தது.

மாணிக்கநகர்:—குல்பர்கா ரெயில் ஸ்டேஷனிலிருந்து 33 மைல்; மத்ய இந்தியா, சிவாலயம். ஸ்வாமி-சந்திரபரமேஸ்வரர், சங்கமேஸ்வரர், தேவி-பார்வதி.

மாணிகுழீ:—(திரு) திருமாண்டகுழி என்றும் பெயர்; தென் ஆற்காடு ஜில்லா, கூடலூர் தாலுகா, சென்னை ராஜதானி; கூடலூர் ஸ்டேஷனுக்கு 3½ மைல் மேற்கு; வாமனபுரீஸ்வரர் கோயில்; ஸ்வாமி-மாணிக்கமேனிவரதேஸ்வரர், தேவி- மாணிக்கவல்லியம்மை, கொன்றை விருட்சம், மாணிக்க தீர்த்தம், பெண்ணைநதி; விஷ்ணு மாணிவடிவாக (வாமனவதாரமாக) பூஜித்த ஸ்தலம்; ஸ்வாமி வணிகருக்கு உதவிபுரிந்தபடியால் உதவிநாயகா என்றும் பெயர். கல்வெட்டுகளில் திருமாணிக்குழியாளுடையார் என்று ஸ்வாமி பெயர் இருக்கிறது. கோயிலில் பல கலவெட்டுகள் உள.

தற்காலக்கோயில் 7-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டதென எண்ண இடமுண்டு. திருஞானசம்பந்தர் பாடல்பெற்றது.

மாத்தூர்:—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, திட்டைக்கு சமீபமுளது, சிவாலயம்; ஸ்வாமி ராமநாதேஸ்வரர், தேவி-திரிபுரசுந்தரி, தேவிக்கு மஹிஷாசுரமர்த்தனி என்றும் பெயர் உண்டு. வாயுதீர்த்தம்; வைப்பு ஸ்தலம்.

மாதங்கன்பள்ளி:— பொன்னேரி தாலுகா சத்யவேடு கிராமத்திலுள்ளது. சென்னை ராஜதானி. இங்கு சிவாலயம் ஒரு சமாதியின்மீது கட்டப்பட்டதென எண்ணப்படுகிறது. கோயிலில் அபராஜிதன் எனும் கங்கபல்லவ அரசனது காலத்திய கல்வெட்டு ஒன்றுளது; இவர் 7-ஆம் நூற்றாண்டில் ஆண்டவர்; ஆகவே இக்கோயில் மிகவும் பழமையானதாம். மாதங்கன்பள்ளி என்பது மாதங்க ரிஷியின் சமாதியாயிருக்கலாம் என்று சிலர் நினைக்கின்றனர். பள்ளி என்பது சாதாரணமாய் பூர்வகாலத்தில் ஜைன ஆலயத்தைக் குறிக்கும்; ஆகவே இக்கோயில் பூர்வம் ஜைன ஆலயமாயிருந்ததென சிலர் கூறுகின்றனர்.

மாதர்ப்பாக்கம்:—தென் இந்தியா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி-விஸ்வேஸ்வரர், தேவி-விசாலாட்சி; கும்ப தீர்த்தம்.

மாத்தூர்:—திருப்பத்தூர் தாலுகா, ராமநாதபுரம் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி - அயோநிதீஸ்வரர், தேவி-அமிர்தவல்லி.

மாதேஸ்வர மலை:—மஹாதேஸ்வரகிரி என்றும் வழங்கப்படுகிறது. கொள்ளேகால் தாலுகா, கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். சிவராத்திரி விசேஷம்.

மாந்தாதா;—வட இந்தியா, ஓங்காரேஷ்வர் கோயில், லிங்கம் ஜலத்தின் மத்தியிலிருக்கிறது; தேவிகோயில் பின்பக்கமுள்ளது. மாந்தாதா தீவின் மேற்கில் ரிம்புக்தேஷ்வர் கோயில் உளது. இங்கு ஒருகைதான்யம் ஸ்வாமிக்கு

அர்ப்பணம் செய்தால் கடன்காரர்கள் தங்கள் கடன்களி னின்றும் விடுபடுவதாக ஐதிகம்.

மாந்தாதா :—மத்ய மாகாணம், சிவாலயம், மலைக் கோயில், இதற்கு நான்கு புறமும் வாயில்கள் உள. நர் மதையின் மத்தியிலுள்ளது. மாந்தாதேஸ்வரர்; உமா தேவி.

மாந்துறை :—(திரு) திருச்சிராப்பள்ளிக்கு 13 மைல். வடகிழக்கு. சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி - ஆம்ரவனேஸ்வரர், தேவி-அழகாலுயர்ந்த அம்மை, மா விருட்சம், மஹா தீர்த்தம், காயத்ரி தீர்த்தம்; கண்வர் பூசித்த ஸ்தலம். திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது.

மாமண்டூர் :—செங்கல்பட்டு ஜில்லா, சென்னை ராஜ தானி, காஞ்சீபுரத்திற்கு 6 மைல், குகைக்கோயில், ஸ்வாமி-ருத்ரவாலீஸ்வரமுடைய தேவர்; மஹேந்திரவர்மன் என்னும் பல்லவ அரசனல் வெட்டப்பட்டது. இதற்கு இடது புறம் இருக்கும் மற்றொரு குகையிலும் சிவலிங்கம் இருக்கிறது. இது சுமார் 6-ம் நூற்றாண்டில் வெட்டப் பட்டது.

மால்புரம் :—திருமால்புரம் என அழைக்கப்படுகிறது. வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, பழைய சிவா லயம். கல்வெட்டுகள் உடையது.

மாஹூர் :—தென் இந்தியா, சிவாலயம். ஸ்வாமி-மஞ் சேஸ்வரர், தேவி-திரிபுரசுந்தரி; லிங்கம் புற்றிட மூள்ளது.

மாலே ஷிட்டி :—பாதாமி (வாதாபி) நகரத்திற்கு அருகி லுள்ளது. சிறு சிவாலயம். கோயில் மாபலிபுரக் கோயில்களைப் போன்றது. கர்ப்பக்கிரஹத்தின் முன்பு 4 பெரிய தூண்களையுடைய மண்டபம் உளது. சுமார் 7-ம் நூற்றாண்டில் கட்டப்பட்டதென்று பெர்கூசன் எண்ணுகிறார். கோயிலில் தற்காலம் பூஜையில்லை.

மாயச்சூர் :—திரு மாயச்சூர் என்று வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி, பேரளம்-சிவாலயம். ஸ்வாமி-திரு

மாயச்சூர் நாதர், தேவி-சௌந்தரநாயகி; அற்புத தீர்த்தம்; வருணன் பூசித்த ஸ்தலம்.

மாயவரம் :—தர்மபுர ஆதீனத்தின் மேற்பார்வையிலடங்கியது. பிரம்மபுரம், கௌரி மாயூரம், சூதவனம், மயூரம், மயிலாடுதுறை எனவும் பெயர்கள் உண்டு. தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன், சென்னை ராஜதானி. உமை மயிலாகப் பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமி-ஸ்ரீவதானீஸ்வரர், வள்ளலார், கௌரிமாயூர நாதர், மயூரநாதேஸ்வரர், தேவி-அபயாம்பிகை அல்லது அஞ்சனயகி; ரிஷப தீர்த்தம், காவிரி நதி; பிரம்மா, விஷ்ணு, இந்திரன், லட்சுமி, யானை, குதிரை, குரங்கு, நரி, பூனை, கழுகு, கிளி, பாம்பு, கழுதை பூசித்த ஸ்தலம். கோபுரம் 9 நிலைகளுடையது. இங்கு பஞ்சநதேஸ்வரர் கோயில் என ஒரு சிவாலயமுளது; இதில் 900 வருடங்களுக்கு முந்திய கல்வெட்டுகள் உள. வள்ளலார் கோயில் என்பது மற்றொரு சிவாலயம், வதானீசர், ஞானம்பிகை. இங்குள்ள நடராஜர் சபைக்கு ஆதிசபை என்று பெயர். ஸ்வாமியின் தாண்டவத்திற்கு கௌரிதாண்டவம் என்று பெயர். இங்கு ரிஷப தீர்த்தத்திற்கு தென்புறம் காசி விஸ்வநாதர் கோயில் உண்டு. லிங்கத்திற்கு பிரம்ம லிங்கம் என்று பெயர்-பிரம்மன் பூசித்தபடியால். நாத சன்மர், அறவிந்தை பிரதிஷ்டை செய்த லிங்கங்கள் உண்டு; அறவிந்தை பெண்பால் பிரதிஷ்டை செய்த லிங்கத்திற்கு இப்பொழுதும் புடைவை சாத்தப்படுகிறது. ஸ்வாமி அம்மன் சண்டேஸ்வரரை தரிசித்த பிறகு, மேற் சொன்ன இரண்டு லிங்கங்களையும் தரிசிக்க வேண்டுமாம். ஸ்தல விருட்சம் மாமரம்; பிரம்மோற்சவம் அற்பிசி மாசம். துலாஸ்நானம் விசேஷம். இதில் ஐந்தாம் நாள் அன்னபிஷேகமும், மயிலாக அம்மன் பூசிப்பதும், காவேரி கடைமுழுக்கும் விசேஷம். இங்கு மூன்று முக்கிய சத்திரங்கள் உண்டு; ஒன்று ஸ்டேஷனுக்கருகிலும், மற்றொன்று 2 மைல் தூரத்திலும் உளது. இங்கு மயிலம்மன் குளம் என்று ஒரு குளம் உண்டு. திருஞானசம்பந்தர் அப்பர் பாடல் பெற்றது. இங்கு முசாபர் பங்களா உண்டு.

மாரமங்கலம் :—ஸ்ரீ வைகுண்டம் தாலுகா, திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜதானி, சந்திரசேகரர் கோயில்.

மாரூர் :—மேற்கு காட்டிலுள்ள கார்கல் என்னும் ஊருக்கு 2 மைலில் சிவாலயமுளது.

மால்சிரஸ் :—பூனே ஜில்லா, பம்பாய் ராஜிதானி ; சிவாலயம். ஸ்வாமி-பூலேஷ்வர் மஹாதேவ், கோயிலுக்கு 8 மதில் சுவர்கள் இருக்கின்றன.

மாற்பேறு :—(திரு) பாலூர் ரெயில் ஸ்டேஷனுக்கு 3 மைல் தெற்கு. சென்னை ராஜதானி ; மஹாவிஷ்ணு தாமரைகளைக்கொண்டு சிவபெருமானைப் பூசிக்கும்பொழுது ஒரு புஷ்பம் குறைய, அதற்கு பதிலாக தன் கண்ணையே பறித்து பூசித்து சக்கரம் பெற்ற ஸ்தலம். சுவாமி - மால் வணங்கீசுரர்,மணிகண்டேசுரர்;தேவி-கருணாநாயகி, அஞ்ச னட்சியம்மை; அரி தீர்த்தம், விஷ்ணு தீர்த்தம்; திருஞான சம்பந்தர் அப்பர் பாடப்பெற்றது.

மாறன்பாடி :—தென் இந்தியா சிவாலயம்.

மாறளம் :—சென்னை ராஜதானி சிவாலயம். ஸ்வாமி குருநாதேஸ்வரர், தேவி ஆனந்தவல்லி; பாபநாச தீர்த்தம்.

மான்தோட்டம் :—லங்கைத் தீவிலுள்ளது, சிவாலயம்; வைப்பு ஸ்தலம்.

மான்கேஷ்வர் :—பூனே ஜில்லா, பம்பாய் ராஜதானி சிவாலயம்; பாழடைந்திருக்கிறது.

மான்பூர் பிரிவு :—வட இந்தியா, வங்காளம் இங்கு இரண்டு சிவாலயங்கள் உள. (1) பூத்பூர் கிராமம் : சிவாலயம் குன்றின்மீதுள்ளது, ஸ்வாமி-பூதேஷ்வர். (2) காட்ராஸ்கர் கிராமம் : சிவாலயம் மேற்கு பார்த்தது.

மானூர் :—திருநெல்வேலி ஜில்லா; சென்னை ராஜதானி சிவாலயம்; ஸ்வாமி அம்பலவாணர். கோயிலில் பாண்டிய அரசன் மாறன் சடையன் காலத்திய வட்டெழுத்து கல் வெட்டு இருக்கிறது. பழையகோயில்.

மானூர் :—சென்னை ராஜதானி; ரெயில் ஸ்டேஷன்; சென்னைக்கு 34 மைல் தூரம், சிவாலயம்; ஸ்வாமி-நந்தீஸ்வரர்; இரண்டு பெரிய உற்சவங்கள் நடைபெறுகின்றன.

மானூர் :—திருமாணூர் என்று வழங்கப்படுகிறது; திருச்சிராப்பள்ளி ஜில்லா, உடையார்பாளையம் தாலுகா, சென்னை ராஜதானி-கைலாசநாதஸ்வாமி கோயில்.

மானூர் :—சென்னை ராஜதானி திருவையாறுக்கு $2\frac{1}{4}$ மைல் தூரம், கொள்ளிடக்கரையிலுள்ளது. சிவாலயம்; கோபுரம் தெற்கே பார்த்தது. கிழக்கில் கோபுரமில்லை; சிறிய கோயில்.

மானேப்பள்ளி :—ஹிந்துபூர் தாலுகா, சென்னை ராஜதானி, சிவாலயம்.

மாரேஸ்வரம் :—வட இந்தியா, சுயம்புலிங்கம்; ஸ்வாமி ஓங்காரேஸ்வரர்.

மானமதுரை :—சென்னை ராஜதானி ராமநாதபுரம் ஜில்லா, சிவாலயம்; சிவகங்கைக்கு 11 மைல்; ஸ்வாமி-சோமநாதர், தேவி-உமாதேவி; வைகை நதி.

மிட்னபூர் பிரிவு :—வங்காள ராஜதானி, இங்குள்ள சிவாலயங்கள் (1) சந்திரசேனகிராமம், புதியகோயில்: ஸ்வாமி காமேஸ்வர சிவம், பஞ்சரத்ன கோயில் 1931வது கட்டப்பட்டது. (2) மல்லேஸ்வரர் கோயில், 60 அடி உயரம்; ராஜா கீர்த்தி சந்திரன் கட்டியது. சிவலிங்கம் $2\frac{1}{2}$ அடி ஆழமுள்ள ஒரு தொட்டியில் இருக்கிறது. சிலசமயங்களில் இத் தொட்டியில் ஜலம் நிரம்பிப்போகிறது. (3) டாண்டன் கிராமம், சிவாலயம் சுவாமி - ஸ்யாமளேஸ்வரர்; இங்குள்ள நந்தியின் முன்னங்கால்கள் வெட்டப்பட்டிருக்கின்றன. (4) எக்கா கிராமம், ஹாத்நகர்; சிவாலயம் ஒரிஸ்ஸா அரசனகிய முகுந்த தேவரால் கட்டப்பட்டது. (5) களேஷ்வர் சிவாலயம் சிவலிங்கம் கிணற்றில் இருக்கிறது. பூஜை தினம் நடக்கிறது (6) கார்பேடா கிராமம், காங்கேஸ்வரர் சிவாலயம்; வடக்கே பார்த்த கோயில் (7) கான்சர்பூர்-தண்டேஷ்வர் சிவாலயம் தேவி மஹாமாயா; கோயில் 75 அடி உயரம். இங்கு கார்கேஷ்வரர் ஆலயம் என்று ஒன்றுளது; 3 அடி சதுரம்; 8 அடி ஆழமுள்ள பள்ளத்தில் சிவலிங்கம் இருக்கிறது. (8). நாராயணகர் கிராமம் : தானேஷ்வர் சிவாலயம் (9) நாயா

பாகன்; இங்கு திரூல்மார் கிராமத்தில் ஒரு சிறு குன்றின் பேரில் காமேஸ்வர்நாத் கோயில்; இதில் ஆயிர முகலிங்கம் உளது. கோயில் ஒரிஸ்ஸா கட்டடம்.

மிண்டிகல் :—மைசூர் ராஜ்யம், கோலார் ஜில்லா; சிந்தாமணிக்கு அருகிலுள்ளது. சோமேஸ்வர் கோயில்.

மிராஜ்:—பம்பாய் ராஜதானி, ஜூனியர் சமஸ்தானம் மிராஜ் ரெயில் ஸ்டேஷன்; இங்குளள சிவாலயங்கள். (1) சுவாமி மார்க்கண்டேஸ்வரர், தேவி அன்னபூரணி, கோதாவரி தீர்த்தம், கோயில் ரெயில் ஸ்டேஷனிலிருந்து 3 மைல் (2) காவ்தர் கிராமம், மஹாதேவர் கோயில் பழையது. (3) மதோல் மஹாலிங்பூர்;மஹாலிங்கேஸ்வர் கோயில்.

மிருதகேஸ்வரம் :—வட இந்தியா, சுயம்புலிங்கம்; சுவாமி-சூட்சுமர்.

மிலாத்தூர் :—சென்னை ராஜதானி, ரெயில் ஸ்டேஷன்; திட்டைக்கு 4 மைல் கிழக்கு; சிவாலயம்; சுவாமி உன்னத புரீஸ்வரர் சோழக்கட்டடம் 150 + 120 அடி விஸ்தீரணம்; ஒரேபிராகாரமுடையது. பிரளயகாலத்தில் தண்ணீர் மட்டத்தின்பேரில் கோயில் இருந்தபடியால் உன்னதபுரி என்று பெயர்வந்ததென்பர்; கோயிலில் 1118-1135வரு ஆண்ட விக்ரமசோழன் காலத்திய கல்வெட்டொன்றுளது.

மிஸ்ரிக் :—வட இந்தியா, சீதாபூர் ரெயில் ஸ்டேஷனிலிருந்து 13 மைல், சிவாலயம்.

மீயச்சூர் :—(திரு) பேரளம் ஸ்டேஷனுக்கு 1 மைல் மேற்கு. சென்னை ராஜதானி, சூரியன் பரமசிவத்தையும் பார்வதி தேவியையும் யானைமீது ஆரோஹணிக்கச் செய்து பூசித்த ஸ்தலம். வருணன் பூசித்த ஸ்தலம். கோயில் விமானம் யானை உட்கார்ந்திருப்பதுபோல் இருக்கிறது. சுவாமி - முயற்சிநாதேஸ்வரர், தேவி - சௌந்தரநாயகி, வில்வ விருட்சம், தீர்த்தம் சூரிய புஷ்கரிணி, கங்காகூபம், திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

மியச்சூர் இளங்கோயில் :—இது மேற்கண்ட பெரிய கோயிலிலடங்கியது. வடக்குப் பிராகாரத்திலுள்ளது.

இங்கு காளி சிவபெருமானை பூசித்ததாக ஐதிகம். சுவாமி-சகலபுவனேஸ்வரர், தேவி-மேகலாம்பிகை. அமிர்த தீர்த்தம், அப்பர் பாடல் பெற்றது. பிரமன், சரஸ்வதி பூசித்த ஸ்தலம்.

மீரட் :—வட மேற்கு இந்தியா, ரெயில் ஸ்டேஷன். டெல்லியிலிருந்து 41 மைல், சிவாலயம். சுவாமி-மாஹேஸ்வரநாதர், தேவி-மாஹேஸ்வரி, பாண்டவர்களுடைய குலத்தோன்றித்தவர்களால் கோயில் கட்டப்பட்டதென்பது புராணம். இங்கு 5 தர்ம சத்திரங்கள் உண்டு.

முக்கூடல் :—சென்னை ராஜதானி, களருக்கருகிலுள்ளது. சிவாலயம, இங்கு ஆம்ராவதி, மணிமுக்தா நதி, காவேரி, மூன்றும் கூடுமிடமாம், எனவே முக்கூடல் என்றுயது. சுவாமி-மணியீசர்.

முக்கோண்டா :—கடப்பை ஜில்லா, சென்னை ராஜதானி; சிறு குன்று, மல்லிகார்ஜுன சுவாமி; ஆலயம் சிறியது.

முக்தேஷ்வர் கோயில் :—ஒரிஸ்ஸா பிரிவு, சிவாலயம். ஆரிய சில்பம்.

முக்தேஸ்வரம் :—சென்னை ராஜதானி; திருநெல்வேலி ஜில்லா, சுவாமி-ராமநாதேஸ்வரர்.

முகலிங்கம் :—பர்லாகிமிடி தாலுகா, கஞ்சம் ஜில்லா, சென்னை ராஜதானி; ஸ்ரீ கோகுலத்திற் கருகிலுள்ளது. சிவாலயம். சுவாமி-முகலிங்கேஸ்வரர்; சிவராத்திரி விசேஷம். (இங்கு குபேரனுக்கு ஒரு சிறு ஆலயம் உண்டு.) அருகாமையில் பீமேஸ்வரர் கோயில் என்று மற்றொரு சிவாலயமுளது.

முசிறி :—தென் இந்தியா, சிவாலயம், திருச்சிராப்பள்ளி ஜில்லா, குளித்தலை ஸ்டேஷனுக்கு 1 மைல். சுவாமி-முசிலேஸ்வரர், தேவி-காமாட்சியம்மன்.

முச்சம்பேட் :—கடப்பை ஜில்லா, சென்னை ராஜதானி; சிவாலயம். சுவாமி-சந்திரமௌளீஸ்வரர், தேவி-கர்ப்பூரவல்லி.

(தொடரும்)

சிவாலயங்கள்

இந்தியாவிலும் அப்பாலும்

ஐந்தாம் பாகம்

நாடகப்பேராசிரியர்

ப. சம்பந்த முதலியார், பி.ஏ., பி.எல்.,

அவர்களால் இயற்றப்பட்டது.

இந்த நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்ற நூல்கள் :—

லீலாவதி சுலோசனை, சாரங்கதரன், மகபதி, காதலர் கண்கள், நற்குல தெய்வம், மனோஹரன, ஊர்வசியின் சாபம், இடைச்சுவர இரு புறமும், என்ன நோதிடினும், விஜயரங்கம், கள்வர் தலைவன, தாயிற் பெண, மெய்க்காதல், பொன விலங்குகள், சிம்ஹளநாதன், விரும்பிய விதமே, சிறுதெதாண்டர், காலவரிஷி, ராஜபுதரவீரன், உண்மையான சகோதரன், சதி-சுலோசனை, புஷ்பவல்லி, கீதமஞ்சரி, உத்தம பத்தினி, அமலாதித்யன், சபாபதி முதற்பாகம், பொங்கல் பண்டிகை அல்லது சபாபதி இரண்டாம் பாகம், ஓர் ஒதறிகை அல்லது சபாபதி மூன்றாம் பாகம், சபாபதி நான்காம் பாகம், பேயல்ல பெண்மணியே, புதத அவதாரம், விச்சுவின் மனைவி, வேதாள உலகம், மனைவியால் மீண்டவன், சந்திரஹரி, சுபதிராஜனை, கொடையாளி காணன், சஹதேவன் சூழ்ச்சி, நோக்கத்தின் குறிப்பு, இரண்டு ஆதமாக்கள், சர்ஜன் ஜெனரல் விதித்த மருந்து, மாளவிகாகனிமித்ரம், வீபரீதமான முடிவு, சுல்தான்பேட்டை சப்-அஸிஸ்டெண்ட் மாஜிஸ்டிரேட், சகுந்தலை, காளப்பன்களளதனம, விகரமோர்வசி, முற்பகல் செயயின் பிற்பகல் விளையும், நாடகமேடை நினைவுகள — ஆறு பாகங்கள், நாடகத் தமிழ், யயாதி, பிராமமணனும் சூததிரனும், வாணீபுர வணிகன, இரண்டு நண்பாகள், சதருஜித், ஹரிச்சந்திரன், மாக்கண் டேயர், ரதனவளி, கண்டு பிடித்தல், கோனேரி அரசகுமாரன், சந்தை யிற் கூட்டம், வைகுண்ட வைதியர், தீட்சிதர் கதைகள், ஹாஸ்யக் கதைகள், குறமகள், கல்லதங்காள், சிறுகதைகள், கடிப்புக்கலையில் தேர்ச்சி பெறுவதெப்படி? ஹாஸ்ய வியாசங்கள், தமிழ் பேசும் படக் காகி, விடுதிப் புஷ்பங்கள், பேசும்பட அனுபவங்கள், வள்ளி மணம், கதம்பம், மாண்டவா மீண்டது, ஆஸ்தானபுரம் நாடகச் சபை, சங்கீதப் பயிததியம், ஒனபது சூட்டி நாடகங்கள், சபாபதி ஜமீன்தார, சிவால யங்கள்-இநதியாவிலும் அப்பாலும் முதல் நானகு பாகங்கள், சிவாலய சிற்பங்கள், மனோபாட்டி, தீபாவளி வரிசை, இந்தியனும் ஹிட்லரும், காலக் குறிபபகள், சுபரமண்ய ஆலயங்கள், தீயின் சிறுதிவலை, கலையோ காதலோ, உணவுப் பொருளகளின் குணங்கள் முதலியன.

முதற் பதிப்பு

அருட்பெருஞ்ஜோதி அச்சகம், சென்னை—1.

காபிரைட்] 1948 [விலை ரூபா 1

Inscribed

to

The Beloved Memory

of

My Parents

P. VIJAYARANGA MUDALIAR

AND

P. MANICKAVELU AMMAL

AND

My Friend

C. RANGAVADIVELU

முஞ்சிரா—திருவாங்கூர் ராஜ்யம், சிவாலயம்.

முட்டம்—சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா, சிவாலயம்.

முடபித்ரி—கார்கல் தாலூகா, தென்கன்னட ஜில்லா, சென்னை ராஜதானி; மஹாலிங்கேஸ்வரர் கோயில்; இங்கு சோமநாதர் கோயில் என்று மற்றொரு சிவாலயமுளது.

முடிகொண்டா—கெல்லூர் ஜில்லா, சென்னை ராஜதானி; சோமேஸ்வர ஸ்வாமி கோயில், பிரம்மோற்சவம் வைகாசி மாதம்.

முடிகொண்டான்—சென்னை ராஜதானி; தஞ்சாவூர் ஜில்லா; நன்னிலத்திற்கு 2 மைல் - சிவாலயம்.

முண்டீச்சுரம்—(நிரு) முண்டீச்சரம் எனவும் வழங்கப்படுகிறது. திருவெண்ணெய் கல்லாருக்கு 3 மைல் கிழக்கு; சென்னை ராஜதானி; இந்திரன், பிரம்மா பூஜித்த க்ஷேத்திரம். சுவாமி-முண்டீஸ்வரர், தேவி - காளர்குழலியம்மை, முண்டக தீர்த்தம், கண்ணுயிர தீர்த்தம், இங்கு நடனபாதேஸ்வரர். அஸ்தகாளாம்பிகை எனும் மூர்த்திகளும் உண்டு. அப்பர் பாடல் பெற்றது.

முத்துப்பேட்டை — திருமுருகன்பூண்டி தாலூகா சென்னை ராஜதானி, சிவாலயம். திருவிளாகத்திற்கு 10 மயில்; ரெயில் ஸ்டேஷன்.

முத்தூர்—தாராபுரம் தாலூகா, கோயம்புத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, பழய சிவாலயம்—பாழாயிருகிறது. ஸ்வாமிபெயர் குலோத்துங்கேஸ்வரர்-குலோத்துங்கசோழனால் கட்டப்பட்டது.

முதுகுளத்தூர்—ராம்நாட் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்; வரகுணபாண்டியனால் கட்டப்பட்டதென்பர்.

முதுகெரே—மைசூர் ராஜ்யம், சிவாலயம்—ஸ்வாமி எரிகேஸ்வரர். கோயில் 1155வது கட்டப்பட்டது, முதலாம் நரசிம்மஹொய்சல அரசன் காலத்தில.

முதுகெரி—உடுப்பி தாலூகா, தென்கன்னட ஜில்லா, சென்னை ராஜதானி, பார்கூர் அருகிலுள்ளது. இங்கு 2 சிவாலயங்கள் உள. (1) சோமேஸ்வரர் கோயில், (2) சோமநாதர் கோயில்.

முதுமலை—நீலகிரி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். இதற்கருகில் ஹுலிசுகல் என்னும ஊரில் ஒரு சிறு சிவாலயமுளது.

முரமல்லா—கோதாவரி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்; சுமார் 500 வருடங்களுக்குமுன்பாக ஒரு விதவா ஸ்திரீயால் கட்டப்பட்டது என்பர்.

முருகன்பூண்டி—(திரு) சென்னை ராஜதானி; திருப்பூர் ஸ்டேஷனுக்கு 5 மயில் வடமேற்கு; சுப்பிரமணியர் பூசித்த க்ஷேத்திரம்; சுந்தரர் சேரமான் பெருமாணுயனர் கொடுத்த பொருளைத் திருவாரூருக்குக் கொண்டு போகையில், சிவபிரான் பூதகணங்களை வேடர்களாகஇ, அவற்றைப் பறிக்கச்செய்து, பிறகு சுந்தரர் பதிகத்திற்கிணங்கி மீட்டும் கொடுத்தருளிய ஸ்தலம். ஸ்வாமி முருகநாதேஸ்வரர்; தேவி முயங்குபூண்முலையம்மை, ஆவுடைநாயகியம்மை; பிரம்மதீர்த்தம், ஆவுடை தீர்த்தம். கோயில் தரை மட்டத்திற்குக் கொஞ்சம் கீழ் உள்ளது. 175 x 150 அடி விஸ்தீர்ணம்; மேற்கு பார்த்தது, லிங்கம் தெற்கு பார்த்தது; சுப்பிரமணியர் வடக்கே செல்லும்போது பிரதிஷ்டை செய்தபடியால் லிங்கம் தெற்கு முகமாயிருக்கிறதென்பது ஐதிகம். கோயில் ஒரே பிராகாரமுடையது; பல கல்வெட்டுகளுடையது. இங்கு பரமேஸ்வரர் பிரம்மதாண்டவம ஆடினதாகவும் கடராஜருடைய பொன்னையாவிக்ரஹம், அருகிலுள்ள திட்டுகாடென்னுமிடத்தில் புதைக்கப்பட்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. 12 வருடங்களுக்கொருமுறை இங்குள்ள ஒரு கற்பாறையிலிருந்து ஜலம் வருவதாகச் சொல்லப்படுகிறது. சுந்தரர் பாடல் பெற்றது.

முருகிபூடி—நாசராவ்பெட் தாலூகா, குண்டூர் ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம.

முரப்பநாடு — திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜதானி, இங்கு 2 சிவாலயங்கள் உள. கைலாசநாதர் கோயில், சொக்கலிங்கஸ்வாமி கோயில்.

முல்லைவாயில்—(திரு) தெற்கு, தஞ்சாவூர் ஜில்லா, சென்னைராஜதானி, சீர்காழிக்கு 5 மயில் கிழக்கு; பார்வதிதேவி பரமசிவத்திடமிருந்து மந்திரோபதேசம் பெற்ற க்ஷேத்திரம், ஸ்வாமி முல்லைவனநாதர்; தேவி கோதையம்மை, கடற்கரையோர தீர்த்தம், தேவேந்திரன், சுதர்மன் பூசித்த ஸ்தலம், திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

முல்லைவாயில்—(திரு) வடக்கு, சென்னை ராஜதானி, மதராஸ் ரெயில்ஸ்டேஷன்; அமபத்தூருக்கு 1½ மயில் வடக்கு, தொண்டைமான், சுப்பிரமணியர், மஹாவிஷ்ணு,

பிரம்மா, இந்திரன், இந்திராணி, ஐராவதம், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், தீர்க்கபாஹு, தூர்வாசர், வசிஷ்டர், பிருகு, சித்ரகர்மன், சம்புதாசன், குசலவர் பூசித்த க்ஷேத்திரம். தொண்டைமான் ஆனைமீது செல்லும்போது யானையின் கால் முல்லைக்கொடிகளில் சிக்கிக் கொள்ள, அவற்றை அகற்ற வாள்கொண்டு வீச, அவ் வாளானது அங்கிருந்த சிவலிங்கத்தின்மீது பட்டதாக ஸ்தல புராணம். அவ்வடு இன்னும் சிவலிங்கத்தில் காணலாம்—ஸ்வாமி மாசிலாமணீஸ்வரர், தேவி கொடியிடை நாயகி, தீர்த்தங்கள்—பாலாறு, சுப்பிரமணியர் தீர்த்தம். கோயில் ஆதொண்டைச் சகரவர்த்தியால் கட்டப்பட்ட தென்பர். இங்குள்ள நந்தி புழலைப் பார்த்திருக்கிறது, ஸ்வாமிக்கு முதுகைக் காட்டி. கர்ப்பக்கிரஹம் கஜப் பிரஷ்ட ஆகிருதி. தற்காலக் கோயில் சுமார் 1064—1113 வருடங்களுக்குள் கட்டப்பட்டிருக்கலாம் என்று எண்ணப் படுகிறது. கல்வெட்டுகள் பல உண்டு. தேவிகோயில் விஜயநகர அரசர் காலத்தில் கட்டப்பட்டது; இதில் கல் வெட்டுகள் இல்லை. கோயிலில் எருக்க மரத்தாலாகிய இரண்டு தூண்கள் இருக்கின்றன; இவை தொண்டமான் சக்ரவர்த்தியால் கொடுக்கப்பட்டன வென்று சொல்லப் படுகிறது. பிரம்மோற்சவம் சித்திரை மாதம்; பிரம்மா பூசித்து உற்சவம் ஆதியில செய்ததாக ஐதிகம். அம்மன் சந்நிதி ஸ்வாமிக்கு வலமாயிருக்கிறது. 9-ஆம் நாள் மூல்லையடி சேவை உற்சவம் பிரபலம். சுந்தரர் பாடல் பெற்றது.

புள்ளிருக்குவேளூர்—மதுரை ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்.

புறப்பாடி—சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா, ஆழ்வார்திருநகரிக்கு 6 மைல் சிவாலயம்; கைலாசநாதர், சிவகாமி; தாமிரபரணி; அங்கிரசர் பூசித்த ஸ்தலம்.

புலியூர்—முனையூர் என்றும் பெயர், கும்பகோணம் தாலூகா, தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம், வைப்பு ஸ்தலம்.

புறையூர்—திருப்பத்தூர் தாலூகா, செட்டிநாடு, சென்னை ராஜதானி, சிலாலயம்-சுந்தரேஸ்வரர், மீனாட்சி.

பூனகாலா கிராமம் — திருவல்லம் ஜில்லா, சென்னை ராஜதானி; மல்லிகார்ஜுனர் கோயில்—இங்கு 1300 வருஷத்திய கல்வெட்டொன்றுளது.

முனியூர் — கும்பகோணம் தாலூகா, தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம், ஸ்வாமி அகஸ்தீஸ்வரர்.

முஜுபர்பூர் பிரிவு — வங்க ராஜதானி, தேங்காவி கிராமம், சிவாலயம்; ஸ்வாமி புவனேஸ்வரர், சிவலிங்கம் கருப்புக்கல்லாலாயது.

முக்கீச்சரம் — தற்காலம் உறையூர் என வழங்கப் படுகிறது, சென்னை ராஜதானி, திருச்சிராப்பள்ளி ஸ்டேஷனுக்கு $1\frac{1}{2}$ மைல் மேற்கு, சிவாலயம். நாகம், கருடன், பிரமர், கத்ருரீஷி, கஸ்யபர் மகரிஷி பூசித்த ஸ்தலம். புகழ்ச்சோழனர் வாழ்ந்த ஸ்தலம்; கோட்செங்கட்சோழன் முத்தியடைந்த ஸ்தலம்-ஸ்வாமி பஞ்சவர்ணேஸ்வரர் தேவி காந்திமதியம்மை. பாதாள பொந்திலிருந்து ஐந்து லிங்கங் களைக் கொண்டு வந்து நாகராஜன் அவைகளை ஒன்றாகச் சேர்த்து லிங்கப் பிரதிஷ்டை செய்ததாக ஐதிகம். பஞ்ச வர்ண தீர்த்தம்—லிங்கம் தினம் ஐந்துமுறை வர்ணம் மாறு வதாக ஐதீகம். திருஞானசம்பந்தர் பாடப் பெற்றது.

மூலம்பேட்டை—நெல்லூர் ஜில்லா, மேற்படி தாலூகா, சென்னை ராஜதானி, ஸ்ரீ மூலஸ்தானீஸ்வரர் கோயில்.

மூர்ஷிடாபாத் பிரிவு—வங்காள ராஜதானி, பாராநகர் கிராமம், சிவாலயம்; ஸ்வாமி புவனேஸ்வரர்—தேவி நாகராஜேஸ்வரி.

மூவலூர்—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, மாயவரத்திற்கு மேற்கிலுள்ளது—ஸ்வாமி மார்க்கசகாயர் அல்லது வழிகாட்டும் வள்ளல், தேவி மங்களாம்பிகை, வைப்புஸ்தலம்.

மூழையூர்—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா கும்பகோணத்திற்கு 4 மைல் சிவாலயம், ஸ்வாமி பரசுநாதேஸ்வரர், தேவி ஞானம்பிகை; நந்தி பூசித்த ஸ்தலம். வைப்புஸ்தலம்.

மூகாம்பி—தென் இந்தியா, மலையாள தேசம், சிவாலயம்; திருமூர்த்திஸ்தலம்.

மேட்டூர்—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, சிவாலயம், ஸ்வாமி உன்னதபுரீஸ்வரர், தேவி சிவப்பிரியை.

மேட்டுப்பட்டி — மதுரை ஜில்லா, நிலக்கோட்டைக்கு 5 மைல், சென்னை ராஜதானி, இதற்கு ஒரு மைல் தூரத்திலுள்ள சித்தர் மலைமீது ஒரு சிவாலயமுண்டு.

மேட்டுபுத்தூர்—சென்னை ராஜதானி, விஜயமங்கலம் ரெயில் ஸ்டேஷனுக்கு 4 மைல் சிவாலயம்; பழமையானது. இங்குள்ள பெரிய ஜைன ஆலயத்திற் கருகிலுள்ளது; ஸ்வாமி அம்மன் கோயில்களில் பல கல் வெட்டுகள் உள.

மேடியூர்—சென்னை ராஜதானி சிவாலயம்; இங்குள்ள உமாசஹித சந்திரசேகரமூர்த்தி மிகவும் அழகியது.

மேல்சேரி—தென் ஆற்காடு ஜில்லா, திண்டிவனம் தாலூகா, சென்னை ராஜதானி காவிரிப்பாக்கத்துக் கருகிலுள்ளது. சிவாலயம் 8-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டது. கோயில் மிகவும் சிலமாயிருக்கிறது; தற்காலம் பூசையில்லை. ஸ்வாமி மத்திரேஸ்வரர். குகைக்கோயில்; கோயிலும், லிங்கமும் ஒரு சிறு குன்றில் வெட்டப்பட்டிருக்கிறது. இங்குள்ள கல்வெட்டுகளில் ஸ்வாமி பெயர் ஸ்ரீ சிகரபல்ல வேஸ்வரர் என்றிருகிறது. பல்லவ அரசர்களால் வெட்டப்பட்ட கோயில்.

மேல்பாடி — சித்தூர் ஜில்லா, மேற்படி தாலூகா சென்னை ராஜதானி, சோமநாதர் கோயில்; இங்கு சோமேஸ்வரர் கோயில் என்று மற்றொரு சிவாலயமுண்டு.

மேலூர்—புதுக்கோட்டை சமஸ்தானம் திருமெய்யம் தாலூகா, புதுகோட்டைக்கு 14 மைல், சிவாலயம், இக்கோயில் மாணிக்கவாசகர் காலத்தில் இருந்ததென்பதற்கு ஆதார முண்டு.

மைசூர்—மைசூர் ராஜ்யம். இங்குள்ள சிவாலயங்கள், கோட்டை சோமேஸ்வரர் கோயில் பூர்வம் சிறிய கோயிலாயிருந்தது, 1893வது பார்வதி கோவில் முதலியவற்றால் பெரிதாக்கப்பட்டது, ஸ்ரீமான் ஆறுமுகம் பிள்ளை அவர்கள் முயற்சியால். திரினேஸ்வரர் கோயில் (திரி நேத்ர + ஈஸ்வரர்?) திருணபிந்து ரிஷி இங்கு ஈஸ்வரரைப் பூஜித்த இடமெனச் சொல்லப்படுகிறது. இக்கோயிலுக்கு பிரம்மோற்சவம் உண்டு. அந்தகாசுர சமஹார உற்சவம் மைசூர் அரண்மனையின் எதிரில் நடக்கிறது காசிவிஸ்வநாதர் கோயில் — பழய அகரஹாரத்திலுள்ளது— ஸ்வாமி விஸ்வநாதர், தேவி விசாலாட்சி காசி கங்கை தீர்த்தம். காந்தராஜ் அர்ஸ என்பவரால் புதிதாககப் பட்டது. சாம்ராஜ்பேட்டில் சிவாலயம்; ஸ்வாமி பிரசன்ன விஸ்வேஸ்வரர், தேவி பிரசன்ன லலிதாம்பாள் சென்ற 50 வருடங்களுக்குள் கட்டப்பட்டது; சுண்ணாம்பு கட்டிடம்.

மைசூர் ராஜ்யத்தில் கெம்பசாகரர் கோயில், நாக மங்கலக் கோயில் என்று இரண்டு குகைச் சிவாலயங்கள் உள.

மைத்ரேஸ்வரர் கோயில் — ஒரிஸ்ஸா மாகாணத்தி லுள்ளது சிவாலயம்.

மெய்யம்—திருமெய்யம் எனவும் வழங்கப்படுகிறது. புதுக்கோட்டைசமஸ்தானம், புதுக்கோட்டைக்கு 13 மைல். சிவாலயம் விஷ்ணு ஆலயத்தை யடுத்துள்ளது. பிரம் மோற்சவம் சித்திரை மாதம்; கோயில் 7-ம் நூற்றாண்டில் உண்டானது, குகைக்கோயில், மஹேந்திர வர்மா செதுக் கியது. பல்லவ கட்டடம், கர்ப்பகிரஹமும், லிங்கமும் நந்தியும் மலையில் குடையப்பட்டிருக்கின்றன. மலைக்கு சத்யகிரி என்று பெயர்; ஸ்வாமி சத்யகிரீஸ்வரர். இங்கு இரண்டு சத்திரங்கள் உள.

மேலச்சேரி—சென்னை ராஜதானி, தென் ஆற்காடு ஜில்லா, சிவாலயம்; செஞ்சிக்கு அருகிலுள்ளது. பல்லவ கட்டடம்.

மையச்சூர்—நிலம் தாலூகா, தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம், ஸ்வாமி மஹிரருணேஸ் வரர்.

மொகிலி—சித்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம், சித்தூரிலிருந்து 18 மைல். பல நூற்றாண்டு களுக்குமுன் மொகிலப்பா என்னும் இடையனால் லிங்கம் கண்டு பிடிக்கப்பட்டதென்பது ஐதிகம். ஸ்தல புராணத் தின்படி கி.பி. 120 ஆண்டில் கோயில் கட்டப்பட்டதென் பர் (?) கோயில் 1843 புதுப்பிக்கப்பட்டது. லிங்கத்திற்கு கீழேயில் வடு உளது. திரிசூல சங்கர தீர்த்தம். நந்தி வாயி னின்றும் எப்பொழுதும் ஜலம் வந்துகொண்டிருக்கிறது.

மொளகல்மூரு—சிட்டல்துர்க் ஜில்லா, மைசூர் ராஜ் யம், (கன்னடத்தில் முழுங்கால்மூறி என்று அர்த்தமாகும்) ஜகந்நாத ராமேஸ்வரர் குன்றில் ஒரு சிவாலயமுண்டு; ராவ ணன் சீதையை அபகரித்துக்கொண்டு போனபோது இங்குள்ள லிங்கம் சீதாதேவியால் பிரதிஷ்டை செய்யப் பட்ட தென்பது ஐதிகம். 961வது ஓர் கடம்ப அரசனால் வெட்டப்பட்ட கலவெட்டொன்றில் இது குறிப்பிடப்பட் டிருக்கிறது

மோதூர்—சென்னை ராஜதானி அரக்கோணத்திற்கு 3 மைல்; இங்கு 2 சிவாலயங்கள் உண்டு (1) காளத்தீஸ்வரர் கோயில் (2) அகஸ்தீஸ்வரர் கோயில்.

மோதஹல்லி—மைசூர் ராஜ்யம்—சிவாலயம்; ஸ்வாமி மல்லிகார்ஜுனர்.

மோர்வி—வட இந்தியா-வங்காளம் (?) சிவாலயம்; சிவ ராத்திரி விசேஷம்.

மோஹனூர்—நாமக்கல் தாலூகா, திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி, மகனூர்என்பது மோஹனூர் என்று வழங்கிய தென்பர். லிங்கம் மேற்கு பார்த்தது. ஸ்வாமி பெயர் அசலதீபேஸ்வரர், சந்நிதியிலிருக்கும் தீபம் அசைவதில்லை என்பது ஐதிகம்.

மோஹன் ஜதரோ—வட இந்தியா, சிந்து நதிக்கரையிலிருந்த மிகுந்த புராதனமான அழிந்துபோன பட்டணம் (கி.மு. 3000) இங்கு சிவலிங்கங்கள கண்டு பிடிக்கப் பட்டிருக்கின்றன; ஆகவே இங்கு சிவாலயங்கள் இருந்திருக்கவேண்டும் ஆதிகாலத்தில்.

மௌசெவ்வல்—அம்பா சமுத்திரம் தாலூகா, திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்; ஸ்வாமி ஆதித்யவர்ணேஸ்வரர்.

யானைக்குகை—எலிபாண்டாகுகை, என்றும் பெயர் உண்டு. இது ஒரு தீவிலிருக்கிறது. பம்பாய் அபாலோ பந்தரிலிருந்து 6 மைல் கப்பல் மார்க்கமாய்ப் போகவேண்டும்—ஒரு மணிநேரம் சுமார் பிடிக்கும். படகுகளிலிருந்து இறங்குமிடம் ஒரு கருங்கல் யானை இருந்தபடியால் (இது தற்காலம் பம்பாய் மியூசியத்திலிருக்கிறது) போர்த்துகேயர்கள் இத்தீவிற்கு எலிபாண்டாகேவ் (யானைக்குகை) என்று பெயர் வைத்தனர். இதன் பூர்வீக பெயர் காராபுரி (கோட்டை நகரம) என்பதாம் தீவின் சுற்றளவு 5 மைல்; சிவாலயம். சுமார் 300 வருடங்களுக்கு முன் போர்த்துகேயர்கள் பீரங்கிவைக்கொண்டு இதைச் சுட்டுப் பாழாகியிருக்கின்றனர். மேற்குப் பகுதியிலுள்ள பெரிய குகையில சிவாலயமிருகிறது; ஒரே கற்பாறையில் செதுக்கப்பட்டது; 130 அடி சதுரம்; முன் பக்கம் 3 பெரிய தூண்கள் இருக்கின்றன. உள்ளே கோயில் 91 அடி சதுரம்; இதற்கு 6 வரிசை தூண்கள் இருக்கின்றன உள்ளே இருக்கும் முக்கிய மூர்த்தி சாதாரணமாக திரிமூர்த்தி என்றழைக்கப்படுகிறது; இது தவறாகும். காலஞ் சென்ற கோபிநாத்ராயர் கூறியபடி இது சிவபிரானது மஹேஸ்வரமூர்த்தி ஸ்வரூபமாம். இதற்கு வலதுபுறம் அறையில் லிங்கம் இருக்கிறது. இழக்குபுறம் அர்த்தநாரீஸ்வரர் உருவம், 17 அடி உயரம், மற்றொரு அறையில்

பார்வதி தேவியின் கல்யாணம் செதுக்கப்பட்டிருக்கிறது. கலியாண சுந்தரமூர்த்தி மிகவும் அழகியவர். மேற்கு பக்கம் கபாலமூர்த்தியும், கடராஜமூர்த்தியும் பார்க்கத் தக்கவை. ஐரோப்பிய பூர்வீக சாஸ்திரவித்வான்கள் இந்த சில்பங்களை மிகவும் புகழ்ந்திருக்கின்றனர். புரொபசர் தீக்ஷித் இவை ஆறும் நூற்றாண்டில் சளுக்கிய அரசர் களால் வெட்டப்பட்டதாக மதிக்கிறார். சிவராத்ரியில் மாத்திரம பூஜை நடக்கிறது, மற்ற காலங்களில இல்லை. சில்பங்களெல்லாம் ஏறக்குறைய எல்லோராகுகை சில்பங் களை ஒத்திருக்கின்றன.

யாழ்ப்பாணத்து நல்லூர்—இலங்கைத் தீவு, சிவாலயம்—ஸ்வாமி கைலாசநாதர், ஜெயவீரசிங்கன் எனும் இலங்கை மன்னனல் கட்டப்பட்டது.

ரட்டேஹல்லி—தார்வார் ஜில்லா, பம்பாய் ராஜதானி கடம்பேஸ்வரர் கோயில்—3 சந்நிதிகளடங்கிய சளுக்கிய கட்டடம், மேற்கு விமானத்தில் ஹொய்சலபிருது இருக் கிறது.

ரட்டன்—வடஇந்தியா ரெயில்ஸ்டேஷன்; சிவாலயம்.

ரத்னகிரி—திருச்சிராப்பள்ளி ஜில்லா, குளித்தலை தாலூகா, சென்னை ராஜதானி சிவாலயம்—ஸ்வாமி ரத்ன கிரீஸ்வரர் அல்லது சொகசுகர். அகஸ்தியர் பூஜித்த ஸ்தலம். இங்கு ஸ்வாமி திருமஞ்சனத்திற்கு ஒரு பணடாரம் காவிரி யிலிருந்து தீர்த்தம கொண்டுவருவது வழக்கம். கல்வெட்டு களில ஸ்வாமியின் பெயர் மாணிக்கமலையுடைய நாயனார் என்றிருக்கிறது.

ரத்னபுரி—பங்காள் நாக்பூர் ரெயில் ஸ்டேஷன் பிலாஸ்புரத்திலிருந்து 15 மைல்; சிவாலயம; ஸ்வாமி ரத் னேஸ்வரர், தேவி பார்வதி, சரோவர தீர்த்தம். இங்குள்ள கலியாண சுந்தரமூர்த்தி பார்க்கத்தக்கவர் இங்கு தர்ம சாலைகளுண்டு.

ரவிபாடு—கிருஷ்ணா ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்.

ராதாபுரம் — திருநெல்வேலி ஜில்லா, நாங்குநரி தாலூகா, சென்னை ராஜதானி சிவாலயம், ஸ்வாமி வரகுண பாண்டீஸ்வரர், தேவி நித்யகல்யாணியமமை; கல்வெட்டு களில் இவ்வூரின் பெயர் ராஜராஜபுரம் என்றிருக்கிறது.

ராம்நகர்பர்காஞ—ஜகிய மாகாணம்—**ஆஹிசத்ரம்** எனும ஊரில சிவாலயம்; ஜீரணமாயிருக்கிறது. இதுதான்

வட இந்தியாவிலுள்ள மிகவும் புராதனமான சிவாலயம் என்று எண்ணப்படுகிறது. கன்னிங்காம் துரை இது கி.மு. முதல் நூற்றாண்டில் கட்டப்பட்டதாக எண்ணுகிறார்.

ராம்நாத்பூர்—மைசூர் ராஜ்யம், பழய சிவாலயம்—ஸ்வாமி ராமேஷ்வர், காவிரி தீர்த்தம், இங்கு காவிரியில் கல்லாலாகிய ஒரு பசு இருக்கிறது. அதன் கீழ் யாத்ரீகர்கள் தலைமுதல கால்வரை தண்ணீரில் மூழ்கிச் செலகின்றனர்.

ராம்பூர்—பாரல்லி ஜில்லா, ஐக்கிய மாகாணம்—இரண்டு மாடிகளுடைய சிவாலயம், இது கி பி. முதல் நூற்றாண்டில் கட்டப்பட்டதாக எண்ணப்படுகிறது; மரத்தாலும் செங்கல்லினாலும் ஆயது. தற்காலம் மிகவும் சிலமாயிருக்கிறது.

ராமகிரி-சென்னை ராஜதானி, நாகலாபுரம் தாலூகா, நாகலாபுரத்திற்கு 2 மைல சிவாலயம், ஸ்வாமி வாலி ஈஸ்வரர்—பெரிய கோயில்.

ராமவரம்—கோதாவரி ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம்; சிறு குன்றிலிருகிறது. ஸ்வாமி விஸ்வநாதர்.

ராமநதீச்சுரம்—(திரு) சென்னை ராஜதானி, திருப்பத்தூருக்கு 1 மைல் தெற்கு; ஸ்ரீ ராமர் சிவபெருமானை பூசித்த க்ஷேத்திரம், மிருகண்டு பூசிதத ஸ்தலம்; நந்திலத்திலிறங்கி சுமார் 5 மைல போகவேண்டும்—சிவாலயம்; ஸ்வாமி ராமநாதேஸ்வரர் அல்லது ராமலிங்கேஸ்வரர், தேவி கருவார் குழலியம்மை; மணிகங்கை, ராமநாத தீர்த்தம். திருஞான சமபந்தர் பாடல்பெற்றது.

ராமநாதபுரம்—மேற்படி ஜில்லா, சென்னை ராஜதானி, ரெயிலஸ்டேஷன் சிவாலயம்; மூகவை ஊருணிக கருகிலுள்ளது; கோட்டைககு வெளியில முத்துராமலிங்க ஸ்வாமி கோயில் இங்கு முசாபர் பங்களா உண்டு; இரண்டு சத்திரங்களுண்டு.

ராமலர்—இமயமலை ஸ்தலம்—சிவாலயம்.

ராமேஸ்வரம்—இந்தியாவின் தெற்கேயுள்ள பாம்பன் தீவிலுள்ளது. தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன். கோயில் ஸ்டேஷனிலிருந்து சுமார் 1 மைல். ஸ்ரீ ராமர், ராவண சம்ஹார பீடை நிவர்த்தியாகும்படி லிங்கப்பிரதிஷ்டை செய்து பூசித்த க்ஷேத்திரம், ஸ்வாமி ராமநாதேஸ்வரர், தேவி பர்வதவர்த்தனி அல்லது மலைவளர் மாதவியம்மன். தீர்த்தம்—தனுஷ்கோடி முதலிய பல தீர்த்தங்கள் உள.

அவற்றுள் 14 கோயிலுக்குள் இருக்கின்றன. சேது ஸ்நானம் மிகவும் புனிதமானது என்பது லோகப் பிரசித்தமான விஷயம். இக்கோயிலில் முக்கியமாக 16 லிங்கங்கள் இருக்கின்றன.—ஹனுமார் லிங்கம், ஸ்ரீராமர் லிங்கம், சீதாதேவி லிங்கம, லடசுமணர் லிங்கம், சுக்ரீவ லிங்கம், நள லிங்கம், அங்கத லிங்கம், நீலன் லிங்கம், ஜாம்பவான் லிங்கம், விபீஷணர் லிங்கம், இந்திர லிங்கம் முதலியன. ஸ்தல மஹாத்மியத்தில், நருமதை தீரத்திலிருந்து அனுமார் ஒரு லிங்கத்தைக் கொண்டுவருமுன், ஸ்ரீராமர் வேறொரு லிங்கத்தை மணலால் சீதாதேவி பூசிப்பதற்காக பிரதிஷ்டை செய்ததாகவும், பிறகு அனுமார் கொண்டு வந்த லிங்கத்தை அதற்கு வடகதில் பிரதிஷ்டை செய்ததாகவும கூறப்பட்டிருகிறது. பிறகு அனுமார் மணல் லிங்கத்தை தன் வாலால பிடுங்கி எறியப் பார்த்ததாகவும, முடியாமற் போனதாகவும் ஐதிகம். அனுமாருடைய கோபம் தீர, ஸ்ரீராமர் அவர் கொண்டு வந்த லிங்கத்திற்கு முதல் பூஜை நடக்கவேண்டுமென்று ஆக்ஞாபித்ததாக ஸ்தலபுராணம். அந்த லிங்கத்தில் அனுமார் வாலின் வடுகள் இருக்கின்றன. இங்குள்ள கோயில் இந்தியாவிலுள்ள மிகப் பெரிய கோயில்களில் ஒன்றும்; 557 அடி அகலம், சுமார் 1000 அடி நிகளம், 3 பிராகாரங்களுடையது. இப்பொழுதிருகும் புதிய கோயிலின் பெரும்பாகம 1550—1560 வருடங்களில் கட்டப்பட்ட தென்பர். ராமநாத பண்டாரம் என்பவரால் சிலபாகம் 1598 வரு கட்டப்பட்டது. கோயிலின் கர்ப்பக்கிரஹமும் மேற்கு கோபுரத்திற்கு அருகிலுள்ள பாதாள ஸ்வாமி கோயிலும் மிகவும் பழமையானவை. இவை 11 அல்லது 12-ம் நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்கலாமென்று காலஞ்சென்ற பெர்கூசன் துரை எண்ணுகிறார். கந்தமாதன ஸ்வாமி கோயில்; 50 அடி உயரம் 34 அடி நிகளம், பெரிய மதிற்சுவர் 20 அடி உயரம்; நான்கு புறத்திலும் நான்கு கோபுரங்கள் உள; இவை அஸ்திவாரம் முதல சிகரம வரையில் கருங்கல்லால் கட்டப்பட்டவை. ஸ்வாமி கோயிலின் கிழக்கு கோபுரம் சடையப்ப தேவர் தளவாயால் கட்டப்பட்டது. இவர் 1640 வரு சேதுபதியாயிருந்தவர். கர்ப்பக்கிரஹப் பிராகாரம 109 x 307 அடி; முதல் பிராகாரம் சிங்களத்து கண்டிராஜாவால கட்டப்பட்டதாம். இரண்டாம் பிராகாரம் 386 அடி x 314 அடி; திருமலை நாயகரால் ஆரம்பிககப்பட்டு, திருமலை சேதுபதியால் முடிக்கப்பட்ட தென்பர். மூன்றாம பிராகாரம முத்து ரகுநாத தேவரால் ஆரம்பிககப்பட்டு முத்துராமலிங்க

தேவரால் மூடிக்கப்பட்டது; 690x435 அடி; ஸ்வாமி சந்நிதியும் தேவி சந்நிதியும் மதுரையிலிருப்பதுபோல் அக்கம் பக்கமா யிருக்கின்றன. இரண்டும் கிழக்கு பார்த்தவை. சேது மாதவர் கோயிலும் (இங்கிருக்கும் விஷ்ணு ஆலயம்) கணேசர் சிலையும் ஒருவித மணற்கல்லால் ஆக்கப்பட்டவை, இவை உதிர்ந்துகொண்டு வருகின்றன. பழய கோபுரங்கள் இலேசான பவழப் பாறைகளால் கட்டப்பட்டவை. சர்வ தீர்த்தம் எனும் கிணற்றினின்றும் கீழே தெற்கு முகமாக ஒரு வழி போகிறது. நள தீர்த்தம், நீல தீர்த்தம்—இவைகள் அருகிலிருக்கும் கோயில்கள் பழமையானவை. இங்குள்ள சொக்கட்டான் மண்டபம் எனும் சதுர வடிவான மண்டபம் பார்க்கத்தக்கது. 1623—1645 வருடங்களிற் கட்டப்பட்டது இதன் மொத்த விஸ்தீரணம் சுமார் 4000 அடியாம்; அகலம் 17 அடி முதல் 21 அடி வரையில், உயரம் சுமார் 30 அடி; ஒவ்வொரு தூணும் சுமார் 12 அடி உயரம்; 5 அடி மேடையின்மீது வைகைப் பட்டிருக்கிறது. இதைப்போன்ற பிராகார மண்டபம் இந்தியாவிலே வேறு கிடையாதென்னலாம். இப்பிராகார மண்டபத்தில் ஸ்வாமி எழுந்தருளும்போது காட்சி மிகவும் அழகா யிருக்கும். கோயிலின் மண்டபங்களிலும், பிராகாரங்களிலும் ராமநாத சேதுபதிகளின் உருவங்கள் நிர்மாணிக்கப்பட் டிருக்கின்றன. கோயிலில் ஆங்கியில் கருங்கல்லினாற் கட்டப்பட்ட கட்டடங்களுக்கு கருங் கற்கள் சிங்களத்திலிருந்து கொண்டுவரப்பட்டதாக எண்ணப்படுகிறது. பிறகு கட்டப்பட்ட பாகங்களெல்லாம் மணற் கல்லாலானவை. உள் பிராகாரம் மதுரை நாயகர்களால் கட்டப்பட்டது. வெளி மண்டபம் ராமநாத சேதுபதியால் கட்டப்பட்டது. கோபுரங்களில் மேற்கு கோபுரம் மாத்திரம் பூர்த்தியாயிருக்கிறது; மற்றவைகள் அரைகுறையா யிருக்கின்றன. வெளி மதில் 612 x 868 அடி. மேற்கிலிருந்து உட்புறம் போகும்போது வலதுபுற மிருக்கும் தோட்டத்திலுள்ள விமானம் 11-ஆம் நூற்றாண்டிற் கட்டப்பட்டது; 50 x 30 x 40 அடி. கோயிலிலுள்ள சிறிய விமானம் இதகாலத்தில் கட்டப்பட்டதாம். கோயிலுக்கு சுமார் 80 லட்சம் ஸ்திதியுண்டு. மாசி மாதம் பிரம்மோற்சவம், ஆடிமாதம் அம்மன் உற்சவம், அம்மன் தபசு, திருகலியாணம், விசேஷம். தினம் அர்த்தஜாம பள்ளியறை உற்சவம் பார்க்கத்தக்கது. ராமநாதஸ்வாமி கர்ப்பக் கிரஹத்தில் பலகல்வெட்டுகள் உள. கோயிலுக்குள மாதவ புஷ்கரிணி என்று ஒரு தீர்த்தம் உண்டு. இங்கு

அருகாமையில் முத்துராமலிங்கஸ்வாமி கோயில் என்று மற்றொரு சிவாலய முளது; இது கற்காலத்திய தனுஷ் கோடிக்கு 3 மைல் மேற்கிலுள்ளது. ராமேஸ்வரம் ரெயில் ஸ்டேஷனுக்கு 8 மைல் கிழக்கிலுள்ளது கர்ப்பக்கிரஹம் 10 அடி சதுரம். இதுவும் அர்த்த மண்டபமுங்தானிருக் கின்றன, மற்றபாகம் கிலமாகிவிட்டது; விமானம் பாழாகி விட்டது இதுதான் பழய தனுஷ்கோடி யென்றும் இங்கு தான் மூற்காலத்தில் சேதுஸ்நானம் செய்வது வழக்கமென் றும் சிலர் எண்ணுகின்றனர். இங்கு காசிவிஸ்வநாதர் விசாலாட்சி கோயில் ஒன்றுண்டு. இக்கோயிலில் இருந்த சில பழய கல்வெட்டுகள் அழிக்கப்பட்டன. பழய கர்ப்பக் கிரஹம் 190 x 307 அடி. இங்குள்ள கந்தமாதன பர்வதத் திற்கருகில் ஒரு சிவாலய மிருகிறது. ராமநாதபுரம் ராஜா சத்திரம், முகுந்தராயர் சத்திரம், வீரப்ப செட்டியார் சத்திரம், தஞ்சாவூர் ராஜா சத்திரம், மகபீர் தர்மசாலை; முதலிய சத்திரங்கள் உள. மூசாபர் பங்களா உண்டு.

ராமேஸ்வரம்—கடப்பை ஜில்லா, சென்னை ராஜ தானி, சிவாலயம்,—ராமலிங்கஸ்வாமி—ஸ்ரீராமர் மணலி னால் பிரதிஷ்டை செய்த பிறகு கல்லாய் மாறியதென்ப ஐதிகம். பெண்ணைக் கரையிலுள்ளது; சித்திரை மாதம் பிரம்மோற்சவம்,—இக்கோயிலில் 940 வருடத்திய கல்வெட்டு கள் உள.

ராயகோடி—சென்னை ராஜதானி, கடப்பை ஜில்லா, சிவாலயம்; ஸ்வாமி உக்கிர வீரபத்திரர்.

ராய்பூர் ஜில்லா—மத்திய மாகாணம்—இங்குள்ள சிவாலயங்கள் (1) ருத்ரி கிராமம் சிவாலயம்—ஸ்வாமி ருத் ரேஷ்வர் மஹாதேவ். (2) சிஹாவா கிராமம்—காரணே ஸ்வரர் கோயில்—இங்கு ரிஸ்யசிருங்கர் ஆசிரமம இருந்த தாகச் சொல்லப்படுகிறது, மாசிமாதம் பிரபல உற்சவம். (3) சிர்பூர் கிராமம் கந்தேஷ்வர் கோயில்—1000 வருடங் களுக்குமுற்பட்ட ஆலயம், பிறகு புதுப்பிக்கப்பட்டிருக் கிறது. (4) சம்பாஜர் கிராமம் சிவாலயம்—ஸ்வாமி சமபே ஷ்வர்; லிங்கத்தில் கோடுகள் இருக்கின்றன; இவற்றில் அது மூன்று பிரிவாக்கப்பட்டிருகிறது, ஒன்றில் கணே சர் உருவமும், மற்றொன்றில் பார்வதி உருவமும் இருக் கிறது, மத்தியிலிருப்பது மஹாதேவர்,—பார்வதிக்கு ஆடு களைப் பலி கொடுகின்றனர். (5) கோப்ரா கிராமம் சிவாலயம், ஸ்வாமி கோபேஷ்வர் மஹாதேவ் (6) குன் வாரா கிராமம், பாழடைந்த சிவாலயம்—18½ சதுரம்—

பூஜையில்லை. (7) நாராயணபூர் கிராமம் பழய சிவாலயம். (8) ராகீம் கிராமம். இங்கு ராஜேஷ்வர் கோயில், தானேஷ்வர் கோயில் என்று இரண்டு சிவாலயங்கள், விஷ்ணு கோயிலின் பக்கத்திலிருக்கின்றன. (9) கூலேஷ்வர் கோயில்—மஹாநதி பாய்லி சங்கமமாகுமிடம்—சிவாலயம் இவைகளன்றி மற்ற சிவாலயங்கள்—பாவனேஷ்வர் கோயில், பிங்கேஷ்வர் கோயில், பாதேஷ்வர் கோயில்.

ராயச்சூடி.—கடப்பை ஜில்லா, சென்னை ராஜதானி, இதன் பழய பெயர் ராஜ வீடு வீரபத்ரஸ்வாமி கோயில்; ரதோற்சவத்தின் காலை விக்ரஹத்தின் நெற்றியில் மூன்றாவது கண்ணுக்குப் பதிலாக ஒருபெரிய கெம்பு வைக்கப் படுகிறது.

ராயதுர்க்கம் — பல்லாரி ஜில்லா, சென்னை ராஜதானி, ஜடபுகேஸ்வர ஸ்வாமி கோயில்

ராயபுரம்—புதுககோட்டை சமஸ்தானம், சென்னை ராஜதானி, திருமெய்யம் தாலூகா, சிவாலயம்—ஸ்வாமி சுந்தரேஸ்வரர், தேவி மீனாட்சியம்மன்.

ராஜ்கோட்—வட இந்தியா ரெயில்ஸ்டேஷன்—சிவாலயம், ஸ்வாமி ராம்நாத் மஹாதேவர்.

ராஜ்சாஹி பிரிவு—வங்காள ராஜதானி, இங்கு கலம் எனும் ஊரில் ஒரு சிவாலயமுளது.

ராஜ்பூர்—வட இந்தியா, வார்தாவிலிருந்து போக வேண்டும். இங்கு பல சிவாலயங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது

ராஜங்குடி.—திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்—இடிந்துபோய் விட்டது; சிவலிங்கம் மாத்திரம் இருக்கிறது.

ராஜசிங்க மங்கலம் — ராம்நாட் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்; ஸ்வாமி நாதஸ்வாமி—கோயில் வரகுணபாண்டியனால் கட்டப்பட்டதென்பது ஐதிகம்.

ராஜமஹேந்திரபுரம்—கோதாவரி ஜில்லா, சென்னை ராஜதானி, கிழக்கு இந்தியா ரெயில்ஸ்டேஷன், சிவாலயம்—ஸ்வாமி கோடிலிங்கேஸ்வரர் தேவி பார்வதி, ஒருலிங்கம் தான் வெளியில் இருக்கிறது; மற்றவை மணலில் மறைந்திருப்பதாக ஐதிகம். இங்கு ஈஸ்வரன் கோயிலின் கிழக்கு பக்கம் ஒருவிஷ்ணு கர்ப்பகிரஹம் இருக்கிறது. ஸ்ரீராமர் ராவண சம்ஹார பாவம்தீர லட்சம் லிங்கங்களைப் பிரதிஷ்டை செய்து பூசித்ததாக ஸ்தல மஹாத்மியம். இதற்

கருகில் **மார்க்கண்டேய** ஸ்வாமி கோயிலிருக்கிறது; சிறியது; மார்க்கண்டேயர் பூசித்த ஸ்தலம். இங்கு கலியாண மண்டபத்தில் நான்கு யாளித் தூண்கள் இருக்கினறன. மேற்கண்ட இரண்டு கோயில்களின் சிகரங்களிலும் கலசத்திற்கு பதிலாக சிவபெருமானது திரிசூலம் வைக்கப்பட்டிருக்கிறது. அகண்ட கோதாவரி தீர்த்தம். இங்கு புதிய சத்திரம் ஒன்றுண்டு

ராஜகிரஹம்—வட இந்தியா, ஜம்வான் ரெயில்ஸ்டேஷனுக்கு சமீபமுள்ளது. சிவாலயம மலைமீது இருக்கிறது.

ராஜபாகாயம்—ராம்நாட் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்—ஸ்வாமி மயூரநாதர்.

ராவல்பிண்டி—வட இந்தியா, ரெயில் ஸ்டேஷன் சிவாலயம்.

ரிஷப மலை—ஹோசூர் தாலூகா, சேலம் ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம.

ரிஷிவந்தியம்—தென் ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம்—ஸ்வாமி அர்த்தநாரீஸ்வரர். இங்குள்ள மண்டபம் திருமலை நாயகரால் கட்டப்பட்டது.

ரிஷீகேசம்—வட இந்தியா, ஹரித்வாரத்துக் கருகிலுள்ளது—சிவாலயம்.

ருத்திரகோடி—வட இந்தியா சிவாலயம், சுயம்பு லிங்கம்—ஸ்வாமி மஹாயோகீஸ்வரர்.

ருத்ரப்பிரயாகை—வட இந்தியா, பத்ரிநாத்திலிருந்து போகவேண்டும்—சிவாலயம். இதனருகில் **மணி பலேஷ்வர்** எனும் சிவாலயமுண்டு.

ரேவா சமஸ்தானம்—மத்திய இந்தியா, இங்குள்ள சிவாலயங்கள (1) **ரேவா பட்டணம்**—இதற்கு 8 மைல் தூரத்தில் பெயிஜ்நாத் (வைத்யநாத்) சிவாலயம்; 1884வது இதன்மேல் பாகம இடிந்து விழுந்துவிட்டது. (2) **கேலடி குண்ட்** கிராமம், குகைக்கோயில்—சிவாலயம். (3) **முகுந்த்பூர்** கிராமம் இங்கு சகுல்கோவான் எனுமிடத்தில் ஒரு சிவாலயமுளது. (4) **மான்கன்ஜ்** பிரிவில் தேவ்தலாவ் கிராமத்தில் சோமநாதர் கோயில். (5) **ராம்நகர்** கிராமம்—நார்வாஸ்தாசில், சிவாலயம். (6) **ரகுராஜ்நகர்** சிறு கிராமம்—பியாவான்தாசில்—அர்க்க லிங்கேஸ்வரர் ஆலயம்.

ரேஷ்ட்—ஐரோப்பா கண்டம், ருஷ்யா தேசம், காஸ்பியன் கடற்கரையிலுள்ளது. இங்கு ஒரு சிவாலயமிருப்பதாக இண்டியன் ஆன்டிக்குவரி பத்திரிகையில் சொல்லப்

பட்டிருக்கிறது. கோயிலில் கணேசர் முதலிய சிலைகள் உள. கராச்சியிலிருந்து இதற்கு சிவபிராம்மண குருக்கள் 10, 15 வருடங்களுக்கு ஒருமுறை போய் வருகிறாராம்.

லக்குண்டி—தார்வார் ஜில்லா, பம்பாய் ராஜதானி, கடக் ஸ்டேஷனிலிருந்து 7 மைல் கிழக்கு, பழய பெயர் லொக்குகுண்டி—சிவாலயம் பாழடைந்திருக்கிறது. **காசி விஸ்வேஸ்வர்** ஸ்வாமி ; இரண்டு கோயில்கள் ஒன்றுக்கட்டப்பட்டிருக்கின்றன. ஒன்று கிழக்கு பார்த்தது சிறியது, மற்றொன்று மேற்கு பார்த்தது, பெரியது. பழய கோயில் புதுப்பிக்கப்பட்டது. இங்குள்ள கோயில் வாயிற் படிகள் மிகவும் அழகிய நுட்பமான சில்பவேலை அமைந்தவை —5 அடி 8 அங்குலம் உயரம், 2 அடி 9 அங்குலம் அகலம். நடுவில் பார்வதி பரமசிவமும், பக்கங்களில் மஹாவிஷ்ணு பிரம்மாவும் செதுக்கப்பட்டிருக்கின்றன. இங்கு கந்தேஷ்வரர் சிவாலயம் என்று மற்றொன்று உளது.

லட்சுமணபுரி—இது ஆங்கிலத்தில் லக்னௌ என வழங்கப்படுகிறது வட இந்தியா ரெயில்ஸ்டேஷன்—சிவாலயம், ஸ்வாமி மஹாதேவர்

லாகி—தாடு ஜில்லா, சிந்து மாகாணம், வட இந்தியா சிவாலயம்.

லாம் கிராமம்—குண்டூர் தாலூகா, சென்னை ராஜதானி, கிருஷ்ணை ஜில்லா; சிவாலயம்.

லால்குடி — வைப்புஸ்தலம்—சென்னை ராஜதானி, திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ளது. ரெயில்ஸ்டேஷன்—சிவாலயம்—ஸ்வாமிசப்தரிஷீஸ்வரர், தேவிஸ்ரீபதி, கொள்ளிட தீர்த்தம். இவ்வூருக்கு **திருந்தவத்துறை அல்லது திருந்துறை** என்று பெயர் உண்டு கோயில் இரண்டு பிராகாரமுடையது. 1070வது ஆண்ட கோபரகேசரி வர்மன் எனும் சோழ அரசன் காலத்திய கல்வெட்டுகள் உள. முக்கிய உற்சவங்கள் மார்கழி மாதமும், பங்குனி மாதமும். இதற்கு 3 மைல் தூரத்தில் **திருமணல்பேதி** என்னும் சிவாலயம் உண்டு; பழய சோழ கட்டடம். விக்ரம சோழன் (1112—1117) காலத்திய கல்வெட்டுகள் உடையது. இதற்கருகிலுள்ள சிவாலயங்கள்—விடையாற்றுமங்கலம், சென்னிவாய்க்கால், ஆதிகுடி, அரியூர், ஆலம்பாக்கம், புள்ளம்பாடி, முதலிய இடங்களில் உள.

லாஹூர்—வட இந்தியா, பஞ்சாப்பிலுள்ளது—சிவாலயம், ஸ்வாமி மஹாதேவர், பைரவருக்கும் இங்கு கோயில்

உண்டு. காசியிற்போல் மகம்மதியர் கிறிஸ்தவர் தவிர மற்றவர்களெல்லாம் லிங்கபூஜை நேராகச் செய்யலாம்.

லிங்கம்பல்லி — சென்னை ராஜதானி, வட சர்க்கார் பிராந்தியம்—புதிய சிவாலயம்.

லிங்கேஸ்வரர்—வட இந்தியா, சுயம்புலிங்கம்; ஸ்வாமியின் பெயர் வரதேஸ்வரர்.

லிம்டி—வட இந்தியா, ரெயில் ஸ்டேஷன்—சிவாலயம்—ஸ்வாமி பீமநாதர், பீமனால் பூசிக்கப்பட்ட ஸ்தலம் என்பது ஐதிகம். சிவராத்ரி விசேஷம்.

லூடியானு கிராமம் — பஞ்சாப் மாகாணம்; வட இந்தியா—இங்குள்ள சிவாலயங்கள் (1) சம்பா கிராமம் சந்திரகுப்தர்கோயில், கௌரிஷங்கர் கோயில்; பித்தளையாலாகிய சிவ விக்ரஹம், பார்வதியுடன் இருக்கிறது. திருமுககோயில். இரண்டும் புதிய கோயில்கள், (2) பிராமார் கிராமம், சம்பா சமஸ்தானம், சிவாலயம்—ஸ்வாமி மணிமஹேசர், மேருவர்மனால் சுமார் 700 வருடங்களுக்குமுன் கட்டப்பட்டது.

லேபாட்சி — அநந்தபுரம் ஜில்லா, சென்னை ராஜதானி, ஹிந்துபூருக்கு 9 மைல் கிழக்கு; கூர்ம சைலகுன்று—சிவாலயம், விஜயநகர் அரசர்காலத்தில் 1538ல் விரூபண்ண என்பவரால் கட்டப்பட்டது. ஸ்வாமி வீரபத்ரஸ்வாமி, நரகண்டேஸ்வரர். வீரேஸ்வரர்கோயில் குன்றின் மீதுள்ளது. கல்யாண மண்டபம் அழகியது, முடிக்கப்படவில்லை. இங்குள்ள மஹா மண்டபம அழகிய சில்பமமைந்தது; 64 தூண்களால் தாங்கப்பட்டது. மண்டபத்தின் கூரையில் மஹா பாரத ராமாயணக் கதைகள் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. இங்குள்ள ஒரு சிலையின் கண் எந்தப்பக்கமிருந்து பார்த்தாலும் அதுநேரில் பார்ப்பதுபோலிருக்கிறது. கர்ப்பகிரஹத்திற்கு தெற்கில் ஒரே கல்லில் செதுக்கப்பட்ட ஒரு பெரிய நாகலிங்கம் உண்டு. இங்குள்ள நந்தி தஞ்சாவூர் கோயில் நந்தியைப் போல் பெரியது; 15 அடி உயரம 21 அடி நிகளம். இங்கு சாந்தேஸ்வரர் கோயில் என்று மற்றொரு சிவாலயமுளது.

லோதுகெட்டா—விசாகபட்டணம் ஜில்லா, சென்னை ராஜதானி, இங்கு முற்றிலும் கருங்கற்களால் கட்டப்பட்ட 4 சிவாலயங்கள் உள.

லெளரியா கிராமம் — வடக்கு இந்தியா சிவாலயம், ஸ்வாமி பெயர் மஹாதேவர், அருராஜ். (ஹாராஜ்?)

லோனட்—வட இந்தியா சிவாலயம், திராவிட சில்பம் —ராமேஸ்வர ஸ்வாமி; கி பி. 12-ஆம் நூற்றாண்டு கோயில்; சிகரமும் மண்டபமும் இடிந்து போயிருக்கிறது. சிவலிங்கம் பூமி மட்டத்தின் கீழ் இருக்கிறது.

லோனிகண்ட்—பூனா ஜில்லா, பம்பாய் ராஜதானி, சிவாலயம்—ஸ்வாமி ஜோகேஷ்வர், இங்கு மஹாதேவர் கோயில் என்று மற்றொரு சிவாலயமுண்டு.

வக்கணபுரம் — வேலூர் தாலூகா, வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்.

வக்கலை—(திரு) தென் ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, புதுச்சேரிக்கு 15 மைல் மேற்கு, விழுப்புரத்திலிருந்து 15 மைல்; ஸ்வாமி சந்திரசேகரேஸ்வரர், தேவி வடிவாம்பிகை அல்லது அமிர்தாம்பிகை, வக்கிரதீர்த்தம், சந்திர தீர்த்தம், பிரமம தீர்த்தம்; சந்திரன், குண்டலமாமுனி, வக்கிராசுரன் பூசித்த க்ஷேத்திரம். சிவலிங்கத்தில் சிவபெருமானது முகங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. கோபுரம் 7 நிலைகளுடையது. தற்கால ஆலயம் 9-ஆம் நூற்றாண்டில் கண்டராதித்யர் மனைவி செம்பொன்மாதேவியாரால் கருங்கல்லால் கட்டப்பட்ட தென்பர். அதற்கு முன்பு மரத்தால் அல்லது செங்கற்களால் கட்டப்பட்ட கோயிலாயிருந்திருக்கலாம்.

வங்கமல்லா—கடப்பை ஜில்லா, சென்னை ராஜதானி. இங்கு மால்கொண்டா எனும் மலையின் கீழ் மல்லேஸ்வர ஸ்வாமி கோயில்.

வட்டமுடிபல்லி—நெல்லூர் ஜில்லா, சென்னை ராஜதானி, கோடேஸ்வர ஸ்வாமி கோயில்; சுமார் 200 வருடங்களுக்குமுன் வெங்கடப்பா என்பவரால் கட்டப்பட்டது.

வடதலி—சென்னை ராஜதானி (தஞ்சாவூர் ஜில்லா?) சிவாலயம் ஸ்வாமி வடதீஸ்வரர் தேவி ஞானாம்பிகை, விஸ்வ தீர்த்தம், விஸ்வாமித்திரர் பூசித்த க்ஷேத்திரம், சமணரால் மூடியிருந்த லிங்கம் அப்பர் பாடியதால் வெளிவந்த தென்பர்.

வடக்கன்சேரி—மேற்கு இந்தியா, பாலக்காடு தாலூகா, மலபார் ஜில்லா, சென்னை ராஜதானி சிலாயயம்.

வடதில்லை—சென்னை ராஜதானி சிவாலயம்; ஸ்வாமி பாபஹரேஸ்வரர் தேவி மரகதவல்லி, ஆரணி நதி தீர்த்தம்.

வடாரண்யம்—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம்; இங்குள்ள வீணை தட்சிணமூர்த்தி அழகியது.

வடபேரூர்—சென்னை ராஜதானி, முசிறிக்கு 8 மைல் சிவாலயம்; வைப்புஸ்தலம்.

வடிவீஸ்வரம்—சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா, கன்யாகுமரிக்கு 8 மைல் சிவாலயம், தேவீஸ்வரர் அழகியநாயகி, சமுத்திர தீர்த்தம்—தேவி பூசித்தபடியால் அப்பெயர் பெற்றது.

வண்டலூர்—சென்னை ராஜதானி, செங்கல்பட்டு ஜில்லா, இங்குள்ள விஷ்ணு ஆலயம், ஓர் பழய சிவாலயத்தின்மீது கட்டப்பட்டதாக எண்ணப்படுகிறது.

வடுகூர்—(திரு) ஆண்டார் கோயில் எனவும் வழங்கப்படுகிறது. சின்னபாபு சமுத்திரம் ஸ்டேஷனுக்கு 2 மைல மேற்கு, சென்னை ராஜதானி, வைரவர் உக்ரவீர்ய ரிஷி பூசித்த க்ஷேத்திரம், ஸ்வாமி வடுகேஸ்வரர் தேவி வடுவகிர்க் கண்ணியம்மை, பெண்ணை நதி தீர்த்தம்; தென் இந்தியா ரெயில்ஸ்டேஷன், கண்டமங்கலத்திற்கு 2 மைல் வடுகஞ்சிய லுபரவர் பூசித்தமையால் வடுகூர் எனப்பெயர் பெற்றதென்பர். திருஞானசம்பந்தர் பாடல்பெற்றது.

வந்தவலை — திருவந்தவலை எனவும் அழைக்கப்படுகிறது. சிவாலயம்; ஸ்வாமி கோகர்ணீஸ்வரர், தேவி உமையம்மை, காமதேனு பூசித்த க்ஷேத்திரம்.

வந்தவாசி—வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம், ஸ்வாமி சுயம்பீஸ்வரர்; லிங்கம் சிதைவுண்டிருக்கிறது; சிவதீர்த்தம். கோயில் பாண்டிய அரசனற் கட்டப்பட்டதென்பர். ஜலகண்டீஸ்வரர் கோயில்—கோயிலில் விஷ்ணுவின் விக்ரஹமும் தற்காலம் ஆராதிக்கப்படுகிறது.

வருணை—மைசூர் ராஜ்யம், மைசூர் பிரிவு, ராமேஸ்வரர் கோயில்; சளுகிய கட்டடம்.

வல்லம்—(திரு) திருவலம், திருவல்லம்—என்றும் தற்காலம் வழங்கப்படுகிறது. வடஆற்காடு ஜில்லா, குடியாத்தம் தாலுகா, சென்னை ராஜதானி, ரெயில்ஸ்டேஷன்—ஆற்காடுக்கு 8 மைல் தூரம். வல்லாளன் எனும் அரசன், நவகிரஹங்கள், பூசித்த க்ஷேத்திரம். ஆசாரனென்னும்

அசுரனை சங்கரித்த ஸ்தலம், ஸ்வாமி வல்வநாதேஸ்வரர் தேவி வல்லாம்பிகை; கௌரிதீர்த்தம், சிவகெங்கை, நீவாநதி, வஜ்ர தீர்த்தம். இந்திரன் அகல்யையைப் புணர்ந்த சாபம் தீர இத்தீர்த்தத்தை யுண்டுபண்ணினனென் பது ஐதிகம். ஸ்வாமி ஜனக மஹாராஜாவுக்கு காட்சி கொடுத்தருளிய க்ஷேத்திரம். நந்தி கிழக்கு முகமாயிருக் கிறது; ஸ்வாமி மேற்குமுகம்; திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. இங்கு வில்வநாதேஸ்வரர் கோயில் என்று மற்றொரு சிவாலயமுளது. இக்கோயிலுக்குள் நடுவேஸ் வரர் எனும் சிறிய சிவாலயம் உண்டு. பிரம்மோற்சவம் தை மாசம்.

வல்லம்—செங்கல்பட்டு ஜில்லா சென்னை ராஜதானி, செங்கல்பட்டுக்கு 2 மைல்-குகைக் கோயில், முதல் மஹேந் திரவர்மன் காலத்தியது—600 - 625 கி.பி. பல்லவ சில்பம்; லிங்கம் திரண்ட உருவுடையது. வில்வநாதேஸ்வரர் கோயில் பாலாற்றின் கிளையாகிய நீவாநதியின் கரையி லுள்ளது. இங்கு கி. பி. 888 வருஷத்திய கல்வெட்டும் கி. பி. 11-ஆம் நூற்றாண்டின் கல்வெட்டொன்றும் உளது. இங்கு பழய கோயில் ஒன்று இருந்ததாகச் சொல்லப் படுகிறது.

வல்லம்—கிராமம்—திருவாங்கூர் ராஜ்யம்; சிவாலயம். இங்கு விஷ்ணுவுக்கும் பிரம்மாவுகளும் சன்னிதிகளுண்டு.

வல்லிக்குடி—கிராமம்—சென்னை ராஜதானி சிவால யம்; ஸ்வாமி கலியாணசுந்தரேஸ்வரர் தேவி பெரியநாயகி, கலியாண தீர்த்தம்.

வல்லிபுரம்—திருக்கழுக்குன்றம் தாலூகா, செங்கல் பட்டு ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம்.

வல்லிபுரம்—சென்னை ராஜதானி, கருவூருக்கு 20 மைல், சிவாலயம். ஸ்வாமி சங்கரநாராயணர் காமகிரி யம்மை.

வலஞ்சுழி—(திரு) தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜ தானி, சுந்தரப்பெருமாள் ஸ்டேஷனுக்கு 1 மைல் கிழக்கு; ஸ்வாமிமலைக்கு 2 மைல் தூரம், காவிரியானது முக்காலத் தில் வலமாய்ச் சுழித்துகொண்டு போனபடியால் அப் பெயர் பெற்றது; தேவேந்திரன் பூஜித்த க்ஷேத்திரம், ஸ்வாமி கற்பகநாதேஸ்வரர், சித்தீசர்; தேவி பெரியநாயகி, கித்தியாநாயகி; தீர்த்தங்கள் காவிரி, வலஞ்சுழி தீர்த்தம், ஐடா தீர்த்தம், அறுபத்தாறுகோடி தீர்த்தம். கோயில்

பழய சோழ கட்டடம், ஸ்வாமிக்கு கபர்தீஸ்வரர் என்றும் பெயர் உண்டு. ஹேரண்ட முனிவர் பூசித்த ஸ்தலம், காவிரி நதியானது பிலத்துவாரத்தின் வழியாக பாதாளம் போனதைத் தடுத்து, மறுபடியும் பூமியில் பாயும்படியாகச் செய்ததால், இம்முனிவருக்கு இங்கோயிலில் பூஜை நடக்கிறது. கோயிலில் பிலத்வாரதீர்த்த ஈஸ்வரரும் ஏரண்ட முனிவரும் வீற்றிருக்கின்றனர். அமிர்தமதன காலத்தில் இந்திரன் அமுதம் திரளும்படி விநாயகரை வெள்ளைப் பிள்ளையாராகப் பூசித்ததாக ஐதிகம். சிவாலயம் விநாயகர் கோயிலுக்குப் பின் உள்ளது. அம்பிகை ஒற்றைக்காலால் தவம்புரியும் சிலைபார்க்கத்தக்கது. அதற்குப் போகும் வழியில் சிறு கோபுரத்தின் மத்தியில் விஷ்ணுவின் சிலை யிருக்கிறது. ஸ்வேத விநாயகர் கோயிலுக்குமுன் புள்ள கல்லாலமைந்த பலகணி சிறந்த சில்பவேலையமைந்தது; 10 அடி உயரமுள்ளது, 6 அடி அகலம். இக்கோயில் மூற்காலம் ஜைனக் கோயிலா யிருந்ததென எண்ண இடமுண்டு. இங்கு கருங்கற்களாலான சில பெரிய தீபங்கள் உண்டு. குதிரைகளால் இழுகப்பட்ட ரதம்போன்ற கோயில்; விமானம் மிகவும் அழகிய சில்பவேலை பெற்றதாம். ராஜராஜேஸ்வர சோழன் இங்கு க்ஷேத்திர பாலகேஸ்வரர் கோயிலைக் கட்டுவித்தான் கோயிலில் 1050—63 வருஷத்திய கல்வெட்டுகள் இருக்கின்றன. இங்குள்ள விநாயகருக்கு ஸ்வேத விநாயகர் என்று பெயர்; மிகவும் வரப்பிரசாதி; அபிஷேகம் கிடையாது, புனுகு சட்டம் மாத்திரம் சாற்றுகிறார்கள். சதுர்த்தி தினம் இந்திர பூஜை. சனி பகவான் இங்கு கிழக்கு நோக்கியுள்ளார்.

வலம்புரம்—(திரு) மேற்கு பெரும்பள்ளம் என்று வழங்கப்படுகிறது. திருநனிப்பள்ளிக்கு 11 மைல், சென்னை ராஜதானி. மஹாவிஷ்ணு இங்கு சிவபெருமானைப்பூசித்து வலம்புரிச் சங்கம் பெற்றதாக ஐதிகம். சீர்காழிக்கு 8½ மைல்; ஸ்வாமி வலம்புரிநாதேஸ்வரர், தேவி வடுவகிர் கண்ணியம்மை, பிரமதீர்த்தம். பிரம்மோற்சவம் தை மாசம். ஏரண்ட ரிஷி முக்திபெற்ற க்ஷேத்திரம். மூவர் பாடல் பெற்றது.

வலிய உதேஸ்வரம் — திருவாங்கூர் ராஜ்யம்-சிவாலயம்.

வலியகொய்க்கல்—திருவாங்கூர் ராஜ்யம், வேட்டம் குமாரன கோயில், பரமசிவம் வேடன் உருவில் காட்சி கொடுத்த ஸ்தலம்.

வலிவலம்—திருவாரூரிலிருந்து 6 மைல் தென்கிழக்கு; சென்னை ராஜதானி, கன்னப்பூருக்கு 2 மைல் தெற்கு, சூரியன், காரணரிஷி, கரிக்குருவி பூசித்த ஸ்தலம், ஸ்வாமி மனத்துணை நாதேஸ்வரர், தேவி வாஞ்சையங்கண்ணியம்மை, சங்கர தீர்த்தம், காரணகங்கை; புன்னைவிருட்சம் மூவர் பாடல்பெற்றது.

வழுவூர் — பழுவூர் எனவும் அழைக்கப்படுகிறது. மாயூரம்—திருவாரூர் ரெயில் மார்க்கத்தில் மங்கைநல்லூர் ஸ்டேஷனுக்கு 1 மைல். தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். இக்கோயிலிலுள்ள வெண்கலத் தாலாகிய கஜசம்ஹாரமூர்த்தி மிகவும் அழகியது. அதி காரநந்திகளும் வெண்கல விக்ரஹம் உண்டு. கயாசுரனுகிய யானையை உரித்த ஸ்தலம், சுவாமி மரவுரிநாதர் தேவி வனமுலையம்மை, சிவகங்கை அஷ்டவீரட்டானங்களில் ஒன்று. கோபுரமும் பிராகார மதிலும் அழகப்பெருமாள் பிள்ளையால் கட்டப்பட்டது. மாசி மாசத்தில் பெரிய உற்சவம். தாருகாவனத்து ரிஷிபத்தினிகளின் ஆடை நழுவிய தால் வழுவூர் எனப் பெயர் பெற்றதென்பர். தீர்த்தம் பஞ்சப்பிரமம்.

வள்ளலார் கோயில்—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, சிவாலயம்; சாமுண்டி பூசித்த ஸ்தலம், மாயவரத்திற்கருகிலுள்ளது.

வள்ளிமலை—சென்னை ராஜதானி, இங்கு ஆதியில் ஜைன கோயிலாயிருந்தது சிவாலயமாக மாற்றப்பட்டதாம்.

வலையன்குடி—திருவளயன்குடி என்று அழைக்கப்படுகிறது, சென்னை ராஜதானி சிவாலயம்; இளையான்குடி நாயனார் பூசித்த ஸ்தலம்.

வளர்புரம்—வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம் ஸ்வாமி தாண்டவேஸ்வரர். கோயில குறும்பர் காலத்தில் கட்டப்பட்டதென்பர், பல கல்வெட்டுகள் உள.

வன்னியூர்—(திரு) சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, திருவீழிமிழலைக்கு 2 மைல் வடமேற்கு; அக்னி தேவர் பூசித்த க்ஷேத்திரம், எனவே வன்னியூர் என்னும் பெயர் பெற்றது. ஸ்வாமி அக்னீஸ்வரர் தேவி பார்வதியம்மை, அக்னி தீர்த்தம், குற்றாலத்திலிருந்து 8 மைல; ஆனைதாண்டவபுரத்திற்கு 4 மைல் மேற்கு. இவ்வூர் பொன்

னூர் எனவும் வழங்கப்படுகிறது. அப்பர் பாடல் பெற்றது.

வந்தம்பாலை—சென்னை ராஜதானி, சிவாலயம்—இதற்கு உத்தரகோகர்ணம் என்றும்பெயர்; விறன்மீண்ட நாயனார் சரித்திர சம்பந்தமானது.

வலங்கிமான் — சென்னை ராஜதானி தஞ்சாவூர் ஜில்லா; கும்பகோணத்திற்கு 5 மைல்—சிவாலயம்.

வரகூர் — திருவாகுடம்தோன்றி மாடம்—சென்னை ராஜதானி, சீர்காழிக்கு 6 மைல்; ஸ்வாமி சுயம்புநாதேஸ்வரர் தேவி குலகாந்திதேவி (?) அநந்தபுஷ்கரிணி; இந்திரன் பூசித்த ஸ்தலம்.

வாகுதேவநல்லூர்—திருநெல்வேலி ஜில்லா சென்னை ராஜதானி, சிவாலயம்; ஸ்வாமி சிந்தாமணிநாதர்.

வாஞ்சியம்—(திரு) சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, நன்னிலம் ஸ்டேஷனுக்கு 2 மைல மேற்கு, விஷ்ணு பூசித்து தன்னைப் பிரிந்த லக்ஷ்மியைப் பெற்ற ஸ்தலம். ஸ்வாமி வாஞ்சிநாதர், வாஞ்சிலிங்கேஸ்வரர்; தேவி மங்களநாயகி, வாழவந்தநாயகி, கூப தீர்த்தம், சூரிய தீர்த்தம்—கூப தீர்த்தத்தில் கார்த்திகை ஞாயிறுகளில் குளித்தால் எமவாதனை இல்லையென்பது ஐதிகம் இத்தலத்தில் மரிப்பவர்களுக்கு எமவாதனை கிடையாதென்பது ஸ்தல புராணம். காசிக்குச் சமானமாகச் சொலலப்படுகிறது. தெற்கு பிரபல க்ஷேத்திரங்களில் இது ஒன்றாகும். மூவர் பாடல் பெற்றது. இங்கு எமனுக்கு ஒரு கோயிலுண்டு, நாககன்னிகை இறைவனைத் தழுவி சாயுஜ்ய மடைந்ததால் அப்பெயர்பெற்றது.

வாட்போக்கி — ரத்னகிரி, மாணிக்கமால் என்றும் அழைக்கப்படுகிறது. சென்னை ராஜதானி; குளித்தலை ஸ்டேஷனுக்கு 5 மைல் தெற்கு, பரமசிவம ஒரு சோழ அரசன் எதிரில் நவரத்னங்கள் தோன்றும்படி செய்த ஸ்தலம். அவ்வரசன் தற்கொலைபுரிய தன் வாளை ஓங்க, அதை மறைந்துபோகும்படி செய்தபடியால் வாட்போகி எனப் பெயர்பெற்றது. கோயில் மலைமீது உளது. ஸ்வாமி ரத்னகிரீஸ்வரர், தேவி சுரும்பார் குழலமைமை. கௌரி தீர்த்தம்; அப்பர் பாடல்பெற்றது; இங்கு சுந்தரன் பொன்னடிப் பாறை என்று ஒரு பாறைஉளது.

வாதவூர்—மதுரை ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம் ஸ்வாமி வாதபுரீஸ்வரர், தேவி உமாதேவி, மாணிக்கவாசகர் பிறந்த ஸ்தலம், கோயில் கொஞ்சம

பாழடைந்திருக்கிறது. ஏரிக்கரையில் புருஷாமிருக சிலை இருக்கிறது.

வாமேஸ்வரம்—வட இந்தியா சிவாலயம்; சுயம்பு லிங்கம், ஸ்வாமி ஜடிலேஸ்வரர்.

வாய்மூர்—(திரு) தென் திருவாய்மூர் என்றும் வழங்கப்படுகிறது, சென்னை ராஜதானி திருக்கோவிலுக்கு 3 மைல் கிழக்கு, திருவாரூரிலிருந்து 10 மைல் தென்கிழக்கு; சூரியன் பூசித்த க்ஷேத்திரம், முசுகுந்த சக்ரவர்த்தி ஸ்ரீ தியாகராஜப்பெருமானைப் பிரதிஷ்டை செய்த ஸ்தலங்களில் ஒன்று; ஸ்வாமி வாய்மூர்நாதேஸ்வரர், தேவி பாலினுநன்மொழியம்மை, சூரிய தீர்த்தம், சண்டமாருத தீர்த்தம், சப்தவிடங்க ஸ்தலங்களில் ஒன்று, தியாகர் நிலவிடங்கர் — கமலநடனம். திருநாவுக்கரசு நாயனாரும் திருஞானசம்பந்தரும் ஒன்றாய் தரிசித்த க்ஷேத்திரம். அவ்விருவர் பாடல்பெற்றது.

வாங்கூர் — அல்லது வாணியாத்—காஷ்மீரத்தில் ஸ்ரீநகருக்கு 320 மைல் தூரம்; ஹரமுகம் எனும் மலையின் அருகிலுள்ளது. சிவாலயம்—ஸ்வாமி பூதேசர், கோயில் காஷ்மீர் சில்பம். கி. பி. எட்டாம் நூற்றாண்டிற்கு முன்பு கட்டப்பட்டது. உச்சலனால் (1101—1111) எனும் அரசனால் புதுப்பிக்கப்பட்டது.

வாயலூர் — திருவாயலூர் என வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி, கும்பகோணத்திற்கு 5 மைல் ஸ்வாமி யோகநாதேஸ்வரர், தேவி சௌந்தரநாயகி.

வாயலூர் — செங்கல்பட்டு ஜில்லா, சென்னை ராஜதானி, சதுரங்கபட்டணத்திற்கு 3 மைல், சென்னையிலிருந்து 45 மைல், கோயிலுக்குள் சிவபூஜை விஷ்ணுபூஜை, இரண்டும் நடக்கிறது. சிவாலயம் கஜப்பிருஷ்டஆகிருதி, சோழ கட்டடம், கர்ப்பகிரஹத்தில் பல கல்வெட்டுகள் உள. ஸ்வாமி திரிபுரேஸ்வரர்.

வாயலூர்—தென் இந்தியா—வியாக்கபுரீஸ்வரர் கோயில்—பல்லவ கட்டடம்.

வார்டா பிரிவு—மத்ய மாகாணம்—இங்குள்ள சிவாலயங்கள் (1) அலிபூர் கிராமம் சிவாலயம் (2) டாகா கிராமம் குகைக்கோயில், ஸ்வாமி மஹாதேவர் சிவராத்ரிவிசேஷம்.

வாரங்கல் கோட்டை—மத்ய இந்தியா நிஜாம் ராஜ்யம் சம்புலிங்கேஸ்வரர் கோயில்; இது சுமார் 1150ம் வரு கட்டப்பட்டதாம். இதன் கான்குபுரத்து வாயில்களிலு

நான்கு தீர்த்தீ ஸ்தம்பங்கள் உள. பார்க்கத்தக்கவை, இங்குள்ள 1000 கால் மண்டபம் பார்க்கத்தக்கது. கோயில் பாழாயிருக்கிறது. இக்கோட்டைக்குள் பல சிவாலயங்கள் இருந்தன; அவைகளெல்லாம் மகம்மதிய அரசர் காலத்தில அழிக்கப்பட்டன.

வாலிகண்டபுரம் — திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்; கொஞ்சம் கிலமாயிருக்கிறது.

வாலிபுரம் — தென் இந்தியா சிவாலயம்-திருவாலீஸ்வரர் தேவி வரதாம்பாள், அக்னி தீர்த்தம், ஜனகர், தூர்வாசர், வாலி பூசித்த க்ஷேத்திரம்.

வாலிபுத்தூர்—தென் இந்தியா சிவாலயம்—ஸ்வாமி மாணிக்க ஈஸ்வரர் தேவி வண்டமர்பூங்குழலி, மாணிக்க தீர்த்தம், பிரம்ம தீர்த்தம்—விஷ்ணு பூசித்த ஸ்தலம்.

வாலூர் — கிராமம்—சென்னை ராஜதானி, சிவாலயம்; ஸ்வாமி மாவினதேஸ்வரர்; தேவி வன்மாலைநாயகி (?)

வாழ்கொளிபுத்தூர் — (திரு) வாளொளிபுத்தூர்; வாலம்புத்தூர் எனவும் வழங்கப்படுகிறது தஞ்சாவூர் ஜில்லா சென்னை ராஜதானி—திருப்புன்கூருக்கு 2 மைல் மேற்கு; வைதீஸ்வரன் கோயிலிலிருந்து 5 மைல், நண்டு பூசித்த க்ஷேத்திரம், அன்றியும் மஹாவிஷ்ணு மாணிக்கத்தைவைத்து பூசித்த க்ஷேத்திரம்; ஸ்வாமி மாணிக்கவண்ணேஸ்வரர், தேவி வண்டார்பூங்குழலியம்மை, பிரம தீர்த்தம், வாகை விருட்சம். திருஞானசம்பந்தர் சுந்தரர் பாடல் பெற்றது.

வாஜ் — வட இந்தியா, வார்தா ஸ்டேஷனிலிருந்து 100 மைல—பம்பாய் ராஜதானி சிவாலயம்.

வான்மியூர்—திருவான்மியூர் என வழங்கப்படுகிறது. அமிர்தபுரி எனறு மற்றொரு பெயர் உண்டு மயிலாப்பூருக்குத் தென்கிழக்கில் 3 மைல தூரம். செங்கல்பட்டு ஜில்லா சென்னை ராஜதானி—வால்மீகமுனி பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமி மருததீஸ்வரர், அமிர்தீஸ்வரர்; தேவிசொக்கநாயகி, திரிபுரசுந்தரி; வன்னிமரம், இங்கு முற்காலத்தில் 5 தீர்த்தங்கள் இருந்தன. ஜன்னாசனி, பாபநாசனி, காமநாசனி, ஞானதாயினி, மோட்சதாயினி. லிங்கம் பால் நிறமானது, சுயம்புமூர்த்தி—தியாகருடைய ஸ்தலங்களில் ஒன்று, ஆடும்தியாகர். தியாகர் நடனம் ஓர் மேடைமீது நடக்கிறது. பிரம்மோற்சவம் பங்குனி மாசம். திரிபுர

சுந்தரிகோயிலில் பல பழய கல்வெட்டுகள் உள. 1011-1043 வருடங்களில் ஆண்ட ராஜேந்திரன் இக்கோயிலுக்கு பன்முறை தரிசிக்க வந்துளன். கர்ப்பகிரஹம் ஆதி சோழக் கட்டடம், கஜப்பிருஷ்ட ஆகிருதி. பிரஞ்சு பூர்வீக ஆசிரியர் தூர்ப்ஹெமில் துணையின்படி, இங்கு கர்ப்பக் கிரஹத்தில் பழய சோழக் கூடுகளின் சில்பங்கள் உள; மேல் பாகத்தில் சிங்க முகமும், நடுவில் மனிதமுகமு முடை யவை. கர்ப்பக்கிரஹம் மேற்கு பார்த்தது. இக்கோயி லிலுள்ள பைரவருடைய விக்ரஹமும், அப்பைய தீட்சித ருடைய விக்ரஹமும், கவனிக்கத்தக்கவை. இங்கு 108 லிங்கங்கள்உள. ஆரம்பிக்கப்பட்டு முடிக்கப்படாத கிழக்கு கோபுரம் உளது.

வாளாடி மேலக்கோயில் — வாளாடி புதுக்குடி என்றும் பெயர்—சென்னை ராஜதானி திருச்சிராப்பள்ளி ஜில்லா, சிவாலயம், ஸ்வாமி விஸ்வநாதர், தேவி விசா லாட்சி; வைப்பு ஸ்தலம்.

வாணியம்பாடி — சென்னை ராஜதானி, ஜோலார்ப் பேட்டைக்கு 9 மைல்—ரெயில்ஸ்டேஷன்—சிவாலயம்

வாலாஜாபேட்டை—சென்னை ராஜதானி, ஆற்காடு ஜில்லா, ஆறுகாடுக்கு 10 மைல்—சிவாலயம்.

விக்ரவாண்டி — தென் இந்தியா ரெயில்ஸ்டேஷன் சென்னை ராஜதானி, சிவாலயம்; ஸ்டேஷனுக்கு 2 மைல் கிழக்கிலுள்ளது, ஸ்வாமி நேத்ரோதர்க்கர்; முக்கிய உற்சவங்கள் தை சித்திரை மாசங்களில்; இங்கு இரண்டு சத்திரங்கள் உண்டு.

விசாக பட்டணம்—கிழக்கு இந்தியா ரெயில் ஸ்டே ஷன் சிவாலயம், ஸ்வாமி ஈஸ்வரர், தேவி பார்வதி, சிறிய கோயில்—புதியது. சிவராத்ரி உற்சவம்தான்.

விசைநல்லூர் — திருவிசைநல்லூர் என வழங்கப்படு கிறது, சென்னை ராஜதானி, சிவாலயம்; தர்மதீர்த்தம்; தூர்வாசர் பூசித்த க்ஷேத்திரம்.

விட்டல்—தென் கன்னட ஜில்லா, சென்னை ராஜ தானி; பஞ்சலிங்கேஸ்வரர் கோயில்.

விடைவாசல் — திருவிடைவாசல் என வழங்கப்படு கிறது. சென்னை ராஜதானி; பாபநாசம் தாலூகா, நீடா மங்கலம் ஸ்டேஷனுக்கு அருகிலுள்ளது, தஞ்சாவூர் ஜில்லா, 1918வது கோயிலில் திருஞானசம்பந்தருடைய தேவாரப்

பதிகம் ஒன்று நூதனமாகக் கல்வெட்டுகளில் கண்டுபிடிக்கப்பட்டது.

விடைச்சுழி—திருவிடைச்சுழி—நன்னிலம் தாலூகா, சென்னை ராஜதானி, தரங்கம்பாடிக்கு சமீபமுள்ளது சிவாலயம்; சேந்தனார் திருவிசைப்பா பெற்ற ஸ்தலம்.

விடைவாய்க்குடி—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, ஆரூருக்கு 5 மைல்; கைலாயநாதர் உமாதேவி—வைப்புஸ்தலம்.

விந்தியபர்வதம்—மத்ய இந்தியா, சுயம்புலிங்கம்; ஸ்வாமி வராஹேஸ்வரர்.

விப்பர்லா—நரசராவ்பேட் தாலூகா, குண்டூர் ஜில்லா, சென்னை ராஜதானி; சிவாலயம்; ஸ்வாமி, மல்லேஸ்வரன்; கோயில் சிலமாயிருக்கிறது.

விமலேஸ்வரம்—வடஇந்தியா, சுயம்புலிங்கம், ஸ்வாமி விஸ்வேசர்—ஸ்ரீகண்டர்.

வியலூர்-திருவிசலூர் பண்டாரவாடை எனவும் வழங்கப்படுகிறது. திருந்துதேவன்குடிக்கு 10 மைல் வடக்கு. கும்பகோணம் தாலூகா, தஞ்சாவூர் ஜில்லா, கும்பகோணத்திலிருந்து 4 மைல், சிவாலயம்; ஸ்வாமி யோகாநந்தேஸ்வரர் அல்லது ஏகாந்தராதேஸ்வரர், தேவி சௌந்தரநாயகி, நிருதி தீர்த்தம், சடாயு தீர்த்தம். அரசனுக்கஞ்சி இறந்த அடியவரை உயிர்ப்பித்த ஸ்தலம், இவ்வூருக்குப் பழய பெயர் வேம்பத்தூர் அல்லது சோழமார்த்தாண்ட சதுர்வேதி மங்கலம். இக்கோயிலில் 1000 வருஷத்திற்கு முற்பட்ட கல்வெட்டுகள் உள. இங்கு 1013வது முதல் ராஜராஜன் ஆலாபாரம் நடத்தியதாக சொல்லப்படுகிறது. திருஞான சம்பந்தர் பாடல்பெற்றது. இங்கு அருகாமையில் கார்காத்தீஸ்வரர் கோயில் என்று ஒரு சிவாலயமுளது.

வியாக்ரேஸ்வரபுரம்—கோதாவரி ஜில்லா, சென்னை ராஜதானி. ஒரு புலியானது லிங்கமாக மாற்றப்பட்டதென்பது ஐதிகம். புலி பூஜித்த க்ஷேத்திரமாம்.

வியாசர்பாடி—செங்கல்பட்டு ஜில்லா, சென்னபட்டணத்திற்கு வடக்கிலுள்ள கிராமம், சிவாலயம்; ஸ்வாமி இரவீஸ்வரர், தேவி மரகதாம்பாள்.

விராலிமலை—புதுக்கோட்டை சமஸ்தானம், சென்னை ராஜதானி, சிவாலயம், குகைக் கோயில்.

விராஜா—வட இந்தியா, சுயம்புலிங்கம்; ஸ்வாமி திரைலோசனர்.

விருஷஸ்தானம் — வட இந்தியா சுயம்புலிங்கம்—ஸ்வாமி யமலிங்கேஸ்வரர்.

விரிஞ்சிபுரம்—சென்னை தெற்கு மராவ்டிர ரெயில் ஸ்டேஷன்—திருவாஞ்சை, கௌரிபுரம், மரகத நகரம் எனவும் வழங்கப்படுகிறது. சிவாலயம்—ஸ்வாமி மார்க்க சகாயதேவர், தேவிமரகதவல்லி, சக்திதீர்த்தம்கார்த்திகை கடைஞாயிறு உற்சவம் விசேஷம். இதற்கு மகம்மேரு மகோற்சவம் என்று பெயர். தொண்டை நாட்டில் பாலி நதிக்கரையிலுள்ளது. பார்வதி தேவிக்கு ஒரு காரணத்தால் கருநிறம் வாய்க்க அதுநீங்க இங்கு அவர்கள் பரமசிவத்தை பூசித்த க்ஷேத்திரம்—வாணி பத்தின்மீதுசென்ற ஒருவனுக்கு வழித்துணையானபடியால் ஸ்வாமிக்கு மார்க்கசகாயர் எனப் பெயர் வந்தது. தம்மை பூஜைசெய்த ஆதிசைவப் பிராமண பிள்ளைக்குத் தன் திருமுடியை வளைத்தருளிய ஸ்தலம். நால்வர் பாடல் பெற்றது. பழய கோயில் ஸ்ரீ கிருஷ்ணதேவராயரால் புதுப்பிக்கப்பட்டது. சில்பங்கள் விசேஷ வேலைப்பாடுள் ளவை. கோயிலுக்குள் சிம்ஹ புஷ்கரிணி எனும் குளம் உளது கௌரிதேவி நிர்மாணம், இதில்தான் கடைஞாயிறு ஸ்நானம்; இதில் ஸ்நானம் செய்தால் பிசாசு பிடித்த வர்கள் சுவஸ்தமாவார்கள் என்று எண்ணப்படுகிறது. கோயிலில் ஆதி சங்கராசாரியார் சக்கரஸ்தாபனம் உளது. பிரம்ம தீர்த்தம், அஷ்டகோண வடிவமுடையது; பிரம னால் உண்டாக்கப்பட்டதென்பர். கோயில் அஷ்டதிக் மண்டபங்கள் அடங்கியது; பஞ்சப்பிராகாரங்களுடையது, நவஸ்தூபிகளுடையது, கர்ப்பகிரஹம் லிங்காகாரமானது ஸ்தூபி சிம்மாசனத்தோடு கூடியது. கர்ப்பக்கிரஹம் பழய சோழ கட்டடம், மஹா மண்டபம் மல்லிகுமபராயர் என்பவரால் கட்டப்பட்டது. விஜயநகரத்தரசர் காலத் தில 100-க்கால் மண்டபம் வீரகும்பராயரால் கட்டப் பட்டது; கிழக்கு கோபுரம் விஜயநகரம் அச்சுதராயரால் கட்டப்பட்டது. இங்கு 50-கு மேற்பட்ட மடங்களும், சத்திரங்களும் இருகின்றன. அவற்றுள் சப்பைய தீட்சிதர் மடமொன்றும்.

விருத்தாசலம்—முதுகுன்றம் என்பது இதன் தேவா ரப் பெயர், விருத்தகாசி என்றும் பெயர், தென் இந்தியா ரெயில்ஸ்டேஷன்; கூடலூருக்கு 35 மைல் தெற்கு, சிவால யம்; ஸ்டேஷனுக்கு 1 மைல்; ஸ்வாமி பழமலைநாதர், தேவி பெரியநாயகி; விருத்தாம்பாள், பாலாம்பாள் என்று

இரண்டு அம்மன்களுண்டு. மணிமுத்தாநதி, வன்னிவிருட்சம். பிரமன், அட்டவசுக்கள், உமை, விபசித்து, சிவனன்னள் பூசித்த ஸ்தலம். இங்கு இறக்கும் ஜீவகோடிகள் பார்வதியார் காப்பாற்ற, சிவபெருமான் பஞ்சாட்சர உபதேசம் செய்து தமது சாரூபமளிக்கும் ஸ்தலம் என்பது ஸ்தல புராணம். பிரமமோற்சவம் மாசி மாதம். கோயில் உத்தம சோழனது தாயாரால் கட்டப்பட்டதென்பர். சிலர் விபாசித்தன் றமஹரிஷியால் கட்டப்பட்டதென்பர். 4 பெரிய கோபுரங்களை யுடையது; இரண்டு பெரிய பிராகாரங்கள் உள. இங்குள்ள வன்னிமரம் மிகவும் புனிதமானது. கோயிலில் ஒரு மண்டபம் மிகவும் அழகிய சில்ப வேலை யுடையது; காடவபல்லவ ராஜனல் கட்டப்பட்டது. விஜயகர் சந்நிதி மிகவும் கீழ்மட்டத்திலிருக்கிறது, பூமியிற் குகை நமசிவாயருக்காக அம்பிகை விருத்தையாகவும், பாலையாகவும் தோன்றியதாக ஐதிகம். இங்கு பல சத்திரங்கள் உள. முக்கியமானவை (1) துரைசாமி செட்டியார் சத்திரம், வடகுக் கோட்டைத தெரு, 1 மைல், (2) பழனியப்ப செட்டியார் சத்திரம், (3) ரங்கசாமி பிள்ளை சத்திரம், (4) அப்பு ரெட்டியார் சத்திரம, தெற்கு கோட்டைத்தெரு, (5) செட்டியார் சதத்திரம், அய்யனர் கோயில் தெரு. மூவர் பாடல் பெற்றது.

விருதுநகர்—ராம்நாட் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்—ஸ்வாமி சொக்கநாதர்.

விருஷாசலம் — (விருஷப + அசலம்) மலையாளத்திலுள்ளது; சென்னை ராஜதானி; குன்றின்மீது சிவாலயம்; இங்குள்ள நந்தி பெரியது, வெண்மைநிறமுடையது இதற்கு சிவபேரூர் என்றும் பெயர்.

வில்லிபுத்தூர்—திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜதானி, தற்காலம் பிரபல விஷ்ணுஸ்தலம். இது பூர்வத்தில் சிவாலயமாயிருந்ததென்பதற்கு அத்தாட்சிகள் உள. இங்கு மூசாபர் பங்களா உண்டு.

வில்லிவாக்கம்—எம். எஸ். எம். ரெயில் ஸ்டேஷன்—கொணலூர் என்று சாதாரணமாக வழங்கப்படுகிறது. சிவாலயம; ஸ்வாமி அகத்தீஸ்வரர் தேவி சொர்ணாம்பிகை; பழய கோயில் புதுப்பிக்கப்பட்டது. கோயில் ஸ்டேஷனிலிருந்து சுமார் $\frac{1}{2}$ மைல், இங்கு பல சத்திரங்கள் உள. கோயிலுகெதிரில் ஒரு குளம் உண்டு, பிரம்மோற்சவம் வைகாசி மாதம்.

வில்லியனூர் — சென்னை ராஜதானி; புதுச்சேரிக் கருகில் பிரெஞ்சு இலாகாவில் உள்ளது. சிவாலயம்—ஸ்வாமி திருக்காமேஸ்வரர், தேவி கோகிலாம்பாள். கல் வெட்டுகளில் இவ்வூர் வில்லியநல்லூர் என்றிருக்கிறது, ஸ்வாமி பெயர் காமீசுரமுடையார் என்றிருக்கிறது. விருஷ போற்சவம் பிரபலம்.

விழிச்சிலூர் — திருவிழிச்சலூர் என்றழைக்கப்படுகிறது, சென்னை ராஜதானி; சிவாலயம்—ஸ்வாமி ஆதிசண்டேஸ்வரர்.

விழுப்புரம் — தென் ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்—ஸ்வாமி கைலாசநாதர். பிரம்மோற்சவம் சித்திரை மாதம். இங்கு சத்திரமுண்டு.

விளந்தை — உடையார்பாளையம் தாலூகா, திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்—ஸ்வாமி அகஸ்தீஸ்வரர், தேவி தர்மசமவர்த்தனி.

விளநகர்—(திரு) தஞ்சாவூர் ஜில்லா சென்னை ராஜதானி, மாயவரத்திற்கு 4 மைல் கிழக்கு—சிவாலயம், ஸ்வாமி துறைகாட்டுவள்ளலார், தேவி வேயுறுதோளியம்மை அல்லது தோழியம்மை; காவிரிநதி, மெஞ்ஞான தீர்த்தம். சிவ பூசைக்காக புஷ்பம் கொண்டுவரும் வேதியனை காவிரி வெள்ளம் அடித்துக்கொண்டு போக, கூடையை விடாது சிவபெருமான அவன் பிரார்த்திக்க, அவனுக்கு துறை காட்டி காத்தருளியபடியால் ஸ்வாமிக்கு அப்பெயர் வந்தது. திருஞானசம்பந்தர் பாடல்பெற்றது. கோபுரம் 5 நிலையுடையது. தர்மபுரம் ஆதீனம மேற்பார்வையிலடங்கியது.

வீளமர்—(திரு) சென்னை ராஜதானி தஞ்சாவூர் ஜில்லா, திருவாரூருக்கு 3 மைல் தெனமேற்கு; சிவாலயம் ஸ்வாமி பதஞ்சலி மனோஹரேஸ்வரர் தேவி யாழினுமென் மொழியம்மை, அக்னி தீர்த்தம், பதஞ்சலிமுனிவர் பூசித்த க்ஷேத்திரம்; பதஞ்சலி வியாக்ரபாதர்களுடைய விக்ரஹங்கள் கோயிலில உண்டு. திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. விடங்க ஸ்தலங்களிலொன்று.

வீளாப்பாக்கம்—வாலாஜாபேட்டை தாலூகா, வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி; நாகராதேஸ்வரர் கோயில்.

விற்குடி — (திரு) திருவிற்குடிவீரட்டம் என்பது தேவாரப் பெயர். தென் இந்தியா ரெயில ஸ்டேஷன, வெட்டாறுக்கு 3½ மைல் வடகிழக்கிலுள்ளது. நந்திலம

தாலுகா தஞ்சாவூர் ஜில்லா சென்னை ராஜதானி, பரம சிவ ஜலந்தரனை வென்ற ஸ்தலம். சந்திரசேகரர் ஆலயத்தில் சிவபிரான் கையில் சககரமுள்ளது. அஷ்டவீரட்டான க்ஷேத்திரங்களிலொன்று; ஸ்வாமி வீரட்டானேஸ்வரர், தேவி மையார்குழலியம்மை, ஏலவார்குழலி; சக்கர தீர்த்தம். திருஞானசம்பந்தர் பாடல்பெற்றது.

விஷ்ணாம்பேட்டை — திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி; பூதலூருக்கு 6 மைல்; சிவாலயம்—கைலாசநாதர் காமாட்சியம்மன். வைப்புஸ்தலம்—இதற்கருகில் 2 சிவாலயங்களுண்டு

விஜயநகரம் — சென்னை ராஜதானி சந்திரசேகரர் கோயில்—தற்காலம் பூஜையில்லை.

விஜயமங்கை—சென்னை ராஜதானி, திருச்சிராப்பள்ளி ஜில்லா, உடையார்பாளயம் தாலுகா, கொள்ளிடக்கரையில கோவந்த பூத்தூரிலுள்ளது. திருப்புறம்பியத்திற்கு அருகிலுள்ளது. அர்ஜுனன் சிவபெருமானைப் பூசித்து பாசுபதாஸ்திரம் பெறற ஸ்தலம்என்பது ஐதிகம். கும்பகோணத்திலிருந்து 8 மைல்; ஸ்வாமி விஜயநாதேஸ்வரர் (விஜயன் = அர்ஜுனன்) தேவி மங்கைநாயகி, அர்ஜுன தீர்த்தம்; சிறிய கோயில்; கோயிலுக்கு மஹாவனீச்சரம் என்று பெயர். திருஞானசம்பந்தர், அப்பர் பாடல்பெற்றது.

விஸ்வேசம்—வட இந்தியா சிவாலயம-சுயம்புலிங்கம், ஸ்வாமி விருஷபதுங்கர்.

விளத்தொட்டி — சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, தேவார வைப்புஸ்தலம், வைதீஸ்வரன் கோயிலிலிருந்து திருப்பந்தணை நல்லூருக்குப் போகிற வழியில் 12 மைல் தூரத்தில் உள்ளது—சிவாலயம், ஸ்வாமி பிரமபுரீசர், தேவி இட்சுரசநாயகி, பிரமதீர்த்தம்; இந்திரன் முதலிய திக்பாலர்களும், பிரமனும் பூசித்தஸ்தலம். இத்தலத்தில் பூசித்தால் பைத்தியம் நிவாரணமாகுமென்பது ஐதிகம்.

விஜயமாநகரம் — சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா, திருச்செந்தூருக்கு 11½ மைல் சிவாலயம் மனோன்மணீசர், சிவகாமி; பிர்மா, விஷ்ணு, அர்ஜுனன் பூசிதது.

வீரச்சாலை—புதுக்கோட்டைச் சமஸ்தானம் சென்னை ராஜதானி, திருமயம் தாலுகா, பெரிய சிவாலயம்.

வீரசிகாமணி—சென்னை ராஜதானி, குகைக்கோயில்—குகைக்குள் லிங்கம் உளது.

வீரபத்ரபுரம்—கோதாவரி ஜில்லா, சென்னை ராஜதானி; சிவாலயம், தேவடுபிஞ்சரி எனும் குன்றின்மீதுள்ளது. ஸ்வாமி வீரபத்ரர்—சிவராத்ரி விசேஷம்.

வீரபாண்டி,—மதுரை ஜில்லா சென்னை ராஜதானி, சிவாலயம்; கண்ணைஸவர உடையார் வீரபாண்டியனால் கட்டப்பட்டது. குருடான வீரபாண்டியனுக்கு பரமசிவம் ஒரு கண் கொடுத்தார் என்பது ஐதிகம்.

வீரமாங்குடி, — சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, சக்கரப்பள்ளிக்கு அருகிலுள்ளது, சிவாலயம்—கைலாயநாதர் ஆநந்தவல்லி.

வீரவநல்லூர்—வடக்கு அம்பா சமுத்திரம் தாலூகா, திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்—பூமிநாதஸ்வாமி தேவி மரகதாம்பாள் தைப்பூச உற்சவம்—விசேஷம் கோயில் வீரை அறன் எனும் பாண்டியனால் கட்டப்பட்ட தென்பர்.

வீழிமிழலை — சென்னை ராஜதானி, குற்றாலத்திலிருந்து 6 மைல்; மஹாவிஷ்ணு தன் கண்ணைப்பறித்து தாமரையாக சிவபெருமானைப் பூஜித்து சக்கரம் பெற்ற க்ஷேத்திரம்—விண்ணிழிவிமானர் கோயில்; ஸ்வாமி வீழி அழகேஸ்வரர் தேவி சுந்தரகுசாம்பிகை அல்லது சுந்தராம்பிகை; விஷ்ணு தீர்த்தம் அல்லது சக்கர தீர்த்தம்; வீழி விருட்சம், திரு+விழி+மிழலை=திருவீழிமிழலையாயிருக்கலாம்; அப்பருக்கும் திருஞானசம்பந்தருக்கும் பஞ்சகாலத்தில் பொன் கொடுத்தருளிய ஸ்தலம்; அப்பொன் வைக்கப்பட்ட கல் ஸ்தம்பம் இன்றும் காட்டப்படுகிறது. ஸ்வாமி மணக் கோலத்துடன் எழுந்தருளியிருக்கிறார். சீர்காழியிலிருந்த கோலத்தை திருஞானசம்பந்தருக்கு இங்கு விமானத்தில் காட்டியருளியஸ்தலம். இக்கோயிலின் வெளவால் நெற்றிமண்டபம் அழகியது. இதன் வடக்கு வீதியில் திருஞானசம்பந்தருடைய ஆலயமும் அப்பருடைய ஆலயமும் உளது; மூவர் பாடல் பெற்றது. சேந்தனார் திருவிசைப்பா பெற்றது. அடியார்கள் திருவமுது கொண்ட இடத்திற்கு ஆண்டார் பந்தி யென்றும், அவர்களுக்கு சமயல் செய்த இடத்திற்கு பாகசாலை என்றும் பெயர் உளது; பாகசாலையைத் தற்காலம் பாசாலை என்று அழைக்கின்றனர்.

வெங்கடகிரி—சென்னை ராஜதானி, ரெயில் ஸ்டேஷன்; சிவாலயம் சிறியது; பிரம்மோற்சவம் ஆனி மாதம் ஸ்வாமி காளத்தீசர், தேவி ஞானம்பிகை.

வெங்கனூர்—திருவெங்கை என்றழைக்கப்படுகிறது. திருச்சிராப்பள்ளி ஜில்லா, பெரும்பாளூருக்கு 12 மைல்; சென்னை ராஜதானி, அழகிய சிவாலயம்—கர்ப்பக்கிரஹம் ஆவுடையாரைப்போன்றது; சுமார் 1622வது அண்ணமலை ரெட்டியாரால் கட்டப்பட்டது. லிங்கம் நர்மதை நதியிலிருந்து கொண்டுவரப்பட்டது. ஸ்வாமி விருத்தாசலேஸ்வரர், தேவி பெரியநாயகி.

வெஞ்சமாக்கூடல்—(திரு) சென்னை ராஜதானி, கரூர் ஸ்டேஷனுக்கு 12 மைல் தெற்கு, வெஞ்சன் எனும் அரசனது தலை நகராயிருந்து அவன் பூசித்த ஸ்தலம். ஸ்வாமி விகிர்தநாதேஸ்வரர், தேவி விகிர்தநாயகி, விகிர்த தீர்த்தம்; கொங்கு தேசத்திலுள்ள 7 முக்கிய சிவாலயங்களில் இது ஒன்றாகும். சுந்தரர் பாடல் பெற்றது.

வெண்காடு—(திரு) சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, சம்ஸ்கிருதத்தில் ஸ்வேதாரண்யம் எனப்படும். சீர்காழிக்கு 7½ மைல் தென்கிழக்கு—தேவேந்திரனும், வெள்ளையானையும் பூசித்த க்ஷேத்திரம்; இங்கு சோமசூர்ய அக்னி எனும் மூக்குளங்களுண்டு. இம்மூக்குளங்களிலும் ஸ்நானம் செய்பவர் சகல பாபங்களினின்றும் நீங்கி எண்ணிய கர்மம் பூர்த்திபெறுவார் என்று திருஞான சம்பந்த ஸ்வாமி பாடியுள்ளார். ஸ்வாமி ஸ்வேதாரண்ய ஈஸ்வரர், தேவி பிரம்மவித்யாநாயகி. மேற்சொன்ன மூன்று தீர்த்தங்களன்றி, காயத்ரிதீர்த்தம் மணிகர்ணிகை எனும் தீர்த்தங்களும் உள. வடவால விருட்சம்; கோயிலில் பல கல்வெட்டுகள் உள; அவற்றுளொன்றில் ஆடவல்லார் விக்ரஹமும், விருஷபவாகனதேவர் விக்ரஹமும் இக் கோயிலிலிருப்பதாக குறிப்பிட்டிருக்கிறது. மற்றொன்றில் ஸ்வாமியின் பெயர் திருவெண்காட்டுப் பெருமாள் என்றிருக்கிறது. கோயிலிலுள்ள வெண்கல பிட்சாடனமூர்த்தி விக்ரஹம் மிகச் சிறந்தது. இக்கோயிலில் நவக்கிரகங்கள் வக்கிரமாயில்லாது வரிசையாக வைக்கப்பட்டிருக்கின்றன. கோயில் 799 x 310 விஸ்தீர்ணம். மெய்கண்டதேவர் பிறந்த ஊர். மருத்துவாசுரன் என்பவன் நந்திதேவரால் தோற்கடிக்கப்பட, ஈஸ்வரனைக் குறித்துப் பிரார்த்தித்து அவரது சூலத்தைப் பெற்று மறுபடியும் யுத்தத்திற்குச் சென்று, நந்தியின் வால் முதலிய

வைகளை வெட்ட, பிறகு பரமசிவம் அகோரமூர்த்தியை சிருஷ்டித்தனுப்ப, அவர் அந்த அசுரனை இங்கு கொன்றார் என்பது ஸ்தல புராணம். ஸ்வாமிக்கு எதிரிலுள்ள நந்தி மேற்சொன்னபடி பின்னப்பட்டிருக்கிறது; அகோரமூர்த்தி விசேஷம்; இங்குள்ள பிள்ளையாருக்கு பெரியவாராணப் பிள்ளையார் என்றும். விலங்கு தரித்த பிள்ளையார் என்றும் பெயர். மூவர் பாடல்பெற்ற க்ஷேத்திரம். இங்கு மணிகர்ணிகைக்கு வடப்பக்கம் **யோகீஸ்வரம்** எனும் சிவாலயமுளது. இங்கு மாதங்கியாகப் பிறந்த பார்வதியை பரமசிவம் மணந்ததாக ஐதிகம். பிரம்மோற்சவம் மாசி மாதம்.

வெண்குடி, — சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா, சிவாலயம்; திருநெல்வேலிக்கு 25 மைல்; ஸ்வாமி சொக்கேசர், தேவி சிவகாமி, சிபி சக்ரவர்த்தி பூஜித்த ஸ்தலம்.

வெண்குன்றம்—வந்தவாசி தாலூகா, வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி—தவளகிரீஸ்வரர் கோயில் மலைமீதுள்ளது.

வெண்ணெய் நல்லூர்—திருக்கோயிலூர் தாலூகா, தென் ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம்; கல்வெட்டுகளில் திருவெண்மை நல்லூர் என்று பெயர் இருக்கிறது மாம்பழபட்டு ஸ்டேஷனுக்கு 6 மைல் தெற்கு, ஸ்வாமி தடுத்தாட்கொண்ட ஈஸ்வரர், ரிஷபவாகனரூடராயிருக்கிறார், தேவி வேற்கண்ணியம்மை; பெண்ணை நதி. கல்வெட்டுகளில் ஸ்வாமிபெயர் அருட்துறையாள்வார், ஆட்கொண்டதேவர் என்றிருக்கிறது. ஆலயத்திற்கு திருஅருட்டுறை என்று பெயர்; (திருபாபுரீஸ்வரர் கோயில் சம்ஸ்கிருதம்) சிவபெருமான் சுந்தரரைத் தடுத்தாட்கொண்ட திவ்ய க்ஷேத்திரம். சம்புபூத்தரிஷி பூஜித்த ஸ்தலம், மெய்கண்டதேவர் பூஜித்த ஸ்தலம். இக்கோயிலில் வழக்கு மன்றம் என்று ஒரு மண்டபம் இருந்ததாகச் சொலலப்படுகிறது.

மணம்தவிர்த்த புத்தூர்—பண்ணுருட்டிக்கு 4 மைல் தூரத்திலிருக்கிறது; இதுவன்றி தடுத்தாட்கொண்ட ஊர் எனும் கிராமம் இதற்கு 1½ மைலிலிருக்கிறது. சுந்தரர் பாடல் பெற்றது; கோயிலில் ஸ்வாமி ரிஷபவாஹனரூடராய்க் காட்சியளிக்கின்றார்.

வெண்ணெய்மலை—சென்னை ராஜதானி, கரூருக்கு அருகிலுள்ளது. கோயமுத்தூர் ஜில்லா, ஸ்வாமி விஸ்வ

நாதர்; தேவி விசாலாட்சி, கோயில் காசிவாசி என்ப வரால் புதிதாய்க் கட்டப்பட்டது. சிவலிங்கம் சிவந்த நிற முடையது.

வெண்துறை — (திரு) வெண்துறை—சென்னை ராஜ தானி, தஞ்சாவூர்ஜில்லா, திருவண்டுதுறை யெனவும் வழங் கப்படுகிறது. மன்னார்குடி ஸ்டேஷனுக்கு 13 மைல் கிழக்கு; பிருங்கி மஹாரிஷி பூசித்த க்ஷேத்திரம்; ஸ்வாமி வெண் டுறைநாதேஸ்வரர்; தேவி வேல்நெடுங்கண்ணியம்மை. அகஸ்திய தீர்த்தம்; வித்யாதரர் பூசித்த ஸ்தலம் என்பது ஸ்தல புராணம். திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

வெண்பாக்கம்—திருவிளம்பூர், திருவுளம்பூதூர், என வும் வழங்கப்படுகிறது. திருவள்ளூருக்கு 6 மைல் வடகிழ க்குள்ளது. சென்னை ராஜதானி, சுந்தரர் சங்கிலிநாய்ச்சியா ருக்குக் கொடுத்த வாக்கு தவறியபடியால் கண்களிழந்து, இங்கு வந்தபிறகு ஊன்றுகோல் பெற்ற ஸ்தலம். சுந்தரர் தன் பதிகத்தில் "உளோம் போகிர் என்றனே" என்று பாடிய க்ஷேத்திரம், எனவே திருவுளம்பூதூர் எனப்பெயர் பெற்றது. ஸ்வாமி வெண்பாக்கநாதர், தேவி கனிவாய் மொழியம்மை; கைலாய தீர்த்தம், இதற்கு 1½ மைல் தூரத் தில் மற்றொரு சிவாலய முளது. ஸ்வாமி கைகாட்டியநாதர் (முத்துலிங்கேஸ்வரர்?) தேவி பரமேஸ்வரி.

வெள்ளக் கோயில் — கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, தாராபுரம் தாலூகா — பழய சிவால யம், பல கல்வெட்டுகள் உடையது.

வெள்ளவாயல்—செங்கல்பட்டுஜில்லா, பொன்னேரி தாலூகா, சென்னை ராஜதானி, திருவள்ளீஸ்வர ஸ்வாமி கோயில்.

வெள்ளறை — திருவெள்ளறை என வழங்கப்படு கிறது. சென்னை ராஜதானி, திருச்சிராப்பள்ளி ஜில்லா— மேற்படியூருக்கு 1மைல் தூரம்; ஜம்புநாதஸ்வாமி கோயில்; அன்றியும் குடைவரைக் கோயில் ஒன்றுளது. மிகவும் பழமையானது, சிறுகர்ப்பக்கிரஹமும், முன் மண்டபமும் அடங்கியது; இந்த முக மண்டபத்தில் நான்கு மாடங்க ளிருக்கின்றன. இவற்றுள் வலது புறமாடத்தில் மஹா விஷ்ணுவின் உருவம் செதுக்கப்பட்டிருக்கிறது. இது பல்லவர்கள் காலத்தில் நரசிம்மவர்மன் அல்லது நந்திவர் மனால் வெட்டப்பட்டதென்று எண்ண இட முண்டு; காலம் 625-505—குகைக் கோயில் பூர்த்தியாகவில்லை—இங்குள்ள அம்மன் கோயிலுக்கு முன் உள்ள மேடையின் அடி-

பாகத்தில் சில முக்கியமான கல் வெட்டுகள் உள. அவை களில் திருவாஹனக்கா பெருமான் அடிகள் என்று குறிப் பிட்டப்பட்டிருக்கிறது. மேலும் இங்குள்ள காவுமூலைக் கேணியில் பரமசிவம், பார்வதி தேவி, பரிவார தேவதை கள், சப்தமாத்ருக்கள் முதலிய சிலைகள் செதுக்கப்பட் டிருக்கின்றன. இங்கு கிணறு பல்லவ அரசனை தந்திவர்ம னால் குடையப்பட்டது; கல்வெட்டுகளில் "மாரப்பிடுகு பெருங்கிணறு" என்றிருக்கிறது. இது 7-ஆம் நூற்றாண் டியதென எண்ணப்படுகிறது.

வெள்ளனூர் — புதுக்கோட்டை சமஸ்தானம், கல் வெட்டுகளில் இவ்வூரின் பெயர் வெள்ளகல்லூர் என்றிருக் கிறது. இங்கு 2 சிவாலயங்கள் உண்டு. ஒன்றில் மாத்திரம் தற்காலம பூஜை நடக்கிறது. இரண்டும் பழய சோழ கட்டடங்கள்.

வெள்ளிவாக்கம்—சென்னை ராஜதானி, சிவாலயம், ஸ்வாமி கார்த்தமார்க்கேஸ்வரர், தேவி பார்வதி, தீர்த்தம் புண்டரீக புஷ்கரிணி.

வெள்ளிகுலங்கர தேசம் — கொச்சி ராஜ்யம், சிவாலயம்.

வெள்ளியங்கிரி—கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்—ஸ்வாமி பஞ்சபூதலிங்கேஸ்வரர், தேவி பார்வதி; பார்வதி பூஜித்த க்ஷேத்திரம்.

வெள்ளத்துக்கோட்டை — திருவள்ளூர் தாலூகா, வடஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி-சோமேஸ்வரர் கோயில.

வெண்டையம்பட்டி—சென்னை ராஜதானி, திருச் சிராப்பள்ளி ஜில்லா, சிவாலயம்.

வெள்ளப் பெரம்பூர்—சென்னை ராஜதானி, திருச் சிராப்பள்ளி ஜில்லா, திருக்காட்டுப்பள்ளிக்கு 6 மைல், சிவா லயம்—ஸ்வாமி ஏகாம்பரநாதர், தேவி காமாட்சி அம்மன்.

வெற்றியூர் — (ஜயபுரி) சென்னை ராஜதானி, திருவாடானைக்கு 8 மைல, வைப்புஸ்தலம்; உடையார்பாள யம் தாலூகா, திருச்சிராப்பள்ளி ஜில்லா.

வேங்கடத்துறையூர் — திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி, வாலாடிக்கு 2 மைல்—சிவாலயம்.

வேங்கைவாயில் — புதுகைகோட்டை சமஸ்தானம், சென்னை ராஜதானி, புதுக்கோட்டைக்கு 3 மைல், சிவால யம் இங்குள்ள தட்சிணமூர்த்தி அழகியது.

வேட்களம்—திருவேட்களம்; சென்னை ராஜதானி, சிதம்பரத்திற்கு $1\frac{1}{2}$ மைல் கிழக்கு, அர்ஜுனன் சிவபெருமானிடமிருந்து பாசுபதாஸ்திரம் பெற்ற ஸ்தலம். சிறிய கோயில்; அண்ணமலை நகரில் உள்ளது. பழய கோயில் 1912ஆம் முற்றிலும் ராஜா அண்ணமலை செட்டியார் அவர்களால் புதுப்பிக்கப்பட்டது. ஸ்வாமி பாசுபதேஸ்வரர், தேவி நல்லநாயகியார் அல்லது சத்குணம்பிகை. நாரத தீர்த்தம்; மூங்கில் வனம். சில வருடங்களுக்குமுன் கிராட மூர்த்தி, வேடச்சி அம்மன், அர்ஜுனன் சிலைகள் பூமியிலிருந்து கண்டு பிடிக்கப்பட்டு கோயிலில் வைக்கப்பட்டிருக்கின்றன; அழகியவை. கோயில் எப்பொழுதும் சுத்தமாய் வைக்கப்பட்டிருக்கிறது.

வேட்டக்குடி—(திரு) சென்னை ராஜதானி, பொறையார் ஸ்டேஷனுக்கு 4 மைல் கிழக்கு, அர்ஜுனனுக்கு சிவபெருமான் வேடுவ உருவில் தோன்றிய இடம், சிவாலயம். ஸ்வாமி திருமேனி அழகேஸ்வரர், தேவி சுகந்தவனநாயகி; சந்திரபுஷ்கரிணி. திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

வேட்டைமங்கலம் — கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, கரூர் தாலூகா—பழய சிவாலயம்.

வேட்டைமங்கலம் — திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி, பழய சிவாலயம், சோழ அரசனொருவனால் கட்டப்பட்டதென்பர்.

வேடன்கோலம்—திருவேடன்கோலம் என அழைக்கப்படுகிறது. திருச்சிராப்பள்ளி தாலூகா, மேற்படி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்.

வேதாரண்யம்—இதற்கு ஆதிசேது என்றும் பெயர் உண்டு. தென் இந்தியா ரெயிலஸ்டேஷன்; சென்னை ராஜதானி. வேதங்கள், முசுகுந்த சக்ரவர்த்தி, ஸ்ரீராமர் பூசித்த க்ஷேத்திரம்; சப்தவிடங்க ஸ்தலங்களில் ஒன்று. வேதங்கள் பூசித்து திருக்காப்பு செய்த கதவை, திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தரும், திறக்கவும் மூடவும் பாடியருளிய ஸ்தலம். சேரமான்பெருமானும், சுந்தரமூர்த்தியும் சேர்ந்து ஸ்வாமியை தரிசித்த ஸ்தலம். கோயில் தீபத்தை அகஸ்மாத்தாய் தூண்டிய எலிக்கு, சிவபெருமான் சக்ரவர்த்தி பட்டம் அருளிய ஸ்தலம். ஸ்வாமி வேதாரண்யேஸ்வரர், மறைகாட்டீஸ்வரர், தேவி யாழைப் பழித்தமொழியம்மை; கோடிதீர்த்தம், வேததீர்த்தம், மணிகர்ணிகை குளம்; வனமி விருடசம். தியாகர்—புவனிவிடங்கர், பிரம

மோற்சவம் ஆனிமாதம்; அகஸ்தியருக்கு சிவபெருமான் மணக்கோல தர்சனம் பிரபல உற்சவம். இவ்வூர் மிகவும் பழமையானது; டாலமி என்பவரால் நிகமா என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. சம்ஸ்கிருதப் பெயர் நிகமவனம். வேதாரண்யத்திற்கு 7 மைல் தூரத்தில் நாலுவேதப்பதியுள்ளது. இங்கு கோயிலின் மேற்கு புறத்திலுள்ள வினாயகர், ஸ்ரீராமரைப் பிடித்த பிரம்மஹத்தியை நீக்கினவர்; வீரஹத்தி வினாயகர் என்று பெயர் ஸ்ரீராமர் பிரதிஷ்டை செய்த லிங்கம் இங்குள்ளது ஸ்ரீராமர் தங்கிய இடம் அகரம் அல்லது ராமசந்திரபுரம் என்றழைக்கப்படுகிறது. கர்ப்பக்கிரஹத்தின் பின்புறம் ஸ்வாமியின் மணகோலக் காட்சி செதுக்கப்பட்டிருக்கிறது. கோடிக்கரை தீர்த்தம், சமுத்திரக்கரையிலுள்ளது. திருவிளையாடற் புராணம் எழுதிய பரஞ்சோதிமுனிவர் பிறந்த இடம். 905—947ல் ஆண்ட ஓர் அரசன் காலத்திய கல்வெட்டொன்று கோயிலில் உளது. திருக்கருப்பூண்டி ஸ்டேஷனுக்கு 22 மைல், இங்கு சத்திரமுண்டு. நடராஜாசபைக்கு வேதசபை என்று பெயர்.

வேதிக்குடி—(திரு) தஞ்சாவூர் ஜில்லா, கண்டியூருக்கு 1 மைல் கிழக்கு; சென்னை ராஜதானி, வேதங்கள், குபேரன், சைதன்ய மகரிஷி பூசித்த ஸ்தலம்; தஞ்சாவூருக்கு 7 மைல், சப்தஸ்தான க்ஷேத்திரங்களில் 6-வது, ஸ்வாமி வேதபுரீஸ்வரர், தேவி மங்கையர்க்கரசி, சுந்தர தீர்த்தம். திருஞானசம்பந்தர், அப்பர் பாடல்பெற்றது.

வேம்பத்தூர் — கும்பகோணம் தாலூகா, கும்பகோணத்திற்கு 5 மைல், மருதீசர், பாலாம்பாள்; கவங்கி தீர்த்தம்.

வேப்பம்பட்டு — வேலூர் தாலூகா, வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்; ஸ்வாமி விரூபாட்சீஸ்வரர்.

வேப்பூர் — குடியாத்தம் தாலூகா, வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, வசிஷ்டேஸ்வரர் கோயில்; கல்வெட்டுகளில் ஸ்வாமி பெயர் வசிஷ்டநாயனர் என்றிருக்கிறது. தேவி பாலகுசாம்பாள். வசிஷ்டர் பூசித்த க்ஷேத்திரம்.

வேம்பள்ளி—சென்னை ராஜதானி, கடப்பை ஜில்லா சிவாலயம், நந்தி பூசித்த ஸ்தலம்.

வேளூர்—நெல்லூர் ஜில்லா, சென்னை ராஜதானி மலலேஷ்வர் கோயில்.

வேலூர்—ராயவேலூர் என வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி, ரயில்ஸ்டேஷன், சிவாலயம், 1350வரு கட்டப்பட்டது. இக்கோயிலில் தற்காலம் பூஜையில்லை. இங்குள்ள கலியாண மண்டபம் மிகவும் அழகியது; விஜய நகரச் சில்பம்; யாளிகளும் குதிரைகளுமுடைய ஸ்தம்பங்கள் அழகிய சில்ப வேலை அமைந்தவை. இதன் கூரையில் 3 வரிசை கிளிகள் தங்கள் மூக்குகளினாலும் கால்களினாலும் தாமரையின் இதழ்களை தாங்கியிருப்பது போல அருமையான சில்பமுடையது. கோயில் கோட்டைக்குள் இருக்கிறது. மகம்மதியர் இங்கு ஆண்ட காலத்தில், கோயிலுக்குள் ஒரு கொலை நடந்தபடியால் அன்று முதல் பூசை நிறுத்தப்பட்டது; உற்சவமூர்த்திகள் முதலியன வெல்லாம் அன்றிரவே ரகசியமாக அகற்றப்பட்டன; பிராகாரத்திலுள்ள ஒரு கிணற்றின் கீழ் ஒரு சுரங்கம் போகிறது; அங்கு மறைக்கப்பட்டிருக்கலாம் என்று எண்ணுகிறார்கள். இங்கு ஒரு மண்டபத்தின் கீழ், பூமி மட்டத்தின் கீழ் இன்னொரு மண்டபம் இருப்பதை சில வருடங்களுக்கு முன் அகஸ்மாத்தாய்க் கண்டு பிடித்தனர்; தற்காலம் இது மூடப்பட்டிருக்கிறது. கோபுரம் கட்டியதில் ஏதோ குற்றமிருப்பதாயும் அதனால் கோயில் விளக்கு எரியாது (பூசை நடவாது) என்று அதைக்கட்டிய சில்பியின் மகள் கூறியதாகச் சொல்லப்படுகிறது. கோயிலும் கோட்டையும் ஒரு விஜயநகர நாயக்கருடைய தளகர்த்தன் பிள்ளைகளாகிய பொம்மி ரெட்டி திம்மா ரெட்டி என்பவர்களால் கட்டப்பட்டதென்பர். பிற் காலத்தில் தென் இந்தியா யுத்தங்களில் பல வருடங்கள் கோயிலானது ஆயுத சாலையாக உபயோகிக்கப்பட்டது. கோயிலின் ஸ்வாமி பெயர் ஜலகண்டேஸ்வரர் என்று கூறுகிறார்கள் (?) இவ்வூரில் மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் கோயில் என்று புதிய சிவாலயமொன்றுண்டு. ஆடிமாதம் விசேஷ உற்சவம். இங்கு முசாபர் பங்களா உண்டு; சத்திரங்களுமுண்டு

வேள்விக்குடி—(திரு) தென் இந்தியா ரெயில் குற்றாலம் ஸ்டேஷனுக்கு 3 மைல் வடகிழக்கு; தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி. ஸ்வாமி கலியாணசுந்தரேஸ்வரர், தேவி பரிமளசுகந்த நாயகி; மங்கள தீர்த்தம்; ஒரு அரச குமாரனுக்கு, அவனுக்கு நிச்சயிக்கப்பட்டிருந்த பெண்ணை பூதத்தால் கொண்டு வரச் செய்து, ஸ்வாமி கலியாண வேள்வி முடித்தருளிய ஸ்தலம். திருஞானசம்பந்தர் சுந்தரர் பாடல்பெற்றது.

வேற்காடு—திருவேற்காடு—சென்னை ராஜதானி, செங்கல்பட்டு ஜில்லா, ஆவடி ஸ்டேஷனுக்கு 4 மைல் தென் கிழக்கு, ஆவடி ஸ்டேஷனிலிருந்து பூவிருந்தவல்லிக்குப் போகும் பாதையில் இரண்டாவது மைலிலுள்ள கரியாஞ் சாவடிக்கு வடக்கிலுள்ளது. மூர்க்க நாயனார் அவதார க்ஷேத்திரம்; பிரமனை சிறைபிட்டசாபம்தீர சுப்பிரமணியர் சிவபெருமானைப் பூசித்த ஸ்தலம். எக்காலமும் வற்றுத வேலாயுத தீர்த்தமுடையது. கூவ நதிக்கரையிலுள்ளது; இதைப்பாலிநதியென்றும் அழைப்பர். ஸ்வாமி வேற்காட்டீ ஸ்வரர் அல்லது வேதபுரீஸ்வரர், தேவிபாலாம்பிகை அல்லது வேற்கண்ணியம்மை; பிரம்மோற்சவம் சித்திரை மாதம். இங்கு சித்திராபௌர்ணமிதினம் சந்திப்பு திருவூறல் உற்ச வம் விசேஷம். இங்குள்ள விஜயகரீடமிருந்து மகாவிஷ்ணு விகடக்கூத்தாடி பாஞ்சஜன்யம் பெற்றனர் என்பது ஐதிகம். திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

வேளச்சேரி—செங்கல்பட்டு ஜில்லா, சென்னை ராஜ தானி, தண்டீஸ்வரர் சிவாலயம்.

வேளூர்—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, திருத்துறைப்பூண்டிக்கு 3 மைல், சிவாலயம் வைப்புஸ்தலம்.

வேங்கனூர்—சென்னை ராஜதானி, திருச்சிராப்பள்ளி ஜில்லா, சிவாலயம்; ஸ்வாமி விருத்தாசலேஸ்வரர், தேவி பிரஹந்நாயகி; வைப்புஸ்தலம்.

வைக்கம் — திருவாங்கூர் ராஜ்யம்—ஆலப்புழைக்கு 23 மைல். இந்த ராஜ்யத்திலுள்ள சிவஸ்தலங்களில் இது பெயர் பெற்றது, சிவாலயம்—வியாக்ரராலயம் என்பது மருவி வைக்கம் என்றாயது என்பர். வியாக்ரபாதர் பூசித்த க்ஷேத்திரம்; ஸ்வாமி மஹாதேவர், பெருந்துறை கோயில், அப்பர், தேவி பார்வதி—மாசி கார்த்திகை மாதங்களில் முக்கிய உற்சவங்கள்; கார்த்திகை அஷ்டமி உற்சவம் விசேஷம். இதுதான் மாணிக்கவாசகருடைய திருப் பெருந்துறை யென்பர் சிலர்.

வைகல்—வைகன் மாடக்கோயில் என்பது தேவாரப் பெயர்—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி; ஆடு துறைக்கு 4½ மைல் தெற்கு, கோச்செங்கணான் எனும் சோழன் அருள் பெற்ற ஸ்தலம். வைகல் எனுமிடத்தில் ஒரு கோயிலும், மாடக் கோயில் எனுமிடத்தில் ஒரு கோயிலும் உளது, இரண்டையும் சேர்த்து திருஞான சம்பந்தர் பாடியுளார். கோயில் கோச்செங்கண்ணான்

கட்டிய மாடக் கோயில்களில் ஒன்று; ஸ்வாமி—வைகல் நாதேஸ்வரர், தேவி வைகலாம்பிகை. மாடககோயில்—ஸ்வாமி சோமேஸ்வரர், தேவி இளங்கோதையம்மை, கொம்பிலிளங்கோதை—சூரிய தீர்த்தம்.

வைகாவூர்—(திரு) சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, இதற்கு வில்வவனம் என்றும் பெயர் உண்டு. கும்பகோணத்திற்கு 9 மைல், விஜயமங்கைக்கு 1 மைல் மேற்கு, சிவாலயம்—ஸ்வாமி வில்வனேஸ்வரர், விலவன நாதர், தேவி வஸீககைநாயகி அல்லது பூவல்லியார், பவளககைநாயகியார்; யம தீர்த்தம்; வில்வ விருட்சம், திருஞானசம்பந்தர் பாடல்பெற்றது. க்ஷேத்திரம் சிவ ராத்ரி மஹாத்மிய சம்பந்தமானது.

வைதாணிரோட்—வட இந்தியா ரெயில் ஸ்டேஷன்; கூர்டா ஸ்டேஷனிலிருந்து 82 மைல்; சிவாலயம்-வைதர்ணி நதி. இதில் ஸ்நானம் செய்பவர்களுக்கு வைதரணிநதியைக் கடக்கவேண்டிய கஷ்டமில்லையாம்.

வைத்யநாத்பூர்—மைசூர் ராஜ்யம், மத்தூர் ரெயில் ஸ்டேஷனுக்கு 3 மைல், சிவாலயம்; ஸ்வாமி வைத்யநாதேஸ்வரர், தேவி பார்வதி.

வைதீஸ்வரன் கோயில்—இதன் தேவாரப் பெயர் புள்ளிருக்கும் வேளூர், தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, ரெயில்வே ஸ்டேஷன். சம்பாதி, ஜடாயு, ரிகவேதம். முருகவேள், சூரியன் பூஜித்த ஸ்தலம். (இங்கிருக்கும் சுப்பிரமணியருக்குமுத்துகுமாரஸ்வாமி என்று திருநாமம், மிகவும் பிரபலமானது; கிர்த்திகை விசேஷம்) கோயில் மேற்கு பார்த்தது, ஸ்வாமி வைத்யநாதேஸ்வரர், தேவி தையல்நாயகி, சித்தாமிர்த தீர்த்தம்; வேம்பு விருட்சம். சுப்பிரமணியருடைய சைனியங்கள சூரபத்மனால் காயப் படுத்தப்பட்டபோது, அவைகளுக்கு சிகிச்சை செய்தபடியால் வைதீஸ்வரர் எனப் பெயர் வந்ததென்பது ஐதிகம். புள்=பட்சி (ஜடாயு) ரிக்=ரிக்வேதம், வேள்=சுப்பிரமணியர்; புள்ளிருக்கும்வேளூர் என்றாயது. இக்கோயிலின் ஒரு புறம் ஸ்ரீராமர் ஜடாயுவைத் தகனம்செய்த இடம் காட்டப் படுகிறது; அச்சாம்பல இன்னும் அங்கிருப்பதாக ஐதிகம். கோயிலில் ஜடாயுவும் சம்பாதியும் பரமசிவத்தை வழிபட்ட படி சிலைகள இருக்கின்றன. இக்கோயிலில் வெண்கலத்தாலாகிய கங்காவிசர்ஜன் மூர்த்தி பார்க்கத்தக்கது. இருபத்தைந்து முகங்களும் 50 கரங்களுமுடைய மஹாசதாசிவ மூர்த்தியின் உருவம் சுதையால் நிர்மாணிக்கப்பட்டிருக்

கிறது. பிரம்மோற்சவம் பங்குனி மாதம், இங்குள்ள குளம் அழகானது. திருஞானசம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. இங்கு இரண்டு முக்கிய சந்திரங்கள் உள. கோயிலில் பல கல்வெட்டுகள் உள. அவற்றுள் ஒன்று அச்சுததேவராயர் காலத்தியது (1572—1614). இங்குள்ள அஷ்டகோண மண்டபம் பார்க்கதக்கது இங்குரவக்கிரஹங்கள் வரிசையாக இருக்கின்றன. இங்கு சட்டைநாதர் கோவில் ஒண்ணுள்ளது. தேவி அணிந்திருக்கும் மாங்கல்யம் இரும்பாலாய தென்பர். ஸ்வாமிக்கு விஜைதீர்த்த பெருமாள் என்றும் பெயர். இங்கு 5 கோபுரங்கள் உண்டு, ஓர் இடத்தில் நின்று பார்த்தால் இவ்வைந்து கோபுரங்களையும் ஏககாலத்தில் தரிசிக்கலாம; பெரிய கோபுரம் 9 நிலையுடையது. இங்கு கோதண்ட தீர்த்தம் என்று ஒரு தீர்த்த முண்டு. கோயில் தர்மபுர ஆதினம் மேற்பார்வையிலடங்கியது.

வைலகம்—வயல் + அகம் = வைலகம் ஆயதாம்; புதுக் கோட்டை சமஸ்தானம், பழய சிவாலயம், இங்குள்ள தட்சிணமூர்த்தி விகரஹம் அழகியது.

ஜக்கனஹல்லி — மைசூர் ராஜ்யம், கள்ளேஸ்வரர் கோயில்; 1716 வரு கட்டப்பட்டது, சளுக்கிய சில்ப மமைந்தது.

ஜகதமல்லம் — தென் இந்தியா சிவாலயம், ஸ்வாமி பரமேஸ்வரர், தேவி சுந்தரவல்லி.

ஜகந்நாதம்—அல்லது பூரி; மத்ய இந்தியாவிலுள்ளது. (பிரபல விஷ்ணு ஸ்தலம்) இங்குள்ள சிவாலயங்கள் (1) **மார்க்கண்டேஸ்வரர்** கோயில், ஸ்வாமி மார்கண்டேஸ்வரர்; 811—829 வரு களில் ஆண்ட குண்டலகேசரி என்பவரால் கட்டப்பட்டது. (2) **லோகநாதர்** கோயில்; சிவலிங்கம் தண்ணீர் நிரம்பிய தொட்டியில் இருக்கிறது; தண்ணீரை இரைத்துவிட்டு தரிசனம் செய்யவேண்டும்; பூரி ஸ்டேஷனிலிருந்து 2 மைல் தூரம், (3) இங்குள்ள விஷ்ணு ஆலயத்தின் உட் பிராகாரத்தில் **பாதாளேஸ்வரர்** கோயில் எனும் சிவாலயமுளது. அன்றியும் இன்னும் 12 சிவலிங்கங்கள் இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. இங்கு அருகில் **மஹாதேவர் மந்திரம்** எனும் மற்றொரு சிவாலயமுமுண்டு. இக்கோயில்களெல்லாம் ஆரிய சில்பம். (4) ஜலகண்டேஸ்வரர் கோயில், இங்கு அருகிலுள்ள சித்ரகோட் குன்றில் ஒரு சிறு சிவாலயமுளது. ஜகந்நாதம் கோயில் கி பி. 9-ஆம் நூற்றாண்டில் சிவாலயமாயிருந்த

தாக மெகன்ஜி தரைகூறுகிறார். அக்காலம் இங்கு சிவம், கார்க்கை, கணேசர் பூசிக்கப்பட்டதாம். (5) கபோ தேஸ்வரர் கோயில், (6) கோடிலிங்கேஸ்வரர் கோயில். (7) நீலகண்டேஸ்வரர் கோயில்.

ஜகமண்டா — விசாகபட்டணம் ஜில்லா, சென்னை ராஜதானி, மல்லிகேஸ்வரர் கோயில்; ஒரு சிறு குன்றின் மீதுள்ளது.

ஜப்பல்பூர் பிரிவு — மத்ய மாகாணம் — தில்லாரா கிராமம்—பழய சிவாலயம், ஸ்வாமி திலவண்டேஸ்வரர் (திலம்=எள்) இங்குள்ள மற்ற சிவாலயங்கள் (1) தேவார் கிராமம், ஜப்பல்பூருக்கு 8 மைல், பழய பெயர் திரிபுரம் அல்லது கிரிபுரி, சிவாலயம்; ஸ்வாமி திரிபுரேஸ்வரர், (2) பிலஹரி சிவாலயம்; ஓர் அரசியால் 11-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. (3) **பீர்கட்** - நர்மதை கரையிலுள்ளது. ஜி.ஐ.பி. ரெயில், மீர்கன்ஜ் ஸ்டேஷனிலிருந்து 3 மைல். கௌரிஷங்கர் கோயில் (4) பார்கோவன் சிவாலயம், ஸ்வாமி சோமநாதர்; குப்த சில்பம், 5 அல்லது 6-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கோயில் (5) ஓங்காரம்-ஜப்பல் பூருக்கு 6 மைல், நருமதைக் கரையிலுள்ளது. ஜோதி லிங்கங்களில் ஒன்று. இங்கு பாண லிங்கங்கள் எடுக்கப் படுகின்றன.

ஜம்புநாதம் — பல்லாரி ஜில்லா, சென்னை ராஜ தானி, ஹோஸ்பெட் ஸ்டேஷனுக்கு 2 மைல்; சிவாலயம் சிறு குன்றின் மீதுளது. 14-ஆம் நூற்றாண்டில் ஆண்ட விஜயநகரத் தரசனாகிய ஜம்புகேஸ்வரராயரால் கட்டப்பட் டது. கோயிலுக்குக் கிழக்கில் பாறையில் வெட்டப்பட்ட கிணறு ஒன்றுண்டு; இதன் ஜலமானது வியாதிகளைத் தீர்க்கும் குணமுடைய தென்பர்.

ஜம்பை — சென்னை ராஜதானி, நாகர்கோயில் தாலூகா, சிவாலயம்—தேவி அகிலாண்டேஸ்வரி.

ஜவால்மல்—பஞ்சாப் மாகாணம், ஜிண்டா சமஸ்தா னம், சிவாலயம குளத்தருகிலுள்ளது, ஸ்வாமி ஜவால்மல் ஈஸ்வரர் கோயில், இங்கு **பொகார்கேரி** எனும் கிராமத் தில் மஹாதேவர் சிவாலயமுண்டு.

ஜாங்கலம் — வட இந்தியா; சுயம்புலிங்கம்; ஸ்வாமி யின் பெயர் கபர்தின்—கங்காதீஸ்வரர்.

ஜாலேஸ்வரம்—வட இந்தியா; சுயம்புலிங்கம்; ஸ்வாமி திரிசூலி.

ஜாவாதீவு — இந்திய சமுத்திரத்திலுள்ள தீபம், இங்குள்ளசிவாலயங்கள் (1)பைணதரம் சிவாலயம்; சிலமா யிருக்கிறது. (2) காடு—இங்கு 723வது ஒரு சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. பரமசிவத்திற்கு ஜாவா தீவில் பட்டாரகுடு என்று திருநாமம். (3) பிராம்பனன் (பிரம்மவனம்) இங்கு சில சிவாலயங்கள் இருந்தன. தற் காலம் எல்லாம் சிலமா யிருக்கின்றன. கோயிலில் 42 ராமாயணக்கதை காட்சிகள் செதுக்கப்பட்டிருக்கின் றன. இங்கு பரமசிவத்திற்கு வார்ட்ஜோங்கிராஜ் என்று பெயர். (4) இங்கடெரேகோ பிரிவு, இங்கு, போகட், பிரங்கபான்ஸ், இவ்விரண்டிடங்களிலும் சிவாலயங்கள் உள. தற்காலம் மிகவும் சிலமாய்க் கிடக்கின்றன. (5) போரோபதூர்—ஒரு கல் வெட்டினால் சஞ்சயன் எனும் அரசன் ஜாவா தீபத்தில் தன் சொந்த ஊராகிய குஞ்சா குன்ஜா (ஆனெகுந்தி ?) யெனுமிடத்திலிருப்பதுபோல, ஒரு சிவாலயம் கட்டினதாகத் தெரிகிறது. இங்கு ஜோக் ஜிகார்டாவுக்கு 10 மைலில் சிவாலயம் உளது; இதற்கு லாரா ஜோங்கிராஜ் என்று, (இந்தனீஷியன் பாஷையில்) பெயர். இங்கு மொத்தம் 8 சிவாலயங்கள்உள; கி.பி 9-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டவை; பாழடைந்த முக்கிய சிவாலயம், 180 அடி உயரம், தற்காலம் மராமத்து செய் யப்பட்டு வருகிறது. இதில் நான்கு விடுதிகள் உள. முக்கியமானது கிழக்குப் பார்த்தது; இதில் சிவபெருமான் சிலை உருவம் இருக்கிறது. மற்ற மூன்று விடுதிகளில் அகஸ்தியர், கணேசர், தேவி சிலைகள் இருக்கின்றன. தேவியின் சிலை ஒரு இண்டனேஷியன் பெண்ணைப்போல் இருக்கிறது. அதன் பெயர் லாராஜோங்கிராஜ்=மெல் லிய கன்னிகைப் பெண், என்று அர்த்தமாகும். கோயி லில் பரமசிவத்தின் 32 தாண்டவ நடனத்தின் கோலங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன, ராமாயணக் கதையும் சித்தி ரிக்கப்பட்டிருக்கிறது. இங்கு பெரிய கோலிலின் பக்கலில் பிரம்மாவுக்கும் விஷ்ணுவுக்கும் கோயில்கள் இருந்தன என்று கூறப்படுகிறது. (2) இங்கு (ஜாவா தீவில்) தென் கிடோய் (Kidoe) எனும் இடத்தில் ஒரு சிவாலயமுண்டு. அகஸ்திய கோத்திரத்தில் பிறந்த ஒரு பிராம்மணனால் கட்டப்பட்டதென்று ஒரு கல்வெட்டு கூறுகிறது. (3) குஞ்சா குஞ்சு தேசத்தில் ஒரு சிவாலயமுளது குபேரர் என்பவர் கட்டியதாகச் சொல்லப்படுகிறது. ஒரு கல் வெட்டின்படி அகஸ்தியர் கட்டியதாகச் சொல்லப்படு கிறது. இவ்விடம் அகஸ்தியர் சிலை கண்டு பிடிக்கப்பட்

டிருக்கிறது. (4) ஜாவா தீவுக்கு அருகிலுள்ள பாலி எனும் சிறு தீவில், பொய்லிங் (Boeling) எனு மிடத்தில் ஒரு சிவாலயம் மூளது. அதன் பெயர் சாங்சித் (Sangsit); இது திராவிட சில்பமமைந்த தெனச் சொல்லப்படுகிறது.

ஜான்சி ஜில்லா — ஐக்கிய மாகாணம், இங்குள்ள சிவாலயங்கள் (1) பார்வாசாகர் கிராமம், சிவாலயம்—குப்த அரசர் காலத்தில் கட்டப்பட்டது, (2) சாண்டபூர் கிராமம், சிவாலயம்; சஹஸ்வர லிங்கம், (3) தூதாய் கிராமம் — இங்குசுமார் 1000 வருடங்களுக்குமுன் விஷ்ணு, பரமசிவம், பிர்ம்மாவுக்கு 3 கோயில்கள் வடக்கு, தெற்கு, மேற்காக யசோவர்மன் எனும் அரசனல் கட்டப்பட்டன; இவை தற்காலம் பாழடைந்திருக்கின்றன.

ஜான்சி—வட இந்தியா ரெயில் ஸ்டேஷன் - இங்குள்ள முக்கிய சிவாலயங்கள் (1) திவாரி சிவாலயம், (2) தசாஸ்வ மேத மஹாதேவர் ஆலயம், (3) சிவகுடி ஈஸ்வரர் ஆலயம்.

ஜான்பூர் ஜில்லா—ஐக்கிய மாகாணம், கோபால்பூர் கிராமம், இங்கு இரண்டு பழய சிவாலயங்கள் உள. ரோஜ கிராமம், சிவாலயம்—திரிலோக மஹாதேவ் கோயில் அல்லது திரிலோசன மஹாதேவ் ஆலயம்.

ஜுன்னூர்—பம்பாய் ராஜதானி, பூனு ஜில்லா, இங்குள்ள சிவாலயங்கள், (1) பஞ்சலிங்கம், சிவனெரிகுன்றின் அருகில் உள்ளது,(2) பாதாளேஸ்வரர் கோயில்—பூமி மட்டத்தின்கீழ் கோயில் உளது, (3) உத்தரேஷ்வர்—ஊருக்கு ½-மயில் தூரம் உளது. இங்கு ஒரு குகைக்கோயில் உண்டு பூவுக்கு 48 மயில் தூரத்தில்; கோயில் வட்டவடிவமானது. வட்டத்தின் குறுக்களவு 25 அடி; 12 தூண்கள் செதுக்கப் பட்டிருக்கின்றன. இது ஆதியில் புத்த ஆலயமாயிருந்து பிறகு அதிலிருந்த தாதுகர்ப்பம் (தாகோபா) சிவலிங்கமாக மாற்றப்பட்டதென டாக்டர் பர்கூசன கூறுகிறார்.

ஜுனாகட்—வட இந்தியா ரெயில்ஸ்டேஷன், சிவாலயம், ஸ்வாமி அப்பாஜிசிவம், தேவி பார்வதிதேவி.

ஜெஜுரி — பம்பாய் ராஜதானி, பூனஜில்லா, ஸ்வாமி கண்டோபா, பரமசிவத்தின் அவதாரம் என்று இங்குள்ளவர்கள் கூறுகின்றனர்.

ஜெஸ்ஸோர் பிரிவு — வங்காள ராஜதானி, வட இந்தியா—மாமுட்பூர் கிராமம், சிவலாயம்; நாடோ ராஜாக்களால் கட்டப்பட்டது.

ஜோத்பூர் சமஸ்தானம்—இங்குள்ள சிவாலயங்கள் (1) பலிஹ—குபட் பிரிவு, நாதாகிராமம், நீலகண்ட மஹாதேவர் கோயில் (2) பிலாராஹ—குமத் பிரிவு, சிவாலயம், மஹாதேவர் பார்வதி; கோயில் 1,200 வருடங்களுக்கு முந்தியது என்று எண்ணப்படுகிறது. (3) நாதோல் சோமேஸ்வரமஹாதேவ் கோயில், சோமநாதர் கோயில் (4) சாத்ரி கிராமம், தாசூரி பிரிவு, சிலாலயம் (5) ஜஸ்வந்தபூர் ஹ—குமத் பிரிவு, ரதன்பூர் கிராமம், சிவாலயம், புராமாட்சதேவரால் 11-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. (6) ஜோட்பூர் ஹ—கும் பிரிவு. ஆர்ஞகிராமம், சிவாலயம். (7) மலாணிபிரிவு; கொடு கிராமம்; இங்கு 3 சிவாலயங்கள் உள, மூன்றும் மேற்கு பார்த்தவை (8) சோடான் கிராமம்; இங்கும் 3 சிவாலயங்கள் உண்டு, பாழடைந்திருக்கின்றன. (9) நாகௌர் பிரிவு, சிவாலயம்; இங்கு மஹாதேவர் லிங்கமும், கிருஷ்ண விக்ரஹமும் அக்கம் பக்கமாயிருக்கின்றன. (10) பாலிபிரிவு; பாலி கிராமம், சோமநாதர் கோயில்; 1143வது குஜராத் அரச குமாரபாலர் கட்டியது (11) சிரோஹி பிரிவு, அசல்கர் கிராமம், அசலேஸ்வரர் கோயில்; இங்கு பரமசிவத்தின் கால் விரல் ரூபம் இருப்பதாக ஐதிகம்; கோயில் மேற்கு பார்த்தது, நந்தி பெரியது, பித்தளையாலாயது, (12) சிரோஹி பட்டணம், சிவாலயம், சலவைக் கல் கட்டிடம், ஸ்வாமிசாரணேஷ்வர்; கோயில் மேற்கு பார்த்தது; சுமார் 500 வருடங்களுக்குமுன் கட்டப்பட்டது. கோயிலுக்கு எதிரில் 12 அடி உயரமுள்ள திரிசூலம் இருக்கிறது. (13) வசந்தகர் கிராமம், சிவாலயம் இடிந்திருக்கிறது. 7-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.

ஜோதி கிராமம் — கடப்பை ஜில்லா, சென்னை ராஜதானி, சித்தவட்டம் தாலூகா, சிவாலயம், முகலிங்கம்; ஸ்வாமி சித்தேஸ்வரர்.

ஜொலதாரி—பல்லாரி ஜில்லா, சென்னை ராஜதானி, பல்லாரிக்கு 13 மைல், சிவாலயம்; ஸ்வாமி ராமலிங்கேஸ்வரர்.

ஜொனார்த்தனம் — திருவாங்கூர் ராஜ்யம், திருவனந்தபுரத்திற்கு 23 மைல், சிவாலயம்; பாலபுரீசர் பாலசுந்தரி; சமுத்திர தீர்த்தம். விஸ்வாமித்திரர் பூசித்தது.

ஜொய்பூரம்—ஒரிஸ்ஸாவிலுள்ளது, சிவாலயம்.

ஜோலார்பேட்டை — சென்னை ராஜதானி, ரெயில்ஸ்டேஷன்; சிவாலயம்.

ஸ்ரீகண்டேஸ்வரர் கோயில்—திருவாங்கூர் ராஜ்யம் சிவாலயம்.

ஸ்ரீகாகுளம்—குண்டூர் ஜில்லா, சென்னை ராஜதானி, செல்லபள்ளி ஜமீன்தாரியிலுள்ளது—ஸ்ரீகாகுளேஸ்வரர் கோயில்; இங்கு மலலேஸ்வரர் கோயில் என்னும் மற்றொரு சிவாலய முண்டு.

ஸ்ரீகூர்மம் — கஞ்சம் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்; ஸ்வாமி கூர்மேஸ்வரர்.

ஸ்ரீசைலம்—நந்திகோட்டூர் தாலூகா, கர்னூல் ஜில்லா; எம். எஸ். எம். ரெயில்வே நந்தியால ஸ்டேஷனி லிறங்கி, 32 மைல் பஸ்ஸில் ஆத்மகூருகுப் போய், அங்கிருந்து 32 மைல் கால்நடையாய்ப் போகவேணும். மலை சமுத்திர மட்டத்திற்கு 1400 அடி உயரம்; மூன்றுபாகமும் கிருஷ்ணை நதியால் சூழப்பட்டிருக்கிறது. நலல மலை காட்டின் மத்தியி லுள்ளது இதற்கு பருவதம் என்பது தேவரப் பெயர். (சைலம் - பர்வதம) இதற்கு மல்லிகார்ஜுனம் என்றும் பெயர் உண்டு. மிகவும் பழமையான பெயர்பெற்ற சிவால யம்; ஸ்வாமி பர்வதநாதர், மல்லிகார்ஜுனர்; தேவி பர்வத ராயகி, பிரமராம்பாள்; அம்பா தீர்த்தம் பாலாழி தீர்த் தம்; மலைக்கு ரிஷபகிரி என்று பெயர். நந்தி தேவர் பூசித்து முததிபெற்ற ஸ்தலம், பிருது முனிவர் பூசித்த க்ஷேத்திரம்; இங்கு பாதாளகங்கை யெனும தீர்த்தமுண்டு இதிலிருந்து லிங்க உருவங்கள் எடுககப்படுகின்றன. இங்கு 3 கோடி லிங்கங்கள் இருப்பதாக ஐதிகம். கோயிலில் பிருங்கி மஹரிஷியின் சிலையுளது. இக்கோயில் ஆதி காலத்தில் பௌத்த ஆலயமா யிருந்த தென்பர். பழய கோயில் மகமமதியர்களால் அழிக்கப்பட்டு, பிறகு புதுப் பிககப்பட்டது. முற்காலத்தில் கோயில் முழுவதும பொன் வேய்ந்திருந்த தென்பர். இங்குளள கலயாண மண் டபம் 1526ஆம் கிருஷ்ணதேவராயர் காலத்தில கட்டப் பட்டது; முகமண்டபம் 1404ஆம் விஜயநகரத்தரசர் ஹரி ஹாரால் கட்டப்பட்டது. இங்குள்ள கோபுரங்கள், 16ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாக பெர்கூசன்துரை எண்ணு கிறார்; மேற்கில் ராயகோபுரம் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தி யாகாமலிருக்கிறது; வீரமண்டபம் 1377ஆம் கட்டப்பட்டது. கோயிலிலுள்ள பாசுபதாஸ்திரமூர்த்தி மிகவும் கலை யுடையது. கோயில் 630 அடி நிகளம், 510 அடி அகலம்; மதில் 12 அடி உயரம். கோயிலின் வடக்கில விருத்த மல்லிகார்ஜுன லிங்கம் இருக்கிறது; சந்திராணியெனும்

அரச குமாரியால் மல்லிகை மலர்களால், பூசிக்கப்பட்டதை என்பர். (எனவே ஸ்வாமி பெயர் மல்லிகார்ஜுனர்) கோயிலின் கிழக்கில் சஹஸ்ரலிங்கம் இருக்கிறது; நான்கு வர்ணத்தாரும் தீண்டி பூஜிக்கலாம். மூவர் பாடல்பெற்ற திவ்ய க்ஷேத்திரம்; இங்குள்ள லிங்கம் ஜோதி லிங்கங்களி லொன்றும். பிரமராம்பாள் கோயில், ஸ்வாமி கோயிலுக்கு வெளியே இருக்கிறது.

ஸ்ரீதேவர்—இந்தியாவுக்கு கிழக்கிலுள்ள சையாம் அல்லது சியம் தேசத்திலுள்ளது இங்கு இருந்த பழைய சிவாலயம் தற்காலம் மிகப் பாழா யிருக்கிறது; சிவலிங்கம் மாத்திரம் அழியாதிருக்கிறது.

ஸ்ரீநகர்—ஐக்கிய மாகாணம். கார்வார் ஜில்லா—கமலேஸ்வரர் கோயில்; லிங்கபூஜை இங்குதான் ஆரம்பித்தது என்பது ஸ்தல ஐதீகம். மஹாவிஷ்ணுவும் ஸ்ரீராமரும் பூசித்த க்ஷேத்திரம. ஊரின பழைய பெயர் அஸ்வதீர்த்தம், ஸ்ரீக்ஷேத்திரம்; அலகநந்தநதி. பூஜைசெய்யும் குருக்களுக்கு மஹந்த் என்று பெயர்.

ஸ்ரீநகர்—வடஇந்தியா காஷ்மீரத்தின் தலைநகர். ஜம்மூவிலிருந்து 197 மைல் தூரம்—சங்கரர் கோயில்.

ஸ்ரீநிவாசநல்லூர்-திருச்சிராப்பள்ளிஜில்லா, சென்னை ராஜதானி; பழைய சிவாலயம். தற்காலம் பூஜையில்லை. காஞ்சி கைலாசநாதர் கோவில் சிலபத்தைப் போன்றது.

ஸ்ரீபுருஷமங்கலம்—வந்தவாசி தாலுக்கா வடஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி—மணிக்கண்டேஸ்வரர் கோயில கோயிலில் பல கல்வெட்டுள்ளன.

ஸ்ரீபெரும்பூதூர்—இதன் பழைய பெயர் பூதபுரி. சென்னைராஜதானி. இங்குபழைய சிவாலயம் ஒன்றுளது. 700 வருடங்களுக்கு முற்பட்டது. ஸ்வாமி பெயர் பூதபுரீஸ்வரர். வைஷ்ணவ ஆசாரியார் ராமாநுஜர் காலத்தில் இவ்வூரின் பெயர் ஸ்ரீபெரும்பூதூர் என்று மாற்றப் பட்டது.

ஸ்ரீபுஷ்ணம்—தென் ஆற்காடு ஜில்லா, சென்னைராஜதானி; சிவாலயம்; ஸ்வாமி நித்யேஸ்வரர், மானக்கஞ்சார நாயனார் முத்தியடைந்த ஸ்தலம்

ஸ்ரீரங்கபட்டணம்—மைசூர் ராஜ்யம். மைசூருக்கு 5 மைலில் உள்ளது. காவிரி இரண்டு பகுதியும் போகிறது. கோயில் மைசூர் சமஸ்தானத்தாரின் பார்வையிலிருக்கிறது. ஸ்வாமி கங்காதரீஸ்வரர், தேவி பார்வதி. கோவில் விஜயநகரச்சில்பம். இங்குள்ள செம்பினாலாகிய அழகிய

தட்சிணமூர்த்தி விக்ரஹம் தளவாய்நஞ்சராஜனல் சமர்ப்பிக்கப்பட்டது.

ஸ்ரீவில்லிபுத்தூர் — இங்குள்ள பெருமாள் ஆலயம் ஓர் பழைய சிவாலயத்தின்மீது கட்டப்பட்டதாக எண்ண இடமுண்டு.

ஸ்ரீராமநகரம்—வட இந்தியா ரெயில் ஸ்டேஷன்—சிவாலயம்.

ஸ்ரீவைகுண்டம்—மேற்படி தாலுகா திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜதானி—சிவாலயம் கைலாசபுரத்திலுள்ளது. ஸ்வாமி கைலாசபதி, தேவி சிவகாமி, தாமரபர்ணிநதி. இங்கு முசாபர்பங்களா உண்டு, சத்திரமுமுண்டு.

ஸ்தானேஷ்வரம்—டில்லிக்கு 97 மைல் வடக்கிலுள்ளது—சிவாலயம, ஸ்வாமி ஸ்தானேஷ்வர்; இங்கு 360 தீர்த்தங்களிருப்பதாக ஐதிகம்.

ஸ்ரமணபெல்கோலா — மைசூர் ராஜ்யம், ரெயில் ஸ்டேஷனகிய ஹாளே நரசிபூருககு 25 மைல். பஸ்போகிறது தினம், (இங்குள்ள ஜைன விகரஹம் இந்தியா முழுவதும் பிரசித்தி பெற்றது) இங்கு சில சிவாலயங்களுண்டு.

ஸ்டேட்பள்ளி கிராமம் — சென்னை ராஜதானி, சிவாலயம், ஸ்வாமி வன்மீகேஸ்வரர், தேவி மரகதவல்லி, வால்மீகிரிஷி, குசலவர்கள், பூசித்த கேஷத்திரம்.

ஸ்வர்ணக்ஷா — வட இந்தியா சிவாலயம், சுயம்புலிங்கம், ஸ்வாமி சஹஸ்ராட்சர், சஹஸ்ர - அக்ஷர் (ஆயிரம் கண்களை யுடையவர்)

ஷம்புகல்—ஷம்புசைலம், ஷம்புகிரி எனவும் பெயர் பெற்றது, மேற்கு சென்னைராஜதானி;உடுப்பிககு 1 மைல்; கோயில் பாழாயிருகிறது, ஸ்வாமி பெயர் ஹடகேஷ்வர் (ஹாடகேஷ்வர் ?) தேவி பார்வதி, லிங்கம சிறியது 18 அங்குலம உயரம்; இங்கு ஒரு குகை பாதாளத்திற்குப் போவதாக ஐகிப; மார்க்கண்டேயர் பூசித்த ஸதலம், பழைய கோயில் அழிககப்பட்டது. பிறகு தற்காலக கோயில் கட்டப்பட்டது. இங்கு பூர்வதிர் சித்த தீர்த்தம், கன்யா தீர்த்தம,ஹரம்ப தீர்த்தம்,ஸ்ரீ தீர்த்தம், முதலிய தீர்த்தங்கள்இருந்தனவாம்;தற்காலம் ஸ்ரீ தீர்த்தம் மாத்திரம இருகிறது.

ஷாஜஹான் பிரிவு—வங்காள ராஜதானி, இங்குள்ள சிவாலயங்கள் (1) பைதகாத் கிராமம், சிவாலயம் 1872ல

கட்டப்பட்டது ஒரு மண் மேட்டின்பேரில்; அதைத் தோண்டும் பொழுது அதன்கீழ் ஒரு பழய சிவாலயம் அகப்பட்டது. (2) பக்சார் பிரிவு, சிவாலயம் ஸ்வாமி ராமேஸ்வர்நாத் மஹாதேவர். (3) தேவ் மார்க்கண்டேயர், ஸ்வாமி சௌமுகி மஹாதேவர். (நான்கு முகங்களுடைய லிங்கம்) (4) குப்தேஸ்வர் குகைக் கோயில்—ஸ்வாமி மஹாதேவர்; லிங்கத்தின்மீது எப்பொழுதும் கீர்த்தம் தளித்துக்கொண்டிருப்பதாக ஐதிகம். (5) மஹாதேவ்பூர் சிவாலயம்—முற்றிலும் செங்கல் கட்டிடம். (6) மண்டேஸ்வரி சிவாலயம்—ஸ்வாமி மண்டேஸ்வரர்; லிங்கம் நான்கு முகங்களுடையது.

ஷிமோகா—மைசூர் ராஜ்யம், ரெயில் ஸ்டேஷன்; சிவாலயம்; ஸ்வாமி பீமேஸ்வர்.

ஷிவமந்திர்—நிஜாம்ராஜ்யத்திலுள்ளது, சிவாலயம்.

ஹட்கல்லி—பல்லாரி ஜில்லா சென்னை ராஜதானி. சிவாலயம்—ஸ்வாமி கள்ளேஸ்வரர்; கோயில் சளுக்கிய கட்டடம்; கட்டி முடியவில்லை.

ஹம்பி—பல்லாரி ஜில்லா சென்னை ராஜதானி. ஹோஸ்பெட் ஸ்டேஷனிலிருந்து 7 மைல். பழைய விஜயநகரத்தரசர்களுடைய ராஜதானி. விரூபாட்சர் கோவில்—ஸ்வாமி விரூபாட்சர். விஜயநகர அரசர்களுடைய குலதெய்வம். கோபுரம் 165 அடி உயரம். இதற்கு பம்பாபதீஸ்வரர் கோவில் என்றும் பெயர். 1199வது கட்டப்பட்டது ஹம்பி கிராமமானது இக்கோயிலுக்கு மானியமாகக் கொடுக்கப்பட்டது. கங்கமண்டபமும் கோபுரமும் கிருஷ்ணதேவராயரால் கட்டப் பட்டதாம். இங்குள்ள கோயில்களில் இதுதான் மிகப் பழைமையானது. இங்குள்ள வாசற்படிகளும் ஸ்தம்பங்களும் கருநிறமுடைய கற்களால் செய்யப்பட்டவை; இவை 13ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்டவை என்று மதிக்கப்படுகிறது; சளுக்கிய சில்பம் மஹாமண்டபமும் வெளி கோபுரமும் 15ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டவை; விஜயநகரச் சில்பம். இங்குள்ள ஒரு கற்றூண் சங்கீத ஸ்வரங்கள் சப்திக்கும்படியானது.

ஹமீர்பூர் ஜில்லா—ஐக்கிய மாகாணம், மஹோபா கிராமம்—சிவாலயம். இது மதன்சாகர் எனும் ஏரியின் ஒரு பக்கமுள்ள தீவில் இருக்கிறது.

ஹர்ஷகா—வட இந்தியா, சிவாலயம். சுயம்பு லிங்கம்; ஸ்வாமி ஹர்ஷகேசர்.

ஹரத்வார்—ஹரித்வார் என்றும் வழங்கப்படுகிறது. வட இந்தியா ரெயில் டேஷன். சிவாலயம்—ஸ்வாமி தட்சேஸ்வரர். இதில் வீரபத்ரர் சிலையும், பத்ரகாளியின் சிலையு மிருக்கின்றன. இங்கு 40 சத்திரங்களுக்குமேல் உண்டு. (2) பில்வகேஸ்வரர் கோவில்—பில்வகேஸ்வரம் எனும் சிறு குன்றின்மீதுளது. (3) நீலேஸ்வரர் கோவில்—லிங்கம் நீலன் எனும் பக்தனால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. (4) சரவணாத்மநாதேவ் கோயில்—இங்கு 5 முகங்களோடு கூடிய சிவமூர்த்தியுண்டு.

ஹரஹல்லி—தார்வார் ஜில்லா, பம்பாய் ராஜதானி—சவுடம்பூருககு 3 மைலில் சோமேஸ்வரர் கோயில். சளுக்கிய கட்டடம்; 3 சந்நிதிகளை யுடையது.

ஹரஹர்பூர்—இமயமலை, சிவஸ்தலம்.

ஹரிஹர்—இதன் பெயர் குஹாரண்யம், சிட்டல்துர்க் ஜில்லா, மைசூர் ராஜ்யம், துங்கபத்ரை கரையிலுள்ளது. பெரிய கோயில், அழகிய சில்பங்கள் அமைந்தது; ஸ்வாமி பெயர் ஹரிஹரேஸ்வரர்; விகரஹம் 4 அடி உயரம், வலப்பாகப் பாதி சிவம், இடப்பாகப் பாதி விஷ்ணு. தற்காலக் கோயில் 1224வது இரண்டாவது நரசிம்மராக மந்திரியாகிய போலாலவர் தண்டநாதன் அல்லது சோமநாதர் என்பவரால் கட்டப்பட்டது. இக்கோயில் சில காலம் மகம்மதியர்கள் கையிலிருந்தபோது, கோயிலின் மேற்கூரையை மசூதியாக உபயோகித்தனர்; சளுகிய கட்டடம்; மகா மண்டபமும், அம்மன் சந்நிதியிலுள்ள சில்பங்களும் மிகவும் அழகியவை. கோயில் மூடிகப்படடிருந்தால் இதைவிட அழகிய ஹிந்து ஆலயம் உலகத்திலே வேறெங்கும் இராது எனக் கூறலாம் என்று பெர்கூசன் புகழ்ந்திருக்கிறார். இங்கு அருகில் காசிவிஸ்வேஸ்வரர் கோயில் உளது — சிறிய கோயில், கோயிலில் லிங்கமிலை; பரம சிவத்தின் சிலை இருக்கிறது. குஹாசுரனைகொல்ல பரம சிவமும், விஷ்ணுவும் ஹரிஹர ரூபம் தரித்தனர் என்பது ஐதிகம

ஹலசூர்—மைசூர் ராஜ்யம், பெங்களூரின் ஒரு பாகத்திலுளளது—சிவாலயம், சோமேஸ்வர் கோயில், கெம்பகௌடரால் 17-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் கட்டப்பட்டது.

ஹலஹி—மைசூர் ராஜ்யம், சிவாலயம்; ஸ்வாமி ஹரக்தி கேஸ்வரர்; அலகப்பட்டஸ்கிரீன்கள் (Screen) உடையது; ஹொய்சால சில்பம்.

ஹளபீடு—ஹலபீடு என்றும் அழைக்கப் படுகிறது. ஹளைய பீடு சரியான பெயர். கன்னட பாஷையில் பழய இருப்பிடம் என்று பொருள் படும். மைசூர் ராஜ்யத்தி லுள்ளது. பூனா ரெயில் பாதையில் பாணவரம் ஸ்டேஷ னுக்கு 20 மைல் தெற்கு. இதன் பழய பெயர் தொரசமுத் திரம். (துவார சமுத்திரம் என்றும் அழைக்கப்பட்டது) இங்குள்ள சிவாலயங்கள் (1) ஹொய்சலேஸ்வரர் கோயில் —இது இரட்டைக் கோயில், இரண்டு சந்நிதிகளுண்டு; ஒவ்வொன்றிலும் சிவலிங்கம்; ஒவ்வொன்றிற்கும் எதிரில் பெரிய மண்டபத்தில் நந்தி யுண்டு. ஒருலிங்கம விஷ்ணு வர்த்தனராலும், மற்றொன்று அவர் மனைவியாகிய சாந்தா அல்லது சாந்தளா தேவியாலும் பிரதிஷ்டை செய்யப் பட்டது. கோயில் வடகது தெற்கு 160-அடி, கிழக்கு மேற்கு 122 அடி; உயரம் 25 அடி மேடைகது மேல்; கீழ் மட்டம் அல்லது மேடை சுமார் 5 அல்லது 6 அடி உயரம். கோயில் 1221 வது ஆரம்பிக்கப்பட்டது; முற்றிலும் முடிக் கப் படவில்லை விமானங்கள் கட்டப்படுமுன் 1310வது மாலிக்காபுர் எனும் மகம்மதியர் தலைவன் கையிற் சிக்கி னது; அவர்கள் இங்குள்ள சிலஅழகிய சிலஉருவங்களைப் பாழாக்கி யிருக்கின்றனர் கோயிலின் அடிமட்டம் நட்சத்திரத்தைப் போல கோணல்கள் உடையது; இதற்கு மேல் வரிசை யானைகள்; இவை 710 அடி சுற்றளவிலும் செதுக்கப்பட் டிருக்கின்றன; சுமார் 2000 இருக்கலாம்; இவை ஒவ்வொன்றும் ஒரு கிலையில் செதுக்கப் பட்டிருக் கிறது; ஒன்றைப்போல் மற்றொன்று கிடையாது. இதற்கு மேல் வரிசை சார் தூலங்கள்; அதற்குமேல் அழகிய கொடி வேலை; அதற்குமேல் குதிரை வீரர்கள் வரிசை; அதற்குமேல் கொடி வேலை; அதற்குமேல் ராமாயண பாரதக கதைகளின் சில்பங்கள்; அதற்கு மேல்வரிசை மிருக பட்சிகளுடைய உருவங்கள்; அதறகுமேல் மனித உருவங்கள், தெய்வச் சிலைகள். பக்கங்களில் அழகிய பலகணிகள்; நடுவில் தேவதைகளின் உருவங்களும் அப்சரஸ்திரீகளின் உருவங்களும் இருகின்றன. இவை இந்து மத தேவதைகளின் எல்லா உருவங்களையும் காண லாம், சைவமலவஷ்ணவம் என்கிறபேதம் கிடையாது. இப் படிப்பட்ட நுட்பமான சில்ப வேலை உலகில் வேறெங்கும் கிடையாது என்று பெர்கூசன் துரை புகழ்ந்திருகிறார். ஒவ்வொன்றும் பார்க்கத் தகுந்தது; ஒரு சருள் வேலை யைப் போல் மற்றொன்று கிடையாது சிறு விமானங் களில் (Canopy) ஒன்றைப்போல் மற்றொன்று கிடையாது.

சந்நிதியிலுள்ள கல் ஸ்தம்பங்கள் உள்ளே மூற்றிலும் சூடைந் தெடுக்கப்பட் டிருக்கின்றன. கற்பூரம் ஏற்றி உள்ளே காட்டினுல் ஸ்தம்பம் முழுவதும் ஜோதியாய்த் தெரிகிறது. இங்கு நிர்த்தனம் செய்யும் சரஸ்வதி சிலை யுளது; வேறெங்கும் கிடையாது என்பர். நிர்த்தன விஞ்யகரும் பார்க்கத் தக்கது. இக் கோயிலுக்கு நான்கு வாயில்கள். இரண்டு கிழக்கிலும், ஒன்று வடக்கிலும் ஒன்று தெற்கிலு முளது. வாயிற் படிகளின் தோரணங்கள் மிகவும் சில்பவேலை யமைந்தவை. இரண்டு நந்தி மண்டபங்களிலுமுள்ள தூண்கள் கடைச்சல் பிடிக்கப் பட்டவை; சலவைக கல்லைப்போல் பளபளப் புடையவை. அவைகளில் இரட்டைப் பிரதிபிம்பங்கள் தோற்றுகின் றன. தக்கணுசாரி எனும் பெயர் பெற்ற சில்பியால் பெரும் பாகம கட்டப்பட்டதாம். சில சிலைகளின் கீழ் அவற்றைச் செய்த சிற்பிகளின் பெயர்கள் செதுக்கப்பட் டிருக்கின்றன. கோயிலின் வாயில்களில் ஹொய்சல ருடைய பிருதுகள் காணப்படும் (புலியை சலன் எனும் இவர்கள் வம்சத்தரசன் கொல்வதுபோல்) கோயிலுள்ள தூண்கள் கவனிக்கத் தக்கவை; ஜாதை ஜாதையாக இருக்கும்; ஒரு ஜாதையைப்போல் மற்றொரு ஜாதை கிடையாது. சாணையிலிட்டு கடைந்தவைகள் போலிருக்கின்றன. சில் பங்களெல்லாம் நீல நிறம் வாய்ந்த கருப்புக் கற்க ளாலானவை; தந்தத்தில் வேலை செய்ததுபோல் வேலை செய்யப்பட் டிருகின்றன. (1) **கேதாரேஸ்வரர் கோயில்** —இது ஹொய்சலேஸ்வரர் கோயிலுக்கு சற்று தூரத்தில் உள்ளது 1219வது வீரபல்லாளனும் அவனது மனைவி களி லொருத்தியாலும் கட்டப்பட்டது. இதுவும் நட்சத் திரம் போன்ற மேடையின் மீது கட்டப்பட்டதாம்; மரங்கள் மூனைத்தபடியால் இதன் விமான சிகரமும் முன் மண்ட பமும் பாழாய்ப் போயின. மைசூர் ராஜாங்கத்தார் இதை மராமத் செய்திருக்கிறார்கள். கோயிலைக் கட்டிய சில்பியின் பெயர் தேவோகர். ஹொய்சல அரசர்களின் பிருதுகள் இங்கு இருகின்றன.

ஹலவகலு — ஹர்ப்பனஹல்லி தாலுக்கா, பல்லாரி ஜில்லா, சென்னை ராஜதானி; சிவாலயம் ; ஸ்வாமி கல்லே ஸ்வரர்; இரட்டைக கோயில்; ஹொய்சல கட்டடம். இங்கு **மல்லிகார்ச்சுனர்** கோயில் என்று மற்றொரு சிவாலய முண்டு.

ஹளே ஆஜர்—இது ஹொளே ஆறு என்றும் அழைக்கப் படுகிறது. சாமராஜ நகரம் தாலுக்கா;

மைசூர் ராஜ்யம்; **அர்க்கேஸ்வரர் கோயில்**—சோழ கட்டடம்; 1020 ஆண்டில் ஆண்ட ராஜேந்திர சோழரால் கட்டப்பட்டது. பிறகு புதுப்பிக்கப்பட்டது. இங்குள்ள நந்தியின் மண்டபத்தில் தூண்கள் அழகியவை.

ஹனுமகொண்டா—நிஜாம் ராஜ்யத்திலுள்ளது. ஐதராபாத்துக்கு 87 மைல்; காசிபெட் ஸ்டேஷனிலிருந்து சுமார் 5 மைல். இது முற்காலத்தில் வாரங்கல் அரசர்களுடைய ராஜதானியாயிருந்தது. சிவாலயம் 1163ல் காகதீய அரசனான பிரதாபருத்திர மஹாதேவரால் கட்டப்பட்டது. கோயிலில் மூன்று கர்ப்பக கிரஹங்கள் உள. சலுக்கிய கட்டடம். ஆதியில் ஒன்றில் பரமசிவமும், ஒன்றில் மஹாவிஷ்ணுவும், மற்றொன்றில் பிரம்மா அல்லது சூரியனும் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. கோயில் கிழக்கு மேற்கு 102 அடி; தெற்கு வடக்கு 83 அடி 8 அங்குலம். மேற்கூறிய 3 கோயில்களின் வாயிற் படிகள் மிகவும் அழகிய சில்ப மமைந்தவை. பலகணிகள் மிகவும் அழகிய வேலைப்பாடுள்ளவை. கோயில் 3அடி மேடையினமீது கட்டப் பட்டிருக்கிறது. கோயில் முற்றிலும் மூடிக்கப்பட வில்லை 1000 கால் மண்டபம் ஆரம்பிக்கப் பட்டு முற்று பெறாமல விடப்பட்டிருகிறது; நந்தி மண்டபமும், 1000கால் மண்டபமும் பிற்காலத்தியவை என்று மிஸ்டர் கசின்ஸ் நினைகிறார். நந்தி மண்டபம் இடிந்து போயிருக்கிறது. நந்தி மாத்திரம் உடையாமலிருக்கிறது. இங்குள்ள பெரிய மண்டபம் 132 தூண்களுக்குமேல் உடையது. கோயில் நான்கு வாயில்களை யுடையது. நட்சத்திரத்தைப்போல கட்டப்பட்டிருக்கிறது. தூண்கள் மிகவும் அழகியவை.

ஹனுமந்தகுடி—ராமநாட் ஜில்லா, சென்னைராஜதானி; சிவாலயம்; ஸ்வாமி மாளவநாதர்; லிங்கம் சூரிய பகவானால் பிரதிஷ்டை செய்யப்பட்ட தென்பது ஐதிகம்.

ஹஸ்தினபுரம்—வட இந்தியா, டில்லியிலிருந்து 36 மைல. இங்கு ஒரு சிவாலயம இருப்பதாக காலஞ்சென்ற K. ஆறுமுகம் பிள்ளை குறித்திருகிறார்.

ஹாங்கல்—தார்வார் ஜில்லா; பம்பாய் ராஜதானி. தாரகேஸ்வரர் கோயில்; இதில் ஒரு மண்டபம் மிகவும் விசித்திரமானது. நந்தி மண்டபம் அழகியது.

ஹார்டனஹல்லி—மைசூர் ராஜ்யம். சிவாலயம்—ஸ்வாமி அனலேஸ்வரர்.

ஹாரப்பா—வட இந்தியா. சிந்து நதிக் கருகிலுள்ள இடம்; இங்கு சுமார் 5000 வருடங்களுக்கு முன்பாக சிவாலயம் இருந்திருக்க வேண்டுமென்று சரூப்வாட்ஸ் என்பவர் எழுதியிருக்கிறார். தற்காலம் சிவலிங்கம் மாத்திரம் அங்கு இருக்கிறது; ஸ்டியடைட் (Steatite) என்னும் கல்லாலாயது.

ஹாவேரி—தார்வார் ஜில்லா, பம்பாய் ராஜதானி. சிவாலயம்-இங்குள்ள உமா மகேஸ்வரமூர்த்தி மிகவும் கலையுடையது. சித்தேஸ்வர்-கோயில். சவுடம்பூருக்கு 3 மைல். கோயில் மேற்கு பார்த்தது. இது ஆதியில் வைஷ்ணவ ஆலயமாயிருந்தது, பிறகு சிவாலயமாக லிங்காயத்தாரால் மாற்றப் பட்டதாக கலினஸ் துரை எண்ணுகிறார்.

ஹிமஸ்தானம்— வட இந்தியா. சுயம்புலிங்கம் —ஸ்வாமி கங்காதரர்.

ஹிரிமகளூர்—மைசூர் ராஜ்யம். சிக்மகளூருக்கு 2 மைல்—சித்தேஸ்வரர் சிவாலயம்.

ஹிரியூர்—(பெரிய ஊர்) மைசூர் ராஜ்யம். தாரமல் லேஸ்வரர் கோயில்—கோபுரம் பெரியது.

ஹிரிஹட்கல்லி—மைசூர் ராஜ்யம். காட்டேஸ்வரர் கோயில்—சலுக்கிய சில்பம்.

ஹுச்சிமல்லிகுடி—தென் இந்தியா சிவாலயம். சலுக்கிய கட்டடம்.

ஹுக்ளி பிரிவு—வங்காள ராஜதானி. இங்குள்ள சிவாலயங்கள் (1) பன்ஸ்பெரியா கிராமம். இங்கு ஹன்சேஸ்வரி கோயிலில் 13 சிவ மூர்த்திகள் இருக்கின்றன. (2) திரிவேணி சிவாலயம். (3) பத்ரேஷ்வர்கோயில்—சுமார் 200 வருடங்களுக்கு முன் கட்டப் பட்டதாம். (4) ஜானுய்ப் கிராமம—சிவாலயம; ஸ்வாமி ஈசானேஸ்வரர் (5)காஞ்சில்-கண்டேஸ்வரர் சிவாலயம். (6) மஹாநாத் கிராமம்-மஹாநாதர் சிவாலயம். (7) தாரகேஷ்வர்—ரெயில் ஸ்டேஷனுக்கு 500 கஜத்தில் சிவாலயம். பழய கோயில் புதுப்பிக்கப்பட்டது பர்ட்வான் ராஜாவினல், சிவராத்ரி விசேஷம்.

ஹுப்ளி—மத்ய இந்தியா. ரெயில் ஸ்டேஷன் —பவானிசங்கர் கோயில்.

ஹுவினஹட்கல்லி— இதற்கு ஹிரோட்கல்லி என்றும் பெயர். ஹடஹல்லி தாலுகா; பல்லாரி ஜில்லா, சென்னை ராஜதானி. கள்ளேஸ்வரர் சிவாலயம். சலுக்கிய கட்டடம்.

ஹுவி—பெல்காம் ஜில்லா; பம்பாய் ராஜதானி. சௌந்தட்டிக்கு அருகிலுள்ளது. இங்கு இரண்டு சிவாலயங்கள் உண்டு—வீரபத்திரர் கோயில்—பஞ்சலிங்கேசுவர் கோயில்.

ஹேமகூடம்—வட இந்தியா, சுயம்புலிங்கம். ஸ்வாமி விரூபாட்சர்.

ஹேமவதி—அனந்தபூர் ஜில்லா; சென்னை ராஜதானி. இங்கு நான்கு கோயில்கள உள—தொட்டேஸ்வரர் கோயில், மல்லேஸ்வரர் கோயில், விரூபாட்சேஸ்வரர் கோயில், சித்தேஷ்வரர் கோயில்.

ஹொனலி—ஹொனஹல்லி என்றும் அழைக்கப் படுகிறது. மைசூர் ராஜ்யம். சிவாலயம்—ஸ்வாமி மஹாதேவர்.

ஹோஷங்கபாத் பிரிவு—மத்ய மாகாணம். ஜி.ஐ.பி. ரெயில்—இங்குள்ள சிவாலயங்கள். (1) ஹோஷங்கபாத்—ஜி ஐ.பி. ரெயில் ஸ்டேஷன்; சிவாலயம்; ஸ்வாமி மகாதேவர். (2) ஹரிபுரம் சிவாலயம், ஸ்வாமி குப்தேஷ்வர் மஹாதேவ். இது மண் மூடப்பட்டிருந்தது; சுமார் 60 வருடங்களுக்கு முன் தோண்டி யெடுக்கப்பட்டது. சிவராத்ரி விசேஷம் (3) ஹரண்டியா கிராமம். சிவாலயம். ஸ்வாமி சித்தநாதர். ஔரங்கஜீப் இதை யழிக்க முயன்றபொழுது கிழக்கு முகமாயிருந்த ஆலயம் மேற்கு முகமாகத் திரும்பிய தென்பர். (4) மஹாதேவ் குன்றம்—இதில் ஒரு குன்று 4384 அடி உயரம்; இதனடியில் குகைக் கோயில் சிவாலயம். இங்கு ஸ்வாமி தரிசனம் செய்யப் போகிறவர்கள் கையிலிருக்கும் எல்லாப் பொருள்களையும் ஸ்வாமிக்குக் கொடுத்துவிட வேண்டுமாம். (5) பான்ச்மர்ஹிமலை-மத்யகுன்றில் சிவாலயம். (6) பாம்லி கிராமம்; பழைய சிவாலயம். கார்த்திகையும் சங்கிராந்தியும் விசேஷம். இதற்கு நர்மதபுரம் என்பது பழைய பெயர்.

ஹௌரா பிரிவு—வங்காள ராஜதானி. இங்குள்ள சிவாலயங்கள். (1) போட்பாகள் கிராமம். சிறு சிவாலயம் (இங்கு திபத் தேசத்து புத்த ஆலயம் ஒன்றுண்டு). (2) பிர்பூம் பிரிவு, பக்ரேஸ்வர் கோயில்—இங்கு அஷ்டவக்ரன் சிலை உள்ளது. இங்கு பலதீர்த்தங்கள் உள. அவற்றுள் அக்னிகுண்டம், கந்தகஜலம் உடையது, உஷ்ணமான ஜலம்; பிரஹ்லாதர் பூஜித்த பிரம்ம குண்டம், சேதக்கங்கா, கூபன் குண்டம், பைரவ குண்டம் முதலியன (3) பிம்கர் கிராமம்—இங்கு பாண்டவர்கள் 5 லிங்கங்களை பிரதிஷ்டைசெய்ததாக ஐதிகம். (4) தூப்ராஜபூர் கிராமம். இங்கு பல சிவாலயங்கள் உண்டு. அவற்றுள் முக்கியமானவை, அகாலேதாபி கோயில், மஹாரேஷ்யர் கோயில்.

முற்றிற்று.



